# பாணினியின் அஷ்டாத்தியாயி

(தமிழாக்கம்)

பகுதி 3

முனைவர் கு. மீனாட்சி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

# பாணினியின் அஷ்டாத்தியாயி
# தமிழாக்கம்

## பகுதி 3

முனைவர் கு. மீனாட்சி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை - 600 113

# BIBLIOGRAPHICAL DATA


| | | |
|---|---|---|
| Title | : | Paniniyin Aṣṭādhyāyī Tamilākkam Part - III |
| Translator | : | Dr. K. Meenakshi |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>C.I.T. Campus, Tharamani,<br>Chennai - 600 113. |
| Publication Number | : | 306 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | 1998 |
| Edition | : | First |
| Paper used | : | TNPL 16 Kg Super Printing |
| Size of the book | : | 1/8 Demy |
| Printing types | : | 10 Points |
| Number of Pages | : | IX + 406 |
| Price | : | |
| Number of Copies | : | 1100 |
| Type Set & Printed by | : | **BRAINET COMPUTERS**<br>158/7, Lakeview Road,<br>West Mambalam,<br>Chennai - 600 033.<br>✆ : 044 - 488 0958 |
| Subject | : | Tamil Translation of Aṣṭādhyāyī |

Printed and Published with financial Assistance from the Government of India, Central Institute of Indian Languages, Mysore.

# அணிந்துரை

ச. சு. இராமர் இளங்கோ
இயக்குநர்,
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
டி.டி.டி.ஐ அஞ்சல்,
தரமணி,
சென்னை - 600 113.

சமஸ்கிருத மொழி என்பதற்குச் 'செம்மை செய்யப்பட்டது' என்பது பொருளாகும். சமஸ்கிருத மொழியைச் செம்மைப்படுத்துவதற்கு ஏதுவாக அமைந்தவர் இலக்கணப் பேராசிரியர் பாணினி ஆவார். வடமொழியில் கிடைக்கின்ற முதல் மூத்த இலக்கண நூல் பாணினி எழுதிய அஷ்டாத்தியாயி என்னும் இலக்கண நூலாகும். பாணினி என்னும் இந்நூல் ஆசிரியர் பெயரால் 'பாணினியம்' என்றும் அழைக்கப்படுகிறது.

பாணினி காலம் கி.மு. 8 ஆம் நூற்றாண்டு என்று கோல்ட்ஸ்டுக்கர் கருதுகிறார். ஆயின் பெரும்பாலான ஆய்வாளர்கள் பாணினி காலம் கி.மு. 4-ஆம் நூற்றாண்டு என்று குறிப்பிட்டுள்ளனர். ரிக், யசூர், சாம, அதர்வண முதலிய வேதங்களோடு அமைப்பு வேறுபடும் வகையில் பாணினி அஷ்டாத்தியாயி எனும் இலக்கண நூலை இயற்றியுள்ளார்.

அற்றை நாளில் சமஸ்கிருத மொழி இருவகை வழக்குடையதாக விளங்கிற்று. கற்றறிந்த அறிஞர்கள் பேசிய மொழிகள் முதல் பிரிவிலும் ஏனையோர் பேசிய மொழிகள் இரண்டாவது பிரிவிலும் அடங்கும். பாணினி முதல் பிரிவைச் சார்ந்தவர்கள் பேசுகின்ற மொழிக்கு இலக்கணம் வகுத்தார் என்பர்.

பாணினி இலக்கணம் சூத்திரங்களால் ஆனது. சில சொற்களில் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் தன்மை உடையன இச்சூத்திரங்கள்.

இந்நூல் 8 அத்தியாயங்களையும் 4000 சூத்திரங்களையும் கொண்டதாகும். அவையின்றி, 14 சிவ சூத்திரங்கள் அல்லது மாகேசுவர சூத்திரங்கள் முன்னதாக இணைக்கப்பட்டுள்ளன. இந்த இலக்கண நூலுக்குக் காத்தியாயனர், பதஞ்சலி ஆகியோர் உரை எழுதியுள்ளனர். அவர்களுடைய உரைகள் வார்த்திகம், மகாபாஷ்யம் என்ற பெயர்களைக் கொண்டவை.

வடமொழி இலக்கண நூலோர் இந்த இலக்கணத்தையும் உரைகளையும் மூன்று முனிவர்கள் இலக்கணம் என்ற பொருளில் 'முனித்ரய வ்யாகரணம்' என்று குறிப்பிடுவர்.

பாணினியைப் புரிந்துகொள்வதற்கு இவ்விரு உரைகளும் மிகத் தேவையாக அமைகின்றன.

இந்நூல் குறித்து, 'வடமொழி இலக்கிய வரலாறு' நூலுள் திரு. கைலாசநாதக் குருக்கள்,

"நமது கைக்கெட்டிய முழு இலக்கண நூல்களுள் பழையது பாணினீயமே. இங்கு வைதிக இலக்கணம் விரிவாகக் கூறப்படாது சிற்சில விதிகள் மட்டும் கூறப்படுவது நோக்கற்பாலது. இந்நூல் வேத சாகைகளுள் ஒன்றுடனாவது இணைக்கப்படாதிருப்பதும் கவனிக்க வேண்டுவதே. இது எழுந்த காலம் சமயப் பற்றற்ற தனி நிலையில் நூலமையச் சூழ்நிலை பொருந்திய காலம். சமயத்துடன் தொடர்பு பெற்றுச் சமய அடிப்படையிலேயே சாஸ்திரங்கள் தோன்றின எனினும், ஆசிரியர்கள் படிப்படியாக இவ்வழியினின்றும் விலகித் தனிவழி நின்று சமயப் பற்றற்ற நூல்களை எழுதும் மரபையும் தொடங்கி வைத்தனர்" என்கின்றார். (பக். 192-193)

அபிதான சிந்தாமணி, பாணினி, ஒரு மகரிஷி. இவர் தமது உள்ளத்தில் உலகமுய்ய வியாகரணம் அருளிச் செய்ய வேண்டிச் சிவமூர்த்தியைத் தரிசித்து நிற்கையில், சிவமூர்த்தி, இவரது மன எண்ணமறிந்து தமது திருக்கரத்தில் இருந்த நாதமயமாகியடமருகத்தைச் சிறிது அசைத்தனர். அதிலிருந்து எழுத்துக்கள் உண்டாயின. அவ்வெழுத்துக்களை அருகில் இருந்த இவர் பன்னிரண்டு சூத்திரங்களாக்கினார். இதற்குப் பதஞ்சலி முனிவர் பாஷ்யம் செய்தனர் என்கின்றது. (பக். 1095-76). இவ்வாறு பாணினி எழுதிய இலக்கண நூலுக்குத் தெய்வீகத் தொடர்புடைய புராணக் கதையும் கூறப்படுகிறது.

பாணினி அஷ்டாத்தியாயி பலரால் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது. ஆயினும் தமிழில் இதுகாறும் இந்த நூல் மொழிபெயர்க்கப்படவில்லை. வடமொழியில் கிடைக்கின்ற மூத்த இலக்கணமான இந்நூலினை முனைவர் கு. மீனாட்சி முதல் முதலாகத் தமிழாக்கம் செய்துள்ளார். அத்துடன் அஷ்டாத்தியாயி தொடர்புடைய காத்யாயனரின் வார்த்திகம், பதஞ்சலியின் மகாபாஷ்யம் உரைகளில் உள்ள தொடர்புடைய கருத்துகளையும் மொழிபெயர்த்துள்ளார். 'தமிழிலாப் பிறமொழி நூல் அனைத்தும் நல்ல தமிழாக்கி வாசிக்கத் தருதல் வேண்டும்' என்ற பாரதிதாசனின் கருத்திற்கிணங்க வடமொழி இலக்கண நூலான இதனைத் தமிழ் ஆக்கம் செய்த முனைவர் கு. மீனாட்சி அவர்கள் பாராட்டுதலுக்கும் போற்றுதலுக்கும் உரியவர்.

இந்நூலினை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மூன்று பகுதிகளாக வெளியிடுகிறது. முனைவர் கு. மீனாட்சி அவர்கள் தமிழ், ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றில் வல்லுநர். மேலும் சிறந்த மொழிநூல் அறிஞர். இவருடைய மும்மொழிப் புலமை இந்நூலுள் நன்கு வெளிப்படுகிறது.

இந்தியாவில், முதல் இலக்கண நூல் பாணினியின் அஷ்டாத்தியாயி என்று சிலரும் தொல்காப்பியம் என்று சிலரும் கூறிவருகின்றனர். இந்நூலாசிரியர் இருசாராரின் ஐயத்தை நீக்கும் வகையில் **'Tolkappiyam and Astadhyayi'** என்ற நூலை நிறுவனத்தின் வழி வெளியிட்டுள்ளார். இவருடைய ஆய்வுப் பணியின் தொடர்ச்சியாக 'அஷ்டாத்தியாயி' எனும் தமிழ் மொழிபெயர்ப்பு நூலினையும் நிறுவனம் வெளியிடுகின்றது.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும், ஊக்கமும் காட்டிவருகின்ற மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி-பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் முனைவர் மு. தமிழ்க்குடிமகன் அவர்களுக்கும் தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறைச் செயலாளர் திருமிகு. த. இரா. சீனிவாசன், இ.ஆ.ப. அவர்களுக்கும் எங்கள் நெஞ்சார்ந்த நன்றி.

இந்நூல் வெளிவர நிதியுதவி நல்கிய 'இந்திய மொழிகள் நடுவண் நிறுவன'த்திற்கு எங்கள் நன்றி.

இந்நூலினை நல்ல முறையில் அச்சிட்டுத்தந்த 'பிரைநெட் கம்ப்யூட்டர்ஸ்' அச்சகத்தார்க்கும் எங்கள் நன்றி.

27.07.98

இயக்குநர்

# முகவுரை

தொல்காப்பியரின் வடமொழி இலக்கணத் தேர்ச்சி அனைவரும் அறிந்ததே. தொல்காப்பிய உரையாசிரியர்கள், பின்னால் வந்த வீரசோழிய ஆசிரியர் போன்றவர்களும் வடமொழி இலக்கணங்களில் தேர்ச்சி பெற்றவர்களே. பல காலக் கட்டங்களில் எழுந்த நூல்களின் ஆசிரியர்களும் இருமொழிகளையுமே நன்கு கற்றுணர்ந்தவர்கள்தான் என்று வரலாற்றுச் சான்றுகள் பறைசாற்றுகின்றன. பல மொழிபெயர்ப்பு நூல்கள் தொல்காப்பியர் காலத்திலேயே இருந்தன என்பது தொல்காப்பியரே, முதல்நூல், வழிநூல் என்ற சொற்களைப் பயன்படுத்தியிருப்பதிலிருந்து விளங்கும். இருபதாம் நூற்றாண்டைச் சேர்ந்த எழுச்சிப் புலவர் பாரதி, 'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ் மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்று வேறுமொழிகளையும் கற்றுணர்ந்த தமிழறிஞர்களுக்கு ஆணையிட்டுக் கூறுகிறார்.

பாணினியின் அஷ்டாத்தியாயி ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. ஆனால், தமிழ் இலக்கண நூல்களில் ஆழ்ந்த அறிவுள்ள பல தமிழறிஞர்கள், பாணினியின் இலக்கணத்தோடோ அல்லது அதன் ஆங்கில மொழிபெயர்ப்புகளோடோ நேரிடைத்தொடர்பு கொள்ள இயலாத நிலையில் காணப்படுகிறார்கள். உரையாசிரியர்களின் உரைகளிலிருந்துதான் வடமொழி இலக்கணங்களைப் பற்றி, அவர்கள் அறிந்து கொள்ள இயலுகிறது. பல மேல்நாட்டு அறிஞர்களால் மிகவும் புகழப்பட்ட அஷ்டாத்தியாயியை அதன் தமிழாக்கத்தையாவது படித்து அறிந்து கொள்வதற்குக்கூட இதுவரையில் அதன் தமிழாக்கம் தமிழறிஞர்களுக்குக் கிடைக்கவில்லை. இத்தகைய நூலின் தேவையைப் பல அறிஞர்கள் புரிந்து கொண்டும் இருக்கிறார்கள். இந்தக் குறையை நிறைவு செய்வதற்காக எடுத்துக்கொண்ட எனது எளிய முயற்சிதான் இந்தத் தமிழாக்கம். இப்பணி முதன் முதலில்

பல்கலைக் கழக மானியக் குழுவின் **(University Grants Commission)** நிதி உதவியுடன், உயர்மட்ட ஆராய்ச்சித் திட்டத்தின் கீழ்ச் செய்யப்பட்டது.

அஷ்டாத்தியாயி என்ற பாணினி இலக்கணத்துடன் காத்தியாயனரின் வார்த்திகம், பதஞ்ஜலியின் மகாபாஷ்யம் ஆகிய மூன்றையும் சேர்த்துத்தான் படிப்பது தொன்று தொட்ட வழக்கம். அஷ்டாத்தியாயி சூத்திரப்பாடம் மட்டும் தனியாக மொழிபெயர்த்தால், அத்தமிழாக்கம் எளிதில் புரிந்துகொள்ள இயலாது. வடமொழி இலக்கணத்தை முனித்ரய வ்யாகரணம் அதாவது மூன்று முனிவர்களின் இலக்கணம் என்று கூறுவதுண்டு. ஆகவே இம்மொழிபெயர்ப்பில் முதலில் பாணினியின் சூத்திரங்களைத் தமிழில் கொடுத்து, தொடர்ந்து, மகாபாஷ்யம், வாமனர் ஜயாதித்தரின் காஸிகா என்ற நூல்களின் அடிப்படையில் தமிழாக்கம் செய்யப்பட்டுள்ளது. அவ்வாறே, வார்த்திகங்களையும் தமிழில் கொடுத்து, தொடர்ந்து, அதன் தமிழ் மொழிபெயர்ப்பும் கொடுக்கப்பட்டுள்ளது.

இந்நூலின் அச்சிடப்பட்ட சில எழுத்துக்களைப் பற்றிய விளக்கம் தேவை. தமிழ் எழுத்துக்களைவிட அதிகமான எழுத்துக்களைக் கொண்டது ஸம்ஸ்கிருதம். இதன் எழுத்தான, நாகரியில், ஒவ்வொரு வர்க்கத்திலும் நன்னான்கு எழுத்துக்கள் உள்ளன. அவை அந்தந்த எழுத்துக்களோடு, 1,2,3,4 என்ற எண்கள் இணைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. எடுத்துக் காட்டாக, 'க' என்ற எழுத்து அதன் உச்சரிப்பினடிப்படையில் 4 வகையாக அமையும். அவை முறையே க$^{1}$ **(=ka)**, க$^{2}$ = **(kha)**, க$^{3}$ **(=ga)** க$^{4}$ **(=gha)** என்று கொடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறே ரு$^{1}$ **(=r)** என்றும் 'ரு$^{2}$' **(=ru)** ஸ$^{1}$ **(=s$^{1}$)**, 'ஸ' **(=s)** என்றும் உச்சரிக்க வேண்டும்.

பாணினி பல இடங்களில் சுரத்தைப்பற்றிப் பேசுகிறார். வேதமொழியில், உதாத்தம், அனுதாத்தம், ஸ்வரிதம் என்ற மூன்று வகையான சுரங்கள் காணப்படும். இவைகளைக் குறிப்பிட சரியான குறியீடு கிடைக்காததால், அவைகளை அந்தந்த இடங்களில் குறிப்பிடவில்லை. ஆகவே, சில சூத்திரங்களுக்காகக் கொடுக்கப்பட்டுள்ள இரண்டு எடுத்துக் காட்டுக்களும் ஒரே மாதிரியாகக் காணப்படுகின்றன. ஆயினும், அதற்கு முன்பு கொடுக்கப்பட்டிருக்கும் விளக்கத்திலிருந்து, இவைகளை வேறுபடுத்த இயலும். உதாத்த சுரத்தை மட்டும், அந்த எழுத்துடன் '2' அல்லது '3' என்ற குறியுடன் காட்டப்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக, போ$^{4}$ அல்லது க$^{2}$.

இந்த மொழிபெயர்ப்புப் பணியைத் தொடங்கிய காலத்திலிருந்து, பலர் எனக்கு ஊக்கம் அளித்து, உறுதுணையாக

இருந்தார்கள். அவர்கள் அனைவருக்கும் எனது நன்றி உரியது. ஆயினும், சிலரைக் குறிப்பிட்டு, நன்றி கூறுவது எனது கடமை.

இம்மொழிபெயர்ப்புப் பணியை நான் தொடங்குவதற்குக் காரணமாக அமைந்தவர் பேராசிரியர் அகத்தியலிங்கம் (முன்னாள் துணை வேந்தர், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்) அவர்கள் ஆவர். இப்பணியைச் செய்து முடிக்க அவர்களது ஆர்வமும், ஊக்கமும், உறுதுணையாக இருந்தன. பேராசிரியர் அகத்தியலிங்கம் அவர்களுக்கு நான் என்றென்றும் கடமைப்பட்டுள்ளேன். எனது உளமார்ந்த நன்றி அவர்களுக்கு உரியது. இத்தமிழாக்கத்தை நூல் வடிவில் வெளிக் கொண்டு வருவதற்காகவும் பேராசிரியர் அகத்தியலிங்கம் அவர்கள் முயற்சி எடுத்துக் கொண்டார்கள். ஆனால் அவர்கள் விருப்பம் நிறைவேறவில்லை. கனவாகவே நின்ற அந்த முயற்சி, இன்று நனவாகிறது. இதற்குக் காரணம் முனைவர் இராமர் இளங்கோ அவர்கள் (இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை) ஆகும். எனது தமிழாக்கத்தை அச்சேற்றுவதற்காக, அணுகியபோது, எவ்விதத் தயக்கமும் காட்டாமல், உடனேயே ஏற்றுக்கொண்டு, இன்று அதை நூல் வடிவத்தில் வெளியிட்டுள்ளார்கள். முனைவர் இராமர் இளங்கோ அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி. அஷ்டாத்தியாயியின் தமிழ் மொழிபெயர்ப்புப்பணியை நான் தொடங்கிய காலத்திலிருந்தே இதற்கு ஊக்கமளித்து, தனது கருத்துக்களையும் எடுத்துக்கூறிப் பல வகையில் உதவி புரிந்தவர் முனைவர் இ. அண்ணாமலை அவர்கள் (முன்னாள் இயக்குநர், இந்திய மொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர் **(Central Institute of Indian Languages, Mysore)** ஆவர். இன்று இது, நூலாக வருவதில் மிகப்பெரிய பங்கு அவர்களுடையதுதான். முனைவர் இ. அண்ணாமலை எடுத்துக்கொண்ட ஆர்வத்திற்கும், அவர்கள் எனக்கு அளித்த ஊக்கத்திற்கும் எனது நன்றி என்றென்றும் உரியது.

பேராசிரியர் செ. வை. சண்முகம் (ஓய்வு, அண்ணாமலைப் பல்கலைக் கழகம், மொழியியல் துறை) அவர்கள், நான் இப்பணியை மேற்கொண்ட நாளிலிருந்து, பல காலக் கட்டங்களில், தனது கருத்துக்களைக் கூறி, இப்பணியை நான் செய்து முடிக்க ஊக்கமளித்து உதவினார்கள். அவர்களுக்கு எனது உளங்கனிந்த நன்றி.

இந்த அஷ்டாத்தியாயியின் தமிழ் மொழிபெயர்ப்புப் பணியில் ஈடுபட்டபோது, பல இன்னல்கள் இடையூறுகளை நான் எதிர்கொள்ள வேண்டிவந்தது. அந்த நேரங்களில் எல்லாம் எனக்கு ஊக்கமளித்து உறுதுணையாக நின்றவர்கள் பல நண்பர்கள். அவர்களில், சிலர் குறிப்பிடத் தகுந்தவர்கள். முனைவர் ரவிந்திர வர்மா (எனது சக ஆசிரியர்), திரு. இராம கிருட்டிணன், திரு. மணிவேல் ஆகியவர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

அஷ்டாத்தியாயியைத் தமிழில் மொழிபெயர்க்க நிதி உதவி செய்த பல்கலைக்கழக மானியக் குழுவுக்கு எனது மனமார்ந்த நன்றி. நான் இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டு, இதைச் செய்து முடிக்கப் பலவகையில் உதவிபுரிந்த ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்துக்கு எனது உளமார்ந்த நன்றி உரியது.

இது நூலாக வெளிவருவதற்கு உதவிய இந்தியமொழிகளின் நடுவண் நிறுவனம், மைசூர்; உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை ஆகியவைகளுக்கு எனது நன்றி.

இது அச்சாகும் போது, நான் சென்னையில் தங்கிய நாட்களில் அன்போடும் ஆர்வத்தோடும் பலவகையில் முனைவர் இ. ராஜலட்சுமி ஸ்ரீனிவாசன், அவர்கள் கணவர் திரு. எஸ். ஸ்ரீனிவாசன்ஆகியோர் உதவினர். அவர்களுக்கும் எனது உளங்கனிந்த நன்றி.

இதன் பிழை திருத்தத்தில், ஆர்வத்தோடு எனக்கு உதவி புரிந்த எனது தோழி திருமதி. சீதாலட்சுமி அவர்களுக்கு எனது உளமார்ந்த நன்றி.

**பூனே,**
***01/07/1998.***

**கு. மீனாட்சி**

**6.1.1** ஏகாசோ த்[3]வே ப்ரத[3]மஸ்ய

ஓரசையைக் கொண்ட ஒரு வினையடியின் முதலசைக்கு (ப்ரத[2]மஸ்ய)ப் பதிலியாக ஈரசை வரும்.

இது ஒரு அதிகாரச் சூத்திரம். இச்சூத்திரத்தில் காணப்படும் மூன்று சொற்களும், 6.1.12வரை அனுவிருத்தியாகும்.

ஓரசை கொண்ட வினையடிச் சொல்லின் முதலசையிரட்டிக்கு மென்று இச்சூத்திரம் கூறுகிறது.

**6.1.2** அஜாதே[3]: த்[3]வே த்[3]விதீயஸ்ய

ஒருயிரை முதலாகக் கொண்ட வினையின் இரண்டாவது அசைக்குப் பதிலியாக ஈரசை வரும்.

ஓரசைக்கும் மேற்பட்ட அசைகளைக் கொண்ட ஒருயிரெழுத்தை முதலாகக் கொண்ட வினையடிச் சொல்லின், இரண்டாவது அசையிரட்டிக்கும். இது சில சூழலில் முதலசையிரட்டிப்பதற்குத் தடை விதிக்கிறது.

முதல் விதிக்கு எடுத்துக்காட்டு

பச் → பச் + பச்

இரண்டாவது சூத்திரத்தின் காட்டு

அட் + ஸன் = அட் + இட் + ஸன் (7.2.35; 3.1.32)

அடி + ஷ = அடி + டி + ஷ (8.3.59)

**6.1.3** நந்த்[3]ரா: ஸம்யோக[3]ாதய:

ந், த்[3], ர் என்றவெழுத்துக்கள் கூட்டுமெய்யின் முதலெழுத்தாகவும், அவ்வெழுத்துக்கள், மெய்யை முதலாகக் கொண்ட ஒரு வினையடியின் இரண்டாவது அசையாகவும் நிற்கும்போது மேலே குறிப்பிட்ட இரட்டிப்பு நிகழாது.

உந்த[3] + ஸன் = உந்த்[3] + இட் + ஸன் = உன் + தி[3] – ஷ = உந் – தி – தி – ஷ உந்தி[3]தி[3] ஷதி (படர்க்கை ஒருமை): ''ஈரமாக்க விரும்புகிறான்'' அத்[3] – ட் அட்டிடிஷதி

அர்ச் – அர்சிசிஷதி ''பூசிக்க விரும்புகிறான்''

வா: யகார பரஸ்ய ரேப[3]ஸ்ய ப்ரதிஷேதே[4]ா ந ப[4]வதி

'ர'வைத் தொடர்ந்து 'ய'வரும்போது இத்தடை (அதாவது இரட்டித்தலுக்கு)யில்லை. அரார்யதே.

வா: ஈர்ஷ்யதேர் த்ருதீயஸ்ய த்[3]வே ப[4]வத: இதி வக்தவ்யம்

'ஈர்ஷ்யதி' என்ற வினையின் மூன்றாவது இரட்டிக்கும். எதன் மூன்றாவது? மூன்றாவது மெய்யென்பது சிலரின் கருத்து.

ஆகவே ஈர்ஷ்யியிஷதி. மூன்றவது அசையென்பது வேறு சிலரின் கருத்து, ஆகவே ஈர்ஷ்யிஷிஷதி

வா: கண்ட்வாதீ$^{3}$னாம் த்ருதியஸ்யைகாசோ த்$^{3}$வே ப$^{4}$வத இதி வக்தவ்யம்
பெயரிலிருந்தாக்கப்பட்ட வினையின் மூன்றாவது அசை விருப்பாக இரட்டிக்கும்.
அஸ்வீயியிஷதி, அஸிஸ்வீயிஷதி
அஸ்வ + க்யச் + இட் - ஸன் அஸ்வீயியிஷதி.

வா: யதே$^{3}$ஷ்டம் நாமத$^{4}$ாதுஷ் விதி வக்தவ்யம்
பெயரிலிருந்தாக்கப்பட்ட வினையின் ஏதாவதொரு அசை இரட்டிக் கும் என்பது வேறு சிலரின் கருத்து.
புபுத்ரீயிஷதி, புதிர்ரீயிஷதி, புத்ரீயியிஷதி, புபுத்ரீயியிஷதி, புத்ரீயிஷ ஷதி.
புத்ர + ஸன் + புத்ரீயிஷ. மேலே கூறிய ஐந்து வகையான இரட்டிப்பு, இவ்வினையிலை நிகழும்.

**6.1.4** பூர்வோ அப்$^{4}$யாஸ:
இவ்விரண்டின் முதல் அப்$^{4}$யாஸ என்ற ஸம்க்ஞாவினால் குறிக்கப்படும். காட்டாக பச்–பச் என்பதின் முதல் பகுதி அப்யாஸ என்ற ஸம்க்ஞாவால் அழைக்கப்படும். அப்யாஸ என்பது இரட்டிக்கப்பட்ட அசை என்ற பொருள்படும்.

**6.1.5** உபே$^{4}$ அப்$^{4}$யஸ்தம்
இரண்டும் சேர்ந்து அப்$^{4}$யஸ்தம் என்ற பெயர் பெறும்.
த$^{3}$த$^{3}$தி–யில் த$^{3}$த$^{3}$ அப்$^{4}$யஸ்தம்

**6.1.6** ஜக்ஷித்யாத$^{3}$ய: ஷட்
ஜக்ஷியிலிருந்து தொடங்கும் ஆறு தாதுக்களும் 'அப்யஸ்தம்' எனப்படும்.
ஜக்ஷ் – 'உண்', ஜாக்$^{3}$ரு–'விழித்துக்கொள்'
த்$^{3}$ரித்$^{3}$ரா–'பணமில்லாத' ஜக்ஷ் – ஜக்ஷதி, ஜாக்$^{3}$ரு–ஜாக்3ரதி
த$^{3}$ரித்$^{3}$ரா – த$^{3}$ரித்$^{3}$ரதி, சகாஸ்–சகாஸதி
ஸ$^{1}$ஸ்–ஸ$^{1}$ாஸதி; தே$^{3}$தீ$^{4}$–தீ$^{3}$த்$^{4}$யதே;
வேவீ–வேவ்யதே
ஒரு மெய்யெழுத்தை முதலாகவும், 'இட்' இணைக்கப்படாததுமான ஸார்வ தாதுக ஒட்டு தொடரும்போது அப்$^{4}$யஸ்த' என்ற ஸம்க்ரு ாவினால் குறிப்பிடப்பட்ட இவ்வினைகளின் முதலசை உதாத்த சுரம் பெறும்.

**6.1.7** துஜாதீ$^{3}$னாம் தீ$^{3}$ர்கே$^{4}$ா அப்$^{4}$யாஸஸ்ய
'துஜ்' முதலிய வினைகளின் இரட்டிப்பின் குறிலுயிர்க்குப் பதிலியாக நெடில் வரும்.
'துஜாதி'யின் 'ஆதி' என்ற சொல் முதலிய என்ற பொருளைச் சுட்ட ாமல்

'போன்ற' என்ற பொருளைக் கொண்டது, ஏனென்றால் இவ்வகுப்பு தாதுபாடத்திலோ, கண பாடத்திலோ காணப்படவில்லை. ஆகவே, மொழியில் காணப்படும் இதைப்போன்ற வினைகளைச் சேர்த்திணைத்த, ஓர் வகுப்பாக அமைக்க வேண்டும். ஆகையால், வினையின் இரட்டிப்பில், நெடிலுயிர் காணப்பட்டால், அவ்வடிவம் சரியானதென்று கொள்ளவேண்டும்.
துதுஜான: துஜ் + கானச் (3.2.100) துதுஜான:
மாமஹான, அனட்$^3$வான் த$^3$ா$^3$த$^4$ார
ஸ்வத$^4$ாம் மீமாய, ஸ தூதாவ உயிரின் நீட்டம், வேதமொழியில் மட்டும் காணப்படுகிறது. மற்றவைகளிலல்ல, காட்டாக துதோஜ ஸ'ப$^3$லான்

**6.1.8** லிடி த$^3$ாதே$^4$ாரனப்$^4$யாஸஸ்ய
ஏற்கெனவே இரட்டிக்கப்படாத ஒரு தாது, 'லிட்' ஒட்டு தொடரும்போது இரட்டிக்கும்.
ஒரு வினை, மெய்யோ அல்லது உயிரோ முதலாக அமைவதைப் பொறுத்து அதன் முதல் அல்லது இரண்டாவது அசை இரட்டிக்கும்
பச் – பபாச, பட் –பபாட
ப்ர + ஊர்ணு = ப்ரரோர்ணுனாவ

வா: த்$^3$விர் வசனப்ரகரணே ச$^2$ந்த$^3$ஸி வேதி வக்தவ்யம்
லிட் அல்லது வேறு வினைகளின் இரட்டித்தல், வேதமொழியில் விருப்பாக நிகழும்.
யோக ஜாக$^2$ார தம்ருச: காமயந்தே அல்லது யோ ஜஜாகார.

**6.1.9** ஸன் யஙோ:
ஏற்கனவே இரட்டிக்காத அசையைக் கொண்ட, தும், ஒருயிரெழுத்தை முதலாகக் கொண்டதுமான வினையடி (ஓரசையோ அல்லது பலவசைகளையோ கொண்ட) யின் (முதல் அல்லது இரண்டாவது அசை) ஸன், யங் ஒட்டுக்கள் தொடரும்போது இரட்டிக்கும்.

1) பச் + ஸன் =பச்– பச் + ஸன் (7.4.60) = பி – பச் + ஸன் + ஸப் + திப் (3.1.68; 7.4.83) = பி–பக் ஷ தி (8.2.30; 3.59)
(அவன்) சமைக்க விரும்புகிறான்.

2) பச் + யங் = பச் + பச் + யங் = ப ф – பச் – ய + ஸப் + தே = பா – பச் – ய – தே (6.1.97; 7.4.93) 'அவன் திரும்பத் திரும்பச் சமைக்கிறான்')

**6.1.10** ஸ்லௌ
விகரணம் "ஸ்$^1$லு" தொடரும்போது முன்பே இரட்டிக்காத தாதுவில் (மேற்கூறியபடி) இரட்டித்தல் நிகழும்.

ஹு + ஸ்ப் + திப் = ஹு + ஸ்லு + திப் ஹு–ஹு + ϕ +திப் ஜு – ஹு திப் (7.4.62) = ஜுஹோதி;
பி[3]பே[4]தி இத்தாதுக்கள் 3ஆம் வகுப்பைச் சேர்ந்தவை.

**6.1.11** சங்ி

முன்பே இரட்டிக்காத தாதுவுக்குப்பின் சங் (Aorist) நிற்கும்போது அத்தாது (மேற்கூறியபடி) இரட்டிக்கும்.

1) பச் +ணிச் + ச்லி (3.1.41) = பச் + ணிச் + சங் (3.1.48) = பச் + ϕ + சங் (6.4.51) = பச் + சங் (7.4.1), ப ϕ – பச் + சங் (7.4.60) = அட் + ப –பச் + சங் (6.4.71) = அ – பி – பச் + சங் (7.4.93) = அ – பீ – பச் + சங் (7.4.94) = அபீ – பச் – அ (7.4.94) = அபீபசத் – 'சமைக்கவைத்தான்'

2) அட் + ணிச் + சங் = அட் + அடி + சங் = அ + அ – டி – + சங் + த் = அ – அடி – ட் ϕ அ – த் ஆடிடத் 'சுற்ற வைத்தான்'.

**6.1.12** த[3]ாஸ்வான் ஸாஹ்வான் மீட்[4]டவான்ஸ்[1] ச

த[3]ாஸ்வான் (கொடுத்தவன்) ஸாஹ்வான் (கீழடக்கு)
மீட்[4]வான் (ஈரமாக்கியவன்) என்பவை. இரட்டித்தல் நிகழாமல் விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்டவை.

1) த[3]ாஸ் + க்வஸு = த[3] + ஸ் + வஸ் (உ) = தாஸ் – வஸ் இரட்டித்தல், "க்வஸு" வுக்குமுன் 'இட்' இணைத்தல் இரண்டும் இதில் காணப்படவில்லை. இது நிபாதனம்.

2) ஸஹ் + க்வஸு = ஸஹ் + வஸ் = ஸாஹ் – வஸ்
ஆத்மனேபதத்திலிருந்து பரஸ்மைபதமாதல், தாதுவின் ஈற்றயல் உயிர் நெடிலாதல், இரட்டித்தலாகாதது, 'இட்' இணைக்கப்படாமை ஆகியவை. இங்கு நிபாதனம்.

3) மீஹ் + க்வஸு = மீட்[4]வஸ்
இரட்டிக்காத, 'இட்' ஆகமம் வராமை.
ஈற்றயலுயிர் நீட்டம் ஆகியவை நிபாதனம்.

வா: க்ருஞாதீ[3]னாம் கே த்[3]வே ப[4]வத இதி வக்தவ்யம்
'க்ருஞ்' முதலியவைகளைத் தொடர்ந்து 'க' ஒட்டு வரும் போது இரட்டித்தல் நிகழும்.
சக்ரம் (=க்ரு + க) இவனால் செய்யப்பட்டது.
சிக்லித[3]ம் (க்லித்[3] +க). க்ரு, க்லித் தாதுக்களுக்குப்பின் 'க' ஒட்டு க[4]ம்' ஒட்டின்

பொருளில் வரும்.

வா: சரி சலி பதி வதீ$^{3}$னாம் த்$^{3}$வித்வமச்யா க்சாப்$^{4}$யாஸஸ்ய
சர், சல், பத், வத்$^{3}$ என்ற தாதுக்கள் 'அச்' ஒட்டு தொடரும்போது இரட்டிக்கும். 'ஆக்' ஆகமம், ''அப்$^{4}$யாஸத்'' தோடு வரும்.
சராசர:, சலாசல:, பதாபத:, வத$^{3}$ாவத:

வா: வா இதி வக்தவ்யம்
சர், சல் முதலியவைகள் இரட்டிக்காமலும் வரலாம் சர: புருஷ:, சரல: ரத$^{2}$:, பதம் யானம்
வத: மனுஷ்ய:

வா: ஹந்தேர் க$^{4}$த்வம் ச
'அச்' தொடரும்போது 'ஹன்' ஒட்டு இரட்டிக்கும் அப்யாஸத்தின் 'ஹ'வுக்கு 'க$^{4}$' பதிலியாகும். 'ஆக்' ஆகமம் வரும்.
ஹன் + அச் = க4ன் + ஆச் + ஹன் + அச் = க$^{4}$னாக$^{4}$ன:

வா: பாடேர் ணிலுக் சோக் சதீ$^{3}$ர்க$^{4}$த்வாப் யாஸஸ்ய 'அச்' ஒட்டுக்கு முன் நிற்கும் 'பாடி' என்ற காரண தாது இரட்டிக்கும் 'ணி' (காரணவொட்டு) கெடும். 'உக்' ஆகமமாகும். இது நெடிலாகும்.
பாடி + அச் = பாட் + உக் + அச் = பாடு + பட் + அச் = பாடுபட:

**6.1.13** ஷ்யங: ஸம்ப்ஸாரணம் புத்ர ப்தயோஸ் தத்புருஷே புத்ர, பதி என்ற சொற்களிரண்டாவது உறுப்பினராக அமையும் தத்புருஷத் தொகையில், இச்சொற்களுக்கு முன் நிற்கும் 'ஷ்யங்' ஒட்டின் 'ய்' உயிராக மாறும்.
அதாவது 'ய்' 'இ'யாக மாறும். காரீஷஸ்ய இவ க$^{3}$ந்த$^{4}$: அஸ்ய = காரீஷக$^{3}$ந்தீ$^{4}$ (5.4.137), தஸ்ய அபத்யம் காரீஷ க$^{3}$ந்தி$^{4}$ (அண் → ஷ்யங் + டாப் 4.1.78)= காரீஷ க$^{3}$ந்த்$^{4}$ $\phi$ – யா + புத்ர = காரீஷ க$^{3}$ந்த்$^{4}$ – இரு + புத்ர = காரீஷ – க$^{3}$ந்தி$^{4}$ + புத்ர (6.1.108) காரீஷ கந்த்யாவின் மகன்; கௌமுத$^{3}$கந்தீ பதி''கௌமுதகந்த்யாவின் கணவன்.''

**6.1.14** பந்து$^{4}$னி ப$^{3}$ஹுவ்ரீஹௌ:
'பந்து'வை யிறுதியுறுப்பினராகக் கொண்ட பஹுவ்ரீஹித் தொகையில் 'ஷ்யங்' ஒட்டின் 'ய்' உயிராகும்.
கௌமுத$^{3}$ க$^{3}$ந்த்$^{4}$யா ப$^{3}$ந்து$^{4}$ர் அஸ்ய கௌமுத$^{3}$ க$^{3}$ந்தி$^{4}$ (அண் ஷ்யங் + டாப் + ப$^{3}$ந்து$^{4}$ – கௌமுத$^{3}$ க$^{3}$ந்தீ$^{4}$ – அ + ப$^{3}$ந்து$^{4}$ = கௌமுத$^{3}$ க$^{3}$ந்தீ$^{4}$ ப$^{3}$ந்து$^{4}$: (6.3.139)
''கௌமுதக$^{3}$ந்த்$^{4}$ யாவின் உறவினர்''

வா: மாதச் மாத்ருக மாத்ருஷு

மாதச், மாத்ருக, மாத்ரு ஆகியவைகளோடு காணப்படும் ப$^{3}$ஹுவ்ரீஹித் தொகையில், ஷ்யங்' இன் 'ய்' விருப்பாக 'இ'யாகும்.

காரீஷக$^{3}$ந்தீ$^{4}$மாத: காரீஷக$^{3}$ந்த்$^{4}$யாமாத:

காரீஷ க$^{3}$ந்தீ$^{4}$மாத்ருக:, காரீஷகந்த்$^{4}$யா மாத்ருக:

காரீஷக$^{3}$ந்தீ மாதா, காரீஷக$^{3}$ந்த்$^{4}$யாமாதா.

**6.1.15** வசிஸ்வபி யஜாதீ$^{3}$னாம்

வசி, ஸ்வபி, யஜ் முதலிய தாதுக்களின் அரை உயிர், 'க' வை இத்தாகக் கொண்ட ஒட்டுக்கு முன் நிற்கும்போது முழு உயிராகும்.

1) வச் + க்த = உஅச் + க்த = உக் + த (8.2.30) 'உ'க்த= 'சொன்ன, சொன்னவன், கூறியவன், கூறிய'

2) ஸ்வப் + க்த = ஸுப் + த = ஸுப்த 'தூங்கிய/தூங்கியவன்'

3) யஜ் + க்த = இஜ் + க்த (108) = இஷ்ட 'யாகம்பண்ணிய', வப் + க்த = உப் + த = உப்த விதைத்த';
வஹ் + க்த = உஹ் + க்த = உட்$^{4}$ + த (8.2.31)= உட்$^{4}$ + ட$^{4}$ (8.4.41) = ஊ ɸ + ட$^{4}$ (8.3.13); 6.3.21) = ஊட$^{4}$ 'தாங்கிய'; வஸ் + இட் + க்த= உஸ் + இ – த = உஷித, 'வசித்த', வே + க்த = உ– த = உத 'நெய்த'; வ்யே + க்த = விர + க்த = வீத (4.2.3; 37); 'மூடிய'
ஹ்வே + க்த = ஹ் – உ – எ + க்த = ஹூத (6.4.2) 'அறை'கூவிய'; வத்$^{3}$ +கத் = உதி$^{3}$த் கூறிய டுவோஸ்வி = ஸூன= யஜ் வகுப்பைச் சேர்ந்த வொட்டுக்கள் யஜ், வப், வஹ், வஸ வே வ்யே, ஹ்வே, வத், டுவோஸ்'வி ஆகியவைகள்.

'வ்யே' என்ற தாதுவில் இரண்டு அரை உயிர்கள் (வ், ய்) காணப்படுகின்றன. சூ. 6.1.37இன்படி, இரண்டாவதாக, நிற்கும் அரைஉயிர், முழு உயிராகும். ஆனால், முதலில் நிற்கும் அரையுயிர் முழு உயிராவதை இவ்விதி தடை செய்கிறது.

ஆகவே, இங்கு முதலில் நிற்கும் அரையுயிர் முழு உயிராகாமல், இரண்டாவதான அரையுயிர் (ய்) முழு உயிராகிறது.

**6.1.16** க்ரஹி ஜ்யா வயி வ்யதி$^{4}$ வஷ்டி விசதி வ்ருஸ்'சதி ப்ருச்ச$^{3}$தி ப்$^{4}$ருஜ்ஜதீனாம் ஙிதி ச

'ங்' ஐ 'இத்'தாகக் கொண்ட வொட்டுக்களுக்குமுன் கீழ்க்கண்ட தாதுக்களினரையுயிர் முழு உயிராகும்:–

க்$^{3}$ரஹ் 'பிடி', ஜ்யா 'வயதேறு' வய் (வே 'நெய்தல்' என்ற தாதுவுக்குப் பதிலி) வ்யத்$^{4}$

'துளை', வஸ் 'விரும்பு', வ்யச் 'ஏமாற்று', வ்ரஸ்'ச் – 'வொட்டு', ப்ரச் 'கேள்', ப்ரஸ்'ச் 'வறு' கித்–துக்கு முன்னாலும் அவ்வாறாகும்.

1) க்³ரஹ் + இட் + க்த (7.2.37, 3.84)
க்³ருஹுத 'பிடித்துக்கொண்ட'
க்³ரஹ் + ஸ்¹னா + திப் : க்³ருஹ் – ணாதி
க்ருஹ்ணாதி 'அவன் பிடிக்கிறான்'
ஸ்னா ஒரு ஙிதி 1.2.4.

2) ஜ்யா + க்த : ஜிஆ + த : ஜீ + க்த (108)
ஜீத : ஜீன (8.2.44) 'வயதான'
ஜ்யா + ஸ்1னா + திப் : ஜினாதி/அவன் (கிழவன்) ஆகிறான்)

3) வய், வேஞ் இன் பதிலியாவதால் இத்துடன் ஙித் வராது. ஆகவே, இத்தாதுவோடு, லிட் ஒட்டுத்தான் வரும்.
லிட் ஒரு கித் ஆகும் (1.2.3)
வய் + லிட் : வய் – அதுஸ் : வ ϕ – வய் + அதுஸ் : உ – உய் + அதுஸ் : ஊயதுஸ் 'அவர்களிருவரும் நெய்தார்கள்.

4) வ்யத்⁴ + க்த : விஅத்⁴ + க்த : வித்⁴+ த⁴ (8.2.40) வித்³ த⁴
'துளைத்த'வ்யத்⁴ + ஸ்'யன் + திப் : வித்⁴யதி துளைக்கிறான்.

5) வஸ்¹ + இட் + க்த : உஸி'த 'விரும்பிய'
வஸ்¹ +ϕ + அந்தி : உஸ'ந்தி 'அவர்கள் விரும்புகிறார்கள்.'

6) வ்யச் + இட் + க்த : விச் – இ + க்த 'ஏமாற்றிய', வ்யச் + ஸ¹ + திப் : விசதி 'ஏமாற்றுகிறான்.'

7) வ்ரஸ்'ச் + க்த – வ்ருஸ்'ச் + ன (8.2.45)
வ்ரு ϕ ச் + ன( 8.2.29) : வ்ருக்ன(87.2.30 4.1) 'வெட்டிய'
வ்ரஸ்'ச் + ஸ + திப் : வ்ருஸ்'ச் – அ + தி
வ்ருஸ்'சதி 'வெட்டுகிறான்.'

8) ப்ரச்² + க்த : ப்ருச்² + த : ப்ருஷ்ட (8.3.36; 4.41) 'கேட்ட'; ப்ர ச்²+ஸ¹+திப்:ப்ருச்ச²தி அவன் கேட்கிறான்

9) ப்⁴ரஸ்'ஜ் + க்த : ப்⁴ர ϕ ஜ் + க்த : ப்⁴ருஷ்ட 'வறுக்கப்பட்ட, வறுத்த'
ப்⁴ரஸ்ஜ் + ஸ + திப் : ப்⁴ருஜ்ஜதி (8.4.40; 53)

**6.1.17** லிட்யப்⁴யாஸஸ்ய உப⁴யேஷாம்

லிட் ஒட்டுக்கு முன் நிற்கும் வினையின் இரட்டிக்கப்பட்ட இரண்டசை யின் அரையுயிர்களும் முழு உயிர்களாகும்.

வச் + லிட் = வச் + ணல் (3.4.82)= வ ф = வச் + ணல் = உ – வாச் – அ (193; 7.2.116); உ வாசித²;

ஸுஷ்வாப; ஸுஷ்வாபித²; இயாஜ; இயாஜித²; உவாப, உவாபித²

ஜ்யா + லிட் = ஜ்யா + ஔ (7.1.34)

ஜிஜ்யௌ, ஜிஜ்யித²

ஜக்³ராஹ, ஜக்³ரஹித², உவாப, உவயித²

விவ்யாத⁴, விவ்யதி⁴த², உவாஸ, உஷித²;

விவ்யாச, விவ்யசித², வவ்ரஸ்¹ச, வவ்ரஸ்சித

**6.1.18** ஸ்¹வாபேஸ்¹ சஙி

ஸ்வாபி (ஸ்வப் + ணிச் ) என்ற வினையின் அரையுயிர் சங் ஒட்டுத் தொடரும்போது முழு உயிராகும்.

ஸ்வப் + ணிச் + சங் = அட் + ஸ்வப் – ஸ்வப் + சங் = அ – ஸு, ஸுப் + ф + சங்

அஸுஷுப (7.4.94) = ஸூஷுப (8.3.59)

**6.1.19** ஸ்வபி ஸ்யமி வ்யேஞாம் யஙி

ஸ்வபி, ஸ்யமி, வ்யேஞ் என்ற தாதுக்களின் அரையுயிர் யங் ஒட்டுத் தொடரும்போது (முழு) உயிராகும்.

ஸ்வப் + யங் = ஸு – ஸுப் – ய = ஸோ – ஸுப் – ய (7.4.82) – ஸோ = ஸுப் – ய – தே (8.3.59) ஸோஷுப்யதே 'அடிக்கடி தூங்குகிறான்';

ஸ்யம் + யங் = ஸேஸிம்யதே 'அடிக்கடி அழுகிறான்'

வ்யே + யங் = வி + யங் வி–வி–ய=வேவீயதே (7.4.82; 6.4.2; 7.4.25) 'அடிக்கடி மூடுகிறான்' 18, 19 இல் உயிராதல், இரட்டித்தலுக்கு முன்பு ஏற்படும்.

**6.1.20** ந வஸ¹:

'வஸ்' இன் அரையுயிர், 'யங்' ஒட்டுக்கு முன் நிற்கும்போது, முழு உயிராகாது.

வஸ்¹ + யங் = வ ф – வஸ் + யங் = வா வஸ்யதே (7.4.83), 'அதிகமா க விரும்புகிறான்'; வாவஸ்யேதே, வாவஸ்யந்தே.

**6.1.21** சாய: கீ

'சாய்' (மதி) யைத் தொடர்ந்து 'சங்' வரும்போது, அத்தாதுவுக் குப் பதிலியாக 'கீ' வரும்.

சாய் + யங் = கீ + யங் = கேகீய (7.4.62; 92)

'அதிகமாக மதிக்கிறான்'

**6.1.22** ஸ்ப$^{2}$ய: ஸ்பீ$^{2}$ நிஷ்டாயாம:

ஸ்பாய (உப்புதல்) வைத் தொடர்ந்து நிஷ்டா வொட்டுக்கள் வரும்போது அதற்குப் பதிலியாக ஸ் பீ$^{2}$ வரும்.

ஸ்ப$^{2}$ாய் + க்த/க்தவது=ஸ்பீ$^{2}$த:

ஸ்பீ$^{2}$தவான் 'பருமனாகுகிற'

**6.1.23** ஸ்த்ய: ப்ர பூர்வஸ்ய

'ப்ர'வுக்குப்பின் ஸ்த்யா (ஸ்த்யை, ஷ்ட்யை) நிற்கும்போது, அத்தாதுவின் அரையுயிர், நிஷ்டாவொட்டுத் தொடரும்போது முழுவுயிராகும்.

ப்ர + ஸ்த்ய = க்த, க்தவது ப்ரஸ்கீத,

ப்ரஸ்தீதவான் 'ஒருங்கு கூட்டுகிற'

இதன் மாற்றுவடிவம் ப்ரஸ்திம (பார்க்க 8.2.42) த–வுக்குப் பதிலியாக விதிக்கப்பட்ட ந (8.2.42)வை, உயிாக்கம் தடுக்கிறது. ஆனால் ஸம் ஸ்த்யை க்த, க்தவது=ஸம் ஸ்த்யான (8.2.45) கட்டியாகுகிற உறைகிற

**6.1.24** த்$^{3}$ரவ மூர்த்தி ஸ்பர்ஸயோ: ஸ்'ய:

ஸ்'யை (ஸ்யா) போ என்ற வினையின் அரையுயிர், நிஷ்டா வொட்டுக்களுக்கு முன் நிற்கும்போது, முழு உயிராகும்.

கெட்டியாதல், உறைதல், தொடுதல், என்ற பொருளை வினை சுட்டும்.

ஸ்'யா + க்தா; க்தவது = ஸீ'ன; ஸீ'னவத்(8.2.47)

'நெய்'; ஸீ$^{1}$த; ஸீ$^{1}$தவத் 'குளிர்ச்சி' (தொடுவதற்கு) வேறு பொருளில் ஸம்–ஸ்'யான (8.2.43) 'சுருங்கிய' ஸம்ஸ்'யானோ வ்ருஸ்'சிக; 'உடலைச் சுருக்கிக் கொண்ட தேள்'

**6.1.25** ப்ரதேஸ்'ச

ப்ரதி–யைத் தொடர்ந்து நிற்கும் ஸ்'யை (ஸ்'யா) வின் அரையுயிர் நிஷ்டாவொட்டுக்கு முன் முழுவுயிராகும்.

ப்ரதி + ஸ்$^{1}$+ யா= க்த, க்தவது ப்ரதிஸீ'ன:

ப்ரதிஸீ'னவத், இது கெட்டியாதல், தொடுதல் என்ற பொருட்களை த் தவிர, வேறு பொருட்களையும் சுட்டும்.

**6.1.26** விப$^{4}$ாஷா அப$^{4}$யவ பூர்வஸ்ய

அபி$^{4}$, அவ முன்நிற்கும்போது ஸ்'யாவின் அரையுயிர், விருப்பாக, நிஷ்டாவொட்டுத் தொடரும்போது முழுவுயிராகும்.

அபி$^{4}$ + ஸ்'யா = க்த, க்தவது அபி$^{4}$ஸீ$^{1}$ன,

அபி$^{4}$ஸீ$^{1}$னவத், அபி$^{4}$ஸ்யான, அபிஸ்'யான, வத் 'உறைந்த' (நெய்

அபி$^{4}$ஸீ$^{1}$த, அபி$^{4}$ஸ்யான 'குளிர்ந்த காற்று'

அவஸீ'ன, அவிஸ்'யான 'உறைந்த'

அவஸீத, அவஸ்'யான 'குளிர்ந்த தண்ணீர்'

**6.1.27** ஸ்'ருதம் பாவே

ஸ்'ருதம் 'சமைத்த' என்ற பொருளில் ஸ்ரா வென்ற தாதுவின் அரையுயிர் அத்தாதுவுக்குப்பின் நிஷ்டாவொட்டுத் தொடரும்போது, விருப்பாக உயிராக்கப்பட்டு ஆக்கப்பட்டது.

ஸ்'ரா + க்த, ஸ்ரா + ணிச் + க்த = ஸ்'ருத 'சமைத்த' (பால் அல்லது வேள்விக்கான ஆஹூதி); ஆனால் வேறு பொருளில் ஸ்'ராண ஆகும்.

**6.1.28** ப்யாய: பீ

'ப்யாய்'உக்கு, 'பீ' விருப்பாக, நிஷ்டாவொட்டுக்களுக்குமுன் விருப்பாகப் பதிலியாகும்.

ப்யாய் + க்த, பீன – 'பருத்த'

பீனம் முக²ம் – 'பருமனான முகம்'

**6.1.29** லிட் யஙோ ஸ்' ச

லிட், யங் ஒட்டுக்களுக்கு முன் நிற்கும் 'ப்யாய்' க்குப் பதிலியாக பீ வரும்.

ஆ + ப்யாய் + லிட் + ஆ + பி + பீ + ஏஸ்' (3.4.81); 7.4.56) = ஆபிப்யே (4.82 )

ஆ+ப்யாய்+யங்=ஆ+பி+யங்=ஆ+பே+பீ+ய+தே

(7.4.82) ஆபேபியதே 'அடிக்கடி அல்லது மிகுதியாகப் பருக்கிறான்.'

**6.1.30** விப⁴ாஷா ஸ்'வே:

லிட், யங் ஒட்டுக்களுக்கு முன் ஸ்வி நிற்கும்போது, ஸ்வி யினரையுயிர் விருப்பாக முழுவுயிராகும்.

ஸ்'வி+லிட் = ஸ்'வி + நல் = ஸ் ф இ – ஸ்'வி + ணல் (7.4.60) ஸி' – ஸ்'வை + அ = (7.2.115) ஸி' – ஸ்வாய (7.2.86)(அவன்) 'பருத்திருக்கிறான்'; ஸூ' + ணல் = ஸூ' + ஸ'ாவ் + அ ஸூ'ஸ'ாவ.

ஸ்வி + ஸூ + யங் + ஸே' – ஸ்'வீய; ஸே'ா–ஸூ'ய (7.4.25)

'ஸ்வி' தாது, யஜ் வகுப்பைச் சேர்ந்ததாதலால், லிட் ஒரு கித் ஆகையால் சூ. 15 இன்படி ஸம்ப்ரஸாரணம் (முழு உயிராதல்) கண்டிப்பாக ஆகும். இந்தச் சூத்திரம், ஸம்ப்ரஸாரணம் விருப்பாக ஆகும் என்று விதிக்கிறது. யங் ஒட்டுக்கு முன். ஸ்வி தாதுவின் ஸம்ப்ஸாரணமாவதை மேலே ஒரு சூத்திரமும் குறிப்பிடவில்லை இச்சூத்திரம், அதை விதிக்கிறது.

**6.1.31** ணௌ ச ஸன்ஸ்' சஙோ:

'ஸ்'வி' தாது 'ணிச்'ஒடு (காரணவினை), ஸன், சங் ஆகியவைகளுக்கு முன் நிற்கும்போது அத்தாதுவின் அரையுயிர் விருப்பாக முழுயுயிராகும்.

1) ஸ்வி + ணிச் + ஸன் = ஸ்'வி, ஸூ+ணிச் + ஸன்=ஸி –
ஸ்'வை + ணிச் + இட் + ஸன் = ஸி' – ஸ்'வயே – இ + ஸன் = ஸி' –
ஸ்'வாய – அயி – ஷ = ஸி'ஸ்'வாயிஷதி,

ஸூ'ஸ்'வாயிஷதி பெருக்க விரும்புகிறான்

2) ஸ்'வி, ஸூ'+ ணிச் + சங் = அ – ஸி' – ஸ்வை – ϕ + சங் = த் (4.51) அஸிஸ்'வாயத் (7.4.1) அல்லது அஸூஸௌ + ϕ –அ–த்– அஸூஸவத் (7.4.94)
ஸம்ப்ரஸாரண உயிராதல் தொடர்பான விதிகள். அந்தரங்க விதிகளுள் பயன்படுத்துவதற்கு முன்பே, பயன்படுத்த வேண்டுமென்று பரிபாஷா விதிக்கிறது (ஸம்ப்ரஸாரணம் ஸம்ப்ரஸாரணாஸ்'ரயம் ச ப³லீயோ ப⁴வதி) ஆகவே, 7.2.115–6 முதலியவைகள் ஸம்ப்ரஸாரணம் தொடர்பான விதிகள் பயன்படுத்தப்பட்ட பிறகுதான் பயன்படுத்த வேண்டும்.

**6.1.32** ஹ்வ: ஸம்ப்ரஸாரணம்

(காரண வினை) ஹ்வா (ணிச் சோடு நிற்கும்போது)யைத் தொடர்ந்து ஸன், யங் ஒட்டுக்கள் வரும்போது, இத்தாதுவின் அரையுயிர், உயிராகும் (ஸம்ப்ரஸாரணம்)

1) ஹ்வா + ணிச் + ஸன் = ஹு + ணிச் + ஸன் = ஜூ – ஹூ + ணிச் + ஸன் (7.4.62)=ஜூ–ஹௌ+ணிச் + இட் + ஸன் = ஜூ–ஹாவ்–ஏ–இ–ஷ (7.3.84) ஜுஹாவயிஷதி,

2) ஹ்வா+ணிச்+சங்–த்=ஹு+ணிச்+சங்–த்=அ–ஜூ+ஹௌ இ–அ–த்=அ–ஜூ–ஹவ்ϕ–அ–த்=அஜூஹவத்

அனுவிருத்தி மூலம் ஸம்ப்ரஸாரணம் இச்சூத்திரத்திலும் வருமாயினும், விபாஷா (30) இங்க வருவதைத் தடை செய்வதற்காகவே, ஸம்ப்ரஸாரணம் திரும்பப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

**6.1.33** அப்⁴யஸ்தஸ்ய ச

இரட்டிக்கப்பட்ட ஹ்வா தாதுவின் ஈரரையுயிர்களும் முழுவுயிராகும்.
ஹ்வா+லிட்=ஹு+லிட்=ஹு+ணல்=ஹு–ஹு+ணல்=
ஜுஹாவ (7.2.115, 4.52) ஹ்வா+ யங்+ தே = ஜோஹூயதே (7.4.62; 82)

**6.1.34** ப³ஹுலம் ச²ந்த³ஸி

வேதமொழியில், ஹ்வாவின் அரையுயிர் பல வகையில் உயிராகும்.
இந்த்³ராக்³னீ ஹுவே
ஹ்வயாமி மருத: ஸி'வான்
ஸ்'ருதீ⁴ ஹவம்
இவ்விரண்டிலும் ஸம்ப்ரஸாரணமாகவில்லை.

**6.1.35** சாய: கீ
'சாய்'க்கு 'கீ' பலவகையில் பதிலியாகும்.
விது$^4$னா நிசிக்யு:
அக்னிர் ஜ்யோதிர் நிசாய: (இங்கு, 'கி' பதிலியாவில்லை)

**6.1.36** அப ஸ்ப்ரு'தே$^4$த$^2$ா மான்ரு சுரான்ரு ஹுஸ்$^1$
சிச்யுஷே தித்யாஜ ஸ்'ராதா:
ஸ்'ரித மாஸீ$^1$ ராஸு'ர்த்தா:
வேதமொழியில் காணப்படும்.
1)அபஸ்ப்ருதே$^4$தாம் 'நீங்களிருவரும் ஒருவருடனொருவர் போட்டியிட்டீர்கள்'
2) ஆன்ருசு:'அவர்கள் பூசித்தார்கள்'
3) ஆன்ருஹு: 'அவர்சள் பூசித்தார்கள்'
4) சிச் யு ஷே 'நீ (ஒருமை) ஆடிவிட்டாய'
தித்யாஜ (அவன் ) விட்டுவிட்டான்
ஸ்'ராதா: 'சமைத்தான்', ஸ்'ரிதம் –'கலந்த', ஆஸீ'ர், ஆஸீ'ர்த்த,
'ஸோமரஸத்துடன் கலந்த பால்'
ஆகியவைகள் நிபாதனங்கள்
1) அபாஸ்ப்ருதே$^4$த$^2$ாம், அஸ்பர்தே$^4$த$^2$ாம் (லங்)
2) ஆனர்சு (லிட்)
3) ஆனர்ஹு: (லிட்)
4) சுச்யுவிஷே (லிட்)
5)த்யாஜ (லிட்) ஆகியவைகள் முதல் ஐந்து வடிவங்களின் விதிப்படியாக்கப்பட்ட வடிவங்கள். மீதி வடிவங்கள் ஸ்ரீங் தாதுவிலிருந்து விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்டவை.

**6.1.37** ந ஸம்ப்ர ஸாரணே ஸம்ப்ரஸாரணம்
அரையுயிர் முழு உயிராக்கப்பட்டு நிற்கும்போது (ஸம்ப்ரஸாரணே) அதைத் தொடர்ந்து வரும் மற்றொரு அரையுயிர், முழுவுயிராகாது (ந ஸம்ப்ரஸாரணம்) இச்சூத்திரத்தில் காணப்படும், 'ஸம்ப்ரஸாரணம்' என்ற சொல் சூ.18 இலிருந்து அனுவிருத்தி மூலம் தொடர்ந்து கிடைக்கப்பெறுமாயினும், இது ஒரு பொது விதி, முன் சூத்திரங்களில் விளக்கப்பட்ட வரையறைக்கு பட்டவையல்லவென்று சுட்டத்தான் இச்சொல்லை இங்கு திரும்புவும் பயன்படுத்தியுள்ளது.
காட்டாக, 'யுவன்' என்ற சொல்லின் அரையுயிர், தத்திதமல்லாத வொட்டுக்குமுன் முழுவுயிராகும் (6.4.133) யுவன் + ஸ்'ஸ் = யு – உன் – அஸ்=யுனஸ். இதன் பிறகு, மேலும் ஸம்ப்ரஸாரணமாகாது.
வ்யத்$^4$+க்த=வி–அ–த்$^4$+த$^4$ (87.2.40)=வித்$^3$த$^4$ (8.4.53) "துளைத்த துளைக்கப்பட்ட";
வ்யச் + இட் + க்த = விசித "ஏமாற்றிய" இவ்விரண்டு எடுத்துக்காட்களிலும்,

அரையுயிரான, வ் அரையுயிரிலிருந்து முழுவுயிரான 'ய்'க்குமுன், முழுவுயுராக்கப்படவில்லை.

வா: ருசி த்ரேருத்தரபத[3]விலோபஸ் ச[2]ந்த[3]ஸி

த்ரி–யின் அரையுயிர் ருச் தொடரும்போது, முழுயுயிராகும்.ருச் ஒரு சீரைச் சுட்டுமானால் அதன் ரு கெடும். த்ருசம் ஸீக்தம்

வா: ரயேர் மதௌ ப[3]ஹுலம்

ரயி–யின் அரையுயிர் வேதமொழியில் மத் தொடரும்போது பலவகையாக ஸம்ப்ஸாரணமாகும்.

ரயி + மத் = ரஇ + மத் = ர + இ + மத் = ர + இ + வத் ரேவத்

ஆ ரேவானேது நோ விஸ[1]:

ரயிமான் பூஷ்டி வர்த[4]ன: (ஸ்ம்ப்ரஸாரண மேற்படவில்லை)

**6.1.38** லிடி வயோ ய:

பதிலியாக வரும் 'வய'வின் 'ய', 'லிட்' ஒட்டுக்குமுன் உயிராகாது.

உவாய

**6.1.39** வஸ்[1] சாஸ்யான்யதரஸ்யாம் கிதி

'கித்'தாக நிற்கும் லிட் ஒட்டுக்கு முன் 'வய்'இன் 'ய்' க்கு பதிலியாக வ் விருப்பாக வரும்.

ஊயது: (அ) ஊவது:

ஊயு: (அ) ஊவு:

பதஞ்ஜலியின் கருத்துப்படி இச்சூத்திரம் அன்யதரஸ்யாம் கிதி வேஞ:

வே +அதுஸ் = வா + வா + அதுஸ் = வவது:, வவு: (ஸம்பரஸாரணம் ஏற்படவில்லை)

அல்லது

வா + அதுஸ் + உ + அதுஸ் = உ + உவங் + அதுஸ்(6.1.77) = ஊவது:, ஊவு (ஸம்ப்ரஸாரணமாகியது)

**6.1.40** வேஞ:

வேஞ் தாதுவினரையுயிர், லிட்–ஒட்டுக்குமுன் உயிராகாது.

வவௌ, வவது:, வவு:

இத்தாது 'யஜாதி' வகுப்பைச் சேர்ந்தது, ஆகவே தொடர்ந்து வருமொட்டு கித் ஆனால் ஸம்ப்ரஸாரணமாகும்.

(6.1.15) லிட்–டின் இரட்டிக்கப்பட்ட வசை 'கித்' தல்லாத வொட்டு தொடரும்போது ஸம்ப்ரஸாரணமாகும் (6.1.17).

இவ்விரண்டுமே இங்கு தடைசெய்யப்பட்டிருக்கிறது.

**6.1.41** ல்யபி ச

'வேஞ்' இதனரையுர் ல்யப் (க்ருத்) ஒட்டு தொடரும் போதும் உயிராகாது.

ப்ரவாய, உபவாய

ல்யப் தொடர்ந்து வரும் சூத்திரங்களிலும் அனுவிருத்தியாவதால், இவ்விதி தனியாக கூறப்பட்டிருக்கிறது.

**6.1.42** ஜ்யஸ் 'ச

'ஜ்யா'வினரையுயிர் 'ல்யப்' தொடரும்போது ஸம்ப்ரஸாரணம் ஏற்படாது.

ப்ரஜ்யாய, உபஜ்யாய

**6.1.43** வ்யஸ்[1] ச

வ்யா (வ்யே) 'மூடு' வினரையுயிர் ல்யப் தொடரும் போது உயிராகாது.

ப்ரவ்யாய, உபவ்யாய

**6.1.44** விப[4]ாஷா பரே:

'பரி'யோடு நிற்கும் 'வ்யே'யின் அரையுயிர், 'ல்யப்' ஒட்டுத் தொ டரும்போது விருப்பாக உயிராகும்.

பரிவீய யூபம் அல்லது பரிவ்யாய

**6.1.45** ஆதே[3] ச உபதேஸே[1] அஸி'தி

'ஏச்' (ஏ, ஐ, ஒ, ஔ) ப்ரத்யாஹாரத்தின் ஒரெழுத்தையீறாக கொண்ட, உபதேஸத்தில் (அதாவது தாதுபாடத்தில்) கூறப்பட்ட தாதுவினீற்றுக்குப் பதிலியாக ஸ்—ஐஇத்தாகக் கொள்ளாத ஒட்டுத் தொடரும்போது 'ஆ' வரும்

மேங் (பண்டமாற்றுதல்)+துமுன் = மாதும்

ஆனால் மேங் + ஸ'ப் + தே = மபதே

க்[3]லை + துமுன் = க்[3]லாதும், 'அயர'

ஆனால் க்[3]லை + ஸ'ப் + திப் = க்[3]லாயதே

ஸோ'ா + துமுன் = ஸோ'ாதும் 'கூர்மையாக்க' ஆனால்

ஸோ'ா + ஸ்'யன் + திப் = ஸ்'யதி கூர்மையாக்குகிறான்.

**6.1.46** ந வ்யோ லிடி

'வ்யே' தாது 'லிட்' ஒட்டுக்குமுன் நிற்கும்போது அத்தாது வினீற்றுக் குப் பதிலியாக 'ஆ' வராது.

ஸம்விவ்யாய, ஸம்விவ்யயித[2]

ஸம் + வ்யே + லிட் – ஸம்விவ்யே + ணல் = ஸம்வி – வ்யாய (78, 7.2.115)

ஸம்விவ்யய் – இ + த[2] + ஸம்விவ்யயித[2]

நன்றாக மூடிக் கொண்டிருக்கிறாய்.

**6.1.47** ஸ்பு²ரதி ஸ்பு³லதயோர் க⁴ஞி
'க⁴ஞ்' ஒட்டுத் தொடரும்போது ஸ்பு²ர், ஸ்பு²ல் (நடுங்கு) தாதுவின் 'ஐ' 'ஒ'க்கு 'ஆ' பதிலியாகும்.
விஸ்ப²ார : (விஸ்பே²ார: அல்ல)
விஸ்ப²ால: (விஸ்போல: அல்ல) 'நடுங்குகிற'
'ஸ்'வுக்குப் பதிலாக 'ஷ்' விருப்பாக வரும்.
விஷ்ப²ார:, விஷ்ப²ால (8.3.76)

**6.1.48** க்ரீஞ் ஜீனாம் ணௌ
க்ரீ 'வாங்கு' , 'படி', ஜி 'வெல்' ஆகியவைகள் காரணவினையாக (ணிச் )ப் பயன்படுத்தப்படும்போது அதன் ஐ–க்குப் பதிலியாக ஆ வரும்.

1) க்ரீ+ணிச் + ஸ¹ப்+ திப் = க்ரை + இ+அ+தி = க்ரா+புக்+இ+அ+தி (7.3.30) = க்ரா+புக் + ஏ+ தி (7.3.84)
க்ராபயதி 'வாங்க வைக்கிறான்'

2) அத்³யாபயதி. அதி⁴+இங்+ணிச்+ஸ¹ப்+திப்=அ தி + ஆ+புக் + இ+ அ+ தி=அத்யாபயதி– 'கற்பிக்கிறான்.'

3) ஜி+ணிச்+ஸ¹ப்+திப் =ஜாபயதி 'வெல்லவைக்கிறான்.'

**6.1.49** ஸித்⁴யதேரபாரளௌகிகே
ஸித்⁴யதி என்ற வினைச் சொல் ணிச் ஓடு (இயக்குவினை) வரும்போது அவ்வினையடிச் சொல்லின் ஏ–க்குப் பதிலியாக, அச்சொல் மற்றவுலகத்தைப் பற்றி குறிப்பிடாத போது ஆ வரும்.

ஸித் + ணிச் + ஸ¹ப் + திப் = ஸித்⁴ + ஏ + அ + தி
ஸாத்⁴ –அ – ய – தி = ஸாத⁴யதி 'வெற்றி பெறுகிறான்' (முயற்சியில்)
ஆனால் ஸேத⁴யதி தபஸ் தாபஸம்
தவம், தவசிக்கு அறிவூட்கிறது. (அதாவது மற்ற உலகத்தைப் பற்றி ய அறிவு)

**6.1.50** மீனாதி மினோதி தீ³ஙாம் ல்யபி ச
மீ (காயப்படுத்து), மி (சிதறு), தீ³ங்(அழி, அழிவுறு) ஆகிய வினைகள் ல்யப் ஒட்டு, ஸ் ஐ இத்தாகக் கொள்ளாத வொட்டுக்கள் ஆகியவை களுக்கு முன் நிற்கும்போது அவைகளினுயிரெழுத்துக்குப் பதிலியாக ஆ வரும்.
1) ப்ர + மீ = துமுன் = ப்ர–மா–தும் 'காயப்படுத்த',
ப்ர+மீ+ல்யப்=ப்ரமாய 'காயப்படுத்தி'

2) நி + மி+துமுன்/+ல்யப் = நி மாதும், நிமாய

3) உப+தீ³+துமன்/+ல்யப்=உபத³ாதும், உபத³ாய

**6.1.51** விப⁴ாஷா லீயதே:
'ல்யப்', 'ஸித்' அல்லாதவொட்டுக்கள் ஆகியவைகளுக்கு முன் நிற்கும் 'லீ' (ஒட்டு) என்ற வினையின் 'ஏ'க்குப் பதிலியாக 'ஆ' விருப்பாக வரும்.
வி + லீ + ல்யப் = வி – லா – ய + விலாய, விலீய 'ஒட்டிக் கொண்டு'
விலாதும், விலேதும் – 'ஒட்டிக் கொள்ள'

வா: நிமீமிலியாம் க²லசோ: ப்ரதிஷேதே⁴ா வக்தவ்ய:
நி, மீ, மி, லீ ஆகியவைகளுக்குப்பின் (க²ல் (3.3.126), அச் (3.3.56; 1.134) ஒட்டுக்கள் வரும்போது 'ஆ' பதிலியாக வராது.
ஈஷத் ப்ரமய: ஈஷந்நிதியம:, ஈஷத் விலய:

**6.1.52** கி²தே³ஸ் ச²ந்த³ஸி
வேத மொழியில் கி²த்³ என்ற வினையில் 'ஏ'க்குப் பதிலியாக 'ஆ' விருப்பாக வரும்.
கி²த்³ + லிட் = சிகி²த்³ + ணல் = சிகே²த அல்லது சி²க²ாத³
'வேதனையடைந்தான்' மற்ற மொழிகளில் கே²த³யதி
'துன்புறுத்துகிறான்'

**6.1.53** அபகு³ரோ ணமுலி
'ணமுல்' ஒட்டுக்கு முன் நிற்கும் அபகு³ர் என்ற வினையின் 'ஓ' க்குப் பதிலியாக 'ஆ' விருப்பாக வரும்.
அப + கு³ர் + ணமுல் = அபகே³ாரம் அபக³ாரம் (3.4.22, 8.1. அஸி அபக³ாரம்/ அபகே³ாரம் யுத்⁴யந்தே (3.4.53)
கத்தியைச் சுழற்றிக் கொண்டு சண்டையிடுகிறார்கள்.

**6.1.54** சிஸ்பு²ரோர்ணௌ
சி, 'சேர்', அடுக்கு; ஸ்பு²ர் என்ற வினைகள் 'ணிச்'க்கு முன் நிற்கும்போது அவ்வினைகளின் சந்தியக்கரத்துக்குப்பதிலியாக 'ஆ' விருப்பாக வரும்.
1) சி + ணிச் = சை + ஏ + ஸ¹ப் + திப் = சாய் – அப் – அ – தி
சாபயதி; சாபயதி (7.3.36) 'அடுக்க வைக்கிறான்'

2) ஸ்பு²ர் + ணிச் + ஸ¹ப் + திப் = ஸ்பே²ார் – அய் – அ – தி = ஸ்பே²ாரயதி, ஸ்ப²ாரயதி

**6.1.55** ப்ரஜனே வீயதே:
'வீ' என்ற வினை 'விச்'சுக்கு முன் 'கருவுறு' என்ற பொருளில் வரும் போது

அவ்வினையின் 'ஐ'க்குப் பதிலியாக 'ஆ' வரும்.
ப்ர + வீ + ணிச் + ஸ'ப் + திப் = ப்ர + வாய் – அப்அ – தி
ப்ரவாயபதி 'சினைபாக்கு, 'கருவுறச் செய்' ப்ரவாபயதி

**6.1.56** பி³பே⁴தேர் ஹேது ப⁴யே
'பீ⁴' என்ற வினை 'ணிச்'சுக்கு முன் நிற்கும்போது அவ்வினை 'இயக்கு வினையில் கர்த்தாவிடமிருந்து பயமேற்படுதல்' என்ற பொருளைச் சுட்டும்போது அதன் 'ஐ'க்கு 'ஆ' பதிலியாக விருப்பாக வரும்.
பீ⁴ + ணிச் + ஸ'ப் + திப் = ப⁴ா – ப் – அய் – தே = ப⁴ாபயதே
'பயமுறுத்துகிறான்' அல்லது பீ⁴ + ஷுக் + ணிச் + ஸ'ப் + திப் = பீ⁴ஷயதே= (7.3.40)
பயத்தின் காரணம், இயக்குவினையின் கர்த்தாவல்லாத வேறு ஒன்றாகும்போது 'ப⁴ாயயதி' பயன்படுத்தப்படும்.
குஞ்சிகயா ஏனாம் ப⁴ாயயதி
'மூங்கில் கம்பைக் கொண்டு இவனைப் பயமுறுத்துகிறான்.'

**6.1.57** நித்யம் ஸ்மயதே
'ஸ்மி' இயக்கு வினையாக வரும்போது அதன் பொருள் "திகைப்படைய செய்வது" இயக்கு வினையின் கர்த்தாவாக
அமையுமானால், அவ்வினையின், 'ஐ'க்கு 'ஆ' கட்டாயமாக பதிலியாகும்.
வி + ஸ்மி + ணிச் + ஸ'ப் + தே = விஸ்மாபயதே "திகைப்பூட்கிறான்" அதிர்ச்சியூட்டுகிறான். ஆனால் விஸ்மாயயதி இங்கு இயக்குவினையின் கர்த்தா, திகைப்புக்குக் காரணமல்ல.
முண்டோ விஸ்மாபயதே; குஞ்சிகயா விஸ்மாயயதி

**6.1.58** ஸ்ரு' ஜித்³ரு'ஸோ'ார் ஜ²ல்யமகிதி
'ஸ்ரு'ஜ்' த்³ரு'ஸ்' என்ற தாதுக்களினிறுதி உயிருக்குப் பின் (ரு), 'அம்' (இடையொட்டு), அவ்வினையைத் தொடர்ந்து 'ஜ²ல்' ப்ரத்யாஹாரத்தைச் சேர்ந்த, 'க்'ஐ 'இத்'தாகக் கொள்ளாதவொட்டுத் தொடரும்போது இணைக்கப்படும்.

ஸ்'ருஜ் + துமுன் = ஸ்'ரஜ் + துமுன் = ஸ்'ரஷ்டும் (8.2.36; 4.41) "படைக்க" 'உண்டாக்க'
ஸ்ரஜ் + க்த = ஸ்ருஷ்ட 'படைத்த, தோற்றுவித்த'
த்³ரு'ஸ்'+ துமுன் = த்³ரஷ்டும் 'பார்க்க'
த்³ரு'ஸ்'+ க்த – த்³ரு'ஷ்ட

**6.1.59** அனுதாத்தஸ்ய சர்து³பத⁴ஸ்யான்ய தரஸ்யாம்
ஈற்றயல் ரு (குறில்) வாகவும், அனுதாத்த சுரம் உடைத்த தாகவும் (தாது பாடத்தில் குறிப்பிடப்பட்ட) வினைகளின் இறுதியுயிருக்குப்பின் அம்,

அவ்வியைத் தொடர்ந்து கித் அல்லாத, ஜ²ல் ப்ரத்யாஹாரத்தின் ஒரெழுத்தை முதலாகக் கொண்டவொட்டுக்கள் வரும்போது விருப்பாக இணைக்கப்படும்.
த்ருப் + துமுன் = த்ராப் + துமுன் = த்ராப்தும் அல்லது தர்ப்தும் ,தர்பிதும்(7.2.45) 'மகிழ்ச்சியூட்ட'
த்³ராப்தும், த³ர்ப்தும், த³ர்பிதும் 'வ்ருஹு', 'தூக்கு' ஆனால் வ்ருஹ் + துமுன் = வர்ஹ + தும் = வர்த்⁴ + தும் (7.3.84; 8.2.31) வர்த்⁴ + து⁴ம்(8.2.40) = வர்ட்⁴ + டு⁴ம் (8.4.41) வர் ф – டு⁴ம் (6.3.111) = வர்டு⁴ம் "உயர்த்து"

பே⁴த்தா (< பி⁴த்) 'ரு' ஈற்றபலஸ்ல

**6.1.60** ஸீர்ஷன் ஸ்¹ ச²ந்த³ஸி
ஸூர்ஷன் 'தலை' என்ற சொல் (ஸிரஸ்) (தலை) ஸின் பொருளில் வேதமொழியில் காணப்படும்.
ஸீர்ஷ்ணா ஹி தத்ர ஸோமம்
க்ரீதம் ஹரந்தி, வாங்கப்பட்ட ஸோம (ரஸத்தை?)
தலையில் (தூக்கிக் கொண்டு போகிறார்கள்.
யத்தே ஸீர்ஷ்ணோ தெ³ளர்ப⁴ாக்யம் ஸிர: (தலை)
மற்ற மொழிகளில்.

**6.1.61** யே ச தத்³தி⁴தே
'ய்' இல் தொடங்கும் தத்தித ஒட்டுக்கு முன் 'ஸிரஸ்' என்ற சொல்லுக்கு 'ஸீர்ஷன்' பதிலாக வரும்.
ஸிரஸ் + யத் (4.3.55) = ஸீர்ஷன் – ய: (4.4.168; 8.4.2) = ஸீர்ஷண்ய: 'தலைவன்'
ஸிரஸ் + க்யச் + ஸப் + திப் = ஸிரஸ்யதி

வா: வா கேஸேஷு
'தலைமுடி' என்ற பொருளைச் சுட்டும் இப்பதிலி, விருப்பாக வரும்.
ஸீர்ஷ்ண்யா: அல்லது ஸிரஸ்யா: 'தலைமுடி'

**6.1.62** அசிஸீர்ஷ:
உயிரெழுத்தில் (அச்) தொடரும் தத்திர ஒட்டுக்குமுன், ஸிரஸ் – உக்கு ஸீர்ஷ பதிலியாகும்.
ஹஸ்தின: இவ ஸிர: அஸ்ய ஹஸ்தி ф ஸிரஸ்
'யானைமுகத்தான்' ஹஸ்தி ஸிரஸ: அபத்யம் = ஹஸ்தி ஸீர்ஷ: + இங் (4.1.96) = ஹஸ்தி – ஸீர்ஷ ф – இ – : ஹஸ்தி
ஸீர்ஷி 'ஹஸ்தி ஸிரஸின் 'தலைமுறையில் வந்தவன்'

**6.1.63** பத்³த³ன்னோமாஸ் ஹ்ருந்நிஸஸன் யூஷன் தே³ாஷன்
பகஞ்ச²கன்னுத³ன் நாஸஞ் ச²ஸ் ப்ரப்⁴ருதிஷு

'ஸ$^{1}$ஸ்' முதலிய ஒட்டுக்களுக்கு முன் நிற்கும், பாத$^{3}$ 'பாதம்' த$^{3}$ந்த பல், நாஸிகா மூக்கு, மாஸ மாதம், ஹ்ருதய இதயம் நிஸா இரவு அஸ்ருஜ் இரத்தம் யூஷ சாறு, தே$^{3}$ாஸ் கை, யக்ருத் குலை, ஸ$^{1}$க்ருத் சாணி, உத$^{3}$க தண்ணீர், ஆஸ்ய வாய்ஆகியவைகளுக்கு, முறையே பத்$^{3}$, த$^{3}$த், நஸ், மாஸ், ஹ்ருத், நிஸ், அஸன், யூஷன், தே$^{3}$ாஷன், யகன், ஸ$^{1}$கன்

உத$^{3}$ன், ஆஸக் என்பவைகள் பதிலியாகும்.

பாத$^{3}$ + ஸ$^{1}$ஸ், ட$^{3}$ா, ப்$^{4}$யாம், பி$^{4}$ஸ்

பத$^{3}$: பத$^{3}$ா, பத்$^{3}$ப்$^{4}$யாம், பத்$^{3}$பி$^{4}$ஸ்

த$^{3}$த:, த$^{3}$தா, த$^{3}$த்$^{3}$ப்யாம், த$^{3}$த்$^{3}$பி$^{4}$ஸ்

நஸ$^{1}$:, நஸ$^{1}$ா, நஸ்ப்$^{4}$யாம், நஸ்பி$^{4}$ஸ்,

மாஸ:, மாஸம், ............................

ஹ்ருத$^{3}$:, ஹ்ருத$^{3}$ா........................

நிஸ$^{1}$: நிஸ$^{1}$ா................................

அஸ்ன:, அஸ்னா........................

யூஷ்ண:, யூஷ்ணா.....................

தே$^{3}$ாஷ்ண:, தோஷ்ணா...........

யக்ன:, யக்னா..........................

ஆஸ்ய + யத் = ஆஸன்யம்

வா: பத$^{3}$ாதி$^{3}$ஷு மாம்ஸ் ப்ருத்ஸ்னுனா முபஸம்க்$^{2}$யானம்

மாம்ஸ், ப்ருதனா, ஸானு என்பவைகளுக்குப் பதிலியாக மாம்ஸ், ப்ருத், ஸ்னு வரும்.

மாம்ஸ் பசன்யா (மாம்ஸ பசன்யா)

ப்ருத்ஸ் மர்த்யம் (ப்ருதனாஸு மர்த்யம்)

நதே தி$^{2}$வோ ந ப்ருதி$^{2}$வ்யா அதி$^{4}$ஸ்னுஷு (அதி$^{4}$ஸானுஷு)

வா: நஸ் நாஸிகாயா யத்தஸ் க்ஷுத்$^{3}$ரேஷு

யத், தஸ் என்றவொட்டுக்களோ, அல்லது க்ஷுத்$^{3}$ர என்ற சொல்லோ தொடரும்போது மட்டும், நஸ் , நாஸிகா, வுக்குப் பதிலியாகும் .

நஸ்யம், நஸ்த:, ந: க்ஷுத்$^{3}$ர:

வா: யதி வர்ண நக$^{3}$ரயோர் நேதி வக்தவ்யம்

எழுத்து, நகரம் என்ற பொருட்களைச் சுட்டும்போது, யத் ஒட்டுத் தொடர்ந்தாலும், நாஸிகா–வுக்கு நஸ் பதிலியாகாது.

நாஸிக்ய: வர்ண: 'மூக்கொலி எழுத்து'

நாஸிக்யம்–ஒரு நகரத்தின் பெயர்

**6.1.64** த$^{4}$ாத்வாதே$^{3}$:, ஷ: ஸ:

தாதுவின் முதலாக நிற்கும் ஷ–வுக்குப் பதிலியாக ஸ வரும்.

ஷஹ் – ஸஹ் + ஸப் + திப் = தே ஸஹதே (அவன்) பொறுத்துக் கொள்கிறா

ன், ஷிச் – ணிச் + ஸ'+ திப் = ஸி + நும் + அ + தி (7.1.59) = ஸிஞ்சதி
தெளிக்கிறான்

வா: ஸுப்³த⁴ாதுஷ் டி²வுஷ் வஷ்கதீனாம்
ப்ரதிஷேதே⁴ா வக்தவ்ய:

பெயர்ச் சொல்லிருந்து ஆக்கப்பட்ட தாது, ஷ்டி²வ், ஷ்வஷ்க ஆகியவைகள் இதற்கு விலக்காகும்.

ஷோட³யதி, ஷண்ட³யதி (பெயரிலிருந்து ஆக்கப்பட்ட தாதுக்கள்)

ஷ்டி² ஷ்டீ²வதி

ஷ்வஷ் ஷ்வஷ்கதே

ஷ்டிவ் தாது இரண்டு தாதுக்களைக் கொண்டது, அதாவது ஷ்டிவ், ஷ்தி²வ் ஆகவே, இரட்டித்தலில் இதன் இரண்டு வடிவங்கள் கிடைக்கும்.

தேஷ்டீ⁴வ்யதே, டேஷ்டீ²வ்யதே

**6.1.65** ணோ: ந:

தாது பாடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் ண–வைக் முதலாகக் கொண்ட தாதுக்களின், ன–வுக்கு ந பதிலியாகும்.

ணீஞ் – நீ ஸ'ப் திப் நயதி

ணம் – நமதி

ணஹ் – நஹ்யதி

**6.1.66** லோபோ வ்யோர் வலி

வல் (ய்–வைத் தவிர்த்த ஏனைய மெய்கள்) பிரத்யாஹாரத்தைச் சேர்ந்த எழுத்துக்கு முன் வ், ய், கெடும் (லோப)

தி³வ் + லிட் = தி³வ் + க்வஸு (3.2.107)

தி³ϕ – தி³வ் + க்வஸு = தி³ – தி³ϕ + வஸ் = தி³தி³ வஸ்

ஊய் + க்த = ஊ – ϕ + த = ஊத

**6.1.67** வே: அப்ருக்தஸ்ய

'வி' ஒட்டு, ஒரே ஒரு எழுத்தாகக் குறைக்கப்பட்ட போது (அதாவது வ்) அது கெடும்.

வி = க்விப், க்வின், ண்வி, ண்வின், விச், விட் என்ற க்ருத் ஒட்டுக்களும் தத்திவொட்டான ச்வி–யும் ஆகும்.

க்⁴ருத + ஸ்ப்ருஸ்' + க்வின் (3.2.87) = க்⁴ருதஸ்ப்ருஸ்' + ϕ = க்⁴ருதஸ்ப்ருஸ்
நெய்யைத் தொடுகிற:

ப்³ரஹ்மன் + ஹன் + க்விப் = ப்³ரஹ்ம ϕ + ஹன் + ϕ (8.2.7) = ப்³ரஹ்மஹன்
''பிராம்மணனைத் கொல்கிற''

அர்த⁴ + ப⁴ஜ் + ண்வி = அர்த⁴ + பாஜ் + ϕ (3.2.62)

'பாதிப் பங்கு பெறுபவன்' ஸ்வேத + வஹ் + ண்வின் (3.2.71)

ஸ்வேத + வாஹ் + ϕ = ஸ்வேதவாஹ் 'வெள்ளைக் குதிரையை வாஹனமாகக் கொண்ட'; உப + யஜ் + விச் (3.2.73)

உப + யஜ் + ϕ 'யாகத்தின் மந்திரங்களோடு சேர்க்கப்பட்ட மந்திரம்'; க்ரவ்ய + அத்[3] + விட் (3.2.69)

க்ரவ்யாத்[3] + ϕ = க்ரவ்யாத் 'மாமிசம் உண்பவன்'

**6.1.68** ஹல் ங்யாப்[4]ய: தீ[3]ர்க்[4]ாத் ஸுதிஸ்ப்ருக்தம் ஹல்

மெய்யெழுத்தையீறாகக் கொண்ட சொற்களுக்குப்பின்னும், பெண்பாலொட்டான ஙீ, ஆப் ஆகியவைகளில் நெடில் உயிருக்குப் பின்னும் இணைக்கப்படும். ஸு, தி, ஸி ஆகியவொட்டுக்கள், ஒரேயொரு ( மெய்யாக (க் குறைக்கப்பட்டபோது) நிற்கும்போது, அம்மெய் கெடும்.

நீ – ஙீ=ஙீன், ஙீப், ஙீஷ்

ஆப்=சாப், டாப், ட3ாப்

1) ஹல்–ராஜன் + ஸு = ராஜான் + ஸு (6.4.8) – ராஜா + ϕ (8.2.7) = ராஜா (முதல் வேற்றுமை ஒருமை)

2) ஙீ – குமாரீ + ஸு = குமாரீ

3) ஆப் – க[2]ட்வா + ஸு = க[2]ட்வா

4) ப்[4]ருங் + லங் = அட் + ப்[4]ரு + ஸ்'லு + திப்/ஸிப் = அபி[3]ப[4]ர்த்/ஸ 4.71; 7.4.76; 7.3.84; 8.4.100) அபி[3]ப[4]ர் ϕ அபி[3]ப[4]ர்
ஆனால் க்[3]ராமணீ + ஸு = க்ராமணி:
நிஷ்கௌஸாம்பி + ஸு = நிஷ்கௌஸாம்பி[3]:

**6.1.69** ஏங் ஹ்ரஸ்வாத் ஸம்பு[3]த்[3]தே[4]:

'ஏங்' பிரத்யாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்தை யீறாகக் கொ ண்ட (அதாவது ஏ, ஒ) பெயர்ச் சொல்லுக்குப் பின்னும் குறிலுயிரை யீறாகக் கொண்ட பெயர்ச் சொல்லுக்குப்பின்னும் இணைக்கப்படும். விளி வேற்றுமை ஒருமையுருபு (ஸு) கெடும்.

அக்[3]னி + ஸு (விளி) = அக்[3]னே + ஸு (7.3.108) =அக்[3]னே + ϕ = அக்னே (விளிவேற்றுமை ஒருமை)

வாயு + ஸு = வாயோ + ஸு = வாயோ + ϕ = வாயோ

குறில் தே[3]வ + ஸூ = தே[3]வ +ϕ = தே[3]வ

நதி + ஸு = நதி + ஸ் (7.3.107) = நதி + ϕ = நதி; வது[4] + ஸூ = வது[4] + ஸ் = வது[4] + ϕ = வது[4]

**6.1.70** ஸே$^{1}$ஸ்$^{1}$ ச$^{2}$ந்த$^{3}$ஸி

வேதமொழியில், 'ஸி$^{1}$' பலவகையில் லோபமாகும்.

யத்$^{3}$ + ஸி$^{1}$ க்ஷேத்ர + ஸி$^{1}$ = ய அ + ஸி (7.2.102) = ய + ஸி (97) = ய + நும் + ஸி (7.1.72) = யானி க்ஷேத்ராணி யா ϕ க்ஷேத்ர ϕ யா க்ஷேத்ர (8.2.7); யா வனா, யானி க்ஷேத்ராணி, யானி வனானி

**6.1.71** ஹ்ரஸ்வஸ்ய பிதி க்ருதிதுக்

'ப்' ஐ 'இத்'தாகக் கொண்ட 'க்ருத்' ஒட்டோடு இணைக்கப்பட்ட, குறிலுயிரை யீற்றாகக் கொண்ட அடிச் சொல்லுக்குப்பின் 'துஞ்' இணைக்கப்படும்.

ஸோம + ஸு + க்விப் (3.2.90) – ஸோமஸு – த் + ϕ = ஸோமஸுத் 'ஸோமத்தைப் பிழிந்தவன்';

அக்$^{3}$னிம் – சி – தவான் அக்3னி – சித் ϕ

அக்$^{3}$னிசித் 'வேள்வி குண்டத்தை யடுக்கியவன்'

ப்ர + க்ரு + க்த்வா = ப்ர + க்ரு + ல்யப் = ப்ருக்ருத்ய

**6.1.72** ஸம்ஹிதாயாம்

இச் சூத்திரத்திலிருந்து தொடங்கி 6.1.157 வரை ஸம்ஹிதாயாம் 'தொடர்ச்சியான பேச்சில்' என்பது தொடரும்.

இது ஒரு அதிகார சூத்திரம். ஸம்ஹிதா என்ற சொல் தொடர்ந்து இடைவெளியில்லாமல் உச்சரிப்பது என்று பொருள்படும். காட்டாக த$^{3}$த்$^{4}$யத்ர ஆ (= த$^{3}$தி$^{4}$ + அத்ர) என்பதில் 'த$^{3}$தி$^{4}$'யின் 'இ' 'ய்' ஆகிறது.

இவைகள் புணச்சி விதிகளாகும்.

**6.1.73** சே$^{2}$ ச

(தொடர்ச்சியான உச்சரிப்பில்) 'ச$^{2}$'வுக்கு முன் நிற்கும் குறிலுக்குப்பின் 'துக்' இணைக்கப்படும்.

க$^{3}$ம் + ஸ$^{1}$ப் + திப் = க$^{3}$ச$^{3}$தி (7.3.77) = க$^{3}$ – துக் – ச – தி = க$^{3}$ச்ச$^{3}$தி (8.4.40) (த, ச–வாக ஆகிறது 8.4.40)

**6.1.74** ஆங் மாஙோஸ்$^{1}$ச

(தொடர்ச்சியான உச்சரிப்பில்) ஆங், மாங் என்பவைகளைத் தொடர்ந்து, 'ச$^{2}$' நிற்கும்போது அவைகளுக்குப்பின் 'துக்' இணைக்கப்படும்.

ஆங் + ச$^{2}$ாயா = ஆ + துக் + ச$^{2}$ாயா = ஆ–ச் + ச$^{2}$ாயா (8.4.40) = ஈஷச்$^{1}$ ச$^{2}$ாயா 'சிறிது நிழல்'

ஆங் + ச$^{2}$ாத$^{3}$யதி = ஆ – த் + ச$^{2}$ாதயதி ஆச்$^{1}$ ச$^{2}$ாத$^{3}$யதி 'மூடுகிறான்'

மாங் + அட் + சை$^{2}$த் – ஸ் – ஈத்/அட் + சி$^{2}$த்–அ–த்

(லுங் படர்க்கை ஒருமை)

மா + ϕ சைத்ஸ் – ஈத்/சி$^{2}$–த$^{3}$–த் (6.4.74)

மா + துக் + சைத் – ஸ் – ஈத்/சி$^{2}$தத் = மாச்சை$^{2}$த்ஸீத் / மாச்சி$^{2}$த$^{3}$த் (அவன்) வெட்டக்கூடாது

**6.1.75** தீ$^{3}$ர்$^{4}$காத்

(தொடர்ச்சியான பேச்சில்) நெடில் உயிருக்குப்பின் 'துக்' அவ்வுயிரைத் தொடர்ந்து 'ச$^{2}$' நிற்கும்போது இணைக்கப்படும்.

ஹ்ரீச்$^{2}$ + ஸ'ப் + திப் = ஹ்ரீ – த் – ச$^{2}$ – தி = ஹ்ரீச்ச$^{2}$தி (8.4.40) ''வெட்கப்படுகிறான்''

ம்லேச்ச$^{2}$தி (ம்லேச்$^{2}$) 'தெளிவில்லாமல் பேசுகிறான்';

அப + சே$^{2}$ா + யங் + ஸ'ப் + தே = அப + ச$^{2}$ா + ய + தே = அப – சா – ச$^{2}$ா – ய – தே = அபசா – த் + ச$^{2}$ா – ய – தே அபசாச் – ச$^{2}$யதே

'தொடர்ந்து வெட்டுகிறான்'

**6.1.76** பத$^{3}$ாந்தாத்$^{3}$ வா

(தொடர்ச்சியான பேச்சில்) ஒரு பதத்தினிறுதியில் நிற்கும் நெடில் உயிருக்குப்பின் 'துக்' விருப்பாக, அவ்வுயிரைத் தொடர்ந்து 'ச$^{2}$' நிற்கும்போது வரும்.

குடீ$^{1}$ – ச$^{2}$ாயா = குடீ$^{1}$ – துக் + ச$^{2}$ாயா

குடீச்ச$^{2}$ாயா, குடீ சாயா குடிசையின் நிழல்

வா: விஸ்'வ ஜனாதீனாம் ச$^{2}$ந்தஸி
வா துக$^{3}$ாக$^{3}$மோ ப$^{4}$வதீதி வக்தவ்யம்

'விஸ்வஜன' முதலியவைகளோடும் வேத மொழியில் 'துக்' விருப்பா க இணைக்கப்படும்.

விஸ்வஜனச்ச$^{2}$த்ரம், விஸ்வஜனச$^{2}$த்ரம்; நச்ச$^{2}$ாயாம் குரவோபராம், நச$^{2}$ாயாம் குரவோ பராம்

**6.1.77** இகோ யணசி

(தொடர்ந்த உச்சரிப்பில்), 'இக்' (இ, உ, ரு, ல்) பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த உயிருக்குமுன், மற்றொருயுயிர் (அச்) நிற்கும்போது அவைகளுக்குப் பதிலியாக, யண் (முறையே ய், வ், ர், ல்), பிரத்யாஹாரத்தைச் சேர்ந்த அரையுயிர் வரும்.

த$^{3}$தி$^{4}$ + அத்ர = த$^{3}$த்$^{4}$யத்ர, 'தயிர் இங்கே'

மது4 + அத்ர = மத்$^{4}$வத்ர 'தேன் இங்கே'

நதீ$^{3}$ + ஆ (டா) = நத்$^{3}$யா – 'ஆற்றால்'

வதூ$^{4}$ + ஆ (டா) = வத்$^{3}$வா 'மருமகளால்'

மாத்ரு + ஆ = மாத்ரா 'தாயால்'

ல் + ஆக்ரு – தி: லாக்ருதி: தொடர்ந்து நிற்குமுயிர், வேறு வகுப்பைச் சேர்ந்ததாக இருக்க வேண்டும். பார்க்க 101.

வா: இக: ப்லுதபூர்வஸ்ய ஸவர்ண தீ³ர்க⁴ ப³ாத⁴னார் த²ம் யணாதே³ஸோ வக்தவ்ய:

உயிருக்குப் பதிலியாக அரையுயிர், அவ்வுயிருக்கு முன் ப்லுத உயிர் நின்றாலும் வரும்.

அக்³னா 3 இ இந்த்ர = அக்னா³ விந்த்³ரம் 6.1.108 வரை, உயிர் தொடரும்போது (அசி) அனு விருத்தியாகும்.

**6.1.78** ஏசோ அயவாயாவ:

ஏச் (ஏ, ஓ, ஐ, ஔ) பிரத்யாஹாரத்து எழுத்துக்களுக்குப் பதிலியாக முறையே, அய், அவ், ஆய், ஆவ் என்ற எழுத்துக்கள் (தொடர்ச்சியான உச்சரிப்பில், உயிர் தொடரும்போது) வரும்.

சி + ல்யுட் = சே + ல்யுட் (7.3.840 = சே + அன (7.1.1) = சயன: அடுக்குதல் லூ+ல்யுட் லூ + அன = லவன: ''வெட்டுதல்''; சி + ண்வுல் = சை + அக (7.1.1; 2.115)= சாயக:

**6.1.79** வாந்தோ யி ப்ரத்யயே

'வ்' ஈற்றுச் சொல்லை (அவ், ஆவ்) யீறாகக் கொண்ட சொற்களைத் தொடர்ந்து, 'ய்'வை முதலாக் கொண்டசொல் வரும்போது, அவ்வீற்றுக்குப் பதிலியாக முறையே 'ஓ' 'ஔ' வரும்.

ப³ப்⁴ரு + யங் (4.1.105) = ப³ப்⁴ரோ + யங் (4.1.46) = ப³ப்⁴ரவ்ய: (7.2.117) 'பப்ருவின் கோத்திர வழித் தோன்றல்' நௌ + யத் (4.4.91) = நாவ்யம்.

வா: கே³ார் யூதௌ ச²ந்த³ஸி

'கே³ா' என்ற சொல்லைத் தொடர்ந்து 'யூதி' என்ற சொல் வரும் போது வேத மொழியில் மேற்குறிப்பிட்ட எழுத்து பதிலியாக வரும் .

கே³ா + யூதி = க³வ்யூதி

வேறு இடங்களில் கே³ாயூதி

வா: அத்⁴ன பரிமாணே

சாலையினளவைக் குறிக்கும்போது மேற்கூறிய பதிலீடு வரும்.

க³வ்யதி மாத்ரமத்⁴வானம் க³த:

அவன் க³வ்யூதி (க்ரோஸம்) யளவு சென்றான், இது மற்ற மொழிகளில் காணப்படும்.

**6.1.80** த⁴ாதோஸ் தந்நிமித்தஸ்யைவ

நிற்கும் சொல்லினீறுகளான ஓ, ஔ தொடர்ந்து வருமொட்டின் முதலெழுத்தான, 'ய்'வினால், ஏற்பட்டவையாகும்போது,

மட்டுந்தான் அவ்,
ஆவ்,
இவைகளுக்குப் பதிலீடாகும்.
லூ + யத் (3.1.97) = லோ + யத் (7.3.84)
லவ்ய
'அறுக்கக்கூடிய';
லூ + ண்யத் (3.1.125)
லெள + ய (7.2.117) = லாவ்ய 'கண்டிப்பாக வெட்ட வேண்டிய'
ஆனால்
ஆங் + வேங் = யக் + தே = ஆயூயதே = அயதே 'நெய்யப்படுகிற'

ஒளயத 'நெய்யப்பட்ட' இவ்விரண்டு காட்டுக்களிலும் முதலில் காணப்படும் சந்தியக்கரம்.
தொடர்ந்து நிற்கும் 'யக்'கினால் வரவில்லை
ஆகையால், இச்சூத்திரம் இவைகளில் பயன்படுத்தப்படமாட்டாது.

**6.1.81** க்ஷய்ய ஜய்யெள ஸ'க்யார்தே

க்ஷி, ஜி, தாதுக்களைத் தொடர்ந்து 'யத்' ஒட்டு நிற்கும் போது அவைகளினீற்றான 'ஏ'க்கு 'செய்யத்தகுந்த/கூடிய/முடிந்த' என்ற பொருளைச் சுட்டும்போது மட்டும் 'அய்' பதிலீடாகும். க்ஷி + யத் = க்ஷே + யத் = க்ஷய்யம்; 'அழிக்கக்கூடிய', ஜய்யம் 'வெல்லக்கூடிய' இவைகள் நிபாதனங்கள். விதிப்படியாக்கப்பட்ட சொற்கள் க்ஷேயம் பாபம் 'பாபமழிக்கக்கூடியது' ஜேயோ வ்ருஷல:

**6.1.82** க்ரவ்யஸ் தத³ர்தே

'க்ரீ' தாதுவுக்குப்பின் 'யத்' ஒட்டு நிற்கும்போது, "விற்பதற்காக வைக்கப்பட்டது" என்ற பொருளைச் சுட்டும்போது அதனிற்றுக்குப் பதிலியாக 'அய்' வரும். இதுவும் ஒரு நிபாதனம்.

க்ரய்ய: கெள: "விற்பதற்காக வைக்கப்பட்ட பசு",
க்ரய்ய: கம்ப³ல: ஆனால் க்ரேயம் த⁴ான்யம்
'வாங்குவதற்குரிய, தானியம்'

**6.1.83** ப⁴ய்ய ப்ரவய்யே சச்ச³ந்தஸி

ப⁴ய்ய, ப்ரவய்ய என்ற வேத மொழியில் காணப்படும் சொற்கள் நிபாதனங்கள்.
பீ + யத் (3.3.113) = பே4 + யத் = ப4ய்ய

'பயப்பட வேண்டிய' வேத மொழியல்லாத மற்றவைகளில் பே[4]ய
ப்ர + வீ + யத் = ப்ர + வே + யத் + டாப் (4.1.4) = ப்ரவாய்ப ''சினையாக்கத் தகுந்த'' மற்ற மொழிகளில் ப்ரவேய

வா: ஹ்ரத[3]ய்யா ஆப உபஸம்க்[2]யானம்
தண்ணீரைக் குறிக்கும்போது ஹ்ரதய்பா என்ற சொல்லும் இத்துட ன் சேர்க்க வேண்டும்.
ஹ்ரதி[3] + யத் = ஹ்ரதே[3] + ய (4.4.110)
ஹ்ரத[3]ய் + ய = ஹ்ரத[3]ய்ய

**6.1.84** ஏக: பூர்வ பரயோ:
முன்நிற்கும் எழுத்து, தொடர்ந்து வருமெழுத்து ஆகியவிரண்டுக்கும் ஒரேவொரு எழுத்து பதிலியாக வரும்.
இதுவொரு அதிகார சூத்திரம். இது சூ.111 (உட்பட்டு) வரை அனுவிருத்தியாகும். இது ஏகாதே[3]ஸ[1] விதியெனப்படும்.
க[2]ட்வா + இந்த்ர: = க[2]ட்வேந்த்ர: இங்கு ஆ + இ = ஏ

**6.1.85** அந்தாதி வச் ச
மேற்சூத்திரத்தில் கூறப்பட்ட ஏகாதேஸம், நிற்குஞ் சொல்லின் ஈறாகவும், வருஞ் சொல்லின் முதலாகவும் செயற்படும்.
வ்ருக்ஷ + ஔ = வ்ருக்ஷௌ, நிற்குஞ் சொல்லினீறான 'அ'வுக்கும், வருஞ்சொல்லின் முதலான 'ஔ'க்கும் பதிலீடாக, ஒரேயெழுத்தாக 'ஔ' வருகிறது. இது வ்ருக்ஷ என்ற பெயரடிச் சொல்லினீறான 'அ'வ ாகவும், தொடர்ந்து வருமொட்டான ஸுப்பின் முதலாகவும் கருதப்படும். ஆகவே சூ. 1.4.14இன்படி 'வ்ருக்ஷௌ' என்பதைப் பத மாக விளக்கலாம்.
ப்[3]ரஹ்மப[3]ந்து[4] + ஊங் = ப்[3]ரஹ்மப[3]ந்தூ (பெண்பால்)
உ + ஊ – ஊ, = ப்[3]ரஹ்மப[3]ந்து[4] (ஆண்பால்) ஒரு பிராதிகம், 'ஊ' (பெண்பாலொட்டு) பிராதிபதிகமல்ல, 'ஏகாதேச'மான 'ஊ', பிராதிபதிகத்தினீறாகக் கருதப்படும். ஆகையால், இத்துடன் வேற்றுமையுருபுகளை இணைக்க முடியும். (4.1.1). இந்த விதியமைக்கப்படாவிட்டால், இச்சொல்லுடன் வேற்றுமையுருபுகள் இணைக்க முடியாது. ஏனென்றால் பெண்பாலோட்டான 'ஊ'வை இணைப்பதானால், இது பிராதிபதிகமாகாமல் நின்றுவிடும்.
(1.1.46). 'ஊ' 4.1.1 இல் குறிப்பிடப்படாததால் பிராதிபதிகமாகாது.

**6.1.86** ஷத்வ துகோரஸித்[3]த[4]:
மேலே கூறப்பட்ட ஏகாதேஸம் 'ஸ' 'ஷ' வாக மாற்றமடைவதிலும் 'துக்'ஐ இறுதியில் இணைப்பதிலும் செயல்படாது.

கிம் + ஸு = அஸிசத் = க + ஸ (7.2.103) + அஸிசத் = கரு + அஸிச் – அ த் (8.2.66) = க–உ + அ–ஸிச்–அ–த் (113) = கோ + அ–ஸிச்–அ–த்(87)=கோஸி–சத் (109). பல்லொலியான 'ஸ்'வுக்கு வளை நாவொலியான 'உ' பதிலியாக வரவேண்டும் (8.5.59). ஏனென்றால், நிற்குஞ் சொல்லினீறான 'ஒ' –வுக்கும், தொடர்ந்து வரும் 'அ்'–வுக்கும் பதிலியாக வரும் ஒரேயொருயெழுத்து (ஒ) 8.3.59 செயல்படுவதைத் தடுக்கிறது.

அதி[4] + இங் + க்த்வா = அதி4 + இ + ல்யப் = அத் – ஈ – ல்யப் (7.1.37) நிற்குஞ் சொல்லினிறுதியிலான 'இ', தொடர்ந்து வரும் தாதுவின் முதலான 'இ' ஆகிய இரண்டுக்கும் பதிலியாகும். ஈ இங்கு செயல்படாது என்று கருதப்படுவதால், மேலே கூறப்பட்ட சூ. 71 செயல்படுவதைத் தடுக்காது. ஆகவே அதீ[4]த்ய 'படித்துவிட்டு' என்ற சொல் கிடைக்கும்.

வா: ஸம்ப்ரஸாரண ஙீட்ஸு ப்ரதிஷேதே[4]ா வக்தவ்ய:

உயிராக்கம், 7ஆம் வேற்றுமை ஒருமையுருபு (ஙீ) ஆத்மனேபத தன்மையொருமையொட்டு (இட்) ஆகியவைகளில் இவ்விதி தடுக்கப்படும்.

ஸ[1]கஹூஷு = ஸ[1]கான் ஹ்வயதி + க்விப் =ஸம்ப்ரஸாரணம், ஸ[1]கஹ்வா + க்விப் = ஸ[1]கஹு உ ஆ + ϕ (6.1.15) = ஸ[1]கஹூ (6.1.108)

ஸ[1]கஹு + ஸு = ஸகஹூஷு (6.4.2) 7ஆம் வேற்றுமை ஒருமை இங்கு 'ஸ'வுக்குப் பதிலியாக 'ஷ' வருகிறது. உ + அ. இவ்விரண்டுக்கும் பதிலியாகும் ஒ்ரேயெழுத்து 'உ' 'அஸித்தம்' (செயலற்றது) என்ற கருதப்படாததால், இச்சூத்திரம் இங்கு செயல்படவில்லை.

ஙி–வ்ருக்ஷ + இ = வ்ருக்ஷே + ச[2]த்ரம் = வ்ருக்ஷேச்ச[2]த்ரம்

அல்லது வ்ருக்ஷேச[2]த்ரம். அ + இ = ஏ. ஏகாதே[3]ஸம் அஸித்தம் என்று கருதப்படாததால், இவ்விரண்டு வடிவங்களும் கிடைக்கிறது.

ஆத்மனேபத, 'இட்'–அபசே + ச[2]த்ரம்

அபசேச்ச[2]த்ரம் அல்லது அபசேசத்ரம். 'ஏகாதேஸம்' செயலுள்ளது என்று கருதி, 'துக்' (6.1.75–76) இங்கு இணைக்கப்பட்டிருக்கிறது. ஏகாதே[3]சம் 'அஸித்[3]த[4]ம்' அல்லாததால் 'துக்' விருப்பாக இணைக்கப்படுகிறது.

**6.1.87** ஆம்[3]கு[3]ண:

நிற்கும் சொல்லினீறான 'அ' அல்லது 'ஆ' (ஆத்)வுக்கும் வருஞ் சொல்லின் முதலான ஒருயிர்க்கும் பதிலியாக, குண (அ, ஏ, ஒ) எழுத்து வரும்.

தே[3]வ + இந்த்ர = தே[3]வேந்த்ர

நர + ஈட்[3]ய = நரேட்[3]ய "மனிதர்களால் புகழப்பட்ட"

ஆ + இத: = ஏத: "அவர்களிருவரும் வருகிறார்கள்";

ப்ர + ஈக்ஷதே = ப்ரக்ஷேதே 'பார்க்கிறான்'

பரா + ஈக்ஷேத = ப்ரேக்ஷத "பார்க்க வேண்டும்";

உஷ்ண + உதக = உஷ்ணோத3க "சுடு தண்ணீர்"; குத்ஸா + உக்தி: 'இகழ்ச்சியான பேச்சு'; கரப[4] + ஊரு = கரபே[4]ாரு "யானைத் துதிக்கை

போன்ற துடையுடைய";
ஜிஹ்வா + ஊர்த்$^{4}$வப$^{4}$ாக = ஜிஹ்வோர்த்$^{4}$வ ப$^{4}$ாக$^{3}$ "நாக்கின் மேற் பகுதி";
தே$^{3}$வ + ருஷி = தே$^{3}$வர்ஷி 'நாரதர்'; தவ + ல் – கா ர: தவல்கார:

**6.1.88** வ்ருத்$^{3}$தி$^{4}$ர் ஏசி

நிற்குஞ் சொல்லினீறான 'அ' அல்லது 'ஆ'வுக்கும், தொடர்ந்து வரு ஞ் சொல்லின் முதலான சந்தியக்கரத்துக்கும் ஏச் (ஏ, ஓ, ஐ, ஔ) பதிலியாக வ்ருத்தி (ஆ, ஐ, ஔ), ஒரேயொரு பதிலீடாகும்.
ஸ்வேத + ஏட$^{3}$க = ஸ்வேதைட$^{3}$க
ப்$^{3}$ரஹ்ம + ஓத$^{3}$ன = ப்$^{3}$ரஹ்மௌத$^{3}$ன
"பிராம்மணனுக்குரிய அன்னம்",
ப்$^{3}$ரஹ்ம + ஐதிகாயன = ப்$^{3}$ரஹ்மைதிகாயன 'இதிக'வின் வழித்தோ ன்றல்;
தீக்ஷ்ண + ஔஷத$^{4}$ – தீக்ஷ்ணௌஷத$^{4}$ 'கசப்பு மருந்து'

**6.1.89** ஏத்யேத$^{4}$த்ஹூட்$^{2}$ஸு

மேற்சூத்திரங்களில் (84, 88) விதிக்கப்பட்ட பதிலீடு (வ்ருத்$^{3}$தி), ஏதி, 'போகிறான்' ஏத$^{4}$தி 'வளர்கிறான்', ஊட் (வஹ் தாதுவின் பதிலி 4.1.2.) ஆகியவைகள் தொடரும்போது வரும்.
உப + ஏமி, ஏஸி, ஏதி உபைமி, உபைஸி, உபைதி; உப + ஏத$^{4}$தே = உ பைத$^{4}$தே
ப்ரஷ்ட$^{2}$ + வாஹ் + ஸ$^{1}$ஸ் = ப்ரஷ்ட$^{2}$ + ஊட்$^{2}$ = ஹ் + ஸ$^{1}$ஸ் (4.132)= ப்ரஷ்டௌஹஸ் = ப்ரஷ்டௌஹ: 'உழுவதற்காகப் பயிற்சியளிக்கப்பட்ட இளங்காளைகள்'
சூ. 6.1.87இன்படி ப்ரஷ்ட + ஊட் என்ற எடுத்துக்காட்டில், 'குண' வரவேண்டும். இச்சூத்திரம், அதற்குப்பதிலாக 'விருத்தி' வரவேண்டுமென்று விதிக்கிறது. ஏதி, ஏத4தி என்பவைகளில், 6.1.94, வ்ருத்தி வருவதைத் தடை செய்கிறது, இச்சூத்திரம். அவ்விதிக்கு விலக்காக நிற்கிறது.
இச்சூத்திரம் 6.1.94க்குத்தான் விதிவிலக்கு. 6.1.95க்கு அல்ல. புரஸ்தாத$^{3}$பவாத$^{3}$ா அனந்தரான் விதீ$^{4}$ன் ப$^{4}$ாத$^{4}$ந்தே ந உத்தரான் – அபவாத (விதிவிலக்கு) விதி அதற்கு முன்னால் வெகு அருகிலுள்ள, விதிகளைத்தான் தடை செய்யும். அபவாத விதிக்குப் பின்னால் தொடரும் விதிகளையல்ல. ஆகவே, கீழே கொடுக்கப்பட்டதில், இந்த விதி செயற்படாது. உப + ஆ + இத = உப + ஏத = உபேத

வா: அக்ஷாதூ$^{3}$ஹின்யாம் வ்ருத்$^{3}$தி$^{4}$ர் வக்தவ்ய:
'அக்ஷ' என்ற சொல்லைத் தொடர்ந்து ஊஹினீ. நிற்கும் போது, வ்ருத்தி பதிலீடாகும்.
அக்ஷ + ஊஹினி = அக்ஷௌஹிணீஸேனா.

வா: ஸ்வாதீ$^{3}$ரேரின்யோர் வ்ருத்$^{3}$திர் வக்தவ்ய:

'ஸ்வ'வைத் தொடர்ந்து ஈ 'ர்' அல்லது ஈரிண, அல்லது 'ஈரிணி' நிற்கும்போது 'வ்ருத்தி' பதிலீடாகும்.
ஸ்வ + ஈர் = ஸ்வைரம்
ஸ்வ + ஈரிண = ஸ்வைரிணீ
ஸ்வ + ஈரிணீ = ஸ்வைரிணீ

வா: ப்ராதூ$^3$ஹ ஊட$^3$ ஊட$^3$யேஷைஷ்யேஷு வ்ருத்$^3$தி$^4$ர் வக்தவ்ய:
'ப்ர'வைத் தொடர்ந்து ஊஹ, ஊட$^3$, ஊடி$^3$, ஏஷ, ஏஷ்ய ஆகியவைகள் நிற்கும்போது, 'வ்ருத்தி' பதிலியாகும்.
ப்ர + ஊஹ = ப்ரௌஹ, ப்ரௌட$^3$:, ப்ரௌடி$^3$:,
ப்ரைஷ:, ப்ரைஷ்ய: **6.1.94** படி இங்கு பரரூபம் வந்திருக்கும். இவ்வார்த்திகம், வ்ருத்தி வரவேண்டுமென்று கூறுகிறது.

வா: ருதே ச த்ருதீயா ஸமாஸே அவர்ணாத்$^3$ வ்ருத்$^3$தி$^4$ர் வக்தவ்ய:
'அ' வீற்றுச் சொல்லைத் தொடர்ந்து 'ரு' நிற்கும்போது மூன்றாம் வேற்றுமைத் தத்புருடமாகமையும்போதும் 'வ்ருத்தி' பதிலீடாகும்.
ஸுகே$^2$ன ருத: = ஸுக$^2$ார்த: ஆனால் ஸுகேன இத:–
ஸுகே$^2$த:

வா: ப்ர வத்ஸதர கம்ப$^3$ல வஸனானாம் ருணே
வ்ருத்$^3$தி$^4$ர் வக்தவ்ய:
'ருண' என்ற சொல், ப்ர, வத்ஸதர, கம்ப$^3$ல, வஸன என்ற சொற்களைத் தொடர்ந்து வரும்போது 'வ்ருத்தி' பதிலியாகும்.
ப்ரார்ணம் 'முதல் கடன்'
வத்ஸதரார்ணம் 'காளைக்காக வாங்கிய கடன்'
கம்ப$^3$லார்ணம் கம்பளிக்கடன்'
வஸனார்ணம் 'துணிக்கடன்'

வா: ருண த$^3$ஸ$^1$ாப்$^4$யாம் வ்ருத்$^3$தி$^4$ர் வக்தவ்யா
'ருண' என்ற சொல், ருண, த$^3$ஸ$^1$ ஆகியவைகளைத் தொடர்ந்து நிற்கும்போதும். வ்ருத்தி பதிலியாகும்.
ருணார்ண 'முதலில் வாங்கிய கடனை அடைப்பதற்காக வாங்கிய கடன்
த$^3$ஸார்ன ஒரு நதி, நாடு இவைகளின் பெயர்.

**6.1.90** ஆடஸ்ச
'ஆட்' (ஆகமம்), ஐத் தொடர்ந்து உயிர் நிற்கும்போது, அவ்விரண்டுக்கும் 'வ்ருத்தி' பதிலீடாகும்.
ஆட் + ஈக்ஷ + ஸ$^1$ப் + தே = ஐக்ஷத 'பார்த்தான்'
உப்$^4$ + லுங் + ஆட் = உப்$^4$ + ஸிச் + த் (3.1.44)
ஆ – உப்$^4$ + இட்–ஸ் + இட் + த் (7.2.35; 3.96)

ஔ – ப்$^4$ – இ – ф – ஈ – த் (8.2.28)ஔபீ$^4$த் 'நிரப்பியிருக்கிறான்'; ருத்$^4$ + லங் = ஆட் + ருத்$^4$ + ஸ்$^1$னு + த் = ஆர்த்$^4$னோத்.

**6.1.91** உப ஸர்க$^4$ாத் ருடி த$^4$ாதௌ
உபசர்க்கத்தினீறு (அ), அதைத் தொடர்ந்து வரும் 'ரு'வை முதலாகக் கொண்ட தாது, இவ்விரண்டுக்கும் 'வ்ருத்தி' ஒரேயொரு பதிலீடாகும்.
உப + ருச்ச$^2$த் = உபார்ச்ச$^2$தி,
ப்ர + ருச்ச$^2$த் = ப்ரார்ச்ச$^2$தி

**6.1.92** வா ஸுப்யாபிஸலே:
அ அல்லது ஆ வீற்று உபசர்க்கத்தைத் தொடர்ந்து நிற்கும் 'ரு'வை முதலாகக் கொண்ட நாம தாதுவின் முதலெழுத்துக்கும், உபசர்க்கத்தினீற்றுக்கும் பதிலியாக 'வ்ருத்தி' விருப்பாக வருமென்பது 'ஆபிஸலி'யின் கருத்து.
உப + ருஷப$^4$ + க்யச் + ஸ$^1$ப் + திப் = உபர்ஷபீ$^4$யதி அல்லது உபார்ஷபீ$^4$யதி.
சூத்திரத்தில் காணப்படும் 'வா' இதை விருப்பு விதியென்று சுட்டும். ஆயினும், 'ஆபிஸலி' என்ற இலக்கணகாரரின் பெயரை இங்கு சேர்ந்திருப்பது ஒரு மரியாதையோடு கூறுவதற்குத்தான்.

**6.1.93** ஒதோ அம் ஸ$^1$ஸோ:
பெயர்ச்சொல்லினீறான 'ஒ'வுக்கும் அதைத் தொடர்ந்து வரும் வேற்றுமையுருபுகளான அம் (இரண்டாம் வேற்றுமை ஒருமை), அஸ் (இரண்டாம் வேற்றுமை பன்மை) ஆகியவற்றின் முதலான 'அ' இவ்விரண்டுக்கும் 'ஆ' (ஒரேயொரு எழுத்து) பதிலீடாகும்.
கே$^3$ா + அம் = க$^3$ாம் 'பசுவை'
கோ + ஸ$^1$ஸ் = அஸ் = க$^3$ா: 'பசுக்களை'

**6.1.94** ஏஙி பரரூபம்
அ அல்லது ஆவை யீறாகக் கொண்ட உபசர்க்கத்தைத் தொடர்ந்து ஏங் பிரத்யாஹாரத்தைச் சேர்ந்த (ஏ, ஓ) ஒரெழுத்தை முதலாகக் கொண்ட வினை நிற்கும்போது, உபசர்க்கத்தின் ஈறு தாதுவின் முதலெழுத்து ஆகிய இரண்டுக்கும் பதிலியாக, இரண்டாவதாக நிற்கும், அதாவது வருஞ் சொல்லின் முதலெழுத்து வரும்.
உப + ஏலயதி = உபேலயதி "தூண்டுகிறான்"
உப + ஒஷயதி = உபோஷயதி "எரிக்கிறான்"
வா ஸுப்யாபிஸலே:' என்ற சூத்திரமும் இங்கு அனுவிருத்தியாகுமென்பது ஒரு சாராரின் கருத்து. ஆகவே, ஸுப் தாது வருஞ் சொல்லாகும்போது, விருப்பு விதியாகும்.
உபேட$^3$தீயதி, அல்லது உபைட$^3$கீயதி
உபேத$^3$னீயதி அல்லது உபோத$^3$னீயதி

வா: ஸ¹கந்த ⁴வாதி³ஷு பரரூபம் வக்தவ்யம்
'ஸகந்து⁴' முதலியவைகளிலும் பரரூபம் (இரண்டாவதாக நிற்கும் எழுத்து) பதிலீடாகும்.
ஸக + அந்து⁴ = ஸகந்து⁴
குல + அடா = குலடா

வா: ஸீமந்த: கேஸேஷு
ஸீம + ஸீமந்த: 'தலைமுடி' என்ற பொருளைச் சுட்டும்போது இவ்வாறாகும். ஆனால், இப்பொருளைச் சுட்டாவிட்டால், ஸீமாந்த: என்றாகும்.

வா: ஏவே சானியோகே³ பரரூபம் வக்தவ்யம்
'கட்டளை'யென்ற பொருளைச் சுட்டாத 'ஏவ' வருஞ் சொல்லானாலும் 'பரரூபம்' பதிலியாகும்.
இஹ + ஏவ = இஹைவ
அத்³ய + ஏவ = அத்யைவ
கட்டளை என்ற பொருளில்
இஹைவ ப⁴வ மா அன்யத்ர க³ா: 'இங்கேயே இரு வேறு எங்கும் போகாதே'

வா: ஒத்வோஷ்ட²யோ: ஸமாஸே வா பரரூபம் வக்தவ்யம்
'பரரூபம்' பதிலீடு "ஓது", "ஓஷ்ட²" என்ற சொற்களுடன் ஒரு தொகையாக்கும்போது விருப்பாக ஆகும்.
ஸ்தூ²ல + ஓது: = ஸ்தூ²லோது: அல்லது ஸ்தூ²லௌது:
பி³ம்ப³ + ஓஷ்டி² = பி³ம்பெ³ளஷ்டி²: அல்லது பி³ம்பே³ாஷ்டி
தொகையாகாவிட்டால் திஷ்ட தே³வதத்தௌஷ்ட²ம் பஸ்ய என்று 'விருத்3தி4' யாகும்.

வா: ஏமன்னாதி³ஷு ச²ந்த³ஸி பரரூபம் வக்தவ்யம்
'ஏமன்' முதலியவைகள் வருஞ் சொல்லாகும்போது வேத மொழியில் 'பரரூபம்' பதிலீடாகும்.
அபாம் த்வா ஏமன் = அபாம் த்வேமன்
அபாம் த்வா ஓத்³யன் = அபாம் த்வோத்³யன்

**6.1.95** ஓமாங்போஸ்' ச
'அ' அல்லது 'ஆ' வீற்றுச் சொல் நிற்குஞ் சொல்லாகவும், ஓம், அல்லது 'ஆங்' என்ற உபசர்க்கம் தொடர்ந்து வருஞ் சொல்லாக்வும் அமையும்போது இவ்விரண்டுக்கும் பரரூபம் பதிலியாகும்.
கா ஓமித்யவோசத் கோமித்யவோசத் 'யார் 'ஓம்' என்று சொன்னார்கள்.'
ஆங் + வ: +த்ரு¹ = ஆ + ஊட்⁴ + த்⁴ரு (8.2.40)= ஆ + ஊட்⁴ + த்ரு (8.4.41) =

ஆ + ஒ ϕ + த்$^{4}$ரு (8.3.13) = ஓட்$^{4}$ரு 'முன்னோடி', கட்டியக்காரன்' அத்$^{3}$ய + ஓட்$^{4}$ரு = அத்யோட்$^{4}$ரு'
இன்றைய கட்டியக்காரன்

**6.1.96** உஸ்ய பத$^{3}$ாந்தாத்

ஒரு பதத்தினீறாக நிற்காத 'அ' அல்லது 'ஆ' வைத் தொடர்ந்து 'உஸ்' (காலஞ் சுட்டும் ஒட்டு) நிற்கும்போது அவ்விரண்டுக்கும் பதிலியாக 'உ' (இரண்டாவது உயிர்) வரும்.

த$^{3}$ா + லுங் = அட் + த$^{3}$ா (ச்லி > ஸிச் > ϕ (3.1.43; 44; 2.4.77) + உஸ் (3.4.108) = அ + த3ா + உஸ் = அ்து3ஸ் ''அவர்கள் கொடுத்திருக்கிறார்கள்'';
சி2த்3 + லிங் = சி2த்3 + ஸ்1னம் + ஜுஸ் (3.4.103, 108) = சி2–ன் ϕ + யா ϕ + உஸ் (4.11; 7.2.79) = சி2ன்த்–யா + உஸ் சி2ந்த்3யுஸ் ''அவர்கள் வெட்ட வேண்டும்''

ஆனால் கா + உஸ்த்ர = கோஸ்த்ரா (ஆ' ஒரு சொல்லீனீறு)

**6.1.97** அதோ கு$^{3}$ணே

பதத்தினீறாகாத 'அ'வைத் தொடர்ந்து குண உயிர் (அ, ஏ, ஓ) வரும்போது அவ்விரண்டுக்கும் பதிலியாக குண உயிர் வரும்.

பச் + ஸ$^{1}$ப் + ஜி$^{2}$ = பச்–அ + அந்தி (7.1.3) பசந்தி 'அவர்கள் சமைக்கிறார்கள்';
இது 6.1.101இன்படி உயிர் நீட்டம் பெறுவதைத் தடுக்கிறது.

பச் + ஸ$^{1}$ப் + இட் = பச்–அ–ஏ (3.4.79)=பசே 'நான் சமைக்கிறேன்' விருத்தி வருவதை (6.1.85)த் தடை செய்கிறது இது.

ஆனால் யா + அந்தி = யாந்தி
தண்ட$^{3}$ + அக்$^{3}$ரம் = த$^{3}$ண்ட$^{3}$ாக்$^{3}$ரம் ('அ' பதத்தினீறு)
அபச + இ = அபசே (குண உயிர் தொடர்ந்து வரவில்லை)

**6.1.98** அவ்யக்தானுகரணஸ்யாத இதௌ.

எதிரொலிச் சொல் (அவ்யக்தானுகரண) லினீறான 'அத்' அதைத் தொடர்ந்து வரும் 'இதி'யின் 'இ' ஆகியவிரண்டுக்கும் பதிலீடாக, இரண்டாவதாக நிற்கும் உயிர் (அதாவது 'இ') வரும்.

பட$^{1}$த் + இதி = படிதி
ஜடத் + இதி = ஜடிதி
ஆனால் ஜக$^{3}$த் + இதி = ஜக$^{3}$தி$^{3}$தி, (எதிரொலிச் சொல்லல்ல)
மரட் + இதி = மரடி$^{3}$தி (அத் ஈரல்ல)

வா: அனேகாச இதி வக்தவ்யம்

ஓரசைக்கும் மேற்பட்ட (பல) அசைகளைக் கொண்ட சொற்களில் இவ்விதி பயன்படுத்தப்படும். ஆகவே ஸ்ரத் + இதி = ஸ்ரதி$^{3}$தி

**6.1.99** நாம்ரேடி$^{3}$தஸ்யாந்த்யஸ்ய து வா

இரட்டிக்கப்பட்ட எதிரொலிச் சொல்லின் 'அத்' அதைத்தொடர்ந்து நிற்கும் 'இதி'யின் 'இ' ஆகிய இரண்டுக்கும் பதிலியாக, இரண்டாவது உயிர் வராது, ஆயினும், இறுதியில் நிற்கும் 'த்' அதைத் தொடர்ந்துவரும் 'இ' (இதியின்) இரண்டுக்கும் விருப்பாக 'இ' வரும்.

படத்–படத் + இதி = படத் படதி$^{3}$தி (அல்லது)

படத்–படφ–இதி=படத் படேதி

**6.1.100** நித்யமாம்ரேடி$^{3}$தே ட$^{3}$ாசி

'ட3ாச்' ஒட்டுடன் நிற்கும் இரட்டிக்கப்பட்ட எதிரொலிச் சொல்லின் முதல் பகுதி, இரண்டாம் பகுதி ஆகிய இரண்டிலும் காணப்படும் 'அத்'துக்கு பதிலியாக இரண்டாவது எழுத்து கட்டாயமாக வரும்.

சூ. 5.4.57இன்படி 'டாச்' ஒட்டு, இரட்டிக்கப்படும் எதிரொலிச் சொல்லுக்குப்பின் வரும். இறுதி உயிரிலிருந்து தொடங்கும் அசைக்கு φ பதிலியாக விதிக்கும் விதி (6.4.143) செயற்படு முன் இந்த விதி செயற்படும்.

படத் + ட$^{3}$ாச் = படத் – படத் + ட$^{3}$ாச் =

படத்–பட் φφஆ (97)=படத்–படா கரோதி= பட φ படாகரோதி=படபடாகரோதி

**6.1.101** அக: ஸவர்ணே தீ$^{3}$ர்க$^{4}$:

'அக்' பிரத்யாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரை (அ, இ, உ, ரு, ல்) யீறாகக் கொண்ட சொல்லைத் தொடர்ந்து அதே வர்ணத்தைச் சேர்ந்த ஒருயிரை முதலாகக் கொண்ட சொல் வரும்போது, அவ்விரண்டுக்கும் பதிலியாக அவைகளின் நெடில் வரும்.

த$^{3}$ண்ட + அக்$^{3}$ரம் = த$^{3}$ண்டாக்$^{3}$ரம் 'கம்பின் நுனி',

கவி + இந்த்$^{3}$ர = கவிந்த்$^{3}$ர:, மது$^{4}$ + உத$^{3}$கே =

மதூ$^{4}$த$^{3}$க = மதூ$^{4}$த$^{3}$கே "தேனும் தண்ணீரும்";

பித்ரு + ருண = பித்ரூண.

வா: ஸவர்ண தீ$^{3}$ர்க$^{4}$த்வே ருதி ரூ வா வசனம்

மேற்கூறிய சூழலில் 'ரு'வுக்கு 'ரூ' விருப்பாக வரும்.

ஹோத்ரு + ருகார:= ஹோத்ருகார: அல்லது ஹோத்ருகார:

வா: ல்ருதில்லரு வா வசனம்

'ல்ரு'வைத் தொடர்ந்து அதே உயிர் வரும்போது ல்ல்ரு விருப்பாக பதிலியாகும்.

ஹோத்ரு + ல்ருகார: = ஹோத்ல்ல்ருகார: ஹோத்ரூகார:

**6.1.102** ப்ரத$^{2}$மயோ: பூர்வ ஸவர்ண:

'அக்' ப்ரத்யாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரை யீறாக் கொண்ட சொல்லைத்

தொடர்ந்து, முதலிரண்டு வேற்றுமையுருபுகள் (எல்லா எண்களும்) நிற்கும்போது, அவ்விரண்டுக்கும் பதிலியாக நிற்கும் சொல்லின் ஈற்றுக்கு நெடில் உயிர் வரும். அக்னீ + ஔ = அக்னீ "இரண்டு அக்னிகள்"

வாயு + ஔ = வாயூ

வ்ருக்ஷ + ஜஸ் (=அஸ்) = வ்ருக்ஷா:

வ்ருக்ஷான், (இரண்டாம் வேற்றுமை பன்மை)

சூ. 6.1.101, 102 இரண்டு விதிகளினாலுமே, வ்ருக்ஷா: என்ற வடிவம் கிடைக்கப்பெறும். ஆயினும் 1.4.2 பரிப[4]ாஷா விதியின்படி, சூ. 102 முதன்மை பெறும். சூ. 97 பயன்படுத்தினாலும் இச்சொல் வ்ருக்ஷா: கிடைத்திருக்கும் ஆனால் இவ்விதி 6.1.101 கூறப்பட்ட "உயிர் நீட்டல்" பதிலியாவதைத் தடுத்திருக்கும் (புரஸ்தாத[3] பவாதா அனந்தரான் விதீன் ப[3]ாத[4]ந்தே ந உத்தரான்)

**6.1.103** தஸ்மாச் ச[2]ஸோ ந: பும்ஸி

அவ்வாறு பதிலியாக வரும் நெடிலுக்குப்பின், (இரண்டாம் வேற்றுமையுருபான) ஸ 'ஸ்' இன் 'ஸ்' உக்குப் பதிலியாக ஆண்பால் சொற்களில் 'ன்' வரும்.

வ்ருக்ஷ + ஸ[1]ஸ் = வ்ருக்ஷா–ஸ்=வ்ருக்ஷான்;

ஹரி + ஸ[1]ஸ் = ஹரீ–ஸ் = ஹரீன்

வாயு + ஸ[1]ஸ் = வாயூ–ஸ் = வாயூன்

**6.1.104** நாதி[3]சி

அ, அல்லது ஆவை யீறாக கொண்ட சொற்களைத் தொடர்ந்து, ' இச்' பிரத்யாஹாரத்தின் ('அ'வைத் தவிர்த்த மற்ற உயிர்கள்) ஒரு யிரை முதலாகக் கொண்ட முதலிரண்டு வேற்றுமையுருபுகள் தொடரும்போது மேற்கூறிய நெடில் பதிலியாகாது.

வ்ருக்ஷ + ஔ = வ்ருக்ஷௌ (88)

க[2]ட்வா + ஸி[1]ஸ் (7.1.18) = க2ட் வே

இரண்டு கட்டில்கள்; வன + ஸி வனே 'இரண்டு காடுகள்'

**6.1.105** தீ[3]ர்க[4]ாஜ் ஜஸி ச

நெடிலை யீறாகக் கொண்ட சொற்களைத் தொடர்ந்து 'இச்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரை முதலாகக் கொண்ட முதலிரண்டு வேற்றுமையுருபுகளோ அல்லது முதல் வேற்றுமைப் பன்மையுருபான 'அஸ்' வரும்போது, மேற்கூறிய உயிர்நீட்டம் ஆகாது.

நதீ + ஜஸ் = நத்[3]ய: (77), 'ஆறுகள்'

நதீ + ஔ = நத்[3]யௌ = 'இரண்டு ஆறுகள்'

**6.1.106** வா ச[2]ந்த[3]ஸி

வேத மொழியில், நெடிலீற்றுப் பெயர்ச் சொல்லைத் தொடர்ந்து ஜஸ், அல்லது

'இச்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரை முதலாகக் கொண்ட வேற்றுமையுருபுகள் தொடரும்போது நிற்கும் சொல்லினீறான உயிர் நீடித்தல் விருப்பாக ஆகும்.

மாருதி + ஐஸ் = மாருதீ: அல்லது

மாருத்ய: சதஸ்ர: 'நான்கு மாருதிகள்'

**6.1.107** அமி பூர்வ

'அக்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரை யீறாக் கொண்ட சொல்லைத் தொடர்ந்து 'அம்' (இரண்டாம் வேற்றுமை யொருமை) ஒட்டு வரும்போது, நிற்குஞ் சொல்லினீறான உயிர் இவ் விரண்டுக்கும் பதிலியாகும்.

வ்ருக்ஷ + அம் = வ்ருக்ஷம் (7.1.24)

அக்னி + அம் = அக்னிம்

வாயு + அம் = வாயும்

வேதமொழியில், இது விருப்பாகும். ஸமீ அல்லது ஸம்யம் கெ[3]ளரீம் அல்லது கெ[3]ளர்யம்

**6.1.108** ஸம்ப்ரஸாரணாச் ச

முழு உயிராக்கப்பட்ட அரையுயிர் (ஸம்ப்ரஸாரணம்) அதைத் தொ டர்ந்து வரும் உயிர் இவ்விரண்டுக்கும் பதிலியாக முதலில் நிற்கும் உ யிர் வரும்.

யஜ் + க்த = இ அஜ் + த (6.1.15) = இஜ் + த = இஷ்ட (இ + அ = இ)

வப் + க்த = உஅப் + த = உப்தம்

வேதமொழியில், இது விருப்பாகும்.

யஜ்ய மானௌ அல்லது இஜ்யமானௌ. மித்ராவருணௌ

**6.1.109** ஏங: பத[3]ாந்ததி

'ஏங' (ஏ, ஓ) பிரத்யாஹாரத்தைச் சேர்ந்த எழுத்தையீறாகக் கொண்ட சொல்லைத் தொடர்ந்து, 'அத்' (அ)தை முதலாக் கொண்ட சொல் தொடரும்போது இவ்விரண்டுக்கும் பதிலியாக நிற்குஞ் சொல்லினீறான உயிர் பதிலியாகும்.

அக்[3]னே + அத்ர = அக்[3]னேத்ர

வந்தே[3] + அஹம் = வந்தே[3]ஹம்

வாயோ + அத்ர = வாயோத்ர

ஆனால்

த[3]தி[4] + அத்ர = த[3]த்[4]யத்ர

வாயோ + இதி = வாயோ இதி

சே + அன = சயனம்

லே + அன = லவனம்

**6.1.110** ஙஸி ஙஸோஸ்ச

'ஏ' அல்லது 'ஓ' வீற்றுச் சொல்லைத் தொடர்ந்து, ஙஸி (= அஸ்) ஙஸ் (= அஸ்)

(5, 6ஆம் வேற்றுமையொருமை யுருபுகள்)ஆகியவைகள் வரும்போது, இவ்வுருபுகளின் முதலான 'அ', நிற்குஞ் சொல்லினீற்றான 'ஏ' அல்லது 'ஓ' இவ்விரண்டுக்கும் நிற்குஞ் சொல்லினீறு பதிலியாகும்.

அக்னி + ஙஸி அல்லது ஙஸ் = அக்[3]னே + அஸ் (7.3.111)

அக்[3]ன்–ஏ–ஸ் = அக்[3]னே: (8.3.15) வாயு + ஙஸி/ஙஸ் = வாயோ–ஸ் = வாயோ:

**6.1.111** ருத உத்

'ரு' ஈற்றுப் பெயர்ச் சொல்லைத் தொடர்ந்து, ஙஸி, ஙஸ் வேற்றுமையுருபுகள் வரும்போது, நிற்குஞ் சொல்லினீற்றுக்கும், வருஞ் சொல்லின் முதலுக்கும், 'உ' (ஒரேயொரு எழுத்து) பதிலியாகும்.

மாத்ரு + ஙஸி/ஙஸ் = மாதுர்–ஸ்=மாதுர் $\phi$ (8.2.24)

மாது: (8.3.15)

**6.1.112** க்[2]யத்யாத் பரஸ்ய

'-கி[2]', '–தி' ஈற்றுச் சொற்களினீற்றான 'ஈ'க்குப் பதிலியாக 'ய்' வரும்போது அச்சொற்களைத் தொடர்ந்து 'ஙஸி', 'ஙஸ்' என்ற வேற்றுமையுருபுகள் நிற்கும்போது அச்சொற்களினீறு வருஞ் சொல் லின் முதல் இவ்விரண்டுக்கும் பதிலியாக 'உ' வரும்.

ஸகி[2] + ஙஸி/ஙஸ் + ஸக்[2]ய் + அஸ் = ஸக்[2]ய்–உஸ் (77) = ஸக்[2]யு:

பதி + ஙஸி/ஙஸ் = பத்ய் – அஸ் = பத்ய்–உஸ் = பத்யு:

கி[2], தி, அதன் நெடிலையும் உள்ளடக்கியது. ஆகவே 'ஸகீ' பெயர்ச் சொல்லிருந்து ஆக்கப்பட்ட சொல் ஸஹகே[2]ன வர்ததே = ஸக[2]: ஸ க[2] + க்யச் (3.1.8) =

ஸகீ[2]ய (7.4.3) ஸகீ[2]ய + க்விப் = ஸகீ[2]:

'நண்பனை(யடைய) விரும்புகிறவன்'. ஸகீ[2] + அஸ் = ஸக்[2]யு:

லூனீய + க்விப் = லூனீ–அஸ் லூன்யு: 'லூனீ'யின் 'ன்', 'நிஷ்டா' ஒட்டின், அதாவது 'த்' இன் பதிலியாவதால், இது 'த்' என்று கருதப் படும் (8.2.1)

ஸகி[2], பதி என்று கூறாமல், அவைகளின் க்[2]ய, த்ய என்று இச்சூத்திர த்தில் அமைக்கப்பட்டிருக்கிறது.

அதிஸகி[2], ஸேனாபதி என்ற சொற்களில், இவ்விதி பயன்படுத்தபடம ாட்டாது என்ற சுட்டுவதற்குத்தான் இவ்வாறு அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அதிஸகே[2]:, ஸேனாபதே: என்பது இவைகளின் 5, 6 ஆம் வேற்றுமைச் சொற்கள் 1.4.7இல் கூறப்பட்ட தடுப்பு விதி, 'ஸகி[2]' என்ற சொல்லுக்குத்தான் பொருந்தும். அதன் தொகைக்கல்ல. ஆகவே 'அதிஸகி[2]' ஒரு 'கி[4]' என்று கருதப்படும்.

**6.1.113** அத: ரோரப்லுதாத[3]ப்லுதே

'ப்லுத' மல்லாத 'அ' முன்னோ, பின்னோ நிற்கும் போது 'ரு'வுக்குப் பதிலியாக 'உ' வரும்.

வ்ருக்ஷ + ஸு + அத்ர = வ்ருக்ஷ–ரு+அத்ர=
வ்ருக்ஷ + உ + அத்ர = வ்ருக்ஷோ + அத்ர (87) =
வ்ருக்ஷ–ஓ + அத்ர = வ்ருக்ஷோத்ர.

**6.1.114** ஹஸி' ச

'ஹஸ்' பிரத்தியாஹாரத்தின் எழுத்து முதலாக அமையுஞ் சொல் தொடரும்போதும் ம்'ரு'வுக்கு 'உ' பதிலியாகும்.
ஹஸ் = அரையுயிர்கள், மூக்கொலிகள் குரலொலிகள்
புருஷ–ஸு + ஹஸதி – புருஷ–ரு + ஹஸதி
புருஷ – உ + ஹஸதி புருஷோ ஹஸதி
'மனிதன் சிரிக்கிறான்'
புருஷ – ஸு + யாதி = புருஷோ யாதி
புருஷ – ஸு + த³த³ாதி புருஷோ த³த³ாதி

**6.1.115** ப்ரக்ருத்யா அந்த: பாதம் அவ்யாபாரே

'ஏங்' (ஏ, ஓ) இறுதியாக நிற்கும் சொல்லைத் தொடர்ந்து 'அ' வரும்போது அந்த 'அ' ருக்வேதத்தின் ஒரு ருக்கின் பாதத்துடன் நின்று, அதைத் தொடர்ந்து ய், அல்லது வ் வராமலிருந்தால் அவைகள் மாற்றமடையாமல் அதனியல்பாக நிற்கும்.
ஸுஜாதே அஸ்'வஸூன்ருதே (ருக் 5.79.1);
அத்⁴வர்யோ அத்³ரிபி⁴: ஸுதாம் (ருக் 9.51. 1)
ஆனால்
கயா மதி குத ஏதாஸ ஏதோர்சயந்தி
(=ஏதே + அர்சயந்தி) (பாதத்திற்குள் நிற்கவில்லை)
தே + அவதன் = தேவதன்

**6.1.116** அவ்யாத் அவத்³யாத் அவக்ரமுரவ்ரதாயம
வந்த்வவஸ்யுஷு ச

அவ்யாத், அவத்³யாத், அவக்ரம:, அவ்ரத, அயம், அவந்து, அவஸ்யு ஆகியவைகளின் முதலான 'அ' 'ஏங்' (ஏ, ஓ) ஈற்றுச் சொல், (ருக்வேதத்தின் ஒரு பாட்டின் உள் நிற்கும்போது)லைத் தொடர்ந்து வரும்போது மாற்றமடையாமல் இயல்பாக நிற்கும்.

1. அக்³னி: ப்ரத²மோ வஸுபி⁴ர்ந்தோ அவ்யாத்
2. மித்ரமஹோ அவ்த்³யாத்
3. மா ஸிவாஸோ அவக்ரம:
4. தே நோ அவ்ரதா:
5. ஸ'தத⁴ாரோ அயம் மணி:
6. தே நோ அவந்து பிதர:
7. குஸி'காஸோ அவஸ்யவ: முந்திய சூத்திரத்தில் கூறப்பட்ட 'ய்', 'வ்' தொடராத 'அ' என்பதற்கு இவைகள் புறனடை.

**6.1.117** யஜுஷி உர:

'உரஸ்' என்ற சொல் 'உரோ' என்ற மாறி, அதைத் தொடர்ந்து 'அ' வரும்போது, யஜுர் வேதத்தில் அவ்வெழுத்துக்கள் மாறாது. ( இயல்பு) உரோ அந்தரிக்ஷம் (வாஜஸனேயி ஸம்ஹிதா 3.4.2.9)

**6.1.118** ஆபோ ஜுஷாணோ வ்ருஷ்ணோ வரிஷ்டே அம்போ3

அம்ப3ாலே அம்பி3கே பூர்வே

(யஜுர் வேதத்தில் 'ஏங்' பிரத்தியாஹாரத்தினோரெழுத்தை யீற ாக் கொண்ட) ஆபோ 'தண்ணீர்கள்', ஜுஷாணோ 'மகிழ்ச்சியளி க்கும்', வ்ருஷ்ணோ 'மனிதனின்', வரிஷ்டே 'உயர்ந்த இடத்தில்', என்ற சொற்களுக்குப் பின்னும் அல்லது அம்பே, அம்பி3கே' என்ற சொற்களைத் தொடர்ந்து 'அம்பி3கே' என்ற சொல் வரும்போதும், நிற்கும் சொல்லினீறும், வருஞ் சொல்லின் முதலும் மாற்றமடையாமல் (இயல்பு) இருக்கும்.

1. ஆபோ அஸ்மான் மாதர:

ஶுந்த4யந்து (வாஸ 4.2) ''தாய் போன்ற தண்ணீர்கள் நம்மை புனிதமாக்கட்டும்''

2. ஜுஷாணோ அப்து: ஆஜ்யஸ்ய (5.35)

'நெய்யை மிகவும் விரும்புகிற'

3. வ்ருஷ்ணோ அம்ஶுப்4யாம் க3ப4ஸ்தி பூத: (7.1.) ''இரண்டு ஸோமங்களைக் கொண்டு, மனிதனின் கையால் புனிதப்படுத்தப்பட்டது''

4. வர்ஷிஷ்டே அதி4நாவே (தை. ஸம் 1.1.8.1)

"உயர்ந்த சுவர்க்கத்தில்''

5. அம்பே3, அம்ப3ாலே அம்பி3கே

ஓ தாய்மார்களே

யஜுர் வேதத்தில், இவ்விளி வேற்றுமைச் சொற்களில் 7.3.107 செயற்படாது.

**6.1.119** அங்க3 இத்யாதெ3ள ச

யஜுர் வேதத்தில், 'அங்கே3' என்ற சொல்லைத் தொடர்ந்து 'அங் கே3' வரும்போதும், நிற்குஞ் சொல்லினிறுதியும் வருஞ் சொல்லின் முதலும் மாற்றமடையா.

ஐந்த்3ர: ப்ராணோ அங்கே3 அங்கே நிதீ3த்4யத்

"இந்திரனுடைய பிராணன் ஒவ்வொரு அவயவத்திலும் தியானிக்கப்பட்டது''

ஐந்த்3ர: ப்ராணோ அங்கே3 அங்கே3 அஸோ'ாசிஷம்

**6.1.120** அனுத3ாத்தே ச குத4பரே

யஜுர் வேதத்தில், 'ஏங்' பிரத்தியாஹாரத்தின் எழுத்தை யீறாக் கொண்ட சொல்லைத் தொடர்ந்து அனுதாத்த சுரம் பெற்ற 'அ' வரும்போது அந்த 'அ'வுக்குப்பின் பின்னண்ணவொலி அல்லது 'த4' நிற்குமானால் ஏ அல்லது ஓவும் 'அ' வும் மாற்றமடையாது.

அயம் ஸோ அக்3னி 'இது அந்த அக்னி'

அயம் ஸோ அத்$^{4}$வர:

**6.1.121** அவ பத$^{2}$ாஸி ச

(யஜுர் வேத மொழியில்) அனுதாத்த சுரத்தைக் கொண்ட 'அவபத$^{2}$ாஸ்' என்ற தொடர் வரும்போதும், நிற்குஞ் சொல்லினீறான 'ஏ' அல்லது 'ஓ' வருஞ் சொல்லின் முதலான 'அ' இவ்விரண்டும் மாற்றமடையா.

த்ரீ ருத்$^{3}$ரேப்$^{4}$ய: அவபத$^{2}$ா: (கா. ஸம். 30.6.32)

'அவபத$^{2}$ா:' என்ற வினை, வினையல்லாத, ஒரு சொல்லைத் தொடர்ந்து வரும்போது, அதன் உதாத்த சுரத்தை இழுக்கும் (8.1.28). ஆனால், சூ. 8.1.30இன்படி இவ்வினைச் சொல், தனது உதாத்த சுரத் தை இழக்காது. ஆகவே, இங்கு 6.1.109 செயற்படும்.

யத்$^{3}$ ருத்$^{3}$ரேப்$^{4}$யோ + அவபத$^{2}$ா;=

யத்$^{3}$ருத்ரேப்$^{4}$யோவதப$^{2}$ா:

**6.1.122** ஸர்வத்ர விப$^{4}$ாஷா கே$^{3}$ா:

வேதத்திலும், அதைத் தவிர்த்த மற்ற மொழிகளிலும், ''கே$^{3}$ா''வைத் தொடர்ந்து 'அ' வரும்போது, விருப்பாக (இவைகள்) மாற்றம டைய.

கே$^{3}$ா அயம், கே$^{3}$ாயம் அபஸ$^{1}$வோ வா அன்யே கோஅஸ்வேப்$^{4}$ய: பஸ$^{1}$வோ கோர்ஸ்வா:

(வேதமொழி)

**6.1.123** அவங் ஸ்பே$^{2}$ாடாயனஸ்ய

ஸ்போடாயனரின் கருத்துப்படி 'கே$^{3}$ா' வினீற்றுக்குப் பதிலியாக 'அவங்' வரும். ('அச்' தொடரும் போது).

கே$^{3}$ா + அக்$^{3}$ரம் = க$^{3}$வ + அக்$^{3}$ரம் =

க$^{3}$வாக்$^{3}$ரம், கே$^{3}$ா அக்$^{3}$ரம், கே$^{3}$ாக்$^{3}$ரம்

கே$^{3}$ா + ஓத$^{3}$னம் = க$^{3}$வோத$^{3}$னம், க$^{3}$வௌத$^{3}$னம்

கே$^{3}$ா + உஷ்ட்ரம் = க$^{3}$வோஷ்ட்ரம், க$^{3}$வுஷ்ட்ரம்

இங்கு 'வ்யவஸ்தி$^{2}$த விப$^{4}$ாஷா' ஆகும். ஆகவே 'க$^{3}$வாக்ஷ' என்பதில் 'அவங்' கட்டாயமாகும்.

**6.1.124** இந்த்$^{3}$ரே ச நித்யம்

'இந்த்$^{3}$ர' என்ற சொல் தொடரும்போது 'கே$^{3}$ா' வினீற்றுக்கு 'அவங்' கட்டாயமாக பதிலியாகும்.

கே$^{3}$ா + இந்த்$^{3}$ர = க$^{3}$வ + இந்த்ர$^{3}$ர =

க$^{3}$வேந்த்$^{3}$ர 'மாடுகளின் தலைவன், அதாவது காளை'

**6.1.125** ப்லுத ப்ரக்$^{3}$ருஹ்யா அசி

'அச்' உக்கு (உயிரெழுத்துக்கு) முன் நிற்கும் ப்லுத, ப்ருக்$^{3}$ருஹ்ய உயிர்கள் கட்டாயமாக இயல்பாக நிற்கும்.

(ப்லுத) யக்$^3$ஞத$^3$த்தா$^3$ இத$^3$மானய

(ப்ருக்$^3$ருஹ்ய)–அக்$^3$னீ (அக்3னீ + ஔ 102) + இதி + அக்$^3$னீ இதி; வாயூ இதி (வாயு + ஔ = வாயூ) மாலே இதி (மாலா + ஔ = மாலே)

'அசி' என்ற சொல் 6.1.77 இலிருந்து அனுவிருத்திமூலம் தொடர்ந்து வந்து கொண்டிருந்த போதிலும், ப்லுத, ப்ரக்$^3$ருஹ்ய உயிர்களைத் தொடர்ந்து, ஒருயிர் வரும் போதும் ப்ரக்ருதிபாவத் (இயல்பு)தை விதிப்பதற்காகத் தான், 'அசி'யை திரும்பவும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இல்லாவிட்டால், இவ்வுயிர்கள் மாற்றமடைந்திருக்கும்.

காட்டர்க, ஜானு + உ அஸ்ய ருஜதி ஜானூ = அஸ்ய ருஜதி

ஜான்வஸ்ய ருஜதி. இவ்வெடுத்துக்காட்டில், குறில் 'உ' நீட்டம்பெறுவதற்குத் தொடர்ந்து நிற்கும் 'அ' காரணமல்ல. இங்கு, ஒரே வர்ணத்தைச் சேர்ந்த இரு உயிர்கள் தொடர்ந்து நிற்பதால் 'உ' நெடிலாகிறது. ஆகவே, 'இயல்பு' புணர்ச்சி மாற்றம் பெறுகிறது.

**6.1.126** ஆஙோ அனுநாஸிகஸ் ச$^2$ந்த$^3$ஸி

வேதமொழியில், 'ஆங்' இடைச் சொல்லுக்குப் பதிலியாக மூக்கினமாக்கப்பட்ட 'ஆ' உயிர் தொடரும்போது வரும்.

ஆங் + ஆப: ஆ$^2$ ஆப:

**6.1.127** இக: அஸவர்ணே ஸாகல்யஸ்ய ஹ்ரஸ்$^1$வஸ்$^1$ ச

'இக்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரையீறாகக் கொண்ட சொல்லைத் தொடர்ந்து, அவ்வுயிரின் வர்ணத்தைச் சேராத வேறொரு உயிர் தொடரும்போது, அவ்வுயிர்கள் மாற்றமடையா. அவ்வுயிர் நெடிலானால், அது குறிலாகும்.

இது ஸாகல்யரின் கருத்து.

த$^3$தி$^4$ + அத்ர = த$^3$தி$^4$ = அத்ர, த$^3$த்$^4$யத்ர,

மது$^4$ + அத்ர = மது$^4$ அத்ர, மத்$^4$வத்ர

குமாரீ + அத்ர = குமாரி அத்ர, குமார்

யத்ர

வதூ$^4$ + அத்ர = வது$^4$ அத்ர, வத்$^4$வத்ர

வா: ஸின்னித்யஸமாஸ யோ: ஸாகலப்ரதிஷேதோ$^4$

வக்தவ்ய:

'ஸ்'ஐ'இத்'தாகக் கொண்ட ஒட்டுக்களாலாக்கப்பட்ட சொற்கள், நித்யஸமாஸம் ஆகியவைகளில், ஸாகல்யருடைய இவ்விதி செயற்படாது.

அயம் தே யோனிர் ருத்விய: ருத்விய ( + ருது = க$^4$ஸ் 5.1.106)

நித்ய ஸமாஸமென்பது, மற்ற தொகைகளைப் போல், அதன் உறுப்பினர்களைப் பிரித்து, ஒரு தொடராகவோ வாக்கியமாகவோ பொருள் கொள்ள முடியாது. இதனுறுப்பினர்களைத் தொகுத்தே பொருள் கொள்ள வேண்டும். வையாகரண:, குமார் யர்த$^2$ம (பார்க்க 2.2.18உம் அதைத் தொடர்ந்து வரும் சூத்திரங்களும்)

வா: இஷா அக்ஷாதி$^{3}$ஷு ச்ச$^{2}$ந்த$^{3}$ஸி
ப்ரக்ருதி ப$^{4}$ாவமாத்ரம் வக்தவ்யம்
வேதமொழியில், இஷா அக்ஷ, முதலிய சொற்கள் இணைக்கப்படாமல் தனித் தனியாக நிற்கும்.
இஷா அக்ஷ:, கா ஈமரே பிஸங்கி$^{3}$லா, யத$^{2}$ா அக$^{3}$மன்.

**6.1.128** ருத்த$^{2}$க:

'அக்' (அ, இ, உ, ரு, ல்) பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயி ரைத் தொடர்ந்து 'ரு' வரும்போது உயிர் புணர்ச்சி மாற்றமடையாது. அவ்வுயிர், நெடிலானால், குறிலாகும். இது ஸாகல்யரின் கரு த்து. ப்3ரஹ்ம + ருஷி = ப்3ரஹ்மர்ஷி, அல்லது ப்3ரஹ்மருஷி
க$^{2}$ட்வ ருஸ்$^{1}$ய:, (க$^{2}$ட்வா + ரு$^{1}$ஸ்ய) அல்லது
க$^{3}$ட்வர்ஸ்ய:
குமாரி ரு$^{1}$ஸ்$^{1}$ய: (=குமாரீ ருஸ்ய:)

**6.1.129** அப்லுதவத் உபஸ்தி$^{2}$தே

'இதி' என்ற சொல்லுக்குமுன் நிற்கும் 'ப்லுத' உயிர், 'அப்லுத'மாக, பத பாடத்தில் காணப்படும்.
வேத நூலின், செய்யுட்களை, பாதங்களாகவும், சொற்களாகவும் பிரித்து எழுதும்போது 'இதி' இணைக்கப்படும்.
இதற்கு 'உபஸ்தி$^{2}$தம்' என்று பெயர். இச்சூத்திரம், 'ப்லுத' உயிர், சாதாரண உயிராக பதபாடத்தில் கருதப்படுமென்று கூறுகிறது. ஆகவே, இங்கு புணர்ச்சி மாற்றமில்லை (இயல்பு)
ஸுஸ்$^{1}$லோகா$^{3}$ இதி (8.2.84) = ஸுஸ்$^{1}$லோகேதி (87)
இச்சூத்திரத்தில் காணப்படும் 'வத்' ('போன்ற') என்ற சொல் பொருளுடைத்து. 'ப்லுதம்' அப்லுதம்' ஆகுமென்று கூறாமல், ப்லுதத்தை அப்லுதம்போல் கருதப்படுமென்று சூத்திரமமைத்திருப்பது, ஒரு காரணத்தைக் கொண்டுதான். 'வத்' என்ற சொல் இல்லாவிட்டால், இச்சூத்திரம், ப்லுதம் அப்லுதமாகுமென்ற பொருளைச் சுட்டும். அப்படியானால், கீழ்க்கண்ட முரண்பாடு உண்டாகும். ப்ரக்ருதிபாவம், ப்லுதம், ப்ரக்$^{3}$ருஹ்யம் இரண்டிலும் நீடிக்கும். ப்லுத உயிர், ப்ரக்$^{3}$ருஹ்ய உயிராகத்தானிருக்க வேண்டுமென்ற கட்டாயமில்லை. அதே போல், ப்ரக்ருஹ்யமும், ப்லுதமும் இருக்குமென்பதில்லை. ஆனால், ஒருயிர், ப்லுதமாகவும் ப்ரக்$^{3}$ருஹ்யமாகவும் அமையும்போது சில இடர்ப்பாடு உண்டாகும். காட்டாக, அக்னீ, வாயூ என்ற சொற்களின் ஈறுகளான 'ஈ', 'ஊ' ப்ரக்$^{3}$ருஹ்யமாகும். இவைகளை அக்$^{3}$னீ 3, வாயூ 3 என்று ப்லுதமாக்கலாம். அவ்வாறாகும்போது, அவைகளைத் தொடர்ந்து 'இதி' வருமானால், அதை உச்சரிக்கும்போது 'ப்லுதம்' கேட்காது. அக்னீ இதி, வாயூ இதி (அக்$^{3}$னீ 3 + இதி, வாயூ 3 + இதி) ஏனென்றால், அவைகள் ப்ரக்ருஹ்யமாவதால் புணர்ச்சிமாற்ற மடையாது. (6.1.125)

மேலும், அவைகள் தனது 'ப்லுத'த்தையும் இழக்கும். இச்சூத்திரத்தின் நோக்கம் இதுவல்ல. ஆகவே, அக்னீ 3 இதி, வாயூ 3 இதி என்பவைகளில் ப்லுதமும் உச்சரிக்கும்போது தெளிவாகக் கேட்கும்.

**6.1.130** ஈ 3 சாக்ர வர்மணஸ்ய

ப்லுத, ஈ3 சாதாரண உயிர் போன்று கருதப்படுமென்று சாக்ர வர்மணனின் கருத்து.

அஸ்து ஹீத்யப்$^{3}$ரவீத் அல்லது அஸ்து ஹீ3 இத்யப்$^{3}$ர வீத் சினு ஹீதம், சினு ஹீ3 இதம் ஒரு விருப்பு விதியாக இதையாக்குவதற்காக சாக்ரவர்மணனின் பெயரைக் குறிப்பிடுகிறாராசிரியர். இவ்விருப்பு விதி, 'இதி' தொடரும் போதும், மற்ற ('இ'யை முதலாகக் கொண்ட) சொற்கள் தொடரும்போதும் செயற்படும். 'இதி' தொடரும்போது, சந்திய ஈவது விருப்பாகும். ஆனால் முந்திய சூத்திரத்தின்படி கட்டாயமாக ஸந்தியேற்படும். 'இதி'யைத் தவிர்த்த மற்ற சொற்கள் தொடரும்போது ப்ருக்ருதிபாவம் (இயல்பு) விருப்பாகுமென்று இது விதிக்கிறது. 6.1.125இன்படி ப்ரக்ருதி பாவம் ஆகியிருக்கும். இது ப்ராப்தாப்ராப்த விபாஷா எனப்படும்.

இஷ்டி 'இ'யைத் தவிர்த்த மற்ற உயிர்களுக்கும் 'ப்லுதாப்லுதவத்3 பாவம்' பொருந்தும்.

வஸ'ா3 இயம், வஸே'யம்

**6.1.131** தி$^{3}$வ உத்

'திவ்' என்ற பெயர்ச் சொல்லீறுக்குப் பதிலியாக 'உ' வரும்.

தி$^{3}$வி காமோ + அஸ்ய = தி$^{3}$வ ф + காம:=

தி$^{3}$–உ–காம:=த்$^{3}$யு–காம:,

தி$^{3}$வ + பி$^{4}$ஸ் = த்$^{3}$யுபி$^{4}$ஸ்

விமலா த்யௌர் அஸ்மின் = விமல + தி$^{3}$வ் = விமலத்$^{3}$யு (=தி உ)

ஆனால், தி$^{3}$வ் + ஔ / ஐஸ் / அம் / ஙஸ் = தி$^{3}$வௌ, தி$^{3}$வ:, தி$^{3}$வம், தி$^{3}$வ:

**6.1.132** ஏதத்தத$^{3}$ா ஸுலோபோ அகோரனஞ் ஸமாஸே ஹலி

'க'வுடன் சேர்ந்து நிற்காத, எதிர்மறைச் சொல்லான 'நஞ்' உடனும் சேர்ந்து நிற்காத, ஏதத், தத் என்ற சொற்களைத் தொடர்ந்து, ஒரு மெய்யெழுத்து வரும்போது, ஸுப் (=ஸ்) (முதல் வேற்றுமையுருபு) கெடும்.

ஏதத்$^{3}$ + ஸு = ஏத–அ–ஸு (7.2.102)

ஏத்–அ + ஸு (97) = ஏ$^{1}$ + ஏஸ + ஸு (7.2.108) ஏஷ + ஸு (8.3.57) + த$^{3}$த$^{3}$ாதி = ஏஷ ф த$^{3}$த$^{3}$ாதி;

'இவன் கொடுக்கிறான்';

தத்$^{3}$ + ஸு ந த$^{3}$த$^{3}$ாதி = ஸ ф ந த$^{3}$த$^{3}$ாதி

'அவன் கொடுக்கமாட்டான்'

ஆனால் ஏஷக – ஸு + த$^{3}$த$^{3}$ாதி = ஏஷக–ரு +

த³த³ாதி (8.2.66) ஏஷக–உ + ததாதி = ஏஷகோ

த³த³ாதி; நஞ் + ஏத³த் + ஸு த³த³ாதி = அன் – ஏஷ + ஸு + த³த³ாதி ஷ அனேஷா த³த³ாதி.

**6.1.133** ஸ்யஸ்¹ ச²ந்த³ஸி ப³ஹுலம்

வேதமொழியில், 'ஸ்ய' (=த்யத்) என்ற மாற்றுப் பெயருக்குப்பின் நிற்கும் ஸு (முதல் வேற்றுமையுருபு) பலவகையில் கெடும். அதாவது விருப்பாகக் கெடும்.

ஏஷ ஸ்யதே மது⁴மாம் இந்த்³ர ஸோம: (ருக் (9.87. 4);

ஏஷ ஸ்யதே பாவத இந்த்³ர ஸோம: (ருக் 9.97.46)

இதோ, ஓ இந்திர, ஸோமரஸம் உனக்காத் தெளிவாக ஓடுகிறது.

'ஸு' கெடாமலும் வரலாம்.

யத்ர ஸ்யோ நிபதேத் 'அந்த ஆள் (?) எங்கே விழுகிறானோ அங்கு . . . . .

**6.1.134** ஸோ'சி லோபே சேத்பாதபூரணம்

(வேதமொழியில்) 'ஸ'வுக்குப்பின் இணைக்கப்படும் 'ஸு' (முதல் வேற்றுமையுருபு) அச்சொல்லைத் தொடர்ந்து ஒருயிர் வரும்போது கெடும். அவ்வேற்றுமையுருபு அவ்வாறு கெடும்போது அவ்வரியின் சீர் முழுமைகுமேயானால். ஸேது³ (ஸ: + இத்) ராஜா க்ஷயதி சர்மணீனாம் (ருக் (1.32.25) ஸ: + இத்³ = ஸ ф + இத்³ ஸேத் ஆனால் ஸ இவ் வ்யாக்⁴ரோ ப⁴வேத் (இங்கு அவ்வாறு அசை முழுமையாகாததால் ஸந்தியேற்படவில்லை)

இங்கு தெளிவாக்குவதற்காகத்தான் 'அசி' பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஒரு மெய்க்கு முன் நிற்கும் ஒட்டு கெடுவதானால் அவ்வசை அப்படியேதானிருக்கும். அதனால் அச்சீருக்குப் பயனேதுமில்லை. ஸந்தியேற்படுவதால் அசை குறுகும். ஒருயிர் தொடரும்போதுதான் ஸந்தியேற்படும்.

'பாத' என்பது, ஒரு செய்யுளின் பாதத்தைக் குறிக்கிறது. வேதத்தின் சீரையல்ல என்பது ஒரு சாராரின் கருத்து. ஸைஷ த³ாஸரதீ ராம:, ஸைஷ ராஜா யுதி⁴ஷ்டி²ர:/ஸைஷ கர்ணோ மஹாத்யாசீ, ஸைஷ பீ⁴மோ மஹாப³ல:

**6.1.135** ஸுட் காத்பூர்வ:

'க'வுக்கு முன் 'ஸ்' இணைக்கப்படும்.

இது ஒரு அதிகார ஸூத்திரம். 6.1.157 (உட்பட) இந்த விதி அனுவிருத்தியாகும். காட்டாக ஸம், பரி, உப ஆகியவைகளைத் தொடர்ந்து 'க்ரு' என்ற தாது வரும் போது (அதன் பொருள் ஒப்பனை செய்தல்) என்று சூ. 6.1.137 இத்துடன், மேலே கூறிய தொடரை, இதன் பொருள் முழுமையாக்க, இணைக்க வேண்டும்.

ஸம் + க்ரு = த்ரு = ஸம் + ஸ் + க்ரு + த்ரு = ஸம்ஸ்கர்தா

'க'வை முதலாகக் கொண்ட தாதுக்களுக்கு முன்னால் மட்டுந்தான் 'ஸுட்' இணைக்கப்படுகிறதென்பதைத் தொடர்ந்து சூத்திரங்கள் தெளிவாக்குகிறது.

ஆகவே, காத் பூர்வாத்' என்ற தொடருக்குத் தேவையென்ன? 'ஸ்', 'க'வுக்கு முன் நிற்குமேயொழிய அதோடு இணைவதில்லை. ஆகவே 'ஸ்க்ரு' (ஸ் + க்ரு)வை, கூட்டு மெய்யில் தொடங்கும் தாது என்று கருதக்கூடாது..
சூ. 7.4.10, 'ரு' வீற்று தாது கூட்டு மெய்யை முதலாகக் கொண்டு நிற்கும்போது குணமாகுமென்று விதிக்கிறது, இந்த சூத்திரம் இங்கு செயற்படாது. அதைப் போன்று 7.4.29; 7.2.43 ஆகியவைகளிலும், இவ்விதி செயற்படாது.
ஸம்ஸ்க்ருஷீஷ்ட ஸம்ஸ்க்ரியதே.

**6.1.136** அட[3]ப்[4]யாஸ வ்யவாயே அபி

'அட்' அல்லது இரட்டித்த அசை இடையில் வரும்போதும் (அபி), 'க' வுக்கு முன் 'ஸுட்' இணைக்கப்படும்.
ஸம் + க்ரு + லங் = ஸம் + அட் + க்ரு + உ + த் = ஸம்–அ–ஸுட் + கரோ த் (7.3.84) = ஸமாஸ் கரோதி;
ஸம் + க்ரு + லிட் = ஸம்–ச –ஸ்–கார=ஸம்சஸ்கார:
ஸம் + க்ரு + லுங் = ஸம்–அ–ஸ்–கார்–ஸீத்=ஸமாஸ்கார்ஷுத்
7.4.61 இன்படி 'ஸ்க்ரு'வை 'ஸ்'வோடு ஒருங்கிணைந்தது என்று கருதினால் அதிலிருந்து 'சஸ1கார' என்ற வடிவம் கிடைத்திருக்கும். இங்கு, அந்தரங்க, பஹிரங்க விதிகளையும் பயன்படுத்தத் தேவையுமிருக்காது. தாது, அதனோடு இணைக்கப்படும் உபசர்க்கம் இவ்விரண்டின் செயல் பற்றியது அந்தரங்க விதி. அதாவது, ஒரு தாது, முதலில் ஒரு உபசர்க்கத்துடன் இணைக்கப்படவேண்டும். அதன் பிறகு தான், மற்ற விதிகளை அதில் பயன்படுத்த வேண்டும்.
ஆகவே 'ஸுட்' முதலிலிணைக்கப்படும். அதன் பிறகுதான் 'அட்' 'அப்[4]யாஸ' செயற்படும். இதற்கு முந்திய சூத்திரத்தில், 'ஸுட்'ஐ, 'க்ரு'வோடு இணைந்த ஒன்றாக கருதக்கூடாது என்று கூறப்பட்டது. 'ஸுட்' இணைத்த பிறகு, 'அட்' இணைக்கலாம். இரட்டிப்பும் செயற்படலாம்.
அப்போது, ஸம்ஸ் கரோத், ஸம்ஸ்சகார என்ற சொற்கள் கிடைக்கும். ஆனால், நோக்கம் அதுவல்ல. ஆகவே இச்சூத்திரம் தேவைப்படுகிறது. அதாவது. 'அட்', வருதல், இரட்டித்தல், இரண்டுமே நிகழ்ந்த பின்பும், 'ஸுட்' 'க்'வு க்குமுன்தான் வரவேண்டுமென்பதை இச்சூத்திரம் வலியுறுத்துகிறது. இது பாணினியின் சூத்திரமல்ல.
அட் வ்யவாய உபஸங்க்[2]யானம், அப்[4]யாஸ வ்யவாயே ச என்ற இரண்டு வார்த்திகங்களையும் இணைத்து ஒரு சூத்திரமாக்கப்பட்டிருக்கிறது.

**6.1.137** ஸம் பரி உபேப்4ய: கரோதௌ பூஷணே

ஸம், பரி, உப என்ற உபசர்க்கங்களைத் தொடர்ந்து 'க்ரு' தாது வரும்போது 'க'வுக்கு முன் 'ஸுட்' இணைக்க வேண்டும். 'ஒப்பனை செய்தல்' என்பது இச் சொல்லின் பொருள் ('அட்', 'இரட்டித்தல்' இடையில் நின்றாலும்) ஸம் + க்ரு + ஸப் (=திப்) = ஸம்–ஸ்–கரோதி=ஸம்ஸ்கரோதி; ஸம்ஸ்–கரோத்; ஸம்சஸ்கார;

பரிஷ்கர்தா; பரிஷ்கர்தும்; உபஸ்கர்தா; உபஸ்கர்தும், ஆனால், உபகரோதி (இது ஒப்பனையைச் சுட்டவல்ல) சில இடங்களில் 'பூ⁴ஷண' என்ற பொருளைச் சுட்டாவிட்டாலும் ''ஸுட்'' இச்சூழலில் வரும்.
ஸம்ஸ்க்ருதம் அன்னம்''

**6.1.138** ஸமவாயே ச

ஸம், பரி, உப ஆகியவைகளுக்குப்பின் வரும் 'க்ரு' தாதுவின் 'க'வுக் கு முன் 'ஸுட்', (இவ்விரண்டுக்குமிடையே 'அட்' அல்லது இரட்டித்தல் நின்றபோதிலும்) வரும். 'கூட்டம்', 'சேர்க்கை' என்பது அச்சொல்லின் பொருளாகும்.
ஸம் + க்ருத = ஸம்–ஸ்க்ருத ''ஒன்றாகச் சேர்க்கப்பட்ட''; பரிஷ்க்ருத ''இணைக்கப்பட்ட''; உபஸ்க்ருத ''(கூட்டம்) கூடிய''; தத்ர ந: ஸம்ஸ்க்ருதம், தத்ர ந: பரிஷ்க்ருதம், தத்ர ந: உபஸ்க்ருதம் ''நாம் இங்கு கூடியிருக்கிறோம்''

**6.1.139** உபாத் ப்ரதியத்ன வைக்ருத வாக்யாத்⁴யாஹாரேஷு

'உப'வைத் தொடர்ந்து நிற்கும் 'க்ரு' தாதுவுக்கு முன் 'ஸுட்' 'முயற்சி செய்தல்' (ப்ரதியத்ன), மாற்றமடையச் செய்தல் (வைக்ருத); ''ஒரு வாக்கியத்தின் சொல் நீக்கத்தை நிரப்புதல்'' (வாக்யாத்⁴ஹார) என்ற பொருட்களைச் சுட்டும்போது வரும்.

1. ப்ரதியத்ன
ஏதே⁴ா த³கஸ்ய உபஸ்குருதே (பார்க்க 1.3.32);
2. வைக்ருத–உபஸ்க்ருதம் பு⁴ங்க்தே
''பழைய உணவை உண்கிறான்''
3. வாக்யாத்⁴யாஹாரே–உபஸ்க்ருதம் அதீதே 'அவன் நூலை விரிவாக, (அதாவது சொல் நீக்கத்தை நிரப்பி)ப் படிக்கிறான்''

**6.1.140** கிரதௌ லவனே

'உப'வைத் தொடர்ந்து கிரதி ('சிதறு') என்ற வினை நிற்கும்போது, 'க'வுக்கு முன் 'ஸுட்' ''வெட்டுதல், அறுத்தல், பிரித்தல்'' என்ற பொருளைச் சுட்ட வரும்.
உப + க்ரு + ணமுல் = உப + ஸீட் + காரம் = உபஸ்காரம்
மத்³ரகா லுனந்தி 'மத்³ர நாட்டு மக்கள், சிதறுகிறார்கள் வெட்டுகிறார்கள்''
வா: ணமுலத்ர வக்தவ்யம்
'உபக்ரு'வோடு, 'ணமுல்' இணைக்கும்போது 'ஸுட்' இடையில் வரும்.
ஆனால், உபகிரிதி தேவதத்த:
'தேவதத்தன் தூவுகிறான்' இங்கு 'வெட்டுதல்' என்ற பொருளைச் சுட்டவில்லை.

**6.1.141** ஹிம்ஸாயாம் ப்ரதேஸ்$^1$ ச

உப, ப்ரதி ஆகியவைகளைத் தொடர்ந்து 'கிரதி' வரும் போது அதன் 'க'வுக்கு முன் 'ஸுட்' ஒட்டு இணைக்கப்படும். இதன்பொருள் 'துன்புறுத்துதல்'
ப்ரதி + க்ரு + க்த = ப்ரதிஸ்கீர்ண (7.1.10; 8.2.42, 83)
உபஸ்கீர்ண 'துன்புறுத்திய' இப்பொருளைச் சுட்டாவிட்டால் ப்ரதிகீர்ணம் 'சிதறிய' உபகீர்ணம் .

**6.1.142** அபாத் சதுஷ்பாத் ஸ$^1$குனிஷு ஆலேக$^2$னே

'அப'வைத் தொடர்ந்து 'கிரதி' வரும்போது, அதன் 'க'வுக்கு முன் 'ஸுட்' நாலுகால் பிராணிகளாலோ அல்லது பறவைகளாலோ பூமியை 'பிறாண்டுதல்' என்ற பொருளைச் சுட்டும் போது வரும்.
அபஸ்கிரதே வ்ருஷப$^4$; 'காளை நிலத்தை பிறாண்டுகிறது'
அபஸ்கிரதே ப$^4$க்ஷ்யார்தீ$^2$ குக்குட: 'கோழி உணவுக்காக நிலத்தைப் பிறாண்டுகிறது' ஆனால் அபகிரதி தே$^3$வத$^3$த்த;
"தேவதத்தன் தூவுகிறான்''

வா: ஹர்ஷ ஜீவிகாகுலாய கரணேஷு இதி வக்தவ்யம்
மகிழ்ச்சி அல்லது உணவு தேடுதல் அல்லது ஓய்வெடுக்க இடம் அமைத்தல் என்ற பொருட்களைச் சுட்டும்போது தான் இவ்விதி பயன்படுத்தப்படும்.
அபகிரதி ஸ்$^1$வா ஒத$^3$ன பிண்ட$^3$மாஸி$^1$த: 'சோற்றுருண்டை உண்ட நாய் நிலத்தைப் பிறாண்டுகிறது'

வா: ஹர்ஷ ஜீவிகாகுலாய கரணேஷு இவ கிரதேராத்மனே பதஸ்யோப ஸங்க்$^2$யானம்.
'ஹர்ஷ' முதலிய பொருட்களைச் சுட்டும்போது,
'கிரதி' என்ற வினை ஆத்மனேபதமாகப் பயன்படுத்தப்படும்.

**6.1.143** குஸ் தும்பு$^3$ரூணி ஜாதி:

'குஸ்தும்பு$^3$ரு' ''கொத்தமல்லி'' என்ற சொல் 'ஸுட்' இணைக்கப்பட்டு, அதன் பொருள் ஓரினத்தைக் குறிக்கும் போது, நிபாதனமாகும்.
கு–ஸ்–தும்பு$^3$ரு. இதில், 'த்'க்கு முன் 'ஸ்' இணைக்கப்பட்டிருக்கிறது. ஆனால் குத்ஸிதானி தும்பு$^3$ரூணி குதும்பு$^3$ரூணி

**6.1.144** அபரஸ்பரா: க்ரியாஸாதத்யே

அபரஸ்பரா: என்ற சொல், 'ப'வுக்கு முன் 'ஸுட்' இணைக்கப்பட்டு விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்ட சொல் இந்த நிபாதனமாக சொல் 'இடையில் நிறுத்தப்படாத, அதாவது தொடர்ச்சியான செயல்' என்ற பொருளைச் சுட்டும்.
அபரஸ்பரா: க$^3$ச்ச$^2$ந்தி. ஒருவரையொருவர் தொடர்ந்து அதாவது வரிசையாகச் செல்கிறார்கள் (அபர–ஸ்–பர) ஆனால் அபர பரா: (ஸார்த$^2$ா) க$^3$ச்ச$^2$ந்தி'' (வியாபாரிகள்) இவர்களும் மற்றவர்களும் ஒரே சமயத்தில் செல்கிறார்கள்.''

**6.1.145** கே3ாஷ்பதம் ஸேவிதாஸேவிதப்ரமாணேஷு

'ஸுட்', 'ப'வுக்கு முன் இணைக்கப்பட்டு விதிக்குப் புறம்பாக 'கே3ாஷ்பத3ம்' என்ற சொல்லாக்கப்பட்டிருக்கிறது. இது 'செல்கிற' 'செல்லாத', ஓர் அளவை என்ற பொருட்களைச் சுட்டும் இச்சொல் கே3ா + பத்3 + க4 (3.3.118) = கே3ாஷ்பதம் 'மாடுகள் வழக்கமாக மேயுமிடம்'

அக3ாஷ்பத3ம் அரண்யம் – 'மாடுகள் மேயாத காடு'; க3ாஷ்பதமாத்ரம் க்ஷேத்ரம்–'மாட்டின் குளம்பளவு உடைய வயலின் பகுதி';

மேலே கூறிய பொருட்களைச் சுட்டாவிட்டால் 'கே3ாபத3ம்' என்ற சொல்லாகும் (கே3ா + பதம்)

எதிர்மறையொட்டை, க3ாஷ்பதம்' என்ற சொல்லோடு இணைத்தால் 'அக3ாஷ்பதம்' என்ற சொல் கிடைக்கும் போது, 'அஸேவித' என்று சூத்திரத்தில் காணப்படுஞ் சொல்லின் தேவையென்ன? "அதைப் போன்ற ஆனால் அதுவல்ல" (ஸத்3ருஸ்) என்ற பொருளில் 'நஞ்' எதிர்மறைத் தொகையில் பயன்படுத்தப்படும். "பிராம்மணனல்லாத ஆனால் க்ஷத்திரியன் அல்லது வைசியன் ஆன மனிதன்" என்ற பொருட்படும். ஆகையால், "அகோஷ்பத" எதிர்மறையொட்டான 'நஞ்' உடன் 'மேய்ச்சல் நிலம் போன்றவிடம் ஆனால் மாடுகள் அங்கு மேய்வதில்லை' என்ற பொருளை உணர்த்தும். அப்படியானால் "அந்த இடத்தில் மாடுகள் மேயும் வாய்ப்பு உள்ளது" என்ற பொருளை (மறைமுகமாக) உணர்த்தும். ஆனால்,

இச்சூத்திரத்தில் சுட்டும் பொருள் அதுவல்ல. அத்தகைய வாய்ப்பு ஏதுமில்லையென்ற பொருளையே இது சுட்டும். ஆகவே 'அஸேவித' என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. மாடுகள் உள்ளே நுழைய முடியாத அடர்ந்த காடு. அக3ாஷ்டதம் என்று கூறப்படுகிறது.

**6.1.146** ஆஸ்பத3ம் ப்ரதிஷ்ட2ாயாம்

ஆஸ்பத3ம் என்ற சொல்லில் 'ப'வுக்குமுன் 'ஸுட்' விதிக்குப் புறம்பாக இணைக்கப்பட்டிருக்கிறது. இதன் பொருள் "நிலையான இடம்" என்பதாகும். ஆ + பத்3யதே அஸ்மின் = ஆஸ்–பத3 + க4 (3.3.118) ஆஸ்பத3ம் "இடம், இருக்கை, குடியிருக்குமிடம், மேன்மை" ஆனால் ஆப3தம் (2.1.13, 3.10 ) "கால் வரையில்"

**6.1.147** ஆஸ்சர்யம் அநித்யே

'வழக்கமான ஒன்றுக்கு மாறுபட்ட' (அநித்யம்) என்ற பொருளில், 'ச'வுக்கு முன் 'ஸுட்' இணைக்கப்பட்ட 'ஆஸ்'சர்யம்' என்ற சொல் நிபாதனமாகும்.

ஆங் + சர் + யத் = ஆஸ்'சர்யம் 'வியப்பான',

ஆஸ்சர்யம் யதி ஸ பு4ஞ்ஜீத "அவன் உண்டால் அது வியப்பானது" ஆனால் ஆஸ்சர்யம் கர்ம ஸோ'ப4னம் 'நல்ல செயல் செய்யப்பட வேண்டியது.'

**6.1.148** வர்சஸ்கே அவஸ்கர:

'மலம்' என்ற பொருளில் 'க'வுக்குமுன் 'ஸுட்' இணைக்கப்பட்டு விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்ட சொல் அவஸ்கர: அவ + க்ரு + அப் (3.3.57) = அவஸ்கர 'மலம்' ஆனால், 'புழுதி' என்ற பொருளைச் சுட்டும்போது 'அவகர' என்றாகும்.

**6.1.149** அபஸ்கரோ ரத$^{2}$ாங்கம்

"தேரின் ஒரு பகுதி" என்ற பொருளைச் சுட்டும் "அபஸ்கர" என்ற சொல், 'க'வுக்கு முன் 'ஸுட்', விதிக்குப்புறம்பாக இணைக்கப்பட்டு ஆக்கப்பட்ட சொல்.

அபஸ்கர: 'தேரின் ஒரு பகுதி' 'தூவுதல், சிதறுதல்' என்ற பொருளில் 'அபகர' என்றாகும்.

**6.1.150** விஷ்கிர: ஸ$^{1}$குனிர் வா

'பறவை' என்ற பொருளைச் சுட்டும் 'விஷ்கிர:' என்ற சொல், 'கிரதி'யின் 'க'வுக்கு முன் 'ஸுட்' ஒட்டு விதிக்குப் புறம்பாக 'ஸுட்' இணைக்கப்பட்டு ஆக்கப்பட்ட சொல். இது விருப்பாகும். விஷ்கிர: 'வீட்டுக்கோழி' முதலியவை. விகிர–சிதறுதல்.

**6.1.151** ஹ்ரஸ்வாத் சந்த்$^{3}$ர உத்தர பதே$^{3}$ மந்த்ரே

மந்திரப் பகுதியில், குறிலீற்றுச் சொல்லை முதலுறுப்பினராகவும், ' சந்த்ர' என்ற சொல் இரண்டாவது உறுப்பினராகவும் அமைந்த தொகையில், 'சந்த்$^{3}$ர'வுக்கு 'ஸுட்' இணைக்கப்படும்.

ஸூ + சந்த்ர$^{3}$ர = ஸு + ஸுட் + சந்த்ர$^{3}$ர = ஸுஸ் சந்த்$^{3}$ர

(8.4.40) ஹரி + சந்த்$^{3}$ர = ஹரிஸ்$^{1}$ சந்த்$^{3}$ர ஆனால் ஸுர்யாசந்த்$^{3}$ர மஸௌ "சூரியனும் சந்திரனும்" முதலுறுப்பினர் குறில் அல்ல.

ஸுசந்த்$^{3}$ரா பௌர்ணமாஸி (மந்திரத்தைத் தவிர்த்த மற்ற இடங்களில்)

**6.1.152** ப்ரதிஷ்கஸ$^{1}$ஸ்$^{1}$ச கஸே$^{1}$:

'ப்ரதி'யைத் தொடர்ந்து 'கஸ்' (சொல்) தாது வரும் போது, 'க'வுக்கு முன் 'ஸுட்' இணைக்கப்பட்டு விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்ட சொல் ப்ரதிஷ்கஸ$^{1}$

ப்ரதி + கஸ்$^{1}$ + அச் (3.1.134) = ப்ரதி + ஸுட் + கஸ$^{1}$ = ப்ரதிஷ்கஸ: "தூதன், முன்னறிவிப்பாளர்"

க்ராமமத்$^{3}$ய க$^{3}$மிஷ்யாமி ப$^{4}$வ மே த்வம் ப்ரதிஷ்கஸ$^{1}$;

'நான் இன்று கிராமத்தைப் பார்வையிடப் போகிறேன், நீ என்து கட்டியராகப் போ.'

ஆனால் ப்ரதிக$^{3}$த: கஸ$^{1}$ம் ப்ரதிகஸ$^{1}$; 'சாட்டைக்கு பணியாத குதிரை'

**6.1.153** ப்ரஸ்கண்வ ஹரிஸ்சந்த்ராவ்ருஷு

ப்ரஸ்கண்வ, ஹரிஸ்'சந்த்ர என்ற சொற்கள் முறையே 'க'வுக்கும் 'ச'வுக்கும் முன் 'ஸுட்' இணைக்கப்பட்டு வேதத்தின் இருடியின் பெயரைச் சுட்டும்போது, நிபாதனங்கள்.

'ஹரிஸ் சந்த்ர' என்ற சொல் மந்திரப் பகுதியல்லாத மற்றவிடங்களிலும் காணப்படுமென்பதைச் சுட்ட இச்சூத்திரத்தின் மூலம் குறிப்பிடப்படுகிறது. ஆனால் ப்ரகண்வே தே³ஸ¹: ஹரி சந்த்³ரே மாணவக:

**6.1.154** மஸ்கர மஸ்கரிணௌ வேணு பரிவ்ராஜகயோ:

மஸ்கர 'மூங்கில்' மஸ்கரின் 'பிட்சு' என்ற சொற்கள், 'ஸுட்' இணைக்கப்பட்டு விதிப்படியாக்கப்படாத சொற்கள்.

'மகர' ஆக்கப்பட்ட சொல்லல்ல. அதாவது, இந்தப் பிராதிபதிகம், குறிப்பிட்ட வொட்டிணைத்துத் தருவிக்கப்பட்ட சொல்லல்ல. இதோடு 'ஸுட்' இணைக்கப்பட்டு 'மஸ்கர' என்ற சொல்லாக்கப்பட்டிருக்கிறது.

மஸ்கர + இனி = மஸ்கரின் 'துறவி' ஆனால் மகர 'முதலை', மகரீ–'கடல்' 'க்ரு தாதுவுடன் 'மா' இணைக்கப்பட்டு, விதிக்குப்புறம்பாக 'அச்' இணைத்து ஆக்கப்பட்டது 'மஸ்கர' என்ற சொல்லென்பது ஒரு சாராரின் கருத்து. மா + க்ரு + அச் = மா + ஸுட் + க்ரு + அச் = ம + ஸ் + கர = மஸ்கர

மா க்ரியதே யேன ப்ரதிஷித்⁴யதே. ''இதனால் தடைசெய்யப்பட்டது'', அதாவது 'மூங்கில், கம்பு' மா + க்ரு + அச் = மா + ஸுட் + க்ரு + அச் = மஸ்கர + இன் = மஸ்கரின் மாகரணஸீ1லோ 'உலகத்தைத் துறந்தவன்'

**6.1.155** காஸ்தீராஜஸ்துந்தே³ நக³ரே

காஸ்தீர, அஜஸ்துந்த³ என்ற சொற்கள் நகரங்களின் பெயரைக் குறிக்கும்போது, நிபாதனங்கள் (ஸுட் இணைத்து) ஆனால் காதீரம் "மோசமான கரை'', அஜதுந்த 'துருத்திக் கொண்டிருக்கும் ஆட்டின் வயிறு''

**6.1.156** காரஸ்கரோ வ்ருக்ஷ:

'மரம்' என்ற பொருளைக் குறிக்கும்போது 'காரஸ்கர' என்ற சொல் 'ஸுட்' இணைக்கப்பட்டு ஆக்கிய நிபாதனம் ஆகும்.

ஆனால் கார கர: ''ஒருவருக்காகச் செயலாற்றுபவர்'' இதைத் தனிச் சூத்திரமாக்காமல், அடுத்த சூத்திரத்துடன் இதைச் சேர்த்துக் கூறுகிறார்கள் சிலர்.

**6.1.157** பாரஸ்கர ப்ரப்⁴ருதீனி ச ஸம்க்³ஞாயாம்

'பாரஸ்கர' முதலிய சொற்களும் பெயரைச் சுட்டும்போது, இத்தகைய நிபானங்களே.

பார + க்ரு + ட¹ (3.2.30) = பார + ஸுட் + கர = பாரஸ்கர ''ஒரு நாட்டின் பெயர்'';

காரஸ்கர ஒரு மரத்தின் பெயர்; ரத$^{2}$ஸ்பா "ஒரு நதியின் பெயர்"; கிஷ்கு "ஓரளவையின் பெயர்"; கிஷ்கிந்த$^{4}$ா "ஒரு குகையின் பெயர்";

வா: தத் ப்$^{3}$ருஹறதோ; கரபத்யோஸ் சோர தே$^{3}$வதயோ; ஸுட் தலோபஸ்1

சதத், ப்$^{3}$ருஹத் ஆகியவைகளோடு முறையே, கர, பதி என்ற சொற் களை இணைக்கும்போது, 'ஸுட்' இணைக்கப்பட்டு, திருடன், கடவுள் என்ற பொருளைச் சுட்டும்போது நிபாதனங்களாகும். அவைகளின் 'த' கெடும்.

தத் + கர = தத் + ஸுட் + கர = த $\phi$ – ஸ்

கா = தஸ்கா; ப்$^{3}$ருஹத் + பதி = ப்$^{3}$ருஹத்

ஸுட் + பதி = ப்$^{3}$ருஹ $\phi$ –ஸ்–பதி =ப்ருஹஸ்பதி

மற்ற பொருளில் தத்கர: 'அதைச் செய்பவன்'

ப்$^{3}$ருஹஸ்பதி

வா: ப்ராத்தும்பதௌ க$^{3}$வி கர்தரி

'ப்ர' என்ற உபசர்க்கத்தைத் தொடர்ந்து 'தும்பதி' என்ற வினை வரும்போது 'ப்ர'வையடுத்து 'ஸுட்' அவ்வினையின் 'கர்த்தா பசுவாக அமையும்போது இணைக்கப்படும்.

ப்ரஸ்தும்பதி கௌ$^{3}$ள.

ஆனால் ப்ரதும்பதி வனஸ்பதி 'மரம்'

**6.1.158** அனுதாத்தம் பத$^{3}$மேகவர்ஜம்

ஒரு சொல்லின் ஓரசையைத் தவிர்த்த, அவ்வசை உதாத்தமாகவோ, (உயர் ஒலியமுத்தம் அல்லது சுரம்)

ஸ்வரிதமாகவோ (உயர்–கீழ் ஒலியமுத்தமாகவோ) மற்ற வசைகள் அனுதாத்தம் (கீழ் ஒலியமுத்தம்) ஆகும்.

இது சுரத்தைப் பற்றிப் பேசும் பரிபாஷா. ஒரேயொரு அசையைத் தவிர்த்து, ஒரு சொல்லின் மற்றவசைகள் சுரம் பெறாது. (அனுதாத்தம்) ஒரு சொல்லில் சுரத்தை (உதாத்தமோ அனுதாத்தமோ) விதிக்கும் சூத்திரத்தோடு, இந்த பரிபாஷாவையும் சேர்த்து பொருளை விளக்க வேண்டும். உதாத்தமோ அனுதாத்தமோ விதிக்கப்பட்ட அசைகளைத் தவிர ஒரு சொல்லின் மற்ற அசைகள் அனுதாத்தமாகும்.

பெயரடிச் சொல், வினையடிச் சொல், ஒட்டு ஆகியவைகள் அவைய வைகளுக்குரிய உதாத்தமோ ஸ்வரிதமோ கொண்டதாகும். ஓரடிச் சொல்லையும் ஒரொட்டையுமிணைத்து ஒரு பதத்தைத் தருவிக்கும்போது, அப்பதத்தின் ஓரசைமட்டும் உதாத்தமோ ஸ்வரிதமோ பெறும், மற்றவசைகள் அனுதாத்தமாகும். காட்டாக, ஒரு தாதுவின் இறுதியசை உதாத்தமாகும் என்ற 6.1.162 விதிக்கிறது.

ஆகையால், இறுதியசையைத் தவிர்த்த மற்ற அசைகள் அனுதாத்தமாகும் என்ற பொருள் கொள்ள வேண்டும். கே$^{3}$ாபாயதி என்ற வினைச் சொல்லின்

'ய' உதாத்தமாகும். மற்ற அசைகள் அனுதாத்தமாகும்:
லூ + ஸ்னா, இங்கு, ஊ, ஆ (ஸ்னா) இரண்டுமே உதாத்தம்ஆகும். லூ + ஸ்னா = லுனா என்ற வினைபடியில், இறுதி 'ஆ' உதாத்தம் பெறும். லூ + ஸ்னா = திப் லுனாதி இங்கு 'ஆ' உதாத்தம் பெறும். ஏனென்றால் 'தி' அனுதாத்தமாகுமென்று 3.1.4 விதிக்கிறது.
லூ + ஸ்னா + தஸ் = லுனீத: இங்கு இறுதி 'அ' (தவின்) உதாத்தம் பெறும்.
லூ + ஸ்னா + அந்தி = லுனந்தி: 'அ' உதாத்தம் பெரும்.

லுனீதஸ் + தரப் + ஆம் = லுனீததராம்
'லுனீதஸ்' இன் 'அ'வும், 'ஆ'இன் 'ஆ'வும் உதாத்தம், இதிலிருந்து ஆக்கப்பட்ட லுனீததராம் என்ற பதத்தின் இறுதி அசையான 'ஆ' உதா த்தமாகும். மற்ற அசைகள் சுரம் பெறா.
ஒரு பதம், அடிச் சொல் (ப்ரக்ருதி), ஆகமம், ஆதே[3]ஸம், ஒட்டுக்க ள், ஆகியவைகள் கொண்டதாகவிருக்கும். இவைகள் ஒவ்வொன்றும் அதற்குரிய சுரம் பெற்றதாக இருக்கும். ஆயினும், இவைகளை இ ணைத்து ஒரு பதமாக்கும் போது ஒரேயொரு அசை மட்டும் ஒலியழுத்தம் (சுரம்) பெறும். மற்றவைகளில் சுரம் குறிக்கப்படமாட்டாது. ஒரு சொல்லைத் தருவிக்க அடுத்தடுத்து தொடர்ச்சியாக பயன்படுத்தும் பல விதிகளையும் அவைகளின் வரிசைக்கிரமத்தையும் பொறுத்து, ஒரு சொல்லின், தகுந்த சுரம் எது வாகுமென்று தீர்மானிக்கப்படும். வரிசைக்கிரமத்தில், பின்னால் நிற்கும் விதி முன்னால் நிற்கும் விதியைவிட பலம் பொருந்தியது, அநித்ய விதியைவிட நித்ய விதி பஹிரங்க விதியைவிட அந்தரங்க விதி, உத்ஸர்க விதியைவிட அபவாத விதி பலம் பொருந்தியது போன்ற விளக்கும் விதிகள் இதற்கு எடுத்து காட்டுக்கள், இவை யெல்லாவற்றையும் பயன்படுத்திய பிறகு, எந்த விதி கடைசியாக நிற்கிறதோ அந்த விதி பயன்படுத்தப்படும்.
மற்றொரு விதி பயன்படுத்தக்கூடியதாக இருந்தாலும், (அதைவிட) ஒரு விதி பயன்படுத்தக்கூடியதாக நிற்கும்போது, முன்னால் கூறியதைப் பின்னால் கூறியது தடுக்கும்.
காட்டாக கே[3]ாபாயதி. இச்சொல் "கு[3]ப்" என்ற தாதுவிலிருந்து தருவிக்கப்பட்ட சொல். ஒரு தாதுவாக நிற்கும் போது "கு" அசை ஒலியழுத்தம் பெறும் (6.1.162) 'ஆய' என்ற ஒட்டை அத்தாதுவோடு இணைக்கும்போது, (3.1.28), இது 'கே[3]ாபாய' என்று ஆகும். அப்போது, ஒட்டு ஒலியழுத்தம் பெறும் (3.1.3) அதாவது 'பா' ஒலியழுத்தம் பெறும். இப்போது 3.1.32 பயன்படுத்தப்படும்.
அதன்படி 'ஆய' ஒட்டிணைத்துத் தருவிக்கப்படும் சொல், ஒரு தாதுவாகும். ஆகையால் கோபாய ஒரு தாதுவாகிறது. ஆகவே ஒரு தாதுவுக்கு விதிக்கப்பட்ட ஒலியழுத்தம் பெறும் (6.1.164). 'கோபாய'வின் 'ய' ஒலியழுத்தம் பெறும்.
இவ்வெடுத்துக்காட்டில் 'ப்ரத்யய ஸ்வர (ஒட்டின் சுரம்) (3.1.3) ஒட்டின் முதல் அசை ஒலியழுத்தம் பெறவேண்டும்)

விதி த[4]ாதுஸ்வர (6.1.191) (ஒரு தாதுவின் இறுதியசை ஒலியழுத்தம் பெறவேண்டும்) விதிக்கு அபவாதம். ஆகவே, தாது ஒலியழுத்தம் பெறுவதைத் தடுக்கிறது. ஒரொட்டையினைத்துத் தருவிக்கப்பட்ட தாதுவைப் பொறுத்தவரையில் ஸதிஸிஷ்ட விதி (எது கடைசியில் நிற்கிறதோ) ப்ரத்யய ஸ்வரத்தைத் தடை செய்கிறது. ஏனென்றால், ஒரொட்டை யிணைத்தபிறகும், இத்தகைய சொற்கள் தாதுவென்றே குறிப்பிடப்படும். கார்ஷ்ணோத்தராஸங்க[3] புத்ர: "கருப்பு நிற அங்கவஸ்திரத்தையணிந்து கொண்டிருப்பவனின் மகன்". அதாவது "பல தேவரின் மகன்". இது ஒரு பஹுவ்ரீஹித் தொகை. பஹுவ்ரீஹிஸ்வரம் (6.2.1), ஸமாஸஸ்வரத்துக்கு (6.1.223) அபவாதம். ஆகையால், ஸமாஸ ஸ்வரத்தை இது தடை செய்யும். இதற்கு மேலும் சொல்லிணைத்து ஒரு தொகையாக்கும்போது, 'ஸ்திஸிஷ்ட விதிப்படி, ப[3]ஹுவ்ரீஹிஸ்வரமும் தடுக்கப்படும். கடைசியில் ஆக்கப்பட்ட சொல் ஒரு தொகைதான். பஹுவரீஹி தொகையல்ல.

வா: விப[4]க்திஸ்வரான் நஞ்ஸ்வரோ பலீயானிதி வக்தவ்யம் நஞ்ஸ்வரம், (எதிர் மறையொட்டின் ஒலியழுத்தம்), வேற்றுமையுருபின் ஒலியழுத்தத்தைவிட (விப[4]க்திஸ்வரம்)
பலம் பொருந்தியது. அதிஸ்ர என்ற எதிர்மறைத் தொகையில், 'திஸ்ரு'வுக்குப் பின் வரும் 'ஜஸ்' என்ற வேற்றுமையுருபு ஒலியழுத்தம் பெறும் (6.1.166) என்ற விப[4]க்திஸ்வர விதி, ஸதிஸிஷ்ட மாக இருந்தபோதிலும் 6.2.2இல் விதிக்கப்பட்ட எதிர்மறையொட்டின் ஒலியழுத்தம் (நஞ்ஸ்வரம்) அதைத் தடைசெய்யும் ஏனென்றால், எதிர்மறைத் தொகை தத்புருஷத் தொகையாகும்.

வா: விப[4]க்தி நிமித்தஸ்வராச்ச நஞ்ஸ்வரோ ப[3]லீயானிதி வக்தவ்பம்
வேற்றுமையுருபுகளால் உண்டாக்கப்படும் ஒலியழுத்தத்தைவிட 'நஞ்ஸ்வரம்' பலம் பொருந்தியது. காட்டாக, 'அசத்வார:' என்ற எதிர்மறைத் தொகையில், 'ஆங்' என்ற ஆகமம் வேற்றுமையுருபு இணைக்கப்பட்டதால் வருகிறது. அதாவது ஸர்வநாமவொட்டுக்கள் தொடரும்போது மட்டுந்தான் 'ஆங்' ஆகமம் வரும் (7.1.98). இந்த 'ஆ' உதாத்தசுரம் கொண்டது (6.1.98) ஆயினும் எதிர்மறைச் சொல்லின் ஒலியழுத்தத்தினால், இந்த 'உதாத்த' ஸுரம் தடுக்கப்படுகிறது.

**6.1.159** கர்ஷாத்வதோ க[4]ஞோ அந்த உதாத்த:
க்ருஷ் 'இழு', என்ற தாது அல்லது 'ஆ' வீற்றுத் தாது ஆகியவைகளோடு 'க[4]ஞ்' (க்ருத்) ஒட்டிணைக்கப்பட்டு
ஆக்கப்பட்ட சொல்லின் இறுதியசை உதாத்த ஸுரம் பெறும்.
க்ருஷ் + க[4]ஞ் = கர்ஷ: (7.2.86) 'இழுத்தல், உழுதல்' பச் + க[4]ஞ் = பாக: (7.2.118, 3.52); த்யஜ் + க4ஜ் = த்யாக; ரஞ்ஜ் + க[4]ஞ் = ராக[3]: 'சாயமேற்றுதல்' த3ா + க[3]ஞ் = த[3]ா + யுக் + அ (7.3.33) = த[3]ாய: 'பரிசு'
பின்னால் வரும் 6.1.197க்கு இது முன்னாலேயே விதிக்கப்பட்ட புறனடை 'ஞ்'

'இத்'தாகக் கொண்ட ஒட்டை இணைத்துத் தருவிக்கப்படும் சொல்லின் முதலசை உதாத்த சுரம் பெறும் என்று இச்சூத்திரம் விதிக்கிறது. ஆனால் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் எடுத்துக்காட்டுகளெல்லாம், இச்சூத்திரத்தின்படி இறுதியசையில் உதாத்த சுரம் பெறுகின்றன.

'க்ருஷ்' என்ற தாதுவைக் குறிப்பிடாமல், 'கர்ஷ' என்ற சொல் இச்சூத்திரத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. துத$^{3}$ாதி கணத்தைச் சேர்ந்த 'க்ருஷ்' தாதுவை இங்கு குறிக்காது: ப்$^{4}$வாதி கணத்தைச் சேர்ந்த 'க்ருஷ்' தாதுவில் தான் இவ்விதி செயற்படுமென்று சுட்டத்தான் இச்சூத்திரத்தில் 'கர்ஷ' என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது, துத$^{3}$ாதி வகுப்பைச் சேர்ந்த 'க்ருஷ்' விலிருந்து தருவிக்கப்பட்ட சொல்லின் முதலசை உதாத்தம் பெறும்.

**6.1.160** உஞ்ச$^{2}$ாதீ$^{3}$னாம் ச

'உஞ்ச$^{2}$' முதலிய சொற்களின் இறுதியசை உதாத்தமாகும். உஞ்ச்$^{2}$ + க$^{4}$ஞ் = உஞ்ச:

உஞ்ச:, ம்லேச்ச$^{2}$:, ஜஞ்ஜ:, ஜல்ப: ஆகிய 'க$^{4}$ஞ்' ஈற்றுச் சொற்கள் முதலசையில் உதாத்தம் பெற்றிருக்கும். இச்சூத்திரம் இவைகளினிறுதியசையில் உதாத்தத்தை விதிக்கிறது. ஜப:, வ்யத$^{4}$: என்பவைகள் 'அப்' ஒட்டிணைத்து ஆக்கப்பட்ட சொற்கள் (3.3.61). இவைகள் தாதுக்களின் சுரத்தை, அதாவது முதலசையில் உதாத்தைப் பெற்றிருக்கும் (6.1.162) 'வத' என்று சிலர், 'வ்யத$^{4}$'வை படிக்கிறார்கள். 'யுஜ்' தாதுவோடு 'க$^{4}$ஞ்' ஒட்டிணைத்து 'யுக$^{3}$' என்ற சொல் தருவிக்கப்படும் 'யு'வின் 'உ' குணமாகாதது விதிக்குப்புறம்பானது. இச்சொல் 'யுகம்', வண்டியின் ஒரு பகுதி' என்ற பொருட்களைச் சுட்டும், வேறு பொருளில் 'யோக' என்று ஆகும்.

வா: க$^{3}$ரோ தூ$^{3}$ஷ்யே அப$^{3}$ந்த:

'அப்' ஈற்றுச் சொல்லான 'க$^{3}$ர':, விஷம் என்ற பொருளைச் சுட்டும்போது இறுதியசையில் உதாத்தம் பெறும். மற்ற பொருளில் முதலசை உதாத்தமாகும்.

வா: வேத$^{3}$ வேக$^{3}$ வேஷ்ட ப$^{3}$ந்த$^{4}$ா: கரணே வேத$^{3}$, வேக, வேஷ்ட, ப$^{3}$ந்த$^{4}$ ஆகிய சொற்கள் 'க$^{3}$ஞ்' ஒட்டால் ஆக்கப்பட்டவை (3.3.121) இவைகள் கருவியைச் (கரணம்) சுட்டும்போது இறுதியசை உதாத்தம் பெறும். இவைகள் 'ப$^{4}$ாவ'த்தைச் சுட்டும்போது முதலசை உதாத்தமாகும்.

வா ஸ்து யுத்$^{3}$ ருவச் ச$^{2}$ந்த$^{3}$ஸி

வேதமொழியில், ஸ்து, யு, த்$^{3}$ரு ஆகியவைகளிலிருந்து தருவிக்கப்படும் சொற்களும் இத்தகைய சுரம் பெறும்.

பரிஷ்டுத், ஸ்யுத், பரித்$^{3}$ருத்

பரி + ஸ்து + க்விப் = பரி + ஷ + ஸ்து = பரிஷ்டுத்

வா: வர்தநி: ஸ்தோத்ரே

ஸாம வேதத்தில் காணப்படும் வர்தனி என்ற சொல் இறுதியசையில் உதாத்தம் பெறும்.

மற்ற இடங்களில் இச்சொல்லின் நடுவசை உதாத்தமாகும்.

வ்ருத் + நி = வர்தனி:

வா: ஸ்$^{1}$வப்$^{4}$ரே த$^{3}$ர:

'த$^{3}$ர:' (த்$^{3}$ரு), 'குகை'யென்ற பொருளைச் சுட்டும்போது அதன் இறுதியசை உதாத்தமாகும்.

வேறு பொருளைச் சுட்டும்போது முதலசை உதாத்தமாகும்.

வா: ஸாம்ப$^{3}$ தாபௌ ப$^{4}$ாவ க$^{3}$ர்ஹாயாம்

ஸாம்ப$^{3}$, தாப என்ற சொற்கள் 'இகழ்ச்சிக்குரிய' என்ற பொருளைச் சுட்டும்போது இறுதியசையில் உதாத்தம் பெறும். ஸாம்$^{3}$போ பி$^{4}$க்ஷதே – பிச்சை கேட்பது இகழ்ச்சி

இது ப$^{3}$ஹுவ்ர்ஹித்தொகை ஆகையால் முதலுறுப்பினர் ஒலியழுத்தம் பெற வேண்டும். இது அதன் புறனடை தாபோ த$^{3}$ஸ்யூனாம்.

திருடர்களால் நல்ல மனிதர்கள் துன்புறுத்தப்படுவது (தாப) இகழ்ச்சிக்குரிய செயல். மற்ற பொருட்களைச் சுட்டும்போது முதலசை உதாத்தம் பெறும்.

வா: உத்தம ஸ$^{1}$ஸ்வத்தம ஸ$^{1}$ப்$^{3}$தெ$^{3}$ள ஸர்வத்ர

உத்தம, ஸ$^{1}$ஸ்லத்தம என்ற சொற்கள் எல்லா இடங்களிலும் இறுதியசையில் உதாத்தம் பெறும்.

சிலர் 'ப$^{4}$ாவ க$^{3}$ர்ஹாயாம்' என்ற சொல்லையும் இத்துடன் சேர்த்து பொருள் விளக்குவர்.

வா: ப$^{4}$க்ஷ மந்த$^{2}$ பே$^{3}$ாக$^{3}$ தே$^{3}$ஹா:

ப$^{4}$க்ஷ, மந்த$^{2}$, பே$^{4}$ாக, தே$^{3}$ஹ ஆகியவைகள் 'க$^{4}$ஞ்' ஈற்றுச் சொற்கள்.

ப$^{4}$க்ஷ:, ண்யந்தமானாலும், இங்கு இத் தாது 'க$^{4}$ஞ்' ஈற்றுச் சொல்லாகும்.

ப$^{4}$க்ஷ–'உண்ணுதல்', மந்த$^{2}$–'கடைதல்'

பு$^{4}$ஜ்–வளைதல், தி$^{3}$ஹ 'சேர்த்தல், குவித்தல்''

**<u>6.1.161</u>** அனுத$^{3}$ாத்தஸ்ய ச யத்ரோத$^{3}$ாத்த லோப:

'உதாத்த' அசையை ஓரனுதாத்த அசை தொடர்ந்தால் அவ்வுதாத்தம் கெடும். இது கெடுவதால், அனுதாத்த அசை உதாத்தம் பெறும்.

குமார + ஙீப் = குமார் ɸ + ஈ = குமாரீ **(4.1.20; 6.4.148)**

'குமார' என்ற சொல்லினிறுதியசை உதாத்தமாகும்.

'அனுதாத்த'மான 'ஙீப்' அச்சொல்லைத் தொடர்வதால் கெடுகிறது **(6.1.148)** ஆகவே, அனுதாத்த 'ஈ', உதாத்த 'ஈ'

ஆகிறது.

பதி²ன் + ஸ¹ஸ் = பத்² ф + அஸ் (7.1.88)

பத³: 'இ' உதாத்தம், 'அ' (ஸ¹ஸ்)

அனுதாத்தம், 'இன்' கெட்டபிறகு, 'அ' உதாத்தமாகிறது. குமுத + ட்³மதும் (4.2.87) = குமுத் ф + மத் குமுத்3வத் (8.2.10)

'குமுத'த்தின் இறுதிபசையான 'அ' உதாத்தம் தொடர்ந்து வரும். 'மதுப்'பின் அனுதாத்த அசையால், அது கெட்டு, அதன்பிறகு 'வத்' உதாத்தம் பெறுகிறது.

**6.1.162** த⁴ாதோ:

ஒரு தாதுவின் இறுதியசை உதாத்தமாகும்.

பசதி (<பச்) 'அ' உதாத்தம்

பட²தி (<பட்) 'அ' உதாத்தம்

கே³ாபாயதி (கு³ப் + ஆய + ஸ¹ப் + திப்) = கே³ாப் – ஆய + அ + தி = கே³ாபாயதி

'ய'வின் 'அ' உதாத்தம்.

**6.1.163** சித:

'ச்'ஐ இத்தாக் கொண்ட ஓரொட்டைச் சேர்த்துத் தருவிக்கப்பட்ட சொல்லின் இறுதியசை உதாத்தமாகும். ப⁴ாஸ் + கு⁴ரச் = ப⁴ாஸ் + உர (3.2.161) = ப⁴ாஸுர இறுதி 'அ' உதாத்தமாகும். ப⁴ஞ்ஜ் + கு4ரச் = ப⁴ங்கு³ர (7.3.52) இறுதி 'அ' உதாத்தமாகும்.

மித் + கு⁴ரச் = மேது³ர

**6.1.164** தத்³தி⁴தஸ்ய:

'ச்' ஐ 'இத்'தாகக் கொண்ட தத்தித ஒட்டையிணைத்து ஆக்கப்பட்ட சொல் இறுதியசையில் உதாத்தம் பெறும். குஞ்ஜ + ச்ப²ஞ் (4.1.98) + ஞ்ய (5.3.113) = கௌஞ்ஜ் ф – ஆயன – ஞ்ய = கௌஞ்ஜ் ф – ஆயன் ф ய: கௌஞ்ஜாயன்ய: பண்மையில் 'ஞ்ய'வுக்கு 'ф' பதிலியாகும். குஞ்ஜ + ச்ப²ஞ் + ф + ஜஸ் = கௌஞ்ஜாயன:. 'ச்பஞ்' இல் 'ச்', 'ஞ்' என்ற இரண்டு 'இத்' காணப்படுகிறது. 'ச்' ஒலியழுத்தத்தை இவ்விதிக்குக் கட்டுப்படுத்துக்கிறது. 'ஞ்' இருவகையில் செயற்படுகிறது.

1) 6.1.197இன்படி ஒலியழுத்ததை விதிக்கிறது

2) 7.2.117இன்படி 'வ்ருத்தி' ஆக்கம் உண்டாக்குகிறது. இப்போது, தருவிக்கப்பட்ட சொல் 'ச்' இனால் ஒலியழுத்தம் பெறுமா அல்லது 'ஞ்' னால் ஒலியழுத்தம் பெறுமாவென்ற கேள்வி எழும்புகிறது. இச்சூத்திரத்தின்படி 'ச்'வின் ஒலியழுத்தம் பெறவேண்டும். 'ஞ்'வின் அல்ல. ஏனென்றால் 'ஞ்' இரண்டு செயல் முறை கொண்டதால், ஒ லியழுத்தமில்லாவிட்டாலும் மற்றொரு வகையிலாவது செயற்பட மு டியும். ஆனால் ஒரே ஒரு செயல் மட்டுங்கொண்ட 'ச்' அச் செயலும் இல்லாவிட்டால், அதற்கு வாய்ப்பே இல்லாமல் போய்விடும்.

**6.1.165** கித:

'க்'ஐ இத்தாக் கொண்ட தத்தித ஒட்டிணைத்துத் தருவிக்கப்பட்ட சொல்லின் இறுதியசை உதாத்தமாகும்.

நட$^3$ + நாட$^3$ ϕ + ஆயன (7.1.2; 2.118) = நாட$^3$ாயன:

இறுதி 'அ' உதாத்தமாகும், சாராயண: ஆக்ஷிக:, ஸ'ாலாகிக: (ட$^2$க் ஒட்டினால் ஆக்கப்பட்ட சொற்கள் (4.4.1) இறுதி 'அ' உதாத்தமாகும்.

**6.1.166** திஸ்ருப்$^4$ய: ஸஸ:

'திஸ்ரு' (மூன்று)வோடு ஜஸ் (முதல் வேற்றுமைப் பன்மை) இணைக்கப்படும்போது, அதனிறுதியசை உதாத்தம்பெறும்.

திஸ்ரு + ஜஸ் = திஸ்ர: (பெண்பால்) '3' 8.2.4இல் விதிக்கப்படும் 'ஸ்வரித' ஒலியமுத்தம் வருவதை இது தடைசெய்கிறது. 'திஸ்ரு' ('த்ரி'இன் பெண்பால் 7.2.99) எப்போதுமே பன்மையாகும். ஏழு வேற்றுமைகளில் இரண்டாம் வேற்றுமை பன்மை, 6.1.174, இன்படி, இறுதியசையில் உதாத்தம் பெறும். மெய்யில் தொடங்கும் வேற்றுமையுருபுகள் இணைக்கும்போது 6.1.179இன்படி அவைகள் உதாத்தமாகும். (3, 4, 5, 6,7 வேற்றுமைப் பன்மையுருபுகள் மெய்யெழுத்தை முதலாகக் கொண்டவை) மற்ற விதிகளினால் குறிப்பிடப்படாத ஒரேயொரு வேற்றுமை முதல் வேற்றுமைப் பன்மை. 'உதாத்தத்தை' விதிக்கும் இச்சூத்திரம் அமைக்காவிட்டால், இது 'ஸ்வாரிதம்' பெற்றிருக்கும்.

**6.1.167** சதுர: ஸ'ஸி

'சதுர்' (4) ஸஸ் (2ஆம் வேற்றுமைப் பன்மை) தொடரும்போது இறுதியசை உதாத்தம் பெறும்.

சதுர் + ஸஸ் = சதுர: பஸ்ய "நாலைப்பார்"

'உ' உதாத்தமாகும்.

ஆனால் சதஸ்ர: (பெண்பால்)

பஸ்ய. முதலசை உதாத்தம் (பார்க்க 7.2.99 வார்த்திகம்)

**6.1.168** ஸாவேகாசஸ் த்ருதீயாதி$^3$ர் விப$^4$க்தி:

7ஆம் வேற்றுமையுருபுகளை இணைக்கும்போது அடிச் சொற்கள் ஒரசையைக் கொண்டதாக நிற்குமானால் அவ்வடிச் சொற்களோடு இணைக்கப்படும், 3ஆம் வேற்றுமையுருபுகளும், அதைத் தொடர்ந்துவரும் வேற்றுமையுருபுகளும் உதாத்தமாகும். வாச் + ஸு (7ஆம் வேற்றுமைப் பன்மையுருபு) வாக்ஷு வாசாச$^2$, வாக்$^3$ப்$^4$ய$^2$ம், வாக்$^3$ப்$^4$இ$^2$:

ஆனால் வா$^2$க், வா$^2$சௌ, வா$^2$ச: (முதல் வேற்றுமை)

வாஉசம் (2ஆம் வேற்றுமையொருமை)

ராக்$^2$ஞா (3ஆம் வேற்றுமையொருமை)

ரா²ஜன் + ஸு ரா²ஜ ϕ – ஸு = ரா²ஜஸு

ஏழாம் வேற்றுமைப் பன்மையில், ராஜன் என்ற பெயர்ச் சொல், ஓராசை கொண்டதல்ல. ஈரசை கொண்டது. ஆகவே இதன் 3ஆம் வேற்றுமையுருபு உதாத்தமாகாது.

**6.1.169** அந்தோத³ாத்தாது³த்தர பத³ாத³ன்ய தரஸ்யாம நித்ய ஸமாஸே

அநித்யஸமாஸத்தின் இறுதியுறுப்பினராக நிற்கும், இறுதியசையில் உதாத்த சுரம் பெற்ற ஓரசை சொல்லோடு, மேலே கூறிய வேற்றுமையுருபுகளை இணைக்கும்போது அவ்வேற்றுமையுருபுகள் விருப்பாக உதாத்தம் பெறும்.

3. பரம வாசா² அல்லது பரமவா²சா

4. பரமவா²சே அல்லது பரமவாச்ஏ²

5. பரமவா²ச: அல்லது பரமவாச்அ²:

6.1.223 ஒரு தொகையிளிறுதியசை உதாத்தமாகுமென்று விதிக்கிறது. வேற்றுமையுருபுகள் உதாத்தம் இல்லாமல் அமையும்போது இவ்விதி பயன்படுத்தப்படும். இது மாற்று வடிவங்களைக் கொடுக்கிறது. அவாச் ஊமை அ²வாசா, ஸு²வாசா ஆகியவைகள் தத்புருஷத் தொகைகள் 6.2.2இன்படி முதலுறுப்பினர் தனது ஒலியழுத்தை நீக்காமல் கொண்டிருக்கும். அ²வாசே (6.2.2)

இச்சூத்திரத்தில் 'உத்தரபத' என்ற சொல்லைப் பயன்படுத்தாவிட்டாலும் 'அநித்ய ஸமாஸே' என்ற சொல், இது ஒரு தொகையைப் பற்றிய விதியென்று தெளிவாக்கும். இச்சொல்லைப் பயன்படுத்தியிருக்காவிட்டால், ஓரசையைக் கொண்ட, இறுதியசையில் உதாத்தசுரம் பெற்ற அநித்ய ஸமாஸத்தோடு இணைக்கப்படும். மேற்கூறிய வேற்றுமையுருபுகள் உதாத்தமாகும் என்ற பொருளை இவ்விதி சுட்டும். அப்போது ஏகாச: (ஓரசை), பொதுவாகத் தொகையைக் குறிக்குமேயல்லாத, இவ்விதியால் சுட்டப்பட வேண்டிய இரண்டாவது உறுப்பினரைக் குறிக்காது. ஸ்'வோர்க் (ஸு'ன ஊர்க்) என்ற தொகைக்கும் இது பொருந்துவதாகும். ஸ்'வோர்ஜா, ஓரசைக்கு மேற்பட்ட அதாவது பல அசை கொண்ட தொகைகளில் இது செயற்படாது இந்த விதி. நித்யஸமாஸத்துக்கல்ல. அக்னிசி²தா, ஸோமஸு²தா. இவைகள் சூ. 2.2.19இன்படி நித்யஸமாஸமாகும். இவைகளினிரண்டாவது உறுப்பினர் தனது ஒலியழுத்ததை நீக்காமல் கொண்டிருக்கும் (6.2.139) அதனால் 'சி' உதாத்தமாகும்.

எந்தெந்தத் தொகை அதன் உறுப்பினர்களைத் தனித்தனியாகப் பிரித்துப் பொருளுணர்த்த முடியாததோ அந்த நித்ய ஸமாஸங்களிலும் இவ்விருப்பு விதி செயற்படும்.

அவா²சா ப்³ராஹ்மணேன. அவாசா² ப்³ராஹ்மணேன.

"பேசாத அதாவது ஊமைப் பிராம்மணனால்"

**6.1.170** அஞ்சேஸ் ச$^{2}$ந்த$^{3}$ஸி அஸர்வ நாமஸ்த$^{2}$ானே

'அஞ்ச்' ஈற்றுப் பெயர்ச் சொல்லுக்குப்பின் இணைக்கப்படும். ஸர்வநாம ஸ்த2ான வேற்றுமையுருபுகளைத் தவிர்த்த மற்ற வேற்றுமையுருபுகள் வேத மொழியில் உதாத்தம் பெறும்.

மேற்சூத்திரங்களில் கூறப்பட்ட வேற்றுமையுருபுகளுடன், இரண்டாம் வேற்றுமைபமையுருபும், சேர்த்துக் கூறுவதற்காக "அஸர்வ நாமஸ்த2ான" என்ற சொல் சூத்திரத்தில் பயன்படுத்தியுள்ளது.

இந்த்$^{3}$ரா ததீசா$^{2}$ அஸ்த$^{2}$பி: (ருக் 1.84.13)

'த$^{3}$தீ$^{4}$ச்' இன் 'ஈ' உதாத்தமாகும். (பார்க்க 6.1.222) ஆனால், இந்தச் சூத்திரத்தின்படி வேற்றுமையுருபான 'அஸ்' உதாத்தம் பெறுகிறது.

த$^{3}$தீ$^{4}$–ச் ஸ$^{1}$ஸ் த$^{3}$தீ$^{4}$ச்அ$^{2}$:, த$^{3}$தீ$^{4}$சா$^{2}$,

த$^{3}$தீ$^{4}$சே$^{2}$

**6.1.171** ஊடி$^{3}$தம்பத$^{3}$ாத்$^{3}$யப் பும்ரைத்$^{3}$யுப்$^{4}$ய:

மேலே குறிப்பிட்ட வேற்றுமையுருபுகள், 'ஊட்' ஈற்றுச் சொற்கள், இத$^{3}$ம், –பத்$^{3}$ முதலியவைகள் (6.1.63–65) அப், 'தண்ணீர்', பும்ஸ் 'ஆண்', ரை 'செல்வம்', தி$^{3}$வ் 'சுவர்க்கம்' ஆகியவைகளோடு இணைக்கப்படும்போது உதாத்தமாகும்.

1. ப்ரஷ்ட$^{2}$வாஹ் + ஸ$^{1}$ஸ் ப்ரஷ்ட$^{2}$–ஊட$^{2}$:
   + ஸ$^{1}$ஸ் (4.132) = ப்ரஷ்டௌஹ$^{2}$: ப்ரஷ்டௌஹே$^{2}$
2. ஆப்$^{3}$யா$^{2}$ம், ஆப்–இ$^{2}$:
3. நிபத$^{2}$:, நிப$^{3}$தா$^{2}$; த$^{3}$த$^{2}$:, த$^{3}$தா$^{2}$
4. அப் + ஸ$^{1}$ஸ் = அப்அ$^{2}$:, அப்ஸு$^{2}$
5. பும்ஸ$^{2}$:, பும்ஸா$^{2}$
6. ராய$^{2}$:, ராயே$^{2}$
7. தி$^{3}$வா$^{2}$, தி$^{3}$வே$^{2}$

**6.1.172** அஷ்டனோ தீ$^{3}$ர்க$^{4}$ாத்

மேலே கூறிய வேற்றுமையுருபுகள், நெடிலுயிற்று 'அஷ்டன்' என்ற சொல்லோடு இணைக்கப்படும்போது அவைகள் உதாத்தமாகும்.

அஷ்டாபி$^{2}$:, அஷ்டாப்$^{4}$ய$^{2}$:,

இரண்டாம் வேற்றுமைப் பன்மையிலிருந்து 'அஷ்டன்' என்ற சொல் அஷ்டா, அஷ்ட என்ற இருவடிவங்களாகும். அஷ்டாபி$^{4}$:, அஷ்டபி$^{4}$: 'க்$^{4}$ருத' வகுப்பைச் சேர்ந்ததால் 'அஷ்டன்' இறுதியசையில் உதாத்த சுரம் கொண்டது, 6.1.180இன்படி, இச்சொல், ஈற்றசையில் உதாத்தம் பெறும். இச்சூத்திரம் அதைத் தடை செய்கிறது.

'தீ$^{3}$ர்க$^{4}$ாத்' என்ற சொல்லிலிருந்து, 'அஷ்டன்' இரண்டு வடிவங்கள் கொண்டது என்பது புலப்படும். ஆகவே, 7.2.84இல் விதிக்கப்பட்ட 'அ' பதிலியாவது விருப்பாகும். இல்லாவிட்டால் 'தீர்க$^{4}$ாத்' என்ற சொல் தேவையற்றது. ஏனென்றால், பொதுவாக கூறப்பட்ட 7.2.84 இனால், அஷ்டன் எப்போதுமே நெடிலீற்றுச் சொல்லாகவே ஆகும்.

**6.1.173** ஸதுரனுமோ நத்$^{3}$யஜாதீ$^{3}$

இடையொட்டு 'நும்' இணைக்காத 'ஸ'த்ரு' பிரத்தியத்தையிணைத் தாக்கப்பட்ட (இறுதியில் உதாத்தம் கொண்ட) சொற்களுக்குப்பின் பெண்பால் ஒட்டான 'ஈ' (நதீ) அல்லது "ஸர்மநாமஸ்தானத்தைத் தவிர்த்த மற்ற உயிரெழுத்தை முதலாகக் கொண்ட வேற்றுமையுருபுகள் வரும்போது அச்சொல்லினீறு உதாத்தம் பெறும்.

துத்$^{3}$ + ஸ$^{1}$ + ஸ$^{1}$த்ரு + ஙீப் = துத$^{3}$த் + ஙீப் = து$^{3}$ + ஈ = துத$^{3}$தீ$^{2}$. ஆனால் துத்$^{3}$–அ$^{2}$ந்தீ "துளைக்கும்" துத$^{3}$த் + ஸ$^{1}$ஸ் = துதத்–அ$^{2}$:, துதத$^{3}$ா$^{2}$, துதத்ஏ$^{2}$ ஆனால் துத$^{3}$–அ$^{2}$ந்த: துத$^{3}$த் + ப்$^{4}$யாம் = துத$^{2}$த்$^{3}$ப்பாம் த$^{2}$த$^{3}$த:, த$^{2}$த$^{2}$த$^{3}$தா. இது முதலசையில் உதாத்தம் கொண்டது.

வா: ப்$^{3}$ருஹன் மஹதோருப்ஸங்க்$^{2}$யானம்

ப்$^{3}$ருஹத், மஹத் என்ற சொற்களும் இதனோடு சேர்ந்தவை. ப்$^{3}$ரு ஹதீ$^{2}$, மஹதீ$^{2}$, ப்$^{3}$ருஹதா$^{2}$, மஹதா$^{2}$

**6.1.174** உத$^{3}$ாத்த யணோ: ஹல் பூர்வாத்

உதாத்த சுரம் கொண்ட உயிருக்கு அரையுயிர் (யண்) பதிலியாகும் போது, அதற்கு முன் ஒரு மெய் நிற்கும்போது, மேலே கூறப்பட்ட ஒட்டுக்கள் (அதைத் தொடர்ந்து வரும்) உதாத்தம் பெறும்.

க்ரு + த்ரு$^{2}$ச் + ஙீப் கர்த்ரு$^{2}$–ஈ = கர்த்ரீ$^{2}$ (பெண்பால்) ஆனால்

க்ரு + த்ருன் + டா = ஆ = க$^{2}$ர்த்ரே

க்ரு + த்ருன் + ஙே = ஏ$^{2}$ = க$^{2}$ர்த்ரே,

'த்ருன்' ஒட்டினாலாக்கப்பட்ட சொற்கள் முதலசை உதாத்த சுரம் கொண்டவை.

இந்தச் சூத்திரம் 8.2.4க்கு முன்னாலேயே கூறப்பட்ட ஒரு புறனடை.

ப$^{3}$ஹுதித$^{2}$ ப்$^{3}$ராஹ்மணி 'பல சல்லடைகளையுடைய பிராம்மணப் பெண்' என்ற பஹுவ்ரீஹித் தொகையில், இறுதியசையான 'உ' உதாத்த சுரம் கொண்டது (6.2.175).

ப$^{3}$ஹுதித உ + டா = ஆ = பஹு திதவா என்ற சொல்லில் உதாத்த உயிருக்குப் பதிலியாகும். அரையுயிர்க்கு முன் நிற்கும் எழுத்து ஒருயிராவதால் இந்த விதி அதில் செயற்படாது. ஆகையால் 8.2.4இன்படி, அது 'ஸ்வரித' சுரம் பெறும்.

வா: நகார க்$^{3}$ரஹணம் கர்தவ்பம்

(அரையுயிர் ஈறாக அமையாவிட்டாலும்) 'ன்' ஈற்றுச் சொற்களுக்கும் இந்த விதி பயன்படுத்தப்படும். வாக்பத்னீ$^{2}$, சித்பத்னீ$^{2}$

**6.1.175** நோங் த$^{4}$ாத்வோ இறுதி உதாத்த உயிர் பெண்பாலொட்டான

ஊங் (ஊ) அல்லது தாதுவினிறுதியாகவோ, ஆகுமானால், மேலே குறிப்பிட்ட உதாத்த சுரம், மேற்கூறிய ஒட்டுக்களை இணைக்கும்போது பெறாது.

ப்ரஹ்ம ப$^{3}$ந்$^{2}$து$^{4}$ + டா = ஆ = ப்ரஹ்ம ப$^{3}$ந்த்$^{4}$வா (8.2.4 இதனிறுதியுயிர்

'ஸ்வரிதமாகும்'

க$^2$லபூ* + டா = ஆ = க$^2$லப்வா இறுதியசை ஸ்வரிதமாகும். (6.4.83, 8.2.4)

**6.1.176** ஹ்ரஸ்வ நுட்$^4$ப்$^4$யாம் மதுப்

குறில் (ஹ்ரஸ்வ) உயிரையீறாகக் கொண்ட (உதாத்த சுரம் பெற்ற) பெயர்ச் சொல் அல்லது நுட்(ன்) ஆகமம், அவ்வொட்டுக்கு முன் நிற்கும் (அதாவது மதுப்) சொல் ஆகியவைகளுக்குப்பின், தத்தித ஒட்டான 'மதுப்' இணைக்கப்படும் போது 'மதுப்' உதாத்த சுரம் பெறும்.

அக்3னி$^2$ + மதுப் = அக்ஷி$^2$ன் + மதுப் (7.1.76) =

அக்ஷி$^2$ன் + நுட் + மதுப் (8.2.16) = அக்ஷி$^2$ ϕ – ன் – மத் (8.2.7) = அக்ஷின்வஉத் (8.2.9; 4.2) "கண்களையுடைய" அஸ்த$^2$ன் வ$^2$த், 'எலும்புடைய' ஆனால் வ$^2$ஸுமத் 'செல்வமுடைய' (வஸு முதலசையில் உதாத்தம் கொண்டது)

வா: ரே ஸ'ப்$^3$த$^3$ாச்ச மதுப உத$^3$ாத்தத்வம் வக்தவ்யம் ரை 'செல்வம்'க்குப்பின் வரும் 'மதுப்'பும் உதாத்தம் பெறும் ஆரேவ$^2$ான்

வா: த்ரேஸ்' ச ப்ரதிஷேத$^4$ா வக்தவ்ய:

'த்ரி'க்குப்பின் வரும் 'மதுப்' உதாத்தம் பெறாது. த்ரி$^2$ வதீர் யாஜ்யானுவாக்யா ப$^4$வந்தி

**6.1.177** நாமன்யதரஸ்யாம்

குறில் உயிரையீறாகக் கொண்ட (அவ்வுயிர் உதாத்த சுரம் கொண்டதானால்) சொல்லுக்குப்பின் 'நாம்' (6ஆம் வேற்றுமைப் பன்மையுருபு) இணைக்கும் போது, அவ்வேற்றுமையுருபு விருப்பாக உதாத்தம் பெறும். ('மதுப்' உம் இங்கு அனுவிருத்தியாகும்.

அக்$^3$னி$^2$ + ஆம் = அக்னி$^2$ + நுட் + ஆம் (7.1.54) = அன்னீ–ன் ஆ$^2$ம் அல்லது அக்$^2$னீ–னாம் (7.3.102)

மேலே கொடுக்கப்பட்ட எடுத்துக்காட்டுகளில் 'நாம்'உக்கு முன் நிற்கும் உயிர் குறில் அல்லாமல், நெடிலாகக் காணபபடுகிறது. அவ்வாறிருக்கும்போது, 'ஹ்ரஸ்வ' என்ற சொல்லை, அனுவிருத்தியாக இங்கு கொண்டு வருவதற்குத் தேவையென்ன? இங்கு 'மதுப்' உம் அனுவிருத்தியாகும். "இவ்வெடுத்துக் காட்டுக்களில் காணப்படும்." அடிச்சொற்கள் 'நாம்' ஒட்டுக்கு முன் நெடிலாகக் காணப்பட்டாலும் 'மதுப்' தொடரும்போது

குறிலீற்றுச் சொல்லோடிணைக்கப்படும். 'நாம்'ஐ. உதாத்த சுரம் பெறச் செய்யும் என்று அப்போது, இச்சூத்திரத்தின் பொருளாகும். இல்லாவிட்டால் திஸ்ருணா$^2$ம், சதஸ்ருணா$^2$ம் என்ற குறிலீற்றுச் சொல்லோடு வரும் 'நாம்' உதாத்தம் பெறும். மேலே கொடுக்கப்பட்ட காட்டுக்களில் இவ்விதி பயன்படுத்த முடியாது.

'ஆம்' என்று குறிப்பிடாமல் 'நுட்' ஆகமத்துடன் கூடிய 'நாம்' (7.1.54 )ஐக் குறிப்பிட்டதன் நோக்கமென்ன, தே4ன்வாம், ஸகட்யாம் ஆகி யவைகளில் இவ்விதி செயற்படுத்த முடியாது, இவைகள் இறுதியசையில் உதாத்தம் பெறும். (6.1.1)

**6.1.178** ங்யாஸ்1 ச2ந்த3ஸி ப3ஹுலம்

ஙீ (ஈ)யீற்றுப் பெண்பாற் சொற்களுக்குப்பின் இணைக்கப்படும் வேற்றுமையுருபு 'நாம்' வேதமொழியில் பலவகையில் உதாத்தம் பெறும்.
தே3வஸேனானாம் அபி4ப4ஞ்ஜதீனா2ம், 3பஹ்வீனா2ம், பிதா (ருக் 6.75.5) ஆனால் ந2தீனாம் பாரே: ; ஐ2யந்தீனாம் மருத: (ருக் 10.103.8)ஆகியவைகளில் 'நாம்' உதாத்தம் பெறாது.

**6.1.179** உட்த்ரி சதுர்ப்4யோ ஹலாதி3;

ஷட் (1.1.24) என்ற ஸம்க்ஞாவினால் குறிப்பிடப்படும் எண்ணுப் பெயர்கள், த்ரி '3', சதுர் '4', ஆகிபவைகளுக்குப்பின் இணைக்கப்படும் மெய்யெழுத்தை முதலாகக் கொண்ட (ஹலாதி3) வேற்றுமையுருபுகள், உதாத்த சுரம் பெறும். 'அந்தோத3ாத்தாத்' இலிருந்து அனுவிருத்தியாகாது. ஷ2ஷ் + பி4: = ஷ2ட்3 + பி4: = (8.4.53) ஷட்32பி4: ; ஷட்3ப்ய2:, ஷண்ண2ாம், பஞ்சான2ாம், ஸப்தானா2ம், த்ரி° பி4:, ந்ரிப்4ய2:, த்ரயாணா2ம், சதுர்ப்4ய2:, சதுர்2பி4:, சதுர்ண2ாம் இதற்கு 6.1.172 புறனடை அஷ்ட2–ஔ. ஆனால் ச2தஸ்ர: பஸ்ய (6.1.167); (7.2.99) தொடர்ந்து நிற்கும் வேற்றுமையுருபு உயிரெழுத்தை முதலாகக் கொண்டது.

**6.1.180** ஜ2ல்யுபோத்தமம்

மேலே குறிப்பிட்ட எண்ணுப் பெயர்களுக்குப்பின், 'ஜ2ல்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்தை முதலாகக் கொண்டு வேற்றுமையுருபுகளை இணைக்கும்போது அவ்வெண்ணுப் பெயர்கள், ஒன்றுக்கும் மேற்பட்ட பல அசைகளைக் கொண்டதாக ஆவதால், ஆக்கப்பட்ட சொல்லின் ஈற்றயல் அசை உதாத்தம் பெறும்.

ப2ஞ்சன் + பி4: பஞ்ச2 ф + பி4

பஞ்ச2பி:4, பஞ்ச2ப்4ய:

ஸப்த2பி4:, ஸப்த2ப்4ய:

ஆனால் பஞ்சான2ாம், ஸப்தான2ாம்

திஸ்ரு2பி4:, சது2ர்ப்4ய: ஆனால் ஷட்3ப்4இ2; த்ரிப்4ய2:

**6.1.181** விப4ாஷா ப4ாஷாயாம்

பேச்சுமொழியில் மேலே கூறப்பட்ட எண்ணுப்பெயர்களோடு 'ஜ2ல்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்தில் தொடங்கும்

வேற்றுமையுருபுகளையிணைக்கும்போது மேலே கூறிய உதாத்த சுரம் விருப்பாக வரும்.

பஞ்ச$^{2}$பி$^{4}$: அல்லது பஞ்ச$^{2}$பி$^{4}$:,

திஸ்ரு$^{2}$பி$^{4}$: அல்லது திஸ்ருப்$^{4}$இ$^{2}$:

சது$^{2}$ர்பி$^{4}$:, அல்லது சதுர்ப்$^{2}$இ:

அஷ்ட$^{2}$ஸு அல்லது அஷ்டஸு$^{2}$ (பார்க்க 6.1.172)

**6.1.182** ந கோ$^{3}$ ஸ்$^{1}$வன் ஸாவ வர்ண ராட$^{3}$ங் க்ருங் க்ருத்$^{3}$ப்$^{4}$ய:

சூ. 6.1.168–181 வரை விதிக்கப்பட்ட விதிகள் கீழ்க்கண்டவைகளில் செயற்படாது. கோ$^{3}$ 'பசு', ஸ்$^{1}$வன் 'நாய்', அவைகளில் முடியுஞ் சொற்கள், முதல் வேற்றுமை ஒருமையுருபு இணைப்பதற்குமுன், 'அ' அல்லது 'ஆ' வில் முடியுஞ்சொல், ராஜ், 'அஞ்ச்' அல்லது க்ருஞ்ச்'ஐ யிறுதியில் கொண்ட சொற்கள், க்ருத்.

1. கோ$^{3}$ – க$^{23}$வா, கோ$^{3}$$^{2}$ப்$^{4}$யாம் (6.1.168க்குத் தடையானது) ஸு$^{2}$கு$^{3}$னா, ஸுக$^{2}$வே (169க்குத் தடை)
2. ஸ்$^{1}$வன் – ஸுனா, ஸுனே$^{2}$, பரமஸு$^{2}$னே
3. ஸௌ அவர்ண–யே$^{2}$ப்$^{4}$ய:, தே$^{2}$ப்$^{4}$ய:
4. ராஜ்–ர$^{2}$ாஜா, பரமரா$^{2}$ஜா
5. அஞ்ச் – ப்ர$^{2}$ாஞ்சா, ப்ரா$^{2}$ஞ்சே ஆனால் ப்ராசா$^{2}$
6. க்ருஞ்ச்–க்$^{2}$ருஞ்சா, பரமக்ரு$^{2}$ஞ்சா
7. க்ருத்–க்ரு$^{2}$தா, க்ரு$^{2}$தே, பரமக்ரு$^{2}$தே

**6.1.183** தி$^{3}$வோ ஜ$^{2}$ல்

'ஜ$^{2}$ல்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்தை முதலாகக் கொண்ட வேற்றுமையுருபு, தி$^{3}$வ்' உக்குப்பின் வரும்போது அவ்வேற்றுமையுருபுகள் உதாத்தம்பெறாது.

த்$^{3}$யு$^{2}$ப்$^{4}$யாம், த்$^{3}$யு$^{2}$பி$^{4}$:

இது 6.1.168; 171க்குத் தடை ஆனால் தி$^{3}$வா$^{2}$, தி$^{3}$வே$^{2}$

**6.1.184** ந்ரு சான்யதரஸ்யாம்

'ந்ரு'வுக்குப்பின் வரும், ஜ$^{2}$ல் பிரத்தியாஹாரத்தின் ஒரெழுத்தை முதலாகக் கொண்ட வேற்றுமையுருபுகள், விருப்பாக உதாத்தம் பெறாது.

ந்ரு$^{2}$பி$^{4}$:, அல்லது ந்ருப்$^{4}$இ$^{2}$:

ந்ரு$^{2}$ப்$^{4}$ய: அல்லது ந்ருப்$^{4}$ய$^{2}$:

ந்ரு$^{2}$ப்$^{4}$யாம் அல்லது ந்ருப்$^{4}$ய$^{2}$ாம்

ந்ருஃஷு அல்லது ந்ருஷு (இது 168க்குத் தடை)

**6.1.185** தித் ஸ்வரிதம்

'த்' ஐ 'இத்'தாகக் கொண்டவொட்டு 'ஸ்வரித' சுரம் பெறும். வச் + ண்யத் = வாக்ய (7.2.116, 3.52). இறுதி உயிர் 'அ' ஸ்வரிதம் பெறும். க்ரு + ண்யத் = கார்ய. 3.1.3 இன்படி எல்லாவொட்டுக்களும் முதலசையில் உதாத்தம் பெறும் அதற்கு இது புறனடை. 6.1.213 முதலியவைகள் இச்சூத்திரத்திற்குப் புறனடை விதிக்கிறது.

**6.1.186** தாஸ்யனுதாத்தேன் ஙித் த³த³ பதே³ஸால் ல ஸார்வத⁴ாதுக மனுத³ாத்தமஹ்ன் இங்கோ:

'ல்' (=திங், ஸ'த்ரு, ஸானச்) உக்குப் பதிலியாக வரும் ஸார்வதாதுக ஒட்டு, கீழ்க்கண்டவைகளுக்குப்பின் இணைக்கப்படும்போது அனுதாத்த ஸுரம் பெறும். (கால வொட்டு) தாஸி, அனுதாத்த சுரம், 'ங்' ஆகியவைகளை, 'இத்'தாகக் கொண்ட வினைகள்—ஹ்னுன் (மறைத்தல்), இங் (அதி⁴ என்ற உபசர்க்கத்துடன்) என்ற வினைகளைத் தவிர மற்ற வினைகள், தாது பாடத்தில் கூறப்பட்ட (உபதேஸ) 'அ' வீற்றுச் சொற்கள்

1. தாஸ்—கர்த்தா, கர்த்தாரௌ, கர்த்தார:
2. அனுதாத்தேத்—ஆஸ்தே
3. ஙித்—ஷூங்—ஸூதே, ஸேதே
   ஹ்னுதே², அதீதே² 'ஙித்'துக்குப் புறனடை
4. அதுபதேஸாத்—துத³த:, நுத³த:

**6.1.187** ஆதி³: ஸிச: அன்யதரஸ்யாம்

"ஸிச்" (aorist) ஒட்டை யீறாகக் கொண்ட, வினைச் சொல்லின் முதலசை விருப்பாக உதாத்தம் பெறும்.

மா ஹி க்ரு + ஸிச் + தாம் = மாஹி, உகார்ஷ்டாம், உலாவிஷ்டாம், லாவிஷ்உடாம் 'ஸிச்' இன், 'ச்'ஐக் கொண்ட அசை, உதாத்த சுரம் பெறுமென்பதை 'ச்' சுட்டும்.

வா: ஸிச ஆத்³யுதாத்தத்வே அனிட: பித: பக்ஷே உதாத்தத்வம் வக்தவ்யம் 'இட்' அல்லாத (அனிட்) 'ஸிச்' வினைக்குப்பின் இணைக்கப்படும் 'ப்' ஐ 'இத்'தாகக் கொண்ட ஒட்டு (பித்) ஒரு உதாத்த சுரம் பெறும். மற்றதில் இது உதாத்தமல்ல. மா ஹி கார்ஷம் அல்லது மா ஹி கார்உஷம். இவ்வார்த்திகமில்லாவிட்டால், ஒரே ஒரு வடிவம்தான் கிடைக்கும். அதாவது, தாதுவின் சுரத்தைக் கொண்டதாகும். அதாவது முதலசை உதாத்தம் பெறும். ஏனென்றால், 'பித்' அனுதாத்தம் ஆகும். அது 'இட்' ஆகமத்தோடு கூடியதாக இருந்தால் இரண்டு வடிவங்கள் கிடைக்கும்.

(1) மா ஹி லா²விஷம் (திஙந்த).

(2) மா ஹி லா$^2$விஷம் 6.1.163இன்படி 'வி' உதாத்தம் பெறும். ஆனால் மா ஹி லாவி$^2$ஷம் இறுதியசை உதாத்தம் ஒருபோதும் பெறாது.

**6.1.188** ஸ்வபாதி ஹிம்ஸாயாம் அச்யனிடி

'ஸ்வப்' முதலிய வினைகள், ஹிம்ஸ் ஆகியவைகள் 'இட்' ஆகமத்தைத் தவிர்த்து, ஒருயிரை முதலாகக் கொண்ட ஸார்வ தாதுக ஒட்டுக்கள் தொடரும்போது, அவ்வினையின் முதலசை விருப்பாக உதாத்தம் பெறும்.

ஸ்வப் + $\phi$ + அந்தி = ஸ்$^2$வபந்தி, ஸ்$^1$வஸந்தி,

ஸ்'வ$^2$ஸந்தி, ஹிம்ஸ் + ஸ்$^1$னம் + அந்தி = ஹி–ன–ன்ஸ்– அந்தி = ஹின் $\phi\phi$ - ஸ் + அந்தி = ஹி$^2$ம்ஸந்தி, ஹிம்$^2$ஸந்தி (8.3.24). ஆனால் ஸ்வப் + தஸ் = ஸ்வம் + இட் + தஸ் ஸ்வபித$^2$: (7.2.76)

'ஙித்' ஆன உயிரெழுத்தை முதலாகக் கொண்ட ஒட்டுக்களுக்குத்தான் இந்த விதி. ஆகவே ஸ்$^2$வபானி, ஹின$^2$ஸானி.

**6.1.189** அப்$^4$யஸ்தானாம் ஆதி$^3$:

'அனிட்' ஆன உயிரெழுத்தை முதலாகக் கொண்ட ஸார்வதாதுக வொட்டுக்களுக்கு முன் ("ல"வின் பதிலி) நிற்கும் இரட்டிக்கப்பட்ட வினையின் முதலசை உதாத்தம் பெறும்.

த$^3$ா + ஸ்லு + ஜி$^2$ = த$^3$–தா–அதி = த$^3$த்$^3$– $\phi$ –அதி = த$^2$த$^3$தி, த$^2$த$^3$து, $^2$ஜக்ஷது

ஆனால் ஜக்ஷ் – இட் + தஸ் = ஜக்ஷிதஉ: மேற்சூத்திரத்திலிருந்து 'ஆதி' என்ற சொல் அனுவிருத்தி மூலம் கிடைத்திருக்கும்.

ஆயினும், இச்சூத்திரம், இது கட்டாயமானது விருப்பு விதியல்ல வென்று வலியுறுத்தத்தான் 'ஆதி' என்ற சொல்லை மறுபடியும் இச்சூத்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

**6.1.190** அனுத$^3$ாத்தே ச

அனுதாத்த சுரம் கொண்ட மூன்று இடங்களில் ஒருமையுருபுகள் தொடரும்போதும் இரட்டிக்கப்பட்ட வினையின் முதலசை உதாத்த சுரம் பெறும்.

திப் (படர்க்கையொருமை), ஸிப் (முன்னிலையொருமை), மிப் (தன்மையொருமை) (3.1.4) ஆகியவைகள் அனுதாத்த சுரம் கொண்டவை.

த$^3$ா + ஸ$^1$லு + திப் = த$^2$த$^3$ாதி 'அவன் கொடுக்கிறான்', ஹா + $\phi$ + தி = ஜ$^2$ஹாதி

மா ஹி த$^2$த$^4$ாத் (=த$^4$ + லங் + த் = த$^4$ா + $\phi$ + த் ('அவன் தாங்க வேண்டாம்.

**6.1.191** ஸர்வஸ்ய ஸுபி

ஸர்வ 'எல்லாம்' என்ற சொல்லைத் தொடர்ந்து ஸுப் (வேற்றுமையுருபுகள் வரும்போது), அச்சொல்லின் முதலசை உதாத்தம் பெறும்.

ஸ²ர்வ:, ஸ²ர்வெள, ஸ²ர்வே ஆனால் ஸர்வ² + தரப், தமப் = ஸர்வ² – தர, ஸ²ர்வதம.

வா: ப்ரத்யயலக்ஷணேனாப்யயம் ஸ்வர: இஷ்யதே ஸர்வஸ்தோம இதி.

வேற்றுமையுருபு கெட்டாலும் இந்த விதி – 1.1.63 விதிக்கப்பட்ட தடையிருந்தபோதிலும் செயற்படும், ஸ²ர்வஸ்தோம:

வா: ஸர்வஸ்வரோ அனச்கஸ்ய இதி வக்தவ்யம்

'அகச்' ஒட்டுத் தொடர்ந்தால் இந்த விதி செயற்படாது. ஸர்வக²: இங்கு 'சித்'தின் சுரம் படி, இறுதியசையில் உதாத்தம் பெறுகிறது. (6.1.163)

**6.1.192** பீ⁴ ஹ்ரீ ப்⁴ரு ஹுமத³ஜன த⁴ன த³ரித்³ரா ஜாக்³ரதாம் ப்ரத்யயாத் பூர்வம்

இரட்டிக்கப்பட்ட, பீ⁴ 'அச்சமுறு', ஹ்ரீ 'வெட்கப்படு', ப்⁴ரு 'தாங்கு', ஹு 'ஆகுதிசெய்', மத்³ 'மகிழ்', ஜன் 'உண்டாக்கு' (குழந்தை), த⁴ன் 'ஓடு', த³ரித்³ரா 'இல்லாமையிரு', ஜாக்³ரு 'விழி' ஆகிய தாதுக்களுக்குப்பின் ('ல'வுக்குப் பதிலியாகும்), ('ப்' ஐ 'இத்'தாகக் கொண்ட ஸார்வ தாதுக ஒட்டுக்களை இணைக்கும்போது, அவ்வொட்டுக்கு முன் நிற்கும் அசை உதாத்தம் பெறும்.

பீ⁴ – பி³ – பே²⁴ + தி, ஸி, மி
ஹ்ரீ – ஜிஹ்ரே² – மி, ஸி, தி
ப்⁴ரு – பி³ப²⁴ர்மி, ஸி, தி
ஹு – ஜு–ஹோ²–மி, ஸி, தி
மத் – ம–ம²த்து, ம²மத³த்
ஜன் – ஜ²ஜன்–அத்
த⁴ன் – த³த⁴–ன் – அத்
த³ரித்³ரா–த³ரித்³ராதி, ஸி, மி
ஜாக்³ரு – ஜாக³ர்தி, ஸி, மி

**6.1.193** லிதி

'ல்'ஐ இத்தாகக் கொண்ட ஒட்டுக்கு முன் நிற்கும் அசை உதாத்தம் பெறும். க்ரு + ஸன் + ண்வுல் = சி–கீர்ஷ + ண்வுல் சி–கீர்–ஷ் ϕ அக (4.1.48) = சி–கீ²ர்–ஷக. செய்ய விரும்பும் பெ⁴ளரிகி + வித⁴ல் = பெ⁴ளரிகீ²வித⁴ (4.2.54)

**6.1.194** ஆதிர் ணமுல்யன்யதரஸ்யாம்

'ணமுல்' இணைத்தாக்கப்பட்ட சொற்களில் மாத்திரம் செயற்படும்.

**6.1.195** அச: கர்த்ரு யகி

உயிரெழுத்தை யீறாகக் கொண்ட (தாது பாடத்தில் குறிப்பிட்டபடி) தாதுவின் முதலசை, அத்தாதுவோடு செயப்பாட்டு வினையொட்டுக்கள்

இணைக்கும்போது, அவ்வினை

தற்சுட்டு வினையின் பொருளைச் சுட்டுமானால், அவ்வினையின் முதலசை விருப்பாக உதாத்தம் பெறும்.

லூ$^{2}$யதே/லூ$^{2}$யதே கேத$^{3}$ார:

ஸ்வயமேவ ''வயல் தன்னாலேயே அறுவடை செய்யப்பட்டது''

ஆனால் பி$^{4}$த்$^{3}$யதே ஸ்வயமேவ,

லூயதே கேத$^{3}$ார: தே$^{3}$வத$^{3}$த்தேன ''தேவதத்தனால் வயல் அறுவடை செய்யப்பட்டது''

ஜன், க$^{2}$ன், ஸன், ஆகியவைகள் ஜாயதே, க$^{2}$ாயதே, ஸாயதே என்ற வடிவங்கள் பெறும்போது இவ்விதி செயற்படும். தாதுபாடத்தில் நெடில் 'ஆ' வீற்றுத் தாதுவாகக் குறிப்பிட்டதைப்போல், இவைகளில் 'ஆ' பதிலியாகிறது. (6.4.43)

ஆகவே, உஜ$^{2}$யதே, (அ) உஜ$^{2}$யதே ஸ்வயமே.

'தானாகவே உண்டாகியது', ஸ$^{2}$ாயதே அல்லது ஸ$^{2}$ாயதே

ஸ்வயமே; க$^{2}$ாயதே (அ) க$^{2}$ாயதே ஸ்வயமேவ

**6.1.196** த$^{2}$லி ச ஸேட$^{1}$ ட$^{3}$ந்தோ வா

'த$^{2}$ல்' (லிட்) ஒட்டு, 'இட்' (ஸேட்) ஆகமத்துடன் தொடரும்போது, அவ்வினையின் இறுதியசையோ அல்லது 'இட்'டோ அல்லது முதலசையோ உதாத்தம் பெறும். இந்த விதி செயற்படாவிட்டால் பொதுவிதியான 6.1.193 செயற்படும். அப்போது, உதாத்தசுரம் வெவ்வேறு இடங்களில் அமைக்கப்பெற்ற நாலு வடிவங்கள் கிடைக் கும்.

லூ + லிட் = லூ + த$^{2}$ல் = லு–லூ + இட் + த$^{2}$ல் = லு–லோ + இட் + த$^{2}$ல் = லுலவ்–இ$^{2}$–த$^{2}$; லு லவித$^{2}$, லு$^{2}$லவித$^{2}$, லு$^{2}$லவித$^{2}$ சுருங்கக்கூறினால் 'இத$^{2}$' ஒட்டோடு சுரம் என்ற அசையிலும் வரலாம்.

**6.1.197** ஞ்னிதி ஆதி3ர் நித்யம்

'ஞ்', 'ன்' ஆகியவைகளை 'இத்'தாகக் கொண்ட ஒட்டுக்களையிணைத்து ஆக்கப்பட்ட சொற்கள், கட்டாயமாக அதன் முதலசையில் உதாத்தம் பெறும்.

க$^{3}$ர்க + யஞ் (4.1.105) = கா$^{3}$ர்க் $\phi$ – ய (4.4.108) க$^{3}$ார்க்$^{3}$ய:

வஸூதே$^{3}$வ + வுன் (4.3.98) = வா$^{2}$ஸீதே$^{3}$வக:

இது 3.1.3க்கு புறனடை. ஒட்டு கெடும்போது அச்சொல்லின் சுரமும் கெடும். க$^{3}$ர்$^{2}$க$^{3}$ா;, சஞ்ச$^{2}$ப:

**6.1.198** ஆமந்த்ரிதஸ்ய ச

விளி வேற்றுமையின் முதலசையும் உதாத்தம் பெறும். தே$^{3}$வத$^{3}$த்த, தே$^{3}$வத்$^{3}$த்தௌ, தே$^{3}$வத$^{3}$த்தா 6.2.148இன் விதிக்கப்பட்ட இறுதியசையின் உதாத்தத்துக்கு இது தடை விதிக்கிறது.

**6.1.199** பதி$^2$ மதே$^2$ா: ஸர்வநாமஸ்தாநே

ஸர்வநாமஸ்த$^2$ான. வேற்றுமையுருபுகள் தொடரும்போது, பதி$^2$ன், மதி$^2$ன் ஆகியவைகள், முதலசையில் உதாத்தம் பெறும்.

பதி$^2$ன், மதி$^2$ன் என்ற சொற்கள் 'இனி' ஒட்டு இணைக்கப் பட்டு ஆக்கப்பட்ட சொற்கள் 4.

1ஆம் வேற்றுமை ப$^2$ந்த$^2$ா:, ப$^2$ந்த$^2$ானௌ, ப$^2$ந்த$^2$ான:

2ஆம் வேற்றுமை ப$^2$ந்த$^2$ானம், ப$^2$ந்த$^2$ானௌ

ம$^2$ந்த$^2$ா:, ம$^2$ந்த$^2$ானௌ, ம$^2$ந்த$^2$ான:, ம$^2$ந்த$^2$ானம்,

ம$^2$ந்த$^2$ானௌ மற்ற வேற்றுமையுருபுகளுக்கு முன், பத$^2$ பஸ்1ய 6.1.162, இறுதியசையில் உதாத்தம் விதிக்கிறது.

**6.1.200** அந்தஸ்$^1$ ச தவை யுக$^3$பத்

'தவை' ( infinitive ) முதல், இறுதி இரண்டசைகளிலும், ஒரே சமயத்தில் உதாத்த சுரம் பெறும்.

க்ரு + தவை = க$^2$ர்தவை 'செய்ய' ஹ$^2$ந்தவை 'கொல்ல' 'தவை'யின் 'த' உதாத்த சரம் பெறும் என்று விதிக்கும் 3.1.3க்கு இது புறனடை. ஒரு சொல், ஒரேயொரு சுரந்தான் பெறும் என்று கூறும். 6.1.158க்கு மாற்றுவிதியாகிறது இது.

**6.1.201** க்ஷய: நிவாஸே

'க்ஷய' என்ற சொல், 'வீடு', 'இருப்பிடம்' என்ற பொருளைச் சுட்டும்போது அதன் முதலசை உதாத்தம் பெறும்.

க்ஷ$^2$ய: (=க்ஷி + க$^4$)

பொதுவாக 'க்ஷி'யுடன் 'அச்' (3.3.56) ஒட்டிணைத்து க்ஷி + அச் = க்ஷய$^2$ 'அழிதல், நசித்தல்' ஆகும்.

**6.1.202** ஜய: கரணம்

'கருவி' அதாவது அதனால் வெற்றியடைகிறான்' என்ற பொருளைச் சுட்டும்போது 'ஜய' என்ற சொல்லின் முதலசை உதாத்தம் பெறும்.

ஜி + க$^4$ (3.3.118) = ஜய$^2$:

ஜயோ அஸ்வ: 'வெற்றியளித்த குதிரை' ஆனால் ஜி + அச் = ஜ$^2$ய (3.3.56) 'வெற்றி' க$^4$, அச் இந்த இரண்டு ஒட்டுகளாலும் ஆக்கப்பட்ட சொற்களில் பொதுவாக சுரம் இறுதியசையில் வரவேண்டும். ஆயினும், தருவிக்கப்பட்ட சொல் ஒரு பெயரைக் குறிப்பதால் 'க$^4$' இங்கு செயற்படுகிறது.

**6.1.203** வ்ருஷாதீ$^3$னாம் ச

'வ்ருஷ' முதலிய சொற்களும் முதலசையில் உதாத்தம் பெறும். வ்ரு ஷ் + க$^2$ (3.1.135) = வ்$^2$ருஷ 'எருது' 3.1.3க்கு இது புறனடை.

ஜ்வர் + அச் (3.1.134) = ஜ்2வர 'காய்ச்சல்'

**6.1.204** ஸம்க்3ஞாயாம் உபமானம்

ஒரு பெயரைச் சுட்டும் உவமைச் சொல்லின் முதலசையில் உதாத்த சுரம் பெறும்.

ச2ஞ்சா 'சோளக் கொல்லைப் பொம்மை.'

வத2 3ரிகா 'அலி' க2ரகுடீ 'அம்பட்டன் கடை' த3ாஸீ இந்த உவமைச் சொற்கள், உவமேயத்தின் பெயர்களாகப் பயன்படுத்தப்படுகின்றன. 5.3.98இன்படி இங்கு 'கன்' (5.3.96) ஒட்டு கெடும். 1.1.62இன்படி 'கன்' ஒட்டு கெட்டாலும், அதனால் ஏற்படும் முதலசையின் அசையின் உதாத்த சுரம் நீடித்து நிற்கும். ஆகையால் இச்சூத்திரத்தின் தேவையென்ன? ப்ரத்யயலக்ஷண விதி, சுரத்தைப் பற்றிய விதிகளிலெல்லாம் செயற்படாது என்று சுட்டவே, இந்தச் சூத்திரம் அமைக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் அக்3உணி2ர்மாணவக: (பெயரல்ல)

**6.1.205** நிஷ்டா ச த்3வ்யஜனாத்

ஒரு பெயரைச் சுட்டும் ஈரசையுள்ள 'நிஷ்டா' வென்ற ஸம்க்2ஞாவினால் அழைக்கப்பட்ட சொற்களின் முதலசை உதாத்தம் பெறும். ஆனால் முதலசையில் 'ஆ' இல்லாமலிருந்தால் தான் அது உதாத்தம் பெறும்.

த3ா + க்த = த3த்3 + க்த (7.4.46) =

உத3த்த:, த2 கு2ப்த: (பெயரானால்)

த3த்த2: 'கொடுக்கப்பட்ட', கு3ப்த2–'காப்பாற்றப்பட்ட', ரக்ஷித2 (பலவகை கொண்டது); த்ராத2:

('ஆ' முதலசையில் அமைகிறது)

**6.1.206** ஸு1ஷ்க த்4ருஷ்டௌ

'நிஷ்டா' ஒட்டில் முடியும் ஸு1ஷ்க 'உலர்ந்த', த்4ருஷ்ட 'துணிச்சலுள்ள' ஆகியவைகளின் முதலசை உதாத்தம் பெறும்.

ஸு1ஷ் + க்த2 = ஸு1ஷ் + க2 (8.2.51) =

ஸு2ஷ்க, த்4ரு2ஷ்ட: இவைகள் பெயரல்ல

**6.1.207** ஆஸி1த: கர்தா

'ஆஸி1த' என்ற சொல் கர்த்தாவாகப் பயன்படுத்தும் போது அதன் முதலசை உதாத்தம் பெறும்.

ஆ2ஸி1த: தே3வத3த்த: "உண்ட தேவதத்தன்" ஆனால் ஆஸி2தம் அன்னம் 'உண்ணப்பட்ட உணவு'

ஆ2ஸிதம் தே3வத3த்தேன "தேவதத்தனால் உண்ணப்பட்டது"

**6.1.208** ரிக்தே விப$^4$ாஷா

'நிஷ்டா' ஒட்டில் முடியும் 'ரிக்த' என்ற சொல்லின் முதலசை விருப்பாக உதாத்தம் பெறும்.

ரிச் + க்த = ரிக் + த = ரி$^2$க்த, ரிக்த$^2$ 'காலியாக்கிய'

**6.1.209** ஜுஷ்டார்பிதே சச்ச$^2$ந்த$^3$ஸி

ஜுஷ்ட, 'மகிழ்ச்சியான', அர்பித 'புகுத்திய', என்ற சொற்களும் வேத மொழியில், விருப்பாக அவைகளின் முதலசையில் உதாத்தம் பெறும்.

ஜு$^2$ஷ்ட, ஜுஷ்$^2$ட;

அ$^2$ர்பித, அர்பித$^2$

**6.1.210** நித்யம் மந்த்ரே

(ஜுஷ்ட, அர்பித என்ற சொற்கள்) மந்திரப் பகுதியில் கட்டாயமாக, முதலசையில் உதாத்தம் பெறும். ஜு$^2$ஷ்ட, அ$^2$ர்பித

**6.1.211** யுஷ்மதஸ்மதோர் ஙஸி

மாற்றுப் பெயர்களான யுஷ்மத்$^3$ 'நீ' அஸ்மத்$^3$ 'நாம், நாங்கள்' ஆகியவைகள் 'ஙஸ்' (6ஆம் வேற்றுமையுருபு) தொடரும்போது முதலசையில் உதாத்தம் பெறும்.

யுஷ்$^2$மத்$^3$ + ஙஸ் = தவ + ஙஸ் (7.2.96) =

தவ + அஸ் (7.1.27) = த$^2$வ (7.1.97)

'உன்னுடைய'; அஸ்$^2$மத் + ஙஸ் ம$^2$ம 'என்னுடைய'

**6.1.212** ஙயி ச

யுஷ்மத்$^3$, அஸ்மத்$^3$ என்ற மாற்றுப் பெயர்கள் ஙே (4ஆம் வேற்றுமை) தொடரும்போதும் முதலசையில் உதாத்தம் பெறும்.

யுஷ்மத் + ஙே = துப்$^4$ய + ஙே (7.2.95) =

துப்$^4$ய + அம் (7.1.28) = து$^2$ப்$^4$யம் (7.1.97)

'உனக்கு', ம$^2$ஹ்யம் (=அஸ்மத் + ஙே) 'எனக்கு' 1.3.10 (யத$^2$ாஸங்க்$^2$ய விதி)யைப் பயன்படுத்துவதிலிருந்து தடுப்பதற்காக, இவ்விரண்டு (211-12) விதிகளையும் தனித்தனியாக அமைக்கப்பட்டிருக்கிறது.

**6.1.213** யதோ அனாவ:

'யத்' ஒட்டிணைத்தாக்கப்பட்ட, நௌ 'படகு' என்ற சொல்லைத்தவிர மற்ற சொற்கள், ஈரசைச் சொற்களானால், முதலசை உதாத்தமாகும்.

சி + யத் (3.1.97) = சே$^2$ய 'குவிக்கப்பட வேண்டிய'

ஆனால் நௌ + யத் = நாவ்யம்

சிகீர்ஷ்யம், (பலவசை கொண்டது) 'ய' ஸ்வரிதம் ஆகும்.

**6.1.214** ஈட வந்த$^{3}$ வ்ரு$^{1}$ ஸ$^{1}$ம்ஸது$^{3}$ஹாம் ண்யத:

ஈட் 'புகழ்', வந்த்$^{3}$ 'வணங்கு', வ்ரு$^{1}$ 'தேர்ந்தெடு', ஸ$^{1}$ம்ஸ் 'புகழ்', து$^{3}$ஹ் 'பால்கற' ஆகியவைகளோடு 'ண்யத்' ஒட்டுச் சேர்த்தாக்கப்பட்ட சொற்களின் முதலசை உதாத்தம் பெறும்.

ஈட் + ண்யத் = ஈ$^{2}$ட்$^{3}$ய 'புகழவேண்டிய'

வந்த் + ண்யத் = வ$^{2}$ந்த்$^{3}$ய 'வணங்கவேண்டிய'

வ்ரு + ண்யத் = வா$^{2}$ர்ய 'தேர்ந்தெடுக்க வேண்டிய'

ஸம்ஸ் + ண்யத் = ஸ$^{2}$ம்ஸ்ய

து$^{3}$ஹ் + ண்யத் = தோ$^{3}$ஹ்ய

**6.1.215** விபி$^{4}$ாஷா வேணவிந்த$^{4}$ானயோ:

வேணு 'மூங்கில்' இந்த$^{4}$ான 'எரிக்கும்' என்ற சொற்கள் விருப்பாக முறையில் உதாத்தம் பெறும்.

வே$^{2}$ணு, வேணு$^{2}$

இத்$^{4}$ + சானஸ் = இந்த்$^{4}$ + சானஸ் = இφ + ந–த்$^{4}$ + சானஸ் = இ–ந்φ -த்$^{4}$ + சானஸ் = (6.4.33; 111) இந்த$^{உ-4}$ான, $^{உ}$இந்த$^{4}$ான; இந்த்$^{4}$ + ஸானச்$^{உ}$ = இந்த்$^{4}$ ஸானச் (186) = இφ–$^{உ}$–ந–த்$^{4}$ + ஸானச் = இ–ந்φ –த்$^{4}$ + ஸானச் (6.4.111) = இந்த$^{உ-4}$ான (161)

**6.1.216** த்யாக$^{3}$ ராக$^{3}$ ஹாஸ குஹஸ்வட$^{2}$ க்ரத$^{2}$ானாம்

த்யாக$^{3}$ 'துறத்தல்' ராக$^{3}$ 'காதல்', ஹாஸ 'சிரிப்பு' குஹ 'ஏமாற்றுக்காரன்', ஸ்வட$^{2}$ 'பேச்சு', க்ரத$^{2}$ 'அழிவு' ஆகிய சொற்களின் முதலசை விருப்பாக உதாத்தம் பெறும்.

முதல் மூன்று சொற்கள் 'க$^{4}$ஞ்' ஒட்டு இணைத்துத் தருவிக்கப்பட்ட சொற்கள். மற்றவைகள் 'அச்' ஒட்டினால் ஆக்கப்பட்டவை.

த்யஜ் + க$^{4}$ஞ் = த்$^{2}$யாக$^{3}$, த்யாக$^{2}$ (159)

ரஞ்ஜ் + க$^{4}$ஞ் = ரா$^{2}$க$^{3}$, ராக$^{23}$

ஹஸ் + க$^{4}$ஞ் = ஹா$^{2}$ஸ, ஹா$^{2}$ஸ

குஹ் + அச் = கு$^{2}$ஹ, கு$^{2}$ஹ

ஸ்வட்$^{2}$ + அச் = ஸ்$^{2}$வட$^{2}$, ஸ்வட$^{2}$

க்ரத்$^{2}$ + அச் = க்$^{2}$ரத்$^{2}$, க்ரத$^{2}$

**6.1.217** உபோத்தமம் ரிதி

'ர்'ஐ 'இத்'தாகக் கொண்ட ஒட்டை யீறாகக் கொண்ட பலவசைகளைக் கொண்ட சொற்களின் ஈற்றயலசை உதாத்தம் பெறும்.

க்ரு + அ$^{2}$னீயர் = கரணீய$^{2}$ (8.4.3) 'அடைய வேண்டிய' செய்ய வேண்டிய'

படு$^{1}$ + ஜாதீ$^{2}$யர் = படு – ஜாதீ$^{2}$ய (5.3.69)

**6.1.218** சஙி அன்யதரஸ்யாம்

'சங்' ஒட்டை யீறாகக் கொண்ட (பலவசை கொண்ட) சொற்களின் ஈற்றுபலசை விருப்பாக உதாத்தம் பெறும்.

க்ரு + ணிச் + சங் + தாம் = அட் + சீ + (கார் (இ-->ϕ) + அ + தாம் (6.4.51)
= அ[2] சீகரதாம் (7.4.1)

மா ஹி சீகர[2] தாம், சீ[2] கரதாம் 'அவனை வேலை செய்விக்காதே'

'மா' என்ற இடைச் சொல்லுடன், அட் 'கெடும்'

**6.1.219** மதோ: பூர்வாம் ஆத் ஸம்க்[3]ஞாபாம் ஸ்த்ரிபாம்

மதுப் (மத்) ஒட்டுக்குமுன் நிற்கும் ஆத் (ஆ), ஆக்கப்பட்ட சொல் பெண்பாற் சொல்லாகவும், ஒரு பெயராகவும் ஆகும்போது, உதாத்தம் பெறும்.

உது[3]ம்ப[3]ர + மதுப் + ஙீப் உது[3]ம்ப3ராவதீ (6.3.120) ''ஒரு நதியின் பெயர்''

ஸ1ர + மதுப் + ஙீப் = ஸ[1] ராவதீ 'ஒரு நதியின் பெயர்'

ஆனால் இக்ஷு + மதுப் + ஙீப் = இக்ஷு[2]மதீ (176),

அஜிர + மதுப் + ஙீப் = அஜிரவதீ[2] (220)

**6.1.220** அந்தோ அவத்யா:

(பெண்பாற் சொல், ஒரு பெயரைச் சுட்டும்போது) 'அவதீ'யை யீறாகக் கொண்ட, தருவிக்கப்பட்ட சொல்லினிறுதியசை உதாத்தம் பெறும்.

அஜிர + மதுப் + ஙீப் = அஜிரவதி[2] 'ஒரு நதியின் பெயர்'

க[2]தி[3]ரவதீ[2] 'ஙீப்' இனால் ஆக்கப்பட்ட இச்சொற்களின் இறுதியசை அனுதாத்த சுரம் கொண்டதாக இருந்திருக்கும் (3.1.4). 'வதீ' என்றில்லாமல் 'அவதீ' என்று ஏன் சூத்திரத்தில் பயன்படுத்தியிருக்கிறது. அவ்வாறு பயன்படுத்தியிருந்தால் 'ராஜவதீ' என்ற சொல்லிலும் இவ்விதி செயற்படும். ஆனால் இது 'ராஜன்வதீ' என்ற சொல்தான் 'ராஜவதீ' அல்ல, இதன் இறுதி 'அன்வதீ' ஆகும் (பார்க்க 8.2.2)

**6.1.221** ஈவத்யா

'ஈவதீ'யையிறுதியில் கொண்ட ஆக்கப்பட்ட சொல்லினிறுதியசை உதாத்தம் பெறும்.

அஹீவதீ[2], முனீவதீ[2]. 'நதியின் பெயர்கள்'

**6.1.222** சௌ

'அஞ்ச்' என்ற சொல்லை இறுதியில் கொண்ட ஒரு தொகையின் முதலுறுப்பினரின் இறுதியசை உதாத்தம் பெறம். 'ச்', 'அஞ்ச்'க்குப் பதிலியாக வந்தது,

'க்வின்' ஒட்டுக்கு முன், நிற்கும் 'அஞ்ச்' இன் ஈற்றயல் மூக்கொலி கெடும். அஞ்ச் = அ ɸ ச் = அச். உயிரெழுத்தில் தொடங்கும் சில வேற்றுமைபுருபுகளுக்கு முன் இது மேலும் குறுகும். அதாவது 'ச்' மா த்திரம் நிற்கும். இந்தக் குறுகியவொட்டுக்குமுன் நிற்கும் உறுப்பினர் இறுதியசையில் உதாத்தம் பெறும்.

த$^{3}$தி$^{4}$ + அஞ்ச் + க்வின் + ஸஸ் = த$^{3}$தி$^{4}$ + ɸɸ ச் + அஸ் = த$^{2}$தீ$^{4}$ச: (3.138)

வா: சாவதத$^{3}$தி$^{4}$த இதி வக்தவ்யம்

தத்தித வொட்டுக்குமுன், இவ்விதி பயன்படுத்தப்படாது.

த$^{3}$ாதீ$^{4}$உச

**6.1.223** ஸமாஸஸ்ய

ஒரு தொகையினிறுதியசை உதாத்தம் பெறும் ராஜ்ஞ: புருஷ: ராஜ + ɸ + புருஷ: ராஜபுருஷ$^{2}$: 'அரச சேவகன்', ப்$^{3}$ராஹ்மண கம்ப$^{2}$ல:

இது ஒரு உத்ஸர்க$^{3}$ விதி, பொதுவிதி. இதையடுத்து வரும் பகுதிகளில் (பாத) இச்சூத்திரத்துக்குப் புறனடை கூறப்படுகிறது.

**6.2.1** ப$^{3}$ஹுவ்ரீஹள ப்ரக்ருத்யா பூர்வபதம்

ப$^{3}$ஹுவ்ரீஹித் தொகையில், முதலுறுப்பினர் தனது மூலசுரத்தை நீடித்து நிற்க வைக்கும்.

இது 6.1.223க்குப் புறனடை. இவ்விதியில் காணப்படும் பூர்வபதம் என்ற சொல், சுரத்தைச் சுட்டும், அதாவது, முதலுறுப்பினரின் சுரம்–உதாத்தம் அல்லது ஸ்வரிதம் (6.1.159 185) ப்ரக்ருத்யா என்ற சொல் இயல்பு அதாவது அனுதாத்தமாக மாறாது என்று பொருட்படும். காட்டாக, கார்ஷ்ண: உத்த ராஸங்க$^{3}$: அஸ்ய = கார்ஷ்ணோத்தராஸங்க$^{3}$: "கருப்பு மானின் தோலாலாக்கப்பட்ட மேலாடை (அங்க வஸ்த்திரம்) அணிந்து கொண்டிருப்பவன்". இத்தொகையில் இறுதியசை உதாத்தசுரம் பெறவேண்டும். ஆனால் இந்த ப$^{3}$ஹுவ்ரீஹித் தொகையில் முதலுறுப்பினர் தனது மூல சுரத்தை நீக்காமல் வைத்திருக்கும். கார்ஷ்ண்ய = க்ருஷ்ண + அஞ் (4.3.154) இது முதலசையில் உதாத்தம் பெறும் (6.1.197) இதே சுரத்தை அது தொகையில் வரும்போதும் நீடித்து வைத்துக் கொள்ளும். ஆனால் ஒரு தொகையின் முதலுறுப்பினர் சுரம் ஏதுமில்லாமல் அமையும்போது 6.1.223 அதில் பயன்படுத்தப்படும். காட்டாக ஸமப$^{4}$ாக$^{3}$: = ஸம: + ப$^{4}$ாக$^{3}$: அஸ்ய 'சமஅளவு பங்கு பெறும்' இத்தொகையில் ஸம சுரமேது மில்லாதது. ஆகையால், இரண்டாவது உறுப்பினரான 'ப$^{4}$ாக$^{3}$' உதாத்தம் பெறும். ஸமப$^{4}$ாக$^{3}$:

**6.2.2** தத்புருஷே துல்யார்த$^{2}$ த்ரு$^{1}$தீயா ஸப்தம்யுபமானாவ்யயத் வி தீயாக்ருத்யா:

தத்புருஷத் தொகையில், முதலுறுப்பினர் தனது மூல சுரத்தை, கீழ்க்

கண்டவாறு அத்தொகையமையுமானால் நீடித்து நிற்கவைக்கும்
(1) முதலுறுப்பினர் 'ஒப்பு' என்ற பொருளைச் சுட்டும் சொல்
(2) மூன்றாம் வேற்றுமைச் சொல் (த்ருதீயா)
(3) ஏழாம் வேற்றுமைச் சொல் (ஸப்தமீ)
(4) உவமைச் சொல் (உபமான)
(5) இடைச் சொல் (அவ்யய)
(6) இரண்டாம் வேற்றுமைச் சொல் (த்3விதீயா)
(7) 'க்ருத்ய' எனப்படும் ஒட்டுக்கள்.
இதுவும் 6.1.223க்குப் புறனடை.

1) துல்ய: ஸ்1வேத: துல்யஸ்1வேத: 'அதே மாதிரியான வெள்ளை' ஸத்3ருஸ1: லோஹித: ஸத்3ருஸ லோஹித 'அதற்கு ஒப்பான சிவப்பு'

2) ஸ1ங்குலயா க2ண்ட:– ஸ1ங்குலா க2ண்ட3:
"அரிவாளால் வெட்டப்பட்ட"

3) அக்ஷேஷு ஸெ1ௗண்ட3: அக்ஷ ஸௌ1ண்ட3:
"சூதாட்டத்தில் வல்லமையுள்ள"

4) ஸ1ஸ்த்ரீ இவ ஸ்1யாமா = ஸ்த்ரீ – ஸ1யாமா 'கத்தியின் விளிம்பு போன்ற கருப்பான'

5) நப்3ராஹ்மண: அப்3ராஹ்மண: "பிராம்மணனல்லாத"
நிஷ்க்ராந்த: கௌஸ1ம்ப்3யா; நிஷ்கௌஸ1ம்பி3:

வா: அவ்யயே நஞ்கு நிபாதானாமிதி வக்தவ்யம்
'அவ்யங்கள்' என்று குறிப்பிடும்போது, எதிர்மறையொட்டு 'நஞ்' 'கு' நிபாதம் எனப்படும் அவ்யயங்கள் ஆகியவற்றோடு தொகை யாக்கும்போதுதான் இந்த விதி பயன்படுத்த இயலும் 'நஞ்' இன் சுரம் தொடர்ந்து நிற்கும் 'க்ருத்' இவ் சுரத்தையும் தடுக்குமென்று சுட்டத்தான், அதுவும் ஒரு நிபாதனமானாலும் இங்கு தனியாக அதைக் குறிப்பிடப்பட்டிருக்கிறது.
அகரிணி:
ஸ்னாத்வாகாலக: என்ற தொகையில் இது செயற்படாது. இதில் இறுதியசை உதாத்தம் கொண்டது. இது மயூரவ்யம் ஸகாதி வகுப்பைச் சேர்ந்தது.

6) முஹூர்தம் ஸுக2ம் = முஹூர்த ஸுக2ம் "கணமாத்திரமுள்ள மகிழ்ச்சி"

7) போ4ஜ்யம் லவணம் = போ4ஜ்யலவணம் 'உண்ணக்கூடிய உப்பு'

**6.2.3** வர்ணோ வர்ணேஷ்வனேதே

ஏத 'பலநிறமுள்ள' என்ற சொல்லைத் தவிர்த்து, ஏனைய நிறத்தைக் குறிக்கும் சொல், மற்றொரு நிறத்தைக் குறிக்கும் சொல், மற்றொரு நிறத்தைச் சுட்டும் சொல்லோடு இணைத்துத் தொகையாக்கும்போது, அத்தொகையின் முதலுறுப்பினர் தனது சுரத்தை நீடித்து வைத்துக் கொள்ளும்.

க்ருஷ்ணஸாரங்க:, லோஹித கல்மாஷ:

''க்ருஷ்ண''வினிறுதியசை உதாத்தம் கொண்டது. (3.1.3), லோஹித முதலசையில் உதாத்தம் கொண்டது (4.1.97) ஆனால் க்ருஷ்ணைத: 'கருப்புப்புள்ளியுள்ள'

**6.2.4** க$^{3}$ாத$^{4}$லவணயோ: ப்ரமாணே

ஒரு தத்புருஷத் தொகையினிரண்டாவது உறுப்பினர் க$^{3}$ாத$^{4}$ ''ஆழமில்லாத, நடந்து கடக்கக்கூடிய'' அல்லது லவண 'உப்பு' என்பவைகள் நின்று அத்தொகை அளவைச் சுட்டுமானால், அதன் முதலுறுப்பினர் தனது சுரத்தை நீடித்து வைத்துக் கொள்ளும்.

ஸம்ப$^{3}$ க$^{3}$ாத$^{4}$ முத$^{3}$கம்ஸ$^{1}$ம்ப$^{3}$ஸ்ய

க$^{3}$ாத$^{4}$ம் ''துடுப்பின் போன்ற

ஆழமில்லாத தண்ணீர்'; அரித்ரக$^{3}$ாத$^{4}$ம்

''உலக்கையின் நீளத்தைப் போன்ற ஆழமான தண்ணீர்'';

கே$^{3}$ாலவணம் ''பசுவுக்களிக்கக்கூடிய அளவு உப்பு'',

அஸ்$^{1}$வலவணம்

ஆனால் பரமக$^{3}$ாத$^{4}$ம், பரமலவணம் இவைகள் அளவைச்சுட்டா.

**6.2.5** த$^{3}$ாயாத்$^{3}$யம் த$^{3}$ாயாதே$^{3}$

ஒரு தத்புருஷத் தொகையினிரண்டாம் உறுப்பினர் த$^{3}$ாயாத$^{3}$ 'வாரிசு' என்ற சொல்லாக அமைந்து, அத்தொகை பரம்பரையாகப் பெறுதல் (த$^{3}$ாயாத்$^{3}$யம்) என்ற பொருளைச் சுட்டுமானால், அதன் முதலுறுப்பினரின் சுரம் தொடர்ந்து நிற்கும்.

வித்$^{3}$யாத$^{3}$ாயாத$^{3}$: 'அறிவின் வாரிசு'

த$^{3}$னத$^{3}$ாயாத$^{3}$: 'செல்லத்தின் வாரிசு'

ஆனால் பரம தா$^{3}$யாத$^{3}$:

**6.2.6** ப்ரதிப$^{3}$ந்தி$^{4}$ சிரக்ரு$^{1}$ச்ச$^{2}$ரயோ:

'சிர', க்ருசச்$^{2}$ர என்ற சொற்கள் இரண்டாவது உறுப்பினராக அமையும் தத்புருஷத் தொகை இடையூறு, தடை (ப்ரதிப$^{3}$ந்தி$^{4}$) என்ற பொருளைச் சுட்டுமானால் அதன் முதலுறுப்பினரின் சுரம் நீடித்து நிற்கும்.

க$^{3}$மளசிரம் ''கிளம்புவதற்குத் தாமதம்''

க$^{3}$மனக்ருச்ச$^{2}$ரம் ''கிளம்புவதற்கு இடையூறு''

**6.2.7** பதே$^{3}$ அபதே$^{3}$ஸே$^{1}$

'சாக்கு' (அபதே3ஸே1) என்ற பொருளைச் சுட்டும்போது, 'பத3' என்ற சொல்லை இரண்டாவது உறுப்பினராகக் கொண்ட தத்புருஷத் தொகையின் முதலுறுப்பினரின் சுரம் நீடித்து நிற்கும்.
மூத்ரபதே3ன ப்ரஸ்தி2த:, உச்சாரபதே3ன ப்ரஸ்தி2த:
ஆனால் விஷ்ணுபத3ம் ''சாக்கு' சுட்ட வில்லை)

**6.2.8** நிவாதே வாதத்ராணே
நிவாத ''காற்றுக்குப் பாதுகாவலான இடம்'' என்ற சொல் இரண்டாவது உறுப்பினராக அமையும் தத்புருஷத் தொகை, 'காற்றிலிருந்து பாதுகாத்தல்' என்ற பொருளைச் சுட்டுமானால் அத்தொகையின் முதலுறுப்பினரின் சுரம் நீடித்து நிற்கும்.
குடி1நிவாதம் குட்1யேன நிவாதம்.
''காற்றிலிருந்து பாதுகாப்பளிக்கும் ஒரேயிடமாவது குடிசை''
ஆனால் ராஜநிவாதே வஸதி ''அவன் அரசனின் பாதுகாப்பில் வசிக்கிறான்''
ஸுக2ம் மாத்ருநி வாதம் ''தாயின் பாதுகாப்பு இன்பமானது''

**6.2.9** ஸ1ாரதே3 அனார்தவே
'ஸ1ாரத3' என்ற சொல்லை இரண்டாவது உறுப்பினராகக் கொண்ட தத்புருஷத் தொகை ஸ1ரத்ருது என்ற பொருளைச் சுட்டாமல் அமையும்போது, அத்தொகையின் முதலுறுப்பினரின் சுரம் நீடித்து நிற்கும்.
ரஜ்ஜு ஸ1ாரத3முத3கம் 'கயிற்றைக் கொண்டு புதிதாக இறைக்கப்பட்ட தண்ணீர்''
த்3ருஷத் ஸ1ாரத3ா: ஸக்தவ: ''மாவு மில்லில் புதிதாக அரைக்கப்பட்ட சத்து மாவு''
ஆனால் பரமஸ1ாரத3ம் – ஸரத்3ரு1துவில் உண்டான புல் முதலியவைகள்''

**6.2.10** அத்4வர்யு கஷாயயோர் ஜாதௌ
அத்4வர்யு அல்லது கஷாய என்ற சொற்கள் இரண்டாவது உறுப்பினராக அமையும் தத்புருஷத் தொகை ஓரினம் என்ற பொருளைச் சுட்டும்போது, அத்தொகையின் முதலுறுப்பினர் சுரம் நீடித்து நிற்கும்.
ப்ராச்யாத்4வர்யு: ''கட ஸாகாவைச் சேர்ந்த புரோகிதரின் பெயர்''
ஸர்பிமண்டகஷாயம்–உருக்கிய வெண்ணெயின் கசடிலிருந்து தயாரிக்கப்பட்ட கஷாயம்''
ஆனால் பரமாத்4வர்யு, பரமகஷாய

**6.2.11** ஸத்3ருஸ1 ப்ரதிரூபஸோ: ஸாத்3ரு1ஸ்யே
'அதையொத்தது' என்ற பொருளைச் சுட்டும் தத்புருஷத் தொகையில் ஸத்3ரு1ஸ 'ஒப்பான' அல்லது ப்ரதிரூப ''ஒற்றுமை, உவமை, பிரதிபிம்பம்'' என்ற சொற்கள் இரண்டாவது உறுப்பினராக அமையும்போது, அத்தொகையின் முதலுறுப்பினரின் சுரம் நீடித்து நிற்கும்.

பித்ருஸத்3ரு'ஸ: "தகப்பனாரையொத்த"
மாத்ரு ப்ரதிரூப– "தாயின் உருவம்" ஆனால்
உத்தம ஸத்3ரு'ஸ் – 'மிகச்சிறந்த ஒற்றுமை'

**6.2.12** த்3விகெ3ள ப்ரமாணே
அளவைச் சுட்டும் தத்புருஷத் தொகையின் இரண்டாவது உறுப்பினர் த்3விகு3 'தொகையாக அமையும்போது, அத்தத்புருஷத் தொகையின் முதலுறுப்பினர் தனது மூல சுரத்தை நீடித்து வைத்துக் கொள்ளும்.
ப்ராச்ய ஸப்த ஸம: 'கிழக்குத் தேசத்தைச் சேர்ந்த ஏழு வயதுப்பையன்"
ஸப்த – ஸம + மாத்ரச் (5.2.37) = ஸப்த + ஸம + ϕ "ஏழு வயதான" ப்ராச்யஸ்'ச
அஸெள ஸப்தஸமாஸ்' ச
க3ாந்த4ாரி ஸப்தஸம:

**6.2.13** க3ந்தவ்ய பண்யம் வாணிஜே
வாணிஜ 'வியாபாரி' என்ற சொல் இரண்டாவது உறுப்பினராக நிற்கும் தத்புருஷத் தொகை 'போய்ச் சேர வேண்டிய இடம்" (கந்தவ்ய) அல்லது 'விற்க வேண்டிய பொருள்' (பண்யம்) என்ற பொருளைச் சுட்டுமானால் அத்தொகையின் முதலுறுப்பினரின் மூல சுரம் நீடித்து நிற்கும்.
மத்3ரவாணிஜ: 'மத்ர தேசத்திற்குப் போய் வியாபாரஞ் செய்யும் வியாபாரி'
காஸ்'மீரவாணிஜ:
பண்ய – கே3ா வாணிஜ: 'மாட்டு வியாபாரி'
அஸ்'வவாணிஜ: 'குதிரை வியாபாரி'

**6.2.14** மாத்ரோபக்3ஞோபக்ரமச்ச2ாயே நபும்ஸகே:
மாத்ரா 'அளவு', உபக்3ஞா "கண்டுபிடிப்பு", உபக்ரம 'தொடங்குதல்', ச2ாயா 'நிழல்' என்ற சொற்கள் இரண்டாவது உறுப்பினராக அமையும் தத்புருஷத் தொகையின் முதலுறுப்பினரின் மூலசுரம் நீடித்து நிற்கும்.

1) பி4க்ஷாமாத்ரம் 'பிச்சைக்குச் சமமான எடை'
2) பாணின உபக்3ஞம்

    பணின் + அண் = பாணின. 3.1.3இன்படி 'பாணின'வின் இறுதியசை உதாத்தம் பெறும். ஆகவே பாணினோபக்3 ஞம்காலகம் வ்யாகரணம்

3) ஆட்யோபக்ரமம் ப்ராஸாத3ம்

    செல்வந்தனால் தொடங்கப்பட்ட மாளிகை

4) இக்ஷுச்ச2ாயம் – கரும்பினால் ஏற்பட்ட நிழல்

**6.2.15** ஸுக2ப்ரியயோர்ஹிதே
ஸுக2 'மகிழ்ச்சி', ப்ரிய 'இன்பமாக' என்ற சொற்கள் இரண்டாவ து உறுப்பினராக அமையும் தத்புருஷத்தொகை 'அனுகூலமான' (ஹி த) என்ற

பொருளைச் சுட்டும்போது அத்தொகையின் முதலுறுப்பினரின் மூலசுரம் நீடித்து நிற்கும்.

க$^{3}$மனஸுக$^{2}$ம் 'போவதின் மகிழ்ச்சி'

க$^{3}$மனப்ரியம் 'போவதற்கு அனுகூலமான'

ஆனால் பரமஸுக$^{2}$ம், பரம்ப்ரியம்

**6.2.16** ப்ரீதௌ ச

ஸுக$^{2}$, ப்ரிய என்ற சொற்கள் இரண்டாவது உறுப்பினராக அமையும் தத்புருஷத் தொகையின் முதலுறுப்பினரின் மூலசுரம், அத்தொகை 'மகிழ்ச்சி' இன்பம் என்ற பொருளைச் சுட்டும்போது, நீடித்து நிற்கும். ப்$^{3}$ராஹ்மணஸுக$^{2}$ம் பாயஸம் ''பிராம்மணனுக்கு மகிழ்ச்சியளிக்கும் பாயசம்''. கன்யாப்ரிய: ம்ருத$^{3}$ங்க$^{3}$: ''பெண்ணுக்குப் பிடித்தமான மிருதங்கம்'' ஸுக$^{2}$, ப்ரிய, ப்ரீதி எல்லாமே ஒரே பொருளைச் சுட்டும் சொற்கள்தான், ஆயினும் அதன் மிகுதியைச் சுட்டுவதற்காக, 'ப்ரீதி' என்ற சொல்லைத் தனியாகக் கூறப்பட்டிருக்கிறது. ஆனால் ராஜஸுக$^{2}$ம் 'அரசின் நன்மை', ராஜப்ரியம்

**6.2.17** ஸ்வம் ஸ்வாமினி

ஸ்வாமின் 'சொந்தக்காரன்' என்ற பொருளைச் சுட்டும் தத்புருஷத் தொகையின் இரண்டாவது உறுப்பினர் ஸ்வம் 'சொத்து' என்றமையும்போது, அத்தொகையின் மூலசுரம் நீடித்து நிற்கும்.

கோ$^{3}$ஸ்வாமின் 'மாட்டின் சொந்தக்காரன்'

அஸ்$^{1}$வஸ்வாமின் 'குதிரையின் சொந்தக்காரன்' ஆனால் பரமஸ்வாமின் 'முதல் சொந்தக்காரன்'

**6.2.18** பத்யாவைஸ்$^{1}$வர்யே

பதி 'சொந்தக்காரன், தலைவன்' என்ற சொல் இரண்டாவது உறுப்பினராக நிற்கும் தத்புருஷத் தொகை 'ஆள்பவன், தலைவன்' என்ற பொருளைச் சுட்டும்போது அத்தொகையின் முதலுறுப்பினர் தனது மூல சுரத்தை நீடித்து வைத்துக் கொள்ளும்.

க்$^{3}$ருஹபதி 'வீட்டின் தலைவன்'

ஸேனாபதி 'ராணுவத் தலைவன்'

நரபதி, ந்ரு பதி 'அரசன், மனிதர்களை ஆள்பவன்' ஆனால் வ்ருஷலீபதி 'விருஷலியின் கணவன்'

**6.2.19** நபூ$^{4}$ வாக்சித்$^{3}$தி$^{3}$தி$^{4}$ஷு

ஒரு தத்புருஷத் தொகையில் முதலுறுப்பினர் பூ$^{4}$ 'பூமி', வாக் 'பேச்சு', சித் 'சிந்தனை', தி$^{3}$தி$^{4}$ஷூ 'மறுமணம் செய்து கொண்ட கைம்பெண்' என்ற சொற்களாகவும் இரண்டாவது உறுப்பினர் 'பதி' என்ற சொல்லாகவும்

அமைந்தால் முதலுறுப்பினரின் மூல சுரம் நீடித்து நிற்காது.
பூ$^{4}$பதி 'அரசன் பூமியையாள்பவன்'
வாக்பதி 'பேச்சை ஆள்பவன்'
சித்பதி 'எண்ணங்களைக் கட்டுப்படுத்துபவன்'
தி$^{3}$தி$^{4}$ஷுபதி 'மறுமணம் செய்து கொண்ட கைம்பெண்ணின் கணவன்'

**6.2.20** வா பு$^{4}$வனம்
'பதி'யை இரண்டாவது உறுப்பினராகவும், பு$^{4}$வனம் 'பூமி' என்ற சொல் முதலுறுப்பினராகவும் நிற்கும் தத்புருஷத் தொகையின் முத லுறுப்பினரின் மூல சுரம் விருப்பாக நீடிக்கும்.
பு$^{4}$வனபதி: அல்லது பு$^{4}$வனபதி: 'அரசன்',

**6.2.21** ஆஸ$^{1}$ங்கா ப$^{3}$ாத$^{4}$னேதீ$^{3}$யஸ்ஸுஸம்ப$^{4}$ாவனே
ஆஸ$^{1}$ங்கா 'பயம்', ஆப$^{4}$ாத$^{4}$ 'இடையூறு, தடங்கல்', நேதீ$^{3}$யஸ் 'மிக அருகில்' என்ற சொற்கள் இரண்டாவது உறுப்பினராக அமையும் தத்புருஷத் தொகை என்ற பொருளைச் சுட்டுமானால், அத்தொகையின் முதலுறுப்பினரி ன் சுரம் நீடித்து நிற்கும்.
க$^{3}$மனாஸங்கா 'போவதற்குப் பயம்'
க$^{3}$மனா ப$^{3}$ாத$^{4}$ம் 'போவதற்குத் தடங்கல் அல்லது இடையூறு'
க$^{3}$மன நேதீ$^{3}$யஸ் 'வெகு விரைவில் பயணம்'

**6.2.22** பூர்வே பூ$^{4}$தபூர்வே
பூர்வ 'முன் சென்ற' என்ற சொல் இரண்டாவது உறுப்பினராக அமைந்த தத்புருஷத் தொகை 'இதற்கு முன் நிகழ்ந்தது' என்ற பொருளைச் சுட்டும்போது, அத்தொகையின் முதலுறுப்பினரின் மூல சுரம் நீடித்து நிற்கும்.
ஆட்$^{4}$ய பூர்வ: 'முன்பு செல்வந்தனாக இருந்தவன்',
த$^{3}$ர்ஸ்னீய பூர்வ: 'முன்பு அழகாக இருந்தவன்'

**6.2.23** ஸநீட$^{4}$ ஸமர்யாத$^{3}$ ஸவேஸ$^{1}$ ஸதே$^{3}$ஸே$^{1}$ஷு
ஸாமீப்யே ஸவித$^{4}$, ஸநீட$^{4}$, ஸமர்யாத$^{3}$, ஸவேஸ$^{1}$, ஸதே$^{3}$ஸ$^{1}$
ஆகியவைகள் இரண்டாவது உறுப்பினராக அமையும் தத்புருஷத் தொகையின் முதலுறுப்பினரின் மூல சுரம் அத்தொகை 'அண்மை' என்ற பொருளைச் சுட்டுமானால் நீடித்து நிற்கும்.
மத்$^{3}$ர ஸவித$^{4}$ம், மத்$^{3}$ர ஸநீட$^{4}$ம்,
மத்$^{3}$ர ஸமர்யாதம், மத்$^{3}$ரஸவேஸ$^{1}$ம், மத்$^{3}$ர ஸதே$^{3}$ஸம்
'மத்$^{3}$ர தேசத்துக்கு அருகில்''
ஆனால் ஸமர்யாதம் க்ஷேத்ரம் ''எல்லையுள்ள வயல்'';
தே$^{3}$வத$^{3}$த்த ஸமர்யாத$^{3}$ம் ஒரு எல்லையுடைய தேவதத்தனின் வயல்

**6.2.24** விஸ்பஷ்ட$^{1}$ாதீனி குணவசனேஷு

அடைச் சொல்லுக்கு முன் நிற்கும் 'விஸ்பஷ்ட 'தெளிவு' முதலிய சொற்கள் தனது மூல சுரத்தை (ஒரு தொகையில்) நீடித்து வைத்துக் கொள்ளும்.
விஸ்பஷ்ட'கடு'கம்
விசித்ர லவணம்
விஸ்படிட, விசித்ர, வ்யக்த, ஸம்பன்ன, கடு, பண்டித, குஸ$^{1}$ல, சபல, நிபுண ஆகியவைகள் விஸ்பஷ்ட வகுப்பைச் சேர்ந்தவை.

**6.2.25** ஸ்ர ஜ்ய அவம கன் பாபவத்ஸு ப$^{4}$ாவே கர்மத$^{4}$ாரயே

ஸ்$^{1}$ர (5.3.60), ஜ்ய (5.3.61) அவம, கன் (5.3.64) ஆகியவைகளிலிருந்து ஆக்கப்பட்ட சொற்கள் அல்லது பாப 'கெட்ட' என்ற சொல், ஆகியவைகள் இரண்டாவது உறுப்பினராகவும், தொழிற் பெயரை முதலுறுப்பினராகவும் கொண்ட, கர்மதாரயத்தொகையின் முதலுறுப்பினரின் மூல சுரம்நீடித்து நிற்கும்.
க$^{3}$மன ஸ்$^{1}$ரேஷ்ட$^{2}$, க$^{3}$மனஸ்$^{1}$ரேயஸ், 'சிறந்த புறப்பாடு'
க$^{3}$மன ஜ்யேஷ்ட$^{2}$, க$^{3}$மன ஜ்யாயஸ் 'சிறந்த புறப்பாடு';
க$^{3}$மனாவம 'இறுதி புறப்பாடு'; க$^{3}$மன கனிஷ்ட$^{2}$,
க$^{3}$மனகனீயஸ் 'குறுகிய புறப்பாடு'
க$^{3}$மன பாபிஷ்ட$^{2}$, க$^{3}$மன பாபீயஸ்

**6.2.26** குமாரஸ்$^{1}$ ச

குமார 'இளைஞன்' என்ற சொல் முதலுறுப்பினராக அமையும் கர்மத$^{4}$ாரயத் தொகையில், குமார' தனது மூலசுரத்தை நீடித்து நிற்க வைக்கும்.
குமாரீ ஸ்$^{1}$ரமணா = குமார + ஙீப் + ஸ்$^{1}$ரமணா =
குமார் $\phi$ + ஈ + ஸ்$^{1}$ரமணா (2.1.70; 6.3.34) =
இளவயதுப் பெண் துறவீ

**6.2.27** ஆதி$^{3}$: ப்ரத்யேனஸி

ப்ரத்யேனஸ் 'மிகவும் நெருங்கிய வாரிசு (இறந்தவரின்)' என்ற செ ால் இரண்டாவது உறுப்பினராக அமையும் கர்ம த$^{4}$ாரயத் தொகையின் முதலுறுப்பினரின் (குமார) முதலசை உதாத்தம் பெறும். கு மாரப்ரத்யேனஸ் "இள வயது வாரிசு"
(இறந்துபோன தந்தையின் கடனையடைக்கும் பொறுப்பு உள்ளவன்)

**6.2.28** பூகே$^{3}$ஷ்வன்யதரஸ்யாம்

மனிதர்களின் குழு (பூக$^{3}$) என்ற பொருளைச் சுட்டும் சொற்கள் இரண்டாவது உறுப்பினராக அமையும் கர்மதாரயத் தொகையின் முதலுறுப்பினராக 'குமார' என்ற சொல்லின் முதலசை விருப்பாக உதாத்தம் பெறும்.
குமாரசாதக அல்லது குமார சாதக 'சாதகனின் தலைமையில் கூடிய குழு'
பன்மை:– சாதக + ஞ்ய (5.3.112) + ஜஸ் = சாதக $\phi$ + ஜஸ் (2.4.62) = சாதகா:

6.1.223 விதிக்கப்பட்ட விதியையையும் விருப்பாகப் பயன்படுத்த இயலுமென்பதை இது சுட்டுகிறது, ஆகவே குமார சாதகா:

**6.2.29** இக$^{3}$ந்த காலகபால ப$^{4}$க$^{3}$ால ஸ'ராவேஷு த்$^{3}$விகெ$^{3}$ள

'இக்' (இ,உ,(ரு,ல்) பிரத்யாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரெழுத்தில் முடியுஞ் சொற்கள், காலத்தைச் சுட்டும் சொற்கள் (கால), கபால 'பானை', ப$^{4}$க$^{3}$ால 'மண்டையோடு', ஸ'ராவ 'தட்டு' ஆகிய சொற்கள் இரண்டாவது உறுப்பினராக அமையும் து$^{3}$விகு$^{3}$ (எண்ணுத் தொகை) தொகையின் முதலுறுப்பினரின் சுரம் நீடித்து நிற்கும்.

பஞ்சாரத்னி ''ஐந்து முழு அளவுள்ள''

பஞ்சமாஸ்ய: 'ஐந்து மாதவயதுள்ள'

பஞ்ச கபால: 'ஐந்து பானைகளில் தயாரித்த'

பஞ்ச ப$^{4}$க$^{3}$ால: 'ஐந்து மண்டையோட்டில் தயாரித்த'

பஞ்ச ஸ'ராவ: 'ஐந்து தட்டுக்களில் தயாரித்த'

**6.2.30** ப$^{3}$ஹ்வன்யதரஸ்யாம்

'இக்' பிரத்தியாஹாரத்தின் ஒருயிரெழுத்தில் முடியுஞ் சொற்கள், காலத்தைச் சுட்டுஞ் சொற்கள், கபால, ப$^{4}$க$^{3}$ால, ஸ'ராவ ஆகியவைகள் இரண்டாவது உறுப்பினராக அமையும் துவிகுத் தொகையில் , ப$^{3}$ஹு என்ற சொல் முதலுறுப்பினராக நிற்கும் போது அதன் மூல சுரம் விருப்பாக நீடித்து நிற்கும்.

ப$^{3}$ஹ்வரத்னி:, ப$^{3}$ஹ்வரத்னி:

ப$^{3}$ஹுமாஸ்ய:, ப$^{3}$ஹுமாஸ்ய

ப$^{3}$ஹு கபால, ப$^{3}$ஹுகபால

ப$^{3}$ஹு ப$^{4}$க$^{3}$ால, ப$^{3}$ஹு ப$^{4}$க$^{3}$ால

ப$^{3}$ஹு ஸ'ராவ, ப$^{3}$ஹுஸ'ராவ

**6.2.31** தி$^{3}$ஷ்டி விதஸ்த்யோஸ்' ச

தி$^{3}$ஷ்டி, விதஸ்தி ''நீளத்தைச் சுட்டும் அளவுகள்'' ஆகிய சொற்கள் இரண்டாவது உறுப்பினராகவமையும் துவிகுத் தொகையின் முதலுறுப் பினரின் மூல சுரம் விருப்பாக நீடித்து நிற்கும்

பஞ்சதி$^{3}$ஷ்டி, பஞ்சதி$^{3}$ஷ்டி

பஞ்ச விதஸ்தி, பஞ்சவிதஸ்தி

**6.2.32** ஸப்தமீ ஸித்$^{3}$த$^{4}$ஸு'ஷ்க பக்ல ப$^{3}$ந்தேஷ்வ

காலத்காலத்தைச் சுட்டும் சொற்களைத் தவிர்த்த மற்ற ஏழாம் வேற்றுமைச் சொற்கள் (ஸப்தமீ) முதலுறுப்பினராகவும், ஸித்$^{3}$த$^{4}$ 'தயாரிக்கப்பட்ட' ஸுஷ்க 'உலர்த்திய' பக்வ 'சமைத்த' ப$^{3}$ந்த$^{4}$ 'கட்டிய' ஆகியவைகள் இரண்டாவது உறுப்பினராகவும் நிற்கும் ஒரு தொகை தனது முதலுறுப்பினரின் மூல சுரத்தைத் தக்க வைத்துக் கொள்ளும்

ஸாங்காஸ்யஸித்[3]த[4]: "ஸாங்காஸ்யத்தில் தயாரிக்கப்பட்ட"
ஆதபஸுஷ்க: "வெய்யிலில் உலர்த்திய"; ப்[4]ராஷ்ட்ரபக்வ:
"இரும்புச் சட்டியில் சமைத்த"; சக்ர ப[3]ந்த[4]:
"சக்கரத்தில் கட்டப்பட்ட"
நித[4]னஸுஷ்க:; கும்பீ[4] பக்வ:, சாரக [3]பந்த[4]
6.2.1இல் கூறப்பட்ட 7ஆம் வேற்றுமைத் தத்புருஷத்
தொகையின் சுரத்தை, 'க்ருத்' ஒட்டின் சுரத்தை விதிக்கும் 6.2.144 தடை செய்கிறது. இச்சூத்திரம் 'க்ருத்' ஒட்டு தொடர்பான சுரத்தை விதிக்கும் 6.2.144க்கு தடை விதித்து 7ஆம் வேற்றுமைத் தத்புஷத் தொகைக்கு 'க்ருத்' ஒட்டால் ஆக்கப்பட்ட சொற்களோடு வரும்போதும் அதே சுரம் பெற வேண்டுமென்று விதிக்கிறது.

<u>**6.2.33**</u> பரி ப்ரத்யுபாபா வர்ஜ்யமானாஹோராத்ராவயவேஷு
பரி, ப்ரதி, உப, அப ஆகிய இடைச் சொற்கள் முதலுறுப்பினராகவும், தவிர்க்கப்படவேண்டியவையென்ற பொருளைச் சுட்டுஞ் சொற்கள் (வர்ஜ்யமான) அல்லது பகல் அல்லது இரவின் பகுதிகள் (அஹோராத்ராவயவேஷு) ஆகியவைகள் இரண்டாவது உறுப்பினராகவும் நிற்கும் தொகைகளில், முதலுறுப்பினரினராகவும்—நிற்கும் மூல சுரம் நீடித்து நிற்கும்.
பரித்ரிக[3]ர்தம்/அபத்ரிக[3]ர்தம் வ்ருஷ்டோ தே[3]வ:
"த்ரிகர்த்தத்தை விட்டு விட்டு மற்ற இடங்களில் மழை பெய்தது"
ப்ரதிபூர்வாஹ்ணம் "ஒவ்வொரு முற்பகலிலும்;"
உபபூர்வாஹ்ணம் "பிற்பகலுக்கருகில்"
ப்ரதிபூர்வராத்ரம் "ஒவ்வொரு மாலையிலும்"
தத்புருஷம், பஹுவரீஹித் தொகைகளில், பரி, ப்ரதி ஆகியவைகள் முதலுறுப்பினராக அமைவதாலேயே முன் சூத்திரங்களின்படி தனது மூல சுரத்தை நீடித்து வைத்துக் கொண்டிருக்கும்.
ஆகையால், இச்சூத்திரம் அவ்யயிபாவத் தொகைகளிலும், இத்தகைய மூலசுரம் நீடித்து நிற்குமென்பதைச் சுட்டுகிறது என்று கருதப்படும். தவிர்த்தல் (வர்ஜன) என்ற பொருளை, அப, பரி என்ற இரண்டும் தான் சுட்டும் ஆகையால், இவைகளோடு நிற்கும் இரண்டாவது உறுப்பினர்தான் 'தவிர்த்தல்' என்ற பொருளைச் சுட் டுவதாக அமையும். ப்ரதி, உப என்ற இரண்டும் இப்பொருளைச் சுட்டாது. பரி, அப என்பவைகளுடன் பகல் அல்லது இரவின் பகுதிகள் இரண்டாவது உறுப்பினராக அமையும்போதும் 'தவிர்த்தல்' என்ற பொருளைச் சுட்டுவதாகக் கொள்ள வேண்டும்.
பரிவனம் "காட்டைச் சுற்றி" (ஆனால் 'காட்டில்' என்ற பொருளில் லல்ல) என்ற தொகையின் இறுதியசை உதாத்தம் பெறும் (6.2.178). சூ. 6.2.178, இந்த பொது விதி, ஒரு தொகையில் வரும். 'வன' என்ற சொல்லின் சுரம் பற்றிய சிறப்பு விதிகள் எல்லாவற்றையுமே தடை செய்யும்.

**6.2.34** ராஜன்ய ப$^3$ஹுவசன த்$^3$வந்த்$^3$வே அந்த$^4$க வ்ருஷ்ணிஷு

பன்மையில் குறிக்கப்பட்ட (ப$^3$ஹுவசன) போர்வீரர்களின் (ராஜன்ய) பெயர்களைக் கொண்டு ஆக்கப்பட்ட துவந்துவத் தொகையில், இரண்டாவது உறுப்பினர் அந்த$^4$க அல்லது வ்ருஷ்ணிகளைச் சுட்டும்போது அத்தொகையின் முதலுறுப்பினரின் மூல சுரம் நீடித்து நிற்கும்.

ஸ்$^1$வா$^2$ன்க சைத்ரகரோத$^4$கா: "மூன்று அந்தகர்களின் குலத்தைச் சேர்ந்தவர்களின் பெயர்கள்", ஸினி வாஸுதே$^3$வா: "இரண்டு வ்ருஷணிகளின் குலத்தைச் சேர்ந்தவர்களில் பெயர்கள்"

ஆனால் த்$^3$வைப ஹைமாவனா: "அந்தக வ்ருஷ்ணி குலத்தைச் சேர்ந்தவர்கள் ஆனால் போர்வீரர்களல்ல".

ஸங்கர்ஷ்ய வாஸுதே$^3$வெள (இருமை)

வ்ருஷ்ணீ குமாரா: (தத்புருஷம்)

குரு பாஞ்சாலா: (அந்தக வ்ருஷ்ணியல்ல)

**6.2.35** ஸங்க்$^2$யா

எண்ணுப் பெயர் (ஸங்க்$^2$யா) முதலுறுப்பினராக அமையும் துவந்துவத் தொகையின் முதலுறுப்பினரின் மூல சுரம் நீடித்து நிற்கும்.

ஏகாத$^3$ஸ '11'; த்$^3$வாத$^3$ஸ '12'

**6.2.36** ஆசார்யோபஸர்ஜனஸ் சந்தேவாஸு

ஆசிரியரின் பெயரிலிருந்து ஆக்கப்பட்ட மாணவர்களின் பெயர்கள் உறுப்பினர்களாக அமையும் துவந்துவத் தொகையின் முதலுறுப்பினரின் மூல சுரம் நீடித்து நிற்கும்.

ஆபிஸலபாணினீயா: "ஆபிஸலீ பாணினி" (ஆகியவர்களின்) மாணவர்கள்"

**6.2.37** கார்த கௌஜபாத$^3$ய்ஸ்$^1$ ச

கார்தகௌஜளெ "க்ருத, குஜப என்பவர்களின் வழித்தோன்றல்" என்ற தொகையில் தொடங்கும் துவந்துவத் தொகைகளின் முதலுறுப்பினரின் மூல சுரம் நீடித்து நிற்கும்.

க்ருதஸ்ய அபத்யம் + குஜபஸ்ய +

அபத்யம் + க்ருத + அஸ் + குஜப + அண் + ஒள (4.1.114) = கார்த கௌஜபௌ

**6.2.38** மஹான் வ்ரீஹி அபராஹ்ண க்$^3$ருஷ்டீஷ்வாஸ ஜாப$^3$ால ப$^4$ார ப$^4$ாரத ஹைவிஹில ரௌரவ ப்ரவ்ருத்$^3$தே$^4$ஷு

வ்ரீஹி 'அரிசி', அபாராஹ்ண 'பிற்பகல்', க்ருஷ்டி 'முதல் முதலாகக் கன்று ஈன்ற பசு', இஷ்வாஸ 'வில்லாளி',

ஜாபா$^3$ல, ப$^4$ார 'பளு', ப$^4$ாரத 'பரதனின் வமிசத்தில் பிறந்தவன்', ஹைலிஹில 'உல்லாசமான பெண்', ரௌரவ 'ஒரு நரகத்தின் பெயர், ப்ரவ்ருத்$^3$த$^4$ "வளர்ச்சியடைந்த" ஆகியவைகள் இரண்டாவது உறுப்பினராகவும் மஹத்

'பெரிய' என்ற சொல் முதலுறுப்பினராகவும் கொண்ட தொகைகளின் முதலுறுப்பினரின் மூலசுரம் நீடித்து நிற்கும்
மஹாவ்ரீஹி, 'பெரிய அரிசி' மஹாபராஹ்ண, மஹா3க்ருஷ்டி
மஹேஷ்வாஸ, மஹாஜா3பால;, மஹாபா4ர:, மஹாபா3ரத: மஹாஹைலிஹில, மஹாரௌரவ, மஹாப்ரவ்ருத்3த4

**6.2.39** க்ஷு ல்லகஸ்'ச வைஸ்'வ தே3வே
'மஹத்' அல்லது க்ஷுல்லக, "சிறிய முக்கியமற்ற" என்ற சொற்கள் முதலுறுப்பினராகவும் வைஸ்வதேவ" விஸ்வே தேவர்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட" என்ற சொல் இரண்டாவது உறுப்பினராகவும் கொண்ட தொகைகளின் முதலுறுப்பினரின் மூலசுரம் நீடித்து நிற்கும்.
க்ஷுல்லக வைஸ்'வ தே3வம், "விஸ்வே தேவர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்ட சிறிய பணி". மஹாவைஸ்'வதே3வம்

**6.2.40** உஷ்ட்ர: ஸாதி3வாம்யோ:
ஸாதின் "சவாரி செய்பவன்", வாமீ 'பெண்குதிரை' என்பவைகள் இரண்டாவது உறுப்பினராகவும், உஷ்ட்ர 'ஒட்டகம்' என்ற சொல் முதலுறுப்பினராகவும் அமையும் ஒரு தொகையின் முதலுறுப்பினரின் மூல சுரம் நீடித்து நிற்கும்.
உஷ்ட்ரஸாதி3ன் ஒட்டக சவாரி செய்பவர்", உஷ்ட்ரவாமீ "பெண் ஒட்டகம்"

**6.2.41** கெ3ள: ஸாத3 ஸாதி3ஸாரதி2ஷு
ஸாத3, ஸாதி3ன், ஸாரதி3 "தேரோட்டி" என்பவைகள் இரண்டாவது உறுப்பினராகவும், கோ3 'பசு, காளை' முதலுறுப்பினராகவும் கொண்ட தொகையில் முதலுறுப்பினரின் மூல சுரம் நீடித்து நிற்கும்.
கே3ாஸாத3:, கே3ாஸாதி3:, "மாட்டுச் சவாரி செய்பவர்" கே3ாஸாரதி2

**6.2.42** குரு க3ார்ஹ பத ரிக்ர கு3ர்வஸூத ஜரத்யஸ்'லீல த்3ருட4
ரூபா பாரேவட3வா தைத்தில கத்3ரூ: பண்யகம்ப3ல:
த3ாஸீப4ராணாம் ச
கீழ்க்கண்ட தொகைகளின் முதலுறுப்பினர் தனது மூல சுரத்தை நீடித்து நிற்க வைக்கும்:
1) குரு க3ார்ஹ பத, (2) ரிக்தகு3ரு அல்லது ரிக்தகு3ரு (3) அஸூதஜரதீ (4) அஸ்'லீலத்'ருட4 ரூபா (5) பாரேவட3வா (6) தைத்திலகத்3ரூ (7) பண்யகம்ப3ல (8) த3ாஸீப4ார முதலிய தொகைகள்

வா: குரு வ்ருஜ்யோர் கா3ர்ஹபத இதி வக்தவ்யம்
வ்ருஜி கா3ர்ஹபத்யம் என்ற தொகையிலும் அவ்வாறேயாகும்.

வா: பண்ய கம்ப3ல: ஸம்க்3ஞாயாமிதி வக்தவ்யம்

'பண்யகம்ப3ல:' என்ற தொகை ஒரு பெயரைச் சுட்டும்போது தான் முதலுறுப்பினரின் மூல சுரம் நீடித்து நிற்கும்.

**6.2.43** சதுர்த்2 தீ2த3ர்தே2

நான்காம் வேற்றுமைச் சொல் முதலுறுப்பினராகவும் 'அதன் (முதலுறுப்பினரின்) பொருட்டு' (தத3ர்தே2) என்ற பொருளைச் சுட்டுஞ் சொல்லை யிரண்டாவது உறுப்பினராகவும் கொண்ட தொகையில் முதலுறுப்பினிரின் மூல சுரம் நீடித்து நிற்கும்.
யூபத3ாரு ''யூபம் செய்வதற்கான மரம்'',
குண்ட3ல ஹிரண்யம்

**6.2.44** அர்தே2

அர்த3 'நோக்கம்' என்ற சொல் இரண்டாவது உறுப்பினராகவும் நான்காம் வேற்றுமைச் சொல் முதலுறுப்பினராகவும் கொண்ட தொகையின் முதலுறுப்பினரின் மூலசுரம் நீடித்து நிற்கும்.
மாத்ரர்த2ம் ''தாயாருக்காக'', தே3வதார்த3ம்
"கடவுளுக்குரிய''

**6.2.45** க்தே ச

நான்காம் வேற்றுமைச் சொல் முதலுறுப்பினராகவும், 'க்த' ஒட்டாலாக்கப்பட்ட சொல் இரண்டாவது உறுப்பினராகவும் அமையும் தொகையில் முதலுறுப்பினரின் மூல சுரம் நீடித்து நிற்கும்.
கே3ாஹிதம் ''மாடுகளுக்கு நன்மை பயக்கும்''
கே3ாரக்ஷிதம்

**6.2.46** கர்மத4ாரயே அனிஷ்ட2ா

'இஷ்ட2ா' என்ற ஸம்க்3ஞாவினால் குறிப்பிடப்படும் ஒட்டுக்களாலாக்கப்படாத (அனிஷ்டா) சொற்கள் 'க்த' ஒட்டுக்களாலாக்கப்பட்ட சொற்களுக்கு முன் நிற்கும் கர்மத4ாரய தொகையின் முதலுறுப்பினரின் மூல சுரம் நீடித்து நிற்கும்.
ஸ்1ரேணிக்ருதா:, பூகீ3க்ருதா:
ஆனால் ஸ்ரேணிக்ருதம் (6.2.144) க்ருதாக்ருதம்

**6.2.47** அஹீனே த்3விதீயா

'பிரிவு' என்ற பொருளைச் சுட்டாமல் அமையும், ஒரு தொகையின் முதலுறுப்பினர் இரண்டாம் வேற்றுமைச் சொல்லாகவும், இரண்டாவது உறுப்பினர் 'க்த' ஒட்டாலாக்கப்பட்ட சொல்லாக வும் அமையும் போது முதலுறுப்பினரின் மூலசுரம் நீடித்து நிற்கும்.
கஷ்டஸ்'ரித:, த்ரிஸ'கல பதித:, க்3ராமக3த:
ஆனால் காந்தாராதீத:, யோஜனாதீத:

வா: த்$^{3}$விதீயானுபஸர்க$^{3}$ம் இதி வக்தவ்யம்

உபசர்க்கத்துடன் சேர்ந்து 'க்த' வரும்போது இவ்விதி செயற்படாது ஸுக$^{2}$ப்ராப்த:, ஸுக$^{3}$மாபன்ன: இது 6.2.144க்கு புறனடை.

**6.2.48** த்ருதீயா கர்மணி

மூன்றாம் வேற்றுமைச் சொல் முதலுறுப்பினராகவும், இரண்டாவது உறுப்பினர் 'க்த' ஒட்டாலாக்கப்பட்டதாகவும், அது செயப்பாட்டு வினையமைப்பாகவும் அமையுமானால், அத்தொகையின் முதலுறுப்பிரின் மூல சுரம் நீடித்து நிற்கும்.

அஹிஹத:, நக$^{3}$நிர்பி$^{3}$ன்ன: ஆனால் ரத$^{2}$யாத: (செயப்பாட்டு வினையல்ல)

**6.2.49** கதிரவந்தர:

'க$^{3}$தி' (1.4.60) வகுப்பைச் சேர்ந்தவொரு சொல் முதலுறுப்பினராகவும் 'க்த' ஒட்டாலாக்கப்பட்ட சொல் இரண்டாவது உறுப்பினராகவும் அமையும் தொகையில், இவ்விரண்டு உறுப்பினர்களும் ஒன்றையொன்று தொடர்ந்து நிற்கும்போது (அனந்தர:) அதாவது இவைபிரண்டுக்குமிடையே வேறு சொல் வராமலமைந்தால் (செயப்பாட்டு வினைப் பொருளிலமையும்)

முதலுறுப்பினரின் மூல சுரம் நீடித்து நிற்கும்.

ப்ரக்ருத: 'தொடங்கப்பட்டது'

ப்ரஹ்ருத:

ஆனால் அப்$^{4}$யுத்$^{3}$த்$^{4}$ருத: ஸமுத$^{3}$ாஹ்ருத: இவைகளில் முதலுறுப்பினர்களை அபி$^{4}$னம்' ஆகியவைகள் தனது மூலசுரத்தை நீடித்து வைத்துக் கொள்ளவில்லை. ஆனால் 'க்த'வாலாக்கப்பட்ட சொற்களுக்கு (க்ருத், ஹ்ருத) முன் நிற்கும் 'க$^{3}$தி' சொல்லான 'உக்' தனது சுரத்தை நீடித்து வைத்துக் கொள்கிறது. இந்த 'உத்' முதலுறுப்பினரல்ல. முதலுறுப்பினராக நிற்கும் 'கதி'

சொற்களைத் தொடர்ந்து 'க்த'வாலாக்கப்பட்ட சொல் நிற்கும் போதுதான் இவ்விதி செயற்படும். ஆனால் இவ்விரண்டுக்குமிடையே வேறொரு 'கதி' சொல் நின்றால், அச்சொல் முதலுறுப்பினராகாவிட்டாலும் தனது சுரத்தை நீடித்து வைத்துக்கொள்ளுமென்பது இச்சூத்திரத்தின் பொருள்.

இது 6.2.144க்குத் தடை விதிக்கிறது.

**6.2.50** தாதெ$^{3}$ள ச நிதி க்ருத்யதௌ

'து' ஒட்டைத் தவிர்த்து 'ந்'ஐ 'இத்'தாகக் கொண்ட 'த'வில் தொடங்கும் 'க்ருத்' ஒட்டிணைத்தாக்கப்பட்ட சொல்லுக்கு முன் நிற்கும் 'க$^{3}$தி' சொல் தனது மூலசுரத்தை நீடித்து வைத்துக் கொள்ளும்.

ப்ர + க்ரு + த்ருந் = ப்ரகர் + த்ரு$^{1}$ = ப்ரகர்தும்

ஆனால் ஆ + க$^{3}$ம் + துன் = ஆக$^{3}$ந்து:

**6.2.51** தவை சாந்தஸ்[1]சயுக[3]பத்

'தவை' ஒட்டில் முடியும் சொல்லுக்கு முன் (3.4.14) நிற்கும் 'கதி' சொல் தனது மூல சுரத்தை நீடித்து நிற்க வைக்கும். அதே நேரத்தில் (யுகபத்) அத்தொகையினிறுதியும் (அந்த:) உதாத்தம் கொண்டதா க அமைய வேண்டும்.

அவ்வேதவை, பரிஸ்தாமிதவை, அபி[4]சாரிதவை.

இது 6.2.139க்குத் தடையாகும். இது 6.1.158க்குப புறனடை.

**6.2.52** அநிக[3]ந்தோஞ்சதௌ வப்ரத்யயே

'இக்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த (இ,உ) ஒரெழுத்தில் முடியாத 'க3தி' வகுப்பைச் சேர்ந்த ஒரு சொல்லை முதலுறுப்பினராகவும், 'வ' ஒட்டுத் (=க்வின்) தொடர்ந்து நிற்கும் 'அஞ்ச்' என்ற சொல் இரண்டாவது உறுப்பினராகவும் அமையும் பொது முதலுறுப்பினர் தனது மூல சுரத்தை நீடித்து நிற்க வைக்கும் ப்ர + அஞ்ச் + க்வின் = ப்ராஞ்ச், பராஞ்ச் ஆனால் ப்ரத்யஞ்ச் (=ப்ரதி + அஞ்ச் + க்வின்); அன்வஞ்சி (அனு + அஞ்ச் + க்வின்)

**6.2.53** ந்யதீ[4] ஈ

'நி (அ)' 'அதி[4]' ஆகிய 'கதி' எனப்படும் சொற்களைத் தொடர்ந்து 'வ' ஒட்டோடு இணைந்து வரும் 'அஞ்ச்' நிற்கும் போது முதலுறுப்பினரின் மூல சுரம் நீடித்து நிற்கும்.

நி + அஞ்ச் + க்வின் = ந்வஞ்ச் 'கீழ் நோக்கி' அத்[4]யஞ்ச்

**6.2.54** ஈஷத[3]ன்யதரஸ்யாம்

'ஈஷத்' முதலுறுப்பினராக நிற்கும்போது அச்சொல்லின் மூல சுரம் விருப்பாக நீடித்து நிற்கும்.

ஈஷத் கட[3]ார: (அ) ஈஷத்கடார:

ஆனால் ஈஷத்[3]பே[4]த[3]ம் முதலியவைகளில் 'க்ருத்' சுரம் கட்டாயமாகும் (6.2.139)

**6.2.55** ஹிரண்ய பரிமாணம் த[4]னே

'த[4]ன' என்ற சொல்லுக்கு முன் "தங்கத்தின் எடை" (ஹிரண்ய பரிமாணம்)யைக் குறிக்குஞ் சொல் நிற்கும்போது, முதலுறுப்பினரின் மூல சுரம் விருப்பாக நீடித்து நிற்கும்.

த்[3]விஸுவர்ணத[4]னம் அல்லது த்[3]விஸு வர்ணத[4]னம் "இரண்டு எடை தங்கத்தைக் கொண்ட செல்வம்"

இது கர்மதாரயத் தொகை த்[3]வௌ ஸுவர்ணௌ பரிமாணமஸ்ய த்[3]விஸுவர்ணம் ததே[4]வ த[4]னம் இது ப[3]ஹுவ்ரீஹியாகவும் கருதப்படும். த்[3]வி ஸுவர்ண "இரண்டு எடை தங்கத்தின் சொந்தக்காரன்"

த்[3]விஸுவர்ணத[4]ன அல்லது த்[3]விஸுவர்ணத[4]ன.

**6.2.56** ப்ரத$^{3}$மோ அசிரோப ஸம்பத்தெள

ப்ரத$^{3}$ம "முதல், சிறந்த" என்ற சொல் முதலுறுப்பினராக நிற்கும் தொகை "சமீபத்தில் பெற்ற" என்ற பொருளைச் சுட்டும் போது, முதலுறுப்பினரின் மூலசுரம் விருப்பாக நீடித்து நிற்கும்.

ப்ரத$^{4}$ம வையாகரண: அல்லது ப்ரத$^{2}$ம வையாகரண:

"இலக்கணம் படிக்கும் தொடக்க நிலை மாணவன்" ஆனால் ப்ரத$^{2}$ம வையாகரண: "சிறந்த இலக்கண நூலாசிரியர்"

**6.2.57** கதர கதமென கர்மதா$^{4}$ரேயே

கர்மதாரயத் தொகையில் முதலுறுப்பினராக நிற்கும் கதர, கதம என்ற சொற்கள் தனது மூலசுரத்தைத் விருப்பாக நீடித்து வைத்துக் கொள்ளும்.

கதர கட$^{2}$: அல்லது கதர கட$^{2}$:

கதமகட$^{2}$: அல்லது கத$^{2}$மகட$^{2}$:

'கர்மதாரய' என்ற சொல் அடுத்த சூத்திரத்திற்காக இங்கேயே பயன்படுத்தியுள்ளது. 'ப்ரதிபத$^{3}$ாக்த'வின்படி 'கதர', 'கதம' ஆகியவைகள் கர்மதாரயமாகத்தான் வரும் (2.1.63)

**6.2.58** ஆர்யோ ப்$^{3}$ராஹ்மணகுமாரயோ:

ப்ராஹ்மண, குமார என்ற சொற்கள் இரண்டாவது உறுப்பினரா கவும் 'ஆர்ய' என்ற சொல் முதலுறுப்பினராகவும் அமையும் கர்மத ாரயத் தொகையில் முதலுறுப்பினர் தனது மூலசுரத்தை விருப்பாக நீடித்து வைத்துக் கொள்ளும்.

ஆர்ய ப்$^{3}$ராஹ்மண: அல்லது ஆர்யப்$^{3}$ராஹ்மண:

ஆர்ய குமார: அல்லது ஆர்யகுமார:

**6.2.59** ராஜா ச

ப்ராஹ்மண அல்லது குமார என்ற சொற்களுக்கு முன் நிற்கும் 'ரா ஜன்' என்ற சொல்லும் விருப்பாகத் தனது மூல சுரத்தை நீடித்து வைத்துக் கொள்ளும்.

ராஜப்$^{3}$ராஹ்மண: அல்லது ராஜப்$^{3}$ராஹ்மண "பிராம்மண அரசன்"

ராஜகுமார அல்லது ராஜகுமார 'அரச குமாரன்'

இது கர்மதாரயத் தொகையில் மட்டுந்தான். அடுத்த சூத்திரத்தில் 'ராஜன்' என்ற சொல் மட்டுந்தான் வரவேண்டும். 'ஆர்ய' அல்ல ஆகையால் இது தனிச் சூத்திரமாக அமைக்கப்பட்டுள்ளது.

**6.2.60** ஷஷ்டீ$^{2}$ ப்ரத்யேனஸி

ப்ரத்யேனஸ் 'அடுத்த வாரிசு' என்ற 'பிரதிநிதி' சொல்லுக்கு முன் நிற்கும் 'ராஜன்' என்ற சொல் ஆறாம் வேற்றுமைச் சொல்லாக அமையும்போது 'ராஜன்' தனது மூல சுரத்தை விருப்பாக நீடித்து வைத்துக்கொள்ளும்.

ராஜப்ரத்யேனஸ் அல்லது ராஜப்ரத்யேனஸ் 'அரசனின் பிரதிநிதி' ஆனால் ராஜப்ரத்யேனஸ் 'அரசனின் வாரிசு'

**6.2.61** க்தே நித்யார்தே

'க்த' ஒட்டினாலாக்கப்பட்ட சொல்லுக்கு முன் நிற்கும் உறுப்பினர் 'எப்போதும், இடைவிடாமல்' என்ற பொருளைச் சுட்டும்போது தனது மூல சுரத்தை விருப்பாக நீடித்து வைத்துக் கொள்ளும்.

நித்யப்ரஹஸித அல்லது நித்ய ப்ரஹஸித 'எப்போதும் சிரித்துக் கொண்டிருக்கும்' ஸதத ப்ரஹஸித அல்லது ஸததப்ரஹஸித ஆனால் முஹூர்த ப்ரஹஸித:

**6.2.62** க்$^{3}$ராம: ஸில்பினி

'க்ராம' என்ற சொல் முதலுறுப்பினராகவும், 'தொழிலாளி' என்ற பொருளைச் சுட்டுஞ் சொல் இரண்டாவது உறுப்பினராகவும் அமையும் தொகையில் முதலுறுப்பினரின் மூல சுரம் விருப்பாக நீடித்து நிற்கும்.

க்$^{3}$ராம நாபித: அல்லது க்$^{3}$ராமநாபித: 'கிராமத்து நாவிதர்' ஆனால் $^{3}$க்ராம ரத்$^{3}$யா கிராமத்தின் தெரு' பரமநாபித:

**6.2.63** ராஜ ச ப்ரஸ$^{1}$ம்ஸாயாம்

'ராஜன்' என்ற சொல்லும், முதலுறுப்பினராக நின்று 'புகழ்ச்சி' என்ற பொருளைச் சுட்டும்போது அச்சொல்லின் முதலுறுப்பினர் தனது மூல சுரத்தை விருப்பாக நீடித்து நிற்க வைக்கும்.

ராஜநாபித: அல்லது ராஜநாபித: 'சிறந்த நாவிதன்' இது கர்மதாரயமாகவோ அல்லது ஆறாம் வேற்றுமைத் தத்புருஷமாகவோ ஆகும்.

**6.2.64** ஆதி$^{3}$ரு த$^{3}$ாத்த:

முதலுறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறும்.

இது ஒரு அதிகார சூத்திரம். இச்சூத்திரத்திலிருந்து சூ. 91 வரை இது அனுவிருத்தியாகும்.

**6.2.65** ஸப்தமீ ஹரிணௌ த$^{4}$ர்ம்யே அஹரணே

ஏழாம் வேற்றுமையுருபுகளில் முடியுஞ் சொற்கள் அல்லது "வரி வசூலிப்பவரின் பெயரைச் சுட்டுஞ் சொற்கள் முதலுறுப்பினராகவும் 'மாட்டுத் தீவனம்' என்ற சொல்லைத் தவிர்த்த, 'சட்டப்படி அல்லது நியாயமான' என்ற பொருளைச் சுட்டுஞ்சொல் இரண்டாவது உறுப்பினராகவும் அமைந்த தொகையில் முதலுறுப்பினரின் முலசை உதாத்தம் பெறும்.

ஸ்தூபே சாணை: (2.1.44; 6.3.9; 10) "ஒரு வரியின் பெயர். சுங்கத்தின் ஒரு பகுதியாக அளிக்கப்படும் சாணைக்கல்"

முகுடகார்ஷாபணம் 'அரசனின் குருடத்திற்கான வரியின் பெயர்"

யாக்$^{3}$ஞிகாஸ்$^{1}$வ 'தனது வரிக்காக அளிக்கப்பட்ட யாகத்தின் குதிரை' வையாகரணஹஸ்தின் 'இலக்கண ஆசிரியருக்களிக்கப்பட்ட யானை' ஆனால் வட$^{3}$வாஹரணம் 'பெண்குதிரைக்களிக்கப்பட்ட தீவனம்.'

**6.2.66** யுக்தே ச

(ஒரு பொருளைப் பார்த்துக் கொள்வதற்கான வேலையில்)
"அமர்த்தப்பட்ட" (யுக்தே) என்ற பொருளைக் குறிக்குஞ் சொல்லுக்கு முன் நிற்கும் உறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறும்.
அஸ்$^{1}$வ ப$^{3}$ல்லவ: 'குதிரைக்காரன்'
கே$^{3}$ாமணிந்த$^{3}$:/ கே$^{3}$ாஸங்க்$^{2}$ய: 'இடையன்'

**6.2.67** விப$^{4}$ாஷா அத்$^{4}$யக்ஷே

அத்$^{4}$யக்ஷ 'மேற்பார்வையாளன்" என்ற சொல்லுக்கு முன் நிற்கும் உறுப்பினரின் முதலசை விருப்பாக உதாத்தம் பெறும்.
அஸ்$^{1}$வாத்$^{4}$யக்ஷ அல்லது அஸ்$^{1}$வாத்$^{4}$யக்ஷ "குதிரைகளின் மேற்பார்வையாளர்"

**6.2.68** பாபே ச ஸி$^{1}$ல்பினி

பாப 'கெட்ட' என்ற சொல் முதலுறுப்பினராகவும், தொழிலாளி (ஸில்பினி) என்ற பொருளைச் சுட்டுஞ் சொல் இரண்டாவது உறுப்பினராகவும் அமையும் தொகையில் முதலுறுப்பினரின் முதலசை விருப்பாக உதாத்தம் பெறும்.
பாபநாபித (அ) பாபநாபித 'திறமையற்ற நாவிதன்'

**6.2.69** கே$^{3}$ாத்ராந்தேவாஸி மாணவ ப்$^{3}$ராஹ்மணேஷு க்ஷேபே

'கோத்ர' ஒட்டுக்களாலாக்கப்பட்ட சொற்கள் அல்லது மாணவர்களின் பெயர்கள் (அந்தேவாஸின்) அல்லது மாணவர்கள் (மாணவ) அல்லது பிராம்மணர்கள் ஆகியவைகளுக்கு முன் நிற்கும் உறுப்பினரின் முதலசை நிந்தனைப் பொருளைச் சுட்டும்போது உதாத்தம் பெறும்.

1) ஜங்க$^{4}$ாவாத்ஸ்ய 'தனது முழங்காலைத் தானமாகக் கொடுப்பேன் என்று பெருமையாகப் பேசும் வத்ஸ்ன் என்பவனின் வழித்தோன்றல்"
பு4ார்யாஸௌஸ்ருத:

2) குமாரீ த$^{3}$ாக்ஷா: 'இளவயதுப் பெண்களை மயக்க விரும்பும் தாக்ஷியின் மாணவர்கள்'; ஓத$^{3}$ன பாணினீயா: "சோறு பெறும் நோக்கத்துடன் பாணினி இலக்கணத்தைப் படிப்பவர்கள்"

3) பி$^{4}$க்ஷா மாணவ–பிட்சை பெறும் நோக்கத்துடன் மாணவனாகச் சேர்ந்தவன்"

4) த$^{3}$ாஸீ ப்$^{4}$ராஹ்மண: 'அடிமைப்பெண்ணிடம் மையல் கொண்ட பிராம்மணன்'

**6.2.70** அங்க$^3$னி மைரேயே

மைரேய 'ஒருவித பானம்' என்ற சொல்லுக்குமுன் நிற்கும் "கல்வையின் கூறு" என்ற பொருளைச் சுட்டும் (சொல் அங்க$^3$னி) (முதலுறுப்பினர்)வின் முதலசை உதாத்தம் பெறும்.

கூ$^3$ட$^3$ மைரேய "வெல்லத்திலிருந்து தயாரிக்கப்பட்ட ஒரு வகை பானம்" மது$^3$மைரேய–'தேனிலிருந்து தயாரிக்கப்பட்ட ஒரு வகை பானம் ஆ னால் பரமமைரேய 'சிறந்த பானம்'

**6.2.71** ப$^4$க்தாக்$^2$யாஸ் தத$^3$ர்தேஷு

உணவின் பெயரைச் சுட்டும் (ப$^4$க்தாக்$^2$யாஸ்) சொல் முதலுறுப்பினராகவும், 'அந்த உணவை வைக்கத் தகுந்த ஒரு பாத்திரம்' என்ற பொருளைச் சுட்டும் சொல் இரண்டாவது உறுப்பினராகவும் அமையும் தொகையின், முதலுறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறும்.

பி4க்ஷாகம்ஸ: 'பிச்சை வாங்கும் கிண்ணம்'; ஸ்ராணாகம்ஸ: "கஞ்சி வைக்கும் பாத்திரம்" ஆனால் ஸமாஸஸாலய: "உண்ணக்கூடிய அரிசி"; பிக்ஷாப்ரிய:

**6.2.72** கே$^3$ா பி$^3$ட$^3$ால ஸிம்ஹ ஸைந்த$^4$வேஷு உபமானே

கே$^3$ா 'மாடு', பி$^3$ட$^3$ால 'பூனை', ஸிம்ஹ 'சிங்கம்', ஸைந்த$^4$வ "சிந்து நாட்டுக்குதிரை" ஆகியவைகள் உவமைச் சொற்களாக மற்றொரு சொல்லுக்கு முன் நிற்கும்போது, முதலுறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறும்.

1) த$^4$ான்யக$^3$வ: 'மாட்டின் உருவத்தைப் போன்று அடுக்கிய தானியம்' (2) பிக்ஷா பி$^3$ட$^3$ால:–'பூனையைப் போன்ற உருவத்தில் அடுக்கிய பிச்சை' (3) த்ருண ஸிம்ஹ: 'சிங்கத்தைப் போன்ற உருவத்தில் அடுக்கிய புல்' (4) ஸ'க்து ஸைந்த$^4$வ: 'குதிரையில் உருவத்தில் அடுக்கிய ஸத்துமாவு'

**6.2.73** அகே ஜீவிகார்தே

'அக' ஒட்டினாலாக்கப்பட்ட சொல்லுக்கு முன் நிற்கும் முதலுறுப்பினரின் முதலசை. சீவனோபாயம் (ஜீவிகார்தே) என்ற பொருளை அத்தொகை சுட்டும்போது, உதாத்தம் பெறும்

த$^3$ந்தலேக$^2$க: 'பல்லுக்குச் சாயமேற்றும் தொழிற் செய்பவன்'

நக$^2$லேக$^2$க:

**6.2.74** ப்ராசாம் க்ரீட$^3$ாயாம்

'அக' ஒட்டில் முடியும், கீழ்த்திசை மக்களின் விளையாட்டைச் சுட்டும் சொல் இரண்டாவது உறுப்பினராக அமையும் தொகையில் முதலுறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறும்.

உத்$^3$த$^3$ாலக புஷ்ப ப$^4$ஞ்ஜிகா, வீரணபுஷ்ப ப்ரசாயிகா

**6.2.75** அணி நியுக்தே
'அண்' ஒட்டில் முடியும் சொல்லை இரண்டாவது உறுப்பினராகக் கொண்ட அவ்வேலையிலமர்த்தப்பட்ட என்ற பொருளைச் (நியுக்தே) சுட்டும் ஒரு தொகையின் முதலுறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறும்.
ச2த்ரத4ார: ''குடை பிடிப்பவர்''
கமண்டு3லுக்3ராஹ: ''கமண்டலத்தைத் தூக்குபவன்''

**6.2.76** ஸில்பிணி சாக்ருஞ:
தொழில் நிபுணன் (ஸில்பிணி) என்ற பொருளைச் சுட்டும் ஒரு தொகையின் (அண் ஒட்டில் முடியும்) இரண்டாவது உறுப்பினர் 'க்ருஞ்' ஒட்டிணைத்து ஆக்கப்படாத சொல்லாக அமையும்போது, அத்தொகையின் முதலுறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறும்.
தந்துவாய: ''நெசவாளி''; துன்னவாய: ''தையற்காரர்''; வாலவாய: ''சிகையலங்கரிப்பவர்'' ஆனால் கும்ப[4]கார: குயவன்', அயஸ்கார: 'கொல்லன்' கார 'க்ருஞ்'இலிருந்து ஆக்கப்பட்டது.

**6.2.77** ஸம்க்[3]ஞாயாம் ச
பெயரைச் சுட்டும் தொகையின் இரண்டாவது உறுப்பினர் 'அண்' ஒட்டில் முடியும் சொல்லாக அமையும் போதும் (ஆனால் 'கார' என்ற சொல் அல்ல), அதன் முதலுறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறும்.
தந்துவாய: ''சிலந்திப்பூச்சி''; வாலவாய: ''வாலவாய எனப்படும் குன்று'' ஆனால் ரத[2]கார: ''ஒரு பிராமண இனம்''

**6.2.78** கே[3]ா தந்தியவம் பாலே
பால 'காவலன்' என்ற சொல்லுக்கு முன் நிற்கும் கே[3]ா, 'மாடு', தந்தி 'கயிறு', யவ 'பார்லி' என்ற சொற்களின் முதலசை உதாத்தம் பெறும்.
கே[3]ாபால–'மாட்டிடையன்', தந்திபால 'சிறிய கயிறுகளைக் கொண்டு நீண்ட கயிற்றில் கட்டப்பட்டிருக்கும் கன்றுகளின் காவலன்'; யவ பால 'பார்லி வயலின் காவலன்'
ஆனால் வத்ஸபால: கே[3]ாரக்ஷ:

**6.2.79** ணினி
'ணினி' ஒட்டில் முடியும் சொல்லை இரண்டாவது உறுப்பினராகக் கொண்ட ஒரு தொகையின் முதலுறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறும்.
புஷ்பஹாரின் ''பூப்பறிப்பவன்''
ப[2]லஹாரின் ''பழங்களைக் கொய்பவன்''

**6.2.80** உபமானம் ஸ'ப்[3]தார்த[2] ப்ரக்ருதாவேவ
உவமையைக் குறிக்கும் சொல் (உபமான) முதலுறுப்பினராகவும் 'ணினியில் முடியும் சொல் இரண்டாவது உறுப்பினராகவும் அமையும் தொகையில்,

இரண்டாவது உறுப்பினரே (ஏவ) 'சத்தம்' என்ற பொருளைச் சுட்டுமாறு அமையுமானால் அதாவது உபசர்க்கத்தின் துணையுடனல்லாமல் தனியாகவே அச்சொல் இப்பொருளைக் குறிக்குமானால் அத்தொகையின் முதலுறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறும்.

உஷ்ட்ரக்ரோஸின் 'ஒட்டகத்தைப் போன்று சத்தம் எழுப்புபவன்'

த்⁴வாங்க்ஷராவின் 'காக்கை போல் கரைபவன்'

க²ரநாதி³ன்

ஆனால் ³கர்த⁴பே⁴ச்சாரின் 'கழுதைப்போல் கனைப்பவன்

('உத்' என்ற உபசர்க்கத்துடன்) வ்ருகவஞ்சின் 'ஓநாயைப் போன்று வஞ்சிப்பவன்' (சத்தத்தைக் குறிப்பதல்ல)

**6.2.81** யுக்தாரோஹ்யாத³யஸ்¹ ச

'யுக்தாரோஹின்' முதலிய தொகைகள் முதலுறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறும்.

1) யுக்தாரோஹின் (2) ஆக³தயோதி⁴ன் (3) ஆகதரோஹின்
(4) ஆக³த வஞ்சின் (5) ஆக³த நர்தி³ன் (6) ஆக³தப்ர ஹாரின்
இவைகள் 'ணினி' ஒட்டில் முடியும் சொற்கள். 'ரோஹின்' முதலியவைகள் 'யுக்த' முதலியவைகளுக்கு முன் நிற்கும்போது அல்லது 'யுக்த' முதலியவைகள் 'ரோஹின்' முதலியவைகளை தொடர்ந்து நிற்கும்போதுதான் 6.2.79 செயற்படுமென்பது சிலரின் கருத்து.

ஆகவே வ்ருக்ஷாரோஹின் என்ற தொகை 'ணினி' யில் முடிந்தாலும் முதலுறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறாது: யுக்தாத்⁴யாயின்.

ஆக³தமத்ஸ்யா அல்லது ஆக³தமத்ஸ்ய

க்ஷீரஹோதா, ப⁴கி³னீ ப⁴ர்த்தா, க்³ராமகே³ாது⁴க், அஸ்'வத்ரிராத்ர:, க³ர்க³த்ரிராத்ர:, வ்யுஷ்டத்ரிராத்ர: ஸ'ணபாத³:, ஸமபாத³: இவைகள் ஆறாம் வேற்றுமைத் தொகைகள். ஏகஸி'திபாத் (ஏக: ஸி'தி: பாதே³ா அஸ்ய 3 உறுப்பினர்களைக் கொண்ட ப³ஹுவ்ரீஹி தொகை. இது 'ஏக ஸி'தி' ஒரு தத்திதார்தத் தொகை. ஆகவே, தத்புருஷத் தொகையின் சுரம் இறுதியசையில் வரும். ஆனால் இந்தச் சூத்திரம் அது முதலசையில் உதாத்தம் பெறும் என்று விதிக்கிறது. மேலும் ஏகஸி1தி, உயிரெழுத்தை யீறாக் கொண்ட 'த்¹விகு³' (எண்ணுத்தொகை) ஆவதால் அதன் முதலசை உதாத்தம் பெற்றிரு க்கும். (6.2.29). 'ஸிதி'யுடன் வரும் மற்றதொகைகளில் 6.2.29 செயற் படாது என்ற வலியுறுத்தத்தான். இத்தொகையை இங்கு சேர்த்து கூறப்பட்டிருக்கிறது. காட்டாக த்³விஸிதிபாத்³ என்ற தொகையில், 'தி' உதாத்தம் பெறுகிறது. பாத்ரேஸமித முதலியவைகளும் இதைச் சேர்ந்தது.

**6.2.82** தீ$^{3}$ர்க$^{4}$ காஸ துஷ ப்$^{4}$ராஷ்ட்ரவட$^{1}$ம் ஜே

நெடிலீற்றுச் சொற்கள் காஸ' 'ஒரு செடி வகை', துஷ 'தவிடு, உமி'. ப்$^{4}$ராஷ்ட்ர 'வாணலி', லட' 'ஆலமரம்' ஆகியவைகள் முதலுறுப்பினராகவும், 'ஜ' இரண்டாவது உறுப்பினராகவும் அமையும் தொகையில் முதலுறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறும்.

குடீஜ: 'குடிசையில் பிறந்தவன்'

ஸமீஜ: காஸ'ஜ, துஷஜ: ப்$^{4}$ராஷ்ட்ரஜ: ,வடஜ:

**6.2.83** அந்த்யாத்பூர்வம் ப$^{3}$ஹ்வச:

'ஜ'வுக்கு முன்னால் நிற்கும் சொல் பலவசைகளைக் கொண்ட தானால், அதன் ஈற்றயலசை (அந்த்யாத் பூர்வம்) உதாத்தம் பெறும் உபஸரஜ:, மந்து$^{3}$ரஜ:, ஆமலசீஜ: வட$^{3}$வாஜ: கடைசி இரண்டு சொற்களும் நெடிலீற்றுச் சொற்களான போதிலும், இவ்விதிதான் இங்கு செயற்படும், இதற்கு முந்திய விதியல்ல. ஆனால் த$^{3}$க்$^{3}$த$^{4}$ஜானி த்ருணானி

**6.2.83** க்$^{3}$ராமே அநிவஸந்த:

'வசிக்குமிடம்' என்ற பொருளைச் சுட்டாத (அநிவஸந்த) க்ராம சொல்லுக்கு முன் நிற்கும் சொல்லின் முதலசை உதாத்தம் பெறும்.

மல்லக்$^{3}$ராம: 'மல்லர்களின் குழு', வணிக்$^{3}$க்$^{3}$ராம:

'வியாபாரிகளின் குழு'

இங்கு 'க்$^{3}$ராம' என்ற சொல் ஒரு குழு, கூட்டம் என்ற பொருளைச் சுட்டும். ஆனால் த$^{3}$ாக்ஷிக்$^{3}$ராம ''த$^{3}$க்ஷன் வழி வந்தவர்கள் வசிக்கும் கிராமம்''

**6.2.85** கோஷாதி$^{3}$ஷு

கே$^{4}$ாஷ ''மந்தைக்குரியவரின் குடியிருப்பு'' வகுப்பைச் சேர்ந்த சொற்களுக்குமுன் நிற்கும் சொல்லின் முதலசை உதாத்தம் பெறும்.

த$^{3}$ாக்ஷிகே$^{4}$ாஷ ''தக்ஷனின் வமிசத்தைச் சேர்ந்த மந்தைக்குரியவர்களின் குடியிருப்பு'' த$^{3}$ாக்ஷிகட:, த$^{3}$ாக்ஷிஹ்ரத$^{3}$:, த$^{3}$ாக்ஷிபல்வல:, த$^{3}$ாக்ஷிப$^{3}$தரீ, ஆஸ்'ரமமுனி:, ஸ'ால்மலீமுனி:

**6.2.86** சாத்த்ர்யாத$^{3}$ய: ஸ'ாலாயாம்

'சாத்ரி' முதலியவைகள், 'ஸாலா', 'மண்டபம்'

(வசிக்குமிடம்) என்ற சொல்லுக்கு முன் நிற்கும்போது அவைகளின் முதலசை உதாத்தம் பெறும்.

சாத்த்ரிஸாலா, ப$^{4}$ாண்டி$^{3}$ஸ'ாலா

சூ. 2.4.25 இல் கூறப்பட்டபடி 'ஸ'ாலா'வை இரண்டாவது உறுப்பினராகக் கொண்ட தத்புருஷத் தொகை நபும்ஸகமாக வரும்போதும், இத்தொகையின் முதலுறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறும். ச$^{2}$ாத்ரி ஸ'ாலம் நபும்ஸகத் தத்புருஷத் தொகையின் சுரத்தை விதிக்கும் 6.2.123ஐ இது தள்ளி நீக்கிவிட்டு செயல்படுகிறது.

**6.2.87** ப்ரஸ்தே$^{2}$ அவ்ருத்$^{3}$த$^{4}$மகர் க்யாதீ$^{3}$னாம்

ப்ரஸ்த$^{2}$ 'சமவெளிப் பிரதேசம்' என்ற சொல்லுக்கு முன் நிற்கும் சொல்லின் முதலசை விருத்தியுயிரிலாமையாமலே அல்லது அச்சொல் கர்கீ முதலியவைகள் அல்லாமல் அமையும்போது, அதன் முதலுறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறும்.

இந்$^{3}$த்ரப்ரஸ்த: குண்ட$^{3}$ப்ரஸ்த: 'இடங்களின் பெயர்கள்'

ஆனால் மாஹகீப்ரஸ்த$^{2}$: கார்கீப்ரஸ்த$^{2}$

**6.2.88** மாலாதீ$^{3}$னாம் ச

'ப்ரஸ்த' என்ற சொல்லுக்குமுன் நிற்கும் 'மாலா' 'மாலை' முதலிய சொற்களிலும் முதலுறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறும்.

மாலாப்ரஸ்த:, ஸ$^{1}$லாப்ரஸ்த:

6.2.87 இல் 'விதிக்கப்பட்ட' ''வ்ருத்த'' வகைச் சொற்களுக்குப் புறன டை.

**6.2.89** அமஹந்நவம் நக$^{3}$ரே அனுதீ$^{3}$சாமீ

மஹத் 'பெரிய', நவ 'புதிய' என்ற சொற்களைத் தவிர்த்து மற்ற சொற்கள் முதலுறுப்பினராக அமையும் தொகையில், 'நக$^{3}$ர' என்ற சொல் இறுதியுறுப்பினராக நின்று வடதிசையில் உள்ள நகரத்தை அத்தொகை சுட்டாமல் அமையுமானால், அதன் முதலுறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறும். ஸுஹ்மநக$^{3}$ரம், பாண்ட்ய நக$^{3}$ரம் ''நகரங்களின் பெயர்கள்''

ஆனால் மஹாநக$^{3}$ரம், நவநக$^{3}$ரம், நதீ$^{3}$நக$^{3}$ரம்,

காந்திநகரம், வடக்கே இருக்கும் நகரங்களின் பெயர்கள்

**6.2.90** அர்மே ச அவர்ணம் த்வ்யச் தர்யச்

(மஹத், நவ ஆகியவைகளைத் தவிர்த்து மற்ற) 'அ'வீற்று இரண்டு அல்லது மூன்று அசைகளைக் கொண்ட சொற்கள் (த்வியச், த்ர்யச்) முதலுறுப்பினராகவும் அர்ம 'சீர்க்கேடு' என்ற சொல் இறுதியுறுப்பினராகவும் அமையும் தொகையில் முதலுறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறும்.

த$^{3}$த்தார்ம, கு$^{3}$ப்தார்ம ''இடிந்த நகர்களின் பெயர்கள்''

ஆனால் கபிஞ்ஜலார்மம் (4 அசைகள் கொண்டது);

ப்$^{3}$ருஹத$^{3}$ர்மம், மஹார்மம், நவார்மம்

**6.2.91** ந பூ$^{4}$தாதி$^{3}$க ஸஞ்ஜீவ மத்$^{3}$ராஸ்$^{1}$மகஜ்ஜலம்

'அர்ம' என்ற சொல்லுக்கு முன் நிற்கும் பூ$^{4}$த ''கடந்த'', அதி4க 'மிகுதி', ஸஞ்ஜீவ 'கூடிவாழ்தல்', மத்$^{3}$ர ''ஓரிடத்தின் பெயர்'', அஸ்1ம ''பாறை'', கஜ்ஜல (கண்)மை ஆகியவைகள் முதலசையில் உதாத்தம் பெறாது.

பூ$^{4}$தார்மம், அதி$^{4}$கார்மம். ஸஞ்ஜீவார்மம், மத்$^{3}$ரார்மம், அஸ்$^{1}$மார்மம், கஜ்ஜலார்மம் 'இடங்களின் பெயர்கள்'

வா: ஆத்$^1$யுத$^1$ாத்த ப்ரகரணே தி$^3$வோதாஸாதீ$^3$னாம் ச$^2$ந்த$^3$ஸ்யுபஸம்க்யானம்.

வேத மொழியில் தி$^3$வோத$^3$ாஸ முதலிய சொற்கள் (அவைகளின்) முதலசையில் உதாத்தம் பெறும்.

தி$^3$வோத$^3$ாஸாய க$^3$ாயத;

வ்ரத்$^3$ர்பஸ்$^1$வாய தா$^3$ஸு$^1$ஷே

**6.2.92** அந்த:

முதலுறுப்பினரின் இறுதியசை உதாத்தம் பெறும்.

இது ஒரு அதிகார சூத்திரம், இங்கிருந்து 6.2110 வரை 'அந்த' என்ற சொல் 'பூர்வபதம்' என்ற சொல்லுடன் அனுவிருத்தியாகும்.

**6.2.93** ஸர்வம் கு$^3$ணகார்த்ஸ்ன்யே

ஸர்வம் 'எல்லாம்' என்ற சொல் முதலுறுப்பினராக நின்று "குணங்கள் முழுவதும்" என்ற பொருளைச் சுட்டும்போது, அச்சொல்லின் இறுதியசை உதாத்தம் பெறும்.

ஸர்வஸ்$^1$வேத: "முழுவதும் வெள்ளையான", ஸர்வக்ருஷ்ண: "முழுக்கருப்பு"

ஆனால் பரம ஸ்$^1$வேத: "பிரகாசமான வெளுப்பு";

ஸர்வஸௌவர்ண: "முழுவதும் தங்கத்தாலாக்கப்பட்டது";

ஸர்வேஷாம் ஸ்$^1$வேததர: ஸர்வஸ்$^1$வேத: "எல்லாவற்றையும் விடவெளுப்பு" 'கு$^3$ணோத்தரேண ஸமாஸஸ் தரலோபஸ்$^1$ ச வக்தவ்ய: என்ற வார்த்திகத்தின்படி 'தர' என்ற சொல் கெடும்.

**6.2.94** ஸம்க்$^3$ஞாயாம் கி$^3$ரிநிகாயயோ:

கி$^3$ரி 'மலை', நிகாய 'திரள்' என்ற சொற்கள் முதலுறுப்பினராக நிற்கும் தொகை ஒரு பெயரைச் சுட்டும்போது அச்சொற்களின் இறுதியசை உதாத்தம் பெறும்.

அஞ்ஜனாகி$^3$ரி (6.3.117இன்படி 'அஞ்ஜன' வினீறு நெடிலாகும்);

ஸ$^1$ாபிண்டி$^3$நிகாய: "ஸபிண்டிகளின் குடியிருப்பு", மௌண்டி$^3$ நிகாய: ஆனால் பரமகி$^3$ரி, ப்$^1$ராஹ்மண நிகாய:

**6.2.95** குமார்யாம் வயஸி

'குமாரீ' என்ற சொல்லுக்கு முன் நிற்கும் சொல்லின் முதலுறுப்பின் இறுதியசை, அத்தொகை வயதைக் குறிக்கும்போது உதாத்தம் பெ றும்.

வ்ருத்$^3$த$^4$ குமாரீ "வயதான பெண்"

ஜரத்குமாரீ "வயதேறும் பெண்"

குமாரீ என்ற சொல் "திருமணமாகாத பெண்" என்ற பொருளைச்

சுட்டும்போதுதான் இத்தொகையாகும். இச்சொல்லின் 'இளவயது மங்கை'' என்ற மற்றொரு பொருளில் இத்தொகையாக முடியாது.

**6.2.96** உதகே அகேவலே

உத[3]க 'தண்ணீர்' என்ற சொல்லுக்கு முன் நிற்கும் சொல்லின் இறுதியசை அத்தொகை 'கலவை' யென்ற பொருளைச் சுட்டும் போது உதாத்தம் பெறும்.
கு[3]டே[3]ாத[3]கம் (8.2.6) ''வெல்லத்துடன் கலந்த தண்ணீர்''
ஆனால் ஸீ'தோத[3]கம் ''குளிர்ந்த தண்ணீர்''
உஷ்ணோத[3]கம் ''சுடு தண்ணீர்''

**6.2.97** த்[3]விகெ[3]ள க்ரதௌ

'த்[3]விகு'வுக்கு முன் நிற்கும் சொல்லினிறுதியசை அத்தொகை ஒரு வேள்வியென்ற பொருளைச் சுட்டும்போது (க்ரதௌ) உதாத்தம் பெறும்.
க[3]ர்கத்ரிராத்ர: ''மூன்று நாட்கள் நடைபெறும் ஒரு வேள்வியின் பெயர்''
ஆனால் அதிராத்ர: (5.4.87; 6.1.163)

**6.2.98** ஸப[4]யாம் நபும்ஸகே

ஸப[4]ா 'அவை' என்ற சொல்லுக்குமுன் நிற்கும் சொல்லினிறுதியசை அத்தொகை நபும்சகமாகும்போது உதாத்தம்பெறும்.
கே[3]ாபால ஸ[4]பம் ''மாட்டிடையிடையர்களினவை'';
ஸ்த்ரீஸப[4]ம் ''பெண்களின் கூட்டம்''; ஆனால் ராஜஸப[4]ா
'ஸபா' என்ற சொல் கட்டாயமாக நபும்சகமாகும்போது (பார் க்க 2.4.23-24) தான் இவ்விதி செயற்படும். இது விருப்பாக அவ்வாறானால் (2.4.25) இவ்விதி செயற்படாது. ஆகையால் ரமணீயஸப[4]ம் ''அழகிய அவை'' (6.1.223)

**6.2.99** புரே ப்ராசாம்

கீழ்த்திசை மக்களின் நகரம் என்ற பொருளைச் சுட்டும்போது (ப்ராசாம்) 'புர' என்ற சொல்லுக்கு முன் நிற்கும் முதலுறுப்பினரின் இறுதியசை உதாத்தம் பெறும்.
லலாடபுரம், காஞ்சீபுரம், ஸி'வத[3]த்தபுரம், கார்ணிபுரம்.
ஆனால் ஸி'வபுரம் வேறுதிசையிலமைந்த நகரத்தின் பெயர்.

**6.2.100** அரிஷ்டகௌ[3]ட[3] பூர்வே ச

'புர' என்ற சொல்லுக்கு முன் நிற்கும் அரிஷ்ட, கௌ3ட3 என்ற சொற்களின் இறுதியசை உதாத்தம் பெறும்.
அரிஷ்டபுரம், கௌ[3]டபுரம்
அரிஷ்டஸ்ரிதபுரம், கௌ[3]ட[3] ப்[4]ருத்யபுரம் ஆகியவைகளிலும் இவ்விதி செயற்படுமென்பதை இச்சூத்திரத்தில் காணப்படும் 'பூர்வே' என்ற சொல் சுட்டுகிறது.

**6.2.101** ந ஹாஸ்தின ப2லக மார்தே3ய:

ஹாஸ்தின, ப2லக, மார்தே3ய என்ற சொற்கள் 'புர' என்ற சொல்லுக்கு முன் நிற்கும்போது முதலுறுப்பினரின் இறுதியசை உதாத்தம் பெறாது.

ஹாஸ்தினபுரம், ப2லகபுரம், மார்தே3யபுரம்

இது 6.2.99க்குப் புறனடை.

**6.2.102** குஸூல கூப கும்ப4ஸாலம் பி3ல

பி3ல ''துளை'' என்ற சொல்லுக்கு முன் நிற்கும் குஸூல 'களஞ்சியம்' கூப 'கிணறு', கும்ப4 'பானை', ஸாலா 'மண்டபம்' ஆகியவைகளின் இறுதியசை உதாத்தம் பெறும்.

குஸூலபி3லம் ''களஞ்சியத்தின் காலியான பகுதி'', கூப பி3லம் "கிணற்றின் குழிவான பகுதி''; ஸாலா பி3லம் ''மண்டபத்திற்குள் இருக்குமிடம்''

**6.2.103** தி3க் ஸப்3தா3: க்3ராம ஜனபத3க்4யான சானராடேஷு

கிராமம், நகரம். கதை ஆகியவைகளைச் சுட்டும் சொற்கள், சானராட ''ஓரிடத்தின் பெயர்'' ஆகிய சொற்களுக்கு முன் நிற்கும் திசையைக் குறிக்கும் சொற்களின் இறுதி அசை உதாத்தம் பெறும்.

1) பூர்வேஷு காமஸமீ, அபரேஷு காமஸமீ (8.2.6); ஜனபத–பூர்வபாஞ்சாலா:, அபர பாஞ்சால: (3) ஆக்2யான பூர்வாதி4ராமம், பூர்வயாயாதம், அபரயாயாதம் "அதிராமன் அல்லது யயாதியைப் பற்றிய கதையின் முன் பகுதி அல்லது இறுதிப் பகுதி'' (4) சானராட – பூர்வசானராடம் "சானராட என்ற நாட்டின் கிழக்குப் பகுதி'' அபரசானாடம்.

'ஸப்த3' என்ற சூத்திரத்தில் காணப்படும் சொல், காலத்தைச் சுட்டும் சொற்களும் இதிலடங்குமென்று சுட்டுகிறது.

**6.2.104** ஆசார்யோபஸர்ஜனஸ்சாந்தேவாஸினி

தனது ஆசிரியர்களின் பெயரிலிருந்து தருவிக்கப்பட்ட (ஆசார்யோ பஸர்ஜன) மாணாக்கர்களின் பெயர்களைச் சுட்டும் சொற்கள் (அந்தே வாஸினி) திசைச் சொற்களுக்குப்பின் நிற்கும்போது, முதலுறுப்பினரின் இறுதியசை உதாத்தம் பெறும்.

பூர்வபாணினீயா: ''பாணினியின் தொடக்ககாலத்து மாணவர்கள்''

ஆனால் பூர்வ பாணினீயம் வ்யாகரணம் ''பாணினிக்கு முன் காலத்து இலக்கணம்''

**6.2.105** உத்தர பத3 வ்ருத்3தெ4ள ஸர்வம் ச

முதலசையின் உயிர் 'விருத்தி'யாக மாற்றம் பெறும் இரண்டாவது உறுப்பினருக்கு முன் நிற்கும் திசையைச் சுட்டும் சொற்கள் 'ஸர்வ' ஆகியவைகளின் இறுதியசை உதாத்தம் பெறும்.

பூரவ பாஞ்சாலக: கிழக்குப் பாஞ்சால நாடு
ஸர்வ பாஞ்சாலக: 'பாஞ்சால நாடு முழுமையும்' இச்சொற்களின் இரண்டாவது உறுப்பினரின் முதலசை 7.3.12; 13இன்படி விருத்தியாகும்.
ஆனால் ஸர்வப[4]ாஸ:, ஸர்வகாரக இவைகள் 7.3.12, 13 விதிகளால் 'விருத்தி' மாற்றமடையவில்லை.

**6.2.106** ப[3]ஹுவ்ரீஹௌ விஸ்'வம் ஸம்க்[3]ஞாயாம்

விஸ்'வம் 'எல்லாம்' என்ற சொல் முதலுறுப்பினராகவும், ஒரு பெயரைச் சுட்டும் பஹுர்வரீஹித் தொகையில், 'விஸ்வம்' இறுதியசையில் உதாத்தம் பெறும்.
விஸ்'வதே[3]வ, விஸ்'வயஸ'ா:
ஆனால் 'விஸ்வே ச தே தே[3]வா: விஸ்'வதே[3]வா:,
விஸ்'வதே[3]வா:, விஸ்வே தே[3]வா: யஸ்ய = விஸ்'வதே[3]வ,
விஸ்வம் மித்ரம் யஸ்ய=விஸ்வமித்ர ஆனால் விஸ்'வாமித்ர:
இச்சூத்திரம் 6.2.1க்குப் புறனடை.

**6.2.107** உத[3]ராஸ்வேஷுஷு

(பஹுவ்ரீஹித் தொகையில்) உத[3]ர 'வயிறு', அஸ்வ 'குதிரை இஷு ' 'அம்பு' ஆகியவைகளுக்கு முன் நிற்கும் உறுப்பினரின் இறுதியசை ஒரு பெயரை அத்தொகை சுட்டும்போது) உதாத்தம் பெறும்.
1) வ்ருகோத[3]ர "பீமனின் பெயர்" (பாண்டவர்களில் இரண்டாவது சகோதரன்); த[3]ாமோத[3]ர
"கிருஷ்ணனின் பெயர்"
2) ஹர்யஸ்வ: (8.2.4) "ஒருவரின் பெயர்" யௌவனால்1வ:
3) ஸுவர்ணபுங்கே[2]ஷு, மஹேஷு (8.2.6)
இச்சூத்திரம் 6.2.1க்குப் புறனடை.

**6.2.108** க்ஷேபே

உத[3]ர, அஸ்'வ, இஷு ஆகியவைகளுக்கு முன் நிற்கும் சொல், இந்த பஹுவ்ரீஹி தொகை 'இகழ்தல்' என்ற பொருளைச் சுட்டும்போது, தனது இறுதியசையில் உதாத்தம் பெறும் (அது ஒரு பெயரைச் சுட்டும்)
1) குண்டே[3]ாத[3]ர:, க[4]டோத[3]ர:, "பானைபோன்ற வயிறுள்ளவன்" ஒரு பெயர்
2) கடு'காஸ்வ:, ஸ்யந்தி[3]தாஸ்'வ:
3) அநிக[4]ாதேஷு, சலாசலேஷு

**6.2.109** நதீ[3] ப[3]ந்து[4]னி

ஒரு பஹுவ்ரீஹி தொகையில் 'பந்து[4]' என்ற சொல் இரண்டாவது உறுப்பினராகவும், 'நதீ' என்ற ஸம்க்[3]ஞாவினால் சுட்டப்படும் சொற்கள் முதலுறுப்பினராகவும் அமையும் தொகையில், முதலுறுப்பினரின் இறுதியசை உதாத்தம் பெறும்.
க[3]ார்கீ[3] ப[3]ந்து[4]: 'கார்கி' என்பவளைத்தன் உறவினராகக் கொண்டவன்;

வாத்ஸீ ப[3]ந்து[4] ஆனால் ப்ரஹ்ம ப[3]ந்து[4]:

**6.2.110** நிஷ்டே[2]ாபஸர்க[3] பூர்வ மன்யதரஸ்யாம்

ஒரு பஹுவரீஹித் தொகையில் 'நிஷ்ட[2]ா' என்ற ஸம்க்[3]ஞாவினால் சுட்டப்படும் சொற்கள் உபசர்க்கத்துடன் சேர்ந்து அதாவது உப சர்க்கத்தைத் தொடர்ந்து, முதலுறுப்பினராக அமையும்போது, அ தன் இறுதியசை விருப்பாக உதாத்தம் பெறும்.

ப்ரதெ[4]ளதமுக[2]: அல்லது ப்ரதெ[4]ளதமுக[2]: (6.2.197)

அல்லது ப்ரதெ[4]ளத முக[2]: ''யாருடைய முகம் கழுவப்பட்டதோ அவன், ஆனால் ப்ரஸேசகமுக[2]: (6.2.139)

ஸுஷ்கமுக[2]: (6.1.206)

**6.2.111** உத்தர பத[3]ாதி[3]:

இரண்டாவது உறப்பினரின் முதலசை உதாத்தம் பெறும்.

இது ஒரு அதிகார சூத்திரம். இச்சூத்திரத்திலிருந்து தொடங்கி 6.2.136 வரை உத்தரபத[3]ாதி[3]' அனுவிருத்தியாகும். 'உத்தரபத' என்ற சொல் இவ்வத்தியாயத்தின் முடிவுவரை அனுவிருத்தியாகும். 'ஆதி' என்ற சொல் 6.2.187 வரை பயன்படுத்தப்படும்.

**6.2.112** கர்ணோ வர்ணலக்ஷணாத்

ஒரு பஹுவ்ரீஹித் தொகையில் கர்ண 'காது' என்ற சொல் இரண்டாவது உறுப்பினராகவும், நிறம் (வர்ண) அல்லது அடையாளத்தைச் சுட்டும் சொல் (லக்ஷண) முதலுறுப்பினராகவும் நிற்கும்போது இரண்டாவது உறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறும்.

1) ஸு'க்லகர்ண: ''வெளுப்பான காதுடையவன்'',
க்ருஷ்ணகர்ண: ''கருப்பான காதுடையவன்''

2) த[3]ாத்ராகர்ண: ''காதில் அரிவாள் அடையாளமிடப்பட்ட'' மாஸங் கர்ண: த[3]ாத்ர, ஸங்கு ஆகியவகைள் 6.3.115இல் விதிக்கப்பட்டபடி நெடிலாகும்.
மாடுகள் யாருடையது என்பதைப் பிரித்துக்காட்ட தாத்ர, சங்கு ஆகியவைகளின் அடையாளம் இடப்படும். இச்சூத்திரம் இதைக்குறிக்கிறது. ஆனால் ஸுதூ லகர்ண:, ஸ்'வேதபாத:

**6.2.113** ஸம்க்[3]ஞௌபம்யோஸ்' ச

ஒரு பெயர் அல்லது ஒற்றுமை ஆகியவைகளைச் சுட்டும்போது பஹுர்வரீஹித் தொகையின் இரண்டாவது உறுப்பினராக நிற்கும் 'கர்ண' என்ற சொல்லின் முதலசை உதாத்தம் பெறும்.

குஞ்சிகர்ண: 'பெயர்

மணிகர்ண: 'பெயர்' கே³ாகர்ண: 'பசுவின் காதுபோன்ற காதுடையவன்'
க²ரகர்ண: 'கழுதையின் காது போன்ற காதுடையவன்

**6.2.114** கண்ட² ப்ருஷ்ட² க்³ரீவஜங்க⁴ம் ச

ஒரு பெயர் அல்லது ஒற்றுமையைச் சுட்டும் பஹுவ்ரீஹித் தொகையின் இரண்டாவது உறுப்பினராக நிற்கும் கண்ட 'தொண்டை' ஹுருஷ்ட 'முதுகு', க்ரீவ 'கழுத்து', ஜங்க⁴ா 'தொடை' ஆகியவைகளின் முதலசை உதாத்தம் பெறும்.

ஸிதி கண்ட²: 'நீலகண்டன்²: 'பெயர்கள்'
க²ரகண்ட:, உஷ்ட்ரகண்ட
(உவமை) "ஒட்டகத்தின் கழுத்தைப் போன்று கழுத்தையுடைவன்"
ஸுக்³ரீவ, நீலக்³ரீவ (பெயர்)
கோ³க்³ரீவ: அஸ்வக்³ரீவ: (ஒற்றுமை) 'பசு அல்லது குதிரையின் கழுத்தைப் போன்ற கழுத்தையுடையவன்'
காண்டப்ருஷ்ட:, நாக ப்ருஷ்ட 'பெயர்'
கே³ா ப்ருஷ்ட:, அஜப்ருஷ்ட: பசு அல்லது ஆட்டின் முதுகு போன்ற முதுகைக் கொண்டவன்'
நாடீஜங்க⁴:, தாலஜங்க⁴: 'பெயர்'
கே³ா ஜங்க⁴:, அஸ்'வ ஜங்க⁴: 'பசு அல்லது குதிரையின் முழங்கால் போன்ற தொடையுடையவன்'

**6.2.115** ஸ்'ருங்க³ம் அவஸ்தாயாம் ச

வயது (அவஸ்தா) (அல்லது பெயர் அல்லது ஒற்றுமை) ஆகியவைகளைச் சுட்டும் பஹுவ்ரீஹித் தொகையின் இரண்டாவது உறுப்பினராக நிற்கும் ஸ்'ரு'ங்க³ என்ற சொல்லின் முதலசை உதாத்தம் பெறும்.

வயது–உத்³க³தஸ்'ருங்க³: "கொம்புகள் வெளியே (தெரிய) வரும் வயதுடைய மாடு"
த்³வ்யங்கு³ல ஸ்'ருங்க³ "இரண்டங்குல நீளம் வளர்ந்துள்ள கொம்புகளையுடைய மாடு"; த்ர்யங்கு³ல ஸ்'ருங்க³:
பெயர்–குஸ்'ய ஸ்ருங்க³ 'பெயர்'
ஒற்றுமை–கே³ா ஸ்'ருங்க³–மாட்டின் கொம்பு போன்ற கொம்புடைய"

**6.2.116** நஞோ ஜரமர மித்ர ம்ருதோ:

ஜர 'முதுமையடையும்', மர 'இறக்கும்' மித்ர 'நண்பன்' ம்ருத 'இறந்த' ஆகியவைகள் இரண்டாவது உறுப்பினராக அமையும் பஹுவ்ரீஹித் தொகையின் முதலுறுப்பினர் எதிர்மறையொட்டான 'நஞ்' ஆகும்போது, இரண்டாவது உறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறும்.

அஜர 'முதுமையடையாத', அமர 'அழியாத, மரணமற்ற'
அமித்ர 'பகைவன்' அம்ருத "இறவாத, அமிர்தம்" 6.2.172க்கு இது புறனடை.

**6.2.117** ஸோர் மனஸீ அலோமோஷஸீ

லோமன் 'மயிர்', உஷஸ் 'விடியற்காலை' என்ற சொற்களைத் தவி ர்த்த மற்ற 'மன்', அல்லது 'அஸ்' ஈற்றுச் சொற்கள் இரண்டாவது உறுப்பினராகவும் 'ஸு' முதலுறுப்பினராகவும் அமையும் பஹுவ்ரீஹி த் தொகையில், இரண்டாவது உறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறும்.

1) ஸுகர்மன் 'சிறந்த செயல் செய்பவன்' ஸுத[4]ர்மன் (5.4.124); (2) ஸுயஸ'ஸ் 'புகழ் வாய்ந்த' ஆனால் ஸுலோமன் 'அழகிய தலைமுடியைக் கொண்ட'', ஸுஷஸ் 'அழகிய வைகறை'

**6.2.118** க்ரத்யாத[3]யஸ் ச

'ஸு'வைத் தொடர்ந்து க்ரது 'புத்தி', அறிவு நுட்பம்' முதலிய சொற்கள் இரண்டாவது உறுப்பினராக நிற்கும் பஹு வர்ஹித் தொகையில் இரண்டாவது உறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறும்.
ஸுக்ரது ''நுண்ணறிவுள்ள, புத்திசாலித்தனமான''; ஸுத்[3]ருஸிக: 'அழகான', ஸுப்ரதீக: 'அழகானவன்'

**6.2.119** ஆத்[3]யுத[3]ாத்தம் த்[3]வ்யச்ச[2]ந்த[3]ஸி

வேதமொழியில் முதலசையில் உதாத்த சுரம் கொண்ட ஈரசைச் சொல் 'ஸு'வைத் தொடர்ந்து நிற்கும் பஹு வ்ரீஹித் தொகையின், இரண்டாவது உறுப்பினரின் முதலசை உதாத்தம் பெறும்.
அதாவது இச்சொல் தனது சுரத்தை நீடித்து வைத்துக் கொள்ளும், ஸ்வஸ்'வாஸ்த்வா ஸுரத[2]ாமர்ஜயேம (ரிக் 10, 76 ஸ்வஸ்'ஸ: ''நல்ல குதிரையுடையவன்'' ஆனால் ஸுப[3]ாஹு (6.2.172). இது பின்னால் வரும் 172க்கு முன்னாலேயே விதிக்கப்பட்டிருக்கும் புறனடை.

**6.2.120** வீர வீர்யௌ ச

(வேத மொழியில் பஹுவ்ரீஹித் தொகையில் 'ஸு' வைத்தொடர்ந்து இரண்டாவது உறுப்பினராக அமையும்) வீர 'வீரன்' வீர்ய 'பலம்' என்ற சொற்களின் முதலசை உதாத்தசுரம் பெறும்.
ஸுவீர, ஸுவீர்ய, ஸுவீரேண தே. ஸுவீர்யஸ்ய பதய: ஸ்யாம

**6.2.121** கூல தார லூல மூல ஸ'ாலாக்ஷ ஸமமவ்யயீப[4]ாவே

ஒரு அவ்யயீபாவத் தொகையில், கூல, தீர, 'கரை', தூல 'பஞ்சு'. 'மூல 'வேர்', ஸாலா 'அரண்மனை, மண்டபம்' அக்ஷ, ஸம ஆகியவைகள் இரண்டாவது உறுப்பினராக நிற்கும்போது, அவைகளின் முதலசை உதாத்தம் பெறும்.
உபகூலம், உபதீரம் 'கரைக்கு அருகில்', பரிமூலம் 'வேரைச் சுற்றி', பரிஸ'ாலம் 'மண்டபத்தைச் சுற்றி', ஸுஸமம் உபாக்ஷம்
ஆனால் உபகும்ப[4]ம் ''பானைக்கருகில்''
பரி, ப்ரதி, உப, அப என்ற உபசர்க்கங்களுடன் நிற்கும் 'கூல' முதலியவைகள்

தனது சுரத்தை இழக்கும் (பார்க்க 6.2.33)
ஆயினும், இச்சூத்திரம் அதற்குத் தடைவிதித்து, 'கூல' முதலியபவைகள் உதாத்த சுரம் பெறுமென்று விதிக்கிறது.

**6.2.122** கம்ஸ மந்த$^{2}$ ஸூர்ப பாய்ய காண்ட$^{3}$ம் த்$^{3}$விகெ$^{3}$
'த்விகு' தொகையின் கீழ்க்கண்ட இரண்டாவது உறுப்பினர்கள் தனது முதலசையில் உதாத்தம் பெறும்:–கம்ஸ மந்த$^{2}$ ஸூர்ப 'முறம்', பாய்ய 'ஒரு அளவையின் பெயர்'' காண்ட$^{3}$ 'பத்$^{3}$விகம்ஸ: 'இரண்டு கம்ஸத்துக்கு வாங்கியது'
(5.1.25; 28), த்$^{3}$விமந்த$^{2}$: 'இரண்டு' மந்தங்களுக்கு வாங்கியது. (5.1.19; 28); த்$^{2}$விஸூர்ப; த்விபாய்ய, த்$^{3}$விகாண்ட$^{3}$ (5.2.37); ஆனால் பரமகம்ஸ

**6.2.123** தத்புருஷே ஸ'ாலாயாம் நபும்ஸகே
தத்புருஷத் தொகையில் 'ஸ'ாலா' இரண்டாவது உறுப்பினராகவும், அத்தொகை நபும்ஸகமாகவும் அமையும்போது இச்சொல்லின் முதலசை உதாத்தம் பெறும்.
ப்$^{3}$ராஹ்மண ஸ'ாலம், க்ஷத்ரியஸ'ாலம் 'பிராம்மணர்கள் அல்லது க்ஷத்திரியர்களின் மண்டபம்.
த்$^{3}$ருட$^{3}$ஸாலம் ப்$^{3}$ராஹ்மண குலம் 'பிராம்மணக்குடும்பம் நிரந்தரமான மண்டபத்தைக் கொண்டது' (பஹுவ்ரீஹித் தொகை) ப்$^{3}$ராஹ்மணஸாலா (பெண்பால்)

**6.2.124** கந்தா ச
(நபும்ஸகமாக அமையும் தத்புருஷத் தொகையில்) இரண்டாவது உறுப்பினராக நிற்கும் கந்த$^{2}$ா 'நகரம்' என்ற சொல்லின் முதலசை உதாத்தம் பெறும்.
ஸெ'ளஸமீகந்த$^{2}$ம், அத்$^{4}$வரகந்தம் 'நகரங்களின் பெயர்கள்'
ஆனால் த$^{3}$ாக்ஷீகந்த$^{2}$ா

**6.2.125** ஆதி$^{3}$ஸ்'சிஹணாதீ$^{3}$னாம்
'கந்த$^{2}$ா' என்ற சொல்லை யிறுதியில் கொண்ட நபும்ஸக தத்புருஷ த் தொகையில்), 'சிஹண' முதலியபவைகள் முதலுறுப்பினராக நிற்கும்போது அச்சொற்களின் முதலசை உதாத்தம் பெறும்
சிஹண கந்த$^{2}$ம், மட$^{3}$ரகந்தம்,
வைது$^{2}$ல கந்த$^{2}$ம், ''நகரங்களின் பெயர்கள்''
'ஆதி' என்ற சொல் 111 இலிருந்து தொடர்ந்து அனுவிருத்தியாகும்போதும், முதற்சொல்லின் முதலசை உதாத்தம் பெறும் என்று சுட்டுவதற்காக இச்சொல்லைத் திரும்பவும் இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

**6.2.126** சேல கே2ட1 கடு1க காண்ட3ம் க3ர்ஹாயாம்

சேல 'சேலை', கேட1 'புல்', கடு1க 'கசப்பு', காண்ட3 'அம்பு' ஆகியவைகள் இறுதியுறுப்பினராக 'நிந்தித்தல்' என்ற பொருளைச் சுட்டும் தத்புருஷத் தொகையில் அமையும் போது, அவைகளின் முத லசை உதாத்தம் பெறும். புத்ரசேலம் 'சேலையைப் போன்ற மகன்' அதாவது கெட்ட மகன்', உபானத்கே2டம் ''மோசமான செருப்பு'', த3தி4கடுகம் 'பழைய தயிறு', பூ4தகாண்ட3ம் 'கெடுதி யுண்டாக்கும் ஆள்', ஆனால் பரமசேலம்.

**6.2.127** சீரமுபமானம்

தத்புருஷத் தொகையினிறுப்பினராக அமையும் சீர 'கந்தை' என்ற சொல் உவமைச் சொல்லாக அமையும்போது, அதன் முதலசை உதாத்தம் பெறும். வஸ்த்ரசீரம் 'கந்தல் துணி'

**6.2.128** பலல ஸூப ஸா1கம் மிஸ்1ரே

'கலவை' (மிஸ்ரே) என்ற பொருளைச் சுட்டும் தத்புருஷத் தொகையின் இறுதியுறுப்பினராக அமையும் பலல 'ஒரு இனிப்புப் பண்டம்', ஸூப 'குப்பு', ஸா1கம் 'காய்கறி' ஆகியவைகளின் முதலசை உதாத்தம் பெறும்.
கூ3ட3 பலலம் ''வெல்லத்தில் கலந்த இனிப்புப் பண்டம்'',
மூலக ஸூபம்–'முள்ளங்கி குப்பு', முத்3க3ஸாகம் 'பயத்தம் பருப்புடன் கலந்த கறி'
ஆனால் பரமபலலம்

**6.2.129** கூல ஸூத3 ஸ்த2ல கர்ஷா: ஸம்க்3ஞாயாம்

பெயரைச் சுட்டும் தத்புருஷத் தொகையின் இறுதியுறுப்பினராக நிற்கும் கூல 'கரை', ஸூத3, 'உலர்ந்த கம்பு', ஸ்த2ல 'இடம்', கர்ஷ 'வேலை' ஆகியவைகளில் முதலசை உதாத்தம் பெறும்.
த3க்ஷீகூலம், தே3வஸூத3ம், த3ாண்ட3ாயன ஸ்த2லீ, த3ாக்ஷீகர்ஷ "கிராமங்களின் பெயர்".

**6.2.130** அகர்மத4ாரயே ராஜ்யம்

கர்மதாரயமல்லாத தத்புருஷத் தொகையினிறுதியுறுப்பினராக ராஜ்யம் 'அரசு' என்ற சொல் நிற்கும்போது அதன் முதலசை உதாத்தம் பெறும்.
ப்3ராஹ்மண ராஜ்யம், க்ஷத்ரியராஜ்யம் ஆனால் பரமராஜ்யம் (கர்மதாரயம்)

**6.2.131** வர்க்3யாத3யஸ்1 ச

கர்மதாரயமல்லாத தத்புருஷத் தொகையின் இறுதியுறுப்பினராக நிற்கும் 'வர்க்3ய' முதலிய சொற்களின் முதலசை உதாத்தம் பெறும்.
வாஸுதே3வ வர்க்3ய:, வாஸுதே3வ பக்ஷ்ய: ''வாசுதேவனின் கட்சியைச் சேர்ந்தவன்'' ஆனால் பரமவர்க்3ய:
'வர்க்3ய' வகுப்பு என்று தனியாக எங்கும் காணப்படவில்லை.

'தி³க³ாதி³' வகுப்பின் ஒரு பகுதியாகக் கூறப்பட்டிருக்கும் 'வர்க³', 'பூக³' க³ண, பக்ஷ'' என்பவைகள் 'யத்' ஒட்டோடு வரும். இவைகளையே இது குறிக்கும்.

**6.2.132** புத்ர: பும்ப்⁴ய:

(தத்புருஷத் தொகையில்) ஒரு ஆண்பாற்சொல்லுக்குப்பின் வரும் 'புத்ர' என்ற சொல்லின் முதலசை உதாத்தமாகும். கௌனடிபுத்ர:, த³ாமகபுத்ர: ''கௌனடி அல்லது தாமகன் என்பவனின் மகன்'' ஆனால் கார்கீபுத்ர: (பெண்பாற்சொல்லைத் தொடர்ந்து 'புத்ர' நிற்கிறது)

**6.2.133** நாசார்ய ராஜருத்விக்ஸம்யுக்த க்³ஞாத்யாக்²யேப்⁴ய:

(தத்புருஷத் தொகையில்), ஆசார்ய 'ஆசிரியர்', ராஜன் 'அரசன்', ருத்விக் 'புரோகிதர்', ஸம்புக்த 'மனைவி வழி உறவினர்', க்³ஞாதி 'இரத்த சம்பந்த' உறவினர், இப்பொருட்களைச் சுட்டும் மற்ற சொற்கள் இவைகளுக்குப்பின் நிற்கும் 'புத்ர' என்ற சொல்லின் முதலசை உதாத்தம் பெறாது.
சூ. 132க்குப் புறனடை.

1) ஆசார்யபுத்ர:, உபாத்4யாயபுத்ர:
"ஆசிரியரின் மகன்", (2) ராஜபுத்ர:, ஈர்வர புத்ர: ''அரசனின் மகள்'' (3) ருத்விக்புத்ர:, யா³க்ஞிகபுத்ர: ''புரோஹிதரின் மகன்'' (4) ஸம்யுக்த புத்ர:, ஸ்யாலபுத்ர:, 'மைத்துனரின் மகன்' (5) க்³ஞாதிபுத்ர பித்ருவ்யபுத்ர:, மாதுலபுத்ர: 'தந்தையின் உடன் பிறந்தவரின் மகன், மாமன் மகன்.

**6.2.134** சூர்ணாதீ³ன்யப்ராணிஷஷ்ட்யா:

(தத்புருஷத் தொகையில், உயிரினங்களைச் சுட்டும் சொற்களைத் தவிர்த்த மற்ற ஆறாம் வேற்றுமைச் சொற்களுக்குப்பின் நிற்கும் "சூர்ண" மாவு, பொடி" முதலிய சொற்களின் முதலசை உதாத்தம் பெறும். முத்³க³சூர்ணம் 'பயத்தமாவு', மசூரசூர்ணம் 'மசூர் பருப்புப்பொடி'
ஆனால் மத்ஸ்யசூர்ணம், பரமசூர்ணம்

**6.2.135** ஷட் ச காண்டாதீனி

மேற்சூத்திரங்களில் கூறப்பட்ட 'காண்ட'வில் தொடங்கும் ஆறு சொற்கள் (ஷட்) (அதாவது காண்ட (126), சீர (127), பலால (128), ஸூப (128), கூல (128) உயிரினங்களைச் சுட்டும் சொற்களைத் தவிர்த்த மற்ற ஆறாம் வேற்றுமைச் சொற்களுக்குப்பின் நிற்கும்போது அவைகளின் முதலசை உதாத்த சுரம்பெறும்.

1) நிந்தைப் பொருளல்லாமல் வரும்போது த³ர்ப⁴காண்டம், ஸரகாண்டம் (126) 'தர்ப்பைப்புல்லின் தண்டு' கோரையின் தண்டு'

2) உவமைச் சொல் அல்லாமல் வரும்போது குஸசீரம்– குஸ புல்லாலாக்கப்பட்ட துணி'' (127)

3) கலவைப் பொருளல்லாமல் வரும்போது திலபலாலம் "எள்ளாலான ஆப்பம்'' (128): முத்³க³ஸூப:
"பயத்தம் பருப்பு கஞ்சி'', மூலகஸாகம் 'முள்ளங்கி'

4) பெயரைச் சுட்டாமல் வரும்போது நதீ3கூலம் 'ஆற்றின் கரை' (129)

கர்ஹா (126), உபமா (127), மிஸ்1ர (128), ஸம்க்ஞா (129) ஆகியவைகளை நிபந்தனையாகக் கூறப்பட்டிருக்கும் சூ. 6.2.126–129 வரையிலான விதிகள் இங்கு பயன்படுத்த இயலாது. ஆகவே, இவைகளைத் தவிர மற்ற சூழல்களி லும் செயற்படுமென்பதை இவ்விதி சுட்டுகிறது.

**6.2.136** குண்ட³ம் வனம்

'காடு' என்ற பொருளைச் சுட்டும் தத்புருஷத் தொகையினிறுதி உறுப்பினராக நிற்கும் 'குண்ட³ 'கிண்ணம்' என்ற சொல்லின் முதலசை உதாத்தம் பெறும். த³ர்ப⁴குண்ட³ம் 'ஒரு காட்டின் பெயர்' (தர்ப்பைப் புல்லின் காடு) ஆனால் ம்ருத்குண்ட³ம் 'மண்பாத்திரம்'

**6.2.137** ப்ரக்ருத்யா ப⁴க³ாலம்

தத்புருஷத் தொகையினிறுதியுறுப்பினராக நிற்கும் ப⁴க³ால 'மண்டையோடு' என்ற சொல் அல்லது அதே பொருளைச் சுட்டும் மற்ற சொற்கள் தனது மூல சுரத்தை (ப்ரக்ருத்யா) நீடித்து வைத்துக் கொள்ளும்.
கும்பீ⁴ப⁴க³ாலம்/–கபாலம்/–நட³ாலம் 'பிட்சைப் பாத்திரமாகப் பயன்படுத்தப்படும் மண்டையோடு'

**6.2.138** ஸி'தே நித்யாப³ஹ்வஜ் ப³ஹுவ்ரீஹாவப⁴ஸத்

'ப⁴ஸத்³' என்ற சொல்லைத் தவிர்த்து மற்ற எப்போதுமே பலவசைகளைக் கொண்டதான சொல் என்றில்லாவிட்டால் ஒரு பஹுவ்ரீஹித் தொகையினிறுதி உறுப்பினராக, ஸி'தி 'வெள்ளை' என்ற சொல்லுக்குப் பின் நிற்கும்போது, அச்சொல் தனது மூல சுரத்தை நீடித்து வைத்துக் கொள்ளும். ஸி'திபாத³ ''வெளுப்பான காலைக் கொண்ட'', ஸி'த்யம்ஸ:, ஸி'த்யௌஷ்ட²: ஆனால் த³ர்ஸ'னீயபாத³ ''அழகிய கால்களை கொண்ட''; ஸி'திககுத். வயதைச் சுட்டுமாறு ககுத் பயன்படுத்தப்படுமிடங்களில், அதனிறுதி 'அ' கெடும். (5.4.146). வயதைச் சுட்டும் தொகையைத் தவிர்த்த மற்ற தொகைகளில் 'ககுத' என்று நிற்கும் ஆகையால் இச்சொல் எப்போதுமே பலவசைகளைக் கொண்ட சொல்லென்று கூற இயலாது.
ஸி1திலலாட:, ஸிதிப⁴ஸத்

**6.2.139** க$^3$திகாரக உபபத$^3$ாத் க்ருத்

தத்புருஷத் தொகையில் 'க்ருத்' ஒட்டில் முடியும்சொல் இறுதியுறுப்பினராக அமைந்து, அதற்கு முன் 'கதி' என்ற ஸம்க்$^3$ஞாவினால் சுட்டப்படும் சொற்கள் அல்லது காரக (1.4.2: அல்லது உபபத (3.1.92) ஆகியவைகள் நிற்குமானால் அத்தொகையினிறுயுறுப்பினரின் மூல சுரம் நீடித்து நிற்கும்.

1. க$^3$தி–ப்ரகரண ''உற்பத்தி'', ப்ரகாரக 'உற்பத்தி செய்பவர்'

2. காரக–இத்$^4$மப்ரவ்ரஸ்$^1$சன 'கோடரி' ஸ்தம்பே $^3$ரம (3.2.13)

3. உபபத – ஈஷத்கர (3.3.126)

   ஆனால் தே$^3$வத$^3$த்தஸ்ய காரக:-தே$^3$வத$^3$த்தகாரக (காரகமல்ல)

**6.2.140** உபே$^4$ வனஸ்பத்யாதி$^3$ஷூ யுக$^3$பத்

'வனஸ்பதி' முதலிய தொகைகளில் இரண்டு உறுப்பினர்களுமே ஒருங்கே தனது மூல சுரத்தை நீடித்து வைத்துக் கொள்ளும்.

வனஸ்பதி 'காடுகளின் தெய்வம்'

ப்$^3$ருஹஸ்பதி–'தேவர்களின் குரு'

தனூ நபாத், 'பெயர்'

ஶு$^1$ன: ஸே$^1$ப$^2$: 'பெயர்'

ஸ$^1$ண்ட$^3$ாபர்கௌ, த்ருஷ்ணா வரூத்ரீ

ப$^3$ம்ப$^3$ா விஸ்$^1$வ வயஸௌ, மர்க்$^3$ருத்யு:

**6.2.141** தேவதாத்$^3$வந்த்$^3$வே ச

தேவதைகளின் பெயர்களைக் குறிக்கும் சொற்களாலாக்கப்பட்ட துவந்துவத் தொகையிலும், ஒருங்கே இரண்டு உறுப்பினர்களின் மூல சுரமும் நீடிக்கும். இந்த்$^3$ராவருணௌ, இந்த்$^3$ராஸோமௌ

**6.2.142** நோத்தரபதே$^3$ அனுத$^3$ாத்தாத$^3$ாவ ப்ருதி$^2$வீருத்$^3$ர பூஷ மந்தி$^2$ஷு

ப்ரு$^1$தி$^2$வீ 'பூமி தேவி', ருத்$^3$ர, பூஷன் 'கடவுளர்களின் பெயர்கள்', மந்தி$^2$ன் 'புனிதப்பானம்' என்பவைகளைத் தவிர்த்து மற்ற அனுதாத்த அசையில் தொடங்கும் சொற்கள் இறுதியுறுப்பினராக அமையும் துவந்துவத்தொகையில் இரண்டு உறுப்பினர்களும் ஒருங்கே தனது மூல சுரத்தை நீடித்து வைத்துக் கொள்ளாது. இந்த்$^3$ராக்$^3$னீ, இந்த்$^3$ராவாயூ

ஆனால் த்$^3$யாவா ப்ருதி$^2$வ்யௌ, ஸோமாருத்$^3$ரௌ

**6.2.143** அந்த:

(இச்சூத்திரத்தில் தொடங்கி, இந்தப் பாதத்தினிறுதி சூத்திரம் வரை (ஒரு தொகையினிறுதியுறுப்பினரின்) இறுதியசை உதாத்தம் பெறும். இது ஒரு

அதிகார சூத்திரம் 'அந்த:' இப்பாதத்தினிறுதி வரை அனுவிருத்தியாகும்.

**6.2.144** த²ாத²க⁴ஞ் க்தாஜ பி³த்ரகாணாம்

த², அத², க⁴ஞ், க்த, அச், அப், இத்ர, க ஆகிய வொட்டுக்களில் முடியும் சொற்கள் இறுதியுறுப்பினராகவும், (க³தி' எனப்படும் சொ ற்கள் அல்லது காரக, அல்லது உபபத முதலுறுப்பினராகவும் அமையும்) தொகையில் இறுதியுறுப்பினரின் இறுதியசை உதாத்தம் பெறும்.

1. த² – ஸுந்த²: 'நன்றாக வழிகாட்டுபவன்'
   அவப்⁴ருத 'யாகத்தின் யஜமானரின் புனித நீராட்டு'

2. அத² – ஆவஸத² 'இருப்பிடம், வீடு'
   உபவஸத² 'உண்ணாவிரதம் இருக்கும் தினம்'

3. க²ஞ் – ப்ரபே⁴த³–'பிளத்தல், உடைத்தல்'
   காஷ்டபே⁴த³ 'விறகு உடைத்தல்'

4. க்த – தூ³ராத³ாக³த 'தொலைவிலிருந்து வந்து சேர்ந்த
   விஸுஷ்க 'பலவகையில் உலர்த்தப்பட்ட'
   ஆதபஸு¹ஷ்க 'வெய்யிலில் உலர்த்திய'

5. அச் – ப்ரக்ஷய 'சிறந்த இருப்பிடம்'
   ப்ரஜய

6. அப் – ப்ரலவ – 'துண்டு', ப்ரஸவ

7. இத்ர – ப்ரலவித்ர 'வெட்டுதல்' ப்ரஸவித்ர

8. க – கே³ா வ்ருஷ 'காளை'
   ஆனால் ஸுஸ்துதம் 'ஸு' ஒரு கர்ம ப்ரவசனீயம், 'கதி' அல்ல.

**6.2.145** ஸுபமானாத் கத:

'ஸு' அல்லது உவமைச் சொல்லைத் தொடர்ந்து நிற்கும் 'க்த' வில் முடியும் சொல்லினிறுதியசை உதாத்தம் பெறும்.

ஸு – ஸுக்ருதம் 'சிறப்பாகச் செய்த' ஸுபு⁴க்தம் 'நன்றாக உண்ட' **6.2.49**க்கு இது புறனடை.

உபமான–வ்ருகாவலுப்தம் 'ஓநாய் போன்று தனது இரையின் மேல் பாய்ந்த' **6.2.48**க்கு இது புறனடை.

ஸ1ஸப்லுதம்–முயலைப் போன்று தாவிய', ஸிம்ஹ வினர்தி3தம் 'சிங்கத்தைப் போன்று கர்ஜிக்கின்ற'

'ஸு'ஒரு 'கதி'ச் சொல்லாக வராமல் உபசர்க்கமாகும்போது இவ்விதி செயற்படாது. காட்டாக ஸுஸ்லுதம் ப4வதா.

**6.2.146** ஸம்க்3ஞாயாமனாசிதாதீ3னாம்

அசித 'சேகரிக்கப்பட்ட, திரட்டிய' வகுப்பைச் சேர்ந்த சொற்களைத் தவிர்த்த (அனாசித) மற்ற 'க்த' ஒட்டில் முடியும் சொற்கள் இறுதியுறுப்பினராக நிற்கும் தொகையின் முதலுறுப்பினர், கதி, அல்லது காரக அல்லது உபபதமாக அமையும்போது), பொருள் ஒரு பெயரானால், அதனிறுதியுறுப்பினரின் இறுதி அசை உதாத்தமாகும்.

ஸம்பூ4த: ராமாயண:, உபஹூத: ஸாகல்ய: (6.2.49க்குப் புறனடை) த4னுஷ்க2தா நதீ, சூத்3த3ால க2ாதம் நக3ரம், ஹஸ்திம்ரு1தி3தா பூ4மி: (6.2.48க்குப் புறனடை) ஆனால் அசித 'குவித்த, சேகரித்த', ஆஸ்தாபித 'நிர்மாணித்த'

வா: ஸம்ஹிதா அக3வி

'அசித' வகுப்பைச் சேர்ந்த 'ஸம்ஹிதா' என்ற சொல் கே3ா 'பசு' என்ற பொருளைச் சுட்டாமல் வேறொரு பொருளைச் சுட்டும் போது அதனிறுதியசை உதாத்தம் பெறாது. ஆனால் 'கே3ா' (பசு) என்ற பொருளில் அதனிறுதியசை உதாத்தமாகும்.

**6.2.147** ப்ரவ்ருத்3த4ாதீ3னாம் ச

'க்த' ஒட்டில் முடியும் ப்ரவ்ருத்3த4 'பரப்பிய, வளர்ந்த' வகுப்பைச் சேர்ந்த சொற்களின் (இறுதியுறுப்பினராக நிற்கும் ஒரு தொகையில்) இறுதியசை உதாத்தம் பெறும்.

ப்ரவ்ருத்3த4ம் யானம் 'நீண்ட வண்டி'

ப்ரவ்ருத்3த4: வ்ருஷல: 'பலம் பொருந்திய விருஷலன்'

கவிஸ'ஸ்த:, ப்ரயுக்தா ஸக்தவ:, அவஹித:, பே4ாகே3 6.2.48,49க்குப் புறனடை.

**6.2.148** காரகாத்3த3த்த ஸ்'ருதயோரேவாஸி'ஷி

காரகத் தொடர்பைக் குறிக்கும் சொல் முதலுறுப்பினராகவும், த3த்த 'கொடுக்கப்பட்ட' 'ஸ்'ருத' 'கேள்விப்பட்ட' என்ற க்தவில் முடியும் சொற்கள் மட்டுமே இறுதியுறுப்பினராகவும்அமையும் ஒரு பெயரைச் சுட்டுவதாகவும், ஆசீர்வாதம் என்ற பொருளைச் சுட்டுவதாகவும் அமையும் தொகையினிறுதியுறுப்பினரின் இறுதியசை உதாத்தம் பெறும்.

தே3வா ஏனம் தே3யாஸுர் தே3வத3த்த: 'ஒரு பெயர் 'கடவுளால் கொடுக்கப்பட்டவன்'; விஷ்ணு: ஏனம் ஸ்ரூயாத் விஷ்ணுண'ருவ: 'ஒரு பெயர்' (விஷ்ணுவால் செவிசாய்க்கப்பட்ட)

ஆனால் தே3வபாலித: 'தேவர்களால் காக்கப்பட்ட' (6.2.48) ஒரு பெயரானாலும் 6.2.146ஐப் பயன்படுத்தி ஆக்கப்படவில்லை ஆகைய ால் இறுதியசையில் இது

உதாத்தம் பெறாது. அதாவது இச்சூத்திரம் (6.2.148) இதைக் கட்டுப்படுத்தாது ஆகையால், காரகத் தொடர்புடைய சொல் முதலுறுப்பினராகவும் 'க்த' ஒட்டில் முடியும் சொல் இறுதியுருப்பினராகவும், கொண்ட, ஒரு பெயரைச் சுட்டும், தொகை ஆசீர்வாதம் என்ற பொருளில் அமையும்போது 6.2.146இல் விதிக்கப்பட்டபடி அத்தொகையினிரண் டாவது உறுப்பினரின் இறுதியசை உதாத்தம் பெறாது. அச்சொல் 6 .2.48 விதிக்கு உட்பட்டது. 'க்த'வில் முடியும் சொல் 'த[3]த்[3]ா[2]', ஸ்ரு[1]த என்பவைகளாகும்போது மட்டுந்தான் இவ்விதி செயற்படும்.

'ஏவ' (மட்டும்) என்பது 'காரக'த் தொடர்புடைய சொல்லோடு மட்டும்தான், த[3]த்த ஸ்[1]ருத ஆகியவைகள் இவ்வாறு சுரம் பெறும் எ ன்று 'காரக'த்துக்கு கட்டுப்பாடு விதிக்கிறது. 'த[3]த்த' 'ஸ்[1]ருத' எ ன்பவைகளுக்கு அல்ல. ஏனென்றால், 'த[3]த்த', ஸ்[1]ருத ஆகியவைகள் காரகமல்லாத சொற்களைத் தொடர்ந்து நிற்கும்போது இத்தகைய சுரம் பெறும். ஸு ஸ்[1]ருத: தே[3]வக[2]ாதா (ஆசீர்வாதம் என்ற பொருளைச் சுட்டவில்லை)

தே[3]வத[3]த்த 'அர்ஜுனனின் சங்கின் பெயர்'. இது தொகையின் முதலுறுப்பு காரக உறவைபோ ஆசீர்வாதம் என்ற பொருளையோ சுட்டவில்லை (6.2.48)

**6.2.149** இத்த[3]ம்பூ[4]தேன க்ருதமிதி ச

'காரக'ச் சொல்லைத் தொடர்ந்து 'க்த' ஒட்டில் முடியும் சொற்கள் ஒரு தொகையிலமைந்து அத்தொகை இத்தகைய நிலையில் ஒருவனால் செய்யப்பட்ட என்ற பொருளைச் சுட்டும்போது அத்தொகையினிறுதியுறுப்பினரின் இறுதியசை உதாத்தம் ஆகும். ஸுப்தப்ரஸபிதம் 'தூங்குலையில் கூறப்பட்ட'; ப்ரமந்தககீ[3]தம் 'குடித்த நிலையில் பாடப்பட்ட' 6.2.48க்குப் புறனடை.

**6.2.150** அனா ப[4]ாவ கர்மவசன:

ஒரு நிலைமை அல்லது செயப்படுபொருளைச் சுட்டும் (பாவகர்ம வசன) 'அன'வில் முடியும் சொல்லை யிறுதியுறுப்பினராகவும் ('காரக' உறவைச் சுட்டும் சொல் முதலுறுப்பினராகவும்) கொண்ட தொகையினிறுதியுறுப்பினரின் இறுதியசை உதாத்தம் பெறும்.

ஒத[3]னப[4]ாஜனம் 'சோறு உண்பது'

பய: பானம் 'பால் குடித்தல்'

கர்மவசன—

ராஜபே[4]ாஜனா: [1]ஸாலய: 'அரசர்களாலுண்ணப்பட்ட அரிசி'

ராஜாச் ச[2]ாத[3]னானி வாஸாம்ஸி 'அரசர்கள் கட்டிக் கொண்ட உடை' (3.3.116) ஆனால் த[3]ந்த த[4]ாவனம் (கரணம், கர்மன் அல்ல) 3.3.117); நித[3]ர்ஸனம். முதலுறுப்பினர் காரகமல்ல) மாற்று எடுத்து க்காட்டுக்களில் மூல சுரம் நீடிக்கிறது.

**6.2.151** மன் க்தின் வ்யாக்2யான ஸ'யனாஸன ஸ்தான யாஜகாதி3க்ரீதா:

மன், க்தின் ஆகியவைகளில் முடியும் சொற்கள், வ்யாக்2யான 'உரை', ஸ'யன 'படுத்தல்', ஆஸன 'உட்கார்தல்', ஸ்த2ான 'இடம்', யாஜக' முதலிய சொற்கள், க்ரீத 'வாங்கிய' ஆகியவைகள் இறுதியுறுப்பினராகவும் ('காரக' முதலுறுப்பினராகவும் அமையும்) தொகையினிறுதியுறுப்பினரினிறுதியசை உதாத்தம் பெறும்.

1) மன்–ரத2வர்த்மன் 'தேரோடும் வீதி'

2) க்தின்–பாணினிக்ருதி: 'பாணினியின் நூல்'

3) ச3ந்தே3ா வ்யாகரணம்–'சந்தனின் உரை'

4) ராஜஸ'யனம் 'அரசனின் கட்டில்'

5) ராஜாஸனம்–'அரச சிங்காதனம்'

6) கோ3ாஸ்த2ானம்–'மாட்டுக் கொட்டில் 6.2.150க்குப் புறனடையிது.

7) ப்3ராஹ்மணயாஜக: 'பிராம்மணபுரோகிதர்'

8) கோ3ாக்ரீத–'மாட்டுக்குப் பதிலியாக வாங்கியது'
(6.2.48க்குப் புறனடையிறு)
இவைகளெல்லாம் 6.2.139க்குப் புறனடை.

**6.2.152** ஸப்தம்யா: புண்யம்

ஏழாம் வேற்றுமைச் சொல்லைத் தொடர்ந்து 'புண்யம்' என்ற சொல்லிறுதியில் நிற்கும் தொகையில், 'புண்யம்' என்ற சொல்லினி றுதியசை உதாத்தம் பெறும்.
வேத3புண்யம்–'வேதம் படிப்பதிலிருந்து அடையும் புண்ணியம்'
6.2.2க்குப் புறனடை.

**6.2.153** ஊனார்த2கலஹம் த்ருதீயாயா:

மூன்றாம் வேற்றுமைச் சொல்லைத் தொடர்ந்து 'குறைவு' என்ற பொருளைச் சுட்டும் சொற்கள் (ஊனார்த) கலஹ 'சண்டை' என்ற சொற்கள் நிற்கும்போது, இவைகளினிறுதியசை உதாத்தம் பெறும்.
மாஷோனம் 'ஒரு மாஷ அளவு எடை குறைவு'
வாக்கலஹ: 'வாய்ச்சண்டை', அஸிகலஹ: 'கத்திச் சண்டை' 6.2.2க்குப் புறனடை.

**6.2.154** மிஸ்'ரம் சானுபஸர்கமஸந்தெ⁴ள

மூன்றாம் வேற்றுமைச் சொல்லைத் தொடர்ந்து, உபசர்க்கத்துடன் சேர்ந்து வராமல் தனியாக நிற்கும் (அனுபசர்க), 'ஒப்பந்தம், உறவு' என்ற பொருளைச் சுட்டாத (அஸந்தௌ⁴ள) மிஸ்'ர 'கலக்கப்பட்ட' என்ற சொல் இறுதியுறுப்பினராக அமையும் போது அதனிறுதியசை உதாத்தம் பெறும். கு³ட³மிஸ்'ர, திலமிஸ்'ர 'வெல்லத்தோடு அல்லது எள்ளுடன் கலக்கப்பட்ட' (6.2.2க்குப் புறனடை). ஆனால் ப்³ராஹ்மணமிஸ்'ர: ராஜா 'பிராம்மணனுடன் உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்ட அரசன்': கு⁴ட³ஸம்மிஸ்'ர 'வெல்லத்துடன் நன்றாக கலக்கப்பட்ட'

**6.2.155** நஞோ கு³ண ப்ரதிஷேதே⁴ ஸம்பாத்³யர்ஹ ஹிதாலமர் த²ாஸ் தத்³தி⁴தா:

'அதற்கேற்ற' (ஸம்பாதி³ன் (5.1.99), தகுதி வாய்ந்த (அர்ஹ 5.1.63), அதற்குகந்த (ஹித 5.1.5), அதைச் செய்யும் திறமை வாய்ந்த (அலமர்த²ா: 5.1.101) என்ற பொருட்களைச் சுட்டும் தத்திதவொட்டுக்களாலாக்கப்பட்ட சொற்கள் இறுதியுறுப்பினராகவும் அக்குணங்களை மறுக்கும் அல்லது இல்லாததாக்கும் 'நஞ்' (எதிர்மறையொட்டு) ஒட்டு அச் சொற்களுக்கு முன் நின்று அமையும் தொகையின் இறுதியுறுப்பினிரினிறுதியசை உதாத்தம் பெறும்.

1. ஸம்பாதி3ன–அகார்ண வேஷ்டகிகம் 'காதணி அணியத் தகுதியற்ற (முகம்)'
2. அர்ஹ–அசை²தி³க: ''வெட்த் தகுதியற்ற''
3. ஹித–அவத்ஸீய: ''கண்ணுக்கு நன்மை பயக்காத''
4. அலமர்த²–அஸந்தாபிக: ''சூடு உண்டாக்கும் திறமையற்ற''
   இவைகளெல்லாம் 6.2.2க்குப் புறனடை.

**6.2.156** யயதோஸ்'சாத³ர்தே²

'அதற்குரியது' என்ற பொருளைச் சுட்டாத, 'ய', 'யத்' என்ற தத்திதவொட்டுக்களில் முடியும் சொற்களிறுதியுறுப்பினராகவும் மேலே கூறிய பொருளைச் சுட்டும் 'நஞ்' ஒட்டு முதலுறுப்பினராகவுமமையும் தொகையினிறுதி யுறுப்பினரின் இறுதியசை உதாத்தம் பெறும் ய–அபாஸ்யா 'கயிறுகளின் திரளாக்குவதற்குத் தகுதியற்ற',
யத்–அத³ந்த்யம் 'பல்லிலிருந்து உண்டாகாத' 6.2.2க்குப் புறனடை. ஆனால் அபாத்³யம் 'கால் கழுவுவதற்கல்லாத தண்ணீர்

**6.2.157** அச்காவஸ'க்தெள

'அச்', 'க' ஆகியவைகளின் முடியும் சொற்கள் இறுதியுறுப்பினராகவு ம் 'நஞ்' முதலுறுப்பினராகவும் அமையும். 'திறமையற்ற' என்ற பொருளைச் சுட்டும் தொகையினிறுதியுறுப்பினரினிறுதியசை உதாத்தம் பெறும்.
அச்–அபச: (3.1.134) ''சமைக்கும் திறமையற்ற''

அஜய: (3.3.56) 'வெல்லும் திறமையற்ற'
க– அவிக்ஷிப: (3.1.135) 'எறியுந்திறமையற்ற' ஆனால் அபச: 'சமைக்காத'

**6.2.158** ஆக்ரோஸே' ச

'அச்', 'க' ஆகியவைகளில் முடியும் சொற்கள் இறுதியுறுப்பினராகவும் 'நஞ்' ஒட்டு முதலுறுப்பினராகவும் அமையும் தொகை, 'வைதல்' என்று பொருளைச் சுட்டும்போது அதனிறுதியுறுப்பினரினிறுதியசை உதாத்தம் பெறும்.
அச்–அபட[2] 'படிக்காதவன்'
க–அவிலிக[2]: 'எழுதத் தெரியாதவன், அறிவற்றவன்'
இவையிரண்டும் வசவாகும். 6.2.2க்குப் புறனடை.

**6.2.159** ஸமக்[3]ஞாயாம்

'வைதல்' என்ற பொருளைச் சுட்டும் தொகையில் 'நஞ்'ஐயடுத்து வரும் சொல்லினிறுதியுறுப்பினரினிறுதியசை உதாத்தம் பெறும்.
அதே[3]வத[3]த்த:– 'தேவதத்தனென்ற பெயரால்ழைக்கத் தகுதியற்றவ ன் அவிஷ்ணுமித்ர:

**6.2.160** க்ருத்யோகேஷ்ணுச்சார்வாத[3]ய:

'க்ருத்ய' ஒட்டுக்கள், 'உக', இஷ்ணுச் ஆகியவொட்டுக்களில் முடியும் சொற்கள் 'சாரு' அழகிய' என்ற சொல்லில் தொடங்கும் வகுப்பைச் சேர்ந்த சொற்கள், 'நஞ்' ஒட்டைத் தொடர்ந்து நிற்கும் தொகையினிறுயுறுப்பினரினிறுதியசை உதாத்தம் பெறும்.

1. க்ருத்ய–அகர்தவ்யம் 'செய்யத்தகாதது'
   அகரணீயம் 'செய்யத் தகாதது'

2. உக–அநாக[3]ாமுகம் 'எதிர்பார்த்தது'

3. இஷ்ணுச்–அநலங்கரிஷ்ணு: 'ஒப்பனை செய்யத் தகுதியற்ற'

4. சாரு- அசாரு 'கவர்ச்சியற்ற' அஸாது[4] 'தகுதியற்ற'

**6.2.161** விப[4]ாஷா த்ருன்னன்ன தீக்ஷ்ண ஸூசிஷு

'நஞ்' ஒட்டுக்குப்பின் நிற்கும் 'த்ருன்' ஒட்டில் முடியும் சொற்கள், அன்ன 'உணவு', தீக்ஷ்ண 'கூர்மையான', ஸூ1சி 'சுத்தமான' ஆகியவைகளினிறுதியசை விருப்பாக உதாத்தம் பெறும்.

1. த்ருன்–அகர்த்ரு அல்லது அகர்த்ரு 'கர்த்தா அல்லாத'
2. அனன்ன அல்லது அனன்ன 'உணவு என்று சொல்லத் தகுதியற்ற, உண்ணத்தகாத'

3. அதீக்ஷ்ண அல்லது அதீக்ஷ்ண 'காரமில்லாத'
4. அஸுசி அல்லது அஸுசி 'அழுக்கான, தூய்மையற்ற'

**6.2.162** ப3ஹுவ்ரீஹாவித3மேதத்தத்3ப்4ப: ப்ரத2மபூரணயோ: க்ரியாக3ணனே

ஒரு பஹுவ்ரீஹித் தொகையில் இத3ம், 'இது, இந்த' ஏதத்3, தத்3, 'அது, அந்த' என்ற மாற்றுப் பெயர்களுக்குப்பின் நிற்கும் ப்ரத2ம 'முதல்', பூரண' எண் வரிசை முறைப்பெயர்' ஆகியவைகள், 'எவ்வளவு முறை ஒரு செயல் நடந்தது' என்ற பொருளை அத்தொகை சுட்டும்போது இறுதியசையில் உதாத்தம் பெறும்.

இத3ம்ப்ரத2ம (இச்செயலின்) இது முதல் தடவை', ஏதத்3
த்3விதியா (இச்செயலின்) இது இரண்டாம் தடவை
தத்த்ருதீயா' (இச்செயலின்) அது மூன்றாம் தடவை'

**6.2.163** ஸங்க்2யாயா: ஸ்தன:

ஒரு பஹுவ்ரீஹித் தொகையில் எண்ணுப் பெயருக்குப்பின் நிற்கும் ஸ்தன 'முலை, மடி' என்ற சொல்லின் இறுதியசை உதாத்தம் பெறும்.

த்3விஸ்தனா, சது:ஸ்தனா ஆனால் த3ர்ஸ1னீயஸ்தனா, த்விஸி1ரா

**6.2.164** விப4ாஷா ச2ந்த3ஸி

எண்ணுப்பெயருக்குப்பின் நிற்கும் 'ஸ்தன', வேதமொழியில் விருப்பாக இறுதியசையில் உதாத்தம் பெறும்.

த்3விஸ்தனா அல்லது த்3விஸ்தனா

**6.2.165** ஸம்க்3ஞாயாம் மித்ராஜினயோ:

மித்ர 'நண்பன்', அஜின 'மான்தோல்' என்ற சொற்கள் இறுதியில் அமையும் பஹுவரீஹித் தொகை ஒரு பெயரைச் சுட்டும்போது, அச்சொற்களினிறுதியசை உதாத்தம் பெறும் தே3வமித்ர:, வ்ருகாஜின: 'பெயர்கள்; ஆனால் ப்ரியமித்ர: நண்பர்களிடம் அன்பானவன்' மஹாஜின: 'பெரிய மான் தோலை உடையவன்'

வா: குஷிப்ரதிஷேதே4ா மித்ரே

இத்தொகை சுட்டும் பெயர் ஒரு ரிஷியின் பெயராகும்போது, 'மித்ர' என்ற சொல், இந்த சுரம் பெறாது.

விஸ்வாமித்ர: (6.2.100)

**6.2.166** வ்யவாயிவோ அந்தரம்

ஒரு பஹுவ்ரீஹித் தொகையில் அந்தர 'இடையில் புகுதல்' என்ற சொல்லிறுதியுறுப்பினராக நின்று அது 'இடையில் வரும் பொருள்' என்ற பொருளைச் சுட்டும்போது அச்சொல்லினிறுதியசை உதாத்தம் பெறும்.

வஸ்த்ராந்தரம் 'துணியால் (மூடும்) பிரித்த 'ஆனால் ஆத்மாந்தர: 'மாறான இயற்கையுடைய'

**6.2.167** முக²ம் ஸ்வாங்கம்

'ஒருவரின் உடலின் ஒருறுப்பு' என்ற பொருளைச் சுட்டும் ப³ஹுவ்ரீஹித் தொகையினிறுதியுறுப்பினராக நிற்கும் முக² 'முகம்' என்ற சொல்லினிறுதியசை உதாத்தம் பெறும்.

கௌ³ரமுக²:-'வெள்ளைமுகமடைய'

ப⁴த்³ரமுக²:-'நன்மையான முகமுடைய'

ஆனால் தீ³ர்க⁴முக²ா ஸ'ாலா 'உயர்ந்த நுழைவு கொண்ட மண்ட பம்'

**6.2.168** நாவ்யய தி³க் ஸ'ப்³த³ முக³ாமஹத் ஸ்தூ²ல முஷ்டி ப்ரு'து² வத்ஸேப்⁴வ:

பஹுவ்ரீஹித் தொகையில், அவ்யயம், திசையைக் குறிக்கும் சொல் , (திக்ஸப்த), கே³ா 'பசு', மஹத் 'பெரிய', ஸ்தூ²ல 'கனமான, பளுவான', முஷ்டி 'முட்டி', ப்ருது² 'அகலமான' வத்ஸ 'கன்று' ஆகிய சொற்களுக்குப்பின் இறுதியுறுப்பினராக நிற்கும் 'முக²' என்ற சொல்லினிறுதியசை உதாத்தமாகாது.

1. உத்வசர் முக²: 'மேலே தூக்கிய முகத்தையுடைய'
2. ப்ராண்முக²: கிழக்கு நோக்கித் திரும்பிய முகத்தையுடைய
3. கே³ாமுக²: பசு (போன்ற) முகத்தையுடைய
4. மஹாமுக²: 'பெரிய முகத்தைக் கொண்ட
5. ஸ்தூ²லமுக:
6. முஷ்டிமுக²: 'முட்டியைப் போன்ற முகத்தையுடைய
7. ப்ரு'து²முக²: 'அகன்ற முகத்தையுடைய'
8. வத்ஸமுக²: 'கன்றைப் போன்ற முகத்தையுடைய'

6.2.1இன்படி இத்தொகைகளில் முதலுறுப்பினர் தனது சுரத்தை நீடித் து வைத்துக்கொள்கின்றன. கோ, முஷ்டி, வத்ஸ ஆகியவைகளின் அடு த்துவரும் சூத்திரத்தில் விதிக்கப்பட்டிருக்கும் விருப்பு விதிக்கு (முன்ப ாகவே) புறனடையாக அமைகிறது இச்சூத்திரம்.

**6.2.169** நிஷ்டே²ாபமானாத³ன்யதரஸ்யாம்

பஹுவ்ரீஹித் தொகையில் 'நிஷ்டா' ஒட்டுக்களாலாக்கப்பட்ட சொற்கள் அல்லது உவமைச் சொல்லுக்குப்பின் நிற்கும் (மேற்கூறிய பொருளில்) 'முக' என்ற சொல்லினிறுதியசை விருப்பாக உதாத்தம் பெறும்.

ப்ரக்ஷாலிதமுக²: (6.2.167) அல்லது ப்ரக்ஷாலிதமுக²: (6.2.110) அல்லது ப்ரக்ஷாலிதமுக²: (6.2.49)

'அலம்பிய முகத்தையுடைய'

ஸிம்ஹமுக²: அல்லது ஸிம்ஹமுக²:, 'சிங்கத்தைப்போன்ற முகத்தையுடைய'

**6.2.170** ஜாதி கால ஸுக$^2$ாதி$^3$ப்$^4$யோ அனாச்ச$^2$ாத$^3$னாத் க்தோ அக்ருதமித ப்ரதிபன்ன:

ஆடை அல்லது உறையைச் சுட்டும் சொற்களைத் தவிர்த்து மற்ற இனத்தைச் சுட்டும் சொற்கள், (அனாச்சனாத்) காலத்தைக் குறிக்கும் சொல் (கால), ஸுக$^2$ (மகிழ்ச்சி) வகுப்பைச் சேர்ந்த சொற்கள் ஆகியவைகளுக்குப்பின் நிற்கும் 'க்ருத 'செய்யப்பட்டது', மித 'அளக்கப்பட்ட', ப்ரபன்ன 'உறுதியளிக்கப்பட்ட' என்ற சொற்களைத் தவிர்த்த மற்ற 'க்த' ஒட்டில் முடியும் சொற்களின் இறுதியசை (ஒரு பஹுவ்ரீஹித் தொகையில்) உதாத்தம் பெறும்.

1) ஜாதி – ஸாரங்க$^3$ஜக்$^3$த$^4$: 'மானை உண்டவன்',
பலாண்டு$^3$ப$^4$க்ஷித:
2) க்த–மாஸஜாத: 'பிறந்து ஒரு மாதமான'
3) ஸுக ஜாத: – 'மகிழ்ச்சியளிக்கும் பிறப்புடைய'
ஆனால் புத்ர ஜாத: 'மகன் பிறந்தவன் 'புத்ர' (ஜாதியைச் சுட்டும் சொல்லல்ல)
வஸ்த்ரச்ச$^2$ன்ன: 'துணியால் மூடப்பட்ட' குண்ட$^3$க்ருத: பானை செய்தவன்'
குண்ட$^3$மித: குண்ட$^3$ப்ரதிபன்ன:

**6.2.171** வா ஜாதே

மேலே குறிப்பிட்ட ஜாதி, கால, ஸு ஆகியவைகளுக்குப்பின் நிற்கும், ஜாத 'பிறந்த' என்ற சொல்லினிறுதியசை விருப்பாக உதாத்தம் பெறும்.

1) த$^3$ந்த ஜாத அல்லது த$^3$ந்தஜாத 'பல்முளைத்தவன்'
2) மாஸஜாத அல்லது மாஸஜாத 'ஒரு மாதத்துக்கு முன் பிறந்த'
3) ஸுக$^2$ ஜாத அல்லது ஸுக$^2$ஜாத

**6.2.172** நஞ் ஸுப்$^4$யாம்

ஒரு பஹுவ்ரீஹித் தொகையில் 'நஞ்', 'ஸு' ஆகியவைகளுக்குப்பின் நிற்கும் இறுதியுறுப்பினரினிறுதியசை உதாத்தம் பெறும்.

அயவ: 'பார்லி காணப்படாத', ஸுயவ: 'பார்லி நிறைந்த'

**6.2.173** கபி பூர்வம்

ஒரு பஹுவ்ரீஹித் தொகையில், 'நஞ்' 'ஸு'வுக்குப்பின் நிற்கும் (ஸமாஸாந்தவொட்டான) 'கப்–பில் முடியும் இறுதியுறுப்பினரின் 'கப்'புக்கு முன்னால் காணப்படும் அசை உதாத்தம் பெறும்.

அகுமாரீக: தே$^3$ஸ$^1$: 'இளம்பெண்களில்லாத தேசம்'
ஸுகுமாரீக: 'இளம் பெண்கள் நிறைந்த'

**6.2.174** ஹ்ரஸ்வாந்தே அந்த்யாத் பூர்வம்

ஸமாஸாந்தவொட்டான 'கப்' இணைக்கப்படும் பஹுப்ரிஹித் தொகையினீறு குறிலாகவும், அதன் முதலுறுப்பினர் 'நஞ்' அல்லது 'ஸு' வாக அமையும்போது, அந்த இறுதி உயிருக்கு முன் நிற்கும் அசை உதாத்தம் பெறும்.

அயவகோ தே³ஸ': அவ்ரீஹிக: ஸுயவக:, ஸுவ்ரீஹிக:

'பூர்வ' என்ற சொல், இதற்கு முந்திய சூத்திரத்திலிருந்து அனுவிருத்தியாகும். ஆயினும், இச்சொல்லைத் திரும்பவும் இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இதற்கு முந்திய சூத்திரத்தில் 'கப்' ஒட்டுக்கு முன் நிற்குமசை உதாத்தம் பெறும். இச்சூத்திரத்தில், குறிலீற்றுக்கு முன் நிற்குமசை உதாத்தம் பெறும். 'கப்'புக்கு முன்னமையுமசையல்ல என்ற இவ்விரண்டுக்குமிடையே காணப்படும் வேறுபாட்டைச் சுட்டும் வண்ணம், இச்சூத்திரத்திலும் 'பூர்வ' என்ற சொல் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. (கப்'பின் 'க'வையும் 'ஸு' அல்லது 'நஞ்'ஐயும் தள்ளி) ஈரசைச் சொற்களில் இத்தகைய சுரம் அமையும் வாய்ப்பு காணப்படலாம்.

அக்³ஞக:, ஸுக்³ஞக: (6.2.173)

**6.2.175** ப³ஹோர் நஞ்வது³த்தரபத³ பூ⁴ம்னி

ப³ஹு 'நிறைய' என்ற சொல்லை முதலுறுப்பினராகக் கொண்ட பஹுவ்ரீஹித் தொகையில், இரண்டாவது உறுப்பினரால் குறிப்பிடப்படும் பொருளின் மிகுதி என்ற பொருளைச் சுட்டும்போது, அத்தொகையினிறுதியுறுப்பினர் 'நஞ்' ஒட்டோடு வரும்போது எவ்வாறு சுரம் பெறுமோ அதே போன்ற சுரம் (நஞ்வத்) அதாவது உதாத்தம் பெறும்.

6.2.116 ப³ஹுஜர 'நிறைய வயதான'
ப³ஹுமர, ப³ஹுமித்ர, ப³ஹும்ருத
6.2.172 ப³ஹுயவ
6.2.173 ப³ஹுகுமாரீக
6.2.174 ப³ஹுவ்ரீஹிக
ஆனால் ப³ஹுமன:

**6.2.176** நஞு³ணாத³வோ அவயவா:

'கு³ண' முதலிய சொற்கள், 'பஹு' என்ற சொல்லைத் தொடர்ந்து நிற்கும் பஹுவ்ரீஹித் தொகையில் 'குண' முதலியவைகள், மற்றொரு பொருளில் பகுதியாகக் காணப்படும்போது (அவயவா:) அத்தொகையினிறுதியுறுப்பினரினிறுதியசை உதாத்தம் பெறாது.

பஹுகு³ணா: ரஜ்ஜு: 'பல பிரிவுகளைக் கொண்ட கயிறு'

பஹ்ளக்ஷரம் பத³ம் 'பலவகைகளைக் கொண்ட சொல்' (8.2.4 ஆனால் ப³ஹுகு³ண 'பலகுணம் பொருந்திய'

**6.2.177** உபஸர்க³ாத் ஸ்வாங்க³ம் த்⁴ருவமபர்ஸு

உபசர்க்கத்தைத் தொடர்ந்து, பர்ஸு 'பக்கம்' என்ற சொல்லைத் தவிர்த்த மற்ற மாற்றமடையாத (த்⁴ருவம்)

ஒருவனின் உடலுறுப்பு (ஸ்வாங்கம்) என்ற பொருளைச் சுட்டும் சொல் இறுதியுறுப்பினராக நிற்கும்போது அதனிறுதியசை உதாத்தம் பெறும்.

ப்ரப்ருஷ்ட[2]: 'பரந்த முதுகுகொண்ட'
ப்ரோத[3]ர: 'பெருவயிறுபடைத்த'
ஆனால் த[3]ர்ஸ'னீய லலாட: 'அழகிய நெற்றியுடைய'
'உபசர்க்கத்தைத் தொடர்ந்து வரவில்லை); ப்ரஸ'ாக[2]:
வ்ருக்ஷ: 'உயர்ந்த கிளைகளைக் கொண்ட மரம்' (ஸ'ாக[2]ா ஒரு அவயவமல்ல);
உத்[3]ப[3]ாஹு 'கைகள் உயர்த்தப்பட்ட (த்ருணம் அல்ல) உத்பர்ஸு'

**6.2.178** வனே ஸமாஸே

ஒரு தொகையில் உபசர்க்கத்துக்குப் பின் நிற்கும் வன 'காடு' என்ற சொல்லினிறுதியசை உதாத்தம் பெறும்.
ப்ரவண 'சிறந்த காட்டைக் கொண்ட' (பஹுவ்ரீஹி) அல்லது 'சிறந்த காடு' (தத்புருஷ)
'ஸமாஸ' என்ற சொல், இங்கு பயன்படுத்தியிருப்பதால் அதிகார விதியான பஹுவ்ரீஹி முடிவடைகிறது என்று பொருட்படும். ஆகையால் இது பொதுவாக ஒரு தொகையைப்பற்றிப் பேசுகிறது.

**6.2.179** அந்த:

அந்த: 'உள்ளே' என்ற சொல்லைத் தொடர்ந்து வன 'காடு' என்ற சொல் நிற்கும் தொகையில், இறுதியுறுப்பினரினிறுதியசை உதாத்தம் பெறும்.
அந்தர்வன (3.4.5) 'காட்டுக்குள் அமைந்த இடம்'

**6.2.180** அந்தஸ்' ச

ஒருபசர்க்கத்தைத் தொடர்ந்து அந்த: 'விளிம்பு முடிவு' என்ற சொல் இறுதியுறுப்பினராகவமையும் தொகையில் அச்சொல்லின் இறுதியசை உதாத்தம் பெறும்.
ப்ராந்த ட 'ஓரம், விளிம்பு, எல்லை'
பர்யந்த–'வட்டத்தின் சுற்றளவு, பரிதி'

**6.2.181** ந நிவிப்[4]யாம்

'நி', 'வி' ஆகியவைகளுக்குப்பின் நிற்கும் 'அந்த' என்ற சொல்லினிறுதியசை (இத்தொகையில்) உதாத்தம் பெறாது. நி + அந்த = ந்யந்த 'அண்மை'; வ்யந்த 'தூரத்திலுள்ள' 6.2.180க்குப் புறனடை.

**6.2.182** பரேரபி[4]தோப[4]ானி மண்டலம்

ஒரு தொகையில் 'பரி' என்ற சொல்லைத் தொடர்ந்து 'இருபக்கமும் கொண்டது' (அபி[4]தோ ப[4]ாளி) என்ற பொருளைச் சுட்டும் சொல், மண்டலம் 'வட்டம்' என்ற சொற்கள் இறுதியுறுப்பினராக நிற்கும்போது அவைகளிறுதியசை உதாத்தம் பெறும் பரிகூலம் 'இருகரைகளிலும் காணப்படும்'
பரிமண்ட[3]லம் 'சுற்றளவு'

**6.2.183** ப்ராத$^{3}$ஸ்வாங்க$^{3}$ம் ஸம்க்$^{3}$ஞாயாம்

பெயரைச் சுட்டும் ஒரு தொகையில் 'ப்ர' என்ற சொல்லுக்குப்பின் 'உடலின் ஓரவயத்தைச் சுட்டாத ஒரு சொல் இறுதியுறுப்பினராக நிற்கும்போது அதனிறுதியசை உதாத்தம் பெறும்.

ப்ரகோஷ்ட$^{2}$ம் 'முற்றம்'; ப்ரக்$^{3}$ருஹம் 'வீட்டின் முகப்பு'

ப்ரத்$^{3}$வாரம் 'கதவுக்கு முன்னுள்ள இடம்' ஆனால் ப்ரஹஸ்த 'திறந்த கை'

**6.2.184** நிருத$^{3}$கானி ச

நிருத$^{3}$க 'பாலைவனம்' முதலிய தொகைகளினிறுதியுறுப்பினரின் இறுதியசையும் உதாத்தம் பெறும்.

நிருத$^{3}$க, நிரு பல 'கற்களற்ற'

நிர்மக்ஷிகம் 'கொசுக்களற்ற'; நிஷ்காலக: 'முடிவெட்டிய'; 'துறவி'

இவைகள் ப$^{3}$ஹுவ்ரீஹியாகவோ, ப்ராதி தத்புருஷமாகவோ எடு த்துக் கொண்டால், இவ்வித 6.2.1, 2க்குப் புறனடை.

அவ்யயீபாவமானால், ஏற்கனவே விதிக்கப்பட்ட விதியான 6.1.223 இதில் செயற்படும்.

வா: பரோஹஸ்தபாத$^{3}$ கேஸ$^{1}$கர்ஷா:

'பரி'க்குப்பின் வரும் ஹஸ்த, பாத$^{3}$ கேஸ$^{1}$, கர்ஷ ஆகியவைகளினிறுதியசை உதாத்தம் பெறும்.

பரிஹஸ்த:, பரிபாத$^{3}$:, பரிகேஸ$^{1}$:, பரிகர்ஷ:

**6.2.185** அப$^{4}$ர் முகம்

'அபி$^{4}$'க்குப்பின் நிற்கும் 'முக$^{2}$' என்ற சொல்லினிறுதியசை உதாத்தம் பெறும்.

அபி$^{4}$முக$^{2}$ம் 'எதிர்கொள்' 6.2.177க்குப் புறனடை.

**6.2.186** அபாச் ச

'அப'வுக்குப்பின் நிற்கும் 'முக' என்ற சொல்லும் இறுதியசையில் உத ாத்தம் பெறும்.

அபமுக$^{2}$ம் 'முகத்தைத் திருப்பிக் கொண்டே'

6.2.185-186உம் பஹுவ்ரீஹி அல்லது ப்ராதி தத்புருஷத் தொகையாகும். அப்போது இவைகள் 6.2.1–2க்குப் புறனடையாகும். அவ்யயீபாவமாகும்போது 6.1.233இன்படி இறுதியசை உதாத்தம் பெறும்.

**6.2.187** ஸ்பி$^{4}$க$^{3}$பூத வீணாஞ்ஜோ அத்$^{4}$வகுக்ஷிஸீரநாம நாம ச

ஸ்பி$^{2}$க$^{3}$ 'இடுப்பு' பூத 'இடுப்பு' வீணா 'வீணை', அஞ்ஜஸ் 'சாம்பிராணி' அத்$^{4}$வன் 'சாலை', குக்ஷி 'வயிறு' 'ஏர்' ஐச் சுட்டும் சொற்கள், நாம 'பெயர்' ஆகியவைகள் அப'வுக்குப்பின் இறுதியுறுப்பினராக ஒரு தொகையில் நிற்கும்போது அவைகளினிறுதியசை உதாத்தம் பெறும். அபஸ்பி$^{2}$க$^{3}$ 'நன்றாக அமையாத இடுப்பையுடைய'

அபபூத–'நன்றாக அமையாத இடுப்பைக் கொண்ட'

அபவீணா, அபாஞ்ஜஸ், அபாத்$^4$வர்: அபகுக்ஷி, அபஸீர அல்லது அபஹல, அபநாமன்

**6.2.188** அதே$^4$ருபஸ்தி$^2$தம்

'இதற்கு மேல் நிற்கும் (உபரிஸ்த$^2$ம்) என்ற பொருளைச் சுட்டும் சொல் இறுதியுறுப்பினராக 'அதி$^4$' என்ற சொல்லுக்குப்பின் வரும் தொகையில் இறுதியுறுப்பினரினிறுதியசை உதாத்தம் பெறும்.

அதி$^4$த$^3$ந்த: 'ஒரு பல்லுக்கு மேல் வளர்ந்திருக்கும் மற்றொரு பல்', அதி$^4$கர்வ:

**6.2.189** அநோரப்ரத$^4$ாத்ன கனீயஸீ

ஒரு தொகையினிறுதியுறுப்பினர், முக்கியமல்லாத உறுப்பினராகவும் (அப்ரத$^4$ான), அது, கனீயஸ் 'இளைய' என்பதாகவும், அமைந்து அதன் முதலுறுப்பினர் 'அனு' வாகவும் அமையும் போது இறுதியுறுப்பினரினிறுதியசை உதாத்தம் பெறும்.

அனுஜ்யேஷ்ட$^2$: பெரியவனைத் தொடர்ந்து செல்லும்'

ஆனால் அனுகனீயஸ் 'சிறியவனைத் தொடர்ந்து செல்லும்'

**6.2.190** புருஷஸ்சான்வாதி$^3$ஷ்ட:

புருஷ 'ஆள்' என்ற சொல், முன்பே குறிப்பிடப்பட்டது (அள்வாதி$^3$ஷ்ட) இறுதியுறுப்பினராகவும் 'அனு' முதலுறுப்பினராகவும் நிற்கும் ஒரு தொகையினிறுதியுறுப்பினரின் இறுதியசை உதாத்தம் பெறும்.

அனுபுருஷ: 'மேலே குறிப்பிடப்பட்ட ஆள்' ஆனால் அனுபுருஷ:

'ஒருவருக்குப்பின் செல்பவன்'

**6.2.191** அதேரக்ருத் பதே$^3$

'அதி'க்குப்பின் 'க்ருத்' ஒட்டினாலாக்கப்படாத சொல், பத$^3$ 'கால்' என்ற சொல் ஆகியவைகள் நிற்கும் தொகையினிறுதியுறுப்பினரினிறுதியசை உதாத்தம் பெறும்.

1) அத்யங்குஸ: (நாக$^3$:) 'அடக்கமுடியாத யானை அங்குசத்துக்குக்கட்டுப்படாத யானை' அதிகாஸ$^1$: (அஸ்'வ:)

2) அதிபாத$^3$ (ஸ'க்வரி) ஓரடிக்கும் மேற்பட்ட சீர்ஆனால் அதிகாரக: ' நல்ல காரக'

வா: அதேர் த$^4$ாதுலோப இதிவக்தவ்யம்

'தாது' கெடும் தொகைகளில் மட்டுந்தான் இவ்விதி செயற்படும்.

அதாவது ஒரு தொகையை விரித்துப் பொருள் கூறும்போது, அதனுடன் ஒரு தாதுவையிணைத்து பொருள் கூறினால்தான், அது முழுமையான பொருளைக் கொடுக்கும் என்ற சூழலில்தான் இவ்விதி பயன்படுத்த

வேண்டும். ஆகையால் ஸோ'பன:
க$^{3}$ார்க்$^{3}$ய: = அதிக$^{3}$ார்க்$^{3}$ய என்ற தொகைகள்லல.

**6.2.192** நேரவித$^{4}$ானே
'நி'க்குப்பின் நிற்கும் இரண்டாவது உறுப்பினரின் இறுதியசை அத்தொகை 'மறையாதது' (அநித$^{4}$ானே) என்ற பொருளைச் சுட்டும்போது உதாத்தம் பெறும்.
நிமூலம் 'வேர்வரையில்' நித்ருண ஆனால் நிவாச் 'முணுமுணுப்பு'

**6.2.193** ப்ரதேரம்ஸ்சாத$^{3}$யஸ் தத்புருஷே
தத்புருஷத் தொகையில் அம்ஸு 'கிரணம்' முதலிய சொற்கள் இறுதி யுறுப்பினராக 'ப்ரதி'யைத் தொடர்ந்து நிற்கும்போது, அவைகளினிறுதியசை உதாத்தம் பெறும்.
ப்ரத்யம்ஸு:
ப்ரதிஜன:– 'பகைவன்'
ஆனால் ப்ரதயம்ஸு: (பஹுவ்ரீஹி)

**6.2.194** உபாத் த்$^{3}$வ்யஜஜின மகெ$^{3}$ளராத$^{3}$ய:
தத்புருஷத் தொகையில் முதலுறுப்பினர் 'உப' ஆகவும் இறுதியுறுப்பினர் ஈரசைச் சொல்லாகவோ அல்லது 'அஜின' என்ற சொல்லாகவோ அமையும்போது அதனிறுதியசை உதாத்தம் பெறும். ஆனால் இறுதியுறுப்பினர் 'கெளர' வகுப்பைச் சேர்ந்த சொற்களானால் அவ்வாறாகாது.
உபதே$^{3}$வ: 'கடவுளிடம் அடைக்கலம் புகுந்தவன்' ஆனால்
உபகெ$^{3}$ளர: உபாஜினம்
உபஸோம: (தத்புருஷனல்ல)

**6.2.195** ஸோரவக்ஷேபணே
ஒரு தத்புருஷத் தொகையில், 'ஸு'வைத் தொடர்ந்து நிற்கும் இறுதியுறுப்பினரினிறுதியசை, அத்தொகை 'நிந்தித்தல்' என்ற பொருளைச் சுட்டும்போது உதாத்தம் பெறும்.
ஸுஸ்த$^{2}$ண்டி$^{3}$லம் 'அழகிய இடம்' 'ஸு' புகழ்ச்சியைச் சுட்டுமிடைச்சொல் இங்கும் அதே பொருளில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது. ஆனால் பேசுபவர், பொறமையுடனும் நிந்தையாகவும் இச்சொல்லைப் பயன்படுத்துகிறாரென்று பொருள். காட்டாக, இஹ க$^{2}$ல்வித$^{3}$ானீம் ஸுஸ்த$^{2}$ண்டிலே ஸுஸ்பீ$^{2}$க$^{3}$ாப்$^{4}$யாம் ஸுப்ரத்யவஸித: ஆஸ்'வ 'வெளிநாட்டிலிருந்து திரும்பிய நீ, உனது பருத்த உறுப்புகளுடன், இந்த அழகிய இடத்தில் அமர்ந்து கொள்'

**6.2.196** விப$^{4}$ாஷா உத்புச்சே$^{2}$ஷு
தத்புருஷத் தொகையில் உத்புச்ச என்பதினிறுதியசை விருப்பாக உதாத்தம்

பெறும்.
உத்புச்ச[2]: அல்லது உத்புச்ச[2]: 'வாலுக்குமப்பால் போன' ஆனால் உத்புச்ச: 'உயர்த்திய வாலைக் கொண்ட' (பஹுவ்ரீஹி)

**6.2.197** த்[3]வி த்ரிப்[4]யாம் பாத்[3]த[3]ன் மூர்த[4]ஸு ப[3]ஹுவ்ரீஹௌ

த்[3]வி 'இரண்டு', த்ரி 'மூன்று' என்ற சொற்களுக்குப்பின் நிற்கும் பாத[3] 'கால்', த[3]த் 'பல்', மூர்த[4]ன் 'தலை' ஆகியவைகளிறுதியுறுப்பினராக நிற்கும் பஹுவ்ரீஹித் தொகையின் இறுதியுறுப்பினரினிறுதியசை விருப்பாக உதாத்தம் பெறும். த்[3]விபாத் அல்லது த்[3]விபாத்[3] "இருகால் பிராணி" (5.4.140) த்ரிபாத்[3] அல்லது த்ரிபாத்[2] 'மூன்றுகாலுடைய' முக்காலி' த்[3]வித[3]த் அல்லது த்[3]வித[3]த் (5.4.141) 'இரண்டு பற்கள் கொண்ட'; த்ரித[3]த் அல்லது த்ரித[3]த் 'மூன்று பற்கள் உடைய' த்[3]விமூர்த[4]ன் அல்லது த்[3]விமூர்தன் 'இருதலையுடைய' த்ரிமூர்த[4]ன் அல்லது த்ரிமூர்த[4]ன் 'மூன்று தலைகள் கொண்ட' ஆனால் த்[3]விமூர்த[4]ன் + ஸ'ச் = த்[3]விமூர்த[4] (5.4.115; 6.4.144) ஸமாஸாந்தவொட்டுக்கள் இணைப்பது கட்டாயமல்லவென்று இவைகள் காட்டுகின்றன.

**6.2.198** ஸக்த[2]ம் சாக்ராந்தாத்

பஹுவ்ரீஹித் தொகையில் 'க்ர' ஈற்றுச் சொற்களைத் தவிர்த்து மற்ற சொற்களுக்குப்பின் நிற்கும் 'ஸக்த[2]' (=ஸக்தி + ஷச் (5.4.113) என்ற சொல் விருப்பாக உதாத்தம் பெறும்.
கெ[3]ளர ஸக்த[2]: அல்லது கெ[3]ளர ஸக்த[2]: 'வெளுப்பான தொடைகளையுடைய' ஸ்'லக்ஷண ஸக்த[2]: அல்லது ஸ்'லக்ஷண ஸக்த[2]:
ஆனால் சக்ரஸக்த[2]: ('க்ர'வில் முடியும் சொல்லுக்குப்பின்)

**6.2.199** பராதி[3]ஸ் ச[2]ந்த[3]ஸி ப[3]ஹுலம்

வேதமொழியில் ஒரு தொகையில் இரண்டாவது உறுப்பினரின் முதலசை பலவகையில் உதாத்தம் பெறும்.
அஞ்சிஸக்த[2]ம் ஆலபே[4]த 'எண்ணெய் பூசி புனிதப்படுத்திய தொடைகளையுடைய விலங்கைப் பலியிடவேண்டும்';
ருஜுப[3]ாஹு 'நேரான கைகளையுடைய'; வாக்பதி சொல்லில் மன்னன்' வேதமொழியில், இரண்டாவது உறுப்பினரின் முதலசை, இறுதியசை ஆகிய இரண்டும் அதற்கு முன் நிற்கும் முதலுறுப்பினரின் இவ்விரண்டு அசைகள், ஆகிய எல்லாமே மேலே குறிப்பிட்ட எல்லா விதிகளுக்கும் புறனடையாக உதாத்த சுரம் பெறும் என்று சூத்திரம் அமைய வேண்டும்.

வா: அந்தோதாத்தப்ரகரணே த்ரிசக்ராதீ[3]னாம் ச[2]ந்தஸ்யுபஸம்க்[2]யானம். வேதமொழியில் த்ரிசக்ர முதலிய தொகைகளில், இரண்டாவது உறுப்பினரின் இறுதியசை உதாத்தம் பெறும்.

த்ரிசக்ரேண, த்ரிப3ந்து4ரேண

வா: பூர்வபத3ாந்தோத3ாத்தப்ரகரணே மருத்3வ்ருத்3த4ா தீனாம் ச2ந்த3ன்யுபஸங்க்2யானம்
வேதமொழியில் மருத்3வ்ருத்3த4 முதலியவைகளில் முதலுறுப்பினரின் இறுதிபசை உதாத்தம் பெறும்.
ம்ருத்3வ்ருத்3த4:, விஸ்'வாயு:

வா: பூர்வபத3ாதி3 உத3ாத்தப்ரகரணே திவோத3ா ஸாதீனாம் ச2ந்த3ஸ்யுபஸங்க்2யானம்
வேதமொழியில் 'தி3வோத3ாஸ முதலியவைகளில் முதலுறுப்பினரின் இறுதியசை உதாத்தம் பெறும்.
தி3வோத3ாஸாய ஸாமக3ாயுதே

**6.3.1** அலுகு3த்தரபதே3
ஒரு தொகையின் இரண்டாவது உறுப்பினருக்கு முன் நிற்கும் முதல் உறுப்பினரின் வேற்றுமையுருபு கெடாது (அலுக்)
இது ஒரு அதிகார சூத்திரம். சூ.24வரை இச்சூத்திரத்தின் முதல் சொல்லான 'அலுக்' தொடரும். இரண்டாவது சொல்லான உத்தரபதே3 (இரண்டாவது உறுப்பினருக்குமுன்) இந்தப் பாதத்தினிறுதிவரை தொடர்ந்து வரும்.
ஸ்தோகாத் முக்த: ஸ்தோன்முக்த:
ஆனால் நிஷ்க்ராந்த: ஸ்தோகாத் நிஸ்தோக:

**6.3.2** பஞ்சம்யா: ஸ்தோகாதி3ப்4ய:
'ஸ்தோக' முதலியவைகளுக்குப்பின் நிற்கும் ஐந்தாம் வேற்றுமையுருபு கெடாது.
இச்சூத்திரம் 'ஸ்தோக' முதலியவைகளுக்குப்பின் (ஸ்தோகாதி3ப்4ய: ஐந்தாம்வேற்றுமையுருபுகள் என்ற பொருளைக் கொடுக்கிறது.
இதன் பொருளை முழுமையாகப் பெற, மேற்சூத்திரத்தின் இரண்டு சொற்களையும் தொடர்ந்து கொணர வேண்டும்.
ஸ்தோகாத் + முக்த: = ஸ்தோகான்முக்த: (2.1.30)
அந்திகாத் + ஆக3த: = அந்திகாத3ாக3த: 'அருகிலிருந்து வந்தான்'
சூ. 1.2.46இன்படி, வேற்றுமையுருபுகளோடு சேர்ந்த சொல், ஒரு தொகையாகும்போது பிராதிபதிகம் எனப்படும். பிராதிபதிகத்தி ன் இறுதி ஒட்டு (அ) எழுத்து) கெடும். (2.4.71). ஆகவே, ஸ்தோகாத் முக்த: ஒரு தொகையாகும்போது, ஐந்தாம் வேற்றுமையுருபு கெடவேண்டும். இச்சூத்திரம் அதற்குத் தடைவிதிக்கிறது 'ஸ்தோக' முதலிய சொற்கள் இருமை, பன்மைகளில் ஒருபோதும் தொகையாகாது. அதனால் அவைகளில் இச்சூத்திரம் செயற்படாது.

ஸ்தோகாப்$^4$யாம் முக்த:
ஸ்தோகேப்$^4$ய: முக்த:
இவைகள் தனித்தனிச் சொல்லாகக் கருதப்படும். ஆகவே, இவைகள் ஒரேயொரு சுரம் கொண்டதல்ல. ஸ்தோகான்முக்த: என்பது ஒரு தொகையாவதால் ஒரேயொரு (உதாத்த) சுரம் பெறும். (6.1.158; 6.2.144) ஸ்தோகாப்$^4$யாம் முக்த: தனித்தனிச் சொற்களாகக் கருதப்படுவதால், தனித்தனியாக இரு சுரங்கள் கொண்டதாகும்.

வா: ப்$^3$ராஹ்மணாச் ச$^2$ம்ஸி'ச உபஸங்க்$^2$யானம்
'ப்$^3$ராய்மணாச் ச$^2$ம்ஸி'ன' என்ற தொகையும் இத்துடன் கூறப்படவேண்டும்.
ப்$^3$ராஹ்மணாத் ஆத$^3$ய ஸ'ம்ஸ்தி = ப்$^3$ராஹ்மணாச்ச$^2$ம்ஸி'ன்
'ஒரு வகை இருத்துவிக் புரோகிதர்'

**6.3.3** ஓஜ: ஸஹோம்ப$^4$ஸ்தமஸஸ் த்ருதீயாயா:
ஓஜஸ், ஸஹஸ், அம்ப$^4$ஸ், தமஸ் ஆகியவைகளுக்குப்பின் நிற்கும் மூன்றாம் வேற்றுமையுருபுகள் இரண்டாவது உறுப்பினர் தொடரும்போது கெடாது.
ஓஜஸா + க்ருதம் = ஓஜஸாக்ருதம் 'பலத்தால் செய்யப்பட்டது'
ஸஹஸாக்ருதம், அம்ப$^4$ஸாக்ருதம் – "தண்ணீரால் உண்டாக்கப்பட்டது"
தமஸாக்ருதம் "இருட்டால் அல்லது இருட்டோடு செய்யப்பட்டது"

வா: அஞ்ஜஸ உபஸங்க்$^2$யானம் கர்தவ்யம்
'அஞ்ஜஸ்' உம் இதனுடன் சேர்த்துக் கூறப்படவேண்டும்.
அஞ்ஜஸாக்ருதம்

வா: பும்ஸானுஜ ஜனுஷாந்த$^4$ இதி வக்தவ்யம்
பும்ஸானுஜ, ஜனுஷாந்த$^4$ என்பவைகளும் இதனுடன் சேர்க்கப்பட வேண்டும்.
பும்ஸா ஹேதுனா அனுஜ: = பும்ஸானுஜ:
ஜனுஷா ஹேதுனா அந்த$^4$: = ஜனுஷாந்த$^4$

**6.3.4** மனஸ: ஸம்க்$^3$ஞாயாம்
'மனஸ்' என்ற சொல்லுக்குப்பின் வரும் மூன்றாம் வேற்றுமையுருபுகள், அத்தொகை ஒரு பெயரைச் சுட்டும்போது கெடாது.
மனஸாத$^3$த்தா, மனஸாகு$^3$ப்தா 'ஒருவரின் பெயர்'
ஆனால் மனோத$^3$த்தா–மனதால் கொடுக்கப்பட்டது

**6.3.5** ஆக்$^3$ஞாயினி ச
'மனஸ்'ஐத் தொடர்ந்து 'ஆக்$^3$ஞாயின்' என்ற சொல் வரும்போது, 'மனஸ்'உக்குப்பின் வரும் மூன்றாம் வேற்றுமையுருபுகள் கெடாது.
மனஸா + ஆக்$^3$ஞாயின் = மனஸாக்$^3$ஞாயின் "மனதால் அறிந்து கொள்ளக்கூடியவன்"

**6.3.6** ஆத்மனஸ்$^{1}$ ச பூரணே

'ஆத்மன்' என்ற சொல்லுக்குப்பின் வரும் மூன்றாம் வேற்றுமையுருபுகள், அதைத் தொடர்ந்து எண் வரிசை முறைப் பெயர் வரும்போது, அவ்வேற்றுமையுருபு கெடாது.

ஆத்மனா பஞ்சம:–'தன்னோடு ஐந்தாவது'

**6.3.7** வையாகரண ஆக்$^{3}$யாயாம் சதுர்த$^{2}$யா:

'ஆத்மன்' என்ற சொல்லுக்குப்பின் வரும் நான்காம் வேற்றுமையுருபு அத்தொகை இலக்கணக்கலைச் சொல்லைச் சுட்டும்போது கெடாது. ஆத்மனே பதம்

**6.3.8** பரஸ்ய ச

'பர' என்ற சொல்லுக்குப்பின் வரும் நான்காம் வேற்றுமையுருபு அத்தொகை, ஒரு இலக்கணக் கலைச் சொல்லானால், கெடாது. பரஸ்மைபதம்

**6.3.9** ஹலத$^{3}$ந்தாத் ஸப்தம்யா: ஸம்க்$^{3}$ஞாயாம்

மெய்யீற்றுச் சொல். 'அ'வீற்றுச் சொல்லுக்குப்பின் வரும் ஏழாம் வேற்றுமையுருபு, அத்தொகை ஒரு பெயரானால் கெடாது.

யுதி$^{4}$ஷ்டி$^{2}$ர:, க$^{3}$விஸ்தி$^{2}$ர: 'பெயர்'

த்வசிஸார:–'மூங்கில்'

அரண்யேதிலக–'காட்டு எள்'

ஆனால் நத்$^{3}$யாம் குக்குடி$^{1}$கா = நதீ$^{3}$குக்குடிகா

அக்ஷிஸெண்ட (பெயரல்ல)

வா: ஹ்ருத்$^{3}$த்$^{3}$யுப்$^{4}$யாம் ஙே:

ஹ்ருத்$^{3}$, தி$^{3}$வ் ஆகியவைகளுக்குப்பின் வரும் ஏழாம் வேற்றுமையுருபு கெடாது. ஹ்ருதி$^{3}$ஸ்ப்ரு$^{1}$க், தி$^{3}$விஸ்ப்ருக்

**6.3.10** காரநாம்னி ச ப்ராசாம் ஹலாதெ$^{3}$ள

'மெய்' அல்லது 'அ'வை யீறாக் கொண்ட சொற்களுக்குப்பின் வரு ம் 7 ஆம் வேற்றுமையுருபு, அச்சொல்லைத் தொடர்ந்து வரும் சொல் ஒரு மெய்யெழுத்தை முதலாகக் கொண்டதாகவும், அத்தொகை கிழக்கித்திய மக்களின் 'வரி'யின் பெயரைச் சுட்டுவதாகவும் அமையும்போது கெடாது.

கூபேஸாண:–'கிணறுக்கான வரி'

ஹலேத்$^{3}$விபதி$^{3}$கா–'ஏருக்கான வரி'

இது ஒரு நியமவிதியாகும்.

(1)ஒரு வரியைக் குறிக்கும்போதுதான் இவ்விதிசெயற்படும். மற்ற இடங்களிலல்ல (2) கிழக்கத்திய மக்களின் வரியைச் சுட்டும்போதுதான், மற்ற திசை மக்களின் சொல்லல்ல (3) இத்தொகையின் இரண்டாவது உறுப்பினர் மெய்யெழுத்தில் தொடங்க வேண்டும். இம்மூன்று வகையான கட்டுப்பாடுகள்

இவ்விதி விதிக்கிறது.
அப்$^4$யர்ஹிதபஸூ;
யூத$^2$பஸூ: (கீழ்த்திசை மக்களுடைய சொல்லல்ல)
அவிகட + உரண: = அவிகடோரண: (இரண்டாவது உறுப்பினர் மெ ய்யில் தொடங்கவில்லை)
நதீ$^3$தோ$^3$ஹனீ (முதலுறுப்பினரின் ஈறு மெய்யுமல்ல, 'அ'–வுமல்ல)

**6.3.11** மத்$^4$யாத்$^3$ கு$^3$ரௌ
'மத்$^4$ய' என்ற சொல்லுக்குப்பின் வரும் 7 ஆம் வேற்றுமையுருபு அச்சொல்லைத் தொடர்ந்து 'கு$^3$ரு' என்ற சொல் நிற்குமானால், கெடாது.
மத்$^4$யேகு$^3$ரு:–'நடுவில் கனமானது'

வா: அந்தாச் ச இதி வக்தவ்யம்
'அந்த' என்ற சொல்லுக்குப்பின் 'கு$^3$ரு' நிற்கும்போதும் 7 ஆம் வேற்றுமை கெடாது.

**6.3.12** அமூர்த்$^3$த$^4$மஸ்தகாத் ஸ்வாங்க$^3$காத$^3$காமே
மூர்த$^4$ன், மஸ்தக 'தலை' என்ற சொற்களைத் தவிர்த்து மற்ற அவ யங்களைக் குறிக்குஞ் சொற்களுக்குப்பின் வரும் 7 ஆம் வேற்றுமையுரு பு, 'காம' என்ற சொல்லைத் தவிர்த்த மற்ற சொற்கள் அச்சொல்லைத் தொடர்ந்து வந்தால் கெடாது. கண்டே$^3$கால: 'கருப்பான கழுத்தையுடைய, அதாவது சிவன்' உரஸிலோமன் 'நெஞ்சில் ரோமமுடைய'
ஆனால் முகே$^2$ காம: அஸ்ய முக$^2$காம:
மூர்த்$^4$னி ஸி'க$^2$: அஸ்ய = மூர்த$^4$ஸி'க$^2$:, மஸ்தகஸி'க$^2$:, 'தலையில் குடுமியுடைய'
அங்கு$^3$லத்ராண: ( = அங்கு$^3$லௌ த்ராண:) முதலுறுப்பினர் மெய்யீற்றுச் சொல்லோ 'அ' வீற்றுச் சொல்லோ அல்ல.

**6.3.13** ப$^3$ந்தே$^4$ ச விப$^4$ாஷா
'மெய்' அல்லது 'அ' வீற்றுச் சொல்லைத் தொடர்ந்து 'பந்த$^4$' என்ற சொல் வரும்போது, முதலுறுப்பினருக்குப்பின் வரும் 7 ஆம் வேற்றுமையுருபு விருப்பாக க் கெடும்.
ஹஸ்தப$^3$ந்த$^4$; அல்லது ஹஸ்தே ப$^3$ந்த$^4$: சக்ர ப$^3$ந்த$^4$: அல்லது சக்ரேப$^3$ந்த$^4$:
ஒரு பஹுவ்ரீஹித் தொகையின் முதலுறுப்பினர், ஓரவயத்தைக் குறிக்குஞ் சொல்லாக அமையும்போது மேலே விதிக்கப்பட்ட விதிக்கு இது விருப்பு விதியாகும். தத்புருஷத் தொகையின் முதலுறுப்பினர் ஓரவயத்தைக் குறிக்குஞ் செல்லோ அல்லது வேறெதுவே அமையும்போது விதிக்கப்பட்ட **6.3.19**க்கும் இது விருப்பு விதியாகும்.
ஆனால் கு$^3$ப்தௌ ப$^3$ந்த$^4$; = கு$^3$ப்திப$^3$ந்த$^4$: 'சிறைப்படுத்தல்'

**6.3.14** தத்புருஷே க்ருதி ப$^3$ஹுலம்

'க்ருத்' ஒட்டால் ஆக்கப்பட்ட சொல்லை இரண்டாவது உறுப்பினராகக் கொண்ட தத்புருஷத் தொகையில், முதலுறுப்பினரின் பின் நிற்கும் 7ஆம் வேற்றுமையுருபு விருப்பாகக் கெடாது.

ஸ்தம்பே$^3$ + ரம் + அச் (3.2.13) = ஸ்தம்பே3ரம:

கர்ணே + ஜப் + அச் = கர்ணேஜப:

குருஷூ + சர்தி = குரு + சர் + ட (3.2.16) = குருசர. இங்கு 7ஆம் வேற்றுமையுருபு கெடுகிறது, மத்$^3$சர:

**6.3.15** ப்ராவ்ருட் ஸ'ரத்கால தி$^3$வாம்ஜே

ப்ரா வ்ருட், ஸரத், கால, தி$^3$வ், ஆகிய சொற்களோடு வரும் 7ஆம் வேற்றுமையுருபு, அச்சொற்களைத் தொடர்ந்து 'ஜ' வரும்போது கெடாது.

ப்ராவ்ருஷி + ஜன் + ட$^3$ (3.2.92) = ப்ராவ்ருஷிஜ: 'மழை காலத்தில் பிறந்த' ஸ'ரதி$^3$ஜ; காலேஜ:, தி$^3$விஜ.

**6.3.16** விப$^4$ாஷா வர்ஷ க்ஷரஸ'ரவராத்

வர்ஷ, க்ஷர, ஸர, வர ஆகியவைகளோடு இணைக்கப்படும் 7ஆம் வேற்றுமையுருபு, அச்சொற்களைத் தொடர்ந்து 'ஜ' வரும்போது விருப்பாகக் கொண்டது.

வர்ஷேஜ:, வர்ஷஜ:

க்ஷரேஜ:, க்ஷரஜ;

ஸ'ரேஜ:, ஸ'ரஜ;

வரேஜ:, வரஜ:

**6.3.17** க$^4$ காலதனேஷூ காலநாம்ன:

'மெய்' அல்லது 'அ'வீற்று, காலத்தைச் சுட்டும் சொற்களோடு இணைக்கப்படும் 7ஆம் வேற்றுமையுருபு, அச்சொல்லைத் தொடர்ந்து 'க$^4$' (தரப், தமப்) ஒட்டால் ஆக்கப்பட்ட சொல், அல்லது 'கால' என்ற சொல்ல அல்லது 'தன'வில் முடியுஞ் சொல் இரண்டாவது உறுப்பினராக நிற்கும்போது, அவ்வேற்றுமையுருபு விருப்பாகக் கொண்டது.

பூர்வாஹ்னேதரே, பூர்வாஹ்ன தரே

அபராஹ்னே தமே, அபராஹ்னதமே

பூர்வாஹ்னேகாலே, பூர்வாஹ்ன காலே

பூர்வாஹ்னே தனே, பூர்வாஹ்ன தனே

ஆனால் ஸு'க்லதரே, ஸூ1க்லதமே ராத்ரி தர

**6.3.18** ஸ'ய, வாஸ வாஸிஷூ அகாலாத்

காலத்தைச் சுட்டாத மெய் அல்லது 'அ' வீற்றுச் சொல்லுக்குப் பின் நிற்கும் 7ஆம் வேற்றுமையுருபு, அச்சொல்லைத் தொடர்ந்து ஸ'ய, வாஸ, வாஸின் ஆகியவைகள் வரும்போது அவ்வேற்றுமையுருபு விருப்பாகக் கொண்டது.

கே$^2$ஸ'ய, க$^2$ஸ'ய "ஆகாயத்தில் மிதக்கிற";

க்3ராமே வாஸ, க்3ராமவாஸ:, 'கிராமத்தில் வசிக்கும்'
க்3ராமேவாஸின், க்3ராமவாஸின்
ஆனால் பூர்வாஹ்ண ஸ1ய (காலத்தைச் சுட்டும் சொல் முதலுறுப்பினர்) பூ3மிஸ1ய: 'தரையில் படுத்துக் கொண்டிருக்கிற' முதலுறுப்பினர், மெய் அல்லது 'அ' வீற்றுச் சொல்லல்ல.

வா: அபோ யோனியன் மதுஷூ ஸப்தம்யா அலுக் வக்தவ்யம் 'அப்'பைத் தொடர்ந்து, யோனி, அல்லது 'யத்' அல்லது 'மதுப்' ஒட்டு வரும்போது 'அப்'புக்குப்பின் நிற்கும் 7ஆம் வேற்றுமையுருபு கெடாது.
அப்ஸு யோனி:; அப்ஸவ்ய:, அப்ஸுமந்தௌ

**6.3.19** நேன் ஸித்3த4 ப3த்4னாதி3ஷூ ச
'இன்' ஒட்டில் முடியுஞ்சொற்கள், 'ஸித்3த4' என்ற சொல், 'ப3ந்த்4' என்ற தாதுவிலிருந்து தருவிக்குப்பட்ட சொற்கள் இரண்டாவது உறு ப்பினராக வரும்போது, முதலுறுப்பினருடன் இணைக்கப்படும், 7ஆம் வேற்றுமையுருபு கெடும். (அலுக்' ஆகாது)
ஸ்த2ண்டி3ல ஸாயின், 'தரையில் உறங்குகிற'
ஸாங்காஸ்ய ஸித்3த4: ''ஸாங்காஸ்யத்தில் தயாரித்த''
சக்ரப3த்3த4: ''சக்கரத்தைப் போல் அமைக்கப்பட்ட''

**6.3.20** ஸ்தே2ச ப4ாஷாயாம்
பேச்சு மொழியில், 'ஸ்த2ா'வுக்கு முன் நிற்கும் முதலுறுப்பினரின் 7ஆம் வேற்றுமையுருபு கெடும். (அலுக் ஆகாது)
ஸமஸ்த2:, விஷமஸ்த2:, கூடஸ்த2: ஆனால்
க்ருஷ்ணோ அஸ்யக3ரேஷ்ட2; (வேதமொழியில்)

**6.3.21** ஷஷ்ட்2யா ஆக்ரோஸே1
முதலுறுப்பினருக்குப்பின் இணைக்கப்படும் 6ஆம் வேற்றுமையுருபு 'அவமரியாதை' என்ற பொருளைச் சுட்டும்போது கெடாது. (இரண்டாவது உறுப்பினருக்கு முன் நிற்கும் உருபு) சௌரஸ்ய குலம்– 'திருட்டுக் குடும்பம்' வ்ருஷலஸ்ய குலம்.
மற்ற பொருளில் ப்3ராஹ்மணகுலம்.

வா: ஷஷ்டீ ப்ரகரணே வாக்3தி3க்பஸ்யத்3ப்4யோ யுக்தி தண்டஹரேஷூ யத2ா ஸங்க்2யமலுக் வக்தவ்ய:
வாக், திக், பஸ்யத் ஆகிய சொற்களுக்குப்பின் முறையே யுக்தி, யுக்தி, த3ண்ட3, ஹர என்ற சொற்கள் வரும்போது முதலுறுப்பினருக்குப்பின் இணைக்கப்படும் ஆறாம் வேற்றுமையுருபு கெடாது.
வாசோ யுக்தி, தி3ஸோ1 த3ண்ட3: பஸ்1யதோ ஹர:

வா: ஆமுஷ்யாயணாமுஷ்ய புத்ரிகாமுஷ்யகுலிகேதி சாலுக்[3] வக்தவ்ய:
ஆமுஷ்யாயண, ஆமுஷ்ய புத்ரிகா, ஆமுஷ்ய குலிகா என்ற சொற்களிலும் ஆறாம் வேற்றுமையுருபு கெடாது.
'அத[3]ஸ்' என்ற மாற்றுப் பெயரின் ஆறாம் வேற்றுமையொருமை 'அமுஷ்ய'வாகும். இது 'நட[3]ாதி' வகுப்பைச் சேர்ந்ததாக 4.1.99 கூறுகிறது. 'ப[2]க்' ஒட்டுச் சேர்த்து, அதன் சந்ததி என்ற பொருளைக் கொடுக்கும் 'ஆமுஷ்யாயண' என்ற சொல்லாக்கப்படும்.
அமுஷ்யாபத்யம்=ஆமுஷ்யாயண:
அமுஷ்ய புத்ரஸ்ய ப[4]ாவ: = ஆமுஷ்ய புத்ரிகா (வுஞ்' ஒட்டுடன் 5.1.133)
ஆமுஷ்யகுலிகா

வா: தே[3]வானாம்ப்ரிய இத்யத்ர ச ஷஷ்ட்[2]யா அலுக்[3] வக்தவ்ய:
'தேவானாம்ப்ரிய' என்ற சொல்லிலும் ஆறாம் வேற்றுமையுருபு கெடாது.
தே[3]வானாம்ப்ரிய:

வா: ஸே[1]ப புச்ச[2] லாங்கூ[3]லேஷூ ஸூ[1]ன:
ஸம்க்[3]ஞாயாம் ஷஷ்ட்[2]யா அலுக்[3] வக்தவ்ய:
'ஸ்[1]வன்' உக்குப்பின் வரும் ஆறாம் வேற்றுமையுருபு, அச்சொல்லைத் தொடர்ந்து ஸே[1]ப, புச்ச, லாங்கூ[3]ல என்ற சொற்கள் வரும்போது கெடாது.
ஸூன: ஸே[1]ப, ஸூன: புச்ச[2]:, ஸூனலாங்கூ[3]ல:

வா: தி[3]வஸ்[1]ச தாஸே ஷஷ்ட்[2]யா அலுக்[3] வக்தவ்ய:
'தி[3]வ' என்ற சொல்லுக்குப்பின் வரும் ஆறாம் வேற்றுமையுருபு, அச்சொல்லைத் தொடர்ந்து 'தாஸ' வரும்போது கெடாது. தி[3]வோத[3]ாஸ:

**6.3.22** புத்ரே அன்யதரஸ்யாம்
'புத்ர' என்ற சொல் இரண்டாவது உறுப்பினராக அமைந்து அவமதித்தல்' என்ற பொருளைச் சுட்டும்போது முதலுறுப்பினரின் ஆறாம் வேற்றுமையுருபு விருப்பாகக் கெடும்.
தாஸ்யா: புத்ர:, தாஸீபுத்ர: 'அடிமைப் பெண்ணின் மகன்'
ஆனால் ப்[3]ராஹ்மணீ புத்ர–'பிராம்மணப் பெண்ணின் மகன்'

**6.3.23** ருதோ வித்[3]யாயோனி ஸம்ப[3]ந்தே[3]ப்[4]ய:
படிப்பு அல்லது இரத்தத் தொடர்பைச் சுட்டும்போது 'ரு' வீற்றுச் சொற்களின் ஆறாம் வேற்றுமையுருபு (இரண்டாவது உறுப்பினருக்கு முன்) கெடாது.
ஹோது: அந்தேவாஸி–'ஹோத்ரு' என்ற புரோஹிதரின் மாணவன்.
ஹோது: புத்ர:
ஆனால் ஆசார்யபுத்ர:
'படிப்பு' அல்லது இரத்தத் தொடர்பு முதலுறுப்பினருக்கும் இரண்டாவது

உறுப்பினருக்குமிடையே இருக்க வேண்டும். ஆகையால், ஹோத்ருத$^{4}$னம், ஹோத்ருக்$^{3}$ருஹம், பித்ருக்$^{3}$ருஹம் ஆகியவைகளில் இவ்விதி செயற்படாது.

**6.3.24** விப$^{4}$ா ஷா ஸ்வஸ்ருபத்யோ:

'ரு' வீற்றுச் சொல்லைத் தொடர்ந்து ஸ்வஸ்ரு, பதி என்ற சொற்கள் நின்று, அவைகள் படிப்பு, இரத்தம் மூலம் தொடர்பு கொண்டவையென்ற பொருளைச் சுட்டும்போது, ஆறாம் வேற்றுமையுருபு, விருப்பாகக்கெடாது. மாதுஸ்வஸா அல்லது மாது: ஷ்வஸா (8.3.85) அல்லது மாத்ருஸ்வஸா 'தாயின் சகோதரி' து$^{3}$ஹிது: பதி: அல்லது து$^{3}$ஹித்ருபதி: 'மருமகன்'

**6.3.25** ஆனங் ருதோ த்$^{3}$வந்த்$^{3}$வே

'ரு' வீற்றுச் சொற்களால் ஆக்கப்படும் துவந்துவத் தொகையில் (மேற்கூறிய பொருளைச் சுட்டும்) 'ரு'வுக்கு 'ஆனங்' பதிலியாக வரு ம்.

ஹோதா ச போதா ச = ஹோத்ரு + போத்ரு + ஔ = ஹோதா ன் + போதாரௌ = ஹோதா போதாரௌ (8.2.7; 6.4.11) ஹோதா போதாரௌ. நேஷ்டோத்$^{3}$க$^{3}$ாரௌ மாதாபிதரௌ.

ஆனால் பித்ரு பிதாமஹௌ. இரண்டு சொற்களும் 'ரு' வீற்றுச் சொற்களல்ல. 'பித்ரு' என்ற ஒரு சொல்தான் 'ரு' வீற்றுச் சொல்.

**6.3.26** தே$^{3}$வதாத்$^{3}$வந்த்$^{3}$வே ச

தேவதைகளின் பெயர்களைக் கொண்டு ஆக்கப்பட்ட துவந்துவத் தொகையிலும் முதலுறுப்பினரின், ஈறுக்குப் பதிலியாக 'ஆனங்' வரும்.

இந்த்$^{3}$ர + வருண + ச = இந்த்$^{3}$ரான் + வருண + ஔ = இந்த்$^{3}$ரா θ - வருண ஔ (8.2.7) = இந்த்$^{3}$ராவருணௌ இந்திரனும் வருணனும்.

இந்த்$^{3}$ரா ப்$^{3}$ருஹஸ்பதௌ

முந்திய சூத்திரத்திலிருந்தே 'த்$^{3}$வந்த்$^{3}$வ' என்ற சொல் அனுவிருத்தி வழியாகப் பெறமுடியும். ஆயினும் இங்கு 'த்$^{3}$வந்த்$^{3}$வ' என்ற சொல் திரும்பவும் கூறப்பட்டிருக்கிறது. வேதங்களில் காணப்படும், சிறப்பு வாய்ந்த இரட்டைக் கடவுளரைச் சுட்டும்போதுதான் இவ்விதி பயன்படுத்தப்படும், மற்ற இடங்களில், வேறு இரண்டு கடவுள்களைச் சேர்த்துக் குறிப்பிடும்போது அல்ல என்பதை வலியுத்தத்தால், 'த்$^{3}$வந்த்$^{3}$வ' இங்கு திரும்பவும் கூறப்பட்டிருக்கிறது. ஆகையால், ப்$^{3}$ரஹ்மப்ரஜாபதீ, ஸிவவைஸ்ரவணௌ என்ற தொகைகளில் இவ்விதி செயற்படாது.

வா: உப$^{4}$யத்ர வாயோ: ப்ரதிஷேதே$^{4}$ா வக்தவ்ய:

இவ்விரண்டு சூழலிலும், 'வாயு' என்ற சொல் முதலோ அல்லது இறுதியுறுப்பினராகவோ அமைந்தாலும் இவ்விதி பயன்படுத்தப்படமாட்டாது. அக்$^{3}$னிவாயூ, வாய்வக்$^{3}$னீ

**6.3.27** ஈத$^{3}$க்$^{3}$னே: ஸோம வருணயோ:

ஸோம, வருண ஆகியவைகள், 'அக்$^{3}$னி' என்ற சொல்லைத் தொடர்ந்து வரும்போது, 'அக்$^{3}$னி'யீனீறான 'இ'க்குப் பதிலியாக 'ஈ' வரும்.

அக்$^{3}$னி + ஸோம + ஔ = அக்$^{3}$னீஷோமௌ (8.3.82); அக்$^{3}$னீவருணௌ.

**6.3.28** இத்$^{3}$ வ்ருத்$^{3}$தெ$^{4}$ள

(இரண்டு கடவுளர்களின் பெயர்களலாக்கப்பட்ட துவந்துவத் தொகையில்) முதலுறுப்பினராக நிற்கும் 'அக்$^{3}$னி' யின் ஈற்றுக்குப் பதிலியாக 'இ', அத்தொகையினீறுகள் விருத்தியாகும்போது வரும்.

அக்$^{3}$னீ வருணௌ தேவதே

அஸ்யா: = ஆக்$^{3}$னிவாருணீ

'அக்னிக்கும் வருணனுக்கும் அளிக்கப்பட்ட' (4.2.24; 7.3.21) ஆக்$^{3}$னிமாருத இரண்டு உறுப்பினரும் 'விருத்தி' யாகாவிட்டால், இவ்விதி செயற்படாது. காட்டாக ஆக்$^{3}$னேந்த்$^{3}$ர: இதில் 'இந்த்$^{3}$ர' என்ற சொல் 'விருத்தி'யடையாது (7.3.22)

வா: இத்$^{3}$வ்ருத்$^{3}$தெ$^{4}$ள விஷ்ணோ: ப்ரதிஷேதே$^{4}$ா வக்தவ்ய:

'விஷ்ணு' என்ற சொல் தொடரும்போது இதற்குத் தடை விதிக்கப்படும்.

ஆக்$^{3}$னாசைஷ்ணவம் சரும் நிர்வபேத்

**6.3.29** தி$^{3}$வோ த்$^{3}$யாவா

இரு கடவுளரின் பெயராலாக்கப்பட்ட துவந்துவத் தொகையில் 'தி$^{3}$வ்'வுக்குப் பதிலியாக 'த்$^{3}$யாவா' வரும்.

தி$^{3}$வ் + க்ஷாமா = த்$^{3}$யாவாக்ஷாமா

த்$^{3}$யாவாபூ$^{4}$மீ – 'சுவர்க்கமும் பூமியும்'

**6.3.30** தி$^{3}$வஸ'ஸ் ச ப்ருதி$^{3}$வ்யாம்

'ப்ருதி$^{3}$வீ'யை இரண்டாவது உறுப்பினராகக் கொண்ட இரு கடவுளரின் பெயர்களைச் சேர்த்து ஆக்கப்பட்ட துவந்துவத் தொகையில் 'தி$^{3}$வ்' என்ற சொல்லுக்குப் பதிலியாக 'தி$^{3}$வஸ' என்ற சொல்லும் வரும். அதாவது 'த்$^{3}$யாவா'வும் 'த$^{3}$வஸ'வும் வரும்.

தி$^{3}$வஸ்ப்ருதி$^{2}$வ்யௌ, த்$^{3}$யாவாப்ருதி$^{2}$வ்யௌ 'சுவர்க்கமும் பூமியும்'

**6.3.31** உஷாஸா உஷஸ:

(இரு கடவுளர்களின் பெயர்களைக் குறிக்குஞ் சொற்களால் ஆக்கப்பட்ட துவந்துவத் தொகையில்) 'உஷஸ்' என்ற சொல்லுக்கு 'உஷாஸா' பதிலியாகும்.

உஷஸ் + நக்த + ட$^{3}$ா (7.1.39) = உஷாஸாநக்தா – 'காலையும் இரவும்'

உஷாஸா ஸூர்யம் – 'காலையும் சூரியனும்'

**6.3.32** மாதபிதராவுதீ$^3$சாம்

வடக்கத்திய இலக்கண ஆசிரியர்களின் கருத்துப்படி 'மாதர பிதரௌ' (தாயும் தகப்பனும்) என்ற தொகை சரியானதுதான். 'மாதாபிதரௌ' என்பது மற்ற இடங்களில் காணப்படும்.

**6.3.33** பிதராமாதரா ச ச$^2$ந்த$^3$ஸி

வேதமொழியில் 'பிதராமாதரா என்றாகும்.

முதலுறுப்பினரின் ஈற்றுக்குப் பதிலியாக 'அராங்' வரும் தொகையினிறுதியில் இணைக்கப்படும் வேற்றுமையுருபுக்குப் பதிலியாக 'ஆ' வரும். (7.3.39) பிதராமாதரா. மற்ற இடங்களில் 'மாதாபிதரௌ'

**6.3.34** ஸ்த்ரியா: பும்வத்$^3$ப$^4$ாஷித–பும்ஸ்காத$^3$னூங் ஸமானாதி$^4$ கரணே ஸ்த்ரியாமபூரணீ ப்ரியாதி$^3$ஷு

பெண்பாற் சொல்லின் பொருளையே சுட்டும், ஆண்பாலில் நேரிணையான வடிவங்கொண்ட (ப$^4$ாஷித பும்ஸ்க) பெண்பாலைச் சுட்டுஞ் சொல், 'ஊங்' என்ற பெண்பாலொட்டை யீறாகக் கொள்ளாமலமைந்து, எண்வரிசை முறைப்பெயர் அல்லது 'ப்ரிய' முதலிய சொற்களைத் தவிர்த்த மற்ற ஒரே பொருளைக் குறிக்கும் பெண்பாற் சொல்லோடு வரும்போது அதை ஆண்பாற் சொல்லாகக் கருதப்படும்.

த$^3$ர்ஸ$^1$னீய ப$^4$ார்யா அஸ்ய = த$^3$ர்ஸனீயப$^4$ார்ய 'அழகான மனைவியையுடைய' ஆனால் க$^2$ட்$^1$வாப$^4$ார்யா

இச்சூத்திரத்தின் விரிவான விளக்கம் இதை எளிதாகப் புரிந்து கொள்ளத் தேவையாகிறது. ஆகவே ஒவ்வொரு சொல்லின் பொருளும் கீழே கொடுக்கப்பட்டிருக்கிறது. ஸ்த்ரியா: பெண்பாற்சொல்லுக்கு பும்வத்– ஆண்பாற் சொல் போன்று

ப$^4$ாஷிதபும்ஸ்காத்–அதனால் ஒரு ஆண்பாற் சொல்லைச் சுட்டும் அதாவது அச்சொல்லுக்கு நேரிணையான ஒரு ஆண் பாற் சொல்லும் காணப்படும்போது, அச்சொல் அதன் வடிவம், பொருள் இரண்டுமே ஆண்பாற் சொல்லையொத்தாக அமையும் போது, அனூங்–'ஊங்' என்ற பெண்பாலொட்டையீறாகக் கொள்ளாதண

ஸமானாதி$^4$கரணே – ஸ்த்ரியாம் – பெண்பாலில்

அபூரணி – எண் வரிசைமுறைப்பெயரைத் தவிர்த்து

ப்ரியாதி$^3$ஷு – 'ப்ரிய' முதலிய சொற்களைத் தவிர்த்து மேலே குறிப்பிட்ட எடுத்துக்காட்டில் த$^3$ர்ஸ$^1$னீய ப$^4$ார்யா – தர்ஸ$^1$னீய என்ற பெண்பாற்–சொல்லுக்கு நேரிணையான ஆண்பாற்சொல் த$^3$ர்ஸ$^1$னீய: வடிவம் பொருள் இரண்டிலும் பெண்பாற்ச் சொல்லையொத்ததாக அமைந்திருப்பதைக் காணலாம். இப்பெண்பாற் சொல் 'ஊங்' ஒட்டையீறாகக் கொண்டதல்ல. இது 'ஆ' வீற்றுச் சொல். இச்சொல்லைத் தொடர்ந்து வரும் 'ப$^4$ார்யா' என்ற சொல் பெண்பாற்சொல், இச்சொல் முதலுறுப்பினரின் வேற்றுமையையே கொண்டது. இது எண்ணுப் பெயரோ, 'ப்ரியாதி' வகுப்பைச் சேர்ந்ததோவல்ல.

ஆகவே த3ர்ஸ1னீயா, என்ற பெண்பாற்சொல், அதற்கு நேரிணையான ஆண்பாற்ச் சொல்லாக, 'த3ர்ஸ1னீய' மாற்றப்பட்டிருக்கிறது.

'க2ட்வாப4ார்யா'வில் 'க2ட்வா'க்கு நேரிணையான ஆண்பாற் சொல் கிடையாது. த்3ரோணீப4ார்யா–'த்3ரோணீ' என்ற பெண்பாற் சொல்லுக்கு நேரிணையான, 'மாட்டுத் தீவனம் அல்லது மாடுகளுக்கு தீனி வைக்கும் தொட்டி' என்ற பொருளைச் சுட்டும் ஆண்பாற் சொல் கிடையாது.

ப்3ரஹ்மப3ந்தூ4ப4ார்யா என்ற சொல்லில் முதலுறுப்பினர் 'ஊங்' ஒட்டில் முடிகிறது. கல்யாணீபஞ்சமா: ராத்ரய:–ஐந்து இரவுகளைக் கொண்ட ஒரு தொகுப்பில் ஐந்தாவது இரவு மங்களகரமானது. இங்கு எண்ணுப்பெயர் இரண்டாவது உறுப்பினராகிறது. கல்யாணீப்ரிய: "யாருக்கு கல்யாணீ விருப்பமானவளோ, அவன் இரு உறுப்பினர்களும் ஒரே பாலில் அமையவில்லை."

**6.3.35** தஸிலாதி3ஷூ ஆ க்ருத்வஸூச:

'தஸில்' ஒட்டில் தொடங்கி (5.3.7) 'க்ருத்வஸூச்' (5.4.17) வரையில் விளக்கப்பட்டிருக்கும் ஒட்டுக்களுக்கு முன், 'ஊங்' இல் முடியாததும், அதற்கு நேரிணையான ஆண்பாற் சொல் உள்ளதுமான பெண்பாற் சொல், ஆண் பாற் சொல்லாக மாற்றப்படும்.

தஸ்யா:=தத: அங்கிருந்து

தஸ்யாம்=தத்ர 'அங்கு'

இச்சூத்திரத்தில் சுட்டப்பட்டிருக்கும் ஒட்டுக்கள் வருமாறு

தஸில் (5.3.7–9), த்ரல் (10) த3ா (15) த3னீம் (18–19), ர்ஹில் (20), த2ால் (23) த2மு (24), தா2(26), அஸ்தாதி (27) அதஸூச்(28), ஆதி (34), ஏனப் (35) அச் (36), ஆஹி (37), அஸி (39), தில், தாதில் (41), த4ா (42) த்4யமுஞ் (44) த4முஞ் (45), பாஸ1ப் (47), அன் (48), ஞ (50), கன் (அ 51), ஆகினிச் (52), சரட் (53) ரூப்ய (54), தமப், இஷ்ட2ன் (55), தரப், ஈயஸூன் (57), ரூபப் (66), கல்பப், தே3ஸ்1ய, தே3ஸீயர் (67), ஜாதீயர் (69), க (79–96); அகச் (71) கன் (க.75), ட2ச் (78), க4ன், இலச் (79), அட3ச்,வுச் (80), ர (88); டு3பச்(89) ஷ்டரச் (90) ட3தரச் (92) ட3தமச் (93) ட3ஞ் (101), த4 (109), யத் (103), ச2 (105), அண் (107), ட2க் (108), ஈகக் (110), ஞ்ய (112), டேண்யண் (115), அண், அஞ் (117), யஞ் (113), வுன் (5.4.1), க2(7), ஆமு (11), அமு (12), க்ருத் வஸூச் (17) இவற்றுள் கீழ்க்கண்ட ஒட்டுக்கள் இச்சூத்திரத்தில் கூறியபடி செயற்படும் த்ரல், கஸில், தரப், தமப், சரட், ஜாதியர், கல்பப், தே3ஸ்1ய, தே3ஸீ1யர், ரூபப் , பாஸ1ப், ட2க், த2ால், த3ா, ர்ஹில், தில், தாதில்

வா: ஸ1ஸி ப3ஹ்வல்பார்த2ஸ்ய பும் வத்3ப4ாவோ வக்தவ்ய:

பயூ, அல்ப என்ற சொற்களின் பெண்பாற் சொற்கள் "ஸ1ஸ் என்ற தத்தித ஒட்டுக்குமுன் ஆண்பாலாக மாறும் ப3ஹ்வீப்4யோ தே3ஹி = ப3ஹுஸோ தே3யி; அல்பாப்4யோ தே3ஹி = அல்பஸோ தேஹி"

வா: த்வதலோர் கு3ண வசனஸ்ய பும்வத்3 ப4ாவோ வக்தவ்ய:
த்வ, தல் ஆகியவொட்டுக்களுக்கு முன் நிற்கும் பெண்பாலைச் சுட்டும் அடைச்சொல், ஆண்பாலாக மாறும்.
படு1த்வம், படு1தா (= பட்வ்யா ப4ாவ:) ஆனால் கட்2யா ப4ாவ: = உகடீ2த், வம் உகடீ2தா (அடைச் சொல்அல்ல)

வா: ப4ஸ்யாடே4 தத்3தி4தே பும்வத்3பா4வோ
வக்தவ்ய:
'ட3'வைத் தவிர்த்த மற்ற 'தத்3தி4த' ஒட்டுக்களுக்குமுன், அச்சொல் 'ப4' என்ற 'ஸம்க்ஞா' வைப் பெறும்போது,
பெண்பாற் சொல் ஆண்பாற்சொல்லாக மாறும்.
ஹாஸ்திகம் (ஹஸ்தினீனாம் ஸமூஹ:) ஸ்1யைனேய:
('ட3'ஒட்டுடன்)

வா: ட2க்ச2ஸோ1ரஸ்1ச பும்வத்3ப4ாவோ வக்தவ்ய:
'ட2க்' ச2ஸ் ஒட்டுக்களுக்குமுன் நிற்கும் பெண்பாற் சொற்களும் ஆண்பாலாக மாறும்.
ப4ாவத்கா:, ப4வதீ3யா: ( = ப4வத்யாஸ் ச2ாத்ரா:)

**6.3.36** க்யங் மானினோஸ்1 ச
'ஊங்' ஒட்டில் முடிவுறாத, அதற்கு நேரிணையான ஆண்பாற் சொல் உள்ள, பெண்பாற் சொல் 'க்யங்', 'மாணின்' நம்பும், அக்கருத்தைக் கொண்ட ஒட்டுக்களுக்கு முன் ஆண்பாலாக மாறும்.
1) ஏனீ + க்யங் + ஸ1ப் + தே = ஏத + க்யங் + ஸ1ப் + தே= ஏதாயதே 'மான்போன்று நடந்து கொள்கிறான்' (3.1.1 ஸ்1யேன + க்யங் + ஸ1ப் + தே = ஸ்1யேனாயதே
"பெண் கழுகு போன்று நடந்து கொள்கிற"

2) த3ர்ஸ1னீய + மன் + ணினி (3.2.82) = 3தர்ஸ1னீயமானின் 'தன்னை அழகானவளாக் கருதுகிற'

**6.3.37** ந க உபத4ாயா:
'க'வை ஈற்றயலாகக் கொண்ட பெண்பாற் சொல், மேற்கூறியபடி, ஆண்பாலாகக் கருதப்படமாட்டாது.
பாசிகா ப4ார் 'சமையற்காரியை மனைவியாகக் கொண்டவன்'
பாசிகா + க்யங் + ஸ1ப் + தே = பாசிகாயதே
'சமையற்காரியைப் போன்று நடந்து கொள்கிற'
பாசிகாமானின்

வா: கோபத4ப்ரதிஷேதே4 தத்3தி4தவு க்ரஹணம் கர்தவ்யம்

'வு' ஒட்டின் 'க', தத்[3]தி[4]த ஒட்டின் 'க' ஆகியவைகளுக்குத்தான் இவ்விதி எல்லா 'க'வுக்குமில்ல.
பாகப[4]ார்ய:, (=பாகா 'இளவயது' + ப[4]ார்யா)
'இளவயது மனைவியையுடைய' பே[4]கபார்ய:
(= பே[4]கீ 'செயல்' ப[4]ார்யா) இவ்விரண்டிலும் பெண்பாற் சொல், ஆண்பாலாக மாறும்.
இவ்விதி (37) 6.3.34–36 வரை விளக்கப்பட்ட விதிகளுக்கு எல்லாம் புற னடை 6.3.34க்கு மட்டுமல்ல.

**6.3.38** ஸம்க்[3]ஞா பூரண்யோஸ்[1] ச
பெண்பாற்சொல் ஒரு பெயரோ அல்லது எண் வரிசை முறைப்பெயராகவோ அமையும்போதும் ஆண்பாலாகக் கருதப்படமாட்டாது.
த[3]த்தாப[4]ார்ய: 'அவன் மனைவி தத்தா'
த[3]த்தாயதே
பஞ்சமீப[4]ார்ய: 'ஐந்தாவது மனைவியைக் கொண்ட'
பஞ்சமீயதே
த[3]த்தாமானினீ, பஞ்சமீமானினீ

**6.3.39** வ்ருத்[3]தி[4] நிமித்தஸ்ய ச தத்[3]தி[4]த ஸ்யாரக்த விகாரே
'அதனால் நிறமேற்றிய' என்ற பொருளைச் சுட்டும் 'தத்தித' ஒட்டுக்கள் 'அதனாலாக்கப்பட்ட' என்ற பொருளைச் சுட்டும் தத்திதவொட்டுக்கள் (அரக்த விகார) ஆகியவற்றைத் தவிர்த்த மற்ற தத்தித வொட்டுக்கள் சொல்லின் முதலசையை 'வ்ருத்தி'யாக மாற்றும்–அவ்வொட்டுக்களால் ஆக்கப்படும் பெண்பாற்சொல்லின் ஆண்பாற்சொற்களாகக் கருதப்படமாட்டா.
மது[2]ரா + அண் (4.3.53) + ஙீப் = மாது[2]ரீ + ப[4]ார்யா அஸ்ய = மாது[3]ரீப[4]ார்ய: "அவன் மனைவி மதுரையைச் சேர்ந்தவள்" ஆனால் காஷயி ப்[3] ஹறதிகா அஸ்ய = காஷாய ப்[3]ருஹறதிகா" அவன் உடை காவியால் சாயமேற்றப்பட்டது" ஈஷா + லௌஹேஷ

**6.3.40** ஸ்வாங்காச் ச இதோ அமானினி
ஓரவயவத்தைச் சுட்டும் 'ஈ' யீற்று பெண்பாற் சொல், 'மானின்' என்ற சொல் அதைத் தொடர்ந்து வருமிடங்களைத் தவிர்த்த மற்றவிடங்களில் ஆண்பாற்ச் சொல்லாகக் கருதப்பட மாட்டாது.
தீ[3]ர்க[4]கேஸூ[1] ப[4]ார்ய: ""அவன் மனைவி நீண்டமுடி உடையவள்"
ஆனால் படுப[4]ார்ய: (=பட்வீ ப[4]ார்யா அஸ்ய), அகேஸ[1] ப[4]ார்ய:

**6.3.41** ஜாதேஸ்[1] ச
ஓரினத்தைக் குறிக்கும் பெண்பாற்ச் சொற்களும் 'மானின்' என்ற சொல் தொடர்ந்து வருமிடங்களைத் தவிர்த்த மற்ற சூழலில் ஆண் பாலாகக்

கருதப்படமாட்டாது.

கட²ப⁴ார்ய: 'கட' என்ற யஸுர் வேதத்தின் கிளையைச் சேர்ந்தவ ள் அவன் மனைவி'

ஆனால் கட³மானினீ—'தன்னை 'கட²' கிளையைச் சேர்ந்ததாகக் கருதுபவள் ஹஸ்தினீனாம் ஸமூஹ:=ஹாஸ்திகம் என்ற சொல்லாக்குத்துக்கு இந்த புறனடை செயற்படாது.

**6.3.42** பும்வத் கர்மத⁴ாரய ஜாதீய தே³ஸீயேஷு

ஆண்பாலில் நேரிணையான சொற்களையுடைய பெண்பாற் சொல். கர்மத⁴ாரயத் தொகையிலும், 'ஜாதீயர்', தே³ஸீயர் என்ற வொட்டுக்களுக்கு முன்னும், ஆண்பாலாகக் கருதப்படும்.

மேலே கூறிய 37–41 வரையிலான ஐந்து விதிகளுக்கு இது புறனடை.

1) 37க்கு புறனடை.

பாசிகாவ்ருந்தாரிகா = பாசகவ்ருந்த³ாரிகா 'மிகச் சிறந்த சமையற்காரி' பாசக தே³ஸீ1யா, பாசக ஜாத்யா.

2) 38க்கு புறனடை.

த³த்தா வ்ருந்த³ாரிகா = த³த்தவ்ருந்த³ாரி

த³த்தஜாதீயா, த³த்த தே³ஸீ1யா

பஞ்சம வ்ருந்தாரிகா, பஞ்சம ஜாதியா, பஞ்சமதே³ஸீ1யா

3) 39க்குப் புறனடை

ஸ்ரௌக்⁴ன ஜாதீய/தே³ஸீ1ய

4) 40க்குப் புறனடை

தீ³ர்க்⁴ கேஸ1 வ்ருந்த³ாரிகா,

தீ³ர்க⁴ கேஸ1 ஜாதீயா

தீ³ர்க⁴ கேஸ தே³ஸீயா

5) 41க்குப் புறனடை

கட² வ்ருந்த³ாரிகா

கட² ஜாதீயா

கட² தே³ஸீயா

ஆனால் க²ட்வா வ்ருந்த³ாரிகா: ப்³ரஹ்மப³ந்து⁴ப்ருந்த³ாரிகா.

வா: குக்குட்1 யாதீ³னாம் அண்ட³ாதி³ஷ பும்வத்³

ப⁴ாவோ வக்தவ்ய:

'குக்குட' முதலிய சொற்களைத் தொடர்ந்து 'அண்ட³' முதலியவைகள் நிற்கும் போதும் 'குக்குட' முதலியவைகள் ஆண்பாலாகும்.

குக்குட்1யா அண்டம் = குக்குட1ாண்ட³ம்

ம்ருக்$^{3}$யா: ப$^{3}$தம் = ம்ருக$^{3}$பதம்
ம்ருக்யா: க்ஷீரம் = ம்ருக$^{3}$க்ஷீரம்
காக்யா: ஸ$^{1}$ாவ: = காகஸ$^{1}$ாவ

வா: பும்வத்$^{3}$ ப$^{4}$ாவாத் கி$^{2}$த்க$^{4}$ாதி$^{3}$ஷு ப$^{4}$வதி விப்ரதிதே$^{4}$ன
முதற் சொல், ஆண்பாற் சொல்லாக மாறினாலும், அச்சொல்லுக்குப்பின் 'க$^{2}$'வை 'இத்'தாகக் கொண்ட ஒட்டோ அல்லது 'க$^{4}$' (தர, தம) (6.3.43) முதலிய ஒட்டுக்களோ வரும்போது, முதற்சொல்லினிறுதி நெடில் உயிர், குறிலாகும்.
கி$^{2}$த்–காலீம் ஆத்மானம் மன்யதே=காலிம்மன்யா
(6.3.66 உடன் ஒப்பிடுக) ஹரிணிம்மன்யா
'க$^{3}$ாதி$^{3}$' – பட்$^{1}$விதரா, பட்$^{1}$விதமா, ப்ட்$^{1}$விரூபா பட்விகல்பா, பட்$^{1}$விகா, ம்ருத்$^{3}$விகா.

**6.3.43** க$^{4}$ரூப கல்ப சேலட் ப்$^{3}$ருவ கே$^{3}$ாத்ர மத ஹதேஷு ங்ய: அனேகாச: ஹ்ரஸ்வ:
பலவசைகளைக் கொண்ட 'ஙீப்' (ஈ) ஈற்றுப் பெண்பாற்ச் சொல்லினீறுக்குப் பதிலியாக 'குறில் உயிர் கீழ்க்கண்ட சூழலில் வரும்–க$^{4}$ (தர, தம) ஒட்டு, ரூபப் (5.3.66),
கல்பப் (5.3.67), முன்னும் சேலட் (2.126); ப்$^{3}$ருவ, கே$^{3}$ாத்ர, மத, ஹத ஆகிய சொற்கள் இறுதியுறுப்பினராக நிற்கும்போதும் அவ்வாறாகும்.
ப்$^{3}$ராஹ்மணீ + தரப் = ப்$^{3}$ராஹ்மணிதர, ப்$^{3}$ராஹ்மணிதம, ப்$^{3}$ராஹ்மணிரூப, ப்$^{3}$ராஹ்மணிகல்ப, ப்$^{3}$ராஹ்மணிசேலீ, ப்$^{3}$ராஹ்மணிப்$^{3}$ருவோ, ப்$^{3}$ராஹ்மணிகே$^{3}$ாத்ரா, ப்$^{3}$ராஹ்மணிமதா, ப்$^{3}$ராஹ்மணிஹதா ஆனால் த$^{3}$த்தாதரா

**6.3.44** நத்$^{3}$யா: ஸே$^{1}$ஷஸ்யான்யதரஸ்யாம்
'நதீ' (1.4.3;4) என்ற ஸம்க்$^{3}$ஞாவினால் அழைக்கப்படும் மற்ற பெண்பாற்ச் சொற்களினீற்றுக்குப் பதிலியாக மேலே கூறப்பட்ட சூழலில், குறில், விருப்பாக வரும்.
ப்$^{3}$ரஹ்ம ப$^{3}$ந்தூ$^{4}$தரப், அல்லது ப்$^{3}$ரஹ்மப$^{3}$ந்து$^{4}$தரப் ப்ரஹ்மப$^{3}$ந்தூ$^{4}$/ப$^{3}$ந்து$^{4}$ தமப் 'நதீ' என்ற பெயரால் சுட்டப்படும் 'ஙீப்' (ஈ) ஒட்டாலாக்கப்பட்டாத பெண்பாற்ச் சொற்களும், ஒரேயொரு அசையைக் கொண்ட 'ஈ' யீற்றுப் பெண்பாற் சொற்களும் ஸே$^{1}$ஷ (மிஞ்சிய) என்ற சொல்லால் சுட்டப்பட்டிருக்கிறது.

வா: க்ருந்நத்$^{3}$யா: ப்ரதிஷேதோ வக்தவ்ய:
'க்ருத்' ஒட்டாலாக்கப்பட்ட 'நதீ$^{3}$' எனப்படும் சொற்களும் இதற்கு விதிவிலக்கு லக்ஷ்மீதரா, தந்த்ரீ தரா.

**6.3.45** உகி$^{3}$தஸ்$^{1}$ ச
'உக்' (பிரத்யாஹாரம்)ஐ 'இத்'தாகக் கொண்ட தத்தித ஒட்டுக்களாலாக்கப்பட்ட சொல்லோடு இணைக்கப்பட்ட பெண்பாலொட்டு 'க$^{4}$'

முதலியவைகளுக்கு (6.3.43) முன் விருப்பாகக் குறிலாகும்.
ஸ்'ர + ஈயஸுன் + ஙீப் + தரப் + டாப் = ஸ்'ரேய்ஸீதர, ஸ்'ரேயஸிதர, ஸ்'ரேயஸீதம/தர.
ஸ்'ரேயஸீரூப, ஸ்ரேயஸிரூப

வா: பும்வத்$^3$ப$^4$ாவோப்பத்ர பக்ஷே வக்தவ்ய:
'ஸ்'ரேயஸ்தரா' முதலிய வடிவங்களில் ஆண்பாலாக்கமும், ஒரு மாற்றாக வரும். அல்லது ஸ்ரேயஸ்தரா என்ற சொல் 'ஸ்ரேயஸ்' என்ற சொல்லோடு ஒப்புமையொட்டிணைத்து, அதன் பிறகு பெண்பாலோட்டிணைக்கப்படும்.

**6.3.46** ஆன்மஹத: ஸமானாதி$^4$கரண ஜாதீயயோ:
மஹத் 'பெரிய' என்ற சொல்லின் ஈற்றுக்குப் பதிலியாக 'ஆத்' (ஆ) உயிர், அச்சொல்லுக்குப்பின் அதற்கு நேரியைபான ஒரு சொல் வரும்போதோ அல்லது 'ஜாதீய' வரும் போதோ, வரும்.
மஹான் தே$^3$வ: = மஹத் + ϕ + தே$^3$வ + ஸு = மஹ–ஆ–தே$^3$வ: = மஹாதே$^3$வ: 'பெரிய கடவுள், சிவன்', மஹாப$^3$ல:, மஹாஜாதீய
ஆனால் மஹத: புத்ர: = மஹத்புத்ர: 'பெரிய மனிதனின் மகன்' (ஸமானாதி கரணம் இங்கு இல்லை) 2.1.64 'மஹத்'தோடிணைத்து ஆக்கப்படும் தொகையைப் பற்றிக் கூறுகிறது இந்த விதி, 2.1.64இன் படி ஆக்கப்பட்ட தொகைகள், ப$^3$ஹுவ்ரீஹித் தொகைகள் (இதிலும் இரண்டு உறுப்பினர்களும் நேரியைபு உள்ளதாகும்) ஆகிய இரண்டிலுமே செயற்படும் அதனால்தான் 'ஸமானாதி$^4$கரண' என்ற சொல் இச்சூத்திரத்தில் பயன்படுத்தப்–பட்டிருக்கிறது. இல்லாவிட்டால், இச்சூத்திரம் தத்புருஷத் தொகையை மட்டுந்தான் சுட்டும். ப$^2$ஹுவ்ரீயைபயல்ல.

வா: மஹத$^3$ாத்வே க$^4$ாஸ கர வி'ஸிஷ்டே'ஷு
உபஸம்க்$^2$யானம் பும்வத்$^3$ வசனம் ச அஸமானாதி$^4$ கரணார்த$^2$ம் 'மஹத்' இன் ஈறுக்கு 'ஆ' பதிலியாக, அச்சொல்லுக்குப்பின் க$^4$ாஸ, கர, விஸி'ஷ்ட' ஆகியவைகள் நிற்கும்போது வரும், சொற்கள் நேரியைபு கொள்ளாததாக இருந்தபோதிலும் பெண்பாற் சொல்லான 'மஹதீ' ஆண்பாலாக மாறும்.
மஹத்யா க$^4$ாஸ: = மஹாக$^4$ாஸ: மஹத்யாகர: = மஹாகர: மஹத்யா விஸிஷ்ட = மஹாவிஸிஷ்ட:

வா: அஷ்டன: கபாலே ஹவிஷ்யுபஸம்க்$^2$யானம்
'கபால' என்ற சொல்லுக்குமுன் நிற்கும் 'அஷ்டன்' இனின் ஈறுக்குப் பதிலியாக 'ஆ' அத்தொகை வேள்வியில் அளிக்கும் பொருளைச் சுட்டும்போது வரும்.
அஷ்டாகபால: சரும் நிர்வபேத் ஆனால் அஷ்டகபாலம் ப்$^3$ராஹ்மணஸ்ய (வேள்வியில் படைப்பது அல்ல)

வா: க3வி ச யுக்தே அஷ்டன உபஸம்க்2யானம் கர்தவ்யம்.

'கெ3ளவுக்கு முன் நிற்கும் 'அஷ்டன்' இனின், ஈறுக்குப் பதிலியாக 'ஆ' அது பூட்டப்பட்ட, இணைக்கப்பட்ட' என்ற பொருளைச் சுட்டும்போது வரும். அஷ்டாக3வேன ஸ'கடே'ன "எட்டு மாடுகள் பூட்டப்பட்ட வண்டியால்" ஆனால் அஷ்ட'க3வம் ப்3ராஹ்மணஸ்ய இது "பூட்டப்பட்ட" என்ற பொருளைச் சுட்டவில்லை.

**6.3.47** த்3வ்யஷ்டன: ஸங்க்2யாயாமப3ஹுவ்ரீஹ்யஸீ'த்யோ:

த்3வி, அஷ்டன் ஆகியவைகளின் பின், ஒரு எண்ணுப்பெயர் தொடர்ந்து வரும்போது, அவைகளின் ஈறுக்குப் பதிலியாக 'ஆ' வரும். ஆனால், ப3ஹுவ்ரீஹித் தொகையிலோ அல்லது அச்சொற்களுக்குப்பின் 'அஸிதி' வரும்போதோ அவ்வாறாகாது.

த்3வௌ ச த3ஸ'ச = த்3வி + த3ஸ' = த்3வாத3ஸ '12 அஷ்டாத3ஸ''18'

1) ப3ஹுவ்ரீஹி – த்3வௌ வா த்ரய: வா அஸ்மின் = த்3வித்ரா: 'இரண்டோ அல்லது மூன்றோ'

2) அஸீதி – த்3வி + அஸீ'தி = த்3வ்யஸீ'தி '82' ஆனால் பஞ்ச த3ஸ, த்3வை மாதுர

வா: ப்ராக் ஸ'தாதி3தி வக்தவ்யம்

இந்த விதி 100 வரையிலுந்தான் செயற்படும். ஆகவே த்விஸ1தம் '200'த்3விஸஹஸ்ரம் '2000', அஷ்ட'ஸ'தம் அஷ்டஸஹஸ்ரம்.

**6.3.48** த்ரேஸ் த்ரய:

மற்றொரு எண்ணுப் பெயருக்குமுன் 'த்ரி'க்குப் பதிலியாக 'த்ரயஸ்' வரும். ஆனால் ப3ஹுவ்ரிஹியில் அவ்வாறாகாது. 'அஸீதி' பின்னால் வரும்போதும் அவ்வாறாகாது.

த்ரி + த3ஸ'ன் = த்ரயஸ் + த3ஸ'ன் + ஸு = த்ரயோத3ஸ' = த்ரயோத3ஸ': '13' த்ரயோவிம்ஸ1தி

த்ரித3ஸ'ா: (5.4.73) மூன்றோ அல்லது பத்தோ கொண்ட (ப3ஹுவ்ரீஹி) த்ர்யஸீ'தி '83' த்ரை மாதுர: (எண்ணுப் பெயர் இரண்டாவது உறுப்பினராக வரவில்லை)

த்ரிஸ'தம், த்ரிஸஹஸ்ரம்

**6.3.49** விப4ாஷா சத்வாரிம்ஸத்ப்ரப்4ருதௌ ஸர்வேஷாம்

மேலே விதிக்கப்பட்ட பதிலிகள் எல்லாம் (த்3வி, த்ரி, அஷ்டன்) சத்வாரிம்ஸ'த் (40) தும் அதைத் தொடர்ந்து வரும் எண்ணுப் பெயர்களும் இரண்டாவது உறுப்பினராக நிற்கும்போது விருப்பாகும். (ஆனால் ப3ஹுவ்ரீஹி, யிலும், அஸீ'தி தொடருமிடங்களைத் தவிர்த்து)

த்$^{3}$வி/த்$^{3}$வா சத்வாரிம்ஸ'த் '42'
த்ரி/த்ரயஸ் சத்வாரிம்ஸ'த் '43'
அஷ்ட/அஷ்டா பஞ்சாஸ'த் '85'

**6.3.50** ஹ்ருத$^{3}$யஸ்ய ஹ்ருத்$^{3}$லேக$^{2}$ யத்$^{3}$ அண் லாஸேஷு

'லேக$^{2}$' என்ற சொல்லுக்கு முன் நிற்கும் 'ஹ்ருத$^{3}$ய' என்ற சொல்லுக்குப் பதிலியாக 'ஹ்ருத்$^{3}$' வரும். யத், அண் ஒட்டுக்களுக்கு முன்னும் , 'லாஸ' என்ற சொல்லுக்கு முன்னும், 'ஹ்ருத$^{3}$ய'வுக்குப் பதிலியாக 'ஹ்ருத்$^{3}$' வரும். ஹ்ருத்யம் லிக$^{2}$தி = ஹ்ருத் + லிக்$^{2}$ + அண் (3.2.1) = ஹ்ருல்லேக$^{2}$: (8.4.60) 'கவலை' ஹ்ருத$^{3}$யஸ்யப்ரிய: = ஹ்ருத்$^{3}$ய:
"இதயத்துக்கினிய" ஹ்ருத்$^{3}$ + அண் = ஹ்ருத$^{3}$: (4.3.120 'இதயம் தொடர்பான' ஹ்ருத$^{3}$யஸ்ய லாஸ: = ஹ்ருல்லாஸ' 'இதயத் துடிப்பு'
'லேக$^{2}$' என்ற சொல் 'அண்' ஒட்டாலாக்கப்படும் போதுதான் இவ்வாறாகும். '$^{4}$கஞ்' ஒட்டினாலாக்கப்பட்டால் இது ஹ்ருத$^{3}$ய லேக$^{2}$: ஆகும்.

**6.3.51** வா ஸோ'க ஷ்யஞ் ரோகே$^{3}$ஷு

ஸோ'க, 'ஷ்யஞ்' ஒட்டு, ரோக ஆகியவைகளுக்கு முன் ஹ்ருத$^{3}$ய என்ற சொல்லுக்கு ஹ்ருத்$^{3}$ விருப்பாகப் பதிலியாகும்.
ஹ்ருத$^{3}$யஸ்ய ஸோ'க: = ஹ்ருத் + ஸோ'க: = ஹ்ருச்சே$^{2}$'க: (8.4.50, 63) அல்லது ஹ்ருத$^{3}$ய ஸோ'க: ஸுஹ்ருத$^{3}$ய + ஷ்யஞ் = ஸௌஹ்ருதய் ϕ – ய = ஸௌஹ்ருத$^{3}$ய்ய, அல்லது ஸௌஹார்த்$^{3}$ய 'நட்பு'; ஹ்ருத$^{3}$யஸ்ய ரோக$^{3}$: = ஹ்ருத்$^{3}$ரோக$^{3}$:, ஹ்ருத$^{3}$ய ரோக$^{3}$: 'இதய நோய்'

**6.3.52** பாத$^{3}$ஸ்ய பதாஜ்யாதிகே$^{3}$ா பஹதேஷு

ஆஜி, ஆதி, க$^{3}$ா 'போகிற', உபஹத 'அடிக்கப்பட்ட' ஆகியவைகளுக்கு முன் நிற்கும் 'பாத' (கால்) என்ற சொல்லுக்குப் 'பத$^{3}$' பதிலியாகும்.
பாத$^{3}$ாப்$^{4}$யாம், அஜதி/அததி/க$^{3}$ச்ச$^{2}$தி = பத$^{3}$ + அஜ்/அத் + இண் = பதாஜி, பத$^{3}$ாதி 'காலாட்படை' பாத$^{3}$ + க$^{3}$ம் + ட$^{3}$ (3.2.48 வார) பத$^{3}$க$^{3}$ 'காலாட்படை'
பாதே$^{3}$ன உபஹத: = பதே$^{3}$ாபஹத: 'காலால் உதைக்கப்பட்ட'

**6.3.53** பத்$^{3}$யத்யத த$^{3}$ர்தே$^{2}$

"அதற்குத் தகுந்த" என்ற பொருளைச் சுட்டாமல் அமையும் போது (அதத்$^{3}$ர்தே$^{2}$) 'யத்' ஒட்டுக்குமுன் நிற்கும் 'பாத$^{3}$' என்ற சொல்லுக்குப் பதிலியாக 'பத$^{3}$' வரும்.
பாதௌ$^{3}$ள வித்$^{4}$யதி = பாத$^{3}$ + யத் = பத்$^{3}$யத் = பத்$^{3}$ய 'காலைத் துளைக்கும்' பத்$^{3}$யா: 'கூழாங்கற்கள் 'முட்கள்'
ஆனால் பாத$^{3}$ார்தஉம் உத$^{3}$கம் = பாத$^{3}$ + யத் = பாத்$^{3}$ ϕ –யம் (5.4.25) = பாத்யம்·

(5.4.26) 'காலுக்காகத் தண்ணீர்'

வா: பத்$^{3}$ப$^{4}$ாவே இகே சரதாவுபஸங்க்$^{2}$யானம்
'அதனால் நடக்கிறான்' என்ற பொருளைச் சுட்டும் 'இக' ஒட்டுக்கு முன் நிற்கும் 'பாத$^{3}$' என்ற சொல்லுக்குப் 'பத்$^{3}$' பதிலியாகும்.
பாத$^{3}$ாப்$^{4}$யாம் சரதி = பதி$^{4}$க:
இது 'ஷ்டன்' (4.4.10) ஒட்டாலாக்கப்பட்டது.
இச்சூத்திரத்தில் காணப்படும் 'பாத' 'கால்' ஒரு பிராணியின் அவயவம் என்ற பொருளைச் சுட்டும். ஆனால் 5.1.34 இல் கூறப்பட்டிருக்கும் 'பாத' ஒரளவையைச் சுட்டுவதால், அதற்குப் பதிலியாக 'பத்$^{3}$' வராது. த்$^{3}$விபாத்$^{3}$யம், த்ரிபாத்$^{3}$யம்.

**6.3.54** ஹியமகாஷி ஹதிஷு ச
ஹிம, காஷின், ஹதி ஆகியவைகளுக்குமுன் நிற்கும் 'பாத' என்ற சொல்லுக்கும் 'பத்$^{3}$' பதிலியாகும்.
பத$^{3}$ஸ்ய ஹிமம் = பத்$^{3}$ + ஹிமம் = பத்$^{3}$திம$^{4}$ம் (8.4.68) 'காலில் குளிர்'; பாதெ$^{3}$ள கஷுதும் ஸி'லம் அஸ்ய = பத்$^{3}$ + கஷ் + ணினி (3.2.78) பத்காஷின் 'பாதசாரி'
பத$^{3}$ாப்ய$^{4}$ாம் ஹன்யதே = பத$^{3}$ாப்யாம் + ஹன் + க்தின் + ஹதி: = பத் + ஹதி = பத்$^{3}$த$^{4}$தி 'நடைபாதை'

**6.3.55** ருச: ஸே'
(இருக்குவேதத்தின் ஒரு செய்யுளான) 'ருச்' என்ற பொருளைச் சுட்டும்போது, 'ஸ'ஸ்' ஒட்டுக்கு முன் நிற்கும் 'பாத' என்ற சொல்லுக்குப் 'பத்$^{3}$' பதிலியாகும்.
பாத$^{3}$ + ஸ'ஸ் = பத்$^{3}$ + ஸ'ஸ் = பச்ச$^{2}$: (8.4.40; 55, 63)
பச்சே$^{2}$ா க$^{3}$ாயத்ரீம் ஸம்ஸதி
"காயத்ரி" செய்யுளை கால்பகுத, கால் பகுதியாகப் புகழ்கிறான்" ஆனால் பாத$^{3}$ஸ'; கார்ஷாபணம் த$^{3}$த$^{3}$ாதி

**6.3.56** வா கே$^{4}$ாஷ மிஸ்ர ஸ'ப்$^{3}$தே$^{3}$ஷு
கே$^{4}$ாஷ, மிஸ'ர, ஸ'ப்$^{3}$த$^{3}$ ஆகியவைகளுக்கு முன் நிற்கும் 'பாத' என்ற சொல்லுக்கு 'பத்$^{3}$' விருப்பாகப் பதிலியாகும். பாத$^{3}$ஸ்ய கே$^{4}$ாஷ:/ஸ'ப்$^{3}$த:=
பாத$^{3}$ கே$^{4}$ாஷ: (அ) பத்$^{3}$கே$^{4}$ாஷ:
பாத$^{3}$ ஸ'ப்$^{3}$த: (அ) பத்$^{3}$ ஸ'ப்$^{3}$த$^{3}$: 'காலடியோசை'
பாதே$^{3}$ன மிஸ்'ரித: = பாத$^{3}$மிஸ்'ர:
பத்மிஸ்ர: பன்மிஸ்'ர: (2.1.31, 8.4.45)
கால்; கால் பகுதியைக் கலந்த

வா: நிஷ்கே ச இதி வக்தவ்யம்
'நிஷ்க' என்ற சொல்லுக்கு முன்னும் அவ்வாறே
பாத + நிஷ்க: = பன்னிஷ்க:, பாதநிஷ்க;

**6.3.57** உத$^3$கஸ்யோத$^3$: ஸம்க்$^3$ஞாயாம்

'உத$^3$க' என்ற சொல்லுக்கு, 'உத$^3$' என்ற சொல், அத்தொகை ஒரு பெயரைச் சுட்டும்போது பதிலியாகும். உத$^3$கஸ்ய மேக$^4$:=உத$^3$மேக$^4$:
தஸ்ய அபத்யம் = ஔத$^3$மேகி$^4$ (4.1.95) 'ஔத$^3$மேகி$^4$யின் தந்தை' உத$^3$கம் வஹதி = உத$^3$வாஹ: ஔதவாஹி = ''ஔத$^3$வாஹியின் தந்தை''
பெயரைக் குறிக்காவிட்டால் உத$^3$கமேக$^4$:– 'மழைமேகம்'
உத$^3$க வாஹ: 'தண்ணீர் சுமப்பவன்'

வா: ஸம்க்$^3$ஞாயாமுத்தர பத$^3$ஸ்ய உத$^3$க ஸ'ப்$^3$த$^3$ஸ்ய உத$^3$ாதே$^3$ஸோ ப$^4$வதீதி வக்தவ்யம்
இரண்டாவது உறுப்பினராக நிற்கும்' உத$^3$க' என்ற சொல்லுக்கு 'உத$^3$' என்ற சொல், அத்தொகை பெயரைச் சுட்டும்போது வரும்.
லோஹிதோத$^3$:, நீலோத$^3$:, க்ஷீரோத$^3$:

**6.3.58** பேஷம் வாஸவாஹனத$^4$ஷுச

பேஷம், வாஸவாஹன், தி$^4$ ஆகியவைகளுக்கு முன் நிற்கும் 'உதக' என்ற சொல்லும் 'உத$^3$' ஆகும்.
உத$^3$கம் பினஷ்டி = உத$^3$ + பிஷ் + ணமுல் (3.4.38) = உதபேஷம் பினஷ்டி 'தண்ணீரைக் கொண்டு அரைக்கிறான்'.
உத$^3$கஸ்ய வாஸ: = உத$^3$வாஸ: 'நீரில் வாழும் நீர் வாழ் பிராணிகள்'; உதவாஹன 'தண்ணீர் சுமப்பவன்'
உத$^3$கம் தீ$^4$யதே அஸ்மின் = உத + த$^4$ா + கி = உத$^3$தி$^4$: (3.3.93) 'கடல்'

**6.3.59** ஏகஹலாதௌ$^3$ பூரயிதவ்யே அன்யதரஸ்யாம்

'நிரப்ப வேண்டும்' என்ற பொருளைச் சுட்டும், ஒரேயொரு மெய்யில் தொடங்கும் சொல் இரண்டாவது உறுப்பினராக நிற்கும்போது, 'உதக' என்ற முதலுறுப்பினருக்குப் பதிலியாக 'உத$^3$' விருப்பாக வரும்.
உக$^3$கஸ்ய கும்ப$^4$: = உத$^3$கும்ப$^4$: 'தண்ணீர்ப் பானை'
) உத$^3$ககும்ப$^4$: ஆனால் உதகஸ்த$^2$ாலம் (இரண்டாவது உறுப்பினர் கூட்டுமெய்யில் தொடங்குகிறது)
உத$^3$கபர்வத:

**6.3.60** மந்தௌ$^2$த$^3$ன ஸக்து பி$^3$ந்து$^3$ வஜ்ர ப$^4$ார ஹார வீவத$^4$ க$^3$ாஹேஷூ ச

மந்த$^2$, ஓதன, ஸக்து, பி$^3$ந்து$^3$, வஜ்ர, ப$^4$ார, ஹார, வீவத$^4$, க$^3$ாஹ ஆகிய சொற்களுக்கு முன் நிற்கும் 'உத$^3$க' என்ற சொல்லுக்குப் பதிலியாக 'உத$^3$' விருப்பாக வரும்.
உத$^3$கேன மந்த்$^2$: உத$^3$மந்த$^2$:
'தண்ணீருடன் கலந்த குடி வகை'

உதெ3ளத3ன 'தண்ணீருடன் கொதிக்க வைத்த அரிசி' அல்லது உத3கமந்த3:, உத3கோத3ன.
உத3கபி3ந்து, உத3பிந்து 'தண்ணீர்த்துளி'
உத3க வஜ்ர, உத3வஜ்ர, 'தண்ணீர் ஜாடி'
உத3க ப4ார, உத3ப4ார, உத3கஹார,
உத3ஹார, உத3கவீவத4, உதவீவத4 'தண்ணீர் காவடி
உத3கம் க3ாஹதே = உத3க/உத3 + க3ாஹ் + அண் = (3.2.1) உத3க/ உத3க3ாஹ: 'நீர் மூழ்கி'

**6.3.61** இக: ஹ்ரஸ்வ: அங்ய: க3ாலவஸ்ய
பெண்பாலொட்டான ஙீ (= ஙீப், ஙீஷ், ஙீன்)யைத் தவிர்த்து இக் (=இ , உ, ரு, ல்) பிரத்தியாஹாரத்தின்
நெடிலுயிரையீறாகக் கொண்ட முதல் உறுப்பினரின் ஈறுக்குப் பதிலியாக அதன் குறில், இரண்டாவது உறப்பினர் நிற்கும் போது வரும் என்பது காலவரின் கருத்து.
க்3ராமம் நயதி = க்3ராம + θ + நீ + க்விப் = க்3ராமணீ:, தஸ்யபுத்ர:= க்3ராமணீபுத்ர:,
க்3ராமணிபுத்ர: 'கிராமணியின் மகன்';
ப்3ரஹ்ம ப3ந்தூ 4புத்ர:, ப்3ரஹ்ம ப3ந்து4புத்ர:
ஆனால் க3ார்க்3ய + ஙீப் = க3ார்க்3 θθ +ஈ க3ார்கீ, தஸ்ய புத்ர: = க3ார்கீபுத்ர: 'கார்கியின் மகன்'
ஆனால் மாலாபாத3: (இக் 'ஈறல்ல)
இது வ்யவஸ்தித விப4ாஷா.
'காரீஷக3ந்தீ புத்ர' முதலியவைகளில் இவ்விதி செயற்படாது. 6.1.139 இவைகளில் பயன்படுத்தப்படும்.

வா: இயங் உவங் ப4ாவினாமவ்யயானாம் ச நப4வதி இயங், உவங் என்ற ஆகமங்கள், வேற்றுமையுருபுகளிணைக்கும் போது வருஞ் செ ாற்களிலும், அவ்யயீ பாவத் தொகை களிலும் இது செயற்படாது,
ஸ்ரீகுலம். ப்4ருகுலம், காண்டீ3பூ4தம், ஸ்ருஷலீ பூதம்.

வா: ப்4ருகும்ஸாதீ3னாம் துப4வத்யேவ
ஆனால் 'ப்4ருகும்ஸ' முதலிபவைகளில் இவ்விதி செயற்படும்.

**6.3.62** ஏக தத்3தி4தே ச
'தத்3தி4த' ஒட்டுக்குமுன் நிற்கும் 'ஏகா'வின் ஈறு குறிலாகும்.
இரண்டாவது உறுப்பினர், அச்சொல்லைத் தொடரும்போது அவ்வாறேயாகும்.
ஏகஸ்யா: ஆக3தம், ஏகா + ரூப்யம் = ஏகரூப்யம் (4.3.81) ''ஒரே பெண்வழித் தோன்றல்'' ஏகமயம் (4.3.82) ''ஒன்றைக் கொண்ட'' (பெண்பால்); ஏகத்வம், ஏகதா (5.1.10) 'வேறற்ற தன்மை'

ஏககக்ஷீரம் – 'ஒரு மாட்டுப்பால்' ஏகது³க்³த⁴ம்

பெண்பாற் சொல்லான 'ஏகா'வின் ஈறான 'ஆ', குறிலாகிறது. 'ஏக' ஒரு அடைச்சொல்லானால், 5.3.35 முதலிய விதிகளைப் பயன்படுத்தி, மேலே கொடுக்கப்பட்ட வடிவங்கள் பெறலாம். அதாவது 'ஏக' என்ற சொல் இரு எண்ணுப் பெயரானால் அவ்வாறு சொல்லாக்க முடியும். ஆனால் இச்சொல் 'மட்டும்' என்ற பொருளைச் சுட்டும்போது அவ்விதிகளைப் பயன்படுத்த முடியாது, இச்சூத்திரத்தில் 'ஏக' என்ற சொல், வேற்றுமையுருபு எதுவுமின்றி பயன்படுத்தப்பட்டிருக்கிறது. இது சந்த³ஸ் (யாப்பு) இன் வழுவு மேலே கொடுக்கப்பட்ட எடுத்துக்காட்டுகளிலெல்லாம் 'ஏகா' ஒரு பெண்பாற் சொல், அப்படியானால்தான் ஈறு குறிலாம். இல்லாவிட்டால் 'ஏக'வின் ஈறு ஏற்கனவே 'குறில்' ஆகை யால், மேலும் அதைக் குறிலாக்க முடியாது. இக்குறிலாக்கம் இச் சொல்லின் வேறு உயிர்களுக்குப் பயன்படுத்த முடியாது. இது இது இறுதி உயிருக்குத்தான் பயன்படுத்தக் கூடியது.

**6.3.63** ங்யாபோ: ஸம்க்³ஞா ச²ந்த³ஸோர் ப³ஹுலம்.

ஙீ (ஈ), ஆப் (ஆ) என்ற பெண்பால் ஒட்டுக்கள், பெயராகவே அல்லது வேத மொழியிலோ, காணப்படும்போது, அவைகள் பல வகையில் குறிலாகும்.

ரேவத்யா: புத்ர: = ரேவதிபுத்ர: 'ரேவதியின் மகன்'

ரோஹிணிபுத்ர:

நாந்தீ³ம் கரோதி= நாந்தீ³ + க்ரு + ட (3.2.21) = நாந்தீகர: 'நாடகத்தில் முகவுரை கூறுபவன்' இங்கு ஈறு குறுகாது.

வேதமொழி: குமாரீம் த³த³ாதி குமாரித³ா

'பெண் கொடுப்பவன்' 'உர்வித³ா 'பூமியையளிப்பவன்' ப²ால்கு³னீ பௌர்ண மாஸி, ஜத³தீச்ச²ந்த³ஸ் (ஈறு குறுகவில்லை)

'ஆப்' ஸி'லாயா: வாஹ: = ஸி'லவஹம் – ஒரு பெயர் லோமகாயா: க்³ருஹம் = லோமகாக்³ருஹம் (2.2.8) ஒரு பெயர்.

வேதமொழி அஜாயா: க்ஷீரம் = அஜக்ஷீரம் "ஆட்டுப்பால்" அஜக்ஷீரேண ஜுஹோதி ஊர்ணம்ருத³ா (ஊர்ணாய: ம்ருத்) ப்ருதி²வீம் விஸ்'வத⁴ாயஸம். ஊர்ணாஸூத்ரேண கவயோ வயந்தி

ஊர்ணாயா:, ஸீத்ரம் = ஊர்ணாசூத்ரம் 'கம்பளி நூல்'

**6.3.64** த்வே ச

ஙீ, அப் என்ற பெண்பாலொட்டுக்குப் பின் 'த்வ' வரும்போதும், அச்சொற்களினிறுதி உயிர் பலவிதமாக குறிலாகும்.

இவ்வகைச் சொற்கள், பெயராக வராது, ஆகவே, இது வேதமொழியை மட்டும் கூறுகிறது.

அஜாயா: ப⁴ாவ: = அஜாத்வம், அஜத்வயம் 'பெண்ணாட்டின்தன்மை' ரோஹிணீத்வம், ரோஹிணித்வம்.

**6.3.65** இஷ்ட கேஷீகாமாலானாம் சித தூல ப$^4$ாரீஷு

முதலுறுப்பினராக வரும் இஷ்டகா, இஷீகா,மாலா ஆகிய சொற்களின் இறுதி உயிர், அதாவது 'ஆ', அச்சொற்களைத் தொடர்ந்து முறையே, சித, தூல, ப4ாரின் ஆகியவைகள் வரும்போது குறிலாகும்.

இஷ்டகாபி$^4$: சித:= இஷ்டகசித: 'செங்கற்களால் குவிக்கப்பட்டது''; இஷூகாயா: தூலம் = இஷூகதூலம் ''கோரைக் கட்டு''; மாலாம் ப$^4$ர்தும் ஸீலம் அஸ்யா:= மாலா + ப்$^4$ரு + ணினி (3.2.78) + ஙீப் (4.1.5) = மாலப$^4$ாரிணீ – ''மாலையை யணிந்துகொள்ளும் வழக்கமுள்ள பெண்'' 'இஷ்டக' முதலிய சொற்கள் இறுதியுறுப்பினராக நிற்கும் போதும் அவ்வாறேயாகும். காட்டாக பக்வேஷ்டகசிதம் முஞ்ஜேஷிக தூலம், உத்பலமாலப$^4$ாரிணீ கன்யா.

**6.3.66** கி$^2$த்யனவ்யயஸ்ய

அவ்யயங்களைத் தவிர்த்த மற்ற சொற்களுக்குப்பின் 'க$^2$'ஐ இத்தாக் கொண்ட ஒட்டுக்களாலாக்கப்பட்ட சொற்கள் நிற்கும்போது, முதற்சொல்லினிறுதி உயிர் குறிலாகும்.

'க$^2$த்' ஒட்டுக்கள் $^2$கச் (3.2.38); க$^2$முஞ் (3.4.25) க$^2$ல் (3.3.126);
க$^2$ஸ் (3.2.28), கி$^2$ஷ்ணுச் (3.2.57), கு$^2$கஞ் (3.2.57), க்$^2$யுன் (3.2.56)

காலீம் ஆத்மானம் மன்யதே = காலீ + θ + மன் + க$^2$ஸ் = காலீ + மும் + மன் + அஸ்$^1$ = காலீம் + மன் + ஸ்$^1$யன் + அ (3.1.69) + டாப் = காலிம் மன்யா ''தன்னைக் கருப்பு என்று கருதுபவன்''

தே$^3$ாஷா–மன்யம்–அஹ:=தே$^3$ாஷாமன்யம: இரவுக்காகக் கழியும் பகல்'' தி$^3$வாமன்யா ராத்ரி: (அவ்யயம்)

**6.3.67** அருர்த்$^3$லிஷத$^3$ஜந்தஸ்ய மும்

'க்$^2$'ஐ 'இத்'தாகக் கொண்ட ஒட்டுக்களாலாக்கப்பட்ட சொற்களுக்கு முன் நிற்கும் (அவ்யயத்தைத் தவிர்த்த மற்ற) அருஸ் 'காயம்' த்$^3$விஷத் 'பகைவன்' உயிரீற்றுச் சொற்கள் ஆகியவைகளின் இறுதி உயிர்களுக்கு முன், 'மும்' இணைக்கப்படும். அரு: துத$^3$தி = அரு: + துத்$^3$ + க$^2$ஸ் (3.2.35) = அரும்–ஸ்– துத்$^3$ + ஸ$^1$ + அ = அரும் – θ – துத$^3$: = அருந்துத$^3$: (8.2.23) 'வலிக்கும்', 'காயத்தை எரிக்கும்'; த்$^3$விஷந்தம் தாபயதி = த்$^3$விஷத் + தப் + க$^2$ச் (3.2.39) = த்விஷ–மும்–த்–தப=த்$^3$விஷன்– θ – தப (4.94; 8.4.=த்விஷந்தப 'பகைவனைத் தண்டிப்பவன்' காலிம் மன்யா.

**6.3.68** இச: ஏகாசோ அம்ப்ரத்யய வச்ச

'இச்' பித்தியாஹாரத்தின் ('அ'வைத் தவிர்த்த எல்லா உயிர்களும்) ஒருயிரை இறுதியில் கொண்ட ஓரசைச் சொல்லுக்குப்பின் 'க$^2$' ஐ 'இத்'தாகக் கொண்ட ஒட்டுக்களாலாக்கப்பட்ட சொல் தொடரும்போது முதலுறுப்பினருடன் 'அம்' (ஆகமம்) இணைக்கப்படும்.

இந்த 'அம்' வேற்றுமையுருபான 'அம்' போன்று செயற்படும்.
க$^{3}$ாம் ஆத்மானம் மன்யதே = கே$^{3}$ா–θ + மன் + க$^{2}$ஸ் (3.2.83) = கே$^{3}$ா + அம் + மன் + ஶ்யன் + அஸ்$^{1}$ = க$^{3}$ாம் + மன்ய:= க$^{3}$ாம்மன்ய:
"தன்னை ஒரு பசுவாகக் கருதும்"
ஸ்த்ரியம், மன்ய: 'தன்னை ஒரு பெண்ணாகக் கருதும்" இரண்டாம் வேற்றுமையுருபு இணைக்கும்போது கீழ்க்கண்ட மாற்றங்கள் ஏற்படும். 'ஆ' பதிலியாதல், முதல் உயிரின் இயல்பைக் கொண்ட உயிர் பதிலியாதல், 'குணம்' ஆதல், 'இயங்' அல்லது 'உவவ்' இணைத்தல்.

1) காம் மன்ய (6.1.93)
2) ஸ்த்ரீம் மன்ய (6.1.107) பூர்வஸவர்ண)
3) குண–நரம் மன்ய (7.3.110)
4) இயங், உவங், – ஸ்ரியம் மன்ய.

ப்$^{4}$ருவம் மன்ய (6.4.81)
ஆனால் லேக$^{2}$ா இவ ப்$^{4}$ரூர் அஸ்யா:= லேக$^{2}$ா ப்$^{4}$ரூ: இதிலிருந்து லேக$^{2}$ாப்ரூம் மன்ய (பலவசைச் சொல்) த்வங்மன்ய: (இச்' அல்ல)

**6.3.69** வாசம்யம புரந்த$^{3}$ரௌ ச
வாசம்யம, புரந்த$^{3}$ர என்ற சொற்கள் 'அம்' இணைத்து விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்டவை.
வாசம் யச்சதிஉ = வாச் + θ + யம் + க$^{2}$ச் (3.2.40) = வாசம்யம: ஒரு விரதமாகத் தன் பேச்சைக் கட்டுப்படுத்திக் கொள்ளும்'.
புரம் + த்$^{3}$ரு + ணிச் + க$^{2}$ச் (3.2.41) = புரம் – த்$^{3}$ரு + θ + அ (3.4.51) = புரந்த$^{3}$ர 'இந்திரன்'

**6.3.70** காரே ஸத்யாகத$^{3}$ஸ்ய
'கார' என்ற சொல் இறுதியுறுப்பினராக நின்று, அதற்கு முன், ஸத் ய, அக$^{3}$த$^{3}$ என்ற சொற்கள் நிற்கும்போது, முதலுறுப்பினரின் இறுதி உயிர்களுக்குப்பின் 'மும்' (ஆகமம்) வரும்.
ஸதயம் கரோதி = ஸத்ய + மும் + க்ரு + அண் (3.2.1) = ஸத்யங்கார:
அல்லது ஸத்யஸ்ய கார:
அக$^{3}$த$^{3}$ங்கார: 'மருத்துவர்'

வா: அஸ்து ஸத்யாகத$^{3}$ஸ்ய கார இதி வக்தவ்யம் அஸ்துங்கார:

வா: ப$^{4}$க்ஷஸ்ய ச$^{2}$ந்த$^{3}$ஸி காரே மும் வக்தவ்ய:
'ப$^{4}$க்ஷ' என்ற சொல்லுக்குப்பின், வேத மொழியில் 'மும்' மேற்குறி ப்பிட்ட சூழலில் வரும்.
ப$^{4}$க்ஷம் கரோதி, ப$^{4}$க்ஷண்ய கார: = ப$^{4}$க்ஷங்கார: 'ஒரு வேள்வியி ன் திரவியங்களை உணவாக்குபவன்' வேறு இடங்களில் ப$^{4}$க்ஷகார:

வா: தே$^4$னோர் ப$^4$வ்யாயாம் மும் வக்தவ்யா:

'ப$^4$வ்ய'வுக்கு முன் நிற்கும் 'தே$^4$னு' என்ற சொல்லின் இறுதி உயிருக்குப்பின் 'மும்' வரும்.

தே$^4$னும்ப$^4$வ்யா

வா: லோகஸ்ய ப்ருணே மும்வக்தவ்ய:

'ப்ருண' இறுதியுறுப்பினராகவும், 'லோக' முதலுறுப்பினராகவும் வருந் தொகையில், முதலுறுப்பினரின் இறுதி உயிருக்குப்பின் 'மும்' வரும்.

லோகம்ப்ருண:

வா: இத்யே அனப்$^4$யாஸ'ஸ்ய மும் வக்தவ்ய:

'அனப்$^4$யாஸ' என்ற சொல்லைத் தொடர்ந்து 'இத்ய' நிற்கும்போது, முதற்சொல்லுக்குப்பின் 'மும்' வரும். அனப்$^4$யாஸ'மித்ய

வா: ப்$^4$ராஷ்ட்ராக்$^3$ன்யோரிந்தே$^4$ மும்வக்தவ்ய:

ப்$^4$ராஷ்ட்ர, அக்$^3$னி, ஆகியவைகளுக்குபின் 'இந்த$^4$' வரும்போது, முன் குறிப்பிட்ட சொற்களோடு 'மும்' இணைக்கப்படும்.

ப்$^4$ராஷ்ட்ரமிந்த$^4$:, அக்னிமிந்த$^4$:

வா: கிலே அகி$^3$லஸ்ய மும்வக்தவ்ய:

'கி$^3$ல'என்ற சொல், 'கி$^3$ல'வைத் தொடர்ந்து வராமலிருந்தால் முதலுறுப்பினருக்குப்பின் மும்' இணைக்கப்படும்.

திமிங்கில: ஆனால் கி$^3$லகில:

வா: கி$^3$ல கி$^3$ல இதி வக்தவ்யம்

'கி$^3$லகில' என்ற சொல் இரண்டாவது உறுப்பினராக வரும் போதும் 'மும்' வரும்.

திமிங்கி$^3$ல கி$^3$ல:

வா: உஷ்ண ப$^4$த்$^3$ரயோ: கரணே வக்தவ்யம்

உஷ்ண, ப$^4$த்$^3$ர என்ற சொற்களைத் தொடர்ந்து 'கரண' நிற்கும்போது, முதலுறுப்பினர்களின் பின் 'மும்' வரும்.

உஷ்ணங்கரணம், ப$^4$த்$^3$ரங்கரணம்

வா: ஸூதோக்$^3$ர ராஜபே$^4$ாஜமேர் வித்யேதேப்$^4$ய:

உத்தரஸ்ய து$^3$ஹித்ரு ஸ'ப்$^3$த$^3$ஸ்ய புத்ர ட$^3$ா தே$^3$ஸோ வா வக்தவ்ய

ஸூத, உக்$^3$ர, ராஜ, பே$^4$ாஜ, மேரு, ஆகியவைகளின் பின்வரும் "து$^3$ஹித்ரு" என்ற சொல் நிற்கும்போது அதற்கு 'புத்ர' விருப்பாக ஆதேஸமாகும்.

'புத்ரட'வில் காணப்படும் 'ட' 'ஙீப்$^3$'பின் பொருளைக் கொண்டது.

ஸூதபுத்ரீ, ஸூதது$^3$ஹிதா

உக்3ரபுத்ரீ, உக்3ர து3ஹிதா
ராஜபுத்ரீ, ராஜது3ஹிதா
பே4ாஜபுத்ரீ, போஜது3ஹிதா
மேருபுத்ரீ, மேருது3ஹிதா
'ஸாரங்கரவ' முதலியவைகளிலும், 'புத்ர' வருமென்பது சிலர் கருத்து, 'ஸை'லபுத்ரீ; என்பவைகளிலும் இவ்வாறு காணப்படும்.

**6.3.71** ஸ்'யேன திலஸ்ய பாதே ஞே
'ஞ' ஒட்டிணைக்கும்போது "ஸ்'யேன," 'தில' என்ற சொற்களின் பின் 'மும்' ஒட்டு, இரண்டாவது உறுப்பினருக்கு முன் வரும்.
ஸ்'யேனஸ்ய பாத: அஸ்யாம் க்ரீட3ாயாம்=ஸ்'யேன பாத + ஞ + டாப் (4.1.4) = ஸ்யைன + மும் + பாத் θ + டாப் = ஸ்'யைனம்பாதா ம்ருக3யா 'கழுகு கொண்டு வேட்டையாடுதல்' தைலம்பாதா–'எள்ளையெறிந்து விளையாடும் ஆட்டம்'
ஆனால் ஸ்'யேனபாத: ('ஞ' ஒட்டு இணைக்கவில்லை)

**6.3.72** ராத்ரே: க்ருதி விப4ாஷா
'ராத்ரி' என்ற சொல் முதலுறுப்பினராகவும், 'க்ருத்' ஒட்டினாலாக்கப்பட்ட சொல் இரண்டாவது உறுப்பினராகவும் நிற்கும் தொகையின் முதலுறுப்பினரின் இறுதி உயிருக்குப்பின் 'மும்' விருப்பாக இணைக்கப்படும்.
ராத்ரௌ சரதி = ராத்ரி – சர் ட (3.2.16)
ராத்ரி + மும் + சர = ராத்ரிம் சர அல்லது ராத்ரி சர
'இரவில் சுற்றுபவன்'
ராத்ரிமட:, ராத்ர்யட
இது அப்ராப்த விப4ாஷா, 'க்2'வை 'இத்'தாகக் கொண்ட 'க்ருத்' ஒட்டால் ஆக்கப்பட்ட சொற்களுக்குமுன், 'மும்' கட்டாயமாக வரும்.
ராத்ரிம் மன்யா

**6.3.73** ந லோபோ நஞ்:
'நஞ்' எதிர்மறையொட்டின் 'ந', அது ஒரு தொகையின் முதலுறுப்பினராக வரும்போது கெடும்.
நஞ் + ப்3ராஹ்மண: = அப்3ராஹ்மண:
நஞ் + வ்ருஷல: அவ்ருஷல:

வா: நஞோ நலோபோ அவக்ஷேபே திங்யுப ஸங்க்2யானம் கர்தவ்யம்
"கண்டித்தல், நிந்தனை" என்ற பொருளைச் சுட்டும்போது, வினைக்குமுன் வரும் 'நஞ்' இன் 'ந' கெடும்.
அபசஸி (= நஞ் + பசஸி) த்வம் ஜால்ம அகரோஷி த்வம் ஜால்ம.

**6.3.74** தஸ்மான்னுடசி
'நஞ்' இன் 'ந' கெட்ட பிறகு 'நுட்' (ஆகமம்), உயிரை முதலாக் கொண்ட

சொற்களுக்கு முன் இணைக்கப்படும். நஞ் + அஸ்'வ = θ அ + அஸ்'வ (73) = அ + ன் + அஸ்'வ = அனஸ்'வ, அனஜ அனீஸ'

'நுட்' ஆகமம் இரண்டாவது உறுப்பினருக்குமுன் என்று குறிப்பிடாவிட்டால், இது 'நஞ்' உடன் வரும். அப்போது அனனஜ: என்ற வடிவம் 8.3.32இன்படி கிடைக்கும். இத்தகைய வடிவம் இம்மொழியில் ஒத்துக்கொள்ளமுடியாத ஒன்று. ஆகவே, இதைத் தவிர்க்கவே 'நுட்' இரண்டாவது உறுப்பினரோடு வர வேண்டுமென்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**6.3.75** நப்⁴ராண் நபாந் நவேத³ா நாஸத்யாநமுசின குல உநக நபும்ஸக நக்ஷத்ரநக்ர நாகே ஷு ப்ரக்ருத்யா

நப்⁴ராஜ் 'மேகம்', நபாத் 'மருமகன்', நவேத³ஸ் 'முட்டாள்' நாஸத்யா (இருமை முதல் வேற்றுமை) ''அஸ்வின் இரட்டையர்'' நமுசி ''ஒரு அசுரனின் பெயர்''. நகுல ''கீரி, பாண்டவர்களில் ஒருவனின் பெயர்''. நக², 'நகம்', நபும்ஸக, நக்ஷத்ர "நட்சத்திரம்'', நக்ர 'முதலை நாக 'சுவர்க்கம்' ஆகியவைகளில் எதிர்மறை இடைச்சொல், மாற்றமடையாது (இயல்பு)

1) ந ப்⁴ராஜதே = ந–ப்⁴ராஜ் + க்விப் = நப்⁴ராஜ் (3.2.177); (2) ந பாதி = ந + பா + ஸ¹த்ரு = ந + பா + θ + அத் = நபாத்; (3) ந வேத்தி = ந + வித்³ + அஸுன் = ந வேத³ஸ்; (4) ந–ஸத்ய–ஔ=அஸத்யௌ, ந அஸத்யௌ=நாஸத்ய + ட³ (7.1.39) நாஸத்யா; (5) ந முஞ்சதி = ந + முச் + கி நமுசி (3.1.135); (6) ந குலம் அஸ்ய = நகுல; (7) நக²ம் அஸ்ய = நக²; (8) ந ஸ்த்ரீ நபுமான் = நபும்ஸக; (9) நக்ஷரதே, க்ஷீயதே வா = நக்ஷத்ர; (10) நக்ரமதி = ந + க்ரம் + ட³ = நக்ர; (11) ந அகம் அஸ்மின் = நாக.

**6.3.76** ஏகாதி³ஸ்' சைகஸ்ய சாது³க்

'ஏக' என்ற சொல்லின் தொடங்கும் சொற்களின் 'நஞ்' மாற்றமடையாது. அந்த 'ஏக'வுடன் 'அது³க்' (ஆகமம்) வரும்.

ஏகேன விம்ஸ'தி = ஏக + அத் + ந விம்ஸ'தி = ஏ காந் ந விம்ஸ1தி '19' 'ஒன்று குறைய இருபது' 'அது³க்' முதலுறுப்பினருடன் இணைக்கப்படும். ஆகையால், இரண்டு வடிவங்கள் ஆகும். ஏகாத் ந விம்ஸ'தி:, ஏகாந்த விம்ஸ'தி (8.4.45)

**6.3.77** நகே³ா அப்ராணிஷு அன்யதரஸ்யாம்

பிராணியை சுட்டாமல் வரும்போது 'நக³' என்ற சொல்லின் 'நஞ்' விருப்பாக மாற்றமடையாது.

நக³ச்ச²தி = ந + க³ம் + ட்³ + நக³, θ அக³ = நக³, அக³ 'மரம், மலை' ஆனால் அக³: வ்ருஷல: ஸீ'தேன = 'குளிரினால் வ்ருஷலனுக்கு நடக்க முடியவில்லை'

**6.3.78** ஸஹஸ்ய ஸ: ஸம்க்³ஞாயாம்

ஸஹ 'உடன்', இரண்டாவது உறுப்பினருக்கு முன் ஒரு பெயரை ஆக்கும்போது 'ஸ'வாகும்.

ஸஹ அஸ்'வத் தே²ன = ஸ + அஸ்'– வத்த²ம் = ஸாஸ்வத்த²ம் 'ஒரு காட்டின்

பெயர்', ஸபலாஸம்

ஆனால் ஸஹ யோதி$^{4}$தவான் = ஸஹ + யுத்$^{3}$ + க்வனிப் (3.2.96) = ஸஹயுத்$^{4}$வன் 'சேர்ந்து சண்டையிடுதல்'; ஸஹ க்ருத்வன் 'சேர்ந்து பணி செய்தல்'

**6.3.79** க்$^{3}$ரந்த$^{4}$ அந்தாதி$^{4}$கே ச

"ஒரு நூலின் முடிவுவரை'' (க்$^{3}$ரந்த$^{2}$ாந்த) அல்லது 'அதிகம்' என்ற பொருளைச் சுட்டும்போது, 'ஸஹ', இரண்டாவது உறுப்பினருக்கு முன் 'ஸ' ஆகும்.

ஸஹ கலயா (=கலா–அந்தம்) = ஸஹ + கலா = ஸகலம் (2.1.6) 'கல' என்ற பகுதி வரையிலும்; ஸமுஹூர்தம்.

2) த்$^{3}$ரோணேன ஸஹ க$^{2}$ாரீ = ஸத்$^{3}$ரோண க$^{2}$ாரீ (2.2.28) ஒரு 'த்ரோண' அளவை அதிகமாகக் கொண்ட 'க$^{2}$ாரி' அளவு.

**6.3.80** த்$^{3}$விதீயே சானுபாக்$^{2}$யே

நேரில் பார்க்காத (அனுபாக்$^{2}$யே) ஒரு பொருளை இரண்டாவதாகக் கொண்ட இறுதியுறுப்பினருக்குமுன் நிற்கும் 'ஸஹ'வுக்கு 'ஸ' பதிலியாகும்.

அக்$^{3}$னி னா ஸஹ கபோத:=ஸ+ அக்$^{3}$னி: கபோத: ஸாக்$^{3}$னி கபோத:

"எங்கேயோ, தீ பரவியிருக்கிறது என்பதையறிவிக்கும் (அது காணப்படுவதால்) புறா'' ஸபிஸ$^{1}$ாசா வாத்யா 'புயல் எங்கோ வீசுவதையறிவிக்கும் பிசாசு' இவ்வெடுத்துக்காட்டுகளில், புறா, புயல் ஆகியவைகள் காணப்படுபவை. ஆனால், தீ, பிசாசு ஆகியவைகள் நேரில் காணப்படாதவை, ஆனால் இவைகளிருப்பதற்கு, புறா, பிசாசு அறிகுறியாகும்.

**6.3.81** அவ்யயீப$^{4}$ாவே சாகாலே

இரண்டாவது உறுப்பினர் காலத்தைச் சுட்டாத சொல்லாக நிற்கும் அவ்யயீப$^{4}$ாவத் தொகையில் (முதலுறுப்பினராக நிற்கும்) 'ஸஹ'வுக்குப் பதிலியாக 'ஸ' வரும்.

ஸஹ சக்ரேண தே$^{4}$ஹி ஸசக்ரம்

தே$^{4}$ஹி ''சக்கரத்துடன் வை''; ஸஹ து$^{4}$ரயா ப்ராஜ= ஸது$^{4}$ரம் ப்ராஜ ''ஏருடன் ஒட்டு'', ஆனால் ஸஹ பூர்வாஹ்ண ''காலையோடு''

**6.3.82** வா உபஸர்ஜனஸ்ய

பஹுவ்ரீஹித் தொகையில் (உபஸர்ஜன) இறுதியுறுப்பினருக்கு முன் நிற்கும் 'ஸஹ'வுக்குப் பதிலியாக 'ஸ' விருப்பாக வரும்.

புத்ரேண ஸஹ = ஸபுத்ர:, ஸஹ புத்ர: (2.2.28) ''பிள்ளையோடு'' ஆனால் ஸஹயுத்$^{4}$வன்

**6.3.83** ப்ரக்ருத்யா ஸி$^{1}$ஷ்யகோ$^{3}$ா வத்ஸ ஹலேஷு

கோ$^{3}$ா, வத்ஸ, ஹல என்ற சொற்களைத் தவிர்த்த மற்ற சொற்கள் இறுதியுறுப்பினராக நிற்கும்போது, 'வாழ்த்து' என்ற பொருளை அத்தொகை

சுட்டும்போது, முதலுறுப்பினராக 'ஸஹ' இயல்பாக நிற்கும் அதாவது 'ஸ' ஆகாது ஸ்வஸ்தி தே$^{3}$வத$^{3}$த்தாய ஸஹபுத்ராய 'தன் மகனோடு கூட தேவதத்தன் நன்மையடையட்டும்''. ஆனால் ஸ்வஸ்தி ப$^{4}$வதே ஸக$^{3}$வே/ ஸஹக$^{3}$வே ''தங்களுடைய மாடுகளுடன், தங்களுக்கு நன்மை பயக்கட்டும்''
ஸ்வஸ்தி ப$^{4}$வதே ஸவத்ஸாய/ஸஹ வத்ஸாய
ஸ்வஸ்தி ப$^{4}$வதே ஸஹலாய/ஸஹஹலாய

**6.3.84** ஸமானஸ்ய ச$^{2}$ந்த$^{3}$ஸி அமூர்த$^{4}$ப்ரப$^{4}$ருத் யுத$^{3}$ர்கேஷு

வேதமொழியில், மூர்த$^{4}$ன் 'தலை', ப்ரப$^{4}$ருதி 'தொடக்கம்' உத$^{3}$ர்க 'பலன்' ஆகியவற்றைத் தவிர்த்த ஏனைய சொற்கள் ஸமான ''இணையான ஸமமான ஒப்பான'' என்ற சொல்லுக்குப்பின் நிற்கும்போது 'ஸ', அதற்குப் பதிலியாக வரும்.

ஸக$^{3}$ர்ப்$^{4}$ய: (ஸமானே க$^{3}$ர்பே$^{4}$ ப$^{4}$வ:) (4.4.114) அனுப்$^{4}$ராதா 'ஒரே வயிற்றுத் தம்பி' அனுஸக$^{2}$ா ஸயூத்$^{2}$ய: ஆனால் ஸமான மூர்த$^{4}$ா:, ஸமான ப்ரப$^{4}$ருத்ய:, ஸமானோத$^{3}$ர்க:

**6.3.85** ஜ்யோதிஸ் ஜனபத$^{3}$ ராத்ரி நாபி$^{4}$ நாம கே$^{3}$ாத்ர ரூப ஸ்த$^{2}$ான வர்ண வயோவசன ப$^{3}$ந்து$^{4}$ஷு

ஜ்யோதிஸ் 'வெளிச்சம்', ஜனபத$^{3}$-'மக்கள் வாழுமிடம் ராத்ரி 'இரவு', நாபி$^{4}$ 'தொப்புழ்', நாமன் 'பெயர்' கோத்ர 'குடும்பம், பரம்பரை', ரூப 'வடிவம்' ஸ்த$^{3}$ான 'இடம்', வர்ண 'நிறம்', வயஸ், 'வயது', வசன 'சொல்', பந்து$^{4}$ 'உறவினர்' ஆகியவைகளுக்கு முன் நிற்கும் 'ஸமான'வுக்கு 'ஸ' பதிலியாகும்.

ஸமானம் ஜ்யோதிர் அஸ்ய = ஸஜ்யோதிஸ் 'ஒப்பான ஒளியைக் கொண்ட'; ஸஜனபத, ''ஒரே நாட்டைச் சேர்ந்த'', ஸராத்ரி ''ஒரே இரவைக் கொண்ட'', ஸநாபி$^{4}$ ''ஒரே தொப்புழ் அல்லது மையத்தைக் கொண்ட'', ஸநாமன் 'ஒத்த பெயரைக் கொண்ட', ஸகே$^{3}$ாத்ர 'ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அல்லது ஒரே பரம்பரையில் வந்த', ஸரூப 'இணையான வடிவங் கொண்ட' ஸஸ்த$^{2}$ான 'ஒரே இடத்தைப் பகிர்ந்து கொள்ளும்', ஸவர்ண 'ஒரே நிறத்தைக் கொண்ட, ஒரே இனத்தைச் சேர்ந்த (ஒலியியல்), ஸவஸ் 'ஒத்த வயதான', ஸவசன 'ஒத்த பேச்சும் பேசும்' ஸப$^{3}$ந்து$^{4}$ 'பொதுவான உறவினரைக் கொண்ட'

**6.3.86** சரணே ப்$^{3}$ரஹ்மசாரிணி

ப்$^{3}$ரஹ்மசாரின் 'வேதம் படிக்கும் மாணவன்' என்ற சொல்லுக்கு முன் நிற்கும் 'ஸமான'வுக்குப் பதிலியாக 'வேதத்தின் கிளை' யென்ற பொருளைச் சுட்டும்போது 'ஸ' வரும்.

ஸமான: ப்$^{3}$ரஹ்மசாரீ=ஸப்$^{3}$ரஹ்மசாரீ ''வேதத்தின் ஒரே ஸாகையைப் பயிலும் ஒரே வகுப்பு மாணவன்''

**6.3.87** தீர்தே$^{2}$ யே

தீர்த$^{2}$ 'ஆசிரியர், குரு' என்ற சொல்லோடு 'ய' (யத்) ஒட்டு இணைக்கப்பட்டு

நிற்கும்போது, அச்சொல்லுக்கு முன் வரும் 'ஸமான'வுக்கு 'ஸ' பதிலியாகும்.
ஸமான தீர்தே$^2$ வாஸீ (4.4.107) = ஸ தீர்த்ய:
'ஒரே ஆசிரியரின் மாணவர்கள்'

**6.3.88** விப$^4$ரஷோத$^3$ரே
உத$^3$ர 'கருப்பை' என்ற சொல், 'ய' (யத்) உடன் வந்து, அச்சொல்லுக்கு முன் 'ஸமான' நிற்கும்போது, 'ஸ' விருப்பாக, 'ஸமா'வுக்குப் பதிலியாகும்.
ஸமான உத$^3$ரே ஸ$^1$யித: = ஸ + உத$^4$ர$^3$ + ய (4.4.100) = ஸோத$^3$ர்ய அல்லது ஸமானோத$^3$ர்ய (4.4.108) 'ஒரு தாய் வயிற்றுப் பிள்ளைகள்)

**6.3.89** த்$^3$ருக்$^3$ த்$^3$ருஸ$^1$ வதுஷு
த்$^3$ருஸ்$^1$, த்$^3$ருஸ$^1$, 'காண்பவன்', வதுப் ஒட்டு ஆகியவைகளுக்கு முன் நிற்கும் 'ஸமான' வுக்குப் பதிலியாக 'ஸ' வரும். ஸமானம் பஸ்$^1$யதி = ஸமான + த்$^3$ருஸ் + க்வின் = ஸத்$^3$ருஸ், ஸத்$^3$ருஸ் + கன் = ஸத்$^3$ருஸ$^1$: (3 .2.60 வார்த்திகம்) 'ஒப்பான, இணையான'

வா: த்$^3$ருக்ஷே ச இதி வக்தவ்யம்
'த்$^3$ருக்ஷ' வுக்கு முன்னும் அவ்வாறே ஸத்$^3$ருக்ஷ.
த்ருஸ் + க்ஸ = த்ருக்ஷ (3.2.60) வார்த்திகம்)
தொடர்ந்து வரும் சூத்திரங்களுக்காக 'வத்' இச்சூத்திரத்துடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

**6.3.90** இத$^3$ம் கிமோரீஸ் கீ
'த்$^3$ருக்', 'த்$^3$ருஸ, 'வத்' ஒட்டு ஆகியவைகளுக்குமுன் நிற்கும் 'இதம்' இது என்ற சொல்லுக்குப் பதிலியாக 'ஈ'யும், கிம் 'யார்'? எது? என்ன?'' உக்குப் பதிலியாக 'கீ'யும் வரும்.
இத$^3$ம் + த்$^3$ருஸ்$^1$/த்$^3$ருஸ$^1$ = ஈத்$^3$ருஸ்ஸ, ஈத்$^3$ருஸ$^1$ ''இதைப் போன்ற''
இத$^3$ம் + வதுப் = ஈ + க்$^4$ + அதுப் (5.24) ஈ – இய் – அத் (7.1.2)= θ – இய் + அத் (4.1.48) = இயத் 'இவ்வளவு'
கிம் த்$^3$ருஸ்$^1$/த்$^3$ருஸ = கீத்$^3$ருஸ்$^1$, கீத்$^3$ருஸ$^1$ 'யாரைப் போன்ற, எதைப் போன்ற'; கியத் 'எவ்வளவு'

வா: த்ருக்ஷே ச இதி வக்தவ்பம்
'த்ருக்ஷ'வுக்கு முன்னும் அவ்வாறே ஈத்$^3$ருக்ஷ; கீத்$^3$ருக்ஷ:

**6.3.91** ஆ ஸர்வ நாம்ன:
த்$^3$ருஸ்$^1$, த்$^3$ருஸ$^1$, 'வத்' ஒட்டு ஆகியவைகளுக்கு முன் நிற்கும் மாற்றுப் பெயர்களின் (ஸர்வநாமன்) இறுதியுயிருக்குப் பதிலியாக 'ஆ' வரும்.
தத்$^3$ + த்$^3$ருஸ்$^1$/த்$^3$ருஸ$^1$ = த–ஆ–த்$^3$ருஸ், த்$^3$ருஸ =தாத்$^3$ருஸ்$^1$, தாத்$^3$ருஸ$^1$ 'அதைப்போன்ற', தாவத்–'அவ்வளவு' யாத்ருஸ்$^1$, யாத்$^3$ருஸ (யத்$^3$ த்ருஸ்$^1$/

த்$^{3}$ருஸ) 'எதைப்போன்ற' (யத்–சார்பு மாற்றுப் பெயர்)
யாவத் 'அவ்வளவு, அத்தனை'

வா: த்ருக்ஷே ச இதி வக்தவ்யம்
தாத்$^{3}$ருக்ஷ:, யாத்$^{3}$ருக்ஷ:

**6.3.92** விஷ்வக் தே$^{3}$வயோஸ்' ச டேரத்$^{3}$ர்யஞ்சதௌ வப்ரத்யயே
விஷ்வக், "எல்லா இடங்களுக்கும் செல்கிற", தேவ 'கடவுள்', மாற்றுப் பெயர்கள் ஆகியவைகளுக்குப்பின் 'வ'வுடன் 'அஞ்ச்' நிற்கும்போது முதலுறுப்பினர்களின் இறுதியசைக்குப் பதிலியாக 'அத்$^{3}$ரி' வரும்.
விஷ்வக்$^{3}$ அஞ்சதி = விஷ்வஞ்ச் + அஞ்ச் + க்வின் = விஷ்வ்– அத்$^{3}$ரி + அஞ்ச் + θ (6.1.87) = விஷ்வத்$^{3}$ர்யஞ்ச் 'எல்லா இடத்திலும் பரந்து நிற்கும்'; த$^{3}$ + அஞ்ச் + க்வின் = த்–அத்$^{3}$ரி + அஞ்ச்+ θ = தத்$^{3}$ர்யஞ்ச் 'அதை நோக்கித் திரும்பிய யத்$^{3}$ர்யஞ்ச்

வா: ச$^{2}$ந்த$^{3}$ஸி ஸ்த்ரியாம் ப$^{3}$ஹுலமிதி வக்தவ்யம்.
வேத மொழியில் பெண்பாற் சொற்களுக்குமுன் பலவகையாக இவ் வாறாகும்.
விஸ்வாசீ, க்$^{4}$ருதாசீ ஆகியவைகளில் 'அத்$^{3}$ரி' பதிலியாக வரவில்லை .
'கத்$^{3}$ரீசி'யில் 'அத்$^{3}$ரி' பதிலியாகும்.
கிம் + அஞ்ச் + ஙீப் = கத்$^{3}$ரீ + அஞ்ச் + ஙீப் = கத்$^{3}$ரீச்

**6.3.93** ஸம: ஸமி
'வ' ஒட்டுடன் வரும் 'அஞ்ச்' உக்கு முன் நிற்கும் 'ஸம் உக்குப் பதிலிய ாக 'ஸமி' வரும்.
ஸம் + அஞ்ச் + க்வின் = ஸமி + அஞ்ச் + θ = ஸம்யஞ்ச் 'ஒன்றாக ஒரே திசையை நோக்கும்'

**6.3.94** திரஸ்' திர்யலோபே
'வ'வுடன் வரும் 'அஞ்ச்'உக்கு முன் நிற்கும் திரஸ் 'குறுக்கே, அப்பா ல்' என்ற சொல்லுக்குப் பதிலியாக 'திரி' என்ற சொல் 'அஞ்ச்'இன் 'அ' கெடாமல் நிற்கும்போது வரும்.
திரஸ் + அஞ்ச் + க்வின் = திரி + அஞ்ச் + θ = திர்யஞ்ச்
திர்யஞ்சௌ, திர்யஞ்ச:
ஆனால் திரஸ் + அஞ்ச் + க்வின் ஸ'ஸ் அல்லது, டா, (அ)ஙே, (அ) ஙஸ் = திரஸ்–ச:, திரஸ்சா, திரஸ்சே திரஸ்'ச; இவைகளில் 'அஞ்ச்' இன் 'அ' கெடுகிறது.

**6.3.95** ஸஹஸ்ய ஸத்$^{4}$ரி:
'வ'வுடன் வரும் 'அஞ்ச்'உக்கு முன் நிற்கும் 'ஸஹ'வுக்குப் பதிலியாக 'ஸத்$^{3}$ரி' வரும்.

ஸஹ–அஞ்ச் + க்வின் = ஸத்$^{4}$ரி + அஞ்ச் + 0 = ஸத்$^{4}$ர்யஞ்ச் 'ஒரே திரையில் திரும்பிய'
ஆனால் ஸத்ரீச:, ஸத்$^{4}$ரீசா.

**6.3.96** ஸத$^{4}$ மாத$^{3}$ ஸ்த$^{2}$யோஸ் ச$^{2}$ந்த$^{3}$ஸி
மாத$^{3}$ 'போதையூட்டும்', ஸ்த$^{2}$ 'நிற்கும், இருக்கும்' ஆகியவைகளுக்கு முன் நிற்கும் 'ஸஹ'வுக்குப் பதிலியாக 'ஸத$^{4}$' வரும்.
ஸஹ மதே$^{3}$ன வர்ததே= ஸத$^{4}$மத$^{3}$ 'சேர்ந்து குடித்தல்' ஸஹ திஷ்ட$^{2}$தி = ஸத$^{4}$ + ஸ்த$^{2}$ + க (3.2.4) ஸத$^{4}$ஸ்த 'சேர்ந்து நிற்றல்'

**6.3.97** த்$^{3}$வ்யந்தரூபஸர்கே$^{3}$ப்$^{4}$யோ அப ஈத்
த்$^{3}$வி 'இரண்டு', அந்தர் 'உள்ளே' உபசர்க்கம் ஆகியவைகளுக்குப்பின் நிற்கும் அப் 'அண்ணீர்' என்ற சொல்லின் முதலிலுயிருக்குப் பதிலியாக ஈத் (ஈ) வரும்.
த்$^{3}$விர் க$^{3}$தா: அப: அஸ்மின் = த்$^{3}$வி + அப் + அ (5.4.74) = த்$^{3}$வீப:'தீவு'
அந்தர் க$^{3}$தா: ஆப: அஸ்மின்= அந்தரீப: 'தீவு' ; ஸம்க$^{4}$தா: அப:
அஸ்மின் – ஸமீபம் 'அருகே' வீபம், நீபம்

வா: ஸமாப ஈத்வே ப்ரதிதே$^{4}$ா வக்தவ்ய:
'ஸமாப'வோடு, 'ஈத்' வருவதற்குத் தடை விதித்தல் வேண்டும். ஸமாபம் நாம தே$^{3}$வயஜனம்.

வா: ஈத்வமனவர்ணாதி$^{3}$தி வக்தவ்யம்
'அ'வை யீறாகக் கொண்ட உபசர்க்கத்துக்குப்பின் 'அப்' வரும் போது 'ஈத்' வராது, ப்ராபம், ப்ராபம் வினையுரிச் சொல்லைப் பொதுவாக உபசர்கம் எனப்படும். ஆகவே, அதை 'அப்' போன்ற ஒரு பெயருக்குப் பயன்படுத்த முடியாது.
இது 'ப்ர' முதலியவைகளைச் சுட்டும். இங்கு இச்சொல்.

**6.3.98** ஊத$^{3}$னோர் தே$^{3}$ஸே
'அனு'வுக்குப் பின் வரும் 'அப்'பின் முதலுயிரான 'அ'வுக்குப் பதிலியாக 'ஊ', இச்சொல் ஒரு இடத்தைச் சுட்டும்போது வரும்.
அனுக$^{3}$த: அப: அஸ்மின் = அனு + அப் + அ = அனு + உப்
அ = அனூப 'ஒரு இடத்தின் பெயர்'
ஆனால் அன்வீப – 'தண்ணீரான'

**6.3.99** அஷஷ்ட்யத்ருதீய ஸ்த$^{2}$ஸ்யான்யஸ்ய து$^{3}$க$^{3}$ாஸீ'ராஸ'ா உஸ்தா$^{2}$ஸ்தி$^{2}$
தோத்ஸீ'கோதி காரக ராக$^{3}$ச்சே$^{2}$ஷு ஆ'ஸ் 'வாழ்த்து', ஆஸ'ா 'நம்பிக்கை' ஆஸ்த$^{2}$ா 'மதிப்பு' ஆஸ்தி$^{2}$த 'வசிக்கும்', உத்ஸுக 'ஆர்வமுள்ள', ஊதி 'உதவி', காரக 'செய்பவன்', ராக 'காதல்', ஆகியவைகளும், ச$^{2}$ ஒட்டு, இவைகளுக்கு முன் நிற்கும் மூன்றாம் அல்லது ஆறாம் வேற்றுமையுருபுகளை யீறாகக்

கொள்ளாத அன்ய 'மற்ற, மற்றது, வேறு' என்ற சொல்லுக்குப்பின் 'து[3]க்' (ஆகமம்) வரும்.
அன்ய: ஆஸீ': = அன்யதாஸீஸ்– ''வேறு வாழ்த்து'';
அன்யத[3]ாஸ'ா ''வேறு ஆசை''
அன்யத[3]ாஸ்தி[2]த

**6.3.100** அர்தே[2] விப[4]ாஷா
'அன்ய'வைத் தொடர்ந்து 'அர்த[2]' நிற்கும்போது மேலே கூறிய 'து[3]க்' விருப்பாக வரும்.
அன்ய + அர்த[2]ம் = அன்யார்த[2]ம் அல்லது அன்யத[3]ர்த்[2]ம்

**6.3.101** கோ: கத்தத்புருஷே அசி
உயிரெழுத்தை முதலாகக் கொண்ட சொல்லையிறுதி யுருப்பினராகக் கொண்ட தத்புருஷத் தொகையில், அச் சொல்லுக்கு முன் நிற்கும் 'கு' கெட்ட என்ற சொல்லுக்குப் பதிலியாக 'கத் (அல்லது கத்[3]) வரும்.
கு + அஸ்'வ = கத[3]ஸ்'வ 'மட்டமான குதிரை'
கு + அஜ = கத[3]ஜ 'மட்டமான ஆடு'
கு + அன்ன = கத[3]ன்ன 'கெட்ட அல்லது பழைய உணவு'
ஆனால் கு + ப்[3]ராஹ்மண = 'கெட்ட பிராம்மணன்'

வா: கத்[3]ப[4]ாவே த்ராவுபஸம்க்[2]யானம்
த்ரய 'மூன்று' வுக்கு முன் நிற்கும் 'கு'வுக்குப் பதிலியாக 'கத்' வரும் .
குத்ஸிதாஸ் த்ரய: கத்த்ரய:

**6.3.102** ரத[2] வத[3]யோஸ்' ச
ரத[2] 'தேர்', வத[3] 'பேச்சாளர்' ஆகியவைகளுக்கும் முன், நிற்கும் ' கு'வுக்குப் பதிலியாக 'கத்' வரும். கு + ரத[2]: = கத்[3]ரத[2]: 'மட்டமான தேர்'
கு + வத[3] = கத்[3]வத[3]: 'மோசமான பேச்சாளர்'

**6.3.103** த்ருணே ச ஜாதௌ
ஓரினத்தைச் சுட்டும்போது, 'த்ருண' (புல்) வுக்கு முன் நிற்கும் 'கு'வுக்குப் பதிலியாக 'கத்' வரும் கு + த்ருண: = கத்தருண; 'ஒரு வகைப் புல்' ஆனால் குத்ஸிதம் த்ருணம் குத்ருணம் 'கெட்டுப்போனபுல்'

**6.3.104** கா பத்[2]யக்ஷயோ:
பதி[2]ன் 'பாதை, சாலை' அக்ஷி 'கண்' ஆகியவைகளுக்கு முன் நிற்கும் 'கு'வுக்குப் பதிலியாக 'கா' வரும்.
கு + பதி[2]ன் = காபத[2] 'மோசமான சாலை'
கு + அக்ஷி = காக்ஷா 'தீங்கான கண்'

**6.3.105** ஈஷத$^{3}$ர்தே$^{2}$ ச

"சிறிது, கொஞ்சம், குறைவு'' என்ற பொருளைச் சுட்டும் போது த த்புருஷத் தொகையின் இறுதியுறுப்பினருக்கு முன் நிற்கும் 'கு'வுக்கு 'கா' பதிலியாகும். ஈஷத்$^{3}$ மது$^{4}$ரம், கா மது$^{4}$ரம்' ''சிறிது இனிப்பான,'' காலவண "சிறிது உப்பான'' உயிரெழுத்தை முதலாக் கொண்ட சொற்கள் தொடரும்போது 'கா' பதிலியாகும்.

கா உஷ்ணம் = கோஷ்ணம் 'சிறிது சூடான'

**6.3.106** விப$^{4}$ாஷா புருஷே

'புருஷ' 'ஆள்' என்ற சொல்லுக்கு முன் நிற்கும் 'கு'வுக்கு விருப்பாக 'கா' பதிலியாகும்.

கு + புருஷ = கு புருஷ:: அல்லது, காபுருஷ;

'இகழத்தக்க மனிதன்' 'குறைந்த, சிறிது' என்ற பொருளில் 'கா' கட்டாயமாக வரும்.

ஈஷத் புருஷ: காபுருஷ: 'மனிதனைவிடக் குறைந்த'

**6.3.107** கவஞ்ச உஷ்ணே

உஷ்ண 'சூடு' என்ற சொல்லுக்கு முன் நிற்கும் 'கு' வுக்குப் பதிலியாக 'கா'வும், 'கவங்'உம் வரும். (இது சிறிது என்ற பொருளில் வரும்)

கவோஷ்ணம், கோஷ்ணம், கது$^{3}$ஷ்ணம் ''வெது வெதுப்பான, சிறிது சூடான''

**6.3.108** பதி$^{2}$ சச்ச$^{3}$ந்த$^{3}$ஸி

வேத மொழியில் 'பதி$^{2}$ன்' என்ற சொல்லுக்கு முன் நிற்கும் 'கு' வுக்குப் பதிலியாக 'கா'வும் 'வங்'உம் வரும் 'கு'வும் வரும்.

கவ பத$^{2}$:, காபத$^{2}$:, குபத$^{2}$: 'மோசமான சாலை'

**6.3.109** ப்ருஷோத$^{3}$ராதீ$^{3}$னி யதே$^{2}$ா பதி$^{3}$ஷ்டம்

'ப்ருஷோத$^{3}$ர' முதலிய தொகைகளில் காணப்படும் மறைதல் 'லே ாப) வருதல் (ஆகம) எழுத்துக்களின் மாற்றம் (வர்ண விகாரா:) ஆ கியவைகள் இலக்கண நூல்களில் குறிப்பிடப்படாவிட்டாலும் அவைகள் ஒப்புக் கொள்ளத் தக்கவைதான். பழக்கத்தில் இருப்பதால், இலக்கண ஆசிரியர்களால் கற்பிக்கப்பட்டவைகளென்றுதான் கருதவேண்டும். விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்ட இவ்வ குப்பைச் சேர்ந்த சொற்கள், குறிப்பிட்ட விதிகளுக்குப்பட்டவைய ல்ல. ப்ருஷத்$^{3}$ உத$^{3}$ரம் யஸ்ய=ப்ருஷ-θ + உத$^{3}$ர = பருஷோத$^{3}$ர, "புள்ளிகள் உள்ள வயிற்றையுடைய'' 'ப்ருஷத்$^{3}$ உத்$^{3}$வானம் யஸ்ய=ப்ருஷோத்$^{3}$வானம்; வாரிவாஹக: வலாஹக: 'மேகம்'

முதலுறுப்பினரின் 'வ'வும், இரண்டாவது உறுப்பினரின் 'வ'வும், இரண்டாவது உறுப்பினரின் முதலெழுத்தான 'வ'வுக்குப் பதிலியாக 'ல'வும் (ஆதேசம்) சேர்ந்து வலாஹக: என்றாகிறது; ஜீவனஸ்ய மூத: ஜீமுத: 'மேகம்' இங்கு முதலுறுப்பினரின் 'வன' கெடுகிறது.

ஸ1வானாம் ஸ1யனம்=ஸ்1மஸா1னம் 'சுடுகாடு, இடுகாடு' ஸ1வ=ஸ்ம. ஸயன=ஸா1ன; ஊர்த்4வம் உகமஸ்ய உலூரஉகலம் 'உலக்கை'; ஊர்த்4வ=உலூ, உக=க2ல பிஸி1தாஸ1–பிஸா1ச: பிஸி1த = பிஸா1, ஆஸ1–ச; ப்3ருவந்தோ அஸ்யாம் ஸித3ந்தீதி ப்3ருஸீ; மஹ்யாம் ரௌதீதி மஹூ1ர:

வா: தி3க்ஸப்3த3ஸ்ய உத்தரஸ்ய தீரஸ்ய தார ப1ாவோ வா ப4வதி
'திசை'யைக் குறிக்குஞ் சொல்லுக்குப் பின் நிற்கும் 'தீர' என்ற சொல்லுக்கு 'தார' விருப்பாக பதிலியாகும். த3க்ஷிணதீரம், அல்லது த3க்ஷிண தாரம்

வா: வாசோவாதே3 ட3த்வம் ச லப1ாவஸ்1
சோத்தர பத3ஸ்யேஙி ப்ரத்யயே ப4வதி
'வாக்3வாத3' என்ற சொல்லைத் தொடர்ந்து 'இங்' ஒட்டு நிற்கும்போது முதற்சொல்லினிறுதியெழுத்துக்கு 'ட3' பதிலியாகும். இரண்டாவது சொல்லின் ஈறுக்கு 'ல' பதிலியாகும்.
வாக்3வாத3:=வாட்3வாத:=வாட்3வால:
வாட்3வால + இங் = வாட்3வாலி:

வா: ஷ ஷ உத்வம் த3த்ரு த3ஸ த4ாஸூத்தர பத3ா தேஷ்டுத்வம் ச
3தத்ரு, த3ஸ, த4ா ஆகியவைகளுக்கு முன் நிற்கும் 'ஷஷ்' இன் ஈறுக்கு 'உ' பதிலியாகும், இரண்டாவது சொல்லின் முதலெழுத்துக்குப் பதிலியாக 'ட'வரும்.
ஷட்3 த3ந்தா அஸ்ய = ஷஷ் + த3ந்த =
ஷஉ + ட3ந்த = ஷோடன் 'ஆறு பற்கள்'
ஷட் ச த3ஸ1ச ஷோடஸ1 (16)
வா: த4ாஸு வா ஷஷ ட3த்வம் ப4வதி உத்தரபத4ாதே3ஸ் ச ஷ்டுத்வம்
'த4ா' 'ஷஷ்' ஒடு வரும் போது 'ட' விருப்பாக வரும்.
ஷட்3த4ா ஷோட3ா
ஷஷ் + த4ா = ஷட்3த4ா
ஷஷ் + த4ா = ஷ உ த4ா ஷோ த4ா ஷோட3ா
'தா4ஸு' என்ற பன்மைச் சொல் இங்கு காணப்படுகிறது.
இது "பல பகுதிகளில் அல்லது 'பலவகையில்' என்ற பொருளை இது குறிக்கும்." இங்கு இது ஒரு ஒட்டாகச் செயற்படும். ஆகவே ஷட் த3த4ாதி அல்லது த4யதி என்ற இடங்களில் இது செயற்படாது. ஷட்3த4ா.

வா: து3ரோ த3ாஸ1 நாஸ1 த3ப4 த்4யேஷு
உத்வம் வக்தவ்யம் உத்தர பத3ாதேஸ் ச ஷ்டுத்வம் த3ாஸ1, நாஸ1, த3ப4 த்4ய என்ற சொற்களுக்கு முன் நிற்கும் 'து3ர்' இன் இறுதியெழுத்துக்குப் பதிலியாக 'உ' வரும்.
இரண்டாவதாக நிற்குஞ் சொற்களின் முதலெழுத்துக்குப் பதிலியாக வளை நாவொலி வரும்.

து$^{3}$க்கே$^{2}$ன த$^{3}$ாஸ்யதே நாஸ்யதே த$^{3}$ப்$^{4}$யதே
சய: தூட$^{3}$ாஸ:, தூணாஸ: தூ$^{3}$ட$^{3}$ப$^{4}$:
து$^{3}$ஷ்டம் த்$^{4}$யாயதி = தூ$^{3}$ட$^{3}$ப:
து$^{3}$ர் த$^{3}$ாஸ$^{1}$ = தூ$^{3}$ + டாஸ = தூ$^{3}$டாஸ:

வா: ஸ்வரோ ரோஹதௌ உசந்த$^{3}$ஸ்யுத்வம் வக்தவ்யம்.
வேதமொழியில் 'ஸ்வர' என்ற சொல்லின் பின் 'ருஹ்' நிற்கும்போது, 'ஸ்வர' வினிறுதியெழுத்துக்குப் பதிலியாக 'உ' வரும்.
ஜாய ஏஹி ஸ்வோ ரோஹாவ

வா: பீவோபவஸனா தீ$^{3}$னாம் ச லோபோ வக்தவ்ய:
வேத மொழியில் பீவஸ், பயஸ் ஆகியவைகளின் இறுதியெழுத்துக்கள் கெடும்.
பீவோபவஸனானாம், பயோபவஸனானாம்.

**6.3.110** ஸங்க்$^{2}$யா விஸாய பூர்வஸ்யாஹ்னஸ்யான்ய தரஸ்யாம் ஙௌ
எண்ணுப் பெயர், அல்லது 'வி' அல்லது ஸாய 'மாலை' ஆகியவைகளுக்கு முன் ஏழாம் வேற்றுமையில் (ஙௌ) அமையும் 'அஹ்ன' என்ற சொல் நிற்கும்போது, 'அஹன்' அச்சொல்லுக்குப் பதிலியாக விருப்பாக வரும்.
த்$^{3}$வயோர் அஹ்ணயோர் ப$^{4}$வ: = த்$^{3}$வி + அஹன் + ட$^{2}$ஞ் (2.1.51; 4.3.11) = த்$^{3}$வி + அஹன் + θ (4.1.88) = த்$^{3}$வி + அஹன் + ட$^{2}$ச் (5.4.91) = த்$^{3}$வி + அஹ்ன + ட$^{2}$ச் (5.4.88) = த்$^{3}$வ்ய–அஹ்ன் θ – அ (4.1.43) த்$^{3}$வ்ய் – அஹ்ன + ஙி = த்$^{3}$வ்யஹனி, அ ல்லது த்வ்யஹ்னி
வ்யபக$^{3}$தம் அஹ: = வ்யஹ்ன; தஸ்மின் = வ்யஹனி,
வ்யஹ்னி.
ஸாயம் அஹ்ன: ஸாயாஹ்ன: தஸ்மின் ஸாயாஹனி, ஸாயாஹ்னி.
இதைத்தவிர, த்$^{3}$வ்யஹ்னே, வ்யஹ்னே, ஸாயாஹ்னே என்ற வடிவங்களும் காணப்படும்.
இவைகள் ஏகதே$^{3}$ஸிஸமாஸ: எனப்படுபவை. இங்கு குறிப்பிடப்பட்ட சொற்களைத் தவிர, வேறு சொற்களுடனும், 'அஹன்' இணைக்கப்பட்டு தொகையாகும் என்பதை இச்சூத்திரம் சுட்டுகிறது. மத்$^{4}$யாஹ்ன = மத்$^{4}$யம் அஹ்ன:
ஆனால் பூர்வாஹ்ணே, அபராஹ்ணே

**6.3.111** ட$^{4}$ர லோபே பூர்வஸ்ய தீ$^{3}$ர்கே$^{4}$ா அண:
'ட$^{4}$, ர்' ஆகிய எழுத்துக்கள் கெடும்போது, அவைகளுக்கு முன் நிற்கும் 'அண்' (அ,இ,உ) உயிர்கள் நீட்டிக்கும் லிஹ் + க்த = லிட$^{4}$ + க்த (8 .2.31) = லிட$^{4}$ + த$^{4}$ (8.2.40) = லிட$^{4}$ + ட$^{4}$ (8.4.41) = லி θ + ட$^{4}$ (8.3.13) = லீட$^{4}$ – 'நக்கிய' உப$^{3}$கூட$^{3}$ம்.
அக்$^{3}$னி + ஸு + ரத$^{2}$ + ஸு = அக்$^{3}$னி + ரு + ரத$^{2}$ + ரு (8.2.66) = அக்$^{3}$னிர் ரத$^{2}$: (8.3.15) = அக்$^{3}$னி θ ரத$^{2}$: (8.3.14) = அக்$^{3}$னீ ரத$^{2}$: 'நெருப்புத்தேர்', இந்தூரத$^{2}$:,

புனா ரக்தம் வாஸ: (புனர் + ரக்தம் = புனாரக்தம்) ப்ராதா ராஜக்ரய: (ப்ராதர் ராஜக்ரய:)

**6.3.112** ஸஹி வஹோர ரோட வர்ணஸ்ய

ஸஹ் 'தாங்கு', வஹ் 'எடுத்துக்கொண்டு போ சுமந்து செல்' என்ற வினைகளின் 'ட்$^{3}$' கெடும்போது அதற்கு முன் நிற்கும் 'அ' (குறிலும், நெடிலும்)வுக்கு 'ஓ' பதிலியாகும்.

ஸஹ் + துமுன் = ஸட்$^{3}$ + தும் = ஸட்$^{3}$ + து$^{4}$ம்

ஸ θ + து$^{4}$ம் = ஸோடு$^{4}$ம் 'தாங்க' ஸஹ் + த்ருன்/தவ்ய = ஸோட்$^{4}$ரு, ஸோட$^{4}$வ்ய

வஹ் + த்ருன் = வட்$^{4}$ + த்$^{4}$ருன் = வ θ – ட்$^{3}$ரு வோட்$^{4}$ரு ஆனால் வஹ் + க்த = உஹ் – க்த = உட்$^{4}$ + த$^{4}$, உட்$^{4}$ + ட$^{4}$ = உ θ – ட$^{4}$ = ஊட$^{4}$, 'எடுத்துக்கொண்டு சென்ற'

**6.3.113** ஸாட்$^{4}$யை ஸாட்$^{4}$வா ஸாடே$^{4}$தி நிக$^{3}$மே

வேதமொழியில் காணப்படும் ஸாட்$^{4}$யை, ஸாட்$^{4}$வா ஸாட$^{4}$ என்ற சொற்கள் நிபாதனங்களாகும்.

ஸாட்$^{4}$யை ஸமந்தாத், ஸாட்$^{4}$ வா ஸ'த்ருன் ஸஹ் + த்$^{4}$யைன்/க்த்வா = ஸட் + த்$^{4}$யைன், க்த்வா = ஸட்$^{4}$ + ட்$^{4}$யைன்/ட்$^{4}$வா, ஸ θ–ட்$^{4}$யை, = ஸட்$^{4}$யை, ஸ θ– ட்$^{4}$வா ஸட்$^{4}$வா 'வியாபித்து' அல்லது 'வென்று' (இங்கு 'ஓ' 'அ'வுக்குப் பதிலியாக வரவில்லை)

ஸஹ் + த்ருன் = ஸட்$^{4}$ + த்$^{4}$ருன் = ஸட்$^{4}$ + ட்$^{4}$ருன் = ஸθ–ட்$^{4}$ருன் = ஸாட்$^{4}$ரு 'வென்றவன்'

பேச்சு மொழியில் ஸோட்$^{4}$வா, ஸோட$^{4}$ா

**6.3.114** ஸம்ஹிதாயாம்

தொடர்ந்த பேச்சில் இது ஒரு அதிகார சூத்திரம். இதிலிருந்து இப்பாதத்தின் முடிவுவரை, இச்சூத்திரத்தில் காணப்படும் ஸம்ஹிதாயாம் (தொடர்ந்த பேச்சில்) அனு விருத்தியாகும்.

**6.3.115** கர்ணே லக்ஷணஸ்யாவிஷ்டாஷ்டபஞ்ச மணி பி$^{4}$ன்னச்சி$^{2}$ன்ன சி$^{2}$த்$^{3}$ர ஸ்ருவ ஸ்வஸ்திகஸ்ய

விஷ்ட 'துளைத்த', அஷ்டன் '8', பஞ்சன் '5', மணி 'மணி', பி$^{4}$ன்ன 'பிளந்த', சி$^{2}$ன்ன 'பிளந்த', கிழிந்த' சி$^{2}$த்$^{3}$ர 'துவாரமிட்ட', ஸ்ருவ 'கரண்டி' ஸ்வஸ்திக 'சுவஸ்திக அடையாளம்'

ஆகியவைகளைத் தவிர்த்து மற்ற அடையாளம் குறியென்ற பொருளைச் சுட்டும் சொற்கள் முதலுறுப்பினராகவும், கர்ண 'க' என்ற சொல் இரண்டாவது உறுப்பினராகவும் அமைந்ததொகையில் முதலுறுப்பினரின் இறுதியுயிர் நெடிலாகும்.

த$^{3}$ாத்ரம் கர்ணே யஸ்ய = த$^{3}$ாத்ரகர்ண 'காதில் அரிவாள் குறியுடைய' ஆனால், விஷ்ட கர்ண, அஷ்ட கர்ண, பஞ்ச கர்ண, மணிகர்ண, பி$^{4}$ன்னகர்ண, சி$^{2}$ன்ன

கர்ண, சி$^{2}$த்$^{3}$ர கர்ண, ஸ்ருவ கர்ண ஸ்வஸ்திக கர்ண.
விலங்குகளின் காதுகளில், அவைகளின் உரிமையாளர், சொந்தக்காரரைச் சுட்டும் ஒரு குறி அல்லது அடையாளம் என்பதை 'லக்ஷண' என்ற சொல் குறிக்கும்.
அத்தகைய குறியீடு என்ற பொருளைச் சுட்டாவிட்டால் 'ஸோ'ப$^{4}$னகர்ண' ''அழகிய காதுகளையுடைய'' என்று, நெடிலாகாமல் வரும்.

**6.3.116** நஹிவ்ருதி வ்ருஷி வ்யதி$^{4}$ ருசி ஸஹிதனிஷு க்வௌ
நஹ் 'கட்டு', வ்ருத், 'திரும்பு', வ்ருஷ் 'மழைபெய்', வ்யத்$^{4}$ 'துளை', துவாரமிடு', ருச் 'விரும்பு' ஸஹ், தன் 'விரிவாக்கு' ஆகிய தாதுக்கள் 'க்வி' ஒட்டோடு வரும்போது, அவைகளுக்கு முன் நிற்குஞ் சொற்களினிறுதியுயிர் நெடிலாகும்.
உப–நஹ்யதே = உபநஹ க்விப் உபாநஹ் 'செருப்பு' பரீநஹ் "வேலியால் அடைக்கப்பட்ட இடம்'' ப்ரா வ்ருஷ் ''மழை காலம்''; ஹ்ருத$^{3}$யம் வித்$^{4}$யதி = ஹ்ருத$^{3}$யாவித்$^{4}$ ''இதயத்தைத் துளைக்கும்'', நீருச் – ''சுவையற்ற'', ரு'திம் ஸஹதே = ரு'தீஷஹ: ''பகைவனை வெல்லும்'', பரிதனோதி பரி – தθ + க்விப் = பரித + துக் + θ = பரீதத் 'சூழப்பட்ட' ஆனால் பரிஹணனம்

**6.3.117** வனகி$^{3}$ர்யோ: ஸம்க்$^{3}$ஞாயாம் கோடா கிம்ஸுலகா தீ$^{3}$னாம்
வன 'காடு', கி$^{3}$ரி 'மலை' என்ற சொற்கள் இரண்டாவது உறுப்பினராக நின்று, அவைகளுக்கு முன், முறையே கோட'ர 'ஒரு செடி வகை', கிம்ஸு'க 'ஒரு செடி வகை' என்ற சொற்கள் நிற்கும்போது, இச்சொற்களின் இறுதியுயிர் அவைகள் ஒரு பெயரைச் சுட்டுமானால் நெடிலாகும்.
கோட'ரம் வனம் = கோட'ராவணம்
'கோடரம்' என்ற செடிகளையுடை காடு'';
கிம்ஸுலகாகி$^{3}$ரி 'ஒரு மலையின் பெயர்'
ஆனால் அஸிபத்ரவனம், க்ருஷ்ணகிரி கோடராதி: கோடர, மிஸ்ரக, புரக, ஸித்$^{4}$ரக, ஸாரிக, கிம்ஸுலகாதி: கிம்ஸுலக, ஸ'ல்வக, அஞ்ஜன, லோஹித குக்குட

**6.3.118** வலே 'வலச்' ஒட்டுக்கு முன் நிற்கும் முதலுறுப்பினரினிறுதியுயிர் நெடிலாகும்.
க்ருஷி + வலச் = க்ருஷுவல: (5.1.112)
"குடியானவன்''; த$^{3}$ந்த + வலச் = த$^{3}$ந்தாவல 'யானை' ஆஸுதி + வலச் = ஆஸுதீவல: 'சாராயங் காய்ச்சுபவன்'

வா: அனுத்ஸாஹ ப்$^{4}$ராத்ரு'பித்ரு'ணாமித்யேவ.
உத்ஸாஹ, ப்$^{4}$ராத்ரு, பித்ரு ஆகியவைகளுக்குப்பின் 'வலச்' வந்தால் அவ்வாறாகாது.
உத்ஸாஹவல:, ப்$^{4}$ராத்ரு'வல:, பித்ரு'வல:

**6.3.119** மதௌ ப$^{3}$ஹ்வசோ அனஜிராதீ$^{3}$னாம்

அஜிர 'விரைவாக' முதலிய சொற்களைத் தவிர்த்த மற்ற பல அசைகளைக் கொண்ட சொற்களின் இறுதியுயிர், தத்தித ஒட்டான 'மதுப்' தொடரும்போது நெடிலாகும். உது$^{3}$ம்ப$^{3}$ர + மதுப் + ஙீப் (4.1.4) = உது$^{3}$ம்ப$^{3}$ரா–வத்–ஈ (4.2.85; 6.1.220; 8.2.9) = உது$^{3}$ம்ப$^{3}$ராவதீ "ஒரு நதியின் பெயர்"; மஸ'காவதீ, ஆனால் வ்ரீஹிமதீ 'ஒரு நதியின் பெயர்' (பல வசைச் சொல்லல்ல) அஜிர வத்; வலயவதி "வளையணிந்துள்ள" (பெயரல்ல)

**6.3.120** ஸ'ராதீ$^{3}$னாம் ச

'ஸ்ர' முதலிய சொற்களுக்குப்பின் 'மதுப்' ஒட்டு வரும்போதும், முதற் சொல்லினிறுதியுயிர் நெடிலாகும். ஸர + மத் + ஙீப் = ஸ'ராவதீ (6.1.220) "ஒரு நதியின் பெயர்"; வம்ஸ'ாவதீ

**6.3.121** இகோ வஹ அபீலோ:

பிலு 'ஒரு மரத்தின் பெயர்' என்ற சொல்லைத் தவிர்த்து ஏனைய 'இக்' (இ,உ,ரு,ல்) பிரத்திபாஹாரத்தின் ஒருயிரை யீறாக் கொண்ட சொற்களுக்குப்பின் 'வஹ' வரும்போது, முதலுறுப்பினரினிறுதியுயிர் நெடிலாகும். ருஷீணாம் வஹ: = ருஷீ – வஹ்: = ருஷீவஹ:
"இருடிகளைச் சுமந்துகொண்டு வருபவன்".
கபீனஹ: முனீவஹ:
ஆனால் பிண்டவஹ:, பீலுவஹ:

வா: அபீல்வாதீனாமிதி வக்தவ்யம்
'பீலு' முதலியவைகளைத் தவிர்த்து என்றிருக்க வேண்டும்.
ஆகவே, த$^{3}$ாருவனம் என்று ஆகும்.

**6.3.122** உபஸர்க$^{3}$ஸ்ய க$^{4}$ஞ்ய மனுஷ்யே ப$^{3}$ஹுலம்

'மனிதன்' (மனுஷ்ய) என்ற பொருளைச் சுட்டுஞ் சொல்லைத் தவிர்த்த, 'க$^{4}$ஞ்' ஒட்டில் முடியுஞ் சொற்களுக்குமுன் நிற்கும் உபசர்க்கத்தினிறுதியுயிர் பலவகையில் நெடிலாகும்.
வி + க்லித்$^{3}$ + க$^{4}$ஞ் (3.3.19) = வீக்லேத 'ஈரமாகும்', வி + ம்ருஜ் + க$^{4}$ஞ் = வீமார்க$^{3}$ "விளக்குமாறு", அபாமார்க$^{3}$ "ஒரு செடியின் பெயர்"
கீழ்க்கண்டவைகளில் நெடிலாகவில்லை:
ப்ர + ஸிவ் + க$^{4}$ஞ் = ப்ரஸேவ "தோல் அல்லது கோணிப்பை", நி + ஸத் + க$^{4}$ஞ் = நிஷாத "வேடன்"

வா: ஸாத$^{3}$காரயோ: க்ருத்ரிமே தீ$^{3}$ர்கே$^{3}$ா ப$^{4}$வதி
ஸாத, கார ஆகியவைகளுக்கு முன் நிற்கும் உபசர்க்கம், 'ஒரு கட்டடம்' என்ற பொருளைச் சுட்டும் நெடிலாகும் ப்ர + ஸாத = ப்ராஸாத, ப்ர + கார = ப்ராகார, ஆனால் ப்ரஸாத, ப்ரகார

வா: தே3ஸ1ாதி3ஷு விப4ாஷா தீ3ர்கே3ா ப4வதி 'தே3ஸ1' முதலியவைகளின் இது விருப்பாகும்.

ப்ரதிதே3ஸ1:, ப்ராதிதே3ஸ1:, ப்ரதிரோத4:, ப்ராதிரோத4:

மனிதனைச் சுட்டும்போது உயிர் நீட்டமாகாது நிஷாதே3ா மனஷ்ய:

**6.3.123** இக: காஸே1

இக் (இ,உ,ரு',ல்) பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரை யீறாக் கொண்ட உபசர்க்கத்துக்குப்பின் காஸ1 "தோற்றம்" என்ற சொல் வரும்போது, இச் சொல்லுக்கு முன் நிற்கும் உபசர்க்கத்தினீறு நெடிலாகும்.

நி + காஸ1 = நீ காஸ1, 'தோற்றம்;

அனு + காஸ1 = அனூ காஸ1 'பிரதிபிம்பம்'

ஆனால் ப்ரகாஸ1 'வெளிச்சம்'

**6.3.124** த3ஸ்தி

'இக்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரை யீறாக் கொண்ட உபசர்க்கத்துக்குப்பின், தா3 'கொடு' என்ற தாது 'த'வாக மாறி நிற்கும்போது, உபசர்க்கத்தினீற நெடிலாகும்.

நி + தா3 + க்த = நி + த் + க்த (7.4.47) = நீத்த "பரிசாகக் கொடுக்கப்பட்ட", பரீத்த 'கொடுக்கப்பட்டது' ஆனால் ப்ரத்தம் (தா3, 'த' வாக மாறுவதற்குப் பார்க்க 7.4.47) விதீர்ணம், இங்கு காணப்படும் 'த', 'தா3'வின் மாற்றமடைந்த எழுத்தல்ல.

**6.3.125** அஷ்டன: ஸம்க்3ஞாயாம்

இரண்டாவது உறுப்பினர் தொடரும்போது 'அஷ்டன்' என்ற சொல்லினிறுதியுயிர், நெடிலாக, அத்தொகை ஒரு பெயரைச் சுட்டுமானால் ஆகும்.

அஷ்டௌ வக்த்ராணி அஸ்ய = அஷ்டாவக்த்ர: 'ஒருவனின் பெயர்'

அஷ்டா ப3ந்து4ர:, அஷ்டாபத3ம்

ஆனால் அஷ்டபுத்ர: "எட்டுப்பிள்ளைகளைக் கொண்ட"

அஷ்டபா4ர்ய:

**6.3.126** ச2ந்த3ஸி ச

வேத மொழியிலும், இரண்டாவது உறுப்பினருக்கு முன் 'அஷ்டன்' இன் இறுதியுயிர் நெடிலாகும்.

ஆக்3னேயம் அஷ்டாகபாலம் நிர்வபேத்

அஷ்டாஹிரண்யா த3க்ஷிணா

அஷ்டாபதீ தே3வதா ஸுமதீ

அஷ்டௌ கபாலேஷு ஸம்ஸ்க்ருதம் = அஷ்ட ௭—கபால + அண் (4.4.31, 8.2.7)

அஷ்ட + கபால + ௭ (4.1.88) = அஷ்டாகபால

வா: க$^{3}$வி சயுக்தே ப$^{4}$ஷாயாமஷ்டனோ தீ$^{3}$ர்கே$^{4}$ா ப$^{4}$வதீதி வக்தவ்யம் 'கே$^{3}$ா' தொடரும்போது 'அஷ்டன்' இனின் இறுதி உயிர், பேச்சு மொழியில் நீட்டிக்கும்.

அஷ்டாக$^{3}$வம் ஸ$^{1}$கடம்

**6.3.127** சிதே: கபி

'கப்' ஒட்டுக்குமுன் நிற்கும் 'சிதி' (அடுக்கு)யின் இறுதி உயிர் நெடிலாகும். ஏக + சிதி + கப் = ஏகசிதீக: 'செங்கல்லின் ஓரடுக்குக் கொண்ட' த்ரிசிதீக:

**6.3.128** விஸ்$^{1}$வஸ்ய வஸூராடோ:

வஸூ 'செல்வம்', ராட் 'அரசன்' ஆகியவைகளுக்கு முன் நிற்கும் விஸ்$^{1}$வ 'எல்லாம்' என்ற சொல்லின் இறுதியுயிர் நெடிலாகும்.

விஸ்வம் வஸூ = விஸ்வாவஸூ ''விஷ்ணுவின் பெயர்'';

விஸ்வாராட், விஸ்வாராட்$^{3}$ப்$^{4}$யாம், விஸ்வாராட்$^{3}$பி:, விஸ்வாராட்$^{3}$ப்$^{4}$ய:, விஸ்வாராட்ஸூ ஆனால் விஸ்$^{1}$வராஜம், விஸ்வராஜெள, விஸ்$^{1}$வராஜ:, விஸ்$^{1}$வராஜா, விஸ்வராஜே, 'ராட்' என்ற வடிவத்தை நீடித்து வைத்துக் கொண்டிருக்கும் போதுதான், இதற்கு முன் நிற்கும் 'விஸ்வ'வின் இறுதியுயிர் நெடிலாகும். 'ராஜ' என்ற வடிவத்தில் அமையும்போது இவ்விதி பயன்படுத்த இயலாது.

**6.3.129** நரே ஸம்க்$^{3}$ஞாயாம்

'நர' மனிதன் என்ற சொல்லுக்கு முன் நிற்கும் 'விஸ்வ'வின் இறுதியுயிர், அத்தொகை பெயரைச் சுட்டும்போது நெடிலாகும். விஸ்$^{1}$வே நரா: அஸ்மின் விஸ்$^{1}$வாநர: 'அக்னி தேவதையின் தகப்பனாரின் பெயர்' வைஸ்$^{1}$வாநரி: 'அக்னி', விஸ்$^{1}$வாநரனின் மகன்'

பெயரைச் சுட்டாவிட்டால் விஸ்$^{1}$வே நராயஸ்ய ஸ விஸ்வநர:

**6.3.130** மித்ரே சர்ஷௌ

மித்ர 'நண்பன்' என்ற சொல்லுக்கு முன் நிற்கும் 'விஸ்$^{1}$வ' வின் இறுதியுயிர், அத்தொகை வேதத்தின் ருஷியைச் சுட்டும்போது நெடிலாகும்.

விஸ்$^{1}$வாமித்ர – 'வேத ரிஷியின் பெயர்'

ஆனால் விஸ்வம் மித்ரம் அஸ்ய = விஸ்$^{1}$வமித்ர ''எல்லோரையும் நண்பர்களாகக் கொண்ட''

**6.3.131** மந்த்ரே ஸோமாஸ்$^{1}$வேந்த்$^{3}$ரிய விஸ்$^{1}$வ தேவ்யஸ்ய மதௌ

வேதத்தின் மந்திரப்பகுதியில், ஸோம, 'செடிவகை', அஸ்$^{1}$வ 'குதிரை' இந்த்$^{3}$ரிய, விஸ்$^{1}$வதே$^{3}$வ்ய ''எல்லாக் கடவுளரின் தொடர்பாக'' என்ற சொற்களைத் தொடர்ந்து 'மதுப்' ஒட்டு நிற்கும்போது, அதற்குமுன் நிற்கும் மேலே வறிய சொற்களினிறுதியுயிர் நெடிலாகும்.

ஸோம + மதுப் + ஙீப் (4.1.4) = ஸோமாவதீ (8.2.9; 6.1.220) "ஸோமத்தைக்

கொண்ட''; அஸ்'வாவதீ; இந்த்⁴ரியாவதீ, விஸ்வதே³வ்யாவதீ

**6.3.132** ஓஷதே⁴ஸ்'ச விப⁴க்தாவப்ரத²மாயாம்

(வேதத்தின் மந்திரப்பகுதியில்), ஓஷதி⁴ 'செடி' என்ற சொல்லுக்குப்பின், முதல் வேற்றுமையுருபுகளைத் தவிர்த்து, மற்ற வேற்றுமையுருபுகளியைக்கும்போது (விப⁴க்தி), அச்சொல்லைனிறுதியுயிர் நெடிலாகும்.

ஓஷதி + பி⁴ : = ஓஷதீ⁴பி:, ஓஷதீ⁴ப்⁴ய:

ஆனால் ஓஷதி⁴பதி

ஸ்தி²ரேய மஸ்த்வோஷதி⁴:

**6.3.133** ரு'சி துநுக⁴ மக் ஷூ தங் குத்ரோருஷ்யாணாம்

இருக்கு வேதத்தில் து, நு, க⁴, மக் ஷூ, (இடைச்சொல் Particle) காலவொட்டு தங்கு (இடைச் சொல்) 'த்ரல்', ஒட்டு உருஷ்ய என்ற வினைச் சொல் ஆகியவைகளினீறு நெடிலாகும்.

1) து– ஆ நூ ந இந்த்³ர வ்ருத்ரஹன்
2) நு – நூ கரணே
3) க⁴ – உத வா க⁴ா ஸ்யாலாத்
4) மக் ஷூ – மக் ஷூ கே³ாமந்தமீமஹே
5) தங் ப⁴ரதா ஜாத வேத³ஸம்

'தங்' என்பது த²ா வை 'ஙித்'தாகப் பயன்படுத்தும்போது அதன் பதிலியாக வரும் 'த'வைக்கு குறிக்கும். ஆகையால் ஸ்ருணோத க்³ராவாணம் என்பதில் இவ்வாறாகாது

6) கு – கூமன:
7) த்ரல் – அத்ரா கெ³ள:
8) உருஷ்ய – உருஷ்யா ணோ அக்³னே:

**6.3.134** இக: ஸுஙி

'ஸுங்'க்குமுன் நிற்கும் 'இக்' (இ,உ,ரு,ல்) பிரத்தியாஹாரத்தின் உயிரையீறாகக் கொண்ட சொல்லினீறு, மந்திரப் பகுதியில் நெடிலாகும்.

அபீ⁴ ஷூ ண: ஸகீ²னாம்; ஊர்த⁴வம் ஊ ஷூ ண: ஊதயே

**6.3.135** த்³வசோதஸ் திங:

இருக்கு வேதத்தில், ஈரசைவினையோடு இணைக்கப்படும் 'அ'வீற்று கால இடைச் சொல்லின் 'அ' நெடிலாகும். வித்³மா ஹி த்வா ஸத்பதிம் ஸூரே கே³ாணாம், வித்³மா ஸ தஸ்ய பிதரம்

**6.3.136** நிபாதஸ்ய ச

நிபாதத்தின் (இடைச் சொல்) இறுதியுயிரும் இருக்கு வேதத்தில் நெடிலாகும். ஏவா தே, அச்ச²ா தே

**6.3.137** அன்யேஷாமபி த்3ருஸ்யதே

இத்தகைய, இறுதியுயிர் நெடிலாவது மற்ற சொற்களிலும் காணப்படுகிறது. இலக்கண நூல்களில் விதிக்கப்படாத இடங்களிலும் இத்தகைய உயிர் நீட்டம் காணப்படுகிறது. இவைகளையும் பழக்கத்திலிருப்பதால் ஒத்துக் கொள்ள வேண்டும்.

கேஸ1ாகேஸி1, கசாகசி, ஜலாஷாட், நாரக: பூருஷ:

வா: ஸூ1னோ த3ந்த த3ம்ஷ்ட்ராகர்ண குந்த3 வராஹ புச்ச2பதே3ஷு

த3ந்த, த3ம்ஷ்ட்ரா, கர்ண, குந்த3, வராஹ, புச்ச2, பத3 என்ற சொற்களுக்கு முன் நிற்கும் 'ஸ்வன்' இன் இறுதியுயிர் நெடிலாகும்.

ஸ்1வா த3ந்த: ஸ்1வாத3ம்ஷ்ட்ர:,

ஸ்1வா கர்ண:, ஸ்1வா குந்த3:, ஸ்1வா வராஹ:

ஸ்1வா புச்ச2, ஸ்1வாபத:

**6.3.138** சௌ

'அஞ்ச்' என்ற சொல் தனது மூக்கொலி, உயிரெழுத்து இரண்டும் கெட்டு 'ச' என்று ஆகி, ஒரு சொல்லுக்குப்பின் நிற்கும்போது முதலுறுப்பினரினிறுதியுறுப்பினரின் இறுதி உயிர் நெடிலாகும். 6.4.24 இன்படி 'அஞ்ச்' இன் மூக்கொலி கெடும்.

அதன் 'அ' 6.4.138இன்படி கெடும்.

த3தி4 + அஞ்ச் = த3தி4 + ச் + ஸ1ஸ் = த3தீ4ச: த3தீ4சா, த3தீ4சே;

மதூ4ச:, மதூ4சா, மதூ4சே

**6.3.139** ஸம்ப்ரஸாரணஸ்ய

அரையுயிருக்குப் பதிலியாக வரும் முழு உயிரும், ஒரு தொகையின் முதலுறுப்பினராகும்போது நெடிலாகும்.

காரீஷ க3ந்தி4 + அண் (4.1.92) = காரீஷ – க3ந்தி4 + ஷ்யங் (4.1.78) + சாப் = காரீஷ – க3ந்த4 θ – யா + புத்ர: = காரீஷ – க3ந்தி4ஆ புத்ர = காரீஷ க3ந்தி4 புத்ர = காரீஷ க3ந்தீ4 புத்ர:

கௌமுத4 க3ந்தீ4பதி:

**6.4.1** அங்க3ஸ்ய

அடிச் சொல்லின் (அங்க3)

இது ஒரு அதிகார சூத்திரம். இது 6.4.1இலிருந்து 7.4.97 வரை தொட ரும் 'அங்க3ஸ்ய' என்ற 'சொல்' தொடர்ந்து வரும் சூத்திரங்களில் (7.4.97)வரை அனுவிருத்தியாகும். இதிலிருந்து தொடங்கி 7ஆம் அத்தி யாயம் முடிவு வரை கூறப்பட்டிருக்கும் விதிகள் அடிச்சொல்லைப் ப ற்றியது.

அதாவது ஒட்டு இணைக்கப்படுவதற்கு முன் நிற்கும் அடிச் சொல்லை பற்றியது.

**6.4.2** ஹல:

'அண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த (அ,இ,உ) (அரையுயிரை, முழு உயிராக்கப்பட்ட (ஸம்ப்ரஸாரணம்) உயிரையிறுதியில் கொண்ட, அடிச் சொல்லினீறு, அதற்குப்பின் ஒரு மெய் (ஒட்டின் முதல்) நிற்கும்போது நெடிலாகும்.

நெடில் (தீ$^3$ர்க$^4$), 'அங்' ஆகியவைகள் 6.3.111இலிருந்து தருவிக்கப்பட்டவை, ஸம்ப்ரஸாரண 6.3.139இலிருந்து தருவிக்கப்பட்டது.

ஹ்வே + க்த = ஹு ஏ + த (6.1.15) = ஹூ + த (6.1.108) = ஹூத 'அழைக்கப்பட்ட' ஜீன:, ஸம்வீத: ஆனால், நிர் + வே + க்த = நிர் + உ + த = நிருத: இங்கு, ஸம்ப்ரஸாரண உயிர், அடிச்சொல்லின் மெய்யைத் தொடர்ந்து வருவது அல்ல. அதற்கு முன் நிற்கும் மெய் உபசர்க்கத்தினுடையது. அடிச் சொல்லின் ஒரு பகுதியல்ல.

த்ரி + தீய = த்ருதீய (5.2.55) "3வது" (இறுதியுயிர் 'அண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்ததல்ல)

வ்யத்$^4$ + க்த = வித்$^4$ + த$^4$ (6.2.40; 4.53) = வித்$^3$த$^4$, 'வித்$^4$' இன் ஸம்ப்ஸாரண உயிர், ஒட்டிணைக்கப்படுவதற்கு முன்னால் நிற்கும் அடிச்சொல்லினீறு அல்ல.

**6.4.3** நாமி

'நாம்' (ஆறாம் வேற்றுமைப் பன்மையுருபு) ஒட்டுக்கு முன் நிற்கும் அடிச் சொல்லினீறான உயிர், நெடிலாகும்.

தே$^3$வ + ந்–ஆம் (7.1.54) = தே$^3$வானாம்

அக்$^3$னி + ந்–ஆம் = அக்$^3$னீனாம்; வாயு + ந்–ஆம் = வாயூனாம்

பித்ரு + ந்–ஆம் = பித்ரூணாம்

**6.4.4** ந திஸ்ரு'சதஸ்ரு'

திஸ்ரு '3', சதஸ்ரு' '4' என்ற அடிச் சொற்களினிறுதி உயிர், 'நாம்' தொடர்ந்து வரும்போது, நெடிலாகாது. திஸ்ருணாம், சதஸ்ருணாம்.

**6.4.5** ச$^2$ந்த$^3$ஸ்யுபயதா$^2$

திஸ்ரு, சதஸ்ரு என்பவைகளினிறுதியுயிர், வேத மொழியில்ண, 'நாம்' உக்கு முன், நெடிலாகவும் ஆகும். நெடிலாகாமலும் இருக்கும்.

திஸ்ருணாம், திஸ்ரூணாம் மத்$^4$யதினே

சதஸ்ருணாம், சதஸ்ரூணாம் மத்$^4$யதினே

**6.4.6** ந்ரு ச

(ஆறாம் வேற்றுமையுருபான 'நாம்'உக்கு முன் நிற்கும்) 'ந்ரு'வின் (அடிச்சொல்) ஈறான 'ரு' (உயிர்) நெடிலாகலாம். ஆகாமலும் நிற்கலாம்.

ந்ரு'ணாம், ந்ரு1ணாம் 'மனிதர்களுடைய' இந்த விருப்பான வடிவம் வேதமொழியில் மட்டுந்தான் காணப்படுமென்பது சிலரின் கருத்து, மற்றொரு சாரார் இது மற்ற இலக்கியங்களிலும் காணப்படும் என்ற கருத்துடையவர்.

**6.4.7** நோபத⁴ாயா:

(ஆறாம் வேற்றுமையுருபான 'நாம்'உக்கு முன் நிற்கும்) 'ந்' ஈற்று. அடிச்சொல்லின் ஈற்றயல் (உபதா⁴) உயிர் நெடிலாகும்.

பஞ்சன்–ன்–ஆம் (7.1.55) பஞ்ச 0 + ன்–ஆம் (8.2.7) = பஞ்சானாம் 'ஐந்தின்', ஸப்தானாம், நவானாம், த³ஸானாம்

ஆனால் சதுர்ணாம் (அடிச்சொல் 'ந்' ஈற்றுச் சொல் அல்ல): சர்மணாம் இது 'ந்' ஈற்றுச் சொல்லான போதிலும், இணைக்கப்படும் வேற்றுமையுருபு 'நாம்' அல்ல, 'ஆம்' ஆகும்.

**6.4.8** ஸர்வநாமஸ்த²ானே சாஸம்பு³த்³தெ⁴ள

விளிவேற்றுமையொருமையைத் தவிர்த்த, மற்ற ஸர்வநாம ஸ்த²ான என்ற ஸம்க்ஞாவினால் குறிப்பிடப்படும் வேற்றுமையுருபுக்குமுன் நிற்கும் 'ந்' ஈற்று அடிச்சொல்லின் ஈற்றயலுயிர் நெடிலாகும்.

ராஜன் + ஸு = ராஜன் + 0 (6.1.68) = ராஜா 0 (8.2.7);

ராஜன் + ஒள = ராஜானௌ, ராஜன் + ஜஸ் = ராஜன் + அஸ் = ராஜான: (8.3.15);

ராஜன் + அம் = ராஜானாம் (2ஆம் வேற்றுமையொருமை)

விளிவேற்றுமையொருமை, ராஜன் + 0 (8.2.80 = ராஜன் ராஜன் + ஙி = ராஜனி

**6.4.9** வா ஷ பூர்வஸ்ய நிக³மே

வேதமொழியில் (நிக³ம) விளிவேற்றுமையொருமையைத் தவிர்த்த மற்ற ஸர்வநாமஸ்த²ான என்ற ஸம்க்³ஞாவினால் குறிப்பிடப்படும் வேற்றுமையுருகளுக்கு முன் நிற்கும் 'ந்' ஈற்று அடிச்சொல்லின் ஈற்றயலுயிர், 'ஷ்' என்ற எழுத்துக்குப்பின் நிற்குமானால் விருப்பாக நெடிலாகும்.

தக்ஷன் + ஒள = தக்ஷாணௌ, தக்ஷாண: தக்ஷாணம்

அல்லது தக்ஷணௌ, தக்ஷண:, தக்ஷணம் பேச்சு மொழியில் தக்ஷாணௌ, தக்ஷாண:

**6.4.10** ஸாந்த மஹத: ஸம்யோக³ஸ்ய

விளிவேற்றுமையொருமையைத் தவிர்த்த மற்ற ஸர்வநாமஸ் தானமென்ற ஸம்க்³ஞாவினால் குறிப்பிடப்படும் வேற்றுமையுருபுகளுக்குமுன் நிற்கும் 'ஸ்' ஈற்று அடிச்சொல் அவ்வீற்றுக்கு முன் 'ந்'வுடன் கூட்டு மெய்யாகி நிற்கும்போது (ஸம்யோக) அவ்வடிச் சொல்லின் ஈற்றயலுயிரும் மஹத் 'பெரிய' என்ற அடிச்சொல்லின் ஈற்றயலுயிரும், நெடிலாகும்.

1) ஸ்'ரு + ஈயஸுன் = ஸ்'ர்–ஏ–யஸ் + ஸு = ஸ்'ரேயன்–ஸ் + ஸு (7.1.70) = ஸ்'ரேயான்–ஸ் + 0 (6.1.68) = ஸ்'ரேயான் 0 (8.2.23); ஸ்ரேயாம்ஸௌ, ஸ்'ரேயாம்ஸம், ஸ்'ரேயாம்ஸ: (8.3.24)2) மஹத் + ஸு = மஹான்–த்–ஸு=மஹான்த்–0 = மஹான் 0 (8.2.23)=மஹான், மஹாந்தௌ, மஹாந்த:, மஹாந்தம்

**6.4.11** அப்த்ரு'ன் த்ரு'ச் ஸ்வஸ்ரு நப்த்ரு நேஷ்ட்ரு'
த்வஷ்ட்ரு' க்ஷத்ரு' ஹோத்ரு' போத்ரு'
ப்ரஸாஸ்த்ரூணாம்

அப் 'தண்ணீர்', த்ரு'ன், த்ரு1ச் என்ற ஒட்டுக்களில் முடியும் அடிச் சொற்கள், ஸ்வஸ்ரு' 'உடன் பிறந்தவள்',
நப்த்ரு, 'மருமகன்', நேஷ்ட்ரு 'ஒரு புரோகிதரின்பெயர்', த்வஷ்ட்ரு' 'ஒரு கடவுளின் பெயர்', க்ஷத்ரு 'தேரோட்டி, சேவகன்', ஹோத்ரு', போத்ரு', ப்ரஸாஸ்த்ரு, 'அதிகார பூர்வமான புரோஹிதர்களின் பெயர்கள்' ஆகிய அடிச்சொற்களின் ஈற்றயலுயிர், விளிவேற்றுமையைத் தவிர்த்த மற்ற ஸர்வநாமஸ்தானம் என்ற வேற்றுமையுருபுகளுக்கு முன், நெடிலாகும்.

1) அப் + ஜஸ் = ஆப் – அஸ் = ஆப: (8.3.15) தொகையிலும் இவ்விதி பயன்படுத்தக்கூடுமென்பது ஒரு சாராரின் கருத்து. ப³ஹவ: ஆப: ஏஷு தட³ாகே³ஷு = ப³ஹ்வ்–அப் + ஸி' = ப³ஹ்வாம்பி (7.1.72) தட³ாக³ானி 'தண்ணீர் நிரம்பி வழியும் குளங்கள்' இது அனித்ய ஸமாஸமாவதால் ஸமாஸாந்த விதி இதில் பயன்படுத்தப்பட வில்லை. இத்தொகையை நித்ய ஸமாஸமாக எடுத்துக் கொண்டாலும், உயிர் நீட்டம் பெறும். ஆயினும் மூக்கொலி இணைக்கப்படமாட்டாது.

2) கர் + த்'ருண் = கர்தாரௌ, கடஸ்ய, வதிதாரௌ ஜனாபவாத³ான்
3) த்ருச் – கர்தாரௌ, கபஸ்ய, ஹர்தாரௌ ப⁴ாரஸ்ய
4) ஸ்வஸ்ரு' – ஸ்வஸா, ஸ்வஸாரௌ, ஸ்வஸார:
5) நப்தரு' – நப்தா, நப்ராரௌ, நப்தார:
6) நேஷ்ட்ரு' – நேஷ்டா, நேஷ்டாரௌ, நேஷ்டார:
7) த்வஷ்ட்ரு' – த்வஷ்டா, த்வஷ்டாரௌ, த்வக்ஷ்டார:
8) க்ஷத்ரு' – க்ஷத்தா, க்ஷத்தாரௌ, க்ஷத்தார:
9) ஹோத்ரு' – ஹோதா, ஹோதாரௌ, ஹோதார:
10) போத்ரு' – போதா, போதாரௌ, போதார:
11) ப்ரஸ'ாஸ்த்ரு – ப்ரஸாஸ்தா, ப்ராஸாஸ்தாரௌ, ப்ராஸாஸதார:

'நப்த்ரு'' முதலியவைகள் ஒரு தாதுவிலிருந்து ஆக்கப்படாதவையென்று கருதப்படுமானால், இவைகளின் பட்டியல், விதிக்காகக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை, 'உணாதி' ஒட்டுக்களால் ஆக்கப்பட்டவையென்று கருதப்படும்போது, இவைகளின் பட்டியல் இவைகளை ஒரெல்லைக்குட்படுத்துவதற்காக இங்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன் மூலம் இவைகளைப்போன்று ஆக்கப்பட்ட மற்ற சொற்களில், இந்த விதி பயன்படுத்தப்படுவதைத் தடை செய்ய இயலும். காட்டாக பிதரௌ, பிதர:, மாதரௌ, மாதர:

**6.4.12** இன்ஹன்பூஷார்யம்ணாம் ஸெ'ள

'இன்', 'ஹன்', இல் முடியும் அடிச்சொற்கள், பூஷன், அர்யமன் ஆகியவைகளின் ஈற்றயலுயிர், ஸி' (முதல், இரண்டாம் வேற்றுமைப் பன்மையுருபுகள்)க்குமுன் நெடிலாகும்.

1) ப$^{3}$ஹுவ: த$^{3}$ண்டி$^{3}$ன: ஏஷாம் ஸந்தி = ப$^{3}$ஹு த$^{3}$ண்டி$^{3}$ன் + ஸி = ப$^{3}$ஹுத$^{3}$ண்டி$^{3}$னி
"பல தண்டந்தூக்குபவர்களைக் கொண்ட"

2) வ்ருத்ரம் ஹதவான் = வ்ருத்ர + ஹன் + க்விப்
(3.2.870 = வ்ருத்ரஹன், ப$^{3}$ஹவ:
வ்ருத்ரஹண: யேஷு தானி ப$^{3}$ஹுவ்ருத்ரஹாணி;
ப$^{3}$ஹு பூஷாணி, ப$^{3}$ஹ்வர்யமாணி.
இலிருந்தே உயிர் நீட்டம் பெற இயலும். ஆயினும், இச்சொற்களைத் தனியாக இங்குக் குறிப்பிட்டுக் கூறியிருப்பது, முதலிரண்டு வேற்றுமைப் பன்மையொட்டுக்கள் இணைக்கப்படும்போது மட்டுந்தான், இவ்வுயிர் நீட்டம் ஆகும். மற்ற ஸர்வநாமஸ்த$^{2}$ான மெனப்படும் வேற்றுமையுருபுகளை இணைக்கும்போது, ஈற்றயல் நெடிலாக ஆகாது, என்று ஒரு வரையறையேற்படுத்தவேண்டி, இச்சூத்திரமமைக்கப்பட்டிருக்கிறது. தண்டி$^{3}$னௌ, சத்ரிணௌ, வ்ருத்ரஹணௌ, பூஷணௌ, அர்யமணௌ.

**6.4.13** ஸௌ ச
'இன்', 'ஹன்' இல் முடியும் அடிச்சொற்கள், பூஷன், அர்யமன் ஆகியவைகளின் ஈற்றயலுயிர். 'ஸு' முதல் வேற்றுமை ஒருமையுருபுக்கு (ஆனால் விளிவேற்றுமையுருபு அல்ல) முன் நெடிலாகும்.
த$^{3}$ண்டி$^{3}$ன் + ஸு = த$^{3}$ண்டி$^{3}$ன் + θ (6.1.68) = த$^{3}$ண்டீ$^{3}$ θ (8.2.7) = த$^{3}$ண்டீ$^{3}$, வ்ருத்ரஹா, பூஷா, அர்யமா, ஆனால் விளிவேற்றுமையில், த$^{3}$ண்டி$^{3}$ன், வ்ருத்ரஹன், பூஷன், அர்யமன் (8.2.8)

**6.4.14** அத்வஸந்தஸ்ய சாத$^{4}$ாதோ:
'அது' அல்லது 'அஸ்' இல் முடியும் வினையடிச் சொற்களைத் தவிர்த்த (அத$^{4}$ாதோ) மற்ற அடிச்சொல் ஈற்றயலுயிர் விளிவேற்றுமையொருமையல்லாத 'ஸு' (முதல் வேற்றுமையொருமை )வுக்கு முன் நிற்கும் போது நெடிலாகும். ட$^{3}$வது, க்தவது, மதுப்/வதுப்/ட்மதுப் ஆகியவைகளை 'அது' சுட்டும்.

1) ப$^{4}$வது + ஸு = ப$^{4}$வந்–த் + ஸு (7.1.700 = ப$^{4}$வாந்த் + θ (6.1.68) = ப$^{4}$வான் (8.2.23)க்தவது க்ருதவான், மதுப் கோ$^{3}$மான், யவமான் இவ்வெடுத்துக்காட்டுகளில் ஈற்றயல் உயிர், நெடிலான பிறகு 'நுட்' (ந்) (7.1.70) இணைக்கப்பட வேண்டும். அது நெடிலாவதற்கு முன்னால், இணைத்தால், அவ்வுயிர், ஈற்றயலாகாது. ஆகவே உயிர் நீட்டம் பெறாது.

2) அஸ்–ஸு–யஸ'ஸ் + ஸு = ஸுயஸாஸ் – அ θ (6.1.68) = ஸுயஸ'ா:
'சிறந்த புகழ் கொண்ட', ஸுபயா:, ஸுஸ்'ரோதா. ஆனால் பிண்ட$^{3}$ம் க்$^{3}$ரஸதி = பிண்ட$^{3}$ + க்$^{3}$ரஸ் + க்விப் = பிண்ட$^{3}$ க்$^{3}$ரஸ் + θ (6.1.68) = பிண்டக்$^{3}$ஸ:
'க்$^{3}$ரஸ்' ஒரு வினையடிச் சொல் சர்மவ:

விளிவேற்றுமை – ஹே கே$^{3}$ாமன், ஹே ஸுபப:

**6.4.15** அனுநாஸிகஸ்ய கிஜ$^{2}$லோ: க்ஙிதி

மூக்கொலியில் (அனுநாஸிக) முடியும் அடிச்சொல்லின் ஈற்றயல் உயிர், 'க்விப்' ஒட்டு அல்லது 'க்' அல்லது 'ங்' ஐ இத்தாகக் கொண்ட 'ஜ$^{2}$ல்' பிரத்தியாஹாரத்து எழுத்தை முதலாகக் கொண்ட வொட்டுக்கள் ஆகியவைகளுக்கு முன் நெடிலாகும்.

ப்ர + ஸ'ம் + க்விப் = ப்ரஸ'ாம் + 0 = ப்ர – ஸ'ாம், "வலிபற்ற, அமைதியான", ப்ர + ஸ'ாம் + ஸு = ப்ர – ஸ'ான் + 0 (8.2.64) = ப்ரஸ'ாஸ்; ப்ர + தம் + க்விப் = ப்ர + தாம், ப்ர + தம் = க்விப் = ப்ர–த$^{3}$ாம்

ஸ'ம் + க்த = ஸ'ம் + த = ஸ'ாந்த 'அமைதியான'

த$^{3}$ம் + க்த = த$^{3}$ாந்த (8.4.88). ஆனால் க$^{3}$ம்யதே (=க$^{3}$ம் + யக் ), க$^{3}$ம் + த்ருன் = க$^{3}$ந்த்ரு$^{1}$ 'செல்பவன்', 'யக்' ஒட்டு 'க்விப்' ஆனாலும், அரையுயிர் முதலாக வருகிறது. 'த்ருன்' ஜல் பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த 'த்'வில் தொடங்கினாலும், இது 'கித்' அல்ல.

**6.4.16** அஜ்ஜ$^{2}$நக$^{3}$மாம் ஸநி

('ஜ$^{2}$ல்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்தில் தொடங்கு ம்) 'ஸன்' ஒட்டுக்கு முன் நிற்கும், உயிரீற்று வினையடிச் சொல், ஹன் , 'கொல்', க$^{3}$ம் 'செல்' ஆகியவைகளின் இறுதியுயிர் நெடிலாகும்.

(1) சி + ஸன் + ஸ'ப் + திப் = சி + ஸ + அ + தி (6.1.9) = சி–சீ–ஷ–தி (6.1.97; 8.3357) 'குவிக்க விரும்புகிறான்';

(2)ஹன் + ஸன் + ஸ'ப் + திப் = ஹ 0–ஹன் + ஸ + அ + தி (6.2.9, 7.4.60) = ஜி–ஹன் ஸ + தி (6.1.97; 7.4.62; 79) = ஜி – க$^{4}$ன் – ஸ தி (7.3.55) ஜிக$^{4}$ான்ஸதி = ஜிக$^{4}$ாம் ஸதி (8.3.24) கொல்ல விரும்புகிறான்'

(3) அதி$^{4}$ + கம் + ஸன் + ஸ'ப் + தே (2.4.48) = அதி$^{4}$–ஜி–க$^{4}$ாம்ஸதே 'அறிந்து கொள்ள விரும்புகிறான்'

வா: க$^{3}$மேரிஙாதே$^{3}$ஸ'ஸ்யயேதி வக்தவ்யம்

'இங்' (படி) தாதுவுக்குப் பதிலியாக வரும் 'க$^{3}$ம்' உக்குத்தான், இவ்விதி. காட்டாக ஸம்ஜிக$^{3}$ம்ஸதே வத்ஸோ மாத்ரா. "தாயுடன் செல்ல குழந்தை விரும்புகிறான்"

**6.4.17** தனோதேர் விப$^{4}$ாஷா

('ஜ$^{2}$ல்' பிரத்தியாஹாரத்தின் ஒரெழுத்தில் தொடங்கும்) 'ஸன்' ஒட்டுக்கு முன்

நிற்கும் தன் 'விரிவாக்கு' இன் இறுதியுயிர், விருப்பாக நெடிலாகும்.
தன் + ஸன் + ஸ'ப் + திப் = தி–தன் + ஸ +அ +தி (6.1.9, 7.4.79) = தி + த் ம்–ஸதி = தி + தாம்ஸதி (8.3.24); "விரிவாக்க விரும்புகிறான்" அல்லது 'திதம்ஸதி' ஆனால் நிதஷதி (தி–தன் + இட்–ஸன் + ஸ'ப் + திப் (7.2.49 காஸிகா)

**6.4.18** க்ரமஸ்' ச க்த்வி

(ஜ²ல் பிரத்தியாஹாரத்தின் ஒரெழுத்தில் தொடங்கும்) 'க்த்வா' ஒட்டுக்கு முன் நிற்கும் க்ரம் 'ஒட்டி நட' என்ற வினையடியினிறுதியுயிர் விருப்பாக நெடிலாகும்.
க்ரம் + க்த்வா = க்ரம் + த்வா = க்ராந் + த்வா (8.4.58) = க்ராந்த்வா ஆனால் க்ரமித்வா (7.2.56)

**6.4.19** ச் ச்²வோ: ஸ'ூட்³நுநாஸிகே ச

'க்' அல்லது 'ங்'ஐ இத்தாக் கொண்ட 'ஜ²ல்' பிரத்தியாஹாரத்தின் ஒரெழுத்தில் தொடங்கும் ஒட்டுக்கு முன் நிற்கும் வினையடியின் 'ச்', 'வ்'வுக்குப் பதிலியாக முறையே 'ஸ்'', ஊட்² வரும்.
ப்ரச் + நங் (3.3.90) = ப்ரச்² + ந (6.1.73) = ப்ரஸ்'ன 'கேள்வி'; ப்ரச் + க்த = ப்ருச் + தா (1.13.16) ப்ருஷ்ட (8.2.36; 4.41) 'கேட்கப்பட்ட'
ஸ'ப்³த³ம் ப்ருச்சதி = ஸ'ப்³த³ + ப்ருச் + க்விப் = ஸ'ப்³த³ப்ராஸ்
தி³வ் + ந = தி³–ஊ–ந = த்³யூன (8.2.49)
'விளையாடிக்கொண்டு'
அக்ஷ + தி³வ + க்விப் = அக்ஷ–தி³–ஊட் + θ = அக்ஷத்³யூ "பகடை கொண்டு சூதாடுதல்"
ஆனால் த்³யுப்⁴யாம், த்³யுபி: (இங்கு இணைக்கப்படும் ஒட்டு 'ஙித்' அல்லது 'கித்' அல்ல)

**6.4.20** ஜ்வர த்வர ஸ்'ரிவி, அவிமவாமுபத⁴ாயாஸ்' ச

'க்வி' ஒட்டுக்கள் அல்லது 'க்' அல்லது 'ங்'ஐ இத்தாகக் கொண்ட 'ஜ²ல்' பிரத்தியாஹாரத்து ஒரெழுத்தை முதலாகக் கொண்ட ஒட்டுக்கள் ஆகியவைகளுக்கு முன் நிற்கும்
ஜ்வர், சுடுதல் த்வர் 'விரைவாக்கு', ஸ்ரிவ் 'உலர்', அவ் 'காப்பாற்று', மவ் 'நகர் 'செல்' ஆகியபவைகளின், வ்–க்கும் ஈற்றயலுலிருக்கும் பதிலியாக 'ஊட்²' வரும்.

1. ஜ்வர் + க்விப் = ஜூ–அர் = ஜூர் "காய்ச்சல்";
ஜ்வர் + க்தின் = ஜூர்–தி = ஜூர்தி 'காய்ச்சல்',
ஜ்வர் + க்த = ஜூர்ண (8.2.42) "காய்ச்சலாக இருந்த"

2. த்வர்–தூர், தூர்தி; 'அவசரம்', தூர்ண விரைவாக

3. ஸ்ரிவ்–ஸ்ரூ:, ஸ்ருத:, ஸ்ருதவான், ஸ்ருதி: "உலர்ந்த"

4. அவ் – ஊ:, "காப்பாற்றுபவன்"
ஊதி: "பாதுகாப்பு"
ஊத "காப்பாற்றிய"

5. மாவ்–மூ, "நகர்பவன்", மூதி "நகரும்" மூத: நகார்ந்தான் ஜ்வர், த்வர் ஆகியவைகளில், 'வ்', அதற்குப்பின் நிற்கும் 'அ' ஆகிய இரண்டுக்கும் பதிலியாக 'ஊ' வரும். வ்ரிவ், அவ், மாவ் ஆகியவைகளில், 'வ்', அத ற்கு முன் நிற்கும் முறையே 'இ' 'அ', 'ஆ' ஆகியவைகளுக்கு 'ஊ' பதிலி யாக வரும்.

**6.4.21** ரால்லோப:
'க்வி' ஒட்டு. 'க்', அல்லது 'ங்' ஐ 'இத்'தாகக் கொண்ட 'ஜ²ல்' பிரத்யாஹாரத்தின் எழுத்தை முதலாகக் கொண்ட ஒட்டுக்கள் ஆகியவைகளுக்கு முன் நிற்கும் 'ச்²', 'வ்' என்ற எழுத்துக்கள் 'ர்'ஐத் தொடர்ந்து வரும்போது கெடும்.

1. முர்ச்² + க்விப் = முர் θ + θ = முர் 'மயக்கம்', முர்ச் + க்த = மூர்த (8.2.76) 'உருவாகிய': முர்ச் + க்தின் = மூர்தி 'உருவம்'

2. துர்வ் + க்விப் = துர் θ + θ = துர் "பந்தயத்தில் ஒடுதல்". துர்வ் + க்தின் – தூர்வ் க்தன் தூர்தி "அடக்குதல், வெற்றிகொள் (8.2.42) தூர்ண 'அடக்கினான்'

**6.4.22** அஸித்³த⁴வத³த்ராப⁴ாத்
இச்சூத்திரத்திலிருந்து தொடங்கி, இந்தப் பாதத்தின் முடிவு வரையில் தொடர்ந்து விதிக்கப்படும் விதிகள் சூ.129 வரையில் (ஆப4ாத்) கூ றப்படும் மற்றொரு விதியைப் பொறுத்தவரையில் செயற்பாடற்ற வை (அஸித்³த⁴) யென்று கருதப்படும்.

இது ஒரு அதிகார சூத்திரம். 'ஆப⁴ாத்' என்ற சூத்திரத்தின் சொல் 'ப⁴ஸ்' என்ற சூ.6.4.129 வரை என்று சுட்டுகிறது. அஸ் + லோட் + ஸிப் = அஸ் + θ (பார்க்க 2.4.72) + ஹி (3.4.57) = அ–ஏ + ஹி (6.4.119) = ஏஹி (6.1.97) 'ஜ²ல்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்தை முதலாகக் கொண்ட ஒட்டுக்கு முன் நிற்கும் 'ஹி'க்குப் பதிலியாக 'தி⁴' வருமென்று சூ.6.4.101 கூறுகிறது. சூ.101ஆல் விதிக்கப்பட்ட விதியைப் பயன்படுத்தி, 'ஏதி⁴' என்ற சரியான வடிவத்தைத் தருவிக்க, சூ.6.4.119இல் கூறப்பட்ட விதி, செயற்படவில்லையென்று கருதப்பட வேண்டும். பொதுவாக அஸ் + ஹி என்ற சூழலில், சூ.101, 119 இரண்டுமே பயன்படுத்தத் தகுதியுள்ளவை. 1.4.2இல் கூறப்படிட்டிருக்கும் பரிப⁴ாஷா விதியின்படி (விப்ரதிஷேதே⁴ பரம் கார்யம்) சூ.119 மேலோங்கும். சூ.101 பயன்படுத்தத் தகுதியற்றதாகும். இந்தத் தவறான சூழலினால் பெறப்படும் தவறான வடிவம் ஆக்கப்படாமல் தடுத்து நிறுத்தி,

தகுந்த வடிவத்தைப் பெற, இச்சூத்திரம் உதவுகிறது.

வா: வுக்$^3$யுடாவுவங் யணோ: ஸித்$^3$தெ$^4$ள ப$^4$வத இதி வக்தவ்யம்
'வுக்'(6.4.88), யுட் (6.4.63) பதிலியாக வருவதை 'அஸிந்த' என்ற கரு தப்படமாட்டாது. 'உவங்' பதிலியாகுமென்று விதிக்கும் சூ.6.4.77, 'ய்' பதிலியாகுமென்று விதிக்கும் சூத்திரம் 6.4.82 ஆகியவைகளை மேற்குறிப்பிட்ட சூத்திரங்களுடன் ஒரே சமயத்தில் பயன்படுத்தப்கூடாது.
பூ–ப$^3$பூ$^4$வ, ப$^3$பூவது:, ப$^3$பூவு: இவைகளில் 'வுக்' வருகிறது.
உப + தீ$^3$ங் – உபதி$^3$தீ3யே, உபதி$^3$தீ$^3$யாதே, உபதி$^3$தீ$^3$யிரே ('யுட்' உடன்) (6.4.63)
'வுக்', 'பூ'வோடு இணைக்கப்படும்போது 'உவங்' இணைக்கப்பட மாட்டாது. 'தீ$^3$ங்' உடன் 'யுட்' இணைக்கும்போது, 'யண்' இணைக் கப்படமாட்டாது.

**6.4.23** ஸ்னாந்ந லோப:
'ஸ்னம்' என்ற விகரணத்துக்குப்பின் நிற்கும் வினையடியின் 'ந்' கெடும்.
அஞ்ஜ் + ஸ்னம் + திப் = அ + ந + ஞ்ஜ் + திப் (1.1.47) = அ – ந -க் – தி (8.2.30) = அநக்தி 'பூசுகிறான்'
ப$^4$நக்தி (< ப$^4$ஞ்ஜ்) 'உடைக்கிறான்'
ஹிநஸ்தி 'காயப்படுத்துகிறான்'

**6.4.24** அநிதி$^3$தாம் ஹல உபத$^4$ாயா: க்ஙிதி
'க்' அல்லது 'ங்'ஐ இத்தாகக் கொண்டவொட்டுக்களுக்கு முன் நிற்கும் மெய்யீற்று வினையடியின், ஈற்றயல் 'ந', 'இ'ஐ 'இத்'தாகக் குறிப்பிடாதபோது (அநிதி$^3$தாம்) கெடும்.
$^\circ$ரன்ஸ் + க்த = ஸ்ர θ ஸ் + த = ஸ்ரஸ்த 'விழுந்த' த்$^4$வஸ்த (< த்$^4$வன்ஸ்)
ஆனால் டுநதி + யக் + தே = நந்த்யதே 'மகிழ்கிறான்'

வா: அநிதி$^3$தாம் நலோபே லங்கி3கம்ப்யோருபதாப ஸரீர விகாரயோருப ஸங்க்$^2$யானம் கர்த்தவ்யம் லங்க் (லங்கி), கம்ப் (கபி) என்ற சொற்கள், 'வலித்தல்'–உடலின் நோய்' ஆகிய பொருட்களைச் சுட்டும்போது இவ்விதிக்குப் புறடையாகும். இந்தத் தாதுக்களும் தாது பாடத்தில் 'இ' 'இத்'தாகக் கொண்ட தாகக் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. ஆயினும் இவைகள், இவ்விதிக்குப் புறனடையாகும். விலகி$^3$த;, விகபித வேறு பொருட்களைச் சுட்டும்போது விலங்கி3தம், விகம்பிதம்

வா: ரஞ்ஜேர்ணௌ ம்ருக$^3$ரமண உபஸம்க்யானம் கர்த்தவ்யம். இயக்கு வினையாக (ணி) வரும் 'ரஞ்ஜ்' தாதுவின் மூக்கொலி "மானை வேட்டையாடுதல்" என்ற பொருளைச் சுட்டும்போது, கெடும்.
ரஜயதி ம்ருக$^3$ம் "அவன் மான் வேட்டையாடுகிறான்" ஆனால் ரஞ்ஜயதி வஸ்த்ராணி "அவன் துணிக்குச் சாயமேற்றுகிறான்"

வா: கி$^4$நுனி ச ரஞ்ஜேருப ஸம்க்யானம் கர்தவ்யம் 'கி$^4$நுண்' ஒட்டுக்குமுன் நிற்கும் 'ரஞ்ஜ்' தாதுவின் மூக்கொலி கெடும். ராகீ$^3$

வா: ரஜக ரஜன ரஜ: ஸு உபஸம்க்யானம் கர்த்தவ்யம் 'ரஞ்ஜ்' என்ற தாதுவின் மூக்கொலி மறைவதால், ரஜக, ரஜன, ரஜஸ் என்ற சொற்கள் ஆக்கப்படுகின்றன.

**6.4.25** த$^3$ம்ஸ் ஸஞ்ஜஸ்வஞ்ஜாம் ஸ$^1$பி

த$^3$ம்ஸ்$^1$, ஸஞ்ஜ், ஷ்வஞ்ஜ் ஆகியவைகள் 'ஸ$^1$ப்'உக்கு முன் நிற்கும்போது, அவைகளின் மூக்கொலி கெடும்.

1) த$^3$ன்ஸ் + ஸப் + திப் = த$^3$ θ ஸ் – அ + தி = த$^3$ஸ$^1$தி "கடிக்கிறான்"

2) ஸஞ்ஜ் + ஸ$^1$ப் + திப் = ஸ θ ஜ் – அ + தி = ஸஜதி "ஒட்டிக்கொள்கிறான்"

3) ஷ்வஞ்ஜ் + ஸப் + திப் = ஸ்வ θ ஜ் – அச + தி = ஸ்வஜதி 'அணைத்துக் கொள்கிறான், பிடித்துக் கொள்கிறான்'

**6.4.26** ரஞ்ஜேஸ$^1$ ச

'ஸ$^1$ப்' உக்கு முன் நிற்கும் 'ரஞ்ஜ்' 'சாயமேற்று' என்ற தாதுவின் மூக்கொலியும் கெடும்.

ரஞ்ஜ் + ஸ$^1$ப் + திப் = ர θ ஜ் – அ – தி = ரஜதி "சாயமேற்றுகிறான்" தொடர்ந்து வரும் விதிகளில் 'ரஞ்ஜ்' மாத்திரம் அனுவிருத்தியாவதால் மற்ற தாதுக்கள் அல்ல இதைத் தனியாக எடுத்து இச்சூத்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது.

**6.4.27** க$^4$ஞி ச ப$^4$ாவகரணயோ:

'க$^4$ஞ்' ஒட்டுக்கு முன் நிற்கும் 'ரஞ்ஜ்' என்ற தாதுவின் ஈற்றயல் மூக்கொலி, ஆக்கப்பட்ட சொல் ஒரு நிலைமை அல்லது 'கருவி'யைச் சுட்டும்போது கெடும்.

1) ரஞ்ஜ் + க$^4$ஞ் = ரா 0 க்$^3$ – அ = ராக$^3$: ஆஸ$^1$சர்ய: ராக$^3$:

2) ரஞ்ஜ் + க$^4$ஞ் = ராக$^3$:(7.2.116:3.52:6.1.159) 'நிறம்: சாயம்' ரஜ்யதே அனேன, இதனால் சாயமேற்றப்பட்டது. ஆனால் ரங்க "அரங்கு, மேடை" ரஜந்தி தஸ்மின்

**6.4.28** ஸ்யத$^3$:ஜவே

('ஸ்யந்த்$^3$' என்ற தாதுவுடன் 'க$^4$ஞ்' ஒட்டிணைக்கப்படும். அதன் மூக்கொலி கெட்டு) வேகம்' என்ற பொருளில் (ஜவே) 'ஸ்யத$^3$' என்ற சொல்லாக்கப்படும். ஸ்யந்த்$^3$ + க$^4$ஞ் = ஸ்ய 0 த் + அ = ஸ்யத$^3$ ஆனால் ஸ்யந்த "சொட்டுச் சொட்டாக ஒழுகுதல்; நீரோட்டம்"

தைலஸ்யந்த$^3$:, க்$^4$ருதஸ்யந்த$^3$:

**6.4.29** அவோனத$^3$தே$^4$ாத்$^3$ம ப்ரஸ்ரச$^2$ ஹிமஸ்ரத$^2$ா:

அவோத$^3$, ஏத$^4$, ஒத்$^3$ம, ப்ரஸ்ரத$^2$, ஹிமஸ்ரத$^2$ ஆகியவைகள் நிபாதனங்கள்.

1) அவ + உந்த்$^{3}$ + க$^{4}$ஞ் = அவ + உ 0 த்$^{3}$ + அ = அவோத$^{3}$ "ஈரப்பசை" ('ந்' கெடுதல் இங்கு விதிக்குப் புறம்பானது)

2) இந்த$^{4}$ + க$^{4}$ஞ் = இ 0 த்$^{4}$ + க$^{4}$ஞ் = ஏத$^{4}$ ('ந்' கெடுதல், 'குண'மாதல் ஆகியவைகள் விதிப்படியானவையல்ல) 'எளிதில் தீப்பிடிக்கும் பொருள், எளிதில் எரியக் கூடியது'

3) உத்த$^{3}$ + மநிந் = உ 0 த்$^{3}$ + மந் = 'ஒத்மந்' ('ந்' கெடுதல், 'குண'மாதல் விதிக்குப் புறம்பானவை)

4) ப்ர + ஸ்ரந்த் + க$^{4}$ஞ் = ப்ரஸ்ரத ('ந்' கெடுதல், விருத்தியாகாதது, விதிக்குப் புறம்பானவை)

5) ஹிம + ஸ்ரந்த$^{2}$ + க$^{4}$ஞ் = ஹிமஸ்ரத ('க$^{4}$ஞ்' ஒட்டு 'ஸ்ரந்த்$^{2}$' ஒடு வருதல் விதிப்படியல்ல) "பனி உருக்குதல்"

**6.4.30** நாஞ்சே: பூஜாயாம்

"மரியாதை செய்" (பூஜா) என்ற பொருளைச் சுட்டும்போது 'அஞ்ச்' இன் மூக்கொலி ('க்' அல்லது 'ங்' இத்தாகக் கொண்ட ஒட் டுக்கள் அல்லது மெய்யை முதலாகக் கொண்ட வொட்டுக்கள் ஆகி யவைகளுக்கு முன் நிற்கும்போது) கெடாது.

அஞ்ச் + க்த (7.2.53) = அஞ்சித் 'மரியாதை செய்யப்பட்ட' ஆனால் உத் + அஞ்ச் + க்த = உத$^{3}$க்த (8.2.30) "தூக்கிய"

**6.4.31** க்த்வி ஸ்கந்தி$^{3}$ ஸ்யந்த்$^{3}$யோ:

ஸ்கந்த்$^{3}$ 'குதி' ஸ்யந்த்$^{3}$ ஆகியவைகளின் மூக்கொலி 'க்த்வா' ஒட்டுத் தொடரும்போது கெடாது.

1) ஸ்கந்த்$^{3}$ + க்த்வா = ஸ்கந்த்–த்வா (8.4.55) 'குதித்து, பாய்ந்து'

2) ஸ்யந்த்$^{3}$ + க்த்வா = ஸ்யந்த்–த்வா அல்லது ஸ்யந்தி$^{3}$த்வா (7.2.44) 'ஒழுகி', ஒடி' தாது பாடத்தில் 'ஊ', 'ஸ்யந்த்$^{3}$' ஒடு குறிப்பிடப்படும் போது, அத்தாதுவுடன் 'இட்' இணைக்கப்படும் (ஸ்யந்தி) 'இட் இணைத்தால் 'க்த்வா' ஒரு 'கித்' தாகாது (பார்க்க 1.2.18) ஆகவே 'ந்' கெடாது. ஏனென்றால் 'லோப'த்தை விதிக்கும் விதி இதில் செயற்படாது.

**6.4.32** ஜாந்த ந'ஸாம் விப$^{4}$ாஷா

'க்த்வா'வுக்கு முன் நிற்கும் 'ஜ்' ஈற்று அடிச்சொல், 'நஸ்' (மறை) ஆகியவைகளின் மூக்கொலி விருப்பாக கெடாது.

ரஞ்ஜ் + க்த்வா = ரங்க்த்வா, அல்லது ர 0 க்த்வா = ரக்த்வா 'சாயமேற்றி' ப$^{4}$ங்க்த்வா, ப$^{4}$க்த்வா: (ப$^{4}$ஞ்ஜ்)

நஸ்$^{1}$ + க்த்வா = ந–நும்–ங் + க்த்வா (7.1.60) நம்ஷ்ட்வா, நஷ்ட்வா (8.2.36;4.41)'இட்' இணைக்கப்படும்போது – 'நஸித்வா' 'மறைந்து'

**6.4.33** ப$^{4}$ஞ்ஜேஸ்$^{1}$ ச சிணி

'சின்' ஒட்டுக்கு முன் நிற்கும் ப$^{4}$ஞ்ஜ் 'உடை' இன் மூக்கொலி விருப்பாகக்

கெடாது.
அட் + ப[4]ஞ்ஜ் + சின் (3.1.66) = அப[4]ஞ்சி/அப[4]ாஜி "உடைக்கப்பட்டது" இது ஒரு அப்ராப்த விப[4]ாஷா

**6.4.34** ஸாஸ இத[3]ங்ஹலோ;
'அங்'(Aorist)ஒட்டு, 'க்' அல்லது 'ங்'ஐ 'இத்'தாகக் கொண்ட ஒரு மெய்யில் தொடங்கும் ஒட்டுக்கள் ஆகியவைகளுக்கு முன் நிற்கும் ஸாஸ் 'கற்பி' என்ற வினையடியினீயிருக்குப் பதிலியாக 'இ' வரும்.
ஸாஸ் + லுங் = ஸாஸ் + ச்லி (3.1.43) = அட் + ஸிஸ் + அங் + த் (3.1.56) = அஸிஷத் (8.3.60) 'கற்பித்திருக்கிறான்'
கிதி – ஸாஸ் + க்த = ஸிஷ்ட (8.3.60, 4.41) 'கற்பித்த'
ஙிதி – ஆவாம் ஸிஷ்வ: வயம் ஸிஷ்ம;
ஆனால் ஸாஸ் + 0 + திப் = ஸாஸ்தி

வா: க்வெள ச ஸாஸ இத்வம் ப[4]வதீதி வக்தவ்யம் 'க்வி' ஒட்டுக்கு முன் நிற்கும் 'ஸ்ஸ்' இன் உயிரெழுத்துக்குப் பதிலியாக 'இ' வரும்.
ஸாஸ் + க்லி = ஸிஸ் + 0 = ஸிர் + 0 = ஸ்: (குறில் 'இ', 8.2.76 இனால் நெடில் 'ஈ' ஆகும்) ஆர்யஸு: ஆர்யான் ஸாஸ்தி, மித்ரஸு:
இங்கு குறிப்பிடப்பட்டிருக்கும் ஸாஸ், 'அத[3]ாதி' வகுப்பைச் சேர்ந் தது. (ஸஸ் அனுஸிஷ்டௌ) ப[4]வாதி[3] வகுப்பைச் சேர்ந்ததல்ல. ஆங் ஸாஸு இச்சாயாம்) ஆகவே, ஆஸாஸ்தே ஆஸ்ாஸ்யமான: இங்கு 'இ' வராது.
வா: க்விப் ப்ரத்யயே து தஸ்யாபி ப[4]வதீதி வக்தவ்யம் 'க்விப்' ஒட் டுக்கு முன் நிற்கும் இந்த 'ஸாஸ்' இன் உயிரெழுத்துக்குப் பதிலியாகவும் 'இ' வரும்.
ஆஸு:. ஆ'ஸிஷௌ, ஆஸிஷ: அல்லது பாணினியால் நிபாதனம் என்று கூறப்பட்ட க்ஷியாஸீ: (8.2.104) என்பதில் போல் விதிக்குப் புறம்பானதாகும்.

**6.4.35** ஸாஹௌ
'ஹி' (ஏவல் வினையொட்டு) க்கு முன் நிற்கும் 'ஸாஸ்' உக்குப் பதிலியாக 'ஸா' வரும். ஸாஸ் + ஹி = ஸா – தி[4] (6.4.22:101) 'கற்பி', அனுஸாதி[4], ப்ரஸாதி4 6.4.34, 3.4.87–88 அபித்/பித் போன்ற கட்டுப்பாடுகள் இங்கு செயல்படாது.

**6.4.36** ஹந்தேர் ஜ:
'ஹி' ஒட்டுக்கு முன் நிற்கும் 'ஹன்' (கொள்) உக்குப் பதிலியாக 'ஜ' வரும்.
ஹன் ஹி ஜஹி 'கொல்லு, அடி, காயப்படுத்து'
கீழே 105இல் கூறப்பட்ட 'ஹி' கெடுதல் அதிகார சூத்திரமான 22 இனால் தடுக்கப்படும்.

**6.4.37** அனுத[3]ாத்தோப தே[3]ஸ வனதிதநோத்யாதீ[3]னாமது நாஸிக லோபோ ஜ[2]லிக்ஙிதி

'ஜ²ல்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த 'க்' அல்லது 'ங்'ஐ 'இத்'தாகக் கொண்ட ஒரு மெய்யை முதலாகக் கொண்ட ஒட்டுக்கு முன் நிற்கும், தாது பாடத்தில் அநுதாத்த சுரத்தோடு குறிப்பிடப்பட்டிருக்கும் (அனுத³ாத்தோபதே³ஸ) வினையடியின் மூக்கொலி, வன் 'விரும்பு', தாது, தன் 'விரிவாக்கு' வகுப்பைச் சேர்ந்த தாதுக்கள் ஆகியவற்றின் மூக்கொலிகள் கெடும் (அலுநாஸிகலோப)

1. யம் 'அடக்கு' (1.1033), ரம் 'விளையாடு' (13906), நம் 'குனி, வணங்கு' (1.1030),க³ம் 'போ' (1.1031), ஹன் 'கொல், அடி' (2.2), மன் 'நினை' (4.67) ஆகியவைகளில் தாதுபாடத்தில் மூக்கொலியை யீறாகக் கொண்ட தாதுக்களாகக் கொடுக்கப்பட்டவை.

யம் + க்த = யத, ரத, நத, க³த, ஹத, மத,

2) வந் + க்தின் = வ θ— தி = வதி "விருப்பம்" ஆனால் வந் + க்திச் = வந்தி

3) தந் + க்த = த θ – த = தத 'விரிவாக்கிய' தந் + லுங் = தந் + ஸிச் + த (3.1.44) = அட் + தந் + டி + த (2.4.79) = அதத க்ஷணு–க்ஷத:, ருணு - ரு¹த: த்ரு¹ணு – த்ரு¹த: க்³ரு¹ணு–க்³ரு¹த: வநு–வத:, மநு–மத:, ஆனால் ஸா¹ந்த:, தாந்த: த³ாந்த: இவைகளின் வினையடியான முறையே ஸ1ம், தம், த3ம் ஆகியவைகள் தாதுபாடத்தில் அநுதாத்த சுரங்கொண்டதாகக் கொடுக்கப்படவில்லை.

**6.4.38** லா ல்யபி

மேற்சூத்திரத்தில் கூறப்பட்ட தாதுக்களின் மூக்கொலி அத்தாதுக்களைத் தொடர்ந்து 'ல்யபி' வரும்போது, விருப்பாகக் கெடும்.

இது ஒரு வ்ய வஸ்தி²த விப⁴ாஷா அதனால் 'ம' வீற்றுச் சொற்களின் மூக்கொலி கெடுதல் விருப்பாகும். மற்ற இடங்களில் அது கட்டாயமாகும்.

1. ப்ர + ய ம் + ல்யப் = ப்ர + ய θ + துக் + ய = ப்ரயத்ய, அல்லது ப்ரயம்ய ப்ரரத்ய, ப்ரரம்ய, ப்ரணத்ய, ப்ரணம்ய, ஆக³த்ய, ஆக³ம்ய

2) ஆ + ஹன் +ல்யப் = ஆ + ஹθ + துக் + ய = ஆஹத்ய, ப்ரமத்ய, ப்ரவத்3ய, ப்ரக்ஷத்ய

**6.4.39** நக்திசி தீ³ர்க⁴ஸ்'ச 'க்திச்' ஒட்டுக்குமுன் மேலே கூறிய தாதுக்கள் நிற்கும்போது, அவைகளின் மூக்கொலியும் கெடாது. தாதுக்களின் உயிரும் நெடிலாகாது. யம் + க்திச் = யந் + தி (8.4.58) = யந்தி 'அடக்கம்', வந்தி, "விருப்பம்", தந்தி "விரிவு" மூக்கொலி கெடாவிட்டால், உயிர் நெடிலாகியிருக்கும் (பார்க்க 6 .4.15) அதையும் இச்சூத்திரம் தடை செய்கிறது.

**6.4.40** க³ம: க்வௌ

'க்வி' ஒட்டுக்கு முன் நிற்கும் 'க3ம்' தாதுவின் மூக்கொலி கட்டாயமாகக் கெடும்.

அத்⁴வானம் க³ச்ச²தி = அத்⁴வன் + θ + க³ம் + க்விப் = அத்⁴வ θ + கθ + க்விப் (8.2.7) அத்⁴வ க³த் 'பிரயாணி', கலிங்க³க³த்

வா: க$^3$மாதீ$^3$னாமிதி வக்தவ்யம்
'க$^3$ம்' முதலியவைகளின் மூக்கொலி கெடும்.
ஸம்யத், பரீதத்
வா: ஊ ச க$^3$மாதீ$^3$னாமிதி, வக்தவ்யம்
'ஊங்'க்கு முன் நிற்கும் 'க$^3$ம்' முதலியவைகளின் மூக்கொலி கெடும்
அக்$^3$ரேக்ஷ$^3$:, அக்$^3$ரேப்$^4$ரு:,

**6.4.41** விட்$^3$வநோர நுநாஸிகஸ்யாத்

மூக்கொலியை யீறாகக் கொண்ட சொற்களை 'விட்' அல்லது 'வன்' ஒட்டுத் தொடரும்போது, அச்சொற்களின் மூக்கொலிக்குப் பதிலியாக 'ஆ' கட்டாயமாக வரும்.

1) அப்ஸு ஜாயதே = அப் + ஜன் + விட் (3.2.67) = அப்–ஜ–ஆ + θ (6.1.67 ) = அப்$^3$ஜா (8.1.53) "நீரில் பிறந்த": க$^3$ாம் ஸநோதி = கே$^3$ாஷா "மாடுகளையளிப்பவன்", த$^3$தி$^4$ க்ராமதி = த$^3$தி$^4$க்ரா "ஒரு கடவுளின் பெயர்": அக்$^3$ரே க$^3$ச்ச$^2$தி = அக்$^3$ரே + க$^3$ம் + விட் = அக்$^3$ரேக$^3$ா "தலைவன்"

2)விஜாயதே = வி–ஜன் + வநிப் (3.2.75) = விஜாவன் "பிறந்த"

**6.4.42** ஜன ஸன கனாம் ஸஞ்ஜ$^2$லோ:

"ஸன்" ஒட்டு, "ஜ$^2$ல்" பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்தில் தொடங்கும் ஒட்டுக்கள் ஆகியவைகளுக்கு முன் நிற்கும் ஜன் "பிற", உண்டாகு", ஸன் 'அடை, கொடு', க$^2$ன் 'கொத்து' ஆகியவைகளின் மூக்கொலிக்குப் பதிலியாக 'ஆ' வரும்.

ஸன் + ஸன் ஒட்டு + ஸ$^1$ப் + திப் = ஸி–ஸன் + ஸன் + ஸ1ப் + திப் (6.1.9;7.4.60,79) =ஸி – ஸ – ஆ + ஸ + அ + தி (8.3.59) = ஸிஷாஸதி (6.1.97) 'இ' இணைக்கப்படும், போது ஸி'னிஷதி (7.2.49) ஜன் = ஜாத :, ஜாதி: கன் – க$^2$ாத: க$^2$ாதி: 'ஸன்' இணைக்கப்படும்போது, ஜன், க$^2$ன் ஆகியவைகள், மெய்யெழுத்தை முதலாகக் கொள்ளாமல் 'இட்' ஆகமத்தோடு வரும். ஆகையால் அவைகளின் மூக்கொலி கெடாது. காட்டாக ஜிஜனிஷதி. சிக$^2$னிஷதி 'ஸன்' தாது விருப்பாக 'ஸேட்' (7.2.40) ஆகும். ஆகையால், 'ன்' ஒட்டு இத்தாதுவுக்கு மட்டுந்தான் மற்ற இரண்டு தாதுக்களும் கட்டாயமாக 'இட்'டோடுதான் வரும்.

**6.4.43** யே விப$^4$ாஷா

'க்' அல்லது 'ங்'ஐ 'இத்'தாகக் கொண்ட 'ய'வில்
தொடங்கும் ஒட்டுக்களுக்கு முன் நிற்கும் 'ஜன்' ஸன். கன்' ஆகியவைகளின் மூக்கொலிக்கு விருப்பாக 'ஆ' பதிலியாகும். ஜன் + யக் + தே = ஜ – ஆ – ய – தே >ஜாயதே, ஜன்யதே ஆனால் ஜன் + ஸ்'யன் + தே ஜாயதே (7.3.79) ஜன் + யங் + தே >ஜ–ஜ–ஆ–ய–அ–தே = ஜா ஜாயதே (6.11.97;7.4.83)அல்லது ஜன் ஜன்யதே (7.4.85) ஸாயதே, ஸன்யதே; ஸாஸாயதே, ஸன்ஸன்யதே (8.3.24) க$^2$ாயதே, க$^2$ன்யதே; சாக$^2$ாயதே, சங்க$^2$ன்யதே

**6.4.44** தனோதேர் யகி

'யக்' ஒட்டுக்கு முன் நிற்கும் 'தன்' இன் மூக்கொலிக்கு 'ஆ' விருப்பாகப் பதிலியாகும். தன் + யக் + தே + த–ஆ–ய–தே தாயதே, தன்யதே ஆனால் தன் தன்யதே

**6.4.45** ஸன: க்திசி லோபஸ்'சாஸ்யான்ய தரஸ்யாம்

'க்திச்'உக்கு முன் நிற்கும் 'ஸன்' தாதுவின், மூக்கொலிக்கு 'ஆ' விருப்பாகப் பதிலியாகும். மூக்கொலி கெடுதலும் விருப்பாகும்.

ஸன் + க்திச் = ஸந்தி, ஸ–ஆ தி + ஸாதி, = ஸ0 + தி = ஸதி ஸாதி, ஸதி ஸந்தி என்ற மூன்று வடிவங்கள் இத்தாதுவிலிருந்து ஆக்கப்படும்.

**6.4.46** ஆர்த⁴ த⁴ாதுகே

'ஆர்த⁴த⁴ாதுக' எனப்படும் ஒட்டுக்களுக்கு முன் இச்சூத்திரத்திலிருந்து தொடங்கி 6.4.69 வரையில், ஆர்த⁴த⁴ாதுகே (3.4.114) முதலியவை) என்ற சொல் அனுவிருத்தியாகும். இது ஒரு அதிகார சூத்திரம்.

**6.4.47** ப்⁴ரஸ்ஜோ ரோபத⁴யோ ரமன்யதரஸ்யாம்

ப்⁴ரஸ்ஜ 'வறு' என்ற வினையடியின் 'ர' ஈற்றயலான 'ஸ்' ஆகிய இரண்டுக்கும், அவ்வினையடியைத் தொடர்ந்து ஆர்த⁴த⁴ாதுக வொட்டு நிற்கும்போது 'ரம்' விருப்பாகப் பதிலியாகம்.

ப்⁴ரஸ்ஜ் + துமுன் = ப்⁴ரஜ்ஜ் + துமுன் (8.4.40, 53) = ப்⁴0 – அ + ரம்–0–ஜ் + தும் = ப⁴ர்ஷ்டும், ப்ரஜ்தும் = ப்⁴ரஷ்டும் (8.2.36;4.41) ப்⁴ரஸ்ஜ் + த்ருன்/தவ்ய = ப⁴ர்ஷ்ட்ரு, ப்⁴ரஷ்ட்ரு, ப⁴ர்ஷ்டவ்ய, ப்⁴ரஷ்டவ்ய.

**6.4.48** அதோ லோப:

ஆர்த⁴த⁴ாதுகவொட்டுக்கள் தொடரும்போது, அதற்கு முன்னால் நிற்கும் வினையடியினிறுதி 'அ' (அத்) கெடும்.

க்ரு + ஸன் + துமுன் = க்ரு + ஸன் + இட் + தும் = சி–கீர்–ஷ–இ – தும் = சிகீர்–ஷ0–இ–தும் = சிகீர்ஷிதும் ''செய்ய விரும்பும்'' தி⁴ன்வ் + உ (3.1.80) = தி⁴ன் + அ– + உ = தி⁴ன் + 0 + உ = தி⁴னு + தஸ் = தி⁴னுத:

வா: வ்ருத்³தி⁴ ³தீர்க⁴ாப்⁴யாம தோ லோப: பூர்வ விப்ரதிஷேதே4ன.

விருத்தியாதல், உயிர்நீட்டம் ஆகியவைகளை விதிக்கும் தொடர்ந்து வரும் விதிகளைத் தள்ளுபடி செய்தவிட்டு, 'அ' கெடும்.

க்ரு + ஸன் + ண்வுல் = சி–கீர்–ஷ + ண்வுல் = சி–கீர்–ஷ்–அக = சிகீர்ஷக "செய்ய விரும்புவன்'' (7.2.115க்குத் தடை); க்ரு + ஸன் + யக் + தே = சி–கீர்–ஷ–ய–தே = சி–கீர்–ஷ்–ய–தே = சிகீர்ஷ்யதே (7.4.1 ஐ தடுக்கிறது.

**6.4.49** யஸ்ய ஹல:

ஒரு மெய்யெழுத்தைத் தொடர்ந்து 'ய' ஈறாக வரும் ஒரு வினையடி

ஒரு ஆர்$^4$த$^4$ாதுகவொட்டுக்கு முன் நிற்கும்போது, இறுதி 'ய' கெடும். பி$^4$த்$^3$ + யங் + இட் + துமுன் = பே$^3$–பி$^4$த்$^3$–ய + இ–தும் = பே$^3$–பி$^4$த்$^3$–00–இ–தும் = பே$^3$பி$^4$தி$^3$தும் 'அடிக்கடி உடைக்க பே$^3$பி$^4$தி$^3$த்வய "அடிக்கடி உடைக்க வேண்டும்" இந்த விதி 'ய' என்ற அசையைப் பற்றியது. ஆகையால், ஈர்ஷ்ய், மவ்ய் ஆகியவைகளில் இதைப் பயன்படுத்த இயலாது. ஈர்ஷ்யிதும் மவ்யிதும், லோலயிதும் (–லூ 'வெட்டு') என்பதில், இந்த விதி செயற்படாது. ஏனென்றால் ஒரு மெய்யெழுத்துக்குப்பின் வரும் 'ய' என்று சூத்திரம் கூறுகிறது.

**6.4.50** க்யஸ்ய விப$^4$ாஷா

'க்ய' ஒட்டாலாக்கப்பட்ட அடி சொல்லின் ஈறாக 'ய', ஒரு மெய்க்குப் பின்னும், ஆர்த$^4$த$^4$ாதுக ஒட்டுக்கு முன்னும் நிற்கும்போது, விருப்பாகக் கெடும்.

க்ய, க்யச், க்யங் ஸம்–இத்$^4$ + க்யச் (3.1.8) + இட் + துமுன் >ஸமித்$^4$ய + இ + தும் = ஸமித்$^4$யினும் (6.4.48) அல்லது ஸமித்$^4$θ – இ + தும் = ஸமிதி$^4$தும் ஸமித்$^4$ + க்யங் + இட் + துமுன் = ஸமித்$^4$ – ய் – இ + தும் = ஸமித்4யிதும், அல்லது ஸமிதி$^4$தும்

**6.4.51** ணேரனிடி$^1$

'ணி' ஒட்டிணைத்தாக்கப்பட்ட வினையடியின் (இயக்குவினை) 'இ', 'இட்' அல்லது ஆர்த$^4$தாதுக ஒட்டுக்களுக்கு முன் நிற்கும்போது கெடும்.

1) தக்ஷ் + ணிச் + லுங் = தக்ஷ் – இ + சங் (3.1.48) + த் = அட் (6.4.71) த க்ஷ் + இ + சங் + த் = அத–தக்ஷ் + இ + அ + த் = (6.1.11;7.4.60) = அத தக்ஷ் + θ – அ – த் = அததக்ஷத் இது 6.4.77 இல் விதிக்கப்பட்ட 'இயங்க்குப் புறனடை)

2) அட் + ணி + லுங் = அட் (6.4.72) + அ–டி–டி (6.1.2) சங் + த் = ஆடி–ட் 0 அ–த் = ஆடிடத் (இது 6.4.82இல் விதிக்கப்பட்ட 'யண்' உக்குப்புற னடை)

3) க்ரு + ணிச் + ல்யட் + டாப் = கார் – இ + அன + ஆ = கார் – θ அனா = காரண 'தூண்டுதல்' (இது 7.3.84 இல் விதிக்கப்பட்ட 'குண' த்துக்குப் புறனடை)

4)க்ரு + ணிச் + ணிவுல் = கார் – இ + அக = கார் – θ – அக = காரக 'தூண்டுபவன், இயக்குபவன்' (ண்வுல் ஒட்டின் 'ண்'ஆல் கிடைக்கப்பெறும் விருத்திக்குப் புறனடை (7.2.115)

ஆர்த4த4ாதுகவொட்டுக்கு முன் நிற்கும்போது, இறுதி 'ய' கெடும்.

பி4த்3 + யங் + இட் + துமுன் = பே3–பி4த்3–ய + இ–தும் = பே3–பி4த்3–00–இ–தும் = பே3பி4தி3தும் 'அடிக்கடி உடைக்க' பே3பி4தி3தவ்ய "அடிக்கடி உடைக்க வேண்டும்" இந்த விதி 'ய' என்ற அசையைப் பற்றியது. ஆகையால், ஈர்ஷ்ய், மவ்ய் ஆகியவைகளில் இதைப் பயன்படுத்த இயலாது. ஈர்ஷ்யிதும்,

**6.4.52** நிஷ்டாயாம் ஸேடி

நிஷ்டா (க்த, க்தவது) ஒட்டுக்கள் என்ற ஸம்க்ஞாவினால் குறிப்பிடப்படும் ஆர்த$^4$ த$^4$ாதுக ஒட்டுக்களுக்கு முன் நிற்கும் இயக்கு வினையின் 'ணி' ஒட்டு

நிஷ்டா, வொட்டுக்கள் 'இட்'டோடு வரும்போது கெடும்.

க்ரு + ணிச் + க்த = கார + இ + இட் + க்த = கார் – θ – இ –த = காரித 'செய்வி'

ஆனால், க்ரு + ணிச் + இட் + துமுன் = கார் – ஏ – இ – தும் = காரயிதும் 'செய்யவை'

**6.4.53** ஜனிதா மந்த்ரே

(வேதத்தின்) மந்திரப் பகுதியில் ஜனிதா என்ற விதிக்குப்புறம்பாக ஆக்கப்பட்ட சொல் காணப்படுகிறது.

'ஸேட்'டோடு இணைந்த ஆர்த[4]த[4]ாதுகவொர்ட்டுக்களுக்குமுன் நிற்கும் 'ஜன்' தாதுவோடு வரும் 'ணிச்' ஒட்டு கெடும், ஜனித்து என்ற வி திப்படியமையாத சொல் மந்திரப் பகுதியில் காணப்படும்.

யோ ந: பிதா ஜனிதா (இருக்குவேதம்) 10.82.3)

ஜன் + ணிச் + இட் + த்ருச் + ஸு = ஜன் + θ – இ – த்ரு + ஸு = ஜனிதா (7.1.94,6.4.11) மற்ற இடங்களில் ஜனயிதா.

**6.4.54** ஸ'மிதா யக்[3]ஞே

'ஸ'மிதா' என்ற சொல், 'இட்'டோடு சேர்ந்தவொரு ஆர்த[4] தாதுகவொட்டுக்கு முன் நிற்கும் 'ணி' கெடுவதால் ஆக்கப்பட்ட நிபாதனமாகும். இச்சொல், 'வேள்வியின் ஒரு செயல்' என்ற பொருளைச் சுட்டும். ஸ்'ரு' – தம் ஹவி: ஸமித:

ஸ'ம் + ணிச் + இட் + த்ரு'ச் + ஸு = ஸமிதா. வேள்விக்குரிய மாமிசத்தைச் செதுக்குபவன்

ஆனால் ஸ்'ருதம் ஸ'மயித: (ஸப்3ரா. 3.8.3 4;5) (வேள்வியின் செயல் அல்ல)

**6.4.55** அயாமந்தால் வாய்யேத்து இஷ்ணுஷு

'ஆர்த[4] த[4]ாதுக', 'க்ருத்' ஒட்டுக்களான ஆம், – அந்த, – ஆலு, ஆய்ய, – இந்து, இஷ்ணுச், கிஷ்ணுச், ஆகியவைகளுக்கு முன் நிற்கும் 'ணி'க்குப் பதிலியாக 'அய்' வரும்.

1) ஆம் – க்ரு' + ணிச் + ஆம் + ச – கார (3.1.35, 40) = கார் – இ + ஆம் ச – கார = கார் – அய் – ஆம் சகார = காரயாம் ச – கார 'செய்வித்தான்' அல்லது கார் – ஏ + ஆம் + சகார = காரயாம் சகார.

2) அந்த = மந்த்[3] + ணிச் + அந்த = மந்த்[3] – இ – + அந்த = மந்த் அய் + அந்த = மந்த[3]யந்த – 'நகை'

3) ஆலுச் – ஸ்ப்ரு'ஹ் + ணிச் + ஆலுச் = ஸ்ப்ருஹயாலு 'விரும்பு'

4) ஆய்ய – ஸ்ப்ரு'ஹ் + ணிச் + ஆய்ய = ஸ்ப்ருஹயாய்ய

5) இத்னு – ஸ்தன + ணிச் + இத்நு = ஸ்தனயித்னு 'இடி'

6) இஷ்ணு – பார + ணிச் + இஷ்ணு = பார் θ – அய் – இஷ்ணு பாரயிஷ்ணு 'அக்கரையில் சேர்ப்பவன்' இச்சூத்திரம் இல்லாவிட்ட ாலும் 'ணி'யின் 'இ', 'ருண' எழுத்து 'ஏ'யாக மாறி புணர்ச்சி விதியி ன்படி இவ்வொட்டுகளுக்கு முன் 'அய்' ஆகிருக்கும். ஆயினும். தொடர்ந்து வரும் சூத்திரங்களுக்காக

இங்கே இவ்விதியமைக்கப்பட்டிருக்கிறது.

**6.4.56** ல்யபி லகு⁴பூர்வாத்

'லகு' அசையைத் தொடர்ந்து வரும் 'ணி'க்குப்பின் ஆர்த⁴த⁴ாதுகவொட்டான 'ல்யப்' வரும்போது 'ணிக்கு'க்குப் பதிலியாக 'அய்' வரும். ப்ர + நம் + ணிச் + ல்யப் = ப்ர + ணம் + அய் – ய = ப்ரணமய்ய "வணங்கச் செய்து விட்டு". இவ்வினையடி ஒரு 'மித்'தாவதால் 7.2.115, இங்கு செயற்படாமல் சூ.92 தடுக்கிறது. ஆனால் ப்ர + பத் + ணிச் + ல்யப் = ப்ர + பாத் + θ + ய = ப்ரபாத்ய (51) 'கீழே விழவைத்துவிட்டு, அதாவது கீழே தள்ளிவிட்டு"

**6.4.57** விப⁴ாஷா ஆப;

ஆர்த⁴ த⁴ாதுகவொட்டான 'ல்யப்'புக்கு முன் நிற்கும் ஆப் 'அடை' தாதுவோடு வரும் 'ணிச்'உக்கு 'அய்' விருப்பாகப் பதிலியாகும். ப்ர + அப் + ணிச் + ல்யப் = ப்ராப் – அய் – ய ப்ராபய்ய அல்லது ப்ராப் + θ + ய = ப்ராப்ய "அடைய வைத்துவிட்டு, ஆயினும், 'இங்' இன் பதிலியாக வரும் 'ஆப்'புக்கு இந்த விதி பயன்படுத்த முடியாது. அத்⁴யாப்ய (6.1.48; 7.3.36)

**6.4.58** யுப்லுவோர் தீ³ர்க⁴ஸ்¹ ச²ந்த³ஸி

வேத மொழியில் யு 'கல', ப்லு 'மித' என்ற தாதுக்களுக்களினீற்றுக்குப் பதிலியாக அவைகளின் நெடில், அவ்வினையடிகளைத் தொடர்ந்து ஆர்த்⁴த⁴ாதுகவொட்டான 'ல்யப்' நிற்கும்போது வரும்.

த³ந்தி அனு பூர்வம் வியூய் (ரு. வே. 10.131.2) யத்ரா யோ த³க்ஷிணா பரிப்லூய (கட. 25.3) ஆனால் பேச்சு மொழியில் ஸம்யுத்ய, ஆப்லுத்ய (6:1.71)

**6.4.59** க்ஷிய:

'ல்யப்' ஒட்டுக்கு முன் நிற்கும் க்ஷி, 'அழி' அல்லது 'வசி' என்ற தாதுவின் இறுதி 'இ' நெடிலாகும்.

ப்ர + க்ஷி + ல்யப் = ப்ர + க்ஷீ – ய = ப்ரக்ஷீய 'அழித்து விட்டு' அல்லது 'வசித்துவிட்டு'

**6.4.60** நிஷ்டாயாமண்யத³ர்தே

'ண்யத்' ஒட்டின் பொருளைச் சுட்டாமல் அமையும் நிஷ்டா (க்த,க்தவது) எனப்படும் ஆர்த⁴தாதுக வொட்டுக்கு முன் நிற்கும் 'ஷி'யின் ஈறு நெடிலாகும். 'ண்யத்' ஒட்டு செயப்பாட்டு வினையையோ, 'பாவே' (Impersonal) எனப்படும் வினையையோ கொண்ட வாக்கியத்தைச் சுட்டும். "அதைத் தவிர்த்த" என்ற சூத்திரம் குறிப்பிடுவதால் இங்கு செய்வினை வாக்கியத்தைக் குறிக்கும். ஆ + க்ஷி + க்த = ஆக்ஷீண (8.2.46; 4.2) பரிக்ஷீண 'மறைந்த', ப்ரக்ஷீண 'அழிந்த, ஆனால் க்ஷித (செயப்பாட்டு வினை, ப⁴ாவே)

**6.4.61** வா ஆக்ரோஸ¹ தை³ன்யயோ:

மேலே கூறிய சூழலில், 'க்ஷி'யினீறு 'நிந்தனை', அல்லது 'இரக்கம்' என்ற பொருளைச் சுட்டும்போது விருப்பாக நெடிலாகும்.

1) ஆக்ரோரோஸே' – க்ஷிதாயு: அல்லது க்ஷீணாயு: ஏதி[4] "உனது வாழ்வு துக்ககரமானதாகட்டும்" (சாபம்)

2) தை[3]ன்ய – க்ஷித; அல்லது க்ஷீண: அயம் தபஸ்வீ 'பரிதாபம், இந்தத் துறவி இளைத்துவிட்டான்' இப்பொருட்களைச் சுட்டாவிட்டால் க்ஷீண: சந்த்3ர:

**6.4.62** ஸ்யஸிச் ஸியுட்தாஸிஷு ப[4]ாவ கர்மணோருபதே[3]ஸ
அஜ்ஜ[2]ன க்[3]ரஹ த்[3]ரு'ஸ'ாம் வா சிண்வதி[3]ட் ச

ஸ்ய (முதல் எதிர்காலம் ). ஸிச், (Aorist) ஸீயுட் ( ), தாஸி (2ஆம் எதிர்காலம்) ஆகியவைகள் ப[4]ாவே (Impersonal)ஆகவோ அல்லது செயப்பாட்டு வினையாகவோ பயன்படுத்தும்போது, அவைகளுக்கு முன் நிற்கும், தாது பாடத்தில் குறிப்பிட்ட (உபதே[3]ஸே) உயிரீற்று வினைகளும், ஹன், க்[3]ரஸ் த்[3]ரு'ஸ்' என்ற வினைகளும் விருப்பாக 'சின்' போன்று (படர்க்கை செயப்பாட்டு வினை) கருதப்படும். அவ்வாறு கருதப்படும்போது அவைகளுடன் 'இட்' (ஆகமம்) வரும்.

1) சி + ஸ்ய (3.1.33) + தே, சாய் + இட் + ஸ்ய + தே (7.2.115) = சே ஷ்ய – தே, அசாய் – இθ – (6.4.104) = அசாயி போன்றது. அ + சி + ஸிச் + ஆதாம், அ + சி + இட் + ஸிச் + ஆதாம் =
அசேஷாதாம்/அசாயிஷதாம்;
சேஷிஷ்ட/சாயிஷீ ஷ்ட,
சேதாஸ்மி/சாயிதாஸ்மி
ஸ்ய, தாஸி (3.1.33), ஸிச் (3.1.44), ஸீயுட் (3.4.102)

2) ஹனிஷ்யதே/க[4]ானிஷ்யதே
அட் + ஹன் + சின் = அ – க[4]ானி (7.4.54)
அ – ஹθ – ஸ் – தாம் = அஹ'ாதாம்/அக[4]ானிஷாதாம்;
வதி[4]ஷீஷ்ட/க[4]ானிஷீஷ்ட, ஹந்தாஸ்மி/க[4]விதாஸ்மி

3) க்[3]ரஹீஷ்யதே/க்[3]ராஹிஷ்யதே அட் + க்[3]ரஹ் + சின் = அக்[3]ராஹி;
அக்[3]ரஹீஷ்டாம்/அக்[3]ரஹீஷாதாம்;
க்[3]ரஹீஷ்ட; க்[3]ராஹிஷீஷ்ட:
க்[3]ரஹீதாஸ்மி/க்[3]ராஹிதாஸ்மி.

7.2.35 விதிக்கப்பட்ட 'இட்' இணைக்கப்பட்ட சொல்லில் தான் 7.2.37 செயற்படும், இந்த சூத்திரத்தினால் விதிக்கப்பட்டதில் அல்ல

4) த்[3]ரக்ஷ்யதே/த்[3]ர்ஸிஷ்யதே
அட் + த்[3]ருஸ்' + சின் + த = அ – த[3]ர்ஸ்' – இ – θ = அத[3]ர்ஸி
அத்[3]ருக்ஷாதாம்/அத[3]ர்ஸி'ஷாதாம்;
த்[3]ரு'க்ஷீஷ்ட/த[3]ர்ஸி'ஷீஷ்ட
த்[3]ரஷ்டாஸ்மி/த[3]ர்ஷ்டாஸ்மி

2.4.42-43 விதிக்கப்பட்ட 'ஹன்'இன் பதிலிகள், 'இங்' 'போ'இன் பதிலிகள் (2.4.5); இங் 'வாசி, படி' இன் பதிலிகள் (2.4.48–50) ஆகியவைகளில்

விதிக்கப்பட்டவைகள், இவ்வினையடிகளில் செயற்படாமல், இச்சூத்திரம் தடுக்கிறது. ஏனென்றால், இச்சூத்திரம் 6.4.1 அதிகார விதிக்குட்பட்டது. ஆகவே அதனால் விதிக்கப்பட்டதின் தொடர்ச்சியே இச்சூத்திரம்.

**6.4.63** த³யோ யுட³சி க்ஙிதி

தீங் 'அழி' என்ற வினையடிக்குப்பின் 'க்' அல்லது 'ங்'ஐ 'இத்'தாகக் கொண்ட உயிரெழுத்தை முதலாகக் கொண்ட ஆர்த⁴த⁴ாதுக ஒட் டு நிற்கும்போது, அவ்வொட்டுக்கு முன் 'யுட்' (ஆகமம்) ஆகும்.

உப + த்³ + லிட் + ஏஸ்¹ (3.4.91) = உப – தி³

தீ³ + ஏண்¹ (6.1.8:7.4.59) = உப – தி³ – தீ + யுட் + ஏஸ்¹ = உபதி³தீயே ஸ் (ஏஸ்¹ ஒரு 'கித்'தாகும் பார்க்க 1.2.5) உபதி³ தீ³யாதே, உபதி³தீயிரே

**6.4.64** ஆதோ லோப இடி ச

('க்' அல்லது 'ங்'ஐ 'இத்'தாகக் கொண்ட உயிரெழுத்தில் தொடங் கும் ஆர்த⁴த⁴ாதுக ஒட்டுக்கள்) 'இட்' ஆகமத் தோடு வரும் ஆர்த⁴ த⁴ாதுகவொட்டுக்கள் ஆகியவற்றிற்கு'முன் நிற்கும் வினையடியின் ஈறான 'ஆ' கெடும்.

1) இட் – பா + லிட் + த²ல் = ப – பா (6.1.8; 7.4.59) + இட் + த²ல் = ப – ப்ϴ – இ – த² = பபித² "நீ குடித்தாய்" தஸ்தித²; ப – பா + உஸ் = ப – ப்ϴ – உஸ் = பபுஸ் = பபு: (இவ்வொட்டு 'கித்' பார்க்க 1.2.5); பபது:

2) ஙித் – ப்ர + த³ா + அங் + டாப் (3.3.106) = ப்ர – த்³ + அ + ஆ = ப்ரத³ா = ப்ரத்³யதே 'கொடை', ப்ரத⁴ா:

**6.4.65** ஈத்³யதி

ஆர்த⁴த⁴ாதுகவொட்டான 'யத்' துக்கு முன் நிற்கும் வினையடியின் ஈறான 'ஆ' (ஆத்)வுக்குப் பதிலியாக 'ஈ' (ஈத்) வரும். த³ா + யத் = த்³ + யத் = தே³ய (7.3.84) 'கொடுக்கக் கூடியது'

**6.4.66** கு⁴மாஸ்தா க³ா பா ஜஹாதிஸாம் ஹலி

'கு⁴' என்ற ஸம்க்³ஞாவினால் சுட்டப்படும் வினை (த³ா, த⁴ா, த⁴ா ப், தைப் என்பவைகளைத் தவிர்த்து – ). மா 'அள' ஸ்தா 'இரு, நில்', க³ா 'செல், நகர்', அல்லது 'புகழ்' அல்லது 'பாடு', அல்லது 'இங்' (2.4.45), இங் (2.4.48–50) ஆகியவைகளின் பதிலிகள், பா 'குடி' ஹா 'விட்டு விடு', ஸா (ஸோ) 'அழி' ஆகியவற்றிற்குப் பின், 'க்' அல்லது 'ங்'ஐ 'இத்'தாகக் கொண்ட, ஒரு மெய்யெழுத்தை முதலாகக் கொண்ட ஆர்த⁴த⁴ாதுக வொட்டு நிற்கும்போது இவ்வினையடிகளின் ஈறான 'ஆ'வுக்க 'ஈ' பதிலியாக வரும்.

1) கு⁴ – த³ா + யக் + தே = தீ³யதே 'கொடுக்கப்பட்டது' தீ⁴யதே

2) மா – மா + யக் + தே = ம்யதே 'அளக்கப்பட்டது'

3) ஸ்தீ⁴யதே, (4) கீ³யதே (5) பீயதே (6)ஹீயதே (7) அவஸ்யதே த³ா + யங் + ஸ'ப் + தே = தேஸ்தீ²யதே; ஜேக்³யதே; பேபீயதே; ஜேஹீயதே; அவஸேஸ்யதே.

**6.4.67** ஏர் லிங்ி

மேலே குறிப்பிடப்பட்ட வினையடிகளுக்குப்பின் ('க்' அல்லது 'ங்'ஐ இத்தாகக் கொண்ட ஆர்த⁴த⁴ாதுக வொட்டான) 'லிங்' நிற்கும்போது, அவ்வினையடிகளின் ஈறான 'ஆ'வுக்கு 'ஏ' பதிலியாகும்.

த³ா + லிங் + த் = த³ா + யாஸுட் + ஸுட் – த் (3.4.103, 107) = தே³ யதா + θ + θ + த் (7.2.70) = தேயாத் (யாஸுட் ஒரு ஙித்) "அவன் கொடுக்கட்டும்"; மேயாத்; ஸ்தேயாத்; கே³யாத், பேயாத்; ஹேயாத்; அவஸேயாத்; ஆனால் த³ா + ஸீயுட் + ஸுட் + த (3.4.102;107) = த³ாஸிஷ்ட (6.1.66; 8.3.59; 4.41)

**6.4.68** வா அன்யஸ்ய ஸம்யோ க³ாதே³:

கூட்டுமெய்களை முதலாகக் கொண்ட (ஸம்யோக³ாதே:) மேலே கூறப்பட்ட வினையடிகளைத் தவிர்த்த மற்ற வினையடிகளின் பின் ('க்' அல்லது 'ங்' ஐ 'இத்'தாகக் கொண்ட ஆர்த⁴த⁴ாதுக வொட்டான) 'லிங்' நிற்கும்போது, அவைகளினீறான 'ஆ'வுக்குப் பதிலியாக 'ஏ' விருப்பாக வரும்.

க்³லை + லிங் + த் = க்³லா + யாஸுட் + ஸுட் + த் (6.1.45) = க்³லே + யா + θθ – த் (7.2.79) = க்³லே – யாத் = க்³லேயாத்/க்³லாயாத் "அவன்/அவள்/ அது களைப்படையட்டும்" ஆனால் க்³லா + ஸீயுட் + ஸுட் + த = க்³லாஸீஷ்ட

**6.4.69** ந ல்யபி

6.4.66 இல் கூறப்பட்ட வினைகளுக்கு முன் ஆர்த⁴த⁴ாதுக வொட்டான 'ல்யப்' நிற்கும் போது, அவ்வினைகளினீறான 'ஆ'வுக்கு 'ஏ' பதிலியாகாது. ப்ர + த³ா + ல்யப் = ப்ரத³ாய "கொடுத்துவிட்டு": ப்ரமாய, ப்ரப்த²ாய, ப்ரக³ாய, ப்ரபாய, ப்ரஹாய, அவஸாய

**6.4.70** மயதேரித³ ன்யதரஸ்யாம்

"ல்யப்"புக்குமுன் 'மா' (மயதி) "பண்டமாற்று" நிற்கும்போது அவ்வினையினீறான 'ஆ'வுக்கு 'இ' விருப்பாகப் பதிலியாகும். அப + மே + ல்யப் = அபமாய/அபமித்ய "பண்டமாற்றுதல் செய்து விட்டு"

**6.4.71** லுங் லங் ல்ருங்க்ஷ்வது³தாத்த:

உத³ாத்த சுரம் கொண்ட 'அட்', லுங் (Aorist). லங் (Imperfect) ல்ருங் (Condifional) ஆகிய வினையடிகளுக்கு முன் வரும்.

1) க்ரு¹ லுங் = க்ரு ¹ + திப் (3.4.77) = க்ரு¹ – த் (3.4.100) = க்ரு + ச்லி + த் (3.143) = க்ரு + ஸிச் + த் (3.1.44) = கார் + ஸ் + த் (7.2.1) = கார் – ஸ் + ஈட் + த் (7.3.96) = அட் – கார் – ஷீர் = அகார்ஷீத் 'அட்' (ஆகமம்) எந்தப் படிநிலையிலும் இணைக்கலாம், ஆயினும், வினையடியையே அட் + க்ரு¹ என்று எடுத்துக்கொண்டு, அதன் பின்னால் மேலே வினையொட்டுக்களான 'லுங்' முதலியவைகளையிணைப்பது எளிதாகும்.

2) க்ரு¹ + லங் = அட் + க்ரு¹ + உ + திப் = அகர் + ஒ + த் (3.1.79, 7.3.84)

3) க்ரு' + ல்ருங் = அக்ரு' + ஸ்ய + திப் = அக்ரு + இட் – ஸ்ய + த் (3.1.3 3 7.2.70; 3.4.100) அகரிஷ்யத் (அவன்)''செய்திருந்தால்''

**6.4.72** ஆட³ஜாத்³னாம்

(மேலே குறிப்பிடப்பட்ட 'லுங்' முதலியவைகளுக்கு முன்) உயிரெழுத்தில் தொடங்கும் வினைகளுக்கு முன் 'ஆட்' (உதாத்த சுரத்துடன்) இணைக்கப்படும்.

1) லுங் – ஈக்ஷ் + லுங் = ஆட் + ஈக்ஷ் + இட் + ஸிச் + த (7.2.35) = ஜக்ஷ் – இஷ் – ட = ஜக்ஷிஷ்ட (6.1.90; 8.2.59; 4.41) 'பார்த்திருக்கிறான்'

2) லங் – ஈக்ஷ் + லங் = ஆ – ஈக்ஷ் + ஸப் + த = ஜக்ஷத (6.1.90) 'பார்த்தான்'

3) ல்ரு'ங் – ஈக்ஷ் + ல்ருங் = ஜக்ஷ் + இட் + ஸ்ய + த (3.1.33; 7.2.35) = ஜக்ஷிஷ்ய த (8.3.59) 'அவன் பார்த்திருந்தால்'

**6.4.73** ச²ந்த³ஸ்யபி த்³ரு'ஸ்'யதே

'ஆட்' (உதாத்த சுரத்துடன்) வேத மொழியில், உயிரெழுத்தை முதலாகக் கொண்ட வினைகளைத் தவிர மற்ற வினைகளோடும் (அபி) காணப்படும். ஸுருசோ வேன ஆவ: (வா. ஸம். 13.3) ஆ–வ்ரு' லுங் + த் = ஆ–வ்ரு' + θ + த் (2.4.8) = ஆவரத் (7.3.84) ஆ – வர் + θ (6.1.68) = ஆவ: (8.3.15) யுஜ் + லங் = ஆ – யுஜ் + ஸ'னம் + த் = ஆ – யு – ந – ஜ் + த் = ஆ – யு ந – ஜ் + θ (6.1.68) = ஆயுநக் (8.2.30)

**6.4.74** ந மாங் யோகே

மாங் (தடுப்பு இடைச் சொல்) லோடு சேர்ந்து 'லுங்' முதலியவைகளைப் பயன்படுத்தும்போது வினைகளுக்கு முதலில் இணைக்கப்படும் ஆகமங்களான 'அ' வோ, 'ஆ' வோ வராது.

மா + அகார்ஷீ := மா கார்ஷீ: (அதைச்) செய்யாதே; மா + அகரோஸ் = மா கரோ : மா ப4வான் ஈக்ஷிஷ்ட, ஈக்ஷத மா ஸ்ம கரோத்

**6.4.75** ப³ஹுலம் சந்த³ஸ் யமாங்யோகே³ அபி

'மாங்' ஒடு சேர்ந்து மேலே கூறிய வினைகள் பயன்படுத்தப்படாவிட்டாலும், வேத மொழியில், 'அ' 'ஆ' (உதாத்த சுரத்துடன்) ஆகமம் பலவகையில் இணைக்கப்படமாட்டாது. அமாங்யோகே3 அபி–ஜனிஷ்ட²ந உக்³ர: 'மா' இணைக்கப்படாவிட்டாலும் 'அ' ஆகமமில்லை.

ஜனிஷ்டா: + உக்³ர: = ஜனிஷ்டா²

உக்³ர: = அஜனிஷ்டா:

மாங்யோகே³ அபி–மா வ: க்ஷேத்ரே பரப்³ஜான்யவாப்ஸு: மா...அவாப்ஸு: 'மா' வோடு சேர்ந்து வரும்போதும் 'அ' இணைக்கப்பட்டிருக்கிறது.

**6.4.76** இரயோ ரே

(வேத மொழியில், பலவகையில்) 'இரே'வுக்கு 'ரே' பதிலியாகும்.

க$^{3}$ர்ப$^{4}$ம் ப்ரதம் த$^{3}$த்$^{4}$ர ஆப:

த$^{4}$ா + லிட் = த$^{4}$ா + ஜ = த$^{3}$ – த$^{4}$ா + இரேச் (6.1.8; 3.4.81) = த$^{3}$ த்$^{4}$ θ + இரேச் (6.1.64) = த$^{3}$த்$^{4}$ ரே = த$^{3}$த்ரே (=த$^{3}$தி$^{4}$ரே)

பரமாயா தி$^{4}$யோ அக்$^{3}$னி கர்மாணி சக்ரிரே. சக்ரிரே ('ரே' பதிலியாக வரவில்லை)

**6.4.77** அசி ஸ்'னுத$^{4}$ாது ப்$^{4}$ருவாம் ய்வோரியங் உவங்

உயிரெழுத்தை முதலாகக் கொண்ட ஒரொட்டுக்கு முன் (அசி) நிற்கும், 'ஸ்னு' (விகரணம்) வில் முடியும் வினை அல்லது தாது (வினை) அல்லது ப்$^{4}$ரூ (பெயர்ச்சொல்) ஆகியவைகளின் ஈறாக 'இ' அல்லது 'உ'வுக்கு முறையே 'இயங்', 'உவங்' பதிலியாக வரும்.

1) ஆப் + லோட் = ஆப் + ஸ்னு + ஜி$^{2}$ = ஆப் – னு + அந்தி (7.1.3) = ஆப்னுவந்தி 'அவர்கள் அடைகிறார்கள்'

2) க்ஷி + லிட் = சி – க்ஷி + உஸ் (6.1.8; 3.4.82) = சிக்ஷியு: (6.1.189) 'அவர்கள் இளைத்திருக்கிறார்கள்'

3) ப்$^{4}$ரூ + ஔ = ப்$^{4}$ருவௌ 'புருவங்கள்' (இருமை) ஆனால் வதூ$^{4}$ + ஔ = வத்$^{4}$வௌ ஆயினும் குண (7.3.84), வ்ருத்$^{3}$தி$^{4}$ (7.2.115) இந்த விதி பயன்படுத்துவதைத் தடுக்கும்.

சி + ல்யட் = சே + அன (7.3.84) = சயன (6.1.78); சி + ண்வுல் = சை + ண்வுல் (7.2.115) = சாயக

வா: இயங் உவங் ப்ரகரணே தந்வாதீ$^{3}$னாம் சந்த$^{3}$ஸி உபஸங்க்$^{2}$யானம் கர்தவ்யம் வேதமொழியில், 'தனு' ஆகியவைகளில் 'இயங்', 'உவங்' பதிலியாக பலவகையில் வரும்.

தன்வம் புஷேம அல்லது தனுவம் புஷேம; ஸ்வர்கே$^{3}$ா லோக: ஸுவர்கே$^{3}$ா லோக: ; த்ர்யம்ப$^{3}$கம் யஜாமஹே, த்ரியம்ப$^{3}$கம் யஜாமஹே

**6.4.78** அப்$^{4}$யாஸஸ்யாஸவர்ணே

இரட்டித்தலின் (அப்$^{4}$யாஸ்) இறுதி உயிராக அமையும் 'இ'. 'உ'வுக்கு (முறையே 'இயங்', 'உவங்') அந்த உயிர்களுக்குப்பின், அதேயினத்தைச் சேராத உயிரெழுத்து (அஸவர்ணே) வரும்போது பதிலியாகும்.

இஷ் + லிட் = இ – இஷ் + ணல் (6.1.8; 3.4.82) = இயேஷ (7.3.84) "விரும்பினால்" ; உஷ் + ணல் = உ + ஒஷ் + ணல் = உவோஷ 'எரித்தால்' ஆனால் இ + லிட் = இ + உஸ் = இ – இ + உஸ் = இ – இய் + உஸ் (6.1.77) = ஈயு; ஈயது:, இயாய (7.2.115)

**6.4.79** ஸ்த்ரியா:

உயிரெழுத்தை முதலாகக் கொண்ட ஒரொட்டுக்கு முன் நிற்கும், ஸ்த்ரீ 'பெண்' என்ற சொல்லினிறுதியுயிரான 'ஈ'க்குப் பதிலியாக 'இயங்' வரும்.

ஸ்த்ரீ + ஒன் = ஸ்த்ரியௌ; ஸ்த்ரீ + ஜஸ் = ஸ்த்ரிய: ; ஆனால் ஸ்த்ரீ + ஆம் +

நுட் + ஆம் = ஸ்த்ரீ – ண் – ஆம் (7.1.54, 8.4) = ஸ்த்ரீணாம். இங்கு, இதற்குப் பின்னால் கூறப்பட்ட விதி, இந்த விதியைப் புறக்கணித்து முன்னால் வரும். இச்சூத்திரம், தொடர்ந்து வரும் சூத்திரங்களுக்காகத் தனியாக அமைக்கப்பட்டிருக்கிறது (யோக³விப⁴ாக³)

**6.4.80** வா அம்ஸ'ஸோ:

அம், ஸ'ஸ்' (இரண்டாம் வேற்றுமையொருமை, பன்மையுருபு) உக்குமுன் 'ஸ்த்ரீ' நிற்கும்போது, அதனீற்றுக்கு 'இயங்' விருப்பாகப் பதிலியாகும். ஸ்த்ரீ + அம் = ஸ்த்ரீம் (6.1.107) அல்லது ஸ்த்ரியம்;
ஸ்த்ரீ + ஸ'ஸ்' = ஸ்த்ரீ: (6.1.102) அல்லது ஸ்த்ரிய:

**6.4.81** இணோ யண்

ஒருயிரெழுத்தை முதலாகக் கொண்ட வொட்டுக்கு முன் நிற்கும் இண் 'போ' தாதுவின் 'இ'க்கு 'யண்' பதிலியாகும். இ + ஜி² = இ + அந்தி (7.1.3) = யந்தி, 'அவர்கள் போகிறார்கள்'; இ + லோட் = இ + 0 + அந்த (7.1.3; 3.4.86) = யந்து 'அவர்கள் போகட்டும்' இது 'இயங்' பதிலியாவதை தள்ளுபடி செய்து, வருகிறது. இந்த விதியையே 7.2.115, உம் 7,3.84 உம் தள்ளுபடி செய்கின்றன. இவ்விரண்டு சூத்திரங்களும் குண, வ்ருத்தி ஆதேசத்தை விதிக்கின்றன. இந்த விதிகள் மத்⁴யே அபவாத³ா: பூர்வான் விதூ⁴ன் ப³ாத⁴ந்தே, நோத்தரான் இரு அபவாத விதிகளுக்கிடையே அமையும் அபவாத விதியைத்தான் தள்ளுபடி செய்ய இயலும். அதைத் தொடர்ந்து வரும் அபவாத விதிகளையல்ல'' பரிபாஷா சூத்திரத்தின்படி செயற்படுகின்றன. ஆகையால், அயனம், ஆயக என்று வடிவங்கள் கிடைக்கப்பெறுகின்றன:

**6.4.82** ஏரனேகாசோ அஸம்யோக³ பூர்வஸ்ய

ஒருயிரெழுத்தை முதலாகக் கொண்டவொட்டுக்கு முன் நிற்கும் பலவசைகளைக் கொண்ட (அனேகாச:) வினையடியினீறான 'இ' கூட்டுமெய்கள் அதற்கு முன்னாலமையாமலிருந்தால் (அஸம்யோக³பூர்வஸ்ய) அவ்வீற்றுக்கு 'யண்' பதிலியாக வரும் நீ + லிட் = நி – நீ + அதுஸ் = நியது:, நிந்யு: ; க்³ராமணீ + ஔ = க்³ராமண்யௌ (8.4.2): ஆனால் யவ – க்ரீ + ஔ = யவக்ரியௌ; யவக்ரிய

**6.4.83** ஒ: ஸுபி

ஒருயிரெழுத்தில் தொடங்கும் வேற்றுமையுருபுக்கு (ஸுப்) முன், பலவசைகளைக் கொண்ட, கூட்டுமெய்யை முன்னால் கொள்ளாத 'உ'வீற்றுத் தாதுவினீறுக்கு, 'வ்' (யண்ணின்) பதிலியாகும் கலம் புனாதி= கல – 0 + பூ + க்விப் = கலபூ (3.2.178) = ஔ = கலப் – வ் = ஔ் (6.1.174) = க²லப்வௌ "இரு உரலைத் துடைப்பவர்கள்" ஆனால் லூ + க்விப் + ஔ = லுவௌ, "இரு அறிவாள்கள்" கட – ப்ரு + ஔ = கடப்ருவௌ "இரு சூதாடிகள்"

**6.4.84** வர்ஷாப்[4] வஸ்[1] ச

ஒருயிரெழுத்தை முதலில் கொண்ட வேற்றுமையுருபுக்கு முன் நிற்கும் வர்ஷாபூ[4]. 'மழையில் பிறந்த' என்ற சொல்லினிறான 'ஊ'க்குப் பதிலியாகவும் 'வ்' ('யண்' ணின்) வரும்.

வர்ஷா – பூ[4] + ஔ = வர்ஷாப்4வெள இது தொடர்ந்து வரும் 85க்குப் புறனடை.

வா: புனர்ப்[4]வஸ்[1]ச இதி வக்தவ்யம்

'புனர்பூ[4]' வினீற்றுக்குப் பதிலியாகவும் அரையுயிர் 'வ்' வரும். புனர்ப்[4]வெள, புனர்ப்[4]வ:

வா: காரா பூர்வஸ் யாபீஷ்யதே

'கார'வுக்குப்பின் நிற்கும் 'பூ[4]' வினீற்றுக்குப் பதிலியாகவும் 'வ்' வரும். காராப்[4]வெள, காராப்[4]வ:

**6.4.85** ந பூ[4]ஸுதி[4]யோ:

ஒருயிரெழுத்தை முதலில் கொண்ட வேற்றுமையுருபுக்கு முன் நிற்கும் பூ[4] "ஆகுதல்" ஸுத்[4] 'கெட்டிக்கார' ஆகியவைகளினிற்றுக்கு 'யண்' பதிலியாக வராது.

ப்ரதி – பூ[4] + ஔ = ப்ரதி[4]வெள "இரண்டு உத்தரவாதிகள்";

ஸுதீ[4] + ஔ = ஸுதி[4]யெள "இரண்டு புத்திசாலிகள்"

**6.4.86** ச[2]ந்த[3]ஸ்யுப[4]யதா

மேற்கூறிய சூழலில் நிற்கும் 'பூ[4]', ஸுத்[4] ஆகியவைகளுக்கு, 'இயங்', உவங்', 'யண்' என்ற இரண்டு ஆதேசங்களும் (உப[4]யதா) வரும்.

வனேஷு சித்ரம் விப்[4]வம் விஶே (ருக் 4.7.1) விஸே' விபு[4]வம் (தை, ஸம், 1.5.5); ஸுத்[4]யோ ஹவ்யமக்[3]னே, ஸுதி[4]யம் ஹவ்யமக்[3]னே

**6.4.87** ஹு ஸ்'னுவோ: ஸார்வத[4]ாதுகே

உயிரெழுத்தில் தொடங்கும் ஸார்வத4ாதுகவொட்டுக்கு முன் நிற்கும், ஹு, 'வேள்விசெய்' (பலவகைகளைக் கொண்ட) 'ஸ்னு'வில் (விகரணம்) முடியும் (கூட்டுமெய்கள் முன்னாலமையாத) வினை ஆகியவைகளின் ஈறுகளுக்கு 'யண்' (அரையுயிர்) பதிலியாக வரும்.

ஹு + லட் = ஹு + ஸ்லு + ஜி2 (2.4.75) = ஜு + ஹு + அதி (6.1.10; 7.11.4) = ஜுஹ்வதி 'அவர்கள் யாகம் பண்ணுகிறார்கள்', ஜுஹ்வந்து ஸு + லட்[1] = ஸு + ஸ்னு + ஜி[2] = ஸு – னு + அந்தி = ஸுன்வந் தி 'அவர்கள் சாறு காய்ச்சி வடிக்கிறார்கள்; ஸுன்வந்து. அஸுன்வ ன் ஆனால் ஆப்னுவந்தி

**6.4.88** பு[4]வோ வுக்[3]லுங் லிடோ:

உயிரெழுத்தை முதலில் கொண்ட 'லுங்', லிட் 'ஒட்டுக்களுக்குமுன் நிற்கும் 'பூ[4]'வோடு 'வுக்' (வ்) (ஆகமம்) வரும்.

1) பூ⁴ + லுங் = அட் (6.1.71) + பூ⁴ + ஸிச் (3.1.44) – θ ; 2.4.77) + ஜி² = அபூ⁴ + அந்த் (3.4.100) அபூ⁴வந்த் = அபூ⁴ – வ் – ந்0 (8.2.23) = அபூ⁴வன் "அவர்கள் ஆகியிருக்கிறார்கள்" 2) பூ⁴ + லிட் = ப³ – பூ⁴ + ணல் (6.1.8; 3.4.82) = ப³பூ⁴ –

வ் + ணல் = ப³–பூ⁴–வ = ப³பூ⁴வ 'அவன் ஆனான்'

**6.4.89** ஊது³பத⁴ாயா: கே³ாஹ:

உயிரெழுத்தை முதலில் கொண்ட ஒட்டுக்கு முன் நிற்கும் கே³ா: (கு³ஹ்) வினையடியின் ஈற்றயலான 'ஒ'வுக்கு 'ஊத்'து பதிலியாகும்.

நி–கு³ஹ் + ஸப் + திப் = நி – கோஹ் – அ தி (7.3.84) = நி – கூ³ஹ் – அ – தி 'மறைந்து கொள்கிறான்' நி – கு3ஹ் + ஸ்வுல் நி – கே³ாஹ் - அக = நி – கூ³ஹக 'மறைந்து கொள்தல்'; ஆனால் நி – கு³ஹ் + லிட் = நி + கு³ஹ் + அதுஸ் (3.4.82) = நி – ஜு – கு³ஹ் – அது: நிஜுகு³ஹது: "அவர்கள் மறைந்த கொண்டிருக்கிறார்கள்" 'லிட்' ஒரு 'கித்' (1.2.5) ஆனதால் ஈற்றுயலுயிர், குணமாக இவ்விதியில் காணப்படும் "கே³ாஹ்", 'கு³ஹ்' எங்கெங்கு கணக்கிறதோ, அங்குதான், 'கே³ாஹ்' இன் 'ஒ'வுக்கு 'ஊ' பதிலியாகும்.

**6.4.90** தே³ா ஷோ ணௌ

'ணிச்' (இயக்குவினையொட்டு) க்கு முன் நிற்கும் தே³ாஷ் (து³ஷ்) 'அழி, காயப்படுத்து' என்ற வினையடியின் ஈற்றயலான 'ஒ'வுக்கு 'ஊம்' பதிலியாகும்.

து³ஷ + ணிச் = தே³ாஷ் – இ (7.3.86) = ஸப் + திப் (3.4.68) = தூ³ஷயதி 'கெடுக்கிறான்'

**6.4.91** வா சித்தவிராகே³

'ணிச்'சுக்கு முன் நிற்கும் 'தே³ாஷ்'இன் ஈற்றயலான 'ஒ'வுக்கு ஆக்கப்பட்ட சொல் 'மனக்குழப்பம்' (சித்தவிராகே³) என்ற பொருளைச் சுட்டுமானால்– 'ஊத்' விருப்பாகப் பதிலியாகும்.

சித்தம் தே³ாஷயதி, சித்தம் தூ³ஷயதி

"மனதைக் குழப்புகிறது"

ப்ரக்³ஞாம் தூ³ஷயதி/தே³ாஷயதி

**6.4.92** மிதாம் ய்ரஸ்வ;

'ம்'ஐ 'இத்'தாகக் கொண்ட வினையடிகளைத் தொடர்ந்து 'ணிச்' ஒட்டு நிற்கும்போது, அவைகளின் ஈற்றயலுக்கு குறில் பதிலியாகும். தாது பாடத்தில் கொடுக்கப்பட்ட க⁴ட் (1.800) இலிருந்து தொடங்கி ப²ண் (1.873) வரையிலுமான தாதுக்கள் இத்தகையவை.

க⁴ட் + ணிச் + ஸப் + திப் = கா⁴ட் – இ – அ – தி (7.2.116) = க⁴டயதி (7.3.94; 6.1.78) 'நிகழ்கிற'; வ்யத²யதி, ஜனயதி, ரஜயதி, ஸ்மயதி, க்³ருபயதி

**6.4.93** சிண்ணமுலோர் த்[3]ர்கே[4]ா அன்யதஸ்யாம்

'ணிச்'சுக்கு முன் நிற்கும் 'ம்'ஐ 'இத்'தாகக் கொண்ட வினையடி 'சிண்' அல்லது 'ணமுல்'லோடு சேர்ந்து வரும்போது அவ்வினையடியின் ஈற்றயலுக்கு, நெடில் விருப்பாக (அன்யதரஸ்யாம்) வரும்.

1. ஸம் + ணிச் + சிண் = அட் + ஸாம் – இ + சிண் + த = அ – ஸாம்θ + இ + θ (6.4.148;104) அஸாமி; அஸமி "அமைதியானான்"

2. ஸம் + ணிச் + ணமுல் = ஸாம் – இ + ணமுல் = ஸாம் + θ + அம் = ஸாம் – அம் = ஸாமம் ஸாமம், ஸமம் ஸமம்

**6.4.94** க[2]சி ஹ்ரஸ்வ:

இயக்குவினையின் (ணிச்) ஈற்றயல், அவ்வினை 'க[2]ச்' ஒட்டிக்கு முன் நிற்கும்போது, குறிலாகும்.

த்[3]விஷந்தம் தாபயதி = த்[3]விஷத் + தாப் + ணிச் + க[2]ச் (3.2.39) = த்[3]விஷத் + தாப் – இ + க[2]ச் (7.2.116) = த்[3]விஷ + மும் + தாபி + க[2]ச் (6.3.67) = த்[3]விஷ் – அம் – த் + தப் + θ – அ (6.4.51) = த்[3]விஷந்த் – தப (8.4.58) = த்[3]விஷ் – அந்θ – தப (8.2.23) = த்[3]விஷந்தப "பகைவனை யடக்குபவன்"

புரம் – த[3]ாரயதி = புர – த[3]ார் – இ + க[2]ச் = புர + மும் த[3]ார் இ + அ = புர – ந் + த[3]ார் – θ – அ = புரந்த[3]ர 'கோட்டைகளை யரிப்பவன், இந்திரனின் பெயர்'

**6.4.95** ஹ்லாதெ[3]ள நிஷ்டாயாம்

நிஷ்டா என்ற ஸம்க்[3]ஞாவினால் சுட்டப்படும் ஒட்டுக்களுக்கு (க்த, க்தவது) முன் நிற்கும் ஹ்லாத்[3] 'மகிழ்ச்சியடை' என்ற வினையடியின் ஈற்றயல் குறிலாகும்.

ப்ர + ஹ்லாத்[3] + க்த = ப்ரஹ்லாந் – ந (8.2.42) = ப்ரஹ்லந்ந "மகிழ்ச்சியடைந்த", ஆனால் ப்ர – ஹ்லாத்[3] + ணி + ஸப் + திப் = ப்ரஹ்லாத[3]யதி 'மகிழ்விக்கிறான்'

**6.4.96** ச[2]ாதே[3]ர்கே[4] அத்[3]வ்யுபஸர்க[3]ஸ்ய

ச[2]ாதி[3] (ச[2]த்[3] + ணிச்) என்ற தாது இரண்டு உபசர்க்கங்களுடன் சேர்ந்து வராமல் (அத்[3]வ்யுபஸர்க3ஸ்ய), அத் தாதுவைத் தொடர்ந்து 'க[4]' ஒட்டு (3.3.118) வரும் போத அதனீற்றயலுக்கு குறில் பதிலியாகும்.

உரஸ்[1] ச[2]ாத[3]யதி = உரஸ்[1] + θ + ச[2]ாத்[3] – இ + க[4] = உரஸ்[1] ச[2]ாத்[3] – θ + அ = உரஸ்[1]ச[2]ாத[3]

ஆனால் ஸமுபச்சாத[3]: (இரண்டு உபசர்க்கங்களுடன் வருகிறது. ஸம் + உப) சூ.6.4.51ஐப் பயன்படுத்துவதால் ஏற்படும் 'ச[2]ாத்[3]' முதலியவைகளின் 'ணி' கெடுவது 'அஸித்தம்' என்று கருதப்படமாட்டாது (6.4.22) அதேபோன்று, ஸ்தானிவத் 1.1.62 ஆகவும் கருதக்கூடாது. அவ்வாறு கருதினால் குறிலாவதற்கு ஈற்றயலே இருக்காது.

வா: அத்³விப்ரப்⁴ருதயோரிதி வக்தவ்யம் இரண்டுக்கும் மேற்பட்ட உபசர்க்கங்களோடு சேர்ந்து வரும்போதும் அவ்வாறே.
ஸமுபாதிச்சாத³:

**6.4.97** இஸ் மன் த்ரன் க்விஷு ச
இஸ், மன், த்ரன், க்வி ஆகியவொட்டுக்களுக்கு முன் 'சாதி³'யின் ஈற்றயல் குறிலாகும்.
1) ச²ாதி³ + இஸ் = ச²ாத்³ – θ – இஸ் = ச²ாதி³ 'கூரை'; (2) ச²ாதி³ + மன் = சாத்³ – θ + மன் = ச²த்³மன் "கூரை" (3) ச²ாதி³ + த்ரன் = ச²ாத் – θ + த்ரன் = ச²த்ர "குடை"; (4) தனும் சாத³யதி = தனுச்ச²ாத்³ θ + க்விப் = தனுச்சத்³ 'கவசம்'

**6.4.98** க³ம ஹன ஜன க²ன க⁴ஸாம் லோப:
க்ஙித்யனஙி 'அங்' ஐத் தவிர்த்து மற்ற
'ங்' அல்லது 'க்' ஐ 'இத்' தாகக் கொண்ட உயிரெழுத்தில் தொடங்கும் ஒட்டுக்களுக்கு முன் நிற்கும் க³ம் 'போ', ஹன் "கொல், காயப்படுத்து" ஜன் 'பிற', க²ன் "தோண்டு", க⁴ஸ் "உண், தின்" என்ற வினைகள் நிற்கும்போது அவைகளின் ஈற்றயலுயிர் கெடும்.
1. க³ம் + லிட் = க³ம் + அதுஸ் = ஜ – க³ம் + அதுஸ் = ஜ – க்³ θ ம் + அதுஸ் = ஜக்³மது; (6.1.8; 7.4.60; 62), ஜக்மு: ஆனால் அக³மத்
2. ஹன் + லிட் = ஹன் + அதுஸ் = ஜ – க⁴ன் + அதுஸ் (7.3.55) = ஜக்⁴θன் + அதுஸ் = ஜக்⁴னது: ஜக்⁴னு:,
3. ஜன் – ஜக்³ஞது: ஜக்³ஞு:, ஜக்³ஞே:, ஜக்³ஞிரே
4. க²ன் = சக்²னது:
5. க⁴ஸ் = ஜக்ஷது: ஆனால் அக⁴ஸ் – அங் – த் அக⁴ஸத்

**6.4.99** தனிபத்யோஸ்¹ ச²ந்த³ஸி
மேற்கூறிய சூழலில் வேதமொழியில் தன் 'விரிவாக்கு', பத் "விழு, பற" ஆகியவைகளின் ஈற்றயலுயிர் குறில் ஆகும்.
வி + தன் + லிட் = வி – தன் + இரேச் (3.4.81) = வி – ததன் – இரேச் = விதத்னிரே
ப – பத் ம (6.1.8; 7.4.60) = ப – பத் + இட் + ம (7.2.35) = பப்திம
ஆனால் விதேனிரே, பேதிம (பேச்சுமொழி)

**6.4.100** க⁴ஸி ப⁴ஸோரர் ஸலி ச
வேத மொழியில் மெய்யெழுத்தில் தொடங்கும் ஒட்டுக்களுக்கு முன் ('க்' அல்லது 'ங்'ஐ 'இத்'தாகக் கொண்ட உயிரெழுத்தை முதலாகக் கொண்ட ஒட்டுக்களுக்கு முன்னும்) நிற்கும் க⁴ஸ் 'உண்', ப⁴ஸ் 'விரைவாக விழுங்கு' என்ற வினையடிகளின் ஈற்றயலுயிர் கெடும்.
1) அத்³ + க்தின் = க⁴ஸ் + க்தின் (2.4.39) = க்⁴ θ ஸ் + தி = க்⁴தி⁴ (8.2.40) = க்³தி⁴ (8.4.53); ஸமானி க்³தி⁴: ஸக்³தி⁴; "ஒருங்கிணைந்து உண்ணுதல்;

பொதுச் சாப்பாடு'' ஸக்[3]தி[4]ஸ்[1]ச மே ஸபீதிசமே.

2) ப[4]ஸ் + லோட் = ப[4]ஸ் + ஸ்[1]லு + தாம் (2.4.75; 3.4.101) = ப[3]ப[4]ாஸ் - தாம் (6.1.10; 7.4.60; 8.4.54) = ப[3] – ப்[4]θ ஸ் + தாம் = ப[3]ப்[4]θ + தாம் (8.2.26) = ப[3]ப்[4] + த[4]ாம் (8.2.40) = ப[3]ப்[3]த[4]ாம் (8.4.53) ; ப[3]ப்[3]த[4]ாம் தே ஹர் த[4]ானா: ப[4]ஸ் + ஸ்[1]லு + ஜி[2] = ப[3]ப்[4]ஸ் – அதி = ப[3]ப்ஸதி (8.4.55)

**6.4.101** ஹுஜ[2]ல்ப்[4]யோ ஹேர்தி[4]:

'ஹு' 'ஜ[2]ல்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்தையீறாகக் கொண்ட வினையாகியவைகளைத் தொடர்ந்து நிற்கும் 'ஹி' ('ஸிப்' இன் பதிலி 3.4.87)க்குப் பதிலியாக 'தி[4]' வரும்.

1) ஹு + லோட் = ஹு + ஸ்[1]லு + ஹி (3.4.87) = ஜு – ஹு + ஹி (6.1.10) = ஜுஹுதி[4]

2) பி[4]த் + லோட் = பி[4]த்[3] + ஸ்னம் + ஹி = பி[4]னத்[3] + ஹி (3.1.78) = பி[4]ன் θ – த்[4] + ஹி (6.1.111) = பி[4]ன்த்[4]+ தி[4] = பி[4]ன்த்[3]தி[4] ஆனால் இஹி ஸ்வபிஹி க்ரீணீஹி

**6.4.102** ஸ்[1]ரு ஸ்[1]ரு[1]ணு ப்ரு[1]க்ரு[1] ப்ரு[1]ப்[4]யஸ் ச[2]ந்த[3]ஸி

ஸ்[1]ரு[1], ஸ்ரு[1]ணு 'கேள்', ப்ரு[1] 'நிரப்பு' க்ரு[1] 'செய்', வ்ரு[1] 'மூடு' ஆகிய வினைகளின் பின் இணைக்கப்படும் 'ஹி' க்குப் பதிலியாக 'தி[4]' வரும் (வேத மொழியில்)

1) ஸ்ருதி[4] ஹவம் இந்த்[3]ர (ருக் 2.11.3) 'ஓ இந்திரனே பிரார்த்தனைக்கு செவிசாய்'

2) ஸ்[1]ருணுதி[4] கி[3]ர; (ருக் 8.13.7) 'பேச்சைக் கேள்'

3) பூர்த்[3]தி[4] (ருக் 8.78.10) 'நிறைவேற்று'

4) அபாவ்ரு[1]திதி[4] (ருக் 1.7.6) 'திற'

**6.4.103** அங்கிதஸ்[1] ச

'ங்[1]ஜ 'இத்'தாக உடைத்ததாகாவிட்டாலும் (3.4.87–88) வேத மொழியில் 'ஹி' க்கு 'தி[4]' பதிலியாக வரும்.

சூ.3.4.88இன்படி 'ஹி' வேதமொழியில் 'பித்' ஆகும். அது 'பித்' ஆனால், 'ஙித்' ஆகமுடியாது. (1.2.4). அவ்வாறான 'ஹி'க்கு 'தி[4]' பதிலியாகும் என்று இச்சூத்திரம் விதிக்கிறது.

ஸோம ரராந்தி4 (ருக்1.91.13) ''ஓ சோமனே தடை செய்''

ரம் + ஸ்[1]லு + தி[4] = ராம் + தி[4] = ராரந்தி[4]

யு + ஸ்[1]லு + ஹி = யுயோதி[4]. 'ஹி' ஒரு 'ஙித் இல்லை. ஆகையால் 7.3. 86 இன்படி ஈற்றயலுயிருக்கு 'குண' வெழுத்துப் பதிலியாகிறது.

**6.4.104** சிண; லுக்

'சிண்' (aorist) ஒட்டுக்குப்பின் இணைக்கப்படும் ஒட்டுக்கள் கெடும் (லுக்) செயப்பாட்டு வினை, ப[4]ாவே வாக்கியங்களில் வினையடிகளுக்குப்பி ன்னும் 'தன்' (இடவொட்டுக்களுக்கு) ஒட்டுக்களுக்கு முன்னும் 'சிண்'

இணைக்கப்படும் (3.1.66) க்ரியதே (செயப்பாட்டுவினை = அட் (6.1.71) + க்ரு[1] + சிண் + த = அ – கார் – இ = த (7.2.115) = அகாரி + θ = அகாரி, அலாவி (லூ). அபாசி (பச்) அகாரிதராம், அகாரிதமாம் ஆகியவைகளில் இடவொட்டான 'த' (3.1.60) 'சின்' இன் கெடுதல் நிகழாதது (அஸித்தம்) என்று கருதப்படுவதால், தவப், தமப் ஆகியவொட்டுக்கள் கெடாது (லுக் ஆகாது)

**6.4.105** அத; ஹேர:

'அ' வீற்று வினையடிக்குமுன் நிற்கும் 'ஹி' கெடும் (லுக்) பச் + ஸ'ப் + ஹி = பச் – அ + ஹி = பச் + அ + θ = ஹி பச 'சமையல் செய்' ஆனால் இ + θ + ஹி = இஹி 'போ' ஸ்வப் + இ + ஹி = ஸ்வபிஹி 'படுத்துக்கொள்'

**6.4.106** உதஸ்'ச ப்ரத்யயாத[3] ஸம்யோக பூர்வாத்

'உ'வையிறுதியாகக் கொண்ட ஒட்டை யீறாகக் கொண்ட வினையடிக்கு முன் நிற்கும் 'ஹி', அவ்வினையீற்றுக்கு முன் கூட்டு மெய்களமையாமலிருந்தால், கெடும் (லுக்)

ஸு + லோட் = ஸு + ஸ்'னு + ஹி = ஸுனு ஹி = ஸுனு θ = ஸுனு 'கேள்' தன் + லோட் = தன் – உ + ஹி = தன் – உ + θ = தனு 'விரிவாக்கு' ஆனால் ருஹி, ப்ராப்னுஹி

வா: உதஸ்'ச ப்ரத்யயாச ச[2]ந்தே[3]ா வா வசனம்.

வேமொழியில் (விகரணங்கள்) 'உ', 'ஸ்'னு' ஆகியவைகளுக்குப்பின் நிற்கும் 'ஹி' விருப்பாகக் கெடும். ஆதனுஹி யாதுத[4]ானான்; தி4னுஹி யக்[3]ஞபதிம், தேன மா ப[4]ாகி[3]ணம் க்ருணுஹி

**6.4.107** லோபஸ்'ச அஸ்யான்யதரஸ்யாம் ம்வோ:

'உ' அல்லது 'ஸ்னு' என்ற விகரணங்களின் 'உ'வையீறாகக் கொண்ட வினையடிகள், அவைகளின் ஈறுகளுக்கு முன் கூட்டு மெய் நிற்காமலமையும்போது) அந்த 'உ'வைத் தொடர்ந்து 'ம்', 'வ்' ஆகியவைகளில் தொடங்கும் ஒட்டுக்கள் நிற்கும் போது 'உ' விருப்பாகக் கெடும்.

ஸு + லட் = ஸு + ஸ்'னு + வஸ் = ஸு + னு + வஸ் = ஸு – ன்θ – வஸ் = ஸுன்வ: அல்லது 'ஸுனுவ:, ஸுன்ம: அல்லது ஸுனும; தன் + லட் தனுவ: அல்லது தன்வ: தனும:, தன்ம: ஆனால்யுவ:, யும: (இங்கு இறுதி 'உ' ஒட்டல்ல தாதுவின் ஒரு பகுதி)

**6.4.108** நித்யம் கரோதே;

கரோதி (க்ரு[1]) என்ற வினைக்குப் பின்னிணைக்கப்படும் (உ'அல்லது 'ஸ்னு'வின் 'உ', 'வ்' அல்லது 'ம்'ஐ முதலில் கொண்ட வொட்டுக்கள் தொடரும்போது கட்டாயமாகக் கெடும் (லோப) க்ரு[1] + லட் = க்ரு[1] + உ + வஸ் = குர் + உ + வஸ் (6.4.110) = குர் + θ + வஸ் = குர்வஸ் க்ரு[1] + லட் = க்ரு[1] + மஸ் = குர்மஸ் சூ.8.2.77 இல்விதிக்கப்பட்டபடி 'குரு'வின் 'உ' நெடிலாக

வேண்டும். இவ்விதி செயற்படாத வண்ணம் 8.2.79 தடுக்கிறது.

**6.4.109** யே ச

'ய்' இல் தொடங்கும் ஒட்டுக்களுக்கு முன் நிற்கும்போதும் மேற்கூறிய 'க்ரு' வினையின் 'உ' கட்டாயமாகக் கெடும்.

க்ரு[1] + லிங் = க்ரு[1] + உ + யாஸ் + த் (3.4.100) = குர் – உ + யாஸ் + ஸுட் + த் (6.4.110, 3.4.107) = குர் – θ – யா θ + த் = குர்யாத் (7.2.79), குர்யாதாம், குர்யு;

**6.4.110** அத: உத்ஸார்வத[4]ாதுகே

('க்' அல்லது 'ங்ஐ 'இத்'தாகக்கொண்ட ஸார்வதாதுக ஒட்டுக்க ளுக்கு முன் நிற்கும் 'காரு'வின்) 'உ' வுக்கு (உத்) 'அ' (அத்) பதிலியாகும்.

க்ரு[1] + உ + தஸ் / அந்தி (ஙித் 1.2.4) = பர் – உ + தஸ் / அந்தி (7.3.84) = குர் – உ – தஸ் – குருதஸ், குர்வந்தி ஆனால் கரோதி (பித்); கர் உ – ஹி = குரு + θ (6.4.106)

**6.4.111** ஸ்'னஸோரல் லோப;

'க்' அல்லது 'ங்ஐ 'இத்'தாகக் கொண்ட ஸார்வதாதுக ஒட்டுக்களுக்குமுன் நிற்கும் ஸ்'ன (ம்) விகரணத்தின் 'அத்' 'அஸ்' வினையின் 'அத்' ஆகியவை கெடும் (லோப)

1. ருத்[4] + லட் = ருத்[4] + ஸ்1னம் + தஸ் = ரு–ந்–த்[4] + தஸ் = ரு – ந்θ – த்[4] + தஸ் = ருந்த்[4] + தஸ் (8.2.40) = ருந்த்[3] – த[4]ஸ் 8.3.15; 4.53) = ருந்த்[3] த[4]ஸ், ருந்த[4]ந்தி.

2. அஸ் + லட் = அஸ் – θ + தஸ்/அந்தி = θ ஸ் + த: = ஸ்த :, ஸ் θ ஸ் + அந்தி = ஸந்தி

**6.4.112** ஸ்'னாப்[4]யஸ்தயோராத;

('க்' அல்லது 'ங்ஐ 'இத்' தாகக் கொண்ட ஸார்வ தாதுக ஒட்டுக் களுக்கு முன் நிற்கும்) 'ஸ்னா' விகரணத்தின் 'ஆத்' இரட்டித்த வினை யடியின் 'ஆத்' ஆகியவைகள் கெடும் (லோப)

1. க்ரீ + லட் = க்ரீ + ஸ்'னா + அதே (3.4.79; 7.1.4) = க்ரீ – ணா + அதே (8.4.2) = க்ரீ – ஸ்θ – அதே = க்ரீணதே 'அவர்கள் வாங்குகிறார்கள்': க்ரீ + லோட் – க்ரீ + ஸ்னா + அதாம் = க்ரீ + ணா + அதாம் = க்ரீ – ண்θ – அதாம் = க்ரீணதாம் 'அவர்கள் வாங்கட்டும்'

2. த[3]ா + லட் = த[3]ா + ஸ்'னு + அதே = த[3] – த[3]ா + அதே (6.1.10; 7.4.59) = த[3] – த்θ + அதே = த[3]த[3]தே ''அவர்கள் கொடுக்கிறார்கள்'' த[3]த[3]ந்தாட் 'அவர்கள் கொடுக்கட்டும்''

**6.4.113** ஈ ஹல்ய கே[4]ா:

மெய்யெழுத்தை முதலாகக் கொண்ட ('க்' அல்லது 'ஙித்' ஸார்வதாதுக ஒட்டுக்களுக்கு முன் நிற்கும் 'ஸ்னா'வின் 'ஆத்') 'கு[4]' என்ற ஸம்க்ஞாவினால் சுட்டப்படும் வினைகளைத் தவிர்த்த (த[3]ா, த[4]ா) (மற்ற வினைகளின்

இரட்டிக்கப்பட்ட அங்கத்தின் 'ஆத்' ஆகியவைகளுக்கு) 'ஈ' பதிலியாகும்.
1) க்ரீ + லட் = க்ரீ + ஸ்'னா + தஸ் = க்ரீணா + தஸ் = க்ரீணீதஸ்; க்ரீணீதா:, க்ரீணீவஸ், க்ரீணீமஸ்
2) மா + ஸ்'லு + தே = ம – மா + தே (6.1.10) 7.4.59 = மி – மா – தே (7.4.76) = மிமீதே. மீ – மா – அதே = மீமதே (6.4.112); த³ா + ஸ்'னு + தஸ் = த³ – த³ா + தஸ் = த³ – த்³ + தஸ் (6.4.112) த³த்த; (8.4.55)

**6.4.114** இத்³த³ரித்³ ரஸ்ய

மெய்யெழுத்தை முதலாகக் கொண்ட 'கித்' அல்லது 'ஙித்' ஸார்வ தாதுக ஒட்டுக்களுக்கு முன் நிற்கும் 'த³ரித்³ரா' என்ற வினையினிறுதி யான 'ஆ'வுக்கு 'இத்' (=இ) பதிலியாகும்.
த³ரி – த்³ரா + லட் = த³ரி – த்³ரா + θ + வஸ் = த³ரித்³ரீவஸ், ஆனால் த³ரித்³ரதி (6.4.112) த³ரித்³ராதி ('ஙித்' ஒட்டுக்கு முன்)

வா: த³ரித்³ரதே ராரத⁴த⁴ாதுகே லோபோ வக்தவ்ய
'த³ரித்³ரா' வினிறுதி 'ஆத்' (ஆ) ஆர்த⁴த⁴ாதுக வொட்டுக்களுக்கு முன் நிற்கும்போது கெடும் (லோப)

வா: ஸித்³த⁴ஸ்'ச ப்ரத்யய விதெ⁴ள ப⁴வத்தி வக்தவ்யம்
இந்த மறைதல் (லோப) இவ்வொட்டு தொடர்பான விதிகளைப் பயன்படுத்தும்போது நிகழ்ந்ததாக (ஸித்தமாக் கருதப்படும். ஆகவே த³ரித்³ராவின் ஈறான 'ஆ' கெடும்போது. இது 'த³ரித்³ர' என்று ஆகிறது. இதனோடு இணைக்கப்படும், ஒட்டு 'ஆ'வீற்று வினையான 'த³ரித்³ரா' வோடு இணைக்கப்படுபவையல்ல 'த³ரித்³ர' என்பதோடு இணைக்கக்கூடிய வொட்டுக்களாகத்தானிருக்க வேண்டும் 'ஆ'வீற்று வினையுடன் 'ண' வொட்டு இணைக்க வேண்டுமென்று சூ. 3.1.141 விதிக்கிறது. இங்கு இவ்வொட்டு வராது, ஆனால் பொதுவாக விதிக்கப்பட்ட 'அச்' (3.1.134) இதனோடு இணைக்கப்பட வேண்டும்.
த³ரித்³ராதி = த³ரித்³ல;

வா: அத்³யதன்யாம் வா இதிவக்தவ்யம்
'அத்³யதன'(Aorist) வினையில் இது விருப்பாகும். அத³ரித்³ரீத் அல்லது அத³ரிதி³ராஸீத்
'த³ரித்³ரஸ்ய' என்ற சொல், வேதமொழியில் காணப்படும் 'ஆ'வீற்றுச் சொல்லினீறு குறிலாக்கப்பட்ட ஒன்று.

**6.4.115** பி⁴யோ அன்யதரஸ்யாம்

'க்' அல்லது 'ங்' ஐ 'இத்'தாகக் கொண்ட மெய்யெழுத்தில் தொடங்கும் ஸார்வ தாதுக வொட்டுக்களுக்கு முன் வரும் 'பீ' 'பயப்படு' வினையின் ஈறுக்குப்

பதிலியாக 'இ' விருப்பாக வரும்.

பி$^4$ + லட் = பீ$^4$ + ஸ்'லு + தஸ் = பீ$^3$பீ$^4$த: அல்லது பீ$^3$பி$^4$த; பீ$^3$பீத$^2$: அல்லது பி$^3$பி$^4$த; ஆனால் பீ$^4$ + யக் + தே = பீ$^4$யதே ('யக்' ஆர்த$^4$த$^4$ ாதுக வொட்டு)

**6.4.116** ஜஹாதேஸ்'ச

'க்' அல்லது 'ங்'ஐ 'இத்'தாகக் கொண்ட மெய்யெழுத்தில் தொட ங்கும் ஸார்வதாதுக வொட்டுத் தொடரும்போது, 'ஜஹாதி' ('ஹா') யின் இறுதி 'ஆ'வுக்கும் 'இத்' (இ) விருப்பாகப் பதிலியாகும்.

ஹா + லட் = ஹா + ஸ்'னு + தஸ் = ஜஹாத:, அல்லது ஜஹித:, (6.4.113) ஜஹாத$^2$: அல்லது ஜஹித$^2$: ஆனால் ஜஹதி (உயிரெழுத்தில் தொடங்கும் ஒட்டுக்குமுன்) ஜஹாதி (ஙித்' அல்லாத வொட்டுக்குமுன்) ஹீயதே, ஜிஹீயதே (ஆர்த$^4$த$^4$ாதுகவொட்டுக்கு முன்)

தொடர்ந்து வரும் சூத்திரங்களில்பயன்படுத்துவ்தற்காக இதைத் தனியாகப் பிரித்துக் கூறப்பட்டிருக்கிறது.

**6.4.117** ஆ ச ஹெள

ஹா 'விட்டு விடு' வினீறுக்குப் பதிலியாக 'இ' அல்லது 'ஈ' அவ்வினையத் தொடர்ந்து ஸார்வத$^4$ாதுகவொட்டு நிற்கும்போது விருப்பாக வரும்.

ஹா + லோட் = ஹா + ஸ்1லு + ஹி = ஜ – ஹா – ஹி அல்லது ஜஹிஹி (6.4.116). ஜஹீஹி (6.4.113) (6.1.10; 7.4.59,62)

**6.4.118** லோபோ யி

'க்' அல்லது 'ங்'ஐ 'இத்'தாகக் கொண்ட 'ய்'யை முதலில் கொண்ட ஸார்வ தாதுக ஒட்டுக்களுக்கு முன் நிற்கும் 'ஹா'வினீறான 'ஆ' கெடும்.

ஹா + லிங் = ஹா + ஸ்'லு + யாஸுட் + ஸுட் + தாம் = (3.4.103;107) 3 - ஹா + யா θ + θ + தாம் (7.2.79) ஜ – ஹ்θ + யா + காம் = ஜஹ்யாகாம், ஜஹ்யு: (6.1.96), ஜஹ்யாத்

**6.4.119** க்$^4$வஸோரேத்$^3$த$^4$ாவப்சயாஸ லோபஸ்' ச

ஸார்வதாதுக ஒட்டான 'ஹி'க்கு (வியங்கோள்) முன் நிற்கும் 'கு$^4$' என்ற ஸம்க்$^3$ஞாவினால் குறிப்பிடப்படும் வினைகளினீறு, 'அஸ்' இனீறு ஆகியவைகளுக்குப் பதிலியாக 'ஏத்' ( ஏ) வரும். இரட்டித்த அசை (அதாவது த$^3$ா, த$^4$ா (கு4)வின் கெடும்.

1) த$^3$ா + லோட் = த$^3$ா + ஸ்'லு + ஹி = த$^3$ – த$^3$ா + ஹி = θθ – தே$^3$ + ஹி = தே$^3$ஹி 'கொடு'; தே$^4$ஹி

2) அஸ் + லோட் = அஸ் + θ + ஹி = அஏ + ஹி = ஏ + ஹி (6.1.97) = ஏ + தி$^4$ (6.4.22; 101) = ஏதி$^4$

**6.4.120** அத ஏக ஹல் மத்$^4$யே அனாதே$^3$ஸ'ாதேர்லிடி

'க்' அல்லது 'ங்'ஐ 'இத்'தாகக் கொண்ட 'லிட்' ஒட்டுக்களுக்கு முன்னால்

நிற்கும், இரட்டித்த அசையின் முதலெழுத்துக்கு ஆதேசம் (பதிலி) எதுவும் வராமலிருக்கும் (அனாதே3ஸாதி) ஒரு வினையடியின் இரு மெய்யெழுத்துக்களினிடையேயமையும் 'அத்' (= அ) துக்கு 'ஏத்' ( = ஏ) பதிலியாக வரும். ரண் + லிட் = ர – ரண் + அதுஸ் அல்லது துஸ் (6.1.8) = 00 ரேண் + அதுஸ், துஸ் = ரேணது:, ரேணு: 'எதிரொலித்தன' ஆனால் ர–ராண (+ணல்) ரம் + லிட் = ர – ரம் + ஏஸ்', ஆதே, இரேச் = ʘʘ ரேமே = ரேமே, ரேமாதே, ரேமிரே, ஆனால் ராஸ் + லிட் ரராஸே, ரராஸாதே, ரராஸிரே (இரு மெய்களுக்கு இடையில் அமையுமுயிர் நெடில்) சகணது:, சகணு: (<கண்) (க–வுக்கு 'ச' ஆதேசமாகிறது இந்த தாதுவின் இரட்டித்த அசையில்) இங்கு கூறப்பட்டிருக்கும் பதிலிகள் 'லிட்' ஒட்டுக்களால் உண்டாக்கப்பட்டவை. ஷஹ் + லிட் = ஸஹ் + லிட் = ஸ – ஸஹ் + ஏஸ்' = ஸேஹே, ஸேஹாதே, ஸேஹிரே நேமது:, நேமு: (<நம்) 6.1.64, 65.இல் கூறப்பட்டிருக்கும் விதிகள், இந்த விதியின் செயற்பாட்டுக்குள்ளடங்காது. இச்சூத்திரங்களில் கூறப்பட்டிருக்கும் வளைநாவொலிக்குப் பதிலியாக அதை ஒத்த பல்லொலி வரவேண்டுமென்ற விதி 'லிட்' தொடர்பானது மட்டுமல்ல.

வா: த$^3$ம்பே$^4$ரேத்வம் வக்தவ்யம்

'த$^3$ம்ப்$^4$' இன் 'அ'வுக்கு 'ஏ' பதிலியாகும்.

தே$^3$ப$^4$து:, தே3பு4: 6.4.24 இன்படி மூக்கொலி கெடுதல், 6.4.22 இன்படி அது கெட்டதென்று கருதப்படமாட்டாது.

வா: நஸிமன்யோரலிட்யேத்வம் வக்தவ்யம்

'லிட்'ஐத் தவிர்த்த மற்றவொட்டுக்களுக்கு முன் நிற்கும் 'நஸ்', 'மன்' ஆகியவைகளின் 'அ'வுக்கு 'ஏ' பதிலியாகும்.

நஸ் – அநேஸம் (aroist) மன் – மேனகா (மன் + வுன் 3.1.150)

வா: ச$^2$ந்த$^3$ஸ்யமிபசோரப்யலிடி

'லிட்'ஐத்தவிர்த்த மற்றவொட்டுக்களுக்குமுன் நிற்கும் 'அம்' 'பச்' ஆகியவைகளின் 'அ'வுக்கு 'ஏ' பதிலியாகும். வ்யேமானம் (வீ + அம் + சானஸ் = வ்யேம் + சானஸ் = வ்யேமானம் 'முக்' ஆகமம் மறையும்)

லிங் – பேசிரன் சரியான வடிவம் 'பசேரன்'

வா: யஜிவப் யோஸ்' ச

'யஜ்', 'வப்' ஆகியவைகளிலும் இவ்வாறே.

ஆயேஜே, ஆவேபே ('லிங்')

**6.4.121** த$^2$லி ச ஸேடி

மேற்சூத்திரத்தில் கூறப்பட்ட சூழலில் 'இட்'டுடனிணைத்து வரும் 'த$^2$ல்' (லிட், டின் பதிலி) லுக்கு முன்னும் (வினையின் இரு மெய்களுக்கிடையில் நிற்கும் 'அத்'துக்கு ஏத் பதிலியாகும்) பச் + இட் + த$^2$ல் = ப – பச் + இ + த$^2$ல் = ʘʘ –

பேச் – இ– த$^2$ = பேசித$^2$ 'நீ சமையல் செய்திருக்கிறாய்' ஆனால் ப – பச் + த$^2$ = பபக்த$^2$ (8.2.80). ('இட்' ஆகமம் இங்கு வரவில்லை) 'க்'ஐ 'இத்'தாகக் கொள்ளாத ஒட்டுக்கள் தொடரும்போதும் இச்சூத்திரத்தைப் பயன்படுத்தக் கூடும். 'த$^2$ல்'லைத் தவிர எந்த ஒரு 'கித்' தல்லாத 'லிட்' ஒட்டு 'இட்' ஆகமம் பெறாது. தெளிவாகப் புரிந்து கொள்வதற்காக இச்சூத்திரத்தில் 'த$^2$ல்' சேர்க்கப்பட்டிருக்கிறது.

**6.4.122** த்ரு$^1$ ப$^2$ல ப$^4$ஜ த்ரபஸ்$^1$ ச

'க்' அல்லது 'ங்'ஐ 'இத்'தாகக் கொண்ட 'லிட்' ஒட்டுக்கள், 'இட்' ஆகமத்துடன் வரும் 'த$^2$ல்' ஆகியவைகள், த்ரு$^1$ 'கட' ப$^2$ல் 'பழு', பலன் கொடு' ப$^4$ஜ் 'பங்கிடு, தொண்டு செய்', த்ரப் 'வெட்கப்படு, நாணமடை' ஆகிய வினைகளைத் தொடரும்போது அவைகளின் 'அ'வுக்குப் பதிலியாக 'ஏ' வரும்.

1) த்ரு$^1$ + லிட் = த – தர் + அதுஸ் (7.4.11) 00 தேர் + அதுஸ் தேரது:, தேரு:, தேரித$^2$

2) பே$^2$லது :, பே$^2$லு:, பே$^2$லித$^2$

3) பே$^4$ஜது:, பே$^4$ஜு:, பே$^4$ஜித$^2$

4) த்ரேபது:, த்ரேபு:, த்ரேபித$^2$

சூ. 6.4.126க்கு மாறாக, 'த்ரு$^1$'வில் 'குணம்' ஆன 'அ'வில் இவ்விதி பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

'பதிலியல்லாத' (அனாதே$^3$ஸ$^1$தி 120) என்பதற்குப் புறனடையாக 'ப$^2$ல்', ப$^4$ஜ்' ஆகியவைகள் செயற்படும். 'த்ரப' என்ற வினையில் 'அ' இரண்டு தனி மெய்களுக்கிடையில் நிற்கவில்லை.

வா: ஸ்$^1$ரந்தே$^2$ஸ்$^1$ச இதி வக்தவ்யம்

'ஸ்ரந்த்' என்பதிலும் இவ்விதி பயன்படுத்தப்படும்.

ஸ்$^1$ரேத$^2$து:. ஸ்$^1$ரேது$^2$:

**6.4.123** ராதே$^4$ா ஹிம்ஸாயாம்

'க்' அல்லது 'ங்'ஐ 'இத்'தாகக் கொண்ட 'லிட்' ஒட்டுக்கள் 'இட்' ஆகமத்துடன் வரும் 'த$^2$ல்' ஆகியவைகள் ராத்$^4$ என்ற வினை 'துன்புறுத்து' என்ற பொருளைச் சுட்டுமாறு வரும்போது தொடருமானால் அவ்வினையடியின் 'ஆ'வுக்கு 'ஏ' பதிலியாகும்.

அப + ராத்$^4$ + லிட் = அப – ர – ராத்$^4$ + அதுஸ் = அபரேத$^4$து:, அதரேது$^4$:, அபரேதி$^4$த$^2$ ஆனால் ரராத$^4$து:, ரராது$^4$:, ரராதி$^4$த$^2$ (மற்ற பொருட்களில்)

**6.4.124** வா ஜ்ரு$^1$ ப்$^4$ரமுத்ரஸாம்

'க்' அல்லது 'ங்'ஐ 'இத்'தாகக் கொண்ட 'லிட்' ஒட்டுக்கள், 'இட்' ஆகமத்துடன் வரும் 'த$^2$ல்' ஆகியவைகள் ஜ்ரு$^1$ 'முதுமையுறு' ப்$^4$ரம் ' தவறுசெய், சுற்றித்திரி', த்ரஸ் 'நடுங்கு' என்ற வினைகளுக்குப்பின் வரும்போது அவ்வினைகளின் 'அ'வுக்கு 'ஏ' விருப்பாகப் பதிலியாக வரும்.

1) ஜ்ரு$^{1}$ + லிட் = ஜ – ஜர் + அதுஸ் (7.4.11) = 00 – ஜேர் – அதுஸ் ஜேரது:, ஜேரு:, ஜேரித$^{2}$ அல்லது ஜஜரது:, ஜஜரு:, ஜஜரித$^{2}$

2) ப்$^{4}$ரம் + லிட் = ப்$^{4}$ரேமது:, ப்$^{4}$ரேமு:, ப்$^{4}$ரேமித$^{2}$ அல்லது ப$^{3}$ப்$^{4}$ரமது:, ப$^{3}$ப்$^{4}$ரமு:, ப$^{3}$ப்$^{4}$ரமித$^{2}$

3) த்ரஸ் – த்ரேஸது:, த்ரேஸு:, த்ரேஸித அல்லது தத்ரஸது:, தத்ரஸு:, தத்ரஸித$^{2}$

**6.4.125** ப$^{4}$ணாதீனாம் ச ஸப்தீனாம்

'க்' அல்லது 'ங்' ஐ 'இத்'தாகக் கொண்ட 'லிட்' ஒட்டுக்கள், 'இட்' ஆகமத்துடன் வரும் 'த$^{2}$ல்' ஆகியவைகள் 'ப$^{2}$ண்' (போ) முதலிய ஏழு வினைகளைத் தொடர்ந்து வரும்போது அவ்வினைகளின் 'அ'வுக்கு 'ஏ' விருப்பாகப் பதிலியாகும்.

1) ப$^{2}$ண் – பே$^{2}$ணது:, பே$^{2}$ணு:, பே$^{2}$ணித$^{2}$, அல்லது பப$^{2}$ணது:, பப$^{2}$ ணு:, பப$^{2}$ணித$^{2}$:

2) ராஜ் – ரேஜது:, ரேஜு:, ரேஜித$^{2}$: ரராஜது:, ரராஜு:, ரராஜித:

3) ப்$^{4}$ராஜ் – ப்$^{4}$ரேஜே, ப்$^{4}$ரேஜாதே, ப்$^{4}$ரேஜிரே, ப$^{3}$ப்$^{4}$ராஜே, ப$^{3}$ப்$^{4}$ராஜாதே, ப$^{3}$ப்$^{4}$ராஜிரே.

4) ப்$^{4}$ராஸ்$^{1}$ – ப்$^{4}$ரேஸே$^{1}$, ப்$^{4}$ரேஸ$^{1}$ாதே, ப்$^{4}$ரேஸி$^{1}$ரே ப$^{3}$ப்$^{4}$ராஸே$^{1}$, ப$^{3}$ப்$^{4}$ராஸ$^{1}$ாதே, ப$^{3}$ப்$^{4}$ராஸி$^{1}$ரே.

5) ப்$^{4}$லாஸ் – ப்$^{4}$லேஸே$^{1}$, ப்$^{4}$லேஸாதே, ப்$^{4}$லேஸிரே, ப$^{3}$ப்$^{4}$லாஸே, ப$^{3}$ப்$^{4}$லாஸாதே, ப$^{3}$ப் லாஸி1ரே

6) ஸ்யம் – ஸ்யேமது:, ஸ்யேமு:. ஸ்மேமித$^{2}$, ஸஸ்யமது:, ஸஸ்யமு:, ஸஸ்யமித$^{2}$

7) ஸ்வன் – ஸ்வேனது:. ஸ்வேனு:, ஸ்வேனித$^{2}$, 'ஸஸ்வனது:, ஸஸ்வனு:, ஸஸ்வனித$^{2}$ ஆனால் த$^{3}$த்$^{4}$வனது:, த$^{3}$த்$^{4}$வனு:, த$^{3}$த்$^{4}$வனித$^{2}$

**6.4.126** ந ஸ$^{1}$ஸ த$^{3}$த$^{3}$வாதி$^{3}$ கு$^{3}$ணானாம்

மேற்சூத்திரங்களில் கூறப்பட்ட சூழலில் வரும் ஸ$^{1}$ஸ்'வெட்டு', த$^{3}$த்$^{3}$ 'கொடு', 'வ்' என்ற எழுத்தை முதலாகக் கொண்ட வினைகள், 'குண' ஆதேசமாக வரும் 'அ' ஆகியவைகளில் காணப்படும் 'அ'வுக் கு 'ஏ' பதிலியாகாது.

1) வி + ஸ$^{1}$ஸ் + லிட் = விஸ$^{1}$ஸ$^{1}$ஸது:, விஸ$^{1}$ஸ$^{1}$ஸு: விஸ$^{1}$ஸ$^{1}$ஸித$^{2}$

2) த$^{3}$த$^{3}$தே$^{3}$, த$^{3}$த$^{3}$த$^{3}$ாதே, த$^{3}$த$^{3}$தி$^{3}$ரே

3) வவ மது:, வவமு:, வவமித$^{2}$

4) விஸஸரது:, விஸ$^{1}$ஸ$^{1}$ரு:, விஸ$^{1}$ஸ$^{1}$ரித$^{2}$

**6.4.127** அர்வணஸ்த்ரஸாவனரு:

'ஸு' (முதல் வேற்றுமையொருமையுருபு) வைத் தவிர்த்த மற்றவொட்டுக்கள்(அஸௌ) தொடர்ந்து நிற்கும்போது அர்வன் 'பந்தயக் குதிரை' என்ற அடிச்சொல் 'நஞ்' ஒட்டோடிணைந்து நிற்காமல் அமையுமானால் (அநஞ்), இந்த அடிச்சொல்லினீறுக்கு 'த்ரு' பதிலியாக வரும். அர்வன் + ஔ (அ) ஜஸ் (அ) அம் = அர்வத்ரு$^{1}$ + ஔ/ஜஸ்/அம் = அர்வ – நும்

– த் + ஔ/ஜஸ்/அம் (7.1.10) = அர்வந்தௌ, அர்வந்த:, அர்வந்தம் ஆனால் அர்வன் + ஸு = அர்வான் ஸு (8) அர்வான் + θ (6.1.68) = அர்வா + θ (8.2.7) = அர்வா

அநர்வா, அநர் வானௌ, அநர்வான: அர்வன் + ஙீப் (4.1.5) = அர்வத்ரு' + ஈ = அர்வதீ; அர்வன் + அண் அர்வதா

**6.4.128** மக⁴வா ப³ஹுலம்

மேற்சூத்திரத்தில் கூறியவொட்டுக்களுக்கு முன் நிற்கும் மக⁴வன் 'இந்திரனின் பெயர், தாராளமனமுடைய' என்ற அடிச்சொல்லினீறுக்கு 'த்ரு' பலவகையில் பதிலியாகும்.

1) மக⁴வான், மக⁴வந்தௌ, மக⁴வந்த: மகவந்தம், மக⁴வந்தௌ, மக⁴வத: அல்லது

2) மக⁴வா, மக⁴வானௌ, மக⁴வான: மக⁴வானம், மக⁴வானௌ, மகே⁴ான: இரண்டாவதில் 'த்ரு' பதிலியாக வரவில்லை.

**6.4.129** ப⁴ஸ்ய

இச்சூத்திரத்தில் தொடங்கி, இந்த அத்தியாயத்தின் இறுதிவரை விதிக்கப்பட்டிருக்கும் விதிகள் 'ப⁴' என்ற ஸம்க்³ஞாவினால் குறிக்கப்பட்ட பெயரடிச் சொற்களில் (1.4.18, 19) பயன் படுத்தப்பட வேண்டும்.

இது ஒரு அதிகார சூத்திரம் 'ப⁴' என்ற இச்சூத்திரத்தில் சொல், இவ்வத்தியாயத்தின் கடைசி சூத்திரம் வரை அனுவிருத்தியாகும்.

**6.4.130** பாத³:பத்

'பாத³' என்ற அடிச் சொல் 'ப⁴' என்ற ஸம்க்ஞாவினால் குறிப்பிட ப்படும்போது, அதற்கு 'பத்³' பதிலியாகும். உயிரெழுத்து அல்லது 'ய்'வில் தொடங்கும் ஒட்டுக்களுக்குமுன் (அஸர்வநாமஸ்த²ான) நிற்கும் அடிச் சொல், அல்லது 'மதுப்' ஒட்டின் பொருளைச் சுட்டும ஒட்டுக்களுக்குமுன் நிற்கும் 'த்' அல்லது 'ஸ்' இல் முடியும் சொல் ஆகியவைகள் 'ப⁴' என்ற 'ஸம்க்³ஞா' பெறும் (1.4.18–19). த்³வௌ பாதௌ³ அஸ்ய = த்³விபாத்³ (5.4.140) + ஸ'ஸ்/டா/ஙே = த்³விபத³:, த்³விபத³ா, த்³விபதே³. த்³வௌ த்³வௌ பாதௌ³ த³த³ாதி = த்³வி – பாத்³ + வுன் (5.4.1) + டாப் = த்³வி பதி³காம் (7.3.44) த³த³ாதி வ்யாக்⁴ரஸ்ய பாதௌ³ இவ பாதௌ³ அஸ்ய வ்யாக்⁴ர பாத்³ தஸ்ய அபத்யம் = வ்யாக்⁴ர பாத்³ + யன் (5.4.138; 4.1.105) = வையாக்ரபத்³ய: (7.3.3)

**6.4.131** வஸோ: ஸம்ப்ரஸாரணம்

'வஸு' (க்வஸு) என்ற 'ப⁴' என்ற அடிச்சொல்லின் ஒட்டின் அரையுயிர் முழு உயிராகும்.

வித்³ + வஸு + ஸ'ஸ் /டா/ஙே = வித்³ – உஸ் – அஸ் /ஆ/ ஏ = விது³ஷ:, விது³ஷா, விது³ஷே வித்³ – வஸ் + ஙீப் = விது³ஷீ (6.1.108), (8.3.59); வித்³வஸ் + அஸ் = வைது³ஷ

**6.4.132** வாஸ ஊட்[2]

'வாஸ் ("ப[4]" என்ற அடிச்சொல்லின்) என்பதின் அரையுயிருக்குப் பதிலியாக 'ஊட்[2]') வரும். ப்ரஷ்ட[2]ம் வஹதி = ப்ரஷ்ட + θ + வஹ் + ண்வி (3.2.64) ப்ரஷ்ட[2] வாஹ் + ஸ'ஸ்/டா/ஙே = ப்ரஷ்ட[2] ஊட[2]ா: + அ: /ஆ/ஏ = ப்ரஷ்டௌஹ:, ப்ரஷ்டௌஹா, ப்ரஷ்டௌஹே (6.1.89;108)

**6.4.133** ஸ்'வ யுவ ம கே[4]ா னாமதத்[3]தி[4]தே

('ப[4]' பெயரடிச் சொற்களான) ஸ்'வன் 'நாய்', யுவன் 'இளைஞன்', மக[4]வான் இந்திரனின் பெயர், தாராளமனப்பான்மையுடைய' ஆகியவைகளின் அரையுயிர் முழு உயிராகும். ஆனால் தத்திதவொட்டுக்களுக்கு முன் அவ்வாறாகாது.

1. ஸ்வன் + ஸ'ஸ்/டா/ஙே = ஸ்வன் அஸ்/ஆ/ஏ = ஸுன:, ஸுவா, ஸுனே (6.1.108)

2. யுவன் – யூன:, யூனா, யூனே

3. மக[4]வான – மகே[4]ான:, மகே[4]ானா, மகே[4]ானே 'ன்' ஈற்றுச் சொற்களில்தான் இவ்விதி செயற்படும். ஆகவே யுவதி (4.1.77) + ஸ'ஸ் = யுவதீ: (6.1.102): மது[4]வத:மக[4]வதா, மக4வதே அடுத்த சூத்திர த்தில் அமையும் 'அன' இச்சூத்திரத்திலும் செயற்படும்.

**6.4.134** அல்லோபோ அன:

('ப[4]' அடிச் சொல்லினிறுதியசையான) 'அன்' இன் 'அத்' (அ) கெடும்.

ராஜன் + ஸ்'/டா/ஙே = ராஸ்θ–ன் + அ :/ஆ/ஏ = ராக்[3]ஞ:, ராக்[3]ஞா, ராக்[3]ஞே

தக்ஷன் + ஸ'ஸ்/டா/ஙே = தக்ஷ்ண:, தக்ஷ்ணே

வா: அனோநகாராந்தஸ்யாயம் லோப இஷ்யதே இந்த மறைதல் (லோபம்) 'இன்' இல் முடியும் அடிச் சொல்லில்தான் ஏற்படும். ஆகவே 'ராஜகீயம்' என்ற சொல்லினீறு கெடாது.

**6.4.135** ஷபூர்வயன் த்[4]ருதராக்ஞாமணி

'அன்'ஈற்று 'ப[4]' அடிச்சொல், 'ஷ்' 'ஹன்', த்[4]ருதரா[3]ன்' ஆகியவற்றைத் தொடர்ந்து நின்று, அவ்வடிச்சொல் 'அண்' என்ற ஒட்டுக்கு நிற்கும்போது 'அன்' இன் 'அ'கெடும்.

1) உக்ஷன் + அண் (4.1.92) = ஔக்ஷன் + அ = ஔக்ஷ் θ–ஸ்–அ = ஔக்ஷ்ண

ஆனால் தக்ஷன் + ண்ய (4.1.151) தாக்ஷண்ய

2) ப்[4]ரூண – ஹன் + அண் = ப்[4]ரூணக்[4]ன (7.3.84)

3) த்[4]ருத – ராஜன் + அண் = த[4]ார்த ராஜ்θன – அ = த[4]ார்தராக்ஞ:

இது 6.4.144; 167 க்குப் புறனடை

**6.4.136** விப⁴ாஷா ஙிஸ்¹யோ;

'ஙி' (7 ஆம் வேற்றுமையொருமை) யுருபு ஸி¹(முதலாம் இரண்டாம் வேற்றுமை (நபும்ஸக இருமையுருபு) ஆகியவைகளுக்கு முன் நிற்கும் 'அன்' ஈற்று 'ப' அடிச்சொல்லின் 'அ' விருப்பாகப் பதிலியாகும்.

ராஜன் + ஙி = ராக்³ஞி

ஸாமன் + ஸி = ஸாம் 0 – ன் – இ = ஸாம்னி ஸாமனி

**6.4.137** ந ஸம் லோக³ாத்³வமந்தாத்

(உயிரெழுத்து அல்லது அரையுயிர் 'ய்' இல் தொடங்கும் ஒட்டுக்களுக்கு முன் நிற்கும்) 'ன்' அல்லது 'ம்' ஐ இறுதியில் கொண்ட கூட்டு மெய்யைத் தொடர்ந்து அமையும் 'அன்' ஈற்று 'ப⁴' எனப்படும் அடிச்சொல்லின் 'அ' கெடாது.

அத²ர்வன் + ஸ¹ஸ்/டா/ஙே = அத²ர்வண:, அத²ர்வணே

ப்³ரஹ்மன் + ஸ¹ஸ்/டா/ஙே = ப்³ரஹ்மண:,

ப்³ரஹ்மணா, ப்³ரஹ்மணே; ப்³ரஹ்மன் + அண் = ப்³ராஸ்மண ஆனால் தக்ஷ்ணா, தக்ஷ்ணே, ஸாம்னா, ஸாம்னே.

**6.4.138** அச:

உயிரெழுத்து அல்லது அரையுயிர் 'ய்'ஐ முதலில் கொண்ட வொட்டுக்களுட்கு முன் நிற்கம் 'ப4' அடிச்சொல்லின் 'அச்' இன் 'அ' கெடும். 'அச்' (என்று இச்சூத்திரத்தில் கொடுக்கப்பட்டிருக்கும்) என்பது, 'அஞ்ச்' இன் மூக்கொலி கெடுவதால் பெறப்படும் 'அச்'ஐச் சுட்டும் (6.4.24)

த³தி⁴ + அஞ்ச் + க்விப் = த³தீ⁴ + அθச் θ (6.4.24; 6.1.67) + ஸ¹ஸ்/டா/ஙே = த³தி⁴ + θச் – அஸ்/ஆ/ஏ = த³த்⁴ச:, த³தீ⁴சா, த³தீ⁴சே; த³தீ + அச் + அண் = த³தீச (6.3.138)

**6.4.139** உத³ஈத்

உயிரெழுத்து அல்லது அரையுயிர் 'ய்'ஐ முதலில் கொண்டவொட்டுக்களுக்கு முன் நிற்கும் 'ப⁴' எனப்படும் அடிச் சொல்லினீறான 'அச்'

'உத்' (இடைச் சொல்) ஐத் தொடர்ந்து வருமானால், அதன் 'அ'வுக்கு 'ஈ' பதிலியாக வரும்.

உத்³ + அஞ்ச் + க்வின் = உத்³ + அθச் + θ + அஸ்/ஆ/ஏ (3.1.38) = உதீ³ச: , உதீ³சா, உதீ³சே உத்³ + அஞ்ச் + க (5.4.8) = உதீ³சீன; உத்³ + அஞ்ச் + யத் (4.2.101) = உதீச்ய

**6.4.140** ஆதோ த⁴ாதோ:

உயிரெழுத்து அல்லது அரையுயிர் 'ய்'வை முதலாகக் கொண்ட ஒட்டுக்களுக்கு முன் நிற்கும் ('ப⁴' என்ற ஸம்க்ஞாவினால் கட்டப்படும்) தாதுவின் ஈறான 'ஆத்' ( = ஆ) கெடும். கீலாலம் பிப³தி = கீலால + பா + விச் = கீலாலபா "தேவர்களின் பானத்தையருந்துபவன்". கீலாலபா + ஸ¹ஸ்/டா/

ஙே கீலால—பθ அஸ் = கீலாலப:,
கீலாலப + ஆ = க்லாலபா
கீலாலப + ஏ = கீலாலபே
ஸுப்ம்ய:, ஸுப்ம்யா, ஸுப்ம்யே ஆனால், க²ட்வா: ('ஆ'தாதுவினீறல்ல)
இச்சூத்திரம் இரண்டு பகுதிகளாக அதாவது (1) ஆத: (2) த⁴ாதோ: என்று அமைக்கப்பட்டிருக்க வேண்டும். அதனால் 'ஆ' பொதுவாகக் கெடும். பாணினியே சில சூத்திரங்களில் அவ்வாறு பயன்படுத்தியுள்ளார். க்த்வா, ஸ்னா, ஆகியவைகளை க்த்வோ ல்யப் (7.1.37), ஸ்'ன; ஸானச் (3.1.83) என்று பயன்படுத்தியிருக்கிறார்.

**6.4.141** மந்த்ரேஷ்வாங்யா தே³ராத் மன:
வேதமொழியில் மந்திரப் பகுதியில் ஆத்மன் 'தான்' என்ற பெயரடிச் சொல்லைத் தொடர்ந்து 'ஆங்' (டா) மூன்றாம் வேற்றுமையொருமையுருபு) வரும்போது, அப் பெயர்ச் சொல்லின் முதலெழுத்து கெடும்.
ஆத்மன் + ஆங் = ஆத்மன் + ஆ = θ த்மன் – ஆ = த்மனா த்மனா தே³வேப்⁴ய;,
மற்ற இடங்களில் ஆத்மனா

வா: ஆஙோ அன்யத்ராபி த்ரு'ஸ்'யதே
மற்ற வேற்றுமையிலும் 'ஆத்மன்' இன் 'ஆ' கெடுதலைப் பார்க்கலா ம். த்மன்யாஸஞ்ஜத மஹ்யம் (த்மனி ஆஸஞ்ஜத)

**6.4.142** தி விம்ஸ'தேர் டி³தி
'ட்³'ஐ 'இத்' தாகக் கொண்டவொட்டுத் தொடரும்போது விம்ஸ' தி ('ப⁴' அடிச்சொல்) யின் 'தி' கெடும். விம்ஸ1தி + ட்3வுன் (5.1.24) = விம்ஸ' – θθ + வுன் = விம்ஸ' + அக (7.1.1) = விம்ஸ் θ – அக (6.4.148) = விம்ஸ'க: 'இருபதுக்கு வாக்கியது' விம்ஸ' – தி + ட³ட் (5.2.48) = விம்ஸ + θθ + அ = விம்ஸ 'இருபதாவது'

**6.4.143** டே:
'ட்³' ஐ 'இத்'தாகக் கொண்ட ஒட்டுக்கள் தொடர்ந்து நிற்கும்பே ாது 'ப⁴' அடிச்சொல்லின் கடைசி உயிர் (டி') (ஒரு மெய்யெழுத்துட ன் இருந்தாலும்) கெடும்.
குமுத³ + ட்³மதுப் (4.2.87) = குமுத்³ θ + மதுப் குமுத்³வத் வேதஸ் + ட்3மதுப் = வேதஸ்வத் ³ட³வத்; த்ரிம்ஸ'த் + ட்³வுன் (5.1.24) = த்ரிம்ஸ் – θθ + அக த்ரிம்ஸ'க: "முப்பதுக்கு வாக்கியது"
'ப⁴' அல்லாத அடிச் சொல்லானாலும் இவ்விதி இச்சூழலில் செயறபடும். ஏனென்றால் 'ட்³' என்ற 'இத்' பயனுள்ளது. உபஸரஜ;, மந்து³ரஜ: (3.2.97) 'க்ருத்' ஒட்டான 'ட³' இணைக்கப்பட்ட தருவிக்கப்பட்ட சொல்)

**6.4.144** நஸ் தத்$^{3}$தி$^{4}$தே

'தத்$^{3}$தி$^{4}$த' ஒட்டுத் தொடர்ந்து நிற்கம்போது, 'ப$^{4}$' அடிச் சொல்லினீறாக அமையும் 'ன்' (அதற்கு முன்னால் நிற்கும் உயிரெழத்துடன்) கெடும்.

அக்$^{3}$னி – ஸ'ர்மன் + இஞ் (4.1.96) = அக்$^{3}$னி – ஸ'ர்ம் θθ + இ = அக்$^{3}$னிஸ'ர்மி ''அக்னிஸர்மனின் வழித் தோன்றல்'' ஆனால் ஸாத்வத:

வா: நாந்தஸ்ய டிலொபே ஸப்$^{3}$ரஹ்மசாரி பீட$^{2}$ ஸர்ப்பி கலாபிகுது மிதைதிலி ஜாஜலி லாங்க$^{3}$லி ஸி'லாலி ஸி'க$^{2}$ண்டி$^{3}$ ஸூ கரஸத்$^{3}$ம ஸுபர்வணாம் உபஸம்க்$^{2}$யானம் கர்த்தவ்யம்.

கீழ்க்கண்டவைகளின் இறுதி 'ன்' அதற்கு முன் நிற்கும் உயிரெழுத்துடன், தத்தித ஒட்டுத் தொடர்ந்து வரும்போது கெடும்.

1) ஸப்$^{3}$ரஹ்மசாரின் – ஸாப்$^{3}$ர,ஹ்மசாரா: (4.3.120)

2) பீட$^{2}$ஸர்ப்பின் – பைட$^{2}$ஸர்ப்பா: (4.3.120);

3) கலாபின் – காலாபா: (4.3.108; 4.2.59)

4) குது$^{2}$மின் – கௌது$^{2}$மா: (4.3.101)

5) தைதிலின் – தைதிலா: (4.3.116)

6) ஜாஜலின் – ஜாஜலா: (4.2.59)

7) லாங்க$^{3}$லின் – லாங்க$^{3}$லா:

8) ஸி'லாலின் – ஸி'லாலா:

9) ஸி'க$^{2}$ண்டி$^{3}$ன் – ஸை'க$^{2}$ண்ட$^{3}$ா;

10) ஸூகரஸத்$^{3}$மன் – ஸௌகர ஸத்$^{3}$மா:

11) ஸுபர்வன் – ஸௌபர்வா:

மேற்குறிப்பிட்ட சொற்களில் 'இன்'வில் முடியுஞ் சொற்களில் 6.4.164 விதியினால் தடுக்கப்பட்டாலும் 'இன்' கெடும்.

அவ்வாறே 'அன்'இல் முடியுஞ் சொற்களில் 'அன்'னும் 6.4.167 தடை விதிக்கப்பட்டாலும் கெடுகிறது.

வா: அம்மனோ விகார உபஸம்க்யானம்

'அதனால் செய்யப்பட்டது' என்ற பொருளைச் சுட்டும் தத்தித ஒட்டுக்கு முன் நிற்கும் அஸ்'மன்' இன் இறுதி 'அன்' கெடும்.

ஆஸ்ம: மற்ற பொருட்களில் ஆஸ்மன:

வா: சர்மண: கோஸ' உபஸம்க்$^{2}$யானம்

'உறை' என்ற பொருளைச் சுட்டும் தத்தித ஒட்டுக்கு முன் நிற்கும் 'சர்மன்' இன் 'அன்' கெடும். சார்ம; (4.3.123) மற்றது சார்மண:

வா: ஸு'ன ஸங்கோச உபஸம்க்2யானம் 'சுருங்குதல்' என்ற பொருளைச் சுட்டும் தத்தித ஒட்டுக்குமுன் நிற்கும் 'ஸ்'வன்' இன் 'அன்' கெடும். ஸௌ'வ: (4.3.120) மற்றது ஸெ'வன:

வா: அவ்யயானாம் ச ஸாயம்ப்ராதிகாத்3யர்த2முப ஸம்க்2யானம்

'ஸாயம்ப்ராதிக' போன்ற அவ்யயங்கள் 'டி' (இறுதியசை) கெட்டு ஆக்கப்படுபவை ஸாயம்ப்ராதிக:, பௌன: புனிக:, ப1ாஹ்றப:, கௌதஸ்குத: (இவைகள் 'ட2ஞ்' ஒட்டிணைக்கப்பட்டு ஆக்கப்பட்ட சொற்கள் (4.3.11), ஆனால் ட்1யு, ட்1யுல் இணைக்கப்படும்போது அவ்வாறாகாது.

ஆராதீய:, ஸ1ாஸ்வதிக: ஸ1ாஸ்வத: ஆகியவைகளில் 'டி' லோபம் காணப்படவில்லை. பாணினியே சூ.2.4.9இல் 'ஸாஸ்வதிக' என்ற சொல்லைப் பயன்படுத்தி இந்தப் புறனடையை காட்டியிருக்கிறார்.

**6.4.145** அஹ்னஷ்ட2கே2ாரேவ

'தத்3தி4த 'வொட்டான 'ட'(ச்) (5.4.91, க2 (5.1.87) ஆகியவைகள் தொடர்ந்து வரும்போது அஹன் 'பகல்' ('ப4' அடிச்சொல்) இன் இறுதியசை (கடைசியிலமையும் உயிரெழுத்துடன்) கெடும்.

த்3வி + அஹன் + டச் (5.4.91) = த்3வி + அஹ் 00 + அ = த்3வியஹ 'இரண்டு நாள்பொழுது'; த்3வி + அஹன் + க2 = த்வி + அஹ் 00 ஈன:=ஷ = த்வ்யஹீன: 'இரண்டு நாட்களில் முடித்த' ஆனால் அஹன் + ட2ஞ் = ஆஹ் 0 ன் – அகம் ஆஹ்னிகம் 'தினசரி, பகலினுடைய'

வா: அஹ்ன: ஸமூஹே கே2ா வக்தவ்ய:

சேர்க்கை, கூட்டம் என்ற பொருளில் 'அஹன்' உடன் 'க2' வரும். அது ஒரு வேள்வியைக் குறிக்கும்.

அஹீன: (அஹன் + க 4.2.42) "ஒரு வேள்வியின் பெயர்" 'ட', 'க2'வு க்கு முன் நிற்கும் 'அஹன்' இன் 'அன்' முத்திய சூத்திரத்தின்படி மறை ந்திருக்கும். ஆயினும் இச்சூத்திரம் ஒரு கட்டுப்பாடு அல்லது வரையறைக்குட்படுத்துகிறது. வேறு தத்திதவொட்டுத் தொடரும்போது 'அஹன்' இன் 'அன்' மறையாது. இவ்விரண்டு ஒட்டுக்கள் தொடரும் போதுதான் அவ்வாறாகும் என்று இவ்விதி ஒரு கட்டுப்பாடு அமைக்கிறது. ஆகையால் அஹன் + ட2ஞ் = ஆஹ்னிகம் (5.1.79) 'ஏவ' என்ற சூத்திரத்தில் காணப்படும் சொல், 'ட', க2வுக்குமுன் நிற்கும் 'அன்'ஐ இறுதியில் கொண்ட மற்ற சொற்களிலும் 'அன்' மறையும் 'அஹன்' மட்டு மல்ல என்று சுட்டும். சூ.6.4.169 விதிக்கப்பட்டிருக்கும் 'ஆத்மன்', 'அத்4வன்' என்ற சொற்களோடு 'க2' வரும்போது 'அன்' கெடாது என்ற புறனடையிலிருந்து இது ஊகிக்கப்படும்.

**6.4.146** ஓர் கு3ண:

தத்திதவொட்டுக்குமுன் நிற்கும் ('ப4' அடிச் சொல்லினீறாக அமையும்) 'உ' (குறில்/நெடில்)வுக்கு அதன் 'குண' எழுத்து பதிலியாகும்.

ப3ப்4ரு + யஞ் (4.1.106) = ப3ப்4ரோ + ய = ப3ாப்4ரவ்ய (6.1.79); மாண்ட3வ்ய: (= மாண்டு) ஸ1ங்கு + யத் (5.1.2) = ஸ1ங்கோ + யத் = ஸ1ங்கவ்யம் த3ாரு 'ஆப்புக்குத் தகுந்த மரம்'

பிசவ்ப: (பிசு) கார்பாஸ: கமண்டலவ்யா (கமண்டுலு) ம்ருத்திகா பரஸ'வ்யம் (பரஸு') அப 'ஒரோத்' என்ற சூத்திரத்தை எளிதாக அமைந்திருத்திருக்கலாம். ஆயினும் 'குண' என்ற ஸம்க்3ஞாவை இங்கு சேர்த்து அமைக்கப் பட்டிருப்பதின் நோக்கம் என்னவென்றால் "ஸம்க்ஞாபூர்வகோ விதிரனித்ய: என்ற பரிபாஷா இருப்பதை நினைவு கூர்வதற்காக இதன் பொருள் வருமாறு" ஒரு ஸம்க்ஞாவினால் விதிக்கப்பட்ட விதி எல்லா இடங்களிலும் பொதுவாக செயற்படாது. ஆகவே இச்சூத்திரம் 'அநித்யம்' ஆகும். ஆகையால் ஸ்வயம்பு[4]வ: என்ற சொல் 'ஸ்வயம்பு[4]' என்ற சொல்லிலிருந்து 'குணம்' எழுத்து வராமல் தருவிக்கப்படும். (பார்க்க 7.4.30)

**6.4.147** டே[4]ர்லோப: அகத்[3]ர்வா:

'கத்[3]ரு' வைத்தவிர்த்த மற்ற 'உ'வீற்று 'ப[4]' அடிச்சொற்கள் 'ட[4]' என்ற தத்தித வொட்டுக்கு முன் நிற்கும்போது அவைகளின் ஈறுகெடும்.

கமண்டு[3]லு + ட[4]ஞ் = காமண்டு[3]ல்θ + ஏய = காமண்ட[3]லேய

கத்[3]ரூ + ட[4]க் (4.1.120) = காத்[3]ரோ + ஏய (6.4.146; 7.2.118) = காத் ர[3]வேய (6.1.78)

**6.4.148** யஸ்யேதி ச

உயிரெழுத்து அல்லது அரையுயிர் 'ய்'வை முதலாகக் கொண்ட தத் தித ஒட்டு அல்லது ஈத் (= ஈ பெண்பாலொட்டு) ஆகியவற்றிற்கு முன் நிற்கும் 'ப[4]' அடிச்சொல்லினீறான 'இ' அல்லது 'அ' கெடும்.

த[3]க்ஷ + இஞ் (4.1.95) + ஙீஷ் (4.1.65) = தா[3]க்ஷ θ – இ + ஈ = தா[3]க்ஷθ– ஈ, = தா[3]க்ஷீ 'தக்ஷனின் வம்சத்தில் பிறந்த பெண்' து[3]லி + ட[4]க் (4.1.122) = தெ[3]ால் θ – ஏய = தெ3ளலேய த[3]க்ஷ + இஞ் = தா[3]க்ஷθஇ = தா[3]க்ஷி: "தக்ஷனின் வம்சத்தில் பிறந்த ஆண்" : குமார + ஙீப் (4 .1.20) = குமார் θ – ஈ (6.1.161) குமாரீ

வா: யஸ்யேத்யௌங: ஸ்'யாம் ப்ரதிஷேத[4] வக்தவ்ய

ஸி' (ஈ) (முதல், இரண்டாம் வேற்றுமை (நபும்ஸக) இருமை) யின் பதிலியானால் (7.1.18) இந்த 'ஈ' அவ்வாறாவதற்குத் தடை. சில 'ஆ' வீற்றுப் பெண்பாற்சொற்களும் அவ்வாறே, இந்த 'ஈ'க்கு முன்னால் நிற்கும் 'இ' 'ஆ' கெடா. காண்ட[3] + ஈ = காண்டே ஸௌர்ய + ஈ = ஸௌர்யே

வா: இயநுவங்ப்[4]யாம் லோபோ ப[4]வதி விப்ரதிஷேதே[4]ன 'இயங், உவங்' ஆகியவைகள் லோப (மறைதல்) ஒரே சமயத்தில் செயற்பட வேண்டிய சூழலில் 'லோபம்தான் நிகழும், ஸ்ரீ, ப்[4]ரூ ஆகியவைகளுடன் 'இயங்' 'உவங்' வரும்.

ஸ்'ரீ + ஔ = ஸ்'ரியௌ, ஸ்ரிய:

ப்[4]ரூ + ஔ = ப்[4]ருவௌ, ப்[4]ருவ: கமண்டலு + கட[4]ஞ்(4.1.137) = காமண்டலேய: ('உ' மறைதல்)

வத்ஸப்ரீ + ட[4]ஞ் (4.1.135) இங்கு 6.4.77, 6.4.148 இரண்டையுமே

பயன்படுத்தலாம். ஆனால், முன்னால் குறிப்பிட்டதைப் பின்னுக்குத் தள்ளி 6.4.148 முன்னுக்கு வரும். ஆகையால் வாத்ஸப்ரேய:, லேக$^{2}$ாப்ரேய

**6.4.149** ஸூர்ய திஷ்யாக$^{3}$ஸ்த்ய மத்ஸ்யானாம் ய உபத$^{4}$ாயா:

'ப$^{4}$த் அடிச் சொற்களான ஸூர்ய 'சூரியன்', திஷ்ய 'ஒரு நட்சத்திரத்தின் பெயர்' அக$^{3}$ஸ்த்ய 'ஒரு முனிவரின் பெயர் மத்ஸ்ய 'மீன்' ஆகியவைகளைத் தொடர்ந்து 'ஈத்' (ஈ பெண் பாலொட்டு), உயிரெழுத்து அல்லது 'ய்'வை முதலில் கொண்ட தத்தித வொட்டுக்குள் நிற்கும்போது, அவ்வடிச் சொற்களின் ஈற்றயலான 'ய்' கெடும்.

ஸூர்ய + அண் (4.1.112) + ஙீப் (4.1.15) = ஸௌர்ய்ϴ + அ + ஈ (4.1.118) = ஸௌர்ய் + ϴ – ஈ = ஸௌர்ϴ – ஈ = ஸௌர் ப$^{3}$லாக "சூரியன் இருக்கும் திசைக்குச் சமமான திசையில் பறக்கும் கொக்கு" திஷ்ய + அண் = தைஷ்ய ϴ அ = தைஷ்ய:

திஷ்யேண யுக்த: கால: "திஷ்ய நட்சத்திரத்திலமையும் நேரம்" அக$^{3}$ஸ்த்ய + அண் + ஙீப் = ஆக$^{3}$ஸ்தீ "அகஸ்தியனின் வமிசத்தில் பிறந்த பெண்"

மத்ஸ்ய + ஙீஷ் = மத்ஸீ

வா: மத்ஸ் யஸ்ய ங்யாமி தி வக்தவ்யம்

பெண்பாலொட்டான 'ஈ' (ஙீ)க்கு முன் 'மத்ஸ்ய' நிற்கும் போதுதான் 'ய்' கெடும். ஆகவே மத்ஸ்ய ஸ்ய இத$^{3}$ம் மாம்ஸம் – மாத்ஸ்யம்

வா: ஸூர்யாக$^{3}$ஸ்த்யயோஸ்$^{1}$ சே$^{2}$ சண்யாம் ச

ஸூர்ய, அக$^{3}$ஸ்த்ய என்ற சொற்களின் 'ய்', அகைகளைத் தொடர்ந்து 'ச$^{2}$' ஈ (பெண்பாலொட்டு) நிற்கும்போது கெடும்.

ஸெவரீய (ச$^{2}$), ஸௌரீ (ஈ) ஆ$^{3}$கஸ்தீய:, ஆக$^{3}$ஸ்தீ

ஆனால் ஸௌர்யம் சரும் நிர்வபேத் ஸூர்ய + அண் = ஸௌர்யம் (4.1.114) ஆக$^{3}$ஸ்த்ய

வா: திஷ்யபுஷ்யயோர் நக்ஷத்ராணி

திஷ்ய, புஷ்ய ஆகியவைகள் நட்சத்திரங்களின் பெயரைச் சுட்டும் போதுதான் 'ய்' கெடும். திஷ்யேண நக்ஷத்ரேண் யுக்த: கால: தைக்ஷ:, பௌஷ: (4.2.3)

வா: அந்திகஸ்ய தஸி காதி$^{3}$லோப ஆத்$^{3}$யுத$^{3}$ாத்தம் ச

அந்திக என்ற சொல்லைத் தொடர்ந்து 'தஸி' நிற்கும்போது, அச் ரெசல்லின் 'க' கெடும். தருவிக்கப்பட்ட சொல்லின் முதலசை உத ாத்த சுரம்பெறும். அந்தித:, அந்திதோ ந தூ$^{3}$ராத்$^{3}$

வா: தமே தர்தே$^{3}$ஸ்$^{1}$ ச

'தம' என்றவொட்டு தொடர்ந்து நிற்கும்போது 'அந்திக' வின் 'திக'வும் கெடும் அதாவது, 'திக' (அ) க கெடும்.

அந்தம அல்லது அந்திதம,
அக்[3]னே த்வம் நோ அந்திம;,
அந்திதமே அவரோஹதி

வா: காதி லோபே ப[3]ஹுலமிதி வக்தவ்யம்
'அந்திக'வின் 'க' இரண்டாவது உறுப்பினருக்கு முன் பல வகையில் கெடும்.
அந்திகே ஸ்த3தி = அந்திஷத் (ஸ் > ஷ் 8.3.106)

வா: யே ச
'ய' ஒட்டுத் தொடரும்போது ம 'அந்திக'வின் 'க' கெடும். அத்திய: (= அந்திக + யத் 4.4.110)

**6.4.150** ஹல: தத்[3]தி[4]தஸ்ய
'ஈ' (பெண்பாலொட்டு) க்கு முன் நிற்கும் (ப[4], அடிச் சொல்லின் ஈற்றயலான 'ய்') மெய்யெழுத்தைத் தொடர்ந்து அமையும் தத்தித வொட்டின் 'ய்' ஆகும்போது கெடும்.
க[3]ர்க[3] + யஞ் (4.1.105) = க[3]ார்க்[3] θ – ய + ஙீப் (4.1.16) = க[3]ார்க் θθ + ஈ (6.4.148, 150) = க[3]ார்கீ ஆனால் காரிகா + த[4]க் (4.1.120) + ஙீப் (4.1.15) = காரிக் θ + ஏய + ஈ = காரிக் + ஏய்/ஈ = காரிகேயீ (6.4.148) வைத்3ய + ஙீஷ் (4.1.48) = வைத்[3] – θ – θ – ஈ = வைதீ[3] 'மருத்துவனின் மனைவி'

**6.4.151** ஆபத்யஸ்யச தத்[3]தி[4]தே அதாதி
('ப[4]' அடிச் சொல்லின்) ''அந்த வமிசத்தில் பிறந்த'' என்ற பொருளைச் சுட்டும் ஒட்டின் ஈற்றயலான 'ய்' மெய்யெழுத்தைத் தொடர்ந்து நின்று, அதற்குப் பின் 'ஆ' என்ற எழுத்தை முதலாகக் கொள்ளாத (அனாதி) தத்தித ஒட்டு வரும்போத அந்த 'ய்' கெடும்.
க[3]ர்க்[3]ய (4.1.105) + வுன் (4.2.37) = க[3]ார்க் + θஅ + வுன் = க[3]ார்க் θ – அக = க[3]ார்[3]கக ''கர்கனின் வமிசத்தில் பிறந்தவர்களின் கூட்டம்'' ஆனால் க[3]ார்க்[3]ய + ப[2]க் (4.1.101) = க[3]ார்க்ப் θ + ஆயன (6.4.148) = க[3]ார்க்[3]யாயண (8.4.2) ''க[3]ார்க்[3]ய ணவின் வழித் தோன்றல்'' காரிகேயி:

**6.4.152** க்யச்வ்யோஸ்' ச
'ப[4]' அடிச்சொல்லின், ''அந்த வமிசத்தில் பிறந்த'' என்ற பொருளைச் சுட்டும் ஒட்டின் ஈற்றயலான 'ய்' மெய்யெழுத்தைத் தொடர்நது நின்று அதற்குப்பின் க்ய (=க்யச், க்யங்), ச்வி ஒட்டுக்கள் வரும்போது அந்த 'ய்' கெடும்.

1. க்ய; வாத்ஸ்ய + க்யச் + ஸப் + திப் (3.1.8) = வாத்ஸ் θஅ + க்யச் + அ + தி = வாத்ஸீய – அ – தி = (7.4.33) = வாத்ஸீயதி (6.1.97)

2. ச்வி – வாத்ஸ் – ய + ச்வி + ப[4]வதி= வாத்ஸ் – θ + ச்வி + ப[4]வதி = வாத்ஸீப[4]வதி (7.4.32) ஆனால் ஸாங்காஸ்யாயதே, ஸாங்காஸ்'யபூ[4]த: காரிகேயயதி, காரிகேயீ பூ[4]த:

**6.4.153** பில்வகாதி³ப்⁴யஸ்ச²ஸ்ய லுக்

'பி³ல்வக' முதலிய 'ப⁴' அடிச் சொற்களின் பின்னாலிணைக்கப்படும் 'ச²' ஒட்டு உயிரெழுத்து அல்லது 'ய்'யை முதலில் கொண்ட தத்தித வொட்டுக்களுக்கு முன் அவ்வடிச் சொல் நிற்கும்போது 'ச²' ஒட்டு கெடும் (லுக்) இவைகள் 'நட³ாதி' வகுப்பின் கீழ்க் கூறப்பட்டவை. இவைகள் 'ச²' ஒட்டுத் தொடர்ந்து வரும்போது 'குக்' (4.2.91) ஆகமம் இறுதியில் பெறும்.

பி³ல்வ + குக் + ச² (4.2.91) + டாப் = பி³ல்வ + க்θ – ஈய + ஆ = பி³ல்வ க்ப் θ – ஆ = பி³ல்வக்யா: தஸ்யாம் ப⁴வ: பி³ல்வ + குக் + ச² + டாப் + அண் = பி³ல்வ – குக் + ச² + ஆ + ஆண் = பி³ல்உ – க் – θ – θ + அண் (6.4.64) = பை³ல்வ – க் "வில்வமரக் காட்டில் விளையும்" வேணுகீயா: வைணுகா:, வேத்ரகீயா: வைத்ரகா: வேதஸக்யா:, வைதஸகா:,

த்ருணகீயா:, தார்ணாக:, இஹுக்யா: ஐக் ஷுக: காஷ்ட²கீயா; காஷ்ட²கா கபோதக்யா:, கபோதகா:

வா: க்ருஞ்சா ஹ்ரஸ்வத்வம் ச

'க்ருஞ்சா'வினீறான 'ஆ' குறிலாகும்.

க்ருஞ்சகீயா;, க்ரௌஞ்சகா;

'ச²' ஒட்டைத் தனியாக இச்சூத்திரத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதன் காரணம், இவ்வொட்டு மாத்திரந்தான் கெடும். ஆகமமான 'க்' அல்ல என்பதைச் சுட்டுவதற்காகத்தான். இல்லாவிட்டால் 'ஸன்னி யோக³ ஸி²ஷ்டானாமன்யதராபாயே உப⁴யோரபி அப⁴ாவ:' அதாவது இரண்டு பொருட்களைச் சேர்த்து விதித்திருக்கும்போது அவைகளில் ஒன்று கெடும் என்று கூறினால், மற்றதும் கெடும் என்று பொருட்படும். இதைத் தவிர்க்கத்தான் 'ச²'வை மட்டும் தனியாகக் குறிப்பிட்டு அது கெடும் என்று இச்சூத்திரம் கூறுகிறது. லுக்' மறைதல், 'ஈய' என்றவொட்டு முழுவதும் மறையும் 'ய்' மாத்திரமல்ல என்று சுட்டும்.

**6.4.154** துரிஷ்டே²மேயஸ்ஸு

'இஷ்ட²ன்', 'இமனிச்', ஈயஸுன்' என்ற வொட்டுக்களுக்கு முன் நிற்கும் 'த்ரு' கெடும் (லோப)

1) க்ரு + த்ரு + இஷ்ட²ன் = கர் – θ + இஷ்ட²ன் = கரிஷ்ட²; ஆஸுதிம் கரிஷ்ட²:

2) து³ஹ் + த்ருச் + ஈயஸுன் + ஙீப் (4.1.6) = தே³ாஹ் + த்ரு + ஈபஸ் – ஈ (7.3.84) = தே³ாஹ் + θθ + ஈயஸ் = தே³ாஹீயஸீ தே⁴னு:

அடுத்த சூத்திரத்திற்காக 'இமனிச்' இங்கு சேர்ந்துக் கூறப்பட்டிருக்கிறது.

**6.4.155** டே:

'இஷ்ட²ன்': 'இமனிச்', 'ஈயஸுன்' தொடர்ந்து வரும்போது 'ப⁴' அடிச்சொல்லின் 'டி' (அதாவது மெய்யெழுத்துடன் சேர்ந்த இறுதி உயிர்) கெடும் (லோப)

லகு⁴ + இஷ்ட²ன் = லகி⁴ஷ்ட

லகு[4] + இமனிச் = லகி[4]மன்

லகு[4] + ஈயஸுச் = லகீயஸ்

வா: ணாவிஷ்டவத ப்ராதி பதி[3]கஸ்ய கார்யம் ப[4]வதீதி வக்தவ்யம்

'ணி' (இயக்குவினைபொட்டு) தொடர்ந்து வரும் பிராதிபதிகம். 'இஷ்ட' ஒட்டுத் தொடர்ந்து வரும்போது எந்தெந்த மாற்றங்கள் ஏற்படுமோ அம்மாற்றங்களெல்லாம் அடையும். அம்மாற்றங்கள் வருமாறு:-

1) பும் வத்[3] ப[4]ாவ. பெண்பாற்சொல், ஆண்பாலாக மாறும். காட்டாக ஏனீமாசஷ்டே ஏதயதி; ஸ்'யேத இஷ்ட, 'தஸிலாதி' ஒட்டுக்களைச் சேர்ந்தது. அது (பெண்பாற் சொற்களை) ஆண்பாலாக்கும் (6.3.35)

2) ரப[4]ாவ – 'ரு[1]' ஐ 'ர'வாக்கும் ப்ரு'து[2]மாசஷ்டே – ப்ரத[2]யதி ம்ரத[3]யதி (பார்க்க 6.4.161)

3) டி லோப – 'டி' கெடுதல் படுமாசஷ்டே படயதி, லக[4]யதி

4) யனாதி[3]பரம் – அதாவது சூ.6.4.156ஐப் பயன்படுத்தல். ஸ்தூ[2]லமாசஷ்டே ஸ்த[2]வயதி பாரத்வாஜ சீடபரம்பரையின் கருத்துப்படி மேலும் மூன்று மாற்றங்கள் அடையும்

5) வின் மதோர் லுக் – ஸ்ரக்[3]விணமாசஷ்டே – ஸ்ரஜயதி: வஸுமந்தமாசஷ்டே – வஸயதி (பார்க்க 5.3.65)

6) கன் விதி[4] – யுவன், அல்ப ஆகியவைகளுக்கு 'கன்' பதிலியாதல் (5.3.64) யுவானமாசஷ்டே அல்லது அல்பமாசஷ்டே கனயதி

7) ப்ராதி பதிலியாக வருதல் (6.4.157) ப்ரிய மாசஷ்டே ப்ராபயதி

**6.4.156** ஸ்தூ[2]ல தூ[3]ர யுவ ஹ்ரஸ்வ க்ஷிப்ரக்ஷுத் [3]ராணாம் யணாதிபரம் பூர்வஸ்ய சகு[3]ண:

'இஷ்டன்' 'இமனிச்', ஈயஸுச் ஆகியவைகளுக்கு முன் நிற்கும் (ப[4] அடிச்சொல்) ஸ்தூ[2]ல 'பெரிய', தூ[3]ர, யுவன் 'இளைய', ஹ்ரஸ்வ 'குறுகிய' க்ஷிப்ர 'விரைவாக' க்ஷுத்[3]ர 'சிறிய' ஆகியவைகளின் அரையுயிரிலிருந்து தொடங்கி – இறுதியசை கெடும் (லோப) அதற்குமுன் நிற்கும் உயிர் குணமாகும்.

1) ஸ்தூ[2]ல + இஷ்டன் = ஸ்தே[2]ா + 00 – இஷ்ட = ஸ்த[2]விஷ்ட

ஸ்தூ[2]ல + இமனிச் = ஸ்த[2]விமன்

ஸ்தூ[2]ல + ஈயஸுன் = ஸ்த[2]வீயஸ்

2) தூ[3]ர – த[3]விஷ்ட, த[3]விமன், த[3]வீயஸ்

3) யுவன் – யனிஷ்ட, யவிமன், யனீயஸ்

4) ஹ்ரஸ்வ – ஹ்ரஸிஷ்ட, ஹ்ரஸிமன், ஹ்ரஸீயஸ்

5) க்ஷிப்ர – க்ஷேபிஷ்ட, க்ஷேபிமன், க்ஷேபீயஸ்

6) க்ஷுத்[3]ர – க்ஷோதி[3]ஷ்ட, க்ஷோதி[3]மன், க்ஷோதீ[3]யஸ்

**6.4.157** ப்ரிய ஸ்திர ஸ்பி[2]ரோரு ப[3]ஹுல கு[3]ரு வ்ருத்[3]த[4] த்ருப்ர தீ[3]ர்க[4] வ்ருந்த[3]ாரகாணாம் ப்ர ஸ்த[2] ஸ்ப[2] வர் ப[3]ம்ஹி க[3]ர் வர்ஷி த்ரப் த்[3]ராக்[4]

வ்ருந்த$^{3}$ா:

(இஷ்டன், இமனிச், ஈயஸுன் என்ற வொட்டுக்களுக்கு முன் நிற்கும் 'ப$^{4}$' அடிச் சொற்களான) ப்ரிய 'பிடித்த' ஸ்தி$^{2}$ர 'உறுதியான', ஸ்பி$^{2}$ர 'பருமனான', உரு 'அகலமான', அகன்ற, பெரிய', ப$^{3}$ஹுல 'அடத்தியான', அடர்ந்த', கு$^{3}$ரு 'பளுவான', வ்ருத்$^{3}$த$^{4}$ 'மிகுதியாக்கு', த்ருப்ர 'திருப்தியான, தீ$^{3}$ர்க$^{4}$ 'நீளமான'. வ்ருந்த$^{3}$ாரக 'சிறந்த' என்பவைகளுக்கு முறையே ப்ர, ஸ்த$^{2}$, ஸ்ப$^{2}$, வர் ப$^{3}$ம்ஹி, க$^{3}$ர், வர்ஷி, த்ரப், த்$^{3}$ராக்$^{4}$, வ்ருந்த ஆகியவைகள் பதிலியாக வரும்.

1) ப்ரிய + இஷ்ட$^{2}$ன் = ப்ரேஷ்ட$^{2}$ ப்ரிய + இமனிச் = ப்ரேமன்.

ப்ரிய + ஈயஸுன் = ப்ரேயஸ்

2) ஸ்தி$^{2}$ர – ஸ்தே$^{2}$ஷ்ட$^{2}$, ஸ்தே$^{2}$யஸ்

3) ஸ்பி$^{2}$ர – ஸ்பே$^{2}$ஷ்ட, ஸ்பே$^{2}$யஸ்

4) உரு – வரிஷ்ட$^{2}$, வரிமன், வரீயஸ்

5) ப$^{3}$ஹுல – ப$^{3}$ம்ஹிஷ்ட$^{2}$, ப$^{3}$ம்ஹிமன், ப$^{3}$ஹீயஸ்

6) கு$^{3}$ரு – க$^{3}$ரிஷ்ட$^{2}$, க$^{3}$ரிமன், க$^{3}$ரீயஸ்

7) வ்ருத்$^{3}$த$^{4}$ – வர்ஷிஷ்ட$^{2}$, வர்ஷீயஸ்

8) த்ருப்ர – த்ரபிஷ்ட$^{2}$, த்ரபீயஸ்

9) தீ$^{3}$ர்க$^{4}$ – த்$^{3}$ராகி$^{4}$ஷ்ட$^{2}$, த்$^{3}$ராகி$^{4}$மன், த்$^{3}$ராகீயன்

10) வ்ருந்த$^{3}$ாதக – வ்ருந்தி$^{3}$ஷ்ட$^{2}$, வ்ருந்தீ$^{3}$யஸ்

ப்ரிய, உரு, கு$^{3}$ரு, ப$^{3}$ஹுல, தீ$^{3}$ர்க$^{4}$ ஆகியவைகள் ப்ருத்$^{2}$வாதி வகுப்பைச் சேர்ந்தவை. இவைகள் 'இமனிச்' ஒட்டோடுவரும். மற்றவைகளுடன் இவ்வொட்டு இணைக்கப்படமாட்டாது. ஆகையால் இவைகளை எடுத்துக்காட்டுகளாக குறிப்பிடவில்லை.

**6.4.158** ப$^{3}$ஹோரா் லோபோ பூ$^{4}$ ச ப$^{3}$ஹோ:

இமனிச், ஈயஸுன் என்ற ஒட்டுக்களின் 'இ', ஈ' ப$^{3}$ஹு என்ற சொல்லுக்குப் பின் வரும்போது கெடும் (லோப).

பூ$^{4}$' 'ப$^{3}$ஹு'வுக்குப் பதிலியாகும்.

ப$^{3}$ஹு + இமனிச் = ப$^{3}$ஹு + இமன் = பூ$^{4}$ + θ மன் = பூ$^{4}$மன்; ப$^{3}$ஹு + ஈயஸுன் = பூ$^{4}$யஸ்

'ப$^{3}$ஹு' 'ப்ருத்$^{2}$வாதி' வகுப்பைச் சேர்ந்தது. ஆகவே 'இமன்' ஒட்டு இத்துடன் இணைக்கப்படும் (5.1.122) 'ப$^{3}$ஹுவை' இங்கு திரும்பவும் கூறப்பட்டதன் காரணம். 'பூ$^{4}$' பதிலியாக வருவது ஸ்தானியான 'ப$^{3}$ஹு'வுக்குத்தான் அதனுடனிணைக்கப்படும் ஒட்டுக்களுக்கல்ல என்று சுட்டுவதற்காக.

**6.4.159** இஷ்ட$^{2}$ஸ்ய யிட் ச

'இஷ்ட$^{2}$' என்ற ஒட்டுக்கு முன் 'ப$^{2}$ஹு'வின் பதிலியாக வரும் 'பூ$^{4}$' நி ற்கும்போது, 'இஷ்ட$^{2}$'வுக்கு முன் 'யிட்' ஆகமம் வரும்.

ப$^{3}$ஹு + இஷ்ட$^{2}$ன் = பூ$^{4}$ + யிட் + இஷ்ட$^{2}$ = பூ$^{4}$யிஷ்ட$^{2}$ மேற்சூத்திரத்தில் கூறிய 'இ' மறைதலை 'யிட்' ஆகமம் தடுக்கிறது. 'யிட்'டின் 'இ' உச்சரிப்புக்காகப்

பயன்படுத்தப்பட்டிருக்கிறது. 'ய்'தான் உண்மையான ஒட்டு.

**6.4.160** ஜ்யாத$^{3}$ாதீ$^{3}$யஸ:

'ஈயஸுன்' என்ற ஒட்டு. 'ஜ்யா' (ப்ரஸ1ஸ்ய அல்லது வ்ருத்$^{3}$த$^{4}$ 5.3.61, 62 என்பவைகளின் பதிலி)வுக்குப் பின் இணைக்கும்போது, அவ்வொட்டின் முதலெழுத்துக்கு ஆத் (ஆ) பதிலியாக வரும்.

ஜ்ய + ஈயஸுன் = ஜ்ய + ஆயஸ் = ஜ்யாயஸ்

**6.4.161** ரரு'தோ ஹலாதே$^{3}$ர் லகே$^{4}$ா:

இஷ்ட$^{2}$ன், இமனிச், ஈயஸுன் என்றவொட்டுக்களுக்கு முன் நிற்கும் 'ப$^{4}$' அடிச் சொல்லின் பெய்யெழுத்தைத் தொடர்ந்து நிற்கும் 'ரு'த்' (ரு), லகு$^{4}$ அசையாக அமையும் போது, அந்த 'ரு'வுக்கு 'ர' பதிலியாக வரும்.

ப்ரு'து$^{2}$ இஷ்ட$^{2}$ன் ப்ரத்$^{2}$ θ இஷ்ட$^{2}$ன் (6.4.150) ப்ரதி$^{2}$ஷ்ட$^{2}$; ப்ரதி$^{2}$மன், ப்ரதீ$^{2}$யஸ் ஆனால் ரு'ஜு – ரு'ஜிஷ்ட$^{2}$, ரு'ஜிமன், ரு'ஜீயஸ் இந்த விதி ப்ரு'து$^{2}$, ம்ரு'து$^{2}$, ப்$^{4}$ரு'ஸ', க்ரு'ஸ', த்$^{3}$ரு'ட$^{4}$, பரிவ்ரு'ட$^{4}$ என்ற ஆறு சொற்களில்தான் இவ்விதி பயன்படுத்த வேண்டும். மற்றவைகளில் அல்ல. ஆகவே, க்ரு'த, மாத்ரு', ப்$^{4}$ராத்ரு' ஆகியவைகளில் செயற்படாது. க்ருதயதி, மாதயதி, ப்$^{4}$ராதயதி

**6.4.162** விப$^{4}$ாஷர்ஜோஸ்' ச$^{2}$ந்த$^{3}$ஸி

(இஷ்டன். இமனிச். ஈயஸுன் என்ற வொட்டுக்கள்). ரு'ஜு 'நேரான' என்ற 'ப$^{4}$' அடிச் சொல்லுக்குப்பின் நிற்கும்போது, அச்சொல்லின் 'ரு'வுக்கு 'ர' விருப்பாக வேதமொழியில் பதிலியாக வரும்.

ரு'ஜிஷ்ட$^{2}$ அல்லது ரஜிஷ்ட$^{2}$

ரு'ஜிமன் அல்லது ரஜிமன்

ருஜீயஸ் அல்லது ரஜீயஸ்

**6.4.163** ப்ரக்ருத்யைகாச்

(இஷ்ட$^{2}$ன், இமனிச், ஈயஸுன் என்ற வொட்டுக்கள்) ஓரசை 'ப$^{4}$' அடிச்சொல்லைத் தொடர்ந்து நிற்கும்போது, அவ்வடிச் சொல்/ மாற்றமடையாது. (ப்ரக்ருதி) அதாவது அதன் மூலவடிவம் நீடித்து நிற்கும்.

ஸ்ரஜ் + வின் (5.2.121) = இஷ்ட$^{2}$ன் =

ஸ்ரஜ் + θ (5.3.65) = இஷ்ட$^{2}$ =

ஸ்ரஜிஷ்ட$^{2}$, ஸ்ரஜியஸ்

ஸ்ருச் + மதுப் = ஸ்ருச் + வத் (8.2.10) + ஈயஸுன் = ஸ்ருச்+ θ (5.3.65) + ஈயஸுன் = ஸ்ருசீயஸ். ஆனால் வஸு + மதுப் + இஷ்ட$^{2}$ன் = வஸ் θ (6.4.155) + θ (5.3.65) + இஷ்ட = வஸிஷ்ட$^{2}$.

வா: ப்ரக்ருக்யா அகே ராஜன்ய மனுஷ்ய யுவான:

'அக' என்ற வொட்டுத் தொடரும்போது, ராஜன்ய, மனுஷ்ய, யுவன் என்ற சொற்களின் மூல வடிவங்கள் மாற்ற மடையாமல் நீடித்து நிற்கும்.

ராஜன்யகம், மானுஷ்யகம் 6.4.151 இல் விதிக்கப்பட்ட 'ய்' கெடுதலை இது தடுக்கிறது.

யௌவனிக: 'இளைமை' (யுவன் + வுஞ் (5.1.133) இங்கு 6.4.144இல் விதிக்கப்பட்டபடி 'டி' கெடாது.

**6.4.164** இனண்யனபத்யே

'அந்த வமிசத்தில் பிறந்த' என்ற பொருளைச் சுட்டாத 'அண்' ஒட் டுக்கு முன் நிற்கும் 'ப$^{4}$' அடிச்சொல்லினிறுதியிலமையும் 'இன்' மாற்றமடையாது.

ஸம் – கூட + இணுன் (3.3.54) + அண் (5.4.15) = ஸாம் – கூட் θ – இன் + அண் = ஸாம் கூடினம் 'பெருந்தீ பெருங்கலகம்' ஸ்ரக்$^{3}$வின் + அண் (4.3.130) = ஸ்ரக்$^{3}$விணம் 'மாலையணிந்து கொண்டிருப்பவளைச் சேர்ந்த அவன் தொடர்பான ஆனால் மேத$^{4}$ாவின: அபத்யம் மைத$^{4}$ர$^{5}$:

**6.4.165** க$^{3}$ாதி$^{2}$ வித$^{3}$தி$^{2}$ கே$^{1}$ஸி க$^{3}$ணி பணினஸ்$^{1}$ச

"அந்த வமிசத்தில் பிறந்த" (அபத்ய) என்ற பொருளைச் சுட்டும் 'அண்' ஒட்டுக்கு முன் நிற்கும். க$^{3}$ாதி$^{3}$ன், வித$^{3}$தி$^{2}$ன், கேஸி$^{1}$ன், க$^{3}$ணின், பணின் ஆகியவைகளும் இயல்பாகும். (ப்ரக்ருதி)

க$^{3}$ாதினோ அபத்யம்

க$^{3}$ாதின் + அண் = க$^{3}$ாதி$^{2}$ன:,

வைத$^{3}$தி$^{2}$ன;, கைஸி$^{1}$ன:, க$^{3}$ாணின:, பாணின:

இல்விதி 'அபத்ய' ஒட்டும் பயன்படுத்தப்படுமென்று சுட்டுகிறது.

**6.4.166** ஸம்யோக$^{3}$ாதி$^{3}$ஸ்$^{1}$ ச

'அண்' ஒட்டுக்கு முன் நிற்கும் 'இன்'னையிறுதியில் கொண்ட 'ப$^{4}$' அடிச் சொல்லின் 'இன்' கூட்டு மெய்களுக்குப்பின் அமையுமானால் அந்த அடிச்சொல்லின் மூலவடிவம் மாறாமல் நீடித்து நிற்கும்

ஸ$^{1}$ங்க்$^{2}$ – இன் + அண் (4.1.92) = ஸ$^{1}$ாங்கி$^{2}$ன:

"ஸங்கின் என்பவனின் வமிசத்தில் பிறந்தவன்"

வஜ்ரின் – வாஜ்ரிண:

**6.4.167** அன:

'அன்'னையிறதியில் கொண்ட 'ப$^{4}$' அடிச் சொல் 'அண்' (மேலே கூறப்பட்ட அந்த வமிசத்தில் பிறந்த அல்லது அந்த வமிசத்தைச் சேராத ஆகிய இரண்டு பொருட்களைச் சுட்டும் போதும்) தொடர்ந்து வரும்போது, 'அன்' மாற்றமடையாது.

ஸாமன் + அன் (4.3.120) = ஸாமன:, வைமன;

**6.4.168** யே ச அப$^{4}$ாவ கர்மணோ;

'ய்'இல் தொடங்கும் ஒட்டுக்களுக்கு முன் நிற்கும் 'அன்' இல் முடியும் 'ப$^{4}$' அடிச்

சொல், ஒரு நிலைமை, அல்லது செயல் என்ற பொருளைச் சுட்டாமல் அமையும்போது, அதனிறுதி 'அண்' மாற்றமடையாது.
ஸாமன் + யத் (4.4.98) = ஸாமன்ய: 'ஸாமனுக்குத் தகுந்தவன்' ஆனால் ராஜன் + யக் = ராஜ் θ + யம் (6.4.144) = ராஜ்யம் 'அரசனின் நிலை அல்லது செயல்'

**6.4.169** ஆத்மாத்[4]வானௌ கே[2]

'க[2]'ஒட்டுக்கு முன் நிற்கும் 'ஆத்மன்' அத்[4]வன் என்ற 'ப[4]' அடிச் சொற்கள் மாற்றமடையா.
ஆத்மன் + க[2] (5.2.16) = ஆத்மனீன: 'தனக்குத் தகுந்த';
அத்[4]வன் + க[2] (5.1.9) = அத்[4]வனீன 'பிரயாணி' ஆனால் ப்ரதி + ஆத்மன் + டச் (2.1.6; 5.4.108) = ப்ரதி – ஆத்ம் θ – அ–ம் = ப்ரத்யாத்மம்; ப்ரத்யத்[4]வம் (5.4.84)

**6.4.170** ந மபூர்வோ அபத்யே அவர்மண;

'வர்மன்' என்ற சொல்லைத் தவிர்த்த 'ம'வைத் தொடர்ந்து வரும் மற்ற 'அன்' இல் முடியுஞ் சொற்கள், (ப[4] அடிச் சொல்) 'அந்த வ மிசத்தில் பிறந்த' (அபத்யே) என்ற பொருளைச் சுட்டும் 'அண்' ஒட்டுக்கு முன்னால் நிற்கும் போது அந்த அடிச்சொற்களின் மூலவடிவம் தொடர்ந்து நீடிக்காது அதாவது மாற்றமடையும்.
ஸு – ஷாமன் + ஸு – ஷாம் θ – அ (6.4.144) = ஸௌஷாம "ஸுஷாமன் என்பவனின் வமிசத்தில் பிறந்தவன்" ஆனால் ஸுத்வன் + அண் = ஸௌத்வன:
சர்மன் + அண் (4.2.10) = சார்மண: (6.4.167) "தோலால் மூடப்பட்ட"
சக்ரவர்மண + அண் = சாக்ரவர்மண;

வா: மபூர்வ ப்ரதிஷேதே[4] வா ஹிதநாம்ன இதி வக்தவ்யம்
'ஹிதநாமன்' என்ற சொல் 'அண்' ஒட்டு இணைக்கப்படும்போது விருப்பாக அதன் மூலவடிவம் மாற்றமடையாது.
ஹைதநாம:, ஹைத நாமன:

**6.4.171** ப்[3]ராஹ்மோ அஜாதௌ

'ப்[3]ரஹ்மன்' என்ற (ப[4] அடிச் சொல்லின்) இறுதி, 'அன்' (விதிக்குப் புறம்பாக) கெட்டு "ப்[3]ராஹ்ம" என்ற சொல் ஒரு இனம் என்ற பொருளைச் சுட்டாமல் அமையுமானால் (அஜாதௌ) ஆக்கப்படும். ஆனால் ப்[3]ரஹ்மன் + அண் = ப்[3]ராஹ்மண: (6.4.167) "பிராம்மணன்" இது 6.4.144க்குப் புறனடை

**6.4.172** கார்மஸ் தாச்சி[2]ல்யே

'வழக்கமான குணம்' என்ற பொருளைச் சுட்டும்போது, 'கார்ம' என்ற சொல் 'ண' ஒட்டிணைக்கப்பட்ட 'கர்மன்' என்ற 'ப[4]' அடிச்சொல்லின் 'அண்'

(விதிக்குப் புறம்பாக) கெடப்பட்டு ஆக்கப்பட்டது.
கர்மன் + ண = கார்ம் θ – அ: = கார்ம: ''சுபாவமாகவே சுறுசுறுப்பான'' ஆனால் கர்மன் + அண் = கார்மணம் (5.4.36)

**6.4.173** ஔக்ஷமனபத்யே
"அந்த வமிசத்தில் பிறந்த'' என்ற பொருளைச் சுட்டாமலமையும் (அனபத்யே) போது 'உக்ஷன்' என்ற 'ப[4]' அடிச் சொல்லினிறுதி 'அன்' கெட்டு (விதிக்குப் புறம்பாக) 'ஔக்ஷ' என்ற வடிவம் கிடைக்கிறது.
ஆனால் உக்ஷன் + அண் = ஔக்ஷ்0ன் – அ (6.4.135) = ஔக்ஷ (அத்ய என்ற பொருளைச் சுட்டும்)

**6.4.174** த[3]ாண்டிநாயன ஹாஸ்தி நாயனா த[2]ர்வஸிக ஜைய்மாஸி'னேய வாஸிதாயனி ப்[4]ரௌண ஹத்யதை[4]வத்ய ஸாரவைக்ஷ்வாகமைத் ரேயஹிரண்மயானி
கிழ்க்கண்ட 11 சொற்களும் நிபாதனங்கள்:–
1. த[3]ாண்டிநாயன – த[3]ண்டின் + ப[2]க் (4.1.99) (இறுதி 'இன்' நீடித்து நிற்றல் (6.4.163) நிபாதனம்)
2. ஹாஸ்தி நாயன – ஹஸ்தின் + ப[2]க் (இறுதி 'இன்' நீடித்து நிற்றல்)
3. ஆத[2]ர்வணிக – அத[2]ர்வன் + ட[2]க் (4.3.63) (இறுதி 'அண்' நீடித்து நிற்றல்)
4. ஜைஹ்மாஸினேய – ஜிஹ்மாஸின் + ட[4]க் (4.1.123) (இறுதி 'இன்' நீடி த்து நிற்றல்)
5. வாஸிநாயனி – வாஸின் + பி2ஞ் (4.1.157) (இறுதி 'இன்' நீடித்து நிற்றல்)
6. ப்[4]ரௌணஹத்ய – ப்[4]ரூண–ஹன் + ஷ்யஞ் (5.1.124) ('ன்'க்கு 'த்' பதிலியாதல்)
7. தை[4]வத்ய – தீ[4]வன் + ஷ்யஞ் ('த்' பதிலியாக வருதல்)
8. ஸாரவ – ஸரயூ + அண் ('யூ'வுக்கு 'வ' பதிலியாதல்)
9. ஜக்ஷ்வாக – இக்ஷ்வாகு + அண் (இறுதி 'உ'க்கு θ பதிலியாக வருதல்)
10. மைத்ரேய – மித்ர – யு + ட[3]ஞ் (4.1.136) = மைத்ர் – ஏய (7.4.2) ('யு'கெடுதல்)
11. ஹிரண்மய – ஹிரண்ய + மயுட் (4.3.143) = (இறுதியசை 'ய' கெடுதல்)

**6.4.175** ரு'த்வ்ய வாஸ்தவ்ய வாஸ்தன மாத்[4]வீ ஹிரண்யயானி ச[2]ந்த[3]ஸி
வேதமொழியில் கீழ்க்கண்ட ஐந்து சொற்களும் நிபாதனங்கள்
1) ரு'த்வ்ப – ரு'து + யத் (4.4.110) (6.4.146க்குப் புறனடை)
2) வாஸ்தவ்ய – வஸ்து + யத்
3) வாஸ்தவ – வாஸ்து + அம்
4) மாத்[4]வீ – மது[4] + அன் + ஙீப்
5) ஹிரண்யப – ஹிரண்ய + மயுட் (4.3.143) ஹிரண்யய (ஒட்டின் முதலான 'ய்' கெடுதல்) முதல் நான்கு எடுத்துக் காட்டுகளிலும் அடிச் சொல்லினீறான உயிருக்கு (உ) ப் பதிலியாக அதற்கு ஒத்த அரையுயிர் வரும்.

**7.1.1** யுவோர் அனகௌ

'யு' 'வு' (மூக்கொலியாக உச்சரிப்பவை) என்ற ஒரு ஒட்டின் எழுத்துக்களுக்கு, முறையே 'அன' 'அக' ஆகியவைகள் பதிலியாக வரும்.

யு – நந்த்³ + ல்யு (3.1.134) நந்த³ன:, ரமண: ஸாயம் + வ்யு (4.3.23) ஸா யந்தன: : சிரம் + வ்யுல் சிரந்தன;

வு – க்ருண் + வுல் (3.1.133) காரக: : வாஸுதே³வ –க : (வுன் 4.3.98); ஆர்ஜுனக:

ஆனால் ஊர்ணாயு: (யுன் 5.2.123. மூக்கொலியாக 'யுன்' வராது); பு⁴ஜ்யு:, ம்ருத்யு: (யுக், ல்யுக்)

**7.1.2** ஆயனேயீநீயிய: ப²ட⁴க²ச²க⁴ாம் ப்ரத்யஜாதீனாம்

ஆயன், ஏய், ஈன், ஈய்,இய் ஆகியவைகள் முறையே, ஒரொட்டின் முதலெழுத்தாக அமையும் ப்², ட்⁴, க்², ச்², க்⁴ ஆகியவைகளுக்குப் பதிலியாக வரும்.

1. நட³ + ப²க் (4.1.99) நாட³ாயன:
2. ஸுபர்ண + ட³க் (4.1.120) ஸௌபர்ணேய: வைநதேய:
3. ஆட்⁴யகுலீன: (க² 4.1.139); (4) க³ார்கீ³ய; (ச² 4.2.114); (5)அத்ரி ய: (க⁴ 4.1.138)

**7.1.3** ஜே²ா அந்த:

'ஜ்²' ஒருவொட்டுக்கு முதலில் அமையும்போது அதற்குப் பதிலியாக 'அந்த்' வரும்.

பூ⁴ + ஸ'ப் + ஜி² = பே⁴ா + அ + அந்தி (7.3.84) ப⁴வந்தி (6.1.98, 97) ஏத்⁴ + ஸ'ப் + ஜ² = ஏத⁴ந்த (6.1.97) > ஏத⁴ந்தே (3.4.78)

**7.1.4** அத³ப்⁴யஸ்தாத்

இரட்டிக்கப்பட்ட வினையின் பின்னால் இணைக்கப்படும் ஒட்டின் முதலாக அமையும் ஜ்²' உக்கு 'அத்' பதிலியாக வரும்.

த³த³தி (த³ா + ஸ்'லு + ஜி²);

த³த³தே (த³ா + ஸ்லு + ஜ²)

**7.1.5** ஆத்மனேபதே ³ஷ்வனத:

'அ' (அத்) ஈறாக அமையாத வினைகளுக்குப்பின்னால் இணைக்கப்படும் 'ஜ்²' என்ற எழுத்தில் தொடங்கும் ஆத்மனேபத வொட்டின் (தன்) முதலெழுத்துக்கு 'அத்' பதிலியாக வரும். சின்வதே, சின்வதாம், அசின்வத:

**7.1.6** ஸீஙோ ருட்

ஸீங் 'படுத்துக் கொள், ஹங்கு' என்ற தாதுவோடு, ('ஜ்²'க்குப் பதிலியாக இணைக்கப்பட்ட 'அத்'துக்கு முன்) 'ருட்' ஆகமம் ஆக வரும்.

ஸீ1 + θ + ஜ2 + ஸே1 + ருட் – அதே (7.4.21) ஸே1ரதே 'அவர்கள் படுத்துக் கொண்டிருக்கிறார்கள்', ஸே1ரதாம் (ஸீ1 + லோட்), அஸே1ரத

**7.1.7** வேத்தேர் விப4ாஷா

'ஜ்2'க்கு ஆதேஸமாக வரும் 'அத்' வித்3 'அறி' என்ற தாதுவுக்குப்பின் இணைக்கும்போது, 'அத்'துக்கு முன் விருப்பாக 'ருட்' வரும்.

ஸம் + வித்3 + θ + ஜ2 = ஸம்வித்3ரதே, ஸம்வித3தே;

ஸம்வித்3ரதாம், ஸம்வித3தாம், ஸமவித்3ரத, ஸமவித3த இங்குக் குறிப்பிடப்படும் வித்3, 'அத3ாதி' வகுப்பைச் சேர்ந்தது. விகரணம் கெடும் இந்தத் தாதுவைத்தான் இங்குக் குறிக்கும். விகரணம் கெட ாத 'ருத4ாதி' வகுப்பைச் சேர்ந்த 'வித்3'ஜயல்ல. ஆகையால், விந் தே, விந்த3ாதே, விந்த3தே என்ற 'ருத3ாதி3' வகுப்பைச் சேர்ந்த 'வித்' ஆகும். விந்த3தாம், அவிந்த3த

**7.1.8** ப3ஹுலம் ச2ந்த3ஸி

'ஜ்'க்குப் பதிலியாக வரும் 'அத்'துக்கு முன், வேத மொழியில் 'ருட்' ஆகமம் பல வகையில், (அது ஒரு வினையோடு இணைக்கப்படும்பே ாது) வரும்.

தே3வா அது3ஹ்ர (து3ஹ்)

அத்3ருஸ்ரம் அஸ்ய கேதவ: 'நான் அதன் கிரணங்களைப் பார்த்தேன்' ; அது3ஹத (ருட்' இங்கு ஆகமம் ஆக வரவில்லை)

**7.1.9** அதோ பி4ஸ ஐஸ்

'அ' (அத்) வீற்றுப் பெயர்ச் சொற்களுக்குப் பின் இணைக்கப்படும் பி4ஸ் (3 ஆம் வேற்றுமைப் பன்மை) உக்கு 'ஐஸ்' பதிலியாக வரும் வ்ருக்ஷை: (வ்ருக்ஷ+ பி4ஸ் + வ்ருக்ஷ = ஐஸ்) இதிலிருந்து 7.1.17 வரை 'அத:' அனுவிருத்தியாகும்.

**7.1.10** ப3ஹுலம் ச2ந்த3ஸி

வேதமொழியில், மேற்சூத்திரத்தில் விதிக்கப்பட்ட 'ஐஸ்' பதிலியாவது, பல வகையாக வரும்.

அதாவது, வேறு உயிர்களை யீறாகக் கொண்ட பெயர்ச் சொற்களோடும் 'ஐஸ்' பதிலியாக வரும். அல்லது 'அ' வீற்றுச் சொற்களுக்குப்பின்னும் 'ஐஸ்' பதிலியாகாமல் வரலாம்.

நத்3யை: ('ஈ' யீற்றுச் சொல்); தே3வேபி4: (இங்கு 'ஐ' பதிலியாக வில்லை)

**7.1.11** நேத3மத3ஸோரகோ:

'க'வில் முடியுமிடங்களைத் தவிர்த்து மற்ற இடங்களில் 'இத3ம்' அத3ஸ், ஆகியவைகளோடு 'பி4ஸ்' இணைக்கும்போது அவ்வேற்றுமையுருபுக்கு 'ஐஸ்' பதிலியாகும்.

இத3ம் + பி4ஸ் = இதஅ + பி4ஸ் (7.2.102) = இத3பி4ஸ் (6.1.97) = θ – அ + பி4ஸ் 7.2.103) = ஏபி4; அமீபி: (<அத3ஸ் 7.2.102; 6.1.97; 8.2.80–81); ஆனால் இமகை:, அமுகை:

**7.1.12** டாங்ஸிங ஸாமினாத்ஸ்யா;

'அ' (அத்) வீற்றுப் பெயர்ச் சொற்களோடு டா (3ஆம் வேற்றுமையொருமை) ஙஸி (5ஆம் வேற்றுமையொருமை), ஙஸ் (6ஆம் வேற்றுமையொருமை) என்ற வேற்றுமையுருபுகளையிணைக்குங்கால், அவைகளுக்குப் பதிலியாக முறையே 'இன' 'ஆத்' 'ஸ்ய ஆகியவைகள் வரும்.

வ்ருக்ஷ + டா/ஙஸி/ஙஸ் = வ்ருக்ஷ + இன/ஆத்/ஸ்ய வ்ருக்ஷேண, வ்ருக்ஷாத், வ்ருக்ஷஸ்ய ஆனால் ஸகி$^{2}$ + டா = ஸக்$^{2}$யா (6.1.72)

**7.1.13** ஙேர் ய:

ஙே (4ஆம் வேற்றுமையொருமை) என்ற வேற்றுமையுருபை 'அ' வீற்றுச் சொல்லோடு இணைக்கும்போது அதற்குப் பதிலியாக 'ய' வரும்.

வ்ருக்ஷ + ஙே = வ்ருக்ஷ + ய = வ்ருக்ஷாய (7.3.102). ஆனால் ஸக்$^{2}$யே

**7.1.14** ஸர்வநாம்ன: ஸ்மை

'அ'வீற்று மாற்றுப் பெயர்களுக்குப் பின் (ஸர்வநாம்ன:) 'ஙே'யை யிணைக்கும்போது அதற்குப் பதிலியாக 'ஸ்மை' வரும்.

ஸர்வ + ஙே = ஸர்வஸ்மை, யஸ்மை, கஸ்மை

**7.1.15** ஙஸிங்யோ: ஸ்மாத் ஸ்மினௌ

'அ'வீற்று மாற்றுப் பெயர்களுக்குப் பின் இணைக்குப்படும் 'ஙஸி' 'ஙி' ஆகியவைகளுக்குப் பதிலியாக முறையே 'ஸ்மாத்', ஸ்மின்' வரும்.

ஸர்வ + ஙஸி/ஙி = ஸர்வஸ்மாத், ஸர்வஸ்மின்

**7.1.16** பூர்வாதி$^{3}$ப்$^{4}$யோ நவப்$^{4}$யோ வா

'பூர்வ 'முந்தையலிலிருந்து அதைத் தொடர்ந்து வரும் ஒன்பது மாற்றுப் பெயர்களோட 'ஙஸி', 'ஙி'யை யிணைக்கும்போது, 'ஸ்மாத்' 'ஸ்மின்' விருப்பாக பதிலியாக வரும். பூர்வஸ்மாத், பூர்வாத்; பூர் வஸ்மின், பூர்வே; பரஸ்மாத், பராத்; பரஸ்மின், பரே; அவரஸ்மா த், அவராத்; அவரஸ்மின், அவரே; த$^{3}$க்ஷிணஸ்மாத், த$^{3}$க்ஷிணாத்: த$^{3}$க்ஷிணயஸ்மின், த$^{3}$க்ஷிணே; உத்தரஸ்மாத், உத்தராத்; உத்தரஸ்மின், உத்தரே; அபரஸ்மாத், அபராத்; அபரஸ்மின், அபரே: அத$^{4}$ரஸ்ம ாத், அத$^{4}$ராத்; அத$^{4}$ரஸ்மின், அத$^{4}$ரே; ஸ்வஸ்மாத், ஸ்வாத்; ஸ்வஸ் மின், ஸ்வே; அந்தரஸ்மாத், அந்தராத்; அந்தரஸ்மின், அந்தரே.

ஆனால் த்யஸ்மாத், த்யஸ்மின்

**7.1.17** ஜஸ: ஸீ

'அ'வீற்று மாற்றுப் பெயர்களோடு 'ஜஸ்' (முதல் வேற்றுமைப் பன்மையுருப்) இணைக்கும்போது, அதற்கு 'ஸீ' பதிலியாக வரும்.

ஸர்வ + ஸீ = ஸர்வ + ஈ = ஸர்வே (6.1.87)

**7.1.18** ஔங: ஆப:

'ஆப்' (பெண்பாலொட்டு) ஐ யிறுதியில் கொண்ட பெயர்ச் சொற்களுக்குப்பின் ஔங் (முதல் இரண்டாம் வேற்றுமையிருமை) இணைக்கும்போது அதற்குப் பதிலியாக 'ஸீ' வரும்.
க²ட்வா + ஔங் = க²ட்வா + ஸீ = ஈ = க²ட்வே

**7.1.19** நபும்ஸகாச் ச
நபும்ஸகத்தைச் சுட்டும் பெயர்ச் சொற்களுக்குப்பின்னால் 'ஔங்' இணைக்கப்படும்போதும் அதற்குப் பதிலியாக 'ஸீ' வரும்.
குண்ட³ + ஸீ = ஈ = குண்டே 6.4.148 இன்படி 'குண்ட' என்ற சொல்லினிறுதி 'அ' கெடவேண்டும். ஆனால் அது கீழ்க்கண்ட வார்த்திகத்தின்படி கெடுவதில்லை.

வா: ஸ்'யாம் ப்ரதிஷேதே⁴ா வக்தவ்ய;
'ஸீ' ஒட்டு வரும்போது 'அ' கெடாது.
த³தி⁴னீ, மது⁴னீ போன்றவைகளும் அவ்வாறே. இங்கு 'ன்' 7.1.73 இனால் இணைக்கப்படுகிறது.

**7.1.20** ஜஸ்'ஸ'ஸோ: ஸி':
'ஜஸ்' (முதல் வேற்றுமைப்பன்மை) ஸ1ஸ் (இரண்டாம் வேற்றுமைப் பன்மை) ஆகியவைகள் நபும்ஸகத்தைச் சுட்டும் பெயர்ச் சொற்களோடு இணைக்கப்படும்போது, அவைகளுக்குப் பதிலியாக 'ஸி' (இ) வரும்.
குண்ட + ஜஸ்/ஸ'ஸ் = குண்ட + ஸி = குண்ட + னும் + ஸி (7.1.72) = குண்டானி (6.4.8); த³தீ⁴னீ, மதூ⁴னீ

**7.1.21** அஷ்டாப்⁴ய; ஔஸ்'
அஷ்டன் 'எட்டு' என்ற எண்ணுப் பெயருக்குப்பின் வரும் 'ஜஸ்', 'ஸஸ்' ஆகியவைகளுக்கு 'ஔஸ்' பதிலியாக வரும்.
அஷ்டன் + ஜஸ்/ ஸஸ் = அஷ்ட – அ (7.2.84) + ஔ = அஷ்டௌ (6.1.88)

**7.1.22** ஷட்³ப்⁴ய: லுக்
'ஜஸ்', 'ஸஸ்' என்ற வேற்றுமையுருபுகள் 'ஷட்' என்ற ஸம்க்³ஞாவினால் குறிப்பிடப்படும் எண்ணுப் பெயர்களுக்குப் பின்னால் கெடும்.
ஷஷ் + ஜஸ்/ஸ'ஸ் = ஷஷ் + θ = ஷட் (8.2.39): பஞ்ச, ஸப்த, நவ, த³ஸ'

**7.1.23** ஸ்வமோர் நபும்ஸகாத்
நபும்சகத்தைச் சுட்டும் பெயர்ச் சொல்லுக்குப்பின் வரும். 'ஸீ' (முதல் வேற்றுமை யொருமை), அம் (2ஆம் வேற்றுமையொருமை) ஆகியவைகள் கெடும்.
மது⁴ + ஸு/அம் = மது⁴ + θ = மது⁴; த³தி⁴,

**7.1.24** அதோ அம்

'அ' வீற்று நபும்சகச் சொற்களுக்குப்பின் வரும் ஜஸ், ஶஸ் ஆகியவைகளுக்கு 'அம்' பதிலியாக வரும்.

குண்ட + ஜஸ்/'ஸ் = குண்ட + அம் = குண்டம் (6.1.107)

**7.1.25** அத்$^3$ட்$^3$ ட$^3$தராதி$^3$ப்$^4$ய: பஞ்சப்$^4$ய:

'ட$^3$தர'வில் தொடங்கி அடுத்து வரும் ஐந்து (பஞ்ச$^4$ப்ய:) மாற்றுப் பெயர்களுக்குப்பின் இணைக்கப்படும் 'ஸு', அம் ஆகியவைகளுக்குப் பதிலியாக 'அத்$^3$ட்$^3$' வரும். ட$^3$தர, ட$^3$தம, இதர, அன்ய, அன்யதர, ஆகிய ஐந்து சொற்களை இது சுட்டுகிறது. இவைகளில் முதலிரண்டும் மாற்றுப் பெயர்களோடு இணைக்கப்படும் ஒட்டுக்கள் கிம + ட$^3$தர = க்~~00~~ – அதர (6.4.143) ஸு/அம் = கதர + அத் கதரத்; கதமத், இதரத், அன்யத், அன்யதரத்.

**7.1.26** நேதராச்ச$^2$ந்த$^3$ஸி

வேத மொழியில். 'இதர' என்ற மாற்றுப் பெயருக்குப்பின் வரும் 'ஸு' 'அம்' ஆகியவைகளுக்கு 'அத்$^3$ட$^3$' பதிலியாகாது. இதர + ஸு/அம் = இதரம்

வா: ஏகதராத்$^3$தி$^4$ ஸர்வத்ர ச$^2$ந்த$^3$ஸி ப$^4$ாஷாயாம் ப்ரதிஷேத$^4$ இஷ்யதே

'ஏகதர' என்ற சொல்லுக்குப்பின் மேலே கூறிய 'அத்$^3$ட்$^3$' பதிலியாதல் வேதமொழியிலும், பேச்சுமொழியிலும் தடுக்கப்பட வேண்டும். ஏகதரம் திஷ்டதி, ஏகதரம் பஸ்யதி

**7.1.27** யுஷ்ம$^3$த் அஸ்மத்$^3$ அஸ்மத்ப்யாம் ஙஸோ அஸி அஸ்மத் 'நான்'

ஆகியவைகளுக்குப்பின் இணைக்கப்படும் 'ஙஸ்' (6ஆம் வேற்றுமையொருமை) என்ற உருபுக்கு 'அஸ்' பதிலியாகும். யுஷ்மத் + ஙஸ் = தவ + அ (7.5.96) தவ 'உனது' (6.1.97); மம 'எனது'

**7.1.28** ஙே ப்ரத$^2$ மயோரம்

'யுஷ்மத்$^3$' 'அஸ்மத்' என்ற மாற்றுப் பெயர்களுக்குப்பின் வரும் 'ஙே' (4ஆம் வேற்றுமையுருபு), முதலிரண்டு வேற்றுமையுருபுகள் (ப்ரத$^2$மயோ:) ஆகியவைகளுக்கு 'அம்' பதிலியாக வரும்.

யுஷ்மத்$^3$ + ஙே = துப்$^4$யம் (7.2.95; 6.1.107): யுஷ்மத்$^3$ + ஸு = த்வம் யுஷ்மத்$^3$ + ஔ = யுவாம் (7.2.95; 8.7.88); யுஷ்மத்$^3$ + ஜஸ் = யூயம்; யுஷ்மத்$^3$ + அம் = த்வாம் (7.2.87) யுஷ்மத் + ஔட் = யுவாம் (7.2.87); மஹ்யம், அஹம், ஆவாம், வயம், மாம், ஆவாம்.

**7.1.29** ஸ'ஸோ ந

'ஸ'ஸ்' (இரண்டாம் வேற்றுமைப் பன்மை) என்ற வேற்றுமையுருபு யு ஷ்மத்$^3$, அஸ்மத்$^3$ ஆகியவைகளுக்குப்பின் இணைக்கும்போது அதற்கு 'ந'பதிலியாக வரும்.

யுஷ்மத்$^{3}$ + ஸ$^{1}$ஸ் = யுஷ்மத்$^{3}$ + ந = யுஷ்மா + ந (7.2.87) = யுஷ்மான் (8.2.23); அஸ்மான்

**7.1.30** ப்$^{4}$யஸ: ப்$^{4}$யம்

யுஷ்மத்$^{3}$, அஸ்மத்$^{3}$ என்ற மாற்றுப் பெயர்களுக்குப்பின் இணைக்கப்படும் 'ப்$^{4}$யஸ்'உக்கு, 'ப்$^{4}$யம்' வரும். யுஷ்மத்$^{3}$ + ப்$^{4}$யஸ் = யுஸ்மப்$^{4}$யாம் (7.2.102); அஸ்மப்$^{4}$யாம்

**7.1.31** பஞ்சம்யா அத்

யுஷ்மத்$^{3}$, அஸ்மத்$^{3}$ ஆகியவைகளோடு ஐந்தாம் வேற்றுமைப் பன்மையுருபு அதாவது 'ப்$^{4}$பஸ்' இணைக்கும்போது அதற்குப் பதிலியாக 'அத்' வரும். யுஷ்மத்$^{3}$ + ப்$^{4}$யஸ் = யுஷ்மத் + அத் = யுஷ்மாத்; அஸ்மாத்

**7.1.32** ஏகவசனஸ்ய ச

மேற்கூறிய மாற்றுப் பெயர்களுக்குப் பின் ஐந்தாம் வேற்றுமை யொருமையுருபுக்கு 'அத்' பதிலியாகும்.

த்வத், மத்

**7.1.33** ஸாம ஆகம்

யுஷ்மத்$^{3}$, அஸ்மத்$^{3}$ ஆகியவைகளுக்குப்பின்னிணைக்கப்படும் 'ஸாம்' (6,7ஆம் வேற்றுமைப் பன்மையுருபுகள்) உக்கு 'ஆகம்' பதிலியாகும். 6ஆம் வேற்றுமையுருபான 'ஆம்' உடன் 'ஸ்' ஆகம்ம் இணைந்து 'ஸாம்' என்றாகிய வடிவத்தைச் சூத்திரத்தில் கூறப்பட்டிருக்கிறது. யுஷ்மத் + ஸாம = யுஷ்மாகம், அஸ்மாகம்.

**7.1.34** ஆத ஔ ணல:

'ஆ' (ஆத்) வீற்றுவினைகளுக்குப் பின் இணைக்கப்படும் 'ணல்' ('லிட்' டின் தன்மை, படர்க்கை ஒட்டுக்கள்) லுக்கு 'ஔ' பதிலியாகும்.

பா + ணல் = ப – ப + ஔ (6.1.8; 7.4.59) = பபௌ (6.1.88)

**7.1.35** துஹ்யோஸ்தாதஙாஸிஷி அன்யதரஸ்யாம்

'வாழ்த்துதல்' என்ற பொருளைச் சுட்டும்போது (ஆஸிஷி), து, ஹி (ஏவல் வினை) ஆகியவொட்டுக்களுக்கு 'தாதங்' விருப்பாக (அன்யதரஸ்யாம்) பதிலியாக வரும். ஜீவ் + லோட் = ஜீவ் + ஸப் + து/ஹி = ஜீவதாத் 'அவன் நீண்ட நாட்கள் வாழட்டும் அல்லது நீ நெடுநாட்கள் வாழ்க'

**7.1.36** விதே$^{3}$: ஸ$^{1}$துர் வஸு;

வித்$^{3}$ 'அறி' என்ற வினைக்குப்பின் வரும் 'ஸத்ரு' ஒட்டுக்கு 'வஸு' (= க்வஸு) பதிலியாக வரும். வித்$^{3}$ + ஸத்ரு = வித் + வஸு = வித்$^{3}$ வஸ், வித்$^{3}$வான், வித்$^{3}$வாம்ஸௌ, வித்$^{3}$வாம்ஸ:

**7.1.37** ஸமாஸே அநங் பூர்வே க்த்வ: ல்யப்

'நங்' (எதிர்மறை) ஐத்தவிர்த்த (அநங்பூர்வே) மற்ற சொற்களோடு இறுதியுறுப்பினராக வரும் வினையின் (ஸமாஸே) பின்னால் இணைக்கப்படும் 'க்த்வா'வுக்கு 'ல்யப்' பதிலியாக வரும்.

ப்ர + க்ரு + க்த்வா = ப்ர + க்ரு + ல்யப் = ப்ரக்ருத்ய (6.1.71) ஆனால் அக்ருத்வா

**7.1.38** க்த்வாபி ச2ந்த3ஸி

வேதமொழியில், மேலே குறிப்பிட்ட சூழலில், 'க்த்வா, 'ல்யப்' ஆகிய இரண்டுமே வரும்.

க்ருஷ்ணம் வாஸோ யஜமானம் பரித4ாவயித்வா (காடக 11.10 'க ருப்புத் துணியால் யஜமானன் தன்னை மூடிக் கொள்ளச் செய்துவிட் டு': ப்ரத்யஞ்சமர்கம் ப்ரத்யர் பயித்வா (அ.2.25) ல்யப் – உத்3த்4 ருத்ய ஜுஹோதி

**7.1.39** ஸுபாம் ஸுலுக் பூர்வ ஸவர்ணாச்சே2யா டா3ாட்3யா யாஜால:

வேதமொழியில், பெயர்ச் சொல்லுக்குப் பின் இணைக்கப்படும் 'ஸுப்' (வேற்றுமையுருபுகளுக்கு)புக்கு (1)ஸுப் (2)வேற்றுமையுருபுகெடுதல், (3)உயிரீற்றுச் சொற்களின் இறுதியுயிருக்குப் பதிலியாக அதற்கொப்பான நெடில் பதிலியாதல் (பூர்வஸவர்ண) (4) ஆ (5) ஸே1 (6) டா3 (7) ட்3யா (8)யாச் (9)ஆல் ஆகியவகைள் வரும்.

1. அன்ருக்ஷரா ருஜவ: ஸந்து பந்த2ான: (பந்த2ா:); ருக் 1.164 'முள்ளில்லாததும் நேரானதாகவும் பாதைகள் அமையட்டும்'

வா: ஸுபாம் ஸுபோ ப4வந்தீதி வக்தவ்யம் வேற்றுமையுருபுகளுக்கு வேறு வேற்றுமையுருபுகள் வரைமுறையற்றதாகப் பதிலியாகும்.
து4ரி த3க்ஷிணாயா: (=த3க்ஷிணாயாம்)

வா: திஙாம் திஙோ ப4வந்தீதி வக்தவ்யம் மூவிடங்களைச் சுட்டும் ஒட்டுக்களுக்கு மற்றொரு இடத்தைச் சுட்டும் ஒட்டு பதிலியாகும். சண்டாலாம் யே அஸ்யூபாய தக்ஷதி (=தக்ஷந்தி) (ருக் 1.162.6)

2. ஆர்த்3ரே சர்மன் = (சர்மணி)
ஹவிர்த்3த4ானே யத்ஸுன்வந்தி தத்ஸாமிதே4னீரன்வாஹ (=யஸ்மின் ஸுன்வந்தி தஸ்மின் ஸாமிதே4னீ:)

3. தீ4தீ (=தீ4த்யா), மதீ (=மத்யா): ஸுஷ்டுதீ (=ஸுஷ்டுத்யா)

4. உப4ா (=உபெ4ள) யந்தாரெள

5. ந தாத்3 ப்3ராஹ்மணாத்3 நிந்த3ாமி (=தான் ப்3ராஹ்மணான்)

6. ந யுஷ்மே (=யூயம்) வாஜப3ந்த4வ: ; அஸ்மே (=வயம்) இந்த்3ரா ப்3ருஹஸ்பதீ

7. உருயா (உருணா): த்4ருஷ்ணுயா (=த்4ருஷ்ணுனா)

8. நாபா ப்ருதி2வ்யாம்(=நாபெ4ள) ப்ருதி2வ்யாம்)

9. அனுஷ்ட்யா ச்யாவயதாம்(=அனுஷ்டுப⁴ா)
10. ஸாது⁴யா (=ஸாது⁴)
11. வஸந்தா (வஸந்தே) யஜேத

வா: இயாடி³ யாஜீகாராணாமுபஸங்க்²யானம்
கீழ்க்கண்டவைகளும் இங்கு குறிப்பிடப்பட வேண்டும்
(1) இயா,
(2) டி³யாச் மெய்யோடு சேர்ந்து இறுதியுயிர் கெடுதல்
(3) ஈ
(1) உர்வியா பரித⁴ானம் (உருணா)
(2) ஸுக்ஷேத்ரியா (ஸுக்ஷேத்ரிணா)
(3) த்³ருதிம் ந ஸு'ஷ்கம் ஸரஸி) ஸ'யானம்

வா: ஆங்யாஜயாராமுபஸங்க்²யானம்
ஆங், அயாச், அயார் ஆகியவைகளும் அவ்வாறே பதிலியாகும்.
ஆங் – ப்ரப³ாஹவா (=ப்ரப3ாஹுனா):
அயாச் – ஸ்வப்னயா ஸச ஸேவனம் (ஸ்வப்னேன)
அயார் – ஸிந்து⁴மிவ நாவயா (=நாவா)

**7.1.40** அமோ மஸ்
வேதமொழியில் 'அம்' (தன்மையொருமையொட்டு 'லுங்') உக்கு 'மஸ்' பதிலியாக வரும்.
'அம்' வினைச் சொல்லொட்டான 'மிப்'புக்குப் பதிலியாக வருவது 2ஆம் வேற்றுமையொருமையுருபு அல்ல.
வதீ⁴ம் வ்ருத்ரம் (ருக் 1.165.8) (வதீம் = அவதி⁴ஷம்) 'நான் விருத்திரனைக் கொன்றுவிட்டேன்' க்ரமீம் வ்ருக்ஷஸ்ய ஸ'ாக²ாம் (க்ரமீம் அக்ரமிஷம்) 'நான் மரத்தின் கிளையில் ஏறினேன்'

**7.1.41** லோபஸ்த ஆத்மனேபதே³ஷு
வேதமொழியில் ஆத்மனேபதவொட்டான 'த' (=தன்) கெடும். தே³வா அது³ஹ்ர (=அது³ஹத): த³ந்த⁴ர்வாப்ஸரஸோ அது³ஹ்ர து³ஹாம் அஸ்'விப்⁴யாம் பய அக்⁴ன்யேயம் (து³க்⁴தாம்); த³க்ஷிணத: ஸ'யே (ஸேதே)

**7.1.42** த் வமோ த்⁴வாத்
வேதமொழியில் 'த்⁴வம்' உக்குப் பதிலியாக 'த்வாத்' வரும். அந்தரேவோஷ்மாணம் வாரயத்4வாம் (=வாரயத்4வம்) (ஐத்.ப்ர.2.8.14) 'சூட்டை அதற்குள்ளேயே மூடு'

**7.1.43** யஜத்⁴வைனமிதி ச
'யஜத்⁴வம்' என்பதற்குப் பதிலாக 'யஜத்⁴வைனம்' என்ற சொல்விதிக்குப்

புறம்பாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது (வேதமொழியில்)
யஜத்[4]வம் + ஏனம் = யஜத்[4]வ θ + ஏனம்
யஜத்[4]வைனம் ப்ரியமேத[4]ர; (ருக் 8.2.37)

**7.1.44** தஸ்ய தாத்
வேதமொழியில் 'த' (முன்னிலைப் பன்மை வியங்கோள்) ஒட்டுக்குப் பதிலியாக 'தாத்' வரும்.
க[3]ாத்ரம் க[3]ாத்ரமஸ்யா நூனம்
க்ருணதாத் (=க்ருணுத) (ஐ.ப்ரா 2.6.15) ஊவத்[4]யே கே[3]ாஹம் பார்தி[2]வம் க[2]னதாத் (க[2]னத) (ஐ.ப்ரா. 2.6.16)

**7.1.45** தப்தனப்தனத[2]னாஸ்[1] ச
வேதமொழியில் 'த'வுக்குப் பதிலியாக தப், தநப், தன, த[2]ன ஆகியவைகளும் வரும்.
தப் – ஸ்[1]ரு[1]ணோத (=ஸ்ரு[1]ணுத) க்[3]ராவான:
தனப் – ஸம்வரத்ராத[3]த[4]ாதன (=த[4]த்த)
தன – ஜுஜுஷ்டன (=ஜுஷத)
த[2]ன – யதி[3]ஷ்டன (=யதி[3]ச்ச[2]த)

**7.1.46** இத[3]ந்தோ மஸி
வேதமொழியில், 'மஸ்' ஒட்டு 'இ'யீற்று ஒட்டாக 'மஸி'யாகும்.
புனஸ் த்வாம் தீ[3]பயாமஸி (=தீ[3]பயாம)
ஸ[1]லப[4]ம் ப[4]ஞ்ஜ யாமஸி (= ப[4]ஞ்ஜயாம)

**7.1.47** க்த்வோ யக்
வேதமொழியில் ஒரு வினைக்குப்பின் இணைக்கப்படும் 'க்த்வா'வோடு 'யக்' (=ய) இணைக்கப்படும்.
த[3]த்வாய ஸவிதா தி[4]ய: (=தத்வா)

**7.1.48** இஷ்ட்வீனம் இதி ச
வேதமொழியில், 'இஷ்ட்வீனம்' என்ற நிபாதனமும் காணப்படும். 'யஜ்' தாதுவுக்கப்பின் வரும் 'க்த்வா' ஒட்டுக்க 'ஈனம்' விதிக்குப் புறம்பாக பதிலியாக வருகிறது.
இஷ்ட்வீனம் (இஷ்ட்வா) தே3வான்' இதைப் போன்ற மற்ற சொற்களும் வேதமொழியில் காணப்படும் என்பதை 'ச' சுட்டுகிறது. பித்வீனம்=பீத்வா

**7.1.49** ஸ்னாத்வ்யாத[3]யஸ்[1] ச
வேதமொழியில் ஸ்னாத்வீ 'குளித்துவிட்டு' என்ற சொற்கள் நிபாதனங்கள் ஸ்நாத்வீ மலாதி[3]வ (ஸ்நாத்வா); பீத்வீ (=பீத்வா) ஸோமஸ்ய வாங்ருதே[4] 'சோமரஸம் பருகி (அவன்) வளர்ந்தான்'

**7.1.50** ஆஜ்ஜஸேரஸுக்

வேதமொழியில், 'அ' அல்லது 'ஆ' வீற்றுப் பெயர்ச் சொற்களுக்குப்பின் 'ஜஸ்' (அஸ்) (முதல் வேற்றுமைப்பன்மை) உருபு இணைக்கும்போது அஸுக் (அஸ்) அப்பெயர்ச் சொற்களுக்குப்பின் (ஆகமம்) வரும்.

ப்[3]ராஹ்மணாஸ: பிதர: ஸோம்யாஸ: (=ப்[3]ராஹ்மணா: ஹோம்யா:)

**7.1.51** அஸ்வக்ஷீர வ்ருஷலவணானாமாத்மப்ரீகெள க்யசி

'தான் மகிழ்ச்சியடைதல் அல்லது திருப்தியடைதல்' (ஆத்ம ப்ரீதெள என்ற பொருளைச் சுட்டும்போது, 'க்யச்' ஒட்டுக்குமுன் நிற்கும் அஸ்'வ 'குதிரை', க்ஷீர 'பால்', வ்ருஷ 'காளை' லவண 'உப்பு' ஆகியவைகளுக்குப்பின் 'அஸுக்' ஆகமம் ஆகும். அஸ்வஸ்யதி (= அஸ்'வ + க்யச் + ஸ'ப் + திப்) = அஸ்வ + அஸுக் – ய + அ + தி) வட[3]வா 'பெண்குதிரை ஆண் குதிரையை விரும்புகிறது க்ஷீரஸ்யதி மாணவக: 'மாணவன் பாலை விரும்புகிறான்', வ்ருஷஸ்யதி கெள[3]: லவணஸ்ய தி உஷ்ட்ர: அஸ்வீயதி, (தனக்காக என்ற பொருளில் அல்ல)

வா: அஸ்வ வ்ருஷயோர் மைது[2]னேச்சாயா மிதி வக்தவ்யம் அஸ்வ, வ்ருஷ என்ற சொற்களோடு, இவ்வொட்டு'இணைதல்' என்ற பொருளைச் சுட்டும்.

வா: க்ஷீரலவணயோர் லாலஸாயாமிதி வக்தவ்யம்

க்ஷீர, லவண என்பவைகளோடு 'பேராசை' என்ற பொருளைச் சுட்டும்.

**7.1.52** ஆமி ஸர்வநாம்ன:ஸுட்

'அ' அல்லது 'ஆ' வீற்று மாற்றுப் பெயர்களோடு 'ஆம்' (6ஆம் வேற்றுமைப் பன்மை) உருபு இணைக்கும்போது, அதற்கு முன் 'ஸுட்' ஆகமம் ஆகும். ஸர்வ + ஆம் = ஸர்வ + ஸுட் + ஆம் = ஸர்வேஷாம் (7.3.103); விஸ்'வேஷாம்

**7.1.53** த்ரேஸ்த்ரய:

'ஆம்' உக்கு முன் நிற்கும் த்ரி '3'க்கு 'த்ரய' பதிலியாகும். த்ரி + ஆம் = த்ரய + ஆம் = த்ரயாணாம் (7.1.54;3.102)

**7.1.54** ஹ்ரஸ்வ நத்[3]யாபோ நுட்

குறிலீற்றுச் சொற்கள், 'நதீ' என்ற ஸம்க்[3]ஞாவினால் சுட்டப்படும் சொற்கள் 'ஆப்' பெண்பாற்சொற்கள் ஆகியவைகளோடு 'ஆம்' இணைக்கும்போது அதற்கு முன் 'நுட்' ஆகமமாகும்.

1. தே[3]வ + ஆம் = தே[3]வ + நுட் = ஆம் = தேவானாம்; அக்னீனாம்....

2. நதீ – குமாரீணாம், க3ளரீணாம்
3. ஆப் – மாலானாம்

**7.1.55** ஷட் சதுர்ப்4யஸ்1 ச
'ஷஷ்' என்ற ஸம்க்3ஞாவினால் சுட்டப்படும் எண்ணுப் பெயர்கள், சதுர் 'நான்கு' ஆகியவைகளோடும் 'நுட்' ஆகமம் 'ஆம்' உருபு இணைக்கும்போது வரும்.
1) ஷண்ணாம், பஞ்சானாம், ஸப்தானாம், நவானாம், த3ஸானாம்
2) சதுர்ணாம்.

**7.1.56** ஸ்ரீக்3 ராமண்யோஸ் ச2ந்த3ஸி
வேத மொழியில், ஸ்1ரீ, 'புகழ்', க்3ராமணீ 'கிராமத் தலைவன்' ஆகிய சொற்களோடு 'ஆம்' இணைக்கும்போது, அவ்வேற்றுமையுருபுக்கு முன் 'நுட்' (ஆகமம்) வரும்
ஸ்ரீணாம் (8.4.2); க்3ராமணீனாம் 1.4.5 இன்படி 'ஸ்ரீ' 6ஆம் வேற்றுமையுருபு இணைக்கும்போது விருப்பாக 'நதீ' எனப்படும். இங்கு இது வ்யவஸ்தி2த விப4ாஷா ஆகியது. அதாவது 'ஸ்1ரீ' வேத மொழியில் கண்டிப்பாக 'நதீ' எனப் பெயர்பெறும். மற்ற இடங்களில் இது விருப்பாக 'நதீ'யாகும். ஸ்ரியாம் அல்லது ஸ்1ரீணாம்

**7.1.57** கோ3: பாத3ாந்தே
வேதமொழியில், இருக்குவேதத்தின் ஒரு செய்யுளினிறுதியிலமையும் (பாத3ாந்தே) 'கோ4ா 'மாடு' என்ற சொல்லோடு 'ஆம்' இணைக்கும்போது அதற்கு முன் 'நுட்' வரும்.
வித்3மா ஹி த்வா கோ3பதிம் ஸூர கோ3ானாம் (ருக்.10.47.9) 'ஓ வீரனே, நாங்கள் உன்னை மாடுகளின் காவலனாக அறிகிறோம்' ஆனால் க3வாம் கோ3ாத்ரம் உத3ஸ்ருஜோ யத3ங்கி3ர:
'ஓ அங்கிரஸ், நீ மாட்டுப்பட்டியைத் திறந்துவிட்டாய்'

**7.1.58** இதி3தோ நும் த4ாதோ:
தாதுபாடத்தில் 'இத்'தாகக் கொண்டதாகக் குறிக்கப்பட்டுள்ள தாவுக்குப்பின் 'நும்' இணைக்கப்படும். குடி3 – குண்டி3தா, குண்டி3தும், குண்டி3தவ்யம், ஹுடி3 – ஹுண்டி3தா, ஹுண்டி3தும், ஹுண்டி3தவ்யம். ஆனால் பசதி, படதி

**7.1.59** ஸே1 முசாதீ3னாம்
'முச்' முதலியவைகளுக்குப்பின், 'ஸ1' என்ற விகரணம் (துத3ாதி வகுப்புவிகரணம்) இணைக்கும்போது 'நும்' ஆகமம் வரும்.
இத்தாதுகள் தாதுபாடத்தில் 6.136–43 வரை கொடுக்கப்பட்டிருக்கிறது.
முச் + ஸ + திப் = முச் + நும் + ச் + அ – தி 'முஞ்சதி' 'விடுவிக்கிறான்', லுப் – லிம்பதி 'வெட்டுகிறான்': வித்3 – விந்த3தி 'அடைகிறான்', லிபி – லிம்பதி

'பூசுகிறான்' ஸிச் – ஸிஞ்சதி 'தெளிக்கிறான்' : க்ருதி க்ருந்ததி 'வெட்டுகிறான்' கி²த் – கி²ந்த³தி 'அடிக்கிறான்'; பிஸ் – பிம்ஸ¹தி 'பிரிக்கிறான், வெட்டுகிறான்' ஆனால் மோக்தும்

வா: ஸே¹த்ரும்ப²ாதீ³னாமுபஸம்க்²யானம் கர்தவ்யம்

மேலே கூறிய தாதுக்களுடன் 'த்ரும்ப்²' முதலியவைகளையும் சேர்த்துக் கூற வேண்டும்.

த்ருப்², த்ரும்ப்², 'திருப்தியடை'; த்³ருப்², த்ரு³ம்ப்² 'வருந்து', கு³ப்², கு³ம்ப்², 'கட்டு'; உப்⁴, உம்ப்⁴ 'நிரம்பு' ஸுப்⁴, ஸும்ப்⁴ 'அணி செய்'

இவைகளில் மூக்கொலியுடன் காணப்படும் தாதுக்கள், மூக்கொலி கெடும் (6.4.24) அதன்பிறகு 'நும்' (ஆகமம் வரும். (இச்சூத்திரத்தின்படி), ஆகவே த்ரும்²பிதி, த்³ரும்ப²தி, கும்பதி², உம்ப⁴தி, 'ஸும்ப⁴தி' மூக்கொலியுடன் அமையாதவைகள் த்ருப²தி, த்³ருப²தி, கு³ப³தி, உப⁴தி, ஸுப⁴தி என்று ஆகும்.

**7.1.60** மஸ்ஜி நஸே¹ர் ஜ²லி

மஸ்ஜ் 'முழுகு' நஸ்¹ 'மறை' என்ற தாதுக்களுக்குப்பின் 'ஜ²ல்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்தில் தொடங்கும் ஒட்டுக்களையிணைக்கும்போது, அத்தாதுக்களோடு 'நும்' ஆகமம் ஆகும். மங்க்தும், நம்ஷ்டும் ஆனால் மஜ்ஜனம், (ல்யுட் 8.4.53) நஸ1னம்.

**7.1.61** ரதி⁴ஜபே⁴ாரசி

ஓயிரெழுத்தில் தொடங்கும் ஒட்டுக்கு (அசி) முன் நிற்கும் ரத்⁴ 'அடக்கு, வெல்', ஜப்⁴ 'ஒடி, பிளவு படு' என்ற தாதுக்களுக்குப்பின் 'நும்' ஆகமம் வரும்.

ரத்⁴ + ணிச் + ஸப் + திப் = ரந்த⁴யதி (7.3.84)

'சமைக்கிறான்' ரந்த⁴க:, (ண்வுல்), ரந்த⁴: (க⁴ஞ்) ஜம்ப⁴யதி 'கடிக்கிறான், ஒடிக்கிறான்'

ஜம்ப⁴: (க⁴ஞ்) 'பல்'

**7.1.62** நேட்²யலிடி ரதே⁴:

'லிட்'ஐத் தவிர்த்து மற்ற 'இட்' ஆகமத்துடன் வரும் ஒட்டுக்களுக்கு முன் நிற்கும் 'ரத்⁴' தாதுவோடு 'நும்' இணைக்கப்படமாட்டாது.

ரதி⁴தா, ரதி⁴தும் ஆனால் ரத்⁴ + லிட் = ரரந்தி⁴வ,

ரரந்தி⁴ம, ரந்த⁴ன (ல்யுட்);

**7.1.63** ரபே⁴ரஸ¹ப்³லிடோ:

'ஸ¹ப் லிட்' ஆகியவைகளைத் தவிர்த்து (அஸ¹ப்³லிடோ:) மற்ற. ஒரு யிரெழுத்தில் தொடங்கும் ஒட்டுக்களுக்கு முன் நிற்கும் ரப்4 'பிடித்து க் கொள்' என்ற தாதுவுக்குப் பின் 'நும்' ஆகமம் ஆகும். ஆ–ரப் + ணிச் + ஸ¹ப் + திப் = ஆரம்–ப⁴யதி; 'தொடக்கி வைக்கிறான்' ஆரம்⁴ (க⁴ஞ்) 'தொடக்கம்'; ஆனால் ஆரப்⁴ + ஸ¹ப் + தே = ஆரப⁴தே, ஆரபே⁴ (லிட்)

**7.1.64** லபே⁴ஸ்¹ ச

'ஸ்ப்', 'லிட்' ஆகியவைகளைத் தவிர்த்து மற்ற உயிரெழுத்தில் தொடங்கும் ஒட்டுக்களுக்கு முன் நிற்கும் லப் 'அடை' என்ற தாதுவோடும் 'நும்' (ஆகமம்) இணைக்கப்படும்.

லம்ப⁴யதி 'அடையவைக்கிறான்' ஆனால் லப⁴தே 'அடைகிறான்' லபே⁴(லிட்)

**7.1.65** ஆஙோ யி

'ஆங்' ஒடு நிற்கும் 'லப்⁴' தாதுவோடு 'ய்' இல் தொடங்கும் ஒட்டையிணைக்கும்போது, அத்தாதுவுக்குப்பின் 'நும்' வரும்.

ஆ + லப்⁴ + ண்யட் = ஆலம்ப்⁴ய + டாப் = ஆலம்ப⁴யா கௌ:

'யாகத்தில் பலியிடப்படும் பசு' ஆனால் லப்⁴யம்

**7.1.66** உபாத் ப்ரஸ'ம்ஸாயாம்

'புகழ்தல்' (ப்ரஸ'ம்ஸாயாம்) என்ற பொருளில், 'உப' உடன் சேர்ந்து நிற்கும் 'லப்⁴' தாதுவுக்குப்பின் 'ய்' இல் தொடங்கம் ஒட்டு வரும்போது 'நும்' தாதுவுக்குப்பின் வரும்.

உபலம்ப்⁴யா வித்³யா 'அடையத் தகுந்த அறிவு'; ஆனால் உபலப்⁴ய அடையக் கூடியது.

**7.1.67** உபஸர்காத் க²ல் க⁴ஞோ:

உபசர்க்கத்துக்குப்பின் நிற்கும் 'லப்⁴' தாதுவுக்குப்பின் க²ல், க⁴ஞ் ஆகியவொட்டுக்கள் இணைக்கும்போது அவ்வொட்டுக்களுக்கு முன் 'நும்' வரும்.

ஈஷத் ப்ரலம்ப⁴: 'எளிதாக ஏமாறும்' ஸுப்ரலம்ப⁴: 'பெறுதல்'

க⁴ஞ் – ப்ரலம்ப⁴: பெறுதல்; ஆனால் லாப⁴: 'லாபம்'

**7.1.68** ந ஸுது³ர்ப்⁴யாம் கேவலாப்⁴யாம்

ஸு, அல்லது து³ர் மட்டும் அதாவது வேறு உபசர்க்கத்தோடு வராமல் தனியாக இந்த உபசர்க்கத்துடன் நிற்கும் 'லப்⁴' என்ற தாதுவுக்குப் பின் க²ல், க⁴ஞ் இணைக்கும்போது, அவைகளுக்கு முன் 'நும்' வராது.

ஸுலப⁴ம் (க²ல்) 'எளிதில் அடையக் கூடிய'; து³ர்லப⁴ம் அரிது';

க⁴ஞ் – ஸுலாப⁴: ஆனால் ஸுப்ரலம்ப⁴:, துஷ்ப்ரலம்ப⁴:

**7.1.69** விப⁴ாஷா சிண் ணமுலோ:

'சிண்' 'ணமுல்' ஒட்டுக்களுக்கு முன் நிற்கும் 'லப்⁴' உக்குப்பின் விருப்பாக 'நும்' வரும்.

சிண் – அலம்பி⁴, அலாபி⁴:

ணமுல்–லாப⁴ம் லாப⁴ம், லம்ப⁴ம் லம்ப⁴ம்

இது வ்யவஸ்தி⁴த விப⁴ாஷா தாதுவோடு உபசர்க்கம் இணைக்கப்படாமல் நிற்கும்போது விருப்பாகும். உபசர்க்கத்துடன் தாது நிற்கும்போது கட்டாயமாக 'நும்' இணைக்கப்படும் ப்ராலம்பி⁴, ப்ரலம்ப⁴ம்

**7.1.70** உகி³த³சாம் ஸர்வநாமஸ்த²ானே அத⁴ாதோ:
'உக்' (உ,ரு,ல்)ஐ இத்தாகக் கொண்ட தாதுக்களைத் தவிர்த்த (அத⁴ாதோ:) மற்ற அடிச் சொற்கள், அச் (அஞ்ச்) ஆகியவைகளோடு 'ஸர்வநாமஸ்த²ானம்' என்ற ஸம்க்³ஞாவினால் குறிப்பிடப்படும் வேற்றுமையுருபுகள் இணைக்கும் போது 'நும்' அவ்வுருபுகளுக்கு முன் வரும்.

1. ப⁴வது + ஸு = ப⁴வந்த் + ஸ = ப⁴வந்த் + θ (6.1.68) = ப⁴வான் (8.2.23); ப⁴வந்தௌ (ஔ) ப⁴வந்த: (ஜஸ்), ப⁴வந்தம் (அம்)

2. ஸத்ரு – பச் + ஸ'த்ரு = பசத், பசந்தௌ, பசந்த:

3. அஞ்ச் – ப்ராங், ப்ராஞ்சௌ, ப்ராஞ்ச ஆனால் த்³ருஷத்

**7.1.71** யுஜேரஸமாஸே
ஒரு தொகையிலமையாத 'யுஜ்' என்ற பெயரடிச் சொல்லோடு மேலே குறிப்பிட்ட வேற்றமையுருபுகளிணைக்கும்போது, அவ்வுருபு களுக்குமுன் 'நும்' ஆகமம் வரும்.
யுங் (8.2.23; 62) யுஞ்ஜௌ, யுஞ்ஜ: ஆனால் அஸ்'வயுக் அஸ்'வயுஜௌ, அஸ்'வயுஜ:
இங்கு குறிப்பிட்டிருக்கும் யுஜ், ருத⁴ாதி வகுப்பைச் சேர்ந்தது 7) யுஜி யோகே³ தி3வாதி (68) வகுப்பைச் சேர்ந்ததல்ல (யுஜ் ஸமா தெ⁴ள) ஆகையால் யுஜமாபன்னா: ருஷய: என்று வரும்.

**7.1.72** நபும்ஸகஸ்ய ஜ²லச:
'ஜ²ல்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்தையீறாகக் கொண்ட சொற்கள், ஒருயிரெழுத்தையீறாகக் கொண்ட சொற்கள் ஆகிய நபும்சகத்தைச் சுட்டும் பெயர்ச் சொற்களோடு ஸர்வநாமஸ்தானம் எனப்படும் வேற்றுமையுருபுகளை இணைக்கும்போது, அவ்வுருபுகளுக்கு முன் 'நும்' ஆகமம் வரும்.

1. யஸ'ஸ் + ஸி = யஸ'ாம்ஸி (8.3.24) 'புகழ்கள்'; உத³ஸ்விந்தி

2. வன + ஸி = வானினா(காடுகள்) த³தீ⁴னி 'தயிர்கள்; மதூ⁴னி, கர்த்ரூணி. ஆனால் ப³ஹுபுரி

வா: ப³ஹுர்ஜி ப்ரதிஷேதே⁴ா வக்தவ்ய: இவ்விதி 'ப³ஹுர்ஜி' என்ற சொல்லின் செயற்படாது. ப³ஹுர்ஜி ப்³ராஹ்மண குலானி.

**7.1.73** இகோ அசி விப⁴க்தௌ
'இக்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரெழுத்தையீறாகக் கொண்ட

நபும்சகத்தைச் சுட்டும் பெயர்ச் சொல்லுக்குப்பின் ஒருயிரெழுத்தில் தொடங்கும் வேற்றுமையுருபையிணைக்கும் போது அதற்கு முன் 'நும்' ஆகமம் ஆகும்.

வாரி + டா/ஙே/ஙஸி/ஙஸ்/ஓஸ்/ஙி = வாரி + ன் + ஆ/ஏ/அஸ்/அஸ்/ஓஸ்/இ = வாரிணா, வாரிணே, வாரிண:, வாரிண:, வாரிணோ:, வாரிணி

**7.1.74** த்ருதீயாதி³ஷு ப⁴ாவித பும்ஸ்கம் பும்வத் க³ாலவஸ்ய

'இக்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரெழுத்தை யீறாகக் கொண்டதும், அதற்கிணையான ஆண்பாற் சொல்

உடைத்தான நபும்ஸகச் சொல்லுக்குப்பின் மூன்றாம் வேற்றுமையுருபுகளும் அதைத் தொடர்ந்து வரும் மற்ற வேற்றுமையுருபுகளும் இணைக்கப்படும்போது அச்சொற்களை ஆண்பாற் சொற்களாகக் கருதப்படும் என்பது காலவரின் கருத்து.

அதாவது, ஆண்பாற் சொற்களில் குறிலாவதோ 'நும்' ஆகமம் வருவதோ கிடையாதோ, அதே போன்று நபும்சகச் சொற்களிலும் இவைகள் கிடையாது.

க்³ராமணீ (ஆண்பாற் சொல்) க்³ராமணி (நபும்சகம்)

3. க்³ராமண்யா ப்³ராஹ்மணகுலேன,
க்³ராமணினா ப்³ராஹ்மண குலேன

4. க்³ராமண்யே ப்³ராஹ்மணகுலாய
க்ராமணினே ப்³ராஹ்மணகுலாய

5. க்³ராமண்யோ ப்³ராஹ்மண குலாத்
க்³ராமணினோ ப்³ராஹ்மணகுலாத்

6. க்³ராமண்யோ ப்³ராஹ்மணகுலஸ்ய
ஒருமை க்³ராமண்னோ ப்³ராஹ்மணகுலஸ்ய

6. பன்மை க்³ராமண்யாம் ப்ராமணகுலானாம், க்ராமணீனாம் ப்ராமணகுலானாம்

7. க்³ராமணினி ப்³ராஹ்மணகுலே
க்³ராமண்யாம் ப்³ராஹ்மணகுலே

**7.1.75** அஸ்தி² த³தி⁴ ஸக்த²யக்ஷ்ணாமனங்குத³ாத்த:

அஸ்தி³ 'எலும்பு', த³தி⁴ 'தயிர்', ஸக்தி² 'தொடை', அக்ஷி 'கண்' ஆகியவைகளுக்குப்பின் மூன்றாம் வேற்றுமையுருபுகளும் அதற்குப்பின் தொடர்ந்து வரும் மற்ற வேற்றுமையுருபுகளும் இணைக்கப்படும்போது உதாத்த சுரம் கொண்ட 'அனங்', அச் சொற்களின் இறுதியுயிருக்குப்

பதிலியாக வரும்.

அஸ்த்$^{2}$னா, அஸ்த்$^{3}$னே, அஸ்த்$^{2}$ன:, அஸ்த்$^{2}$னோ:, அஸ்த$^{2}$னி/அஸ்த்னி

அஸ்த்$^{2}$னி; த$^{3}$த்$^{4}$னா, த$^{3}$த்$^{4}$னே, த$^{3}$த்$^{4}$ன:

ஸக்த்$^{2}$னா, ஸக்த்$^{3}$னே, ஸக்த்$^{3}$ன:

அக்ஷ்ணா, அக்ஷ்ணே, அக்ஷ்ண:

**7.1.76** ச$^{2}$ந்த$^{3}$ஸ்யபி த்$^{3}$ருஸ்$^{1}$யதே

வேதமொழியிலும், அஸ்தி$^{2}$, த$^{3}$தி$^{4}$, ஸக்தி$^{2}$, அக்ஷி ஆகியவைகளினிறுதியுயிர்களுக்குப் பதிலியாக மேலே கூறப்பட்ட வேற்றுமையுருபுகளைத் தவிர மற்ற வேற்றுமையுருபுகளோடு அச்சொற்கள் வரும்போதும் 'அனங்' வரும்.

அதாவது ஒரு மெய்யெழுத்தில் தொடங்கும் வேற்றுமையுருபுகள் தொடரும்போது அவ்வாறாகும்.

அஸ்த$^{2}$பி: (8.2.7; 3.1.5) (அஸ்தி$^{2}$ + பி$^{4}$:) அக்ஷபி: அஸ்த$^{2}$ானி (அஸ்தி$^{2}$ + ஸி$^{1}$)

வேற்றுமையுருபுகளல்லாத வேறு ஒட்டுக்கள் தொடரும்போதும் அவ்வாறாகும்.

அக்ஷண்வத் (அக்ஷி + மதுப்) அஸ்த$^{2}$ண்வத்

இந்த்$^{3}$ரோ த$^{3}$தீ$^{4}$சீ அஸ்த$^{2}$பி$^{4}$:;

ப$^{4}$த்$^{3}$ரம் பஸ்$^{1}$யேமாக்ஷபி$^{4}$:

அஸ்த$^{2}$ாண்யுத்க்ருத்ய ஜுஹோதி

அக்ஷண்வதா லாங்கலேன

அஸ்த$^{3}$ன்வந்தம் யதனஸ்தா பி$^{3}$ப$^{4}$ர்தி

**7.1.77** ஈ ச த்$^{3}$விவசனே

வேதமொழியில், அஸ்தி$^{2}$, த$^{3}$தி$^{1}$, ஸக்தி$^{2}$, அக்ஷி ஆகியவைகளோடு வேற்றுமையுருபுகளின் இருமையிணைக்கப்படும் அவைகளினிறுதியுயிருக்குப் பதிலியாக உதாத்த சுரம் கொண்ட 'ஈ' பதிலியாகும்.

அக்ஷீ தே இந்த்$^{3}$ரபிங்க$^{3}$லே கபேரிவ

அக்ஷீப்$^{4}$யாம் தே நாஸிகாப்$^{4}$யாம்

**7.1.78** நாப்$^{4}$யஸ்தாச் ச$^{2}$து:

இரட்டிக்கப்பட்ட அடிச் சொற்களோடு ஸ$^{1}$த்ரு (அத்–அந்த்) இணைக்கும்போது 'நும்' ஆகமம், அவைகளுக்குப்பின் வராது. த$^{3}$த$^{3}$த், த$^{3}$த$^{3}$தௌ, த$^{3}$த$^{3}$த: (தா + ஸத்ரு ) ஜாக்$^{3}$ரத், ஜாக்$^{3}$ரதௌ, ஜாக்ரத: (ஜாக்$^{3}$ரு + ஸத்ரு)

இது 7.1.70 உக்குப் புறனடை. ஸர்வநமிஸ்தாபை எனப்படும் ஒட்டுக்களிணைக்கப்படும்போது தான் இது செயற்படும். சூ. 70,இலிருந்து 'நும்' இங்கு கொணர வேண்டும். ஏனென்றால், இதற்கு முந்திய சூத்திரத்தில் விதிக்கப்பட்ட 'ஈ', 'ஸத்ரு'வுக்குப்பின் வராததால், அச்சூத்திரத்திற்கு இது மறுப்பு விதியாக ஆக முடியாது.

**7.1.79** வா நபும்ஸகஸ்ய

மேலே கூறப்பட்ட சூழலில் நபும்சகத்தைச் சுட்டும் சொற்களுக்குப்பின் 'நும்' விருப்பாக ஆகமம் ஆகும்.

த³த³தி, அல்லது த³த³ந்தி குலானி
த³த⁴தி அல்லது த³த⁴ந்தி

**7.1.80** ஆச் சீ²நத்³யோர் நும்

'அ' அல்லது 'ஆ' வை யீறுதியில் கொண்ட 'ஸத்ரு' என்ற வொட்டோடு கூடிய வினையடிச் சொல்லுக்குப்பின் 'ஸீ' என்ற வேற்றுமையுருபுகளோ அல்லது 'நதீ' எனப்படுபவை (3.4.3) வரும்போது 'நும்' (ஆகமம்) விருப்பாக வரும்.

துத்³ + ஸத்ரு = துத்³ + ஸ + ஸத்ரு = துத³த் 6.1.97) + ஸீ = துத³ந்தீ அல்லது துத³தீ; துத³த் + ஙீப் = துத³ந்தீ அல்லது துத³தீ ப்³ராஹ்மணீ:
யா + ஸ¹த்ரு¹ = யா + 0 அத் = யாத் + ஸீ¹ = யாந்தீ அல்லது யாதீ.

**7.1.81** ஸப் ஸ்யனோர் நித்யம்

ஸப், ஸ்யன் என்ற விகரணங்களோடு நிற்கும் வினைகளுக்குப்பின் "ஸ¹த்ரு" ஒட்டு இணைக்கப்பட்டாக்கப்பட்ட சொற்களுக்குப்பின், நபும்ஸக வேற்றுமையுருபுகளான 'ஸீ¹' (ஈ), பெண்பால் ஒட்டு 'ஈ' (நதீ³) ஆகியவைகளினைக்கும்போது 'நும்' கட்டாயமாக ஆகமம் வ ரும்.

பசந்தீ, தீவ்யந்தீ

**7.1.82** ஸ¹ாவனடு³ ஹ:

ஸு (முதல் வேற்றுமை, விளி வேற்றுமையொருமையுருபு), அணடு³ஹ 'எருது' என்ற சொல்லோடு இணைக்கும்போது அச்சொல்லுக்குப்பின் 'நும்' வரும்.

அனட்வான் (முதல் வேற்றுமையொருமை)
அனட்வன் (விளி வேற்றுமையொருமை)

**7.1.83** த்³ருக்ஸ்¹வவஸ் ஸ்வதவஸ் ச²ந்த³ஸி

வேதமொழியில், த்ரு'ஸ்', ஸ்வவஸ்
ஸ்வதவஸ் ஆகியவைகளோடு 'ஸு' இணைக்கும்போது, அவ்வேற்றுமையுருபுக்கு முன் 'நும்' ஆகமம் வரும்.

ஈத்³ருங், (8.2.23; 62); தாத்³ருங்
ஸ்வவான், ஸ்வதவான்

**7.1.84** தி³வ ஔட்

'தி³வ்' ஆகாயம் ஒடு 'ஸு' இணைக்கும்போது அச்சொல்லினீறுக்கு 'ஔட்' பதிலியாக வரும்.

தி³வ் + ஸு = தி³–ஔ + ஸு = த்³யௌ:

'இத்' எழுத்து எதுவும் இணைக்கப்படாத 'தி³வ்' என்ற பெயர்ச் சொல்லையிங்கு குறிக்கும். 'இத்' எழுத்து 'உ'வுடணிணைக்கப்பட்ட 'தி³வு'

என்ற தாது பாடத்தில் காணப்படும் வினையையல்ல. 'தி³வு' என்ற வினையிலிருந்து ஆக்கப்பட்ட பெயர்ச்சொல்லுடன் 'ஔ' வராது. ஆனால் 'ஊ' வரும். அதன் முதல் வேற்றுமையொருமைச் சொல் 'த்³யு:' என்றாகும். காட்டாக அக்ஷத்³யு: பார்க்க 6.4.19: 6.1.131)

**7.1.85** பதி² மதி² ருபு⁴க்ஷாம் ஆத்

பதி²ன் 'பாதை', மதி²ன் 'மத்து' ருபு⁴க்ஷின் 'இந்திரனின் மற்றொரு பெயர்' ஆகியவைகளோடு 'ஸு' இணைக்கும்போது அச்சொற்களின் ஈறுக்குப் பதிலியாக 'ஆத்' (ஆ) வரும்.

பந்த²ா:, மந்த²ா:, ருபு⁴க்ஷா:

**7.1.86** இதோத் ஸர்வநாமஸ்த²ானே

மேலே கூறிய பெயர்ச் சொற்களோடு 'ஸர்வநாமஸ்த²ானம்' எனப்படும் வேற்றுமையுருபுகளை யிணைக்கும்போது, அவைகளினீற்றுக்குப் பதிலியாக அதாவது 'இ'க்குப் பதிலியாக 'அத்' வரும்.

பந்த²ானௌ, பந்த²ான:; பந்த²ானம்,

மந்த²ானௌ, மந்த²ான:, மந்த²ானம்

ருபு⁴க்ஷாணௌ, ருபு⁴க்ஷாண:, ருபு⁴க்ஷாணம்

**7.1.87** தே²ா ந்த²:

மேலே கூறிய பெயர்ச் சொற்களோடு 'ஸர்வநாமஸ்த²ானம்' எனப்படும் வேற்றுமையுருபுகளையிணைக்கும்போது அச்சொற்களின் 'த்²' பதிலியாக 'ந்த்²' வரும்.

மேற்சூத்திரம் 86இல் காட்டுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**7.1.88** ப⁴ஸ்ய டேர் லோப:

'ப⁴' எனப் பெயர்பெறும் (1.4.18) பதி²ன், மதி²ன், ருபு⁴க்ஷின் ஆகியவைகளோடு, ஒருயிரெழுத்தில் தொடங்கும் வேற்றுமையுருபுகளையிணைக்கும்போது, அச்சொற்களின் இறுதியுயிர் மெய்யெழுத்தோடு (டி) கெடும்.

உயிரெழுத்து அல்லது (ய்) ஐ முதலில் கொண்டவொட்டுக்களுக்கு முன் நிற்கும் அடிச்சொல் 'ப⁴' எனப்படும்.

பத²:, பத²ா, பதே²; மத²:, மத²ா, மதே², ருபு⁴க்ஷ:, ருபு⁴க்ஷா, ருபு⁴க்ஷே

**7.1.89** பும்ஸோ அஸுங்

பும்ஸ் 'ஆண், மனிதன்' என்ற சொல்லோடு 'ஸர்வநாமஸ் த²ான' வொட்டுக்கள் இணைக்கும்போது, அதனிறுதி 'ஸ்' உக்குப் பதிலியாக 'அஸுங்' வரும்.

புமான் (7.1.70; 6.1.68; 8.2.23);

புமாம்ஸௌ, புமாம்ஸ:; புமாம்ஸம் (8.3.23)

**7.1.90** கே³த: ணித்

கோ³ 'மாடு' என்ற சொல்லுக்குப் பின் இணைக்கப்படும் ஸர்வநாமஸ்த²ான வொட்டுக்கள் 'ண்' ஐ 'இத்'தாகக் கொண்ட தாகக் கருதப்படும்.

கௌ³: கா³வௌ:, கா³வ:

அதாவது 'விருத்தி' முதலியவைகள் வரும்.

**7.1.91** ணலுத்தமோ வா

தன்மையொருமை (ணல், லிட்) விருப்பாக 'ணித்' போன்று செயற்படும் அஹும் சகார அல்லது சகர, (விருத்தி விருப்பாகும்) பபாச, பபச

**7.1.92** ஸக்²யுரஸம்பு³த்³தெ⁴ள

விளிவேற்றுமையொருமையைத் தவிர்த்து (அஸம்பு³த்³தௌ), மற்ற ஸர்வநாமஸ்தான வொட்டுக்கள் ஸகி² 'நண்பன்' என்ற சொல்லோடு இணைக்கும்போது அவ்வொட்டுக்கள் 'ணித்' ஆகும். ஸகா²யௌ, ஸகா²யௌ, ஸகா²யம்:. ஸகே² (விளிவேற்றுமையொருமை)

**7.1.93** அநங் ஸௌ

'ஸகி'² என்ற சொல்லுக்கு முன் 'ஸு' (முதல் வேற்றுமையொருமை, ஆனால் விளிவேற்றுமையொருமையல்ல) இணைக்கப்படும் போது அச்சொல்லினீறான 'இ'க்கு 'அநங்' பதிலியாகும்.

ஸகி² + ஸு = ஸக²ன் + ஸு = ஸகா²ன் + ஸ் (6.4.8) = ஸகா²ன் + θ (6.1.88) = ஸகா² θ (8.2.7) ஆனால் ஸகே²

**7.1.94** ருது³ஸ'னஸ் புருத³ம்ஸோ அனேஹஸாம் ச

'ரு' வீற்றுச் சொற்கள், உஸ'னஸ் 'ஒரு பெயர்', புருத³ம்ஸ் 'அற்புதமான செயல்கள் நிறைந்த', அனேஹஸ் 'ஈடற்ற, நிகரில்லாத' ஆகியவைகளோடு 'ஸு' (முதல் வேற்றுமையொருமை மட்டும்) இணைக்கும்போது அவைகளினீற்றுக்கு அனங் (அன்) பதிலியாக வரும்.

கர்தா, ஆனால் கர்த்த: (விளிவேற்றுமையொருமை), பிதா, ஆனால் பித:, உஸ'னா ஆனால் உஸ'ன:, புருத³ம்ஸா ஆனால் புருத³ம்ஸ:, அனேஹா ஆனால் அநேஹ:

வா: 'அ'னங் 'உம்' 'உஸனஸ்' உடன் விளிவேற்றுமையொருமையில் வரும் உஸ'னஸ்

**7.1.95** த்ருஜ்வத்க்ரோஷ்டு:

க்ரோஷ்டு 'நரி' என்ற சொல்லோடு ஸர்வநாமஸ்தான வொட்டுக்களிணைக்கப்படும்போது, அச்சொல் 'த்ருச்' இல் முடியுஞ் சொல் போன்று கருதப்படும். அதாவது த்ருச் (த்ரு) வில் முடியும் சொல்லாகக் கருதப்படும்.

க்ரேர்ஷ்டா, க்ரோஷ்டாரௌ, க்ரோஷ்டார:, க்ரோஷ்டாரம்:, க்ரோஷ்டாரௌ

**7.1.96** ஸ்த்ரியாம் ச

பெண்பாலொட்டிணைக்கும்போதும் க்ரோஷ்டு என்ற சொல் 'த்ருச்' இல் முடியுஞ் சொல்லாகக் கருதப்படும்.

க்ரோஷ்டு + ஙீஷ் (4.1.63) = க்ரோஷ்ட்ரு + ஙீஷ் (4.1.41) = க்ரோஷ்ட்ரீ

**7.1.97** விப⁴ஷா த்ருதீயாதிஷ்வசி

உயிரெழுத்தை முதலில் கொண்ட மூன்றாம் வேற்றுமை, அதையடுத்து வரும் வேற்றுமையுருபுகள் (த்ருதீயாதி³ஷு) ஆகியவைகளுக்கு முன் நிற்கும் க்ரோஷ்டு என்ற சொல் 'த்ருச்' இல் முடியும் சொல்லாக விருப்பாகக் கருதப்படும்.

க்ரோஷ்டுனா, க்ரோஷ்ட்ரா

க்ரோஷ்டவே, க்ரோஷ்ட்ரே

க்ரோஷ்டோ:, க்ரோஷ்டு:

க்ரோஷ்டௌ, க்ரோஷ்டரி

க்ரோஷ்ட்ரோ:, க்ரோஷ்ட்வோ:

வா: த்ருஜ்வத்³ப⁴ாவாத் பூர்வ விப்ரதிஷேதே⁴ன நும் நுடௌ ப⁴வத:

'த்ருச்' போன்று செயற்படவேண்டுமென்று முன் சூத்திரங்களில் விதிக்கப்பட்டதை மீறி 'நும்' 'நுட்' ஆகமங்கள் வரும். ப்ரியக்ரோஷ்டுனே (4ஆம் வேற்றுமையொருமை) அரண்யாய; ஹதக்ரோஷ்டுனே வ்ருஷலகுலாய நுட்—க்ரோட்டூனாம் (6ஆம் வேற்றுமைப் பன்மை)

**7.1.98** சதுரனட்³ஹோராமுத³ாத்த:

ஸர்வநாமஸ்தானம் எனப்படும் வேற்றுமையுருபுகளை சதுர் '4' அன டுஹ் 'எருது' ஆகியவைகளோடு இணைக்கும்போது அச்சொற்களினி றுதி உயிரான 'உ' வுக்குப்பின் உதாத்த சுரம் கொண்ட ஆம் (ஆ) ஆகமம் வரும்.

சத்வார: அனட்³வான், அனட்³வாஹௌ, அனட்வாஹ:, அனட்³வாஹம்.

சதுர், அனடு³ஹ் ஆகியவைகளையிறுதியுருப்பினராகக் கொண்ட தொகைகளிலும் அவ்வாறே.

ப்ரிய சத்வா:, ப்ரிய சத்வாரௌ, ப்ரிய சத்வார:, ப்ரியானட்³வான், ப்ரியான்ட்³வாஹௌ, ப்ரியானட்³வாஹ:

வா: அனடு³ஹ: ஸ்த்ரியாம் வேதி வக்தவ்யம்

பெண்பாலில் இது விருப்பாகும்

அனடு³ஹீ, அனட்³வாஹீ

**7.1.99** அம்ஸம்பு³த்³தெ⁴ள

விளிவேற்றுமையொருமையில் (ஸம்பு³த்³தெ⁴ள) மேலே குறிப்பிட்ட

சொற்களில் 'உ' வுக்குப்பின் 'அம்' ஆகமம் வரும். ப்ரியசத்வ:, ப்ரியானட்[3]வான்

**7.1.100** ரு'த இத்[3]த[4]ாதோ:
'ரூ1' வீற்றுத் தாதுவின் ஈறுக்கு 'இத்' (இ) பதிலியாக வரும்.
க்ரு + ஸப் + திப் = கிரதி,

**7.1.101** உபத[4]ாயாஸ் ச
'ரூ[1]' வீற்றுத் தாதுவின், ஈற்றயலுக்குப் பதிலியாகவும் 'இத்' வருகீர்தயதி

**7.1.102** உதே[3]ாஷ்ட்[2]ய பூர்வஸ்ய
இதழொலியைத் தொடர்ந்து நிற்கும் 'ரு'வை இறுதியில் கொண்ட வினையின் 'ரு'வுக்குப் பதிலியாக 'உத்' (உ) வரும்.
ப்ரு + க்த = புர் + க்த = பூர்த (8.2.57; 76)
பூபூர்ஷதி; முமூர்ஷதி

வா: இத்வோத்வாப்[4]யாம் குணவ்ருத்[3]தீ[4] ப[4]வத: விப்ரதிஷேதே[4]ன
'இத்' 'உத்' விதிகளை மீறி 'குணம் 'விருத்தி' ஆகியவைகள் வரும்.
ஆஸ்தரணம், ஆஸ்தாரக:

**7.1.103** ப[3]ஹுலம் ச[2]ந்த[3]ஸி
வேதமொழியில் நெடில் 'ரூ'வுக்கு 'உத்' (உ) பல வகையில் பதிலிய ாக வரும். மேலே குறிப்பிட்ட சூழல்களைத் தவிர்த்த மற்ற இடங்களை இங்கு கூறப்படுகிறது. இதழொலியல்லாத மெய்யைத் தொடர்ந்து 'ரூ' நி ற்கும்போது
த்ரு + கின் (3.2.171) = தத்ரு + இ (6.1.8; 7.4.66) = ததுரி; மித்ராவருணௌ ததுரி:; தூ[3]ரே ஹ்யத்[4]வா ஜுகு[3]ரி:;
இதழொலி முன்நிற்கும்போது அவ்வாறாகாமை—பப்ரிதமம்

**7.2.1** ணிசி வ்ருத்[3]தி[4]: பரஸ்மைபதேஷு
'இக்' (இ, உ, ரு, ல் குறிலும் நெடிலும்) பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரை யிறுதியில் கொண்ட வினைக்குப் பின்னால் 'ணிச்' (Aorist) ஒட்டிணைக்கும்போது, பரஸ்மைபதத்தில், அவ்வினையினிதியுயிருக்கு விருத்தி பதிலியாக வரும்.
அட் + சி + ஸிச் + திப் = அசைஷ் + இட் + த் (3.4.100; 7.3.93; 8.3.59) அசைஷீத்; அபாவீத் (<பூ);அகார்ஷீத் (<க்ரு)), ஆனால் அக்ருஷ்ட (ஆத்மனேபதம்)

**7.2.2** அதோ ல்ராந்தஸ்ய
பரஸ்மைபதத்தில், 'ஸிச்' ஒட்டுக்குமுன் நிற்கும் 'ல்', 'ரு' ஆகியவைக ளையீறாகக் கொண்ட வினையின், இவ்விறுதியெழுத்துக்கு முன்னால் நிற்கும் 'அத்' (அ)துக்கு விருத்தி பதிலியாக வரும்.
க்ஷர – அக்ஷாரீத்; த்ஸர – அத்ஸாரீத்;

ஜ்வல – அஜ்வாலீத்; ஹ்மல – அஹ்மாலீத்
சூ. 7.2.7க்குப் புறனடை.

**7.2.3** வத³ வ்ரஜ ஹலந்தஸ்ய அச:
பரஸ்மைபதவொட்டோடு வரும் 'ஸிச்' ஒட்டுக்கு முன் நிற்கும் வத 'பேசு, கூறு' வ்ரஜ 'சுற்று', மெய்யெழுத்தில் முடியும் வினைகள் ஆகிய வைகளின் உயிருக்கு விருத்தி பதிலியாக வரும்.
1. அவாதீ³த்; (2) அவ்ராஜீத் (3) அபாக்ஷீத் (<பச்) அபை⁴த்ஸீத் (பி⁴ த்³); அரௌத்ஸீத் (ருத்⁴)

**7.2.4** நே டி
(பரஸ்மைபதத்தில்) 'இட்' ஆகமத்தோடு வரும் 'ஸிச்' உக்கு முன் நிற்கும் ஒரு மெய்யெழுத்தையீறாகக் கொண்ட வினையின் உயிருக்கு விருத்தி பதிலியாக வராது.
அதே³வீத் (<தி³வ்) அஸேவீத் (ஸேவ்); அமோஷீத் (முஷ்)

**7.2.5** ஹ்ம்யந்த க்ஷண ஶ்வஸ ஜாக்³ரு¹ணி ஶ்வ்யேதி³தாம்
'இட்' ஆகமத்தோடு வரும் 'ஸிச்' ஒட்டுக்கு முன் நிற்கும் 'ஹ், ம, ய ஆகியவைகளை யீறாகக் கொண்ட வினைகள், க்ஷண, ஶ்வஸ, ஜாக்³ரு, என்ற வினைகள், 'ணி' இணைத்தாக்கப்பட்ட வினை, 'ஶ்வி' என்ற தாது, 'ஏ'யை 'இத்'தாகக் கொண்டதாகக் குறிப்பிடப்படும் (தாதுபாடத்தில்) தாதுக்கள் ஆகியவைகளின் உயிருக்குப் பதிலியாக (பரஸ்மைபத்தில்) விருத்தி வராது.

1. க்³ரஹ் – அக்³ரஹீத்; (2) ஸ்யம் – அஸ்யமீத் (3) வ்யய – அவ்யயீத் (4) அக்ஷணீத் (5) அஶ்வஸீத் (6) அஜாக³ரீத் (7) ஔனயீத் (8) அஶ்வயீத் (9) அரகீ³த் (ரகே³), அகுகீ³த் (ககே²)

**7.2.6** ஊர்ணோதேர் விப⁴ாஷா
'இட்' ஒடு வரும் 'ஸிச்' ஒட்டுக்கு முன் நிற்கும் 'ஊர்ணு' 'மூடு, மறை' என்ற தாதுவின் உயிருக்குப் பதிலியாக (பரஸ்மைபதத்தில்) விருப்பாக விருத்தி பதிலியாக வரும்.
ப்ரௌர்ணாவித், ப்ரௌர்ணவீத்

**7.2.7** அதோ ஹலாதே³ர் லகோ⁴:
'இட்' ஒடு வரும் 'ஸிச்' ஒட்டுக்கு முன் நிற்கும், ஒரு மெய்யெழுத்தில் தொடங்கும் வினையின் குறில் 'அ' 'லகு'வாக அமையும்போது, அந்த 'அ'வுக்குப் 'விருத்தி' விருப்பாக பரஸ்மைபதத்தில் பதிலியாக வராது.
அரணீத், அராணீத் (<ரண்)
ஆனால் அதே³வீத்; அஸேவீத் ('அத்' அல்ல) அதக்ஷீத் (லகு' அல்ல);

அபாக்ஷீத் (அனிட்)

**7.2.8** நேட்[3] வஸி[1] க்ருதி
'வஸ்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்தில் தொடங்கும் 'க்ருத்' ஒட்டுக்கு முன் 'இட்' இணைக்கப்பட மாட்டாது (நேட்)
1. ஈஸ்[1] + வரச் (3.2.175) = ஈஸ்[1]வர
2. தீ[3]ப் + ர (3.2.167) = தீ[3]ப்ர 'ஒளி படைத்த'
3. ப[4]ஸ் + மனின் = ப[4]ஸ்மன் (3.2.75) 'சாம்பல்'
4. யாச் + ந + டாப் (3.3.90; 4.1.4) = யாச்னா
'பிச்சையெடுத்தல்'
இது சூ. 35க்குப் புறனடை.
ஆனால் ஈஸிதும், தீபினும், ப4ஸினும், யாசினும்

**7.2.9** திது த்ர தத[2]ஸி ஸு ஸரகஸேஸு ச
தி, து, த்ர, த, த[2], ஸி, ஸர, க, ஸ என்ற 'க்ருத்' ஒட்டுக்களுக்கு முன் 'இட்' ஆகமம் வராது.
1. தி – க்தின்/க்திச், தன் க்திச் தந்தி 'கயிறு' தீப் + க்தின் = தீப்தி: 'ஒளி'
2. து – ஸக்து: 'பார்லி மாவு' (3) த்ர – தந்த்ர – 'தறி' பத்தர 'வண்டி' (4) த – ஹஸ்த 'கை' (5) த[2] – குஷ்ட2 'ஒரு செடியின் பெயர்' (6) ஸி – குக்ஷி 'வயிறு' (7) ஸு – இக் ஷு – 'கரும்பு' (8) ஸர அக்ஷர 'எழுத்து' (9) க – ஸ'ல்க 'துண்டு' (10) ஸ – வத்ஸ 'கன்று', ஹம்ஸ – 'அன்னம்' 'தி', 'த்ர' என்ற இரண்டு ஒட்டுக்களைத் தவிர்த்த மற்ற எல்லாம் 'உணாதி' ஒட்டுக்கள்.

வா: திது த்ர த தே[2]ஷ்வக்[3]ரஹாதீனாமிதி வக்தவ்பம்
தி, து, த்ர, ஆகியவைகள் 'க்[3]ரஹ்' க்குப்பின் வரும்போதும், அதே போன்று மற்ற சொற்கள் ஆக்கப்படும்போதும் 'இட்' ஆகமம் வரும்.
நிக்[3]ருஹீதி: 'அடக்கம், கட்டுப்பாடு'
உபஸ்நிஹிதீ: 'ஈரமாகு, ஈரமாக்கு'
நிகுசிதி: 'சுருக்கம்' நிபடிதி:
'படிப்பு', ஒப்பித்தல்'

**7.2.10** ஏகாச உபதே[2]ஸே அனுத[3]ாத்தாத்
அனுதாத்தமான ஓரசை கொண்டதாக தாதுபாடத்தில் (ஏகாச உபதே[3]ஸே) குறிப்பிடப்படும் வினைக்குப்பின் ஒரெட்டையிணைக்கும் போது அவ்வொட்டுக்கு முன் 'இட்' ஆகமம் ஆகாது.
பொதுவாக, தாதுக்கள் ஒருயிரெழுத்தோ அல்லது மெய்யெழுத்தோ இறுதியில் கொண்டதாக அமையும். அவற்றுள் 'அ', 'ஊ', 'ரு' (நெடில்) ஆகியவைகளிறுதியில் கொண்டவற்றைத் தவிர்த்து மற்ற உயிரெழுத்தில் முடியும் ஓரசைத் தாதுக்கள் அனதாத்தமாகும். அவைகளுடன் 'இட்' ஆகமம் வராது. காட்டாக த[3]ாத்ரு, நேத்ரு கர்த்ரு.

அத$^{3}$ந்த – ஆவதி$^{4}$ஷ்ட
ரூ – தரிதா (<த்ரூ)
ஊ – லவிதா (லூ). பவிதா (பூ)

**7.2.11** ஸ்ர்யுக: கிதி
ஸ்ரி 'சார்ந்திரு', 'உக்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரெழுத்தில் முடியும் தாதுக்கள் ஆகியவைகளுக்குப்பின் 'க்ஐ 'இத்'தாகக் கொண்ட ஒரெட்டு இணைக்கும்போது, அவ்வொட்டுக்கு முன் 'இட்' ஆகமம் வராது.
ஸ்$^{1}$ரி + க்த = ஸ்$^{1}$ரித, ஸ்$^{1}$ரி + க்தவா = ஸ்$^{1}$ரித்வா:, ஸ்$^{1}$ரிதவான் ஆனால் ஸ்$^{1}$ரயித்ரு (த்ருச்), ஸ்ரயிதும் (தும்) உக$^{3}$ந்த – யுத்வா, யுத:, யுதவான்.
ஆனால் யவிதும்; லூத்வா, லூன:,
லூனவான்; ஆனால் லவிதும்;
வ்ருத்வா, வ்ருத:, வ்ருதவான், ஆனால் வரிதும்; தீர்த்வா, தீர்ண:, தீர்ணவான்,

**7.2.12** ஸனி க்$^{3}$ரஹகு$^{3}$ஹோரஸ்$^{1}$ ச
க்$^{3}$ரஹ் 'பிடி', கு$^{3}$ஹ் 'மறை', 'உக்' பிரத்தியாஹாரத்தைச் சேர் ந்த ஒருயிரெழுத்தில் முடியும் தாதுக்கள் ஆகியவைகளுடன் 'ஸன்' ஒட்டிணைக்கும்போது, அவ்வொட்டுக்கு முன்னும் 'இட்' இணைக்கப்படமாட்டாது.
க்$^{3}$ரஹ் – ஜிக்$^{4}$ருக்ஷதி; கு$^{3}$ஹ் – ஜுகு$^{4}$க்ஷதி;
உக$^{3}$ந்த – ருரூஷதி, லுலூஷதி

**7.2.13** க்ரு$^{1}$ ஸ்ரு$^{1}$ ப்$^{4}$ரு$^{1}$ வ்ரு$^{1}$ ஸ்து த்$^{3}$ரு ஸ்ரு$^{1}$ ஸ்$^{1}$ருவோ லிடி க்ரு 'செய்', ஸ்ரு 'பாய், நகர்', ப்$^{4}$ரு 'தாங்கு', வ்ருஞ் 'மூடு', (5.8), வ்ரு (9.38), 'தேர்ந்தெடு', பங்குபெறு', ஸ்து 'புகழ்', த்$^{3}$ரு 'ஓடு', ஸ்ரு 'ஓடு, கசிந்து ஒழுகு', ஸ்ரு 'கேள்' ஆகிய தாதுக்களுக்குப்பின் 'லிட்' ஒட்டு இணைக்கும்போது அவ்வொட்டுக்கு முன் 'இட்' இணைக்கப்படமாட்டாது.
க்ரு + லிட் + வ/ம = சக்ருவ/சக்ரும
ஸ்ரு – ஸஸ்ருவ, ஸஸ்ரும; ப்$^{4}$ரு – ப$^{3}$ப்$^{4}$ருவ,
வவ்ருமஹே; ஸ்து – துஷ்டுவ, துஷ்டும; த்$^{3}$ரு – து$^{3}$த்$^{3}$ருவ,
து$^{3}$த்$^{3}$ரும; ஸ்ரு – ஸுஸ்ருவ, ஸுஸ்ரும;
ஸ்ரு – ஸு$^{1}$ஸ்$^{1}$ருவ, ஸு$^{1}$ஸ்$^{1}$ரும
இச்சூத்திரத்தில் கொடுக்கப்பட்ட தாதுக்கள் எல்லாம் 'வ்ரு' வைத் தவிர எல்லாமே அனுதாத்த தாதுக்கள் (7.2.10) வ்ருஞ், வ்ருங் இரண்டுமே உதாத்தமாகும்.
ஒரு வரையறைக்குட்படுத்துவதற்காகத்தான் இவைகளை இங்கு தனியாகக் கூறப்பட்டிருக்கிறது. அதாவது இங்கு கூறப்பட்ட தாதுக்கள் மட்டுந்தான் 'லிட்'டோடு வரும்போது 'இட்' ஆகமமில்லாமல் காணப்படும். மற்ற எல்லா தாதுக்களும் 'லிட்'டில் இட்'டோடுதான் வரும். ஆகவே, பி$^{3}$பி$^{4}$தி$^{3}$வ, பி$^{3}$பி$^{4}$தி$^{3}$ம; லுலுவிவ, லுலுவிம:

வா: க்ருஞோ அஸுட்கஸ்யோதி வக்தவ்யம்
'க்ரு' என்ற தாது 'ஸுட்' இணைக்கும்போது 'இட்' ஆகமம் பெறும். அவ்வொட்டு இணைக்காமல் வரும்போது 'இட்' வராது. ஸஞ்சஸ்கரிவ, ஸஞ்சஸ்கரிம

**7.2.14** ஸ்$^{1}$வீதி$^{3}$தோ நிஷ்ட$^{2}$ாயாம்
'நிஷ்ட$^{2}$ா' எனப்படும் ஒட்டுக்கு (க்த, க்தவது) முன்னால் நிற்கும் ஸ்வி 'பருமனாகு, ஊது', 'ஈ'யை 'இத்'தாகக் கொண்ட தாதுக்கள் (தாதுப்பாடத்தில் கொடுக்கப்பட்டவை) ஆகியவைகளுக்குப்பின் 'இட்' வராது.

1) ஸ்$^{1}$வி – ஸூ$^{1}$ன:, ஸூ$^{1}$னவான்;
2) ஈதி$^{3}$த: – ஓலஜீ – லக்$^{3}$ன:, லக்$^{3}$னவான்;
ஓவிஜீ – உத்$^{3}$விக்$^{3}$ன:, உத்$^{3}$விக்$^{3}$னவான்
ஓதீ$^{3}$பி – தீ$^{3}$ப்த:, தீ$^{3}$ப்தவான் 7.2.35 வரை 'நிஷ்டாயாம்' தொடர்ந்து வரும்.

**7.2.15** யஸ்ய விப$^{4}$ாஷா
எந்தெந்த தாதுக்களுக்குப்பின் வேறு ஒட்டு இணைக்கும்போது 'இட்' விருப்பாக வரும் என்று விதிக்கப்பட்டுள்ளதோ, அத்தாதுக்களுக்குப்பின் 'நிஷ்டா' வொட்டுக்கள் வரும்போது அவ்வொட்டுக்களுக்கு முன் 'இட்' வராது. அதாவது, வேறு ஒட்டுக்களுக்கு முன் எந்தெந்த தாதுக்கள் விருப்பாக 'ஸேட்' ('இட்'டோடு) ஆகுமோ அத்தாதுக்கள்,
நிஷ்டாவொட்டுக்களி ணைக்கும்போது கட்டாயமாக 'அனிட்' (அதாவது 'இட்' இணைக்கப்படாதது) ஆகும். 7.2.44இல் இத்தாதுக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.
விதூ$^{4}$த:, விதூ$^{4}$தவான்; குஹ் – கூ$^{3}$ட$^{4}$:, $^{3}$கூட$^{4}$வான்,

**7.2.16** ஆதி$^{3}$தஸ்$^{1}$ச
'ஆத்' (ஆ)ஐ 'இத்'தாகத் தாது பாடத்தில் கொடுக்கப்பட்ட தாதுவோடு 'நிஷ்டா' ஒட்டுக்கள் இணைக்கும்போது அவ்வொட்டுக்களுக்கு முன் 'இட்' ஆகமம் வராது.
ஞிமித$^{3}$ா – மின்ன:, மின்னவான்
ஞிக்ஷ்வித$^{3}$ா – க்ஷ்விண்ண:, க்ஷ்விண்ணவான்
ஞிஷ்விதா – ஸ்வின்ன:, ஸ்வின்னவான்
இங்கு குறிப்பிடப்படாத மற்ற தாதுக்களும் இவ்வாறாகும் என்று 'ச' சுட்டும் ஆஸ்வஸ்த:, வாந்த:

**7.2.17** விப$^{4}$ாஷா ப$^{4}$ாவாதி$^{3}$ கர்மணோ:
'ஆத்'(ஆ)ஐ 'இத்'தாகக் கொண்டதாக தாது பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ள

தாதுக்களோடு 'நிஷ்டா' ஒட்டுக்களையிணைக்கும்போது, அவைகள் 'பாவ' (impersonal) அல்லது 'ஒரு செயலின் தொடக்கம் (ஆதிகர்மன்) என்ற பொருளைச் சுட்டுமானால், அவ்வொட்டுக்களுக்கு முன் 'இட்' ஆகமம் விருப்பாக வரும்.

மின்னமனேன, மேதி[3]தமனேன

ப்ர மின்ன:, ப்ரமேதி[3]த:

'பா[4]வ[4]', தொடக்கம் என்ற பொருளைத் தாதுக்கள் உணர்த்தும்போது, இச்சூத்திரம் சூ. 15ஐச் செயற்படாமல் தடுக்கிறது. ஆகவே 'இட்'ஐ விருப்பாக இச்சூழலில் விதிக்கிறது.

**7.2.18** க்ஷுப்[3]த[4] ஸ்வாந்தத்[4]வாந்த லக்[3]ன ம்லிஷ்ட விரிப்[3]த[4] ப[2]ா ண்டப[3]ாட[4]ானி மந்த[2] மனஸ்தம: ஸக்தாவிஸ்பஷ்ட ஸ்வரானா யா ஸப்[4]ருஸே'ஷு

1. க் ஷுப்[3]த[4] (2) ஸ்வாந்த (3) த்[4]வாந்த (4) லக்[3]ன 5) ம்லிஷ்ட (6) விரிப்[3]த[4] (7) ப[2]ாண்ட[1] (8) ப[3]ாட[4] ஆகிய சொற்கள் முறையே (1) மத்து (2) மனது (3) இருட்டு (4) ஒட்டிக் கொண்ட அதாவது அன்பான (5) தெளிவற்ற (6) நாதம், குரல் (7) எளிதில் செய்யப்பட்ட (8) தீவ்ரமான, பலமான ஆகிய பொருட்களைச் சுட்ட (இட்) ஆகமம் வராமல் விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்டவைகள்.

வேறு பொருட்களில் க் ஷுபி[4]த 'கலக்கிய', ஸ்வனித 'குரலெழுப்பிய த்[4]வனித 'குறிப்பாகச் சொல்லிய, சுட்டிக் காட்டிய', லகி[4]த ஒட்டிக் கொண்ட ம்லேச்[1]சி[2]த் 'தவறாக அல்லது தெளிவில்லாமல் பேசிய', விரேபி[4]த 'அர்த்தமில்லாமல் வேகமாகப் பேசிய', ப[2]ாணித 'உறையவைத்த கரும்புச்சாறு', ப[3]ாஹித 'முயற்சி செய்த

**7.2.19** த்[4]ருஷி ஸ'ஸி வையாத்யே

த்[4]ருஷ் 'துணிவு கொள்', ஸ'ஸ் 'காயப்படுத்து' என்ற தாதுக்களோடு 'நிஷ்டா' ஒட்டுக்கள் இணைக்கும்போது, அவ்வொட்டுக்களுக்கு முன் 'இட்' ஆகமம் 'துடுக்கான அகந்தையுள்ள (வையாத்யே) என்ற பொருட்களை அவைகள் சுட்டும்போது, வராது

த்[4]ருஷ்ட[2]; 'துஷ்டத் தனமுள்ள' ஆனால் த[4]ர்ஷித:

'மரியாதையில்லாமல் நடத்தப்பட்ட' விஸ'ஸ்த: 'மரியாதையில்லாம ஆனால் விஸ'ஸித 'வெட்டப்பட்ட'

இந்த விதி 'மரியாதையில்லாத' என்ற பொருளைச் சுட்டும்போது தான் செயற்படும்.

**7.2.20** த்[3]ருட[4]: ஸ்தூ[2]லப[3]லயோ:

பருமனான (ஸ்தூ[2]ல), ப[3]ல (பலமான) என்ற பொருளைச் சுட்டும் 'த்[3]ருட[34]' என்ற சொல் ஒரு நிபாதனம் வேறு பொருட்களில் த்[3]ரும்ஹித, அல்லது த[3]ருஹித என்றாகும். < த்[3]ரும்ஹ்/த்[3]ருஹ் (1.770, 769)

**7.2.21** ப்ரபெ[4]ள பரிவ்ருட[4]:

பரிவ்ருட[4] என்ற சொல் அரசன் (ப்ரபு[4]) என்ற பொருளில் நிபாதனமாகும்.
பரி + வ்ரும்ஹ்/வ்ருஹ் + க்த = பரிவ்ருட[4], இங்கு 'இட்' ஆகமம் ஆகாதது விதிக்குப் புறம்பானது.
வேறு பொருட்களில் பரிவர்ம்ஹித, பரிவ்ருஹித, 'அதிகப்படுத்திய'

**7.2.22** க்ருச்'ச்[2]ர க[3]ஹனயோ: கஷ:

கஷ் 'உரசு' என்ற வினையோடு 'நிஷ்டா' ஒட்டிணைக்கப்பட்டு ஆக்கப்பட்ட சொற்கள், 'கடினம்' (க்ருச்'ச்[2]ர), நுழைய முடியாத, ஊடுருவமுடியாத (கஹன) என்ற பொருட்களைச் சுட்டும்போது, அவ்வொட்டுக்குமுன் 'இட்' வராது.
கஷ்ட:, அக்[3]னி:, கஷ்டம் வனம் ஆனால் கஷிதம் ஸுவர்ணம் 'உரைகல்லில் பரிசோதிக்கப்பட்ட தங்க ம்'

**7.2.23** கு[4]ஷிரவிஸ'ப்[3]த[3]னே

'வெளிப்படையாக தெரிவிக்கப்படாத, அல்லது விளம்பரம் செய்யாத' (அவிஸ'ப்[3]த[3]ன) என்ற பொருளைச் சுட்டும் போது, 'கு[4]ஷ்' என்ற தாதுவோடு 'நிஷ்டா' ஒட்டிணைக்கும்போது 'இட்' ஆகமம் வராது.
கு[4]ஷ்டா: ரஜ்ஜு: 'கயிறு தேய்க்கப்பட்டது' கு[4]ஷ்டௌ பாதெ[3]ள 'இரண்டு கால்கள் தேய்த்து அல்லது பிடித்துவிடப்பட்டன' ஆனால் கு[4]ஷித 'விளம்பரப்படுத்தப்பட்ட வெளிப்படையாகத் தெரிவிக்கப்பட்ட'

**7.2.24** அர்தே[3]: ஸம்நிவிப்[4]ய:

அர்த்[3] 'போ' என்ற தாது, ஸம், நி/வி என்ற உபசர்க்கங்களுடன் சேர்ந்து நிற்கும்போது, அவைகளுடன் 'நிஷ்டா' ஒட்டு இணைக்கப்படும்போது 'இட்' ஆகமம் வராது.
ஸமர்ண: 'காயப்பட்ட', ந்யர்ண 'கரைக்கப்பட்ட' வ்யர்ண 'துன்பப்படுத்திய' ஆனால் அர்தி[4]த 'வேண்டப்பட்ட, கேட்கப்பட்ட'

**7.2.25** அபே[4]ஸ'சாவிதூ[3]ர்யே

'அபி[4]'யுடன் சேர்ந்து நிற்கும் 'அர்த்[3]' என்ற தாதுவுக்குப்பின் 'நிஷ்டா' ஒட்டிணைக்கும்போது, ஆக்கப்பட்ட சொல் 'அருகே' என்ற பொருளைச் சுட்டும்போது 'இட்' ஆகமம் 'நிஷ்டா'வுக்கு முன் வராது.
அப்[4]யர்ணா ஸேனா 'அருகிலிருக்கும் படை', அப்[4]யர்ணா ஸ'ரத் 'ஸரத்காலம் நெருங்குகிறது'. ஆனால் அப்[4]யர்தி[3]த இடர்பட்ட, 'துயருக்காளான'

**7.2.26** ணேரத்[4]யயனே வ்ருத்தம்

'வ்ருத்' 'திரும்பு' என்ற வினையின் இயக்குவினை (ணே:)யிலிருந்து 'வ்ருத்த' என்ற சொல் ஒரு தடவை படித்துமுடித்த (அத்[4]யயன) என்ற பொருளில் 'இட்' ஆகமம் வராமல் விதிக்குப்புறம்பாக ஆக்கப்பட்டது.
வ்ருத்தோ கு[3]ணோ தே[3]வத[3]த்னே 'தே[3]வதத்தனால் குணம் படிக்கப்பட்டது'

'வ்ருத்த' என்ற சொல்லில் 'இட்' ஆகமும், வரவில்லை 'ணி'யும் கெட்டது. ஆனால் வர்த்தித 'திரும்பிய'

**7.2.27** வா த[3]ாந்த ஸ'ாந்த பூர்ண த[3]ஸ்தஸ்பஷ்டச்ச[2]ன்ன க்[3]ஞப்தா: த[3]ாந்த அடக்கிய, ஸாந்த 'அமைதியான', பூர்ண 'நிரப்பிய', த[3]ஸ்த 'அயர்வுற்ற', ஸ்பஷ்ட 'வெளிப்படுத்திய', ச[2]ன்ன 'மூடப்பட்ட, மறைக்கப்பட்ட', க்[3]ஞாப்த 'தெரிவிக்கப்பட்ட' ஆகிய சொற்கள், நிஷ்டாவொட்டுக்களுக்கு முன் 'இட்' விருப்பாக இணைக்காமல், முறையே தம், 'அடக்கு', ஸம் 'அமைதியுறு, ப்ரு 'நிரப்பு' தஸ் 'வீணாக்கு' ஸ்பஸ் 'உணர்', ச[2]த்[3] 'மூடு', மறை 'க்[3]ஞ ப் 'தெரிவி' என்ற தாதுக்களின் 'ணி' (இயக்குவினையொட்டு) இணைத்து விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்ட சொற்கள்
த[3]ாந்த:/ த[3]மித:, ஸ'ாந்த:/ஸ'மித:,
பூர்ண:/பூரித:, த[3]ஸ்த:/தாஸித:,
ஸ்பஷ்ட:/ஸ்பாஸித:, ச[2]ன்ன:/ ச[2]ாதிப்த:
க்[3]ஞப்த:/க்[3]ஞபித:,

**7.2.28** ருஷ்யமத்வர ஸங்கு[4]ஷாஸ்வானாம்
ருஷ் 'கோபமடை', அம் 'நோ, யுறு', த்வர் 'அவசரப்படுத்து விரை' ஸங்கு[3]ஷ் 'விளம்பரப்படுத்து, தெரிவி', ஆஸ்வன் 'எதிரொலிசெய்' ஆகியவைகளுடன் 'நிஷ்டா வொட்டுக்கள் இணைக்கும்போது அவ்வொட்டுக்களுக்கு முன் 'இட்' விருப்பாக (ஆகமம்) வராது.
ருஷ்ட, ருஷித, அப்[4]யாந்த, அப்[4]யமித; தூர்ண:,
த்வரித:, ஸங்கு[4]ஷ்ட:, ஸங்கு[4]ஷித:, ஆஸ்வாந்த:,
ஆஸ்வனித:
'ருஷ்' உக்குப்பின் ஒட்டுக்கள் இணைக்கும்போது அது விருப்பாக 'ஸேட்' ஆகுமென்று 7.2.48 விதிக்கிறது. ஆகையால் 7.2.15இன்படி இத்தாதுவுக்குப்பின் நிஷ்டா வொட்டுக்களிணைக்கும் போது அது கட்டாயமாக 'அனிட்' ('இட்' இல்லாமல்) ஆகிறது. ஆகவே இச்சூத்திரம் அதை விருப்பாக ஆக்கி, 7.2.15 செயற்படுவதற்குத் தடையாக அமைகிறது. தாதுபாடத்தில், 'த்வர்' என்ற தாது ஞித்வரா (1.8.12) என்று குறிப்பிட்டிருப்பதால், இத்தாது 'ஆ'வை இத்'தாகக் கொண்டதாகிறது. ஆகையால், இது கட்டாயமாக 'அனிட்' ஆகும். (7.2.16). இந்தச் சூத்திரம் அதை விருப்பாக 'அனிட்' ஆக்குகிறது. இதைப் போன்று 'ஸங்கு4ஷ்' என்ற தாதுவை விருப்பாக 'அனிட்' ஆகும் என்று இங்கு குறிப்பிடப்படுவதால் 7.2.23இதில் செயற்படாது. 'ஆ'வைத் தொடர்ந்து நிற்கும் 'ஸ்வன்' 'மனது' என்ற பொருளைச் சுட்டியபோதிலும், இதுவும் விருப்பாக 'அனிட்' ஆகுமென்று இச்சூத்திரத்தில் விதிக்கப்பட்டிருப்பதால், 7.2.18 இங்கு செயற்படுவதை இச்சூத்திரம் தடை செய்கிறது.

**7.2.29** ஹ்ருஷேர் லோமஸு

ஹ்ருஷ் 'களிப்படை' என்ற தாதுவோடு 'நிஷ்டா' ஒட்டுக்களிணைக்குங்காலை, அச்சொல், 'மயிர், கேசம்' என்ற பொருட்களைச் சுட்டும்போது அவ்வொட்டுக்கு முன் 'இட்' ஆகமம் விருப்பாக வராது.

ஹ்ருஷ்டானி லோமானி ஹ்ருஷிதானி 'மயிர்க்கூச்சல்/சிலிர்ப்பு லோமானி; ஹ்ருஷ்டா: கேஸா, ஹ்ருஷிதா: கேஸா ஹ்ருஷு அலிகௌ 'பொய்கூறு' (1.741), ஹ்ருஷ் 'மகிழ்ச்சியடை' (4.119) என்ற இரண்டு தாதுக்களையுமே இது குறிக்கும். 'ஹ்ருஷு' 'உ'வை 'இத்'தாகக் கொண்டதாக தாது பாடத்தில் கொடுக்கப்பட்டிருப்பதால் 'நிஷ்டா' வொட்டுடன் அது கட்டாயமாக 'அனிட்' ஆகும் (7.2.15) ஏனென்றால், 'க்த்வா' ஒட்டுடன் அது விருப்பாக 'அனிட்' ஆகும். (7.2.56) மற்ற தாது 'ஸேட்' ஆகும். இங்கு கூறப்பட்ட 'விருப்பு' இவ்விரண்டு தாதுக்களுக்குமே பொருந்தும். ஆனால் ஹ்ருஷ்ட: தே³வத³த்த: 'தேவதத்தன் பொய்கூறினான்.'

வா: விஸ்மித ப்ரதிக⁴ாதயோரிதி வக்தவ்யம்

'வியப்படைந்த, ஆச்சரியமடைந்த' (விஸ்மித), அடிப்பட்ட, தேய்ந்த' (ப்ரதிக⁴ாத) என்ற பொருளைச் சுட்டும்போதும் விருப்பாகும்.

ஹ்ருஷ்ட: அல்லது ஹ்ருஷித: தேவதத்த: 'வியப்படைந்த தேவதத்தன்'
ஹ்ருஷ்டா: அல்லது ஹ்ருஷிதா: த³ந்தா: 'வளைந்த அல்லது அழிந்த பற்கள்'

**7.2.30** அபசிதஸ்' ச

'சாய்' என்ற தாது 'அப' என்ற உபசர்க்கத்துடன், நின்று அதோடு 'நிஷ்டா' ஒட்டு இணைக்கப்படும்போது விருப்பாக 'இட்' 'ஆகமம்' வந்த, 'சாய்' 'சி' என்று மாற்றமடைந்து 'அபசித:' (மதிக்கப்பட்ட) என்ற சொல் விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்டது.

அபசித: அனேன கு3ரு: 'அவனால் ஆசிரியர் மதிக்கப்பட்டார்' அபசாயிதோ அனேன குரு:

வா: க்தினி நித்யமிதி வக்தவ்யம்

'க்தின்' ஒட்டுக்கு முன் 'சாய்' கண்டிப்பாக 'சி' யாக மாறும். இது விதிக்குப் புறம்பானது. அபசிதி: 'இழப்பு, அழிவு, மரியாதை காட்டுதல்'

**7.2.31** ஹ்ரு ஹ்வரேஸ் ச²ந்த³ஸி

வேதமொழியில் ஹ்வ்ரு 'வளைந்த' என்ற தாதுவுக்கு 'ஹ்ரு' என்ற வடிவம் அத்தாது நிஷ்டா ஒட்டுக்கு முன் நிற்கும்போது வரும்

ஹ்ருத (வேதமொழி) ஹ்வ்ருத (மற்ற இடங்களில்)

**7.2.32** அபரிஹ்வ்ருதாஸ்' ச

வேதமொழியில் அபரிஹ்வ்ருதா என்ற சொல் விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்டது.

இது 7.2.31 க்குப் புறனடை.
அபரிஹ்வ்ருதா: ஸநுயாம வாஜம் (ருக் 1.100.19)

**7.2.33** ஸோமே ஹ்வரித:
வேதமொழியில், சோமத்தைச் சுட்டும் ஹ்வரித என்ற சொல் நிப ாதனமாகும். 'ஹ்வ்ரு' என்ற தாதுவுக்குப்பின் 'நிஷ்டா' ஒட்டு இணைக்கும்போது, குணம் பதிலியாதல் 'இட்' ஆகமம் ஆகியவைகள் விதிக்குப்புறம்பானவை.
மா ந: ஸோமோ ஹ்வரித:, விஹ்வரிதஸ்த்வம்

**7.2.34** க்$^{3}$ரஸித ஸ்கபி$^{4}$த$^{4}$ஸ்தபி$^{4}$த உத்தமி$^{4}$த சத்த விகஸ்தா
விஸ'ஸ்த்ரு ஸ்ம்ஸ்த்ரு ஸாஸ்த்ரு தருத்ரு தரூத்ரு வருத்ரூ வரூத்ரு வரூத்ரீ ருஜ்ஜ்வலிதி க்ஷரிதிக்ஷ மிதி வமித்யமீதீதிச
வேதமொழியில், கீழ்க்கண்ட (சில 'இட்' ஆகமத்துடனும், வேறு சில 'இட்' ஆகமமில்லாமலும்) விதிக்குப்புறம்பாக ஆக்கப்பட்ட சொற்கள் காணப்படுகின்றன.

1) க்$^{3}$ரஸித (2) ஸ்கபி$^{4}$த (3) ஸ்தபி$^{4}$த (4) உத்தபி$^{4}$த 5) சத்த (6) விக ஸ்த (7) விஸஸ்த்ரு (8) ஸ'ம்ஸ்த்ரு (9) ஸாஸ்த்ரு (10) தருத்ரு (11) தரூத்ரு (1) வருத்ரு (13) வரூத்ரு (14) வரூத்ரி: (15) உஜ்ஜ்வலிதி (16) க்ஷரிதி (17) க்ஷமிதி (18) வமிதி (19) அமிதி
மேலே கொடுக்கப்பட்ட சொற்களில் 1,2,3 ஆகியவைகள் க்$^{3}$ரஸு (1.661) 'விழுங்கு', ஸ்கம்பு$^{4}$ 'நிறுத்து' (1.414), ஸ்தம்பு4 (1.415) ஆகியவைகள் 'உ'வை 'இத்' தாகத் தாதுபாடத்தில் கொடுக்கப்பட்டிருப்பதால் 7.2.56; 15 சூத்திரங்களில் விதிக்கப்பட்டபடி அவைகளோடு இணைக்கப்படும் 'நிஷ்டா' 'இட்' ஆகமம் கொண்ட தாகாது. வேதமொழியில் இவைகள் 'இட்' ஆகமத்துடன் விதிக்குப் புறம்பாக இச்சொற்கள் ஆக்கப்பட்டுள்ளன.
க்$^{3}$ரஸிதம் வா ஏதத் ஸோமஸ்ய, க்$^{3}$ரஸ்த (பேச்சு மொழியில்); விஷ்கபி$^{4}$தே அஜரே, (விஷ்கப்$^{3}$த$^{4}$ பேச்சு மொழியில்); யேன ஸ்வஸ்தபி$^{4}$தம்/ஸ்தப்$^{3}$த$^{4}$ம் (பேச்சு மொழியில்); ஸ்த்யேன உத்தபி$^{4}$த ா பூ$^{4}$மி;, உத்தப்$^{3}$த$^{4}$ (பேச்சு மொழியில்) 'உத்' என்ற உபசர்க்கத் துடன் வரும்போது மட்டும்தான் இது விதிக்குப்புறம்பானதாக, அமைகிறது. மற்ற உபசர்க்கத்துடன் 'ஸ்தபி$^{4}$த' என்று ஆகாது. (5) சத்தா வர்ஷேண வித்$^{3}$யுத்; சதிதா பேச்சுமொழியில்); இங்கு 'இட்' வரவேண்டும் ஆனால் வரவில்லை. இது நிபாதனம் (6) உத்தானாயா ஹ்ருத$^{3}$யம் யத்$^{3}$ விகஸ்தம், விகஸிதம் பேச்சு மொழியில் 'கஸ்' உடன் வரவேண்டிய 'இட்' வராதது நிபாதனம். 7 ,8,9இல் 'வி'க்குப்பின் நிற்கும் ஸ'ஸ், ஸ'ம்ஸ், ஸ'ாஸ் ஆகியவைகளில் 'த்ருச்' ஒட்டுக்கு முன் 'இட்' வரவேண்டும். அது வராதது நிபாதனம் . ஏகஸ் த்வஷ்டுர ஸ்'வஸ்யா விஸ1ஸ்தா. பேச்சு மொழியில் விஸ'ஸித ா, உதஸ'ம்ஸ்தா ஸுவிப்ர: ; பேச்சு மொழியில் ஸம்ஸிதா; ப்ரஸ'ாஸ்தா, பேச்சு மொழியில் ப்ரஸாஸிதம்; 10, 11, 12, 13, 14 ஆகியவைகளில் 'உட்', 'ஊட்' ஆகிய ஆகமங்கள் நிபாதனங்கள்.

தருதாரம் ரத2னாம், தருதாரம்; பேச்சு மொழியில் தரிதாரம், தரீதாரம்; வரு தாரம், வருதாரம்; பேச்சு மொழியில் வரிதாரம், வரீதாரம்; வருத்ரீஷ்ட்வா தே3வீ விஸ்வ தே3வ்பாவதீ. மீதியுள்ள 15, 16, 17, 18 ஆகிபவைகள் உத்ஜ்வல், க்ஷர், க்ஷம், வம், அம் என்ற தாதுக்களுடன் 'ஸ1ப்' (விகரணம்) உம், 'திப்' (படர்க்கையொருமை) யும் இணைத்து ஆக்கப்பட்டுள்ளன. இவைகளில் 'ஸப்'புக்கு 'இ' பதிலியாவது நிபாதனம். அல்லது 'ஸ1ப்' கெட்டு 'இட்' ஆகமம் ஆவது நிபாதனம், அக்3னிருஜ்ஜ்வலிதி; பேச்சு மொழியில் உஜ்ஜ்வலதி; ஸ்தோகம் க்ஷரிதி; பேச்சு மொழியில் க்ஷரதி; ஸ்தோமம் க்ஷமிதி பேச்சு மொழியில் க்ஷமதி; ய: ஸோமம் வமிதி; பேச்சு மொழியில் வமதி; அப்4யமிதி வருண: ; பேச்சு மொழியில் அப்4யமதி.

**7.2.35** ஆர்த4த4ாதுகஸ்ய இட்வலாதே3:

'வல்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்தில் தொடங்கும் ஆர்த4த4ாதுகவொட்டுக்களுக்கு முன் 'இட்' இணைக்குப்படும். இது ஒரு அதிகார சூத்திரம். ஆர்தததாதுக என்ற சொல் 7.2.29 வரை அனுவிருத்தியாகும். லவிதா, லவிதம், லவிதவ்யம் ஆனால் ஆஸ்தே, வஸ்தே (ஸார்வமதாதுக வொட்டுக்கள் தொடர்ந்து வருகின்றன)

'இட்' மேற்சூத்திரங்களில் தொடர்ந்து வருகின்றன போதிலும், அதோடு சேர்த்து கூறப்பட்ட தடையை விதிக்கும் 'ந' இதிலிருந்து தொடராது என்று உணர்த்துவதற்காக 'இட்' என்ற சொல்லை இச்சூத்திரத்தில் திரும்பவும் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**7.2.36** ஸ்னுக்ரமோரனாத்மனேபத3 நிமித்தே

ஸ்னு 'கசிந்து, ஒழுது', க்ரம் 'மிதி' என்ற தாதுக்களுக்குப்பின் ஆர்த4 தாதுகவொட்டுக்களிணைக்கும்போது, அவ்வொட்டுக்களுக்குப்பின் ஆத்மனேபதவொட்டுக்கள் வராமலிந்தால், அந்த ஆர்த்ததாதுகவொட்டுக்களுக்கு முன் 'இட்' ஆகமம் ஆகும். பாவ (impersonal), செயப்பாட்டுவினை (கர்மணி), தற்சுட்டுவினை (கர்மகர்தரி) பரிமாற்ற வினை (கர்மவ்யதி ஹார) ஆகியவைகளில் ஆத்மநேபதவொட்டுக்களிணைக்கப்படும். இச்சூழலில் 'இட்' ஆகமம் வராது. மற்றவிடங்களில் 'இட்' வரும்.

ஸ்னு, க்ரம், உதாத்த சுரம் பெறும் தாதுக்களாவதால் 'இட்' வரவேண்டும். இச்சூத்திரம் மேலே கூறப்பட்டவரையறைக்கு இதை உட்படுத்துகிறது. ப்ரஸ்னவிதா, ப்ரஸ்னவிதும், ஆனால், ப்ரஸ்னோப்ஸ்ட, ப்ரக்ரமீஷ்ட; ப்ரஸ்னோஷ்யதே, ப்ரக்ரம்ஸ்யதே; ப்ரஸுஸ்னுஷிஷ்யதே, ப்ரசிக்ரம்ஸிஷ்யதே; இவைகளில் ஆத்மனேபதவொட்டுக்கள் வருகின்றன.

வா: க்ரமேஸ்து கர்தர்யாத்மனேபத விஷயாத3ஸத் யாத்ம னேபதே3 க்ருதி ப்ரதிஷேதே4ா வக்தவ்ய:

'க்ரம்' ஒடு செய்வினையைச் சுட்டும் ஆத்மனேபதமல்லாத 'க்ருத்'

ஒட்டுத் தொடர்ந்து வரும்போது, செய்வினையிலமைந்தாலும் அந்த தாது ஆத்மனேபதமாகும். இச்சூழலிலும் 'இட்' ஆகமம் வருவதற்கு தடை கூறவேண்டும்.

ப்ரக்ரந்தா, உபக்ரந்தா ஆனால் ப்ரக்ரமிதவ்யம், உபக்ரமிதவ்யம்.

**7.2.37** க்³ரஹோ அலிடி தீ³ர்க⁴:

'லிட்' ஒட்டைத் தவிர்த்த (அலிடி) மற்ற 'வல்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்தில் தொடங்கும் ஆர்ததாதுகவொட்டுக்களுக்கு முன் க்³ரஹ் 'பிடி' என்ற தாது நிற்கும்போது அவ்வொட்டுக்களுக்கு முன் வரும் 'இட்'டின் 'இ' நெடிலாகும் அதாவது 'ஈ'யாகும்.

க்³ரஹீதா, க்³ரஹீதும், க்³ரஹீதவ்யம்; ஆனால் ஜக்³ருஹிவ, ஜக்³ருஹிம. **7.2.35இல்** விதிக்கப்பட்ட 'இட்' நெடிலாவதை இங்கு குறிக்கிறது. **6.4.62இல்** விதிக்கப்பட்ட இட்'டையல்ல. க்³ராஹிதா, க்³ராஹிஷ்யதே

**7.2.38** வ்ரு, ருதோ வா

வ்ருஞ் 'மூடு' (**5.8**), வ்ருங் 'தேர்ந்தெடு (**9.38**), ரு¹ (நெடில்) வீற்று தாதுக்கள் ஆகியவைகளுக்குப்பின் 'லிட்' ஒட்டுக்களைத் தவிர்த்த மற்ற 'வல்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்தை முதலாகக் கொண்ட ஆர்ததாதுகவொட்டுக்களிணைக்கும் போது அவ்வொட்டுக்களுக்கு முன் ஆகமமாகும். 'இட்' விருப்பாக நெடிலாகும்.

வரிதா, வரீதா; ப்ராவரிதா, ப்ராவரீதா, 'ரு' வீற்றுத்தாது தரிதா, தரீதா, ஆஸ்தரிதா, ஆஸ்தரீதா ஆனால் வவரித², தேரித²

**7.2.39** நலிஙி

மேலே குறிப்பிட்ட தாதுக்களுக்குப் பின் 'லிங்' ஒட்டுக்கள் (வாழ்த்து) இணைக்கும்போது, அவ்வொட்டுக்களுக்கு முன் வரும் 'இட்' நெடிலாகாது. வவரிஷீஷ்ட, ப்ராவரிஷீஷ்ட, ஆஸ்தரிஷீஷ்ட, விஸ்தரிஷீஷ்ட

**7.2.40** ஸிசி ச பரஸ்மைபதே³ஷு

வ்ரு, 'ரு¹' வீற்றுத் தாதுக்களுக்குப்பின் 'ஸிச்' ஒட்டு பரஸ்மைபதத்தில் இணைக்கும்போதும், அவ்வொட்டுக்களுக்கு முன் வரும் 'இட்' நெடிலாகாது.

ப்ராவாரிஷ்டாம், ப்ராவாரிஷு:;

அதாரிஷ்டாம், அதாரிஷு:

ஆஸ்தாரிஷ்டாம், ஆஸ்தாரிஷு:

ஆனால் ப்ராவரிஷ்ட, ப்ராவரீஷ்ட (பரஸ்மைபதமல்ல)

**7.2.41** இட் ஸனி வா

மேலே கொடுக்கப்பட்ட தாதுக்களோடு 'ஸன்' ஒட்டிணைக்கும் போது 'இட்' விருப்பாக ஆகமமாகும். வுவூர்ஷதி (**6.1.97**), விவரிஷதே / விவரீஷதே (**7.2.38**) திதீர்ஷதி; திதரிஷதி, திதரீஷதி.

**7.2.42** லிங் ஸிசாவாராத்மனேபதே³ஷு

மேலே கொடுக்கப்பட்ட தாதுக்களுக்குப்பின் 'லிங்', 'ஸிச்' ஒட்டுக்களிணைக்கும்போது ஆத்மனேபதத்தில் அவ்வொட்க்களின் முன் 'இட்' விருப்பாக இணைக்கப்படும்.

லிங் – வருஷீஷ்ட, வரிஷீஷ்ட; ப்ராவ்ருஷீஷ்ட, ப்ராவரிஷீஷ்ட, ஆஸ்தரிஷீஷ்ட.
ஸிச் – அவ்ருத, அவரிஷ்ட, அவரீஷ்ட; ப்ராவ்ருத, ப்ராவரிஷ்ட, ப்ராவரீஷ்ட, ஆஸ்தீர்ஷ்ட, ஆஸ்தரிஷ்ட, ஆஸ்தரீஷ்ட ஆனால் ப்ராவாரிஷ்டாம், ப்ராவாரிஷு, (பரஸ்மைபதம்)

'லிங்'இல் 'வலாதி' ஒட்டுக்கள் காணப்படாததால் 'இட்' ஆகையால் மாற்று எடுத்துக் காட்டுக்கள் இவைகளுக்குக் கிடையாது.

**7.2.43** ரு¹ தஸ்¹ ச ஸம்யோக³ாதே³:

கூட்டுமெய்களுக்குப்பின் வரும் 'ரு¹' வீற்று தாதுக்களோடு 'லிங்', 'ஸிச்' ஒட்டுக்களிணைக்கும்போதும் அவைகளுக்கு முன்பும் 'இட்' விருப்பாக வரும்.

த்⁴வ்ருஷீஷ்ட, த்⁴வரிஷீஷ்ட (<த்⁴வ்ரு¹)
ஸ்ம்ருஷீஷ்ட, ஸ்மரிஷீஷ்ட (ஸ்ம்ரு)
அத்⁴வ்ருஷாதாம், அத்⁴வரிஷாதாம்
அஸ்ம்ருஷாதாம், அஸ்மரிஷாதாம்
ஆனால் க்ருஷீஷ்ட, ஹ்ருஷீஷ்ட;
அக்ருத, அஹ்ருத; அத்⁴வார்ஷீத், அஸ்மார்ஷீத் (பரஸ்மைபதம்)

**7.2.44** ஸ்வரதி ஸூதி ஸூயதி தூ⁴ஞ் ஊதி³தோ வா

ஸ்வ்ரு 'எதிரொலி', ஸூ 'பிள்ளைபெறு', (ஸூதி, ஸூயதி) தூ⁴ 'ஆடு, நடுங்கு' 'ஊ'வை 'இத்'தாகக் கொண்டதாக முதல் முதலில் தாதுபாடத்தில் குறிப்பிடப்படும் தாதுக்கள் ஆகியவைகளுக்குப் பின் 'வல்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்தை முதலில் கொண்ட ஆர்ததாதுகவொட்க்கள் இணைக்கும் போது அவ்வொட்க்களுக்கு முன் விருப்பாக 'இட்' வரும்.

ஸ்வர்த்தா, ஸ்வரிதா, ஸூதி – ப்ரஸோதா, ப்ரஸவிதா;
ஸூயதி – ஸோதா, ஸவிதா, தூ4ஞ் – தோ⁴தா, த⁴விதா, ஊதி³த – பிக³ாட⁴ா:, விக³ாஹிதா (<க³பஹூ); கோப்தா, கே³ாபிதா (<கு³பூ) 'வா' என்ற சொல் 41இலிருந்து தொடர்ந்து வந்து கொண்டிருந்த போதிலும், 'லிங்' 'ஸிச்' (42) இத்துடன் வராமல் தடுப்பதற்காக 'வா' வை திரும்பவும் இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

**7.2.45** ரத⁴ாதி³ப்⁴யஸ்¹ ச

ரத்⁴ (4.84) 'கீழ்ப்படி' முதலிய தாதுக்களுக்குப்பின் மேலே கூறிய ஆர்ததாதுக வொட்டுக்களிணைக்கும்போதும், 'இட்' அவைகளுக்கு முன் விருப்பாக இணைக்கப்படும். 'ரத⁴ாதி³' வகுப்பைச் சேர்ந்த தாதுக்கள் வருமாறு. 84 ரத்⁴ (85) நஸ் 'மறை' (86) த்ருப் 'திருப்திய டை' (87) த்3ருப் 'பைத்தியான (88)

த்$^{3}$ருஹ் 'பகையுள்ள' (89) முஹ் 'குழப்பமுறு' (90) ஷ்ணுஹ் 'வாந்தி எடு கக்கு' (91) ஷ்ணிஹ் 'அன்பாக இரு, ஒட்டிக் கொள்'
ரத்$^{4}$ – ரத்$^{3}$த$^{4}$ா, ரதி$^{4}$தா; நஸ்$^{1}$ – நம்ஷ்டா, நஸி$^{1}$தா; த்ருப் த்ரப்தா, தர்ப்தா, தர்பிதா, த்$^{3}$ருப் – த்$^{3}$ரப்தா, த$^{3}$ர்ப்தா, த$^{3}$ர்பிதா; த்$^{3}$ருஹ் – த்$^{3}$ரோக்$^{3}$த$^{4}$ா, த்$^{3}$ரோட$^{4}$ா, த்$^{3}$ரோஹிதா; முஹ் – மோக்$^{3}$த$^{4}$ா, மோட$^{4}$ா மோஹிதா; ஷ்ணுஹ் ஸ்னோக்$^{3}$த$^{4}$ா, ஸ்னோட$^{4}$ா, ஸ்னோ ஹிதா, ஷ்ணிஹ் ஸ்னேக்$^{3}$த$^{4}$ா, ஸ்னேட$^{4}$ா, ஸ்னேஹிதா.

**7.2.46** நிர: குஷ:

'நிர்' ஒடு கூடிய 'குஷ்' காயப்படுத்து, என்ற தாதுவுக்குப்பின் 'வல்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்தை முதலில் கொண்ட ஆர்ததாதுகவொட்டுக்கள் இணைக்கும்போது, அவ்வொட்டுக்களுக்கு முன் 'இட்' விருப்பாக வரும்.
நிஷ்கோஷ்டா, நிஷ்கோஷிதா,
நிஷ்கோஷ்டும், நிஷ்கோஷிதும்;
நிஷ்கோஷ்டவ்யம், நிஷ்கோஷிதவ்யம்
ஆனால் கோஷிதா, கோஷிதும், கோஷிதவ்யம்

**7.2.47** இண் நிஷ்டாயாம்

'நிர்' ஒடு கூடிய 'குஷ் தாதுவுக்குப்பின் 'நிஷ்டா' வொட்டுக்களிணைக்கும்போது அவ்வொட்டுக்களக்குமுன் 'இட்' இணைக்கப்படும். நிஷ்குஷித:, நிஷ்குஷிதவான்
இது சூ.15க்குப் புறனடை. இச்சூழலில் 'இட்' கட்டாயமாக வரும் என்று சுட்டுவதற்காக இட் மறுபடியும் இங்கு பயன்படுத்தப்பட்டிருக்கிறது. விருப்பைச் சுட்டும் 'வா' அடுத்து வரும் விதிகளில் தொடர்ந்து பயன்படுத்தப்படும்.

**7.2.48** தீஷ ஸஹ லுப$^{4}$ருஷரிஷ:

இஷ் 'விரும்பு', ஸஹ் 'தாங்கு', லுப்$^{4}$ 'பேராசைப்படு', ருஷ் 'சினமடை', ரிஷ் 'காயப்படுத்து' ஆகியவைகளுக்குப்பின் 'த்' என்ற எழுத்தில் தொடங்கும் ஆர்த தாதுகவொட்டுக்களிணைக்கும்போது அவ்வொட்டுக்களுக்கு முன் விருப்பாக 'இட்' ஆகமம் வரும்.
இஷ் – ஏஷ்டும், ஏஷிதும்; இஷு 'விரும்பு' (6.59) என்ற தாதுவை இங்கு குறிக்கும் இஷ் 'போ' (4.19), தைவாதி வகுப்பைச் சேர்ந்த தாதுவையல்ல. இத்தாதுவோடு கட்டாயமாக 'இட்' வரும். ப்ரேஷிதா, ப்ரேஷிதும், ப்ரேஷிதவ்யம். 'க்ரயாதி' வகுப்பைச் சேர்ந்த 'இஷு' திரும்பச் செய் அல்லது சொல்' (9.53) வையும் இங்கு குறிப்பிடவில்லை.
ஸஹ் – ஸோட$^{4}$ா, ஸஹிதும்; லுப்$^{4}$ – லோப்$^{3}$த$^{4}$ா, லோபி$^{4}$தா; ருஷ் – ரோஷ்டா, ரோஷிதா; ரிஷ் – ரோஷ்டா, ரோஷிதா.

**7.2.49** ஸனீவந்தர்த4 ப்4ரஸ்ஜ த3ம்பூ4 ஸ்'ரி ஸ்வ்ருயூர்ணு ப4ரக்3ஞு பிஹானாம்

'இவ்' ஈற்றுத் தாதுக்கள், ரு'த்4 'அதிகமாகு': ப்4ரஸ்ஜ் 'வறு', த3ம்பு4 'ஏமாற்று', ஸ்ரி 'சாய்' சார்ந்திரு', ஸ்வ்ரு 'சத்தம் செய்', யு 'கல', ஊர்ணு ப்4ரு 'தாங்கு', க்ஞுப் 'தெரிவி', ஸன் 'அடை' ஆகியவைகளோடு ஆர்ததாதுவொட்டான 'ஸன்' இணைக்கும்போது, அவ்வொட்டுக்கு முன்னால் 'இட்' விருப்பாக வரும்.

இவந்த – தி3தே3விஷதி, து3த்3யூஷதி விஸேவிஷதி, ஸுஸ்யூஷதி

ரு'த்4 – அர்தி3தி4ஷதி, ஈர்த்ஸதி:

ப்4ரஸ்ஜ் – பி3ப்4ரஜ்ஜிஷதி, பி3ப்4ரக்ஷதி, பி3ப4ர்ஜ்ஜிஷதி, பி3ப4ர்க்ஷதி

த3ம்பு4 – தி3த3ம் பி4ஷதி, தி4ம்4ஸதி, த்4ப்ஸதி

ஸ்ரி – உச்'சி2ஸ்'ரயிஷதி, உச்'சி2ஸ்'ரிஷதி

ஸ்வ்ரு – ஸிஸ்வரிஷதி, ஸுஸ்வூர்ஷதி

யு – யியவிஷதி, யுயூஷதி

ஊர்ணு – ப்ரோர்ணுன விஷதி, ப்ரோர்ணுனுவிஷதி, ப்ரோர்ணுனூஷதி

ப்4ரு – பி3ப4ரிஷதி, பு3பூ4ர்ஷதி

க3ஏபி – ஜிக்ஞபயிஷதி, க்3ப்ஸதி

ஸன் – ஸிஸனிஷதி, ஸிஷாஸதி

**7.2.50** க்லிஸ1: க்த்வாநிஷ்ட2யோ:

க்லிஸ்1 'துன்புறுத்து' என்ற தாதுவுக்குப் பின், 'க்த்வா' அல்லது நிஷ்டா கட்டுக்களிணைக்கும்போது அவ்வொட்டுக்களுக்கு முன் 'இட்' விருப்பாக வரும். க்லிஷ்ட்வா, க்லிஸித்வா, க்லிஷ்ட:, க்லிஷ்டவான்.

**7.2.51** பூஙஸ்1 ச

'க்த்வா' 'நிஷ்டா' வொட்டுக்களுக்கு முன்னால் பூ 'புனிதமாக்கு' என்ற தாது நிற்கும்போதும் அவ்வொட்டுக்களுக்கு முன் 'இட்' விருப்பாக வரும்.

பூத்வா, பவித்வா; பூத, பவித; பூதவான், பவிதவான்

**7.2.52** வஸதி க் ஷு தே4ாரிட்

வஸ் 'வசி, வாழ்' என்ற தாதுவுக்குப்பின் 'க்த்வா' அல்லது 'நிஷ்டா' வொட்டுக்களிணைக்கும்போது, அவைகளுக்கு முன் கட்டாயமாக 'இட்' வரும்.

உஷித்வா, உஷித:, உஷிதவான். க் ஷுதி4த்வா, க் ஷுதி4த:, க் ஷுதி4தவான்

**7.2.53** அஞ்சே: பூஜாயாம்

'க்த்வா' அல்லது நிஷ்டா வொட்டுக்களுக்கு முன், 'அஞ்ச்' என்ற தாது 'மரியாதை கொடு, பூசி' என்ற பொருளைச் சுட்டும்போது அவ்வொட்டுக்களுக்கு முன் 'இட்' வரும்.

அஞ்சித்வா ஜானு ஜுஹோதி

அஞ்சிதா அஸ்ய கு2ரவ: 7.2.56, 'க்த்வா'வுக்கு முன் 'அஞ்சு' நிற்கும்போது விருப்பாக 'இட்' டோடு வரும் என்று விதிக்கிறது. ஆகையால் 7.2.15ன் படி

'நிஷ்டா' வொட்டுக்களுக்கு முன் 'இட்' வரவே வராது. இச்சூத்திரம் 7.2.15ட்க்குத் தடையாக அமைகிறது. ஆனால் உதக்தம் உத[3]கம் 'கிணற்றிலி ருந்து தண்ணீர் இறக்கப்பட்டது'

**7.2.54** லுபே[4]ா விமோஹனே
'லுப்[4]' தாதுவோடு 'க்த்வா' அல்லது 'நிஷ்டா' வொட்டுக்களிணைக்கும்போது அது 'மனக்குழப்பம், தடுமாற்றம்' என்ற பொருளைச் சுட்டுமானால், அவ்வொட்டுக்களுக்கு முன் 'இட்' வரும்.
லுபி[4]த்வா, லோபி[4]த்வா, லுபி[4]த: ஆனால் லுப்[3]தே[4]ா வ்ருஷல:

**7.2.55** ஜ்ரு வ்ரஸ்'ச்யோ: க்த்வி
ஜ்ரு 'முதுமையடை' வ்ரஸ்'ச் 'கிழி, வெட்டு' ஆகியவைகளுக்குப்பின் 'க்த்வா' வொட்டு இணைக்கும்போது. அவ்வொட்டுக்கு முன் 'இட்' வரும்.
ஜரித்வா, ஜரீத்வா, வ்ரஸ்சித்வா இங்கு 'நிஷ்டா' அனுவிருத்தியாகாது என்று சுட்டுவதற்காக 'க்த்வா'வை மட்டும் குறிப்பாக கூறப்பட்டிருக்கிறது.

**7.2.56** உதி[3]தோ வா
'உ'வை 'இத்'தாகக் கொண்ட தாதுக்களுக்குப்பின் 'க்த்வா' இணைக்கும்போது, 'இட்' விருப்பாக ஆகமம் ஆகும்.
ஸமு – ஸமித்வா, ஸாந்த்வா, தமு – தமித்வா, தாந்த்வா; த[3]மு த[3]மித்வா, த[3]ாந்த்வா

**7.2.57** ஸே அஸிசி க்ருதச்ருதச்ச[2]ருத[3] த்ருத[4]ந்ருத:
'ஸிச் ஒட்டைத் தவிர்த்து மற்ற 'ஸ்'ஐ முதலில் கொண்ட ஆர்ததாதுகவொட்டுக்கள், க்ருத் 'வொட்டு', ச்ருத் 'ஒட்டு' ச்[2]ருத்[3] 'வாந்தியெடு' த்ருத்[3] 'துளை', ந்ருத் 'கூத்தாடு, நாட்டியமாடு' ஆகியவைகளோடு இணைக்கப்படும்போது 'இட்' விருப்பாக வரும்.
க்ருத் – கர்த்ஸ்யதி, அகர்த்ஸ்யத், சிக்ருத்ஸதி, கர்த்திஷ்தி, அகர்த்திஷ் யத், சி கர்த்திஷதி
ச்ருத் – சர்த்ஸ்யதி, அசர்த்ஸ்யத், சிச்ருத்ஸதி, சர்திஷ்யதி, அசர்திஷ்யத், சிசர்திஷதி
ச்[2]ருத்[3] – ச[2]ர்த்ஸ்யதி, அச்[1]ச[2]ர்தி[3]ஷ்யத், சிச்ச[2]ருத்ஸதி, ச[2]ர்தி[3]ஷ்யதி, அச்[1]ச[2]ர்தி[3]ஷ்யத், சிச்ச[2]ர்தி[3]ஷதி

த்ருத்[3] – தர்த்ஸ்யதி, அதர்த்ஸ்யத், தித்3ருத்ஸதி, தர்திஷ்யதி, அதர்தி[3]ஷ்யத், திதர்தி[3]ஷதி
ந்ருத் – நர்த்ஸ்யதி, அநர்த்ஸ்யத், நிந்ருத்ஸ்யதி, நர்திஸ்யதி, அநர்திஷ்யத், நிநர்திஷதி

ஆனால் கர்திதா ('ஸே' அல்ல) அகர்ஷீத் (ஸிச் உடன்)

**7.2.58** க$^{3}$மேரிட் பரஸ்மைபதேஷு

'ஸ்' என்றவெழுத்தில் தொடங்கும் ஆர்த தாதுகவொட்டுக்கள் 'க$^{3}$ம்' 'போ' என்ற தாதுவோடு இணைக்கும்போது, பரஸ்மை பதத்தில் 'இட்' வரும். க$^{3}$மிஷ்யதி, அக$^{3}$மிஷ்யத், ஜிக$^{3}$மிஷதி ஆனால் ஸமக$^{3}$ம்ஸீஷ்ட, ஸம்க$^{3}$ம்ஸ்யதே 'இட்' கட்டாயமாக வரும் என்பதைச் சுட்டுவதற்காகவும் 'வா' (விருப்பு) அனவிருத்தியாகாது என்று சுட்டுவதற்காகவும் 'இட்' ஐ இங்கு சேர்த்து கூறப்பட்டிருக்கிறது.

**7.2.59** ந வ்ருத்$^{3}$ப்$^{4}$யஸ்சதுர்ப்$^{4}$ய:

ஸ்ருத், 'திரும்பு, 'நேரிடு' என்ற தாதுவிலிருந்து தொடங்கும் நான்கு தாதுக்களுக்குப்பின் 'ஸ்' இல் தொடங்கும் ஆர்ததாதுக வொட்டுக்கள் இணைக்கும்போது, பரஸ்மைபதத்தில் 'இட்' வராது .

1. வ்ருத் – வர்த்ஸ்யதி, அவர்த்ஸ்யத், விவ்ருத்ஸதி,
2. வ்ருது$^{4}$ – வர்த்ஸ்யதி, அவர்த்ஸ்யத், விவ்ருத்ஸதி,
3. ஸ்'ருது$^{4}$ – ஸர்த்ஸ்யதி, அஸர்த்ஸ்யத், ஸிஸ்'ருத்ஸதி
4. ஸ்யந்து$^{3}$ – ஸ்யந்த்யதி, அஸ்யந்த்ஸ்யத், ஸிஸ்யந்த்ஸ்யதி

ஆனால் வர்திஸ்யதே, வர்திஷீஷ்ட, அவர்திஷ்யத, விவர்திஷதே (ஆத்மனேபதம்)

**7.2.60** தாஸி ச க்ல்ருப:

'ஸ்'இல் தொடங்கும் ஆர்த தாதுகவொட்டுக்கள் 'தாஸ்' (லுட்'ஒட்டு) ஆகியவைகளுக்கு முன் க்ல்ப் 'திறமையுள்ள' தாது நிற்கும்போது அவ்வொட்டுக்களுக்கு முதலில் 'இட்' வராது (பரஸ்மைபதத்தில்) கல்ப்தா, கல்ப்ஸ்யதி, அகல்ப்ஸ்யத், சிக்ல்ருப்ஸதி ஆனால் கல்பிதாஸே, கல்பிஷ்யதே, கல்பிஷீஷ்ட, அகல்பிஷ்யத, சிகல்பிஷதே (ஆத்மனேபதம்)

**7.2.61** அசஸ்தாஸ்வத்த$^{2}$ல்யநிடோ நித்யம்

உயிரெழுத்தையீறாகக் கொண்ட தாதுக்களோடு 'தாஸ்' இணைக்கும் போது 'இட்' ஆகமம் வராததைப்போல, அத்தகைய தாதுக்களுக்குப்பின் த$^{2}$ல் (லிட்) இணைக்கும்போதும் 'இட்' கட்டாயமாக வராது.

யா – யாதா, யயாத$^{2}$, சேதா, சிசேத$^{2}$, நேதா, நிநேத$^{2}$ ஹோதா, ஜுஹோத$^{2}$ ஆனால் பே$^{4}$த்தா – பி$^{3}$பே$^{4}$தி$^{3}$த$^{2}$ ('அச்' ஈற்றுத் தாதுவல்ல) யாதாயயித$^{2}$

**7.2.62** உபதே$^{3}$ஸே$^{1}$ அத்வத:

தாதுபாடத்தில் 'அத்' (அ)தை யீறாகக் கொண்ட தாதுக்களோடு 'தாஸ்' இணைக்கும்போது கட்டாயமாக 'இட்' வராதோ, அதே போன்று, 'த$^{2}$ல்' இணைக்கும்போதும் 'இட்' கட்டாயமாக வராது.

பக்தா – பபக்த$^{2}$; யஷ்டா, இயஷ்ட, ஸ'க்தா – ஸ'ஸ்க்த$^{2}$ ஆனால் கர்ஷ்டா – ககர்ஷித (தாதுபாடத்தில் 'அ'வுள்ள தாகக் குறிப்பிடவில்லை)

**7.2.63** ரு$^{1}$தோ ப$^{4}$ாரத்$^{3}$ வாஜஸ்ய
'ரு$^{1}$' வீற்று தாதுக்களோடு 'தாஸ்' இணைக்கும்போது கட்டாயமாக 'இட்' வராது என்பது பாரத்வாஜரின் கருத்து.
ஸ்மர்த்தா – ஸஸ்மர்த$^{2}$; த்$^{4}$வர்த்தா–த$^{3}$த்$^{4}$வர்த$^{2}$ இவ்விலக்கண ஆசிரியரின் கருத்துப்படி சூ.7.2.61 'ரு' வீற்றுத் தாதுக்களில் மட்டுந்தான் பயன்படுத்த முடியும், மற்ற தாதுக்களில் அல்ல. ஆகவே யயித$^{2}$, வலித$^{2}$, பேசித$^{2}$, ஸேசித$^{2}$

**7.2.64** ப$^{3}$பூ$^{4}$த$^{2}$ா ததந்த$^{2}$ ஜக்$^{3}$ரும்ப$^{4}$வவர்த$^{2}$ இதி நிகமே
வேதமொழியில் ப்$^{3}$பூ$^{4}$த$^{2}$, ஆததற்த$^{2}$, ஜக்$^{3}$ரும்ப$^{4}$, வவர்த$^{2}$ என்ற நிபாதனங்கள் காணப்படுகின்றன.

1) த்வம் ஹி ஹோதா ப்ரதமோ ப$^{3}$பூ$^{4}$த$^{2}$ (தை 3.1.4.) ப$^{3}$ பூவித$^{2}$ பேச்சு மொழியில்) 'நீ முதல் ஹோதாவாக ஆகியிருக்கிறாய்':

2) யேனாந்தரிக்ஷமுர்வாத தந்த (ருக் 3.11.1) 'எந்தச் சக்தியைக் கொண்ட நீ விரிவடைந்திருக்கிறாயோ' (ஆதேநித$^{2}$ பேச்சு மொழியில்)

3) ஜக்$^{3}$ரும்ப$^{4}$ா தே த$^{3}$க்ஷிணமிந்த்$^{3}$ர
ஹஸ்தம் (ருக் 10.47.1) நாங்கள் உனது வலதுகையை பிடித்துள்ளோம், ஓ இந்திரனே) (ஜக்$^{3}$ருஹிம பேச்சு மொழியில்)

4) வவர்த$^{2}$த்வம் ஹி ஜ்யோதிஷா
'ஒளியினால் உன்னை மறைந்துக் கொண்டிருக்கிறாய்' (வவரித$^{2}$ பேச்சு மொழியில்)

**7.2.65** விபா$^{4}$ஷா ஸ்ருஜித்$^{3}$ருஸோ$^{1}$ா:
ஸ்ருஜ் 'படை'. த்$^{3}$ருஸ்$^{1}$ 'பார், உணர்' ஆகியவைகளோடு ஆர்ததாதுகவொட்டான 'த$^{2}$ல்' இணைக்கும்போது, அவ்வொட்டுக்கு முன் 'இட்' விருப்பாக இணைக்கப்படமாட்டாது.
ஸஸ்ரஷ்ட, ஸஸர்ஜித$^{2}$; த$^{3}$த்$^{3}$ரஷ்ட, த$^{3}$த$^{3}$ர்ஸி$^{1}$த$^{2}$

**7.2.66** இட$^{3}$ த்யர்த்திவ்யய தீனாம்
அத்$^{3}$ 'உண்', ரு 'போ', வ்யே மூடு, ஆடையணி' ஆகியவைகளோடு ஆர்ததாதுகவொட்டான 'த$^{2}$ல்' இணைக்கும்போது அவ்வொட்டுக்கு முன் 'இட்' வரும்.
மேற்சூத்திரத்திலுள்ள 'விபாஷா' இச் சூத்திரத்திலும் தொடராமல் தடுக்க 'இட்' ஐ மறுபடியும் இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.
(1)ஆதி$^{3}$த$^{2}$, (2) ஆரித$^{2}$ (3) ஸம்விவ்யயித$^{2}$

**7.2.67** வஸ்வேகாஜாத்$^{3}$ க$^{4}$ஸாம்

இரட்டிக்கப்பட்ட ஓரசையுள்ள வினையடிச் சொல், (ஏகாச்) 'ஆ' வீற்று வினை, க$^{4}$ஸ் 'உண், விழுங்கு' ஆகியவைகளுக்குப்பின் 'வஸ்' (க்வஸு) ஒட்டிணைக்கும்போது அவ்வொட்டுக்கு முன் 'இட்' வரும்.

1. ஆதி$^{3}$வான், ஆஸிவான், பேசிவான், ஸே$^{1}$கிவான்,
2. ஆத் – யயிவான் (யா) தஸ்தி$^{2}$வான் (ஸ்த$^{2}$ா),
3. க$^{2}$ஸ் – ஜக்ஷிவான்

**7.2.68** விப$^{4}$ாஷா க$^{3}$மஹன வித$^{3}$விஸ$^{1}$ாம்

க$^{3}$ம் 'போ', ஹன் 'கொல்', வித்$^{3}$ 'அறி' விஸ்$^{1}$ 'உட்புகு' ஆகியவைகளோடு 'வஸ்' இணைக்கும்போது, அதற்குமுன் 'இட்' விருப்பாக வரும்.

1. ஜக்$^{3}$மிவான். ஜக$^{3}$ன்வான் (2) ஜக்$^{4}$னிவான், ஜக$^{4}$ன்வான்
3. விவிதி$^{3}$வான், விவித$^{3}$வான் (4) விவிஸிவான், விவிஸ்வான்

வா: த்$^{3}$ரு$^{1}$ ஸே$^{1}$ஸ்சேதி வக்தவ்யம்

த்$^{3}$ரு$^{1}$ஸ்$^{1}$–ஐயும் இவைகளோடு சேர்த்துக் கூற வேண்டும்.

த$^{3}$த்$^{3}$ரு$^{1}$ஸி$^{1}$வான், த$^{3}$த்$^{3}$ரு$^{1}$ஸ்$^{1}$வான்

**7.2.69** ஸநிம் ஸஸநிவாம் ஸம்

'ஸநிம்' ஒடு வரும் ஸன் 'அடை' என்ற தாதுவோடு 'க்வஸு' இணைக்கப்படும்போது 'இட்' இணைக்கப்பட்டு 'ஸநிம்ஸஸ நிவாம்ஸம்' என்ற விதிக்குப் புறம்பான சொல்லாக்கப்பட்டுள்ளது.

**7.2.70** ருத்$^{3}$த$^{4}$னோ: ஸ்ய

'ரு' வீற்றுத் தாதுக்கள், 'ஹன்' என்ற தாது ஆகியவைகளோடு ஸ்ய இணைக்கும்போது 'இட்' வரும்.

கரிஷ்யதி, ஹனிஷ்யதி

**7.2.71** அஞ்ஜே: ஸிசி

'அஞ்ஜ்' என்ற தாதுவுக்குப்பின் 'ஸிச்' இணைக்கும்போது அதற்குமுன் 'இட்' வரும்.

ஆஞ்ஜீத், ஆஞ்ஜிஷ்டாம், ஆஞ்ஜிஷு; ஆனால் அங்க்தா, அஞ்ஜிதா

**7.2.72** ஸ்துஸு தூ$^{4}$ஞ்ப்$^{4}$ய: பரஸ்மைபதே$^{3}$ஷு

ஸ்து, ஸு, தூ$^{4}$ஞ் ஆகியவைகளோடு 'ஸிச்' இணைக்கும்போது பரஸ்மைபதத்தில் 'இட்' வரும்.

அஸ்தாவீத், அஸாவீத், அத$^{4}$ாவீத் ஆனால் அஸ்தோஷ்ட, அஸோஷ்ட அதே$^{4}$ாஷ்ட அல்லது அத$^{4}$விஷ்ட (ஆத்மனேபதம்)

**7.2.73** யமரமநமாதாம் ஸக்ச

யம் 'அடக்கு', ரம் 'அனுபவி', நம் 'வணங்கு', 'ஆத்' (ஆ) ஈற்றுத் தாதுக்களோடு 'ஸிச்' ஒட்டிணைக்கும்போது பரஸ்மைபதத்தில் 'இட்' ஆகமத்தோடு 'ஸக்' (ஸ்) ஆகமம் வரும்.

யம் – அயம்ஸீத். அயம்ஸிஷ்டாம், அயம்ஸிஷு:

ரம் – வ்யரம்ஸீத், வ்யரம்ஸிஷ்டாம், வ்யரம்ஸிஷு:

நம் – அநம்ஸீத், அநம்ஸிஷ்டாம், அநம்ஸிஷு:

ஆத் – அயாஸீத், அயாஸிஷ்டாம், அயாஸிஷு: ஆனால்

அயம்ஸ்த, அரம்ஸ்த, அநம்ஸ்த (ஆத்மனேபதம்)

**7.2.74** ஸ்மிபூங் ரஜ் ஜ்வஸ$^{1}$ாம் ஸநி

ஸ்மி 'சிரி', பூங் 'புனிதமாக்கு', ரு 'போ' அஞ்ஜ் 'தைல அபிஷேகஞ் செய்', அஸ்$^{1}$ 'அடை, சேர்' ஆகியவைகளோடு 'ஸன்' ஒட்டிணைக்கும்போது அதற்குமுன் 'இட்' வரும். ஸிஸ்மியிஷதே, பிபவிஷ தே, அரிரிஷதி, அஞ்ஜிஜிஷதி, அஸி$^{1}$ஸி$^{1}$ஷதே

பூஞ் (9.12) 'வளர், உணவூட்டு' என்ற தாது புபூஷதி என்று 'இட்' வராமல் ஆகும்.

**7.2.75** கிரஸ்$^{1}$ச பஞ்சப்$^{4}$ய:

க்ரு$^{1}$ 'சிதர்'வில் தொடங்கும் ஐந்து தாதுக்களோடு 'ஸன்' ஒட்டு இணைக்கும்போது அவ்வொட்டுக்கு முன் 'இட்' வரும். க்ரு சிகரிஷதி, க்$^{3}$ரு – ஜிக$^{3}$ரிஷதி, த்$^{3}$ருங் – தி$^{3}$த$^{3}$ரிஷதி த்$^{4}$ருங் தி$^{3}$த$^{4}$ரிஷதே, ப்ரச்ச$^{2}$ – பிப்ரச்$^{1}$ச$^{2}$தி இவைகள் தாதுபாடத்தில் 6.116–120 வரை கொடுக்கப்பட்டிருக்கின்றன. இத்தாதுக்களின் பொருட்கள் 116 'செய்' 117 'விழுங்கு, உண் 118. மதி. மரியாதை செய் 119. வசி, இரு, தொடர் 120 கேள்.

**7.2.76** ருத$^{3}$ாதி$^{3}$ப்$^{4}$ய: ஸார்வத$^{4}$ாதுகே

ருத்$^{3}$ 'அழு' முதலியவைகளுக்குப் பின் 'வல்' பிரத்தியாஹாரத்தை சேர்ந்த ஒரெழுத்தில் தொடங்கும் ஸார்வ தாதுகவொட்டுக்களை யிணைக்கும்போது அவ்வொட்டுக்கு முன் 'இட்' வரும்.

ருத் – ரோதி$^{3}$தி ஸ்வப் – 'தூங்கு' 'ஸ்வபிதி', ஸ்$^{1}$வஸ் – 'சுவாசி' ஸ்$^{1}$வஸிதி; அன் – 'மூச்சு', விடு' – ப்ராணிதி, ஜக்ஷ 'உண்' – ஜக்ஷிதி (2.58.62) ஆனால் ஜாக$^{3}$ர்தி (இந்த ஐந்து தாதுக்களக்குள்ளடங்கியத ல்ல) ஸ்வப்தா (ஆர்ததாதுகவொட்டிணைக்கப்பட்டது)

**7.2.77** ஈஸ$^{1}$: ஸே

ஈஸ்1 'அரசாள்' என்ற தாதுவுக்குப் பின் ஸார்வதாதுகவொட்டான 'ஸே' (முன்னிலை நிகழ்கால, வியங்கோள் ஒட்டு) இணைக்கும்போது அவ்வொட்டுக்கு முன் 'இட்' வரும்.

ஈஸி$^{1}$ஷே – ஈஸி$^{1}$ஷ்வ (ஸே → ஸ்வ 3.4.91; 80)

**7.2.78** ஈட்$^{3}$ஜனோர் த்$^{3}$ஜே ச

ஈட்$^{3}$ 'புகழ்', ஜன் 'தோன்று' ஆகியதாதுக்களுக்குப்பின் ஸார்வதாதுகவொட்டான த்4வே (ஸே'யும்) இணைக்கும்போது, அவ்வொட்டுக்கு முன் 'இட்' வரும்.

ஈடி$^{3}$த்$^{4}$வே, ஈடி$^{3}$த்$^{4}$வம், ஈடி$^{3}$ஷே, ஈடி$^{3}$ஷ்வ ஜனித்$^{4}$வே, ஜனித்$^{4}$வம், ஜனிஷே, ஜனிஷ்வ 'ஜன்' (4.41) என்ற தாதுவோடு வரும். 'ஸ்யன்' (விகரணம்) கெடுவது வேதமொழியில் காணப்படும் நிபாதனம். அதே போன்று ஈற்றயலும் கெடவில்லை மற்ற இடங்களில் ஜாயதே என்ற சொல் காணப்படுகிறது.

ஜன் 'பிற' (3.24) இதிலடங்கும்.

வ்யதிஜக்$^{3}$ஞிஷே, வ்யதிஜக்$^{3}$ஞிஷ்வ, வ்யதிஜக்$^{3}$ஞித்$^{4}$வே, வ்யதிஜக்ஞித்$^{4}$வம். (கர்ம வ்யதிஹார பரிமாற்ற வினை)

**7.2.79** லிங: ஸலோபோ அனந்த்யஸ்ய ஸார்வதாதுக

'லிங்' ஒட்டின் (யாஸுட், ஸியுட், ஸுட் 3.4.102; 102, 1.4.107) ஈறல்லாத (அனந்த்யஸ்ய) 'ஸ்' கெடும் குர்யாத், குர்யாத், குர்யு:; குர்வீத, குர்வீயாதாம், குர்வீரன் ஆனால் க்ரியாஸ்தாம், க்ரியாஸு; க்ருஷீஷ்ட, க்ருஷீயாஸ்தாம், க்ருஷீரன் (ஆர்ததாதுகம்)

**7.2.80** அதோ யேய:

'அ' (அத்) வீற்று வினைகளுக்குப்பின் இணைக்கப்படும் ஸார்வதாதுக வொட்டான யா (அதாவது 'லிங்' இன் 'யாஸ்' இன் 'யா') வுக்கு 'இ ய்' பதிலியாக வரும்.

பச் + ஸப் = யாஸ்–ஸ் + த் = பச்–அ + யா θ – θ –த் = பச் – அ + இய் + த் = பசே–ய் + த் (8.1.87) = பச் + θ + த் (8.1.66) = பசேத், பசே தாம், பசேயு:.

ஆனால் சினுயாத் ('அத்' ஈறல்ல); சிகீர்ஷ–யாத் (ஆர்ததாதுக

**7.2.81** ஆதோ ஙித:

'அ' வீற்று வினைக்குப்பின்னிணைக்கப்படும் 'ங்' என்ற எழுத்தை 'இத்'தாகக் கொண்ட ஸார்வதாதுகவொட்டின் (ஆதே, ஆதே$^{2}$, ஆதாம், ஆத$^{3}$ாம்) 'ஆ'வுக்கு 'இய்' பதிலியாக வரும்.

பச் + ஸப் + ஆதே = பசேதே, பசேதே$^{2}$, பசேதாம், பசேத$^{2}$ாம்; யஜேதே, யஜேதே$^{2}$, யஜேதாம், யஜேத$^{2}$ாம்

**7.2.82** ஆனே முக்

'அ' வீற்று வினைகளுக்குப்பின்னிணைக்கப்படும் ஸார்வதாதுகவொட்டான 'ஆன' (ஸானச்) வுக்கு முன் 'முக்' ஆகமம் வரும். பச் + ஸானச் = பச் + முக் + ஸானச் = பசமான:, யஜமான:

யுவாம், ஆவாம் ஆனால் யுவயோ:, ஆவயோ:
யுவம் வஸ்த்ராணி பீவஸா வஸாதே[2] (வேதமொழி)

**7.2.89** யோ அசி
பதிலிகளல்லாத, உயிரெழுத்தை முதலாகக் கொண்ட வேற்றுமையுருபுகளுக்க முன் நிற்கும் யுஷ்மத், அஸ்மத் ஆகியவைகளினிறுதியெழுத்துக்கு 'ய்' பதிலியாகும்.
யுஷ்மத் + ஆ/இ/ஓஸ = த்வயா,
த்வயி, தவயோ:, மயா, மயி, ஆவயோ:

**7.2.90** ஸேஷே லோப:
மீதியிடங்களில் (ஸேஷே) அதாவது 'ஆ' அல்லது 'ய' பதிலியாக வராத இடங்களில், யுஷ்மத், அஸ்மத் என்ற மாற்றுப்பெயர்களினிறுதியெழுத்து கெடும்.
முதல் வேற்றுமை, 4, 5, 6ஆம் வேற்றுமையொருமை, பன்மையுருபுகள் இணைக்கும்போது அவ்வாறாகும்.
ஒருமை பன்மை
முதல் வேற்றுமை த்வம், அஹம் யூயம், வயம்
4ஆம் வேற்றுமை துப்[4]யம், மஹ்யம், யுஷ்மப்[4]யம், அஸ்மப்[4]யம்
5ஆம் வேற்றுமை த்வத், மத் யுஷ்மத், அஸ்மத்
6ஆம் வேற்றுமை தவ, மம யுஷ்மாகம், அஷ்மாகம்

**7.2.91** மபர்யந்தஸ்ய
இங்கிருந்து சூ. 98 வரையில் விதிக்கப்பட்டுள்ள பதிலிகள், யுஷ்மத், அஸ்மத் என்ற மாற்றுப் பெயர்களின் 'ம' வரையிலுள்ள எழுத்துக்களுக்காகும். அதாவது, யுஷ்ம், அஸ்ம் ஆகியவைகளுக்குப் பதிலியாகும். இது ஒரு அதிகார சூத்திரம். சூ. 98வரை அனுவிருத்தியாகும்.

**7.2.92** யுவாவௌ த்[3]விவசனே
இருமையைச் சுட்டும்போது, 'யுஷ்மத்', 'அஸ்மத்' என்ற மாற்றுப் பெயர்களின் 'ம்' வரைக்குமுள்ளவைகளுக்கு முறையே 'யுவ', 'ஆவ' பதிலியாக வரும்.
யுவாம், ஆவாம் 'நீங்கள், நாங்கள்', யுவாப்[4]யாம்,
ஆவாப்[4]யாம் 'உங்களால், உங்களுக்கு', உங்களிடமிருந்து, எங்களால்', எங்களுக்கு, எங்களிடமிருந்து, யுவயோ:, ஆவயோ:, 'உங்களுடைய, உங்களில், எங்களுடைய, எங்களில்:

**7.2.93** யூயவயோ ஜஸி
'ஜஸ்' (முதல் வேற்றுமைப்பன்மை) உக்கு முன் நிற்கும் யுஷ்மத், அஸ்மத் என்ற மாற்றுப் பெயர்களில், 'யுஷ்ம்', அஸ்ம்' க்கு முறையே 'யூய' 'வய' பதிலியாகும்.

யூயம், வயம் 'நீங்கள், நாங்கள்'

**7.2.94** த்வாஹௌ ஸௌ

'ஸு' (முதல் வேற்றுமையொருமை)க்கு முன் நிற்கும் யுஷ்மத், அஸ்மத் என்ற மாற்றுப் பெயர்களின் யுஷ்ம், அஸ்ம், உக்கு முறையே 'த்வ', 'அஹ' பதிலியாகும்.
த்வம், அஹம், 'நீ, நான்'

**7.2.95** துப்$^4$யமஹ்யௌ ஙயி

'ஙே' (4ஆம் வேற்றுமையொருமை)க்கு முன் நிற்கும் யுஷ்மத், அஸ்மத் என்ற மாற்றுப் பெயர்களின், யுஷ்ம், அஸ்ம் ஆகியவைகளுக்கு முறையே துப்$^4$ய, மஹ்ய பதிலியாகும்.
துப்$^4$யம், மஹ்யம் 'உனக்கு, எனக்கு'

**7.2.96** தவமமௌ ஙஸி

'ஙஸ்' (6ஆம் வேற்றுமையொருமை) உக்கு முன் நிற்கும் யுஷ்மத், அஸ் மத் என்ற மாற்றுப் பெயர்களின் யுஷ்ம், அஸ்ம் ஆகியவைகளுக்கு தவ, மம பதிலியாகும்.
தவ, மம 'உன்னுடைய, என்னுடைய'

**7.2.97** த்வமாவேகவசனே

ஒருமையைச் சுட்டும்போது, 'யுஷ்மத், அஸ்மத் என்ற மாற்றுப் பெ யர்களின் 'யுஷ்ம்' 'அஸ்ம்' ஆகியவைகளுக்கு முறையே 'த்வ', 'ம' பதி லியாகும்.
த்வாம், மாம் (2ஆம் வேற்றுமை), த்வயா, மயா (3ஆம் வேற்றுமை), த்வத், மத் (5ஆம் வேற்றுமை), த்வயி, மயி 7ஆம் வேற்றுமை)

**7.2.98** ப்ரத்யயோருத்தரபத$^3$யோஸ்$^1$ ச

ஒரொட்டுக்கு முன் நிற்கும்போதும், அல்லது ஒரு தொகையினிறுதியுருப்பினராக அமையும்போதும் யுஷ்மத், அஸ்மத் என்ற மாற்றுப் பெயர்களின் யுஷ்ம், அஸ்ம் ஆகியவைகளுக்குப் பதிலியாக முறையே 'த்வ', 'ம' ஆகியவைகள் ஒருமையைச் சுட்டும்போது பதிலியாகும்.
த்வதீ$^3$ய: உன்னுடையது (ச$^2$ ஒட்டுடன் 4.2.114, 1.1.74) மதீ$^3$ய: 'என்னுடையது' த்வத்தர:, மத்தர 'உன்னைவிட அல்லது என்னைவிடச் சிறந்த', த்வத்$^3$யதி, மத்$^3$யதி உன்னை/என்னை விரும்புகிறான்'
த்வத்புத்ர:, மத்புத்ர: 'உன்/என் மகன்'

**7.2.99** த்ரிசதுரோ: ஸ்த்ரியாம் திஸ்$^1$ருசதஸ்ரு

வேற்றுமையுருபுகளுக்கு முன் நிற்கும் எண்ணுப் பெயர்களான த்ரி '3' சதுர் '4' ஆகியவைகளுக்குப் பதிலியாக முறையே திஸ்ரு, சதஸ்ரு ஆகியவைகள் பெண்பாலில் பதிலியாக வரும்

தொடர்புள்ளது.

த்ரி + ஜஸ்/ஸஸ்/ பி⁴ஸ்/ப்⁴யஸ்/நாம்
ஸு : திஸ்ர:, திஸ்ருபி⁴:, திஸ்ரப்⁴ய:, திஸ்ரூணாம்.
திஸ்ருஷு; சதஸ்ர:, சதஸ்ருபி⁴:, சதஸ்ருப்⁴ய:, சதஸ்ரூனாம், சதஸ் ருஷு
இங்கு 'ஸ்த்ரியாம்' என்ற சொல் அடிச்சொல்லான 'த்ரி, சதுர்' ஒடு

வா: திஸ்ருப⁴ாவே ஸம்க்³ஞாயாம் கன்யுபஸங்க்²யானம் வக்தவ்யம்
'கன்' ஒட்டுக்கு முன் வரும்போதும் 'த்ரி'க்கு 'திஸ்ரு' பதிலியாக வரும்
திஸ்ருகா நாமக்³ராம:

வா: சத ஸர்யாத்³ யுதாத்தநிபாதனம் கர்தவ்யம்
'சதஸ்ரு' முதலசையில் உதாத்தம் பெறும். சதஸ்ர: பஸ்ய ஆனால்
சதஸ்ரூணாம் (6.1.179)

**7.2.100** அசி ர ரு்'த:
திஸ்ரு, சதஸ்ரு' என்ற எண்ணுப் பெயர்களுக்குப் பின் ஒருயிரெழுத்தில் தொடங்கும் வேற்றுமையுருபுகள் வரும்போது, அவைகளினிறுதி யெழுத்தான 'ரு'வுக்கு 'ர்' பதிலியாக வரும்.
திஸ்ர: (திஸ்ரு + ஜஸ்/ஸஸ்);
சதஸ்ர: ஆனால் திஸ்ருபி⁴:, சதஸ்ருபி⁴:

**7.2.101** ஜராயா ஜர ஸன்யதரஸ்யாம்
ஒருயிரெழுத்தில் தொடங்கும் வேற்றுமையுருபுகளுக்கு முன் நிற்கும் ஜரா 'முதுமை' என்ற சொல்லுக்கு 'ஜரஸ்' விருப்பாகப் பதிலியாகும்.
ஜரஸா/ஜரயா த³ந்தா: ஸீர்யந்தே
ஜரஸே/ஜராயை, ஜரஸ:/ஜராயா:,
ஜரஸி/ஜராயாம்; ஜரஸோ:/ஜரயோ: ஜரஸாம்/ஜராணாம்

**7.2.102** த் யதா⁴தீ³னாம:
வேற்றுமையுருபுகளுக்கு முன் நிற்கும் த்யத்³ 'அது' முதலியவைகளினிறுதியெழுத்துக்கு 'அ' பதிலியாக வரும். 'த்யத்' முதலியவைகள் 'ஸர்வ' (1.1.27)வை முதலில் கொண்ட சொற்களின் வகுப்பின் உட்பிரிவு ஆகும். கீழ்க்கண்ட சொற்களைக் கொண்டது இது. த்யத்³, தத்³ 'அது'; யத்³ 'எது, எவன்' (Relative); ஏதத்³ 'இது', அத³ஸ் 'அது'; இத³ம் 'இத'; ஏக 'ஒன்று', த்³வி 'இரண்டு' த்யத்³ த்ய:, த்யௌ, த்யே; தத்³ – ஸ:, தௌ, தே; யத்³ – ய:, யௌ, யே; ஏதத் – ஏஷ:, ஏதௌ, ஏதே; இத³ம் – அயம், இமௌ, இமே;
அத³ஸ் – அஸௌ, அமூ, அமீ; த்³வி – த்³வௌ.
த்³வாப்⁴யாம்

**7.2.103** கிம: க:

கிம் 'யார், என்ன, எது' என்ற சொல்லுக்குப்பின் வேற்றுமையுருபுகள் இணைக்கும்போது, அதற்கு 'க:' பதிலியாகும். க:, கௌ, கே

**7.2.104** கு திஹோ:

'கிம்' உக்குப்பின், 'த்' அல்லது 'ஹ்' என்ற எழுத்தில் தொடங்கும் வேற்றுமையுருபுகள் வரும்போது அதற்கு 'கு' பதிலியாக வரும்.

1) கிம் + தஸில் (5.2.7) = குத: (8.3.15) எங்கிருந்து; கிம் + த்ரல் (5.3.13) = குத்ர 'எங்கே?

2) கிம் + ஹ = குஹ (5.3.13) 'எங்கே?'

**7.2.105** க்வாதி

'அத்' (5.3.12)துக்குமுன் நிற்கும் 'கிம்' உக்கு 'க்வ' பதிலியாக வரும்.
கிம் + அத் = க்வ + அத் = க்வ (6.1.97) 'எங்கே?'

**7.2.106** ததே$^{3}$ா: ஸ: ஸாவனந்த்யயோ:

'ஸு'வுக்கு முன் நிற்கும் 'த்யத$^{3}$ாதி' வகுப்பைச் சேர்ந்த சொற்களினிறுதியில் நிற்காத 'த்' அல்லது 'த்$^{3}$'துக்குப் பதிலியாக 'ஸ:' வரும்.
த்யத்$^{3}$ + ஸு = ஸ்ய:; தத்$^{3}$ – ஸ:, ஏதத்$^{3}$ – ஏஷ:; அத$^{3}$ஸ் – அஸௌ.

**7.2.107** அத$^{3}$ஸ ஔ ஸுலோபஸ்$^{1}$ ச

'அத$^{3}$ஸ்' உக்குப்பின் 'ஸு' வரும்போது, அதனீறான 'ஸ்' உக்கு 'ஔ' பதிலியாக வரும். முதல் வேற்றுமையொருமையுருபான 'ஸு' கெடும்.
அத$^{3}$ஸ் + ஸு = அத + ஔ + ஸு (7.2.107) = அஸ + ஔ (7.2.106) ϑ = அஸௌ.

வா: ஔத்வ ப்ரதிஷேத$^{4}$: ஸாகச்காத்$^{3}$வா வக்தவ்ய: ஸாது$^{3}$த்வம் ச
'அகச்' என்ற ஆகமம் வரும்போது 'ஔ' பதிலியாவது விருப்பாகும். அவ்வாறான நிலையில் 'ஸ்' உக்குப்பின் 'உ' வரும். அஸுக:, அஸகௌ

வா: உத்தர பத$^{3}$பூ$^{4}$தானாம் த்யத$^{3}$ாதீ$^{3}$னாம் அக்ருத ஸந்தீ$^{4}$னாமாதே$^{3}$ஸா வக்தவ்யா:
'த்யத$^{3}$ாதி$^{3}$' வகுப்பைச் சேர்ந்த சொற்கள் ஒரு தொகையினிரண்டாவது உறுப்பினராக நிற்கும்போது மேலே குறிப்பிட்ட பதிலிகள், புணர்ச்சி விதிகளைப் பயன்படுத்துவதற்கு முன்பே ஏற்படும்.
பரமாஹம், பரமாயம், பரமானேன

**7.2.108** இதமோ ம:
'இத$^{3}$ம்' உக்குப்பின் 'ஸு' வரும்போது அதனிறுதியெழுத்துக்கு 'ம்' பதிலியாக வரும்.

**7.2.102** இல் விதிக்கப்பட்ட 'அ' பதிலியாவதைத் தடைசெய்ய இந்த விதி:
இயம், அயம்

**7.2.109** த$^{3}$ஸ்' ச
'இத$^{3}$ம்' உக்குப்பின் வேற்றுமையுருபு வரும்போது 'த்' உக்கும் 'ம்' பதிலியாக வரும்.
இத$^{3}$ம் + ஔ = இமௌ (102) 108, 6.1.97) இமே, இமாம், இமான்

**7.2.110** ய: ஸௌ
'ஸு'வுக்கு முன் நிற்கும் 'இதம்' இன் 'த்$^{3}$' உக்கு 'ய்' பதிலியாகும். 'இ யம்' அடுத்த சூத்திரத்தில் பும்ஸி ஆண்பாலில் என்று குறிப்பாக விதிக்கப் பட்டுள்ளதால், இது பெண்பாலில் மட்டுந்தான் என்று உணர்த்துகிறது.

**7.2.111** இதே$^{3}$ா அய் பும்ஸி
'ஸு' வுக்கு முன் நிற்கும் 'இத$^{3}$ம்' என்ற சொல்லின் 'இத்' உக்குப் பதிலியாக 'அய்' ஆண்பாலில் வரும்.
இத$^{3}$ம் + ஸு = அய்–அ–ம் + 0 (6.1.68) = அயம்

**7.2.112** அநாப்யக:
'இத$^{3}$ம்' என்ற மாற்றுப் பெயருக்குப்பின் 'ஆப்' என்ற பிரத்தியாஹாரத்தினால் சுட்டப்படும் வேற்றுமையுருபுகள் (அதாவது 3 ஆம் வேற்றுமையொருமையிலிருந்து 7 ஆம் வேற்றுமைப்பன்மை வரையில்) வரும்போது 'இத்' துக்குப் பதிலியாக 'அன' வரும். 'அகச்' ஆகமம் இதோடு இணைக்கப்படும் போது அவ்வாறாகாது.
அனேன, அனயோ: ஆனால் இமகேன, இமகயோ:

**7.2.113** ஹலி லோப:
ஒரு மெய்யெழுத்தில் தொடங்கும் வேற்றுமையுருபுகளுக்கு முன் நிற்கும் 'இத$^{3}$ம்' மின் 'இத்$^{3}$' கெடும்.
ஆப்$^{4}$யாம், ஏபி$^{4}$:; ஏப்$^{4}$ய:, ஏஷாம் ஏஷு

**7.2.114** ம்ருஜோர் வ்ருத்$^{3}$தி$^{4}$:
ம்ருஜ் 'அலம்பு' என்ற தாதுவுக்குப்பின் ஒட்டிணைக்கும்போது அதன் உயிருக்கு விருத்தி பதிலியாக வரும்.

மார்ஷ்டா, மார்ஷ்டும், மார்ஷ்டவ்யம் 7.3.84இல் விதிக்கப்பட்ட 'குணம்' வருவதை இது தடுக்கிறது.

**7.2.115** அசோ ஞ்ணிதி

'ஞ்' அல்லது 'ண்'ஐ 'இத்'தாகக் கொண்ட வொட்டுக்களுக்கு முன் நிற்கும் அடிச்சொல்லினிறுதியுயிருக்கு விருத்தி பதிலியாக வரும்.

நிஸ்சாய: (க$^{4}$ஞ்); நிஷ்பாவ (க$^{4}$ஞ்) கார:, ஹார: (க$^{4}$ஞ்)

விதி–கெ$^{3}$ள: க$^{3}$ாவெள, க$^{3}$ாவ:;

ஸக$^{2}$ாயெள, ஸக$^{2}$ாய:

**7.2.116** அத உபத$^{4}$ாயா:

'ஞ்' அல்லது 'ண்'ஐ 'இத்'தாகக் கொண்ட ஒரொட்டுக்கு முன் நிற்கும் அடிச்சொல்லின் ஈற்றயலான 'அ'வுக்கு அதன் விருத்தி பதிலியாக வரும்.

பச் – பாக: (க$^{4}$ஞ்), த்யாக$^{3}$:, யாக$^{3}$:,

பாசயதி(ணிச்), பாசக: (ண்வுல)

**7.2.117** தத்$^{3}$தி$^{4}$தேஷு அசாமாதே$^{3}$:

'ஞ்' அல்லது 'ண்' ஐ 'இத்'தாகக் கொண்ட தத்தித வொட்டுக்கு முன் நிற்கும் அடிச்சொல்லின் முதலுயிருக்குப் பதிலியாக 'விருத்தி' வரும்.

க$^{3}$ார்க்$^{3}$ய: (க$^{4}$ஞ்), ஔபக$^{3}$வ: (அண்)

**7.2.118** கிதி ச

'க்' ஐ 'இத்' தாகக் கொண்ட தத்திதவொட்டுக்களுக்கு முன் நிற்கும் அடிச்சொற்களின் முதலுயிருக்கு விருத்தி பதிலியாகும்.

நாட$^{3}$யான: (ப2க்) சாராயண:

**7.3.1** தே$^{3}$விகா ஸி$^{1}$ம்ஸபா தி$^{3}$த்யவாட்$^{3}$தீர்க$^{4}$ஸத்ர ஸ்$^{1}$ரேயஸாமாத் 'ங்', 'ண்', 'க்' ஐ இத்தாக உடைய தத்தித வொட்டுக்களுக்கு முன் நிற்கும் தே$^{3}$விகா 'ஒரு நதியின் பெயர்', ஸி$^{1}$ம்ஸபா 'ஒரு மரத்தின் பெயர்', தி$^{3}$த்யவாஹ் "இரண்டு வயதான ஒரு விலங்கு", தீ$^{3}$ர்க$^{4}$ஸத்ர 'பல நாட்களாக நடைபெறும் ஸத்ரமெனப்படும் யாகம்', ஸ்$^{1}$ரேயஸ் "மற்றதை விடச் சிறந்தது" ஆகியவைகளின் முதல் உயிருக்குப் பதிலியாக 'ஆத்' (ஆ) வரும்.

"த$^{3}$ாவிகமுத$^{3}$கம்" தேவிகா என்ற நதியின் தண்ணீர், ஸ$^{1}$ாம்ஸ$^{1}$ப: சமஸ: 'ஸிம்ஸபா என்று மரத்தினால் செய்த கரண்டி'; த$^{3}$ாத்யௌஹம் 'தித்யவாஹ் தொடர்பான' த$^{3}$ார்க$^{4}$ஸத்ரம் "தீர்கஸத்ரத்தில் நடக்கிற"; ஸ்$^{1}$ராயஸம்.

வா: வஹீனரஸ்ய இத்$^{3}$வசனம்

'வஹீனர' என்ற சொல்லின் முதலுயிர் இச்சூழலில் 'இ' வரும். வைஹீனரி:

**7.3.2** கேகய மித்ரயு ப்ரலயானாம் யாதேரிய:
மேற்சூத்திரத்தில் கூறப்பட்ட தத்தித வொட்டுக்களுக்கு முன் நிற்கும் கேகய, 'பெயர்', மித்ரயு 'நட்பான', ப்ரலய ஆகியவைகளின் 'ய்'இலிருந்து தொடங்கும் அசைக்குப் பதிலியாக 'இய்' வரும்.

1) கைகேய, (4.1.168; 2.117; 6.1.87); (2) மைத்ரேயக (5.1.134; 1.1. ; (3) ப்ராலேயமுத³கம் (4.3.74; 2.117; 6.1.87):

**7.3.3** ந ய்வாப்⁴யாம் பத³ாந்தாப்⁴யாம் பூர்வெள து தாப்⁴யாமைச் 'ங்', 'ண்', 'க்' ஐ 'இத்'தாகக் கொண்ட தத்திதவொட்டுக்களுக்கு முன் நிற்கும், 'யீ' அல்லது 'வ்' ஆகியவைகளை யீறாகக் கொண்ட சொல்லைத் தொடர்ந்து நிற்கும் இரண்டாவது உறுப்பினரின் முதல் உயிருக்கு 'விருத்தி' பதிலியாக வராது. ஆனால் அவைகளுக்கு முன் (தாப்⁴யாம் பூர்வெள) ஐச் (ஐ, ஔ முறையே) பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த உயிர் இணைக்கப்படும். வி + ஆ + க்ரு + ல்யுட் (3.3.117) = வ்யாகரணம் (8.4.2) வ்யாகரண + அண் (4.2.109) =

வையாகரண (6.4.48) ஸௌவாஸ்1ல: (ஸ்வஸ்வ + அண்)

**7.3.4** த்³வாராதீ3னாம் ச
த்³வார 'கதவு' முதலிய சொற்களுக்குப்பின் மேற்கூறிய தத்தித வொட்டுக்கள் நிற்கும்போதும், அவைகளுடைய முதல் உயிருக்குப் பதிலியாக விருத்தி உயிர் வராது.
தௌ³வாரக: (த்³வார + ட²க் (4.4.69), 8.4.148; 7.3.50);

வா: அவ்யயானாம் ப⁴மாத்ரே டிலோப:
அவ்யயத்தின் மெய்யோடு கூடிய இறுதியுயிர் (டி) கெடும். ஸௌவர்க³ாமிக: (ஸ்வர்க³மனமாஹ)

**7.3.5** ந்யக்³ரோத⁴ஸ்ய ச கேவலஸ்ய
'ங்', 'ண்', 'க்', ஐ 'இத்'தாகக் கொண்ட தத்தித வொட்டுக்களுக்கு முன், ந்யக்³ரோத⁴ 'ஆலமரம்' என்ற சொல் தனியாக நிற்கும்போது அதாவது (ஒரு தொகையினுறுப்பினராகாமல்) (கேவலஸ்ய) அதன் 'ய்' க்குப் பதிலியாக வ்ருத்தி உயிர் வராமல் 'ஐ' வரும்.
நையக்³ரோத⁴: சமஸ: (6.4.148) ஆனால் ந்யக்³ரோத⁴ மூலே ப⁴வா: ஸ¹ாலய: ந்யாக்³ரோத⁴மூலா (4.3.53) ஸ1ாலய 'ஆலமரத்தின் வேரில் விளையும் அரிசி'

**7.3.6** ந கர்ம வ்யதிஹரே
பெயர்ச்சொல் 'செயல்பரிமாற்றம்' என்ற பொருளைச் சுட்டும் போது (கர்மவ்யதிஹரே) 7.3.3 விதிக்கப்பட்டது செயற்படாது.

வ்பாவக்ரோஸி1 "ஒருவரையொருவர் திட்டிக் கொள்தல்' வ்யாவஹாஸீ

**7.3.7** ஸ்வாக3தாதீ3னாம் ச

'ஸ்வாக3த' முதலியவைகளிலும் 7.3.3 விதி செயற்படாது. ஸ்வாக3திக: (4.4.1) 'வரவேற்பவளிப்பவன்'

வ்யாடி3: (< வ்யட்) (4.1.95)

**7.3.8** ஸ்1வாதே3ரிஞி

'ஸ்1வன்' என்ற சொல்லை முதலுறுப்பினராகக் கொண்டே தொகையைத் தொடர்ந்து 'இஞி' ஒட்டு நிற்கும்போதும் 7.3.3 விதி செயற்படாது.

ஸ்1வாப4ஸ்த்ரி (ஸ்1வப4ஸ்த்ர + இங் 4.1.95) 'ஸ்வன்' என்ற சொல் 'த்3வாராதி' வகுப்பைச் சேர்ந்தது 7.3.4 இச்சொற்கள் தனியாக நின்றாலும் ஒரு தொகையின் உறுப்பினராக நின்றாலும் 7.3.4 செயற்படுமென்பதை இச்சூத்திரம் சுட்டுகிறது.

வா: இகாராதி3 க்3ரஹணம் கர்தவ்யம் ஸ்1வாக3ணிகாத்3யர்த

'இ'ணை முதலாகக் கொண்ட எந்தவொரு தத்தித ஒட்டுத் தொடரும்போதும்

இந்த விதி செயற்படும்.

ஸ்1வாக3ணிக (4.1.11) 'நாய்க் கூட்டத்தோடு செல்பவன்'

ஸ்1வாயதி2க:

**7.3.9** பத3ாந்தஸ்ய அன்யதரஸ்யாம்

'ஸ்1வன்' முதலியவைகள் 'பத3' என்ற சொல்லுக்கு முன் நிற்கும்போது (பத3ாந்தஸ்ய) 7.3.3 விதி பலவகையில் (அன்யதரஸ்யாம்) செயற்படாது.

ஸ்1வாபத3ம், ஸௌவாபத3ம் 'காட்டு விலங்குகள் தொடர்பாக'

**7.3.10** உத்தரபத3ஸ்ய

ஒரு தொகையினிரண்டாவது உறுப்பினரின் (உத்தர பத3ஸ்ய) முதலுயிருக்குப் பதிலியாக 'வ்ருத்தி' வரும்.

இது ஒரு அதிகார சூத்திரம் 7.3.22 வரை இது தொடரும்.

**7.3.11** அவ்யயாத்3ருதோ:

பருவத்தைச் சுட்டும் சொல் இரண்டாவது உறுப்பினராகவும் அதன் ஒரு பகுதியைச் சுட்டும் சொல் இரண்டாவது உறுப்பினராகவும் அமையும் ஒரு தொகையைத் தொடர்ந்து 'ஞ்', 'ண்', 'க்' ஆகியவைகள் 'இத்'தாகக் கொண்ட ஒரு தத்தித வொட்டு வரும்போது அத்தொகையின் இரண்டாவது உறுப்பினரின் முதலுயிருக்குப்பதிலியாக 'வ்ருத்தி' உயிர் வரும்.

பூர்வ வார்ஷிக (6.4.148) 'மழை காலத்துக்கு முன் பகுதியில் நடைபெறும்'

(பூர்வம் வர்ஷானாம் பூர்வவர்ஷா: தத்ர ப[4]வா:)
ஆனால் பௌர்வ வார்ஷிக: (பூர்வாஸு வர்ஷாஸு ப[4]வம்)

**7.3.12** ஸுஸர்வார்த[4]ாஜ் ஜனபத[3]ஸ்ய
ஸு, ஸர்வ, அர்த[4] என்ற சொற்களைத் தொடர்ந்து ஒரு நாட்டின் பெயர் நின்று, அத்தொகைக்குப்பின் மேலே கூறிய தத்திதவொட்டு வரும்போது அத்தொகையினிரண்டாவது உறுப்பினரின் முதலுயிருக்குப்பதிலியாக 'வ்ருத்தி' உயிர் வரும்.
ஸுபாஞ்சாலக: (ஸோ'ப[4]னேஷு பஞ்சாலேஷு ஜாத:)
ஸர்வ பாஞ்சாலக:, அர்த[4]பாஞ்சாலக:

**7.3.13** தி[3]ஸோ'அமத்[3]ராணாம்
'மத்ர' என்ற சொல்லைத் தவிர்த்து மற்ற, நாட்டில் பெயரைச் சுட்டும் சொற்கள் இரண்டாவது உறுப்பினராகவும், திசையைச் சுட்டும் சொல் முதலுறுப்பினராகவும் அமைந்த ஒரு தொகையின் பின் ஞ், ண், க் ஆகியவைகளை 'இத்'தாகக் கொண்ட ஒரு தத்திதவொட்டு நின்றால், அத்தொகையின் இரண்டாவது உறுப்பினரின் முதல் உயிர், விருத்தி உயிராகும்.
பூர்வ பாஞ்சாலக: த[3]க்ஷிணபாஞ்சாலக: 4.2.125; 107, 108; 6.2.103 சுரம்)
ஆனால் பூர்வ: பஞ்சாலானாம பூர்வபஞ்சால: (திசையைக் குறிக்கும் சொல்லுடன் அல்ல);
பௌர்வமத்[3]ர; ஆபரமத்[3]ர: (4.2.108 'அஞ்' உடன்) தொடர்ந்து வரும் சூத்திரங்களுக்காக இச்சூத்திரம் முதல் சூத்திரத்திலிருந்துத் தனியாகப் பிரித்து அமைக்கப்பட்டிருக்கிறது.

**7.3.14** ப்ராசாம் க்[3]ராமநகராணாம்
கீழ்த்திசையில் அமையும் ஒரு கிராமத்தின் பெயர் அல்லது நகரத்தின் பெயர் ஆகியவைகள் இரண்டாவது உறுப்பினராகவும், திசையைக் குறிக்கும் சொல் முதலுறுப்பினராகவும் அமையும் ஒரு தொகையின் பின் 'ஞ்', 'ண்', 'க்' ஆகியவைகளை 'இத்'தாகக் கொண்ட தத்திதவொட்டுத் தொடரும்போது, அத்தொகையினிரண்டாவது உறுப்பினரின் முதல் உயிருக்கு விருத்தியுயிர் பதிலியாக வரும்.
பூர்வைஷு காமஸ'ம; பூர்வ கார்ஷ்ணம்ருத்திக: (4.2.107) கிராமங்களில் பெயர்கள்
பூர்வ பாடலிபுத்ரக:, பூர்வகான்யகுப்ஜக:

**7.3.15** ஸங்க்[2]யாயா: ஸம்வத்ஸரஸங்க்[2]யஸ்ய ச
எண்ணுப்பெயருக்குப்பின் (ஸங்க்[2]யாயா:) ஸம்வத்ஸர 'ஆண்டு' அல்லது எண்ணுப் பெயர் நிற்கும் தொகைக்குப்பின் 'ஞ்', 'ண்', 'க்' ஆகியவைகள் 'இத்'தாகக் கொண்ட தத்திதவொட்டு வரும்போது இரண்டாவது

உறுப்பினரின் முதலுயிருக்கு விருத்தி உயிர் பதிலியாகும். த்[3]வி ஸாம்வத்ஸரிக: (5.1.80) இரண்டு ஆண்டு காலம் நடக்கும் த்[3]விஷாஷடிக; '62' நாட்கள் நடைபெறும்'' ஆனால் த்[3]வை மாஸிக:,

**7.3.16** வர்ஷஸ்ய அப[4]விஷ்யதி

எதிர்காலத்தில் நடக்கவிருக்கும் ஒரு நிகழ்ச்சியைக் குறிக்காத (அப[4]விஷ்யதி), 'ஞ்', 'ண்', 'க்' ஆகியவைகளை 'இத்'தாகக் கொண்ட ஒரு தத்தித வொட்டுக்குமுன் நிற்கும், எண்ணுப் பெயரை முதலுறுப்பினராகவும் 'வர்ஷ' என்ற சொல்லை இரண்டாவது உறுப்பினராகவும் கொண்ட தொகையின் 'வ' என்ற சொல்லின் முதலுயிருக்கு விருத்தி பதிலியாக வரும். த்[3]வி வார்ஷிக 'இரண்டு ஆண்டு காலம் நடைபெறும்' ஆனால் த்[3]ரைவர்ஷிக: 'இன்றிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குப் பின் நடக்கவிருக்கும்'

**7.3.17** பரிமாணாந்தஸ்யாஸம்க்[3]ஞா ஸ'ாணயோ:

'ஞ்', 'ண்', 'க்' ஆகியவைகளை 'இத்'தாகக் கொண்ட தத்திதவொட்டுக்களுக்கு முன் நிற்கும் தொகையின், முதலுறுப்பினர் எண்ணுப் பெயராகவும், இரண்டாவது உறுப்பினர் 'ஸாண' என்ற சொல்லைத் தவிர்த்து மற்ற அளவையைக் குறிக்கும் சொல்லாக அமைந்து, ஆக்கப்பட்ட சொல் ஒரு பெயரைக் குறிக்காவிட்டால், அத்தொகையினிரண்டாவது உறுப்பினரின் முதலுயிருக்குப் பதிலியாக 'விருத்தி' யுயிர் வரும்.

த்[3]விநைஷிகம் (த்[3]வி + நிஷ்க) ''இரண்டு நிஷ்கங்களுக்கு வாங்கியது (5.1.30) த்[3]விகௌட[3]விகம் (5.1.109) ஆனால் பாஞ்சலோஹிகம் (பெயர்) த்[3]வைஸ'ாணம்

**7.3.18** ஜே ப்ரோஷ்ட[2] பத[3]ானாம்

'ஞ்', 'ண்', 'க்' ஆகியவைகளை 'இத்'தாகக் கொண்ட 'அந்த நேரத்தில் பிறந்த' என்ற பொருளைச் சுட்டும் (ஜே) தத்தித வொட்டுக்களுக்குமுன் நிற்கும் ப்ரோஷ்டபத[3] ''ஒரு நட்சத்திரத்தின் பெயர்'' என்பவைகளின் இரண்டாவது உறுப்பினரின் முதலுயிருக்குப் பதிலியாக விருத்தியுயிர் வரும்.

ப்ரோஷ்ட[2]பாத[3] ''ப்ரோஷ்டபத என்ற நட்சத்திரத்தின் பிறந்த''

**7.3.19** ஹ்ருத்[3] ப[4]க[3] ஸிந்த்[4]வந்தே பூர்வ பதஸ்ய ச

'ஞ்', 'ண்', 'க்' ஆகியவைகள் 'இத்'தாகக் கொண்ட தத்தித வொட்டுக்களுக்கு முன் நிற்கும், ஹ்ருத், ப[4]க[3], ஸிந்து[4] என்ற சொற்களிறுதியுறுப்பினராக அமையும் தொகையின் இரண்டு உறுப்பினர்களின் முதலுயிர்களுக்கும் பதிலியாக விருத்தியுயிர் வரும்.

ஸௌஹாத்[3]ம் (ஸு + ய்ருத்[3]) (6.3.50; 4.3.120) 'நல்ல மனிதனுடைய'; ஸௌஹார்த்[3]யம் '(ஸு + ப[4]ாக[3]); ''நல்ல அதிர்ஷ்டம்'' ஸாக்து ஸைந்த[4]வ: (ஸக்து + ஸிந்து[4])

**7.3.20** அனுஸ1தி1காதீ3னாம் ச

'அனுஸ1ாதிக' முதலிய தொகைகளின் இரண்டு உறுப்பினர்களுடையும் முதலுயிருக்குப் பதிலியாக மேலே கூறப்பட்ட தத்திதவொட்டு தொடரும்போது விருத்தியுயிர் வரும்.

அனுஸ1ாதிக, ஆதி4தை3விகம்; ஆதி4பெ4ளதி3க ஆனுஹெளடி3க

**7.3.21** தே3வதாத்3வந்த்3வே

இரு தேவதைகளின் பெயர்களாலாக்கப்பட்ட தொகையின் பின்னால் மேலே கூறப்பட்ட தத்திதவொட்டு நிற்கும்போது அவ்விரண்டு உறுப்பினர்களின் முதலுயிர்களுக்குப் பதிலியாகவும் விருத்தியுயிர் வரும்.

ஆக்3னி மாருத 'அக்னி, மருத் ஆகிய தேவதைகளுக்குரிய' இது வேத மந்திரங்களிலோ, அல்லது அவைகளின் கூறப்படும் 'ஹவிஸ' போன்ற யாகத்தில் அளிக்கப்படும் பொருட்கள் ஆகியவைகளில் மட்டும் பயன்படுத்தக்கூடியது.

**7.3.22** ந இந்த்3ரஸ்ய பரஸ்ய

மேலே கூறப்பட்ட தத்தித ஒட்டுக்களுக்கு முன் நிற்கும் ஒரு தொகையின் இறுதியுறுப்பினராக 'இந்த்ர' என்ற சொல் அமையும்போது அதன் முதலுயிருக்குப் பதிலியாக விருத்தியுயிர் வராது.

ஸெனமேந்த்3ர (ஸோம + இந்த3ர)

**7.3.23** தீ3ர்க4ாச்ச வருணஸ்ய

முதலுறுப்பினரினிறுதியுயிர் நெடிலாக அமைந்து இரண்டாவது உறுப்பினர் 'வருண' என்ற சொல்லாக அமைந்தால், அத்தொகையைத் தொடர்ந்து மேலே கூறப்பட்ட தத்திதவொட்டு வரும்போது, 'வருண' என்ற சொல்லின் முதலுயிருக்கு விருத்தியுயிர் பதிலியாக வராது.

ஐந்த்3ராவருணம், (இந்த்ர + வருண); மைத்ராவருணம் (மித்ர + வருண)

**7.3.24** ப்ராசாம் நக3ராந்தே

'நகர' என்ற சொல் இரண்டாவது உறுப்பினராக அமையும் கீழ்த்திசை மக்களின் ஒரு நகரத்தைக் குறிக்கும் ஒரு தொகைக்கு பின் மேலே கூறப்பட்ட தத்தித ஒட்டு வரும்போது இவ்விரு உருப்பினர்களின் முதலுயிர்களுக்கும் பதிலியாக விருத்தி உயிர் வரும்.

ஸாஹ்மாநாக3ர: (ஸுஹ்ம + நக3ர)

பௌண்ட்3ரநாக3ர: (புண்ட்3ர + நகர)

**7.3.25** ஜங்க2ல தே4னு வலஜாந்தஸ்ய விப4ாஷிதமுத்தரம்

'ஞ்', 'ண்', 'க்' ஆகியவைகளை 'இத்'தாகக் கொண்ட

ப்ரவாஹண என்ற சொல்லோடு 'ட⁴' ஒட்டிணைக்கப்பட்டு ஆக்கப்பட்ட தத்திதவொட்டுக்களுக்குமுன் நிற்கும், ஜங்க²ல 'காடு', தே⁴னு 'பசு' வலஜ 'வயல்' ஆகியவைகளையிறுதியுப்பினராகக் கொண்ட தொகையின் இரண்டாவது உறுப்பினரின் முதலுயிருக்குப்பதிலியாக 'விருத்தி' விருப்பாக வரும்.

1) கௌரு ஜாங்க²லம்/கௌரு ஜங்கலம் (குரு + ஜாங்கல)
2) வைஸ்¹வதே⁴னவ அல்லது வைஸ்¹வ தை⁴னவ
3) ஸௌவர்ண வாலஜ அல்லது ஸௌவர்ண வலஜ

**7.3.26** அர்த⁴ாத் பரிமாணஸ்ய பூர்வஸ்ய து வா

'ஞ்', 'ண்', 'க்' ஆகியவைகளை 'இத்'தாக்க் கொண்ட தத்திதவொட்டுக்களுக்கு முன் நிற்கும் ஒரு தொகையின் இரண்டாவது உறுப்பினர் ஓரளவையைக் குறிக்கும் சொல்லாகவும், அதன் முதலுறுப்பினர் 'அர்த⁴' (அரை) என்ற சொல்லாகவும் அமையும்போது, இரண்டாவது உறுப்பினரின் முதலுயிருக்குப் பதிலியாக விருத்தியும் வரும். 'அர்த²' என்ற சொல்லின் முதலுயிருக்கு, விருப்பாக விருத்தியுயிர் பதிலியாகும்.

ஆர்த⁴த்³ரௌணிகம் அல்லது அர்த⁴த்³ரௌணிகம் (5.1.18; 37) "அரைதுரோணத்துக்கு/வாங்கியது" ஆர்த⁴க்ரௌட³விகம் அல்லது அர்த⁴க்ரௌட³விகம் ஆனால் ஆர்த⁴க்ரோஸிகம்

**7.3.27** நாத: பரஸ்ய

'ஞ்', 'ண்', 'க்' ஆகியவைகளை 'இத்'தாகக் கொண்ட தத்திதவொட்டுக்களுக்கு முன் நிற்கும் 'அர்த⁴' என்ற சொல்லை முதலுறுப்பினராகவும், இரண்டாவது உறுப்பினராக அமையும் அளவை குறிக்கும் சொல்லின் முதலுயிர் 'அ' என்ற உயிராகவும் ஆனால் இந்த 'அ'வுக்கு 'விருத்தி' பதிலியாக வராது. 'அர்த³'வுக்குப் பதிலியாக, விருப்பாக விருத்தி வரும்.

அர்த⁴ப்ரஸ்தி²க: அல்லது ஆர்த²ப்ரஸ்தி²க: அரை 'ப்ரஸ்த'வுக்கு வாங்கியது ஆனால் ஆர்த⁴கௌடி³கம்; அர்த⁴க²ாரீ (இரண்டாவது உறுப்பினரின் முதலுயிர் 'ஆ')

**7.3.28** ப்ரவாஹணஸ்ய டே⁴

'ப்ரவாஹண' என்ற சொல்லின் பின்னால் 'ட⁴' ஒட்டு வரும்போது அதன் இரண்டாவது உறுப்பினரின் முதலுயிருக்குப் பதிலியாக விருத்தி வரும். ஆனால் அதன் முதலுறுப்பினரின் (அதாவது 'ப்ர') முதலுயிருக்குப்பதிலியாக விருப்பாக விருத்தி வரும். ப்ராவாஹ ணேய: அல்லது ப்ரவாஹணேய: 'ப்ரவாஹணன் என்பவனின் வழித்தோன்றல்'

**7.3.29** தத்ப்ரத்யயஸய ச

சொல்லுக்குப்பின் 'ஞ்', 'ண்', 'க்' ஆகியவைகளை 'இத்'தாகக் கொண்ட தத்திதவொட்டு இணைக்கப்படும் போது அச்சொல்லினிரண்டாவது உறுப்பினரின் முதலுயிருக்கு விருத்தி பதிலியாகும். அதன் முதலுறுப்பினரின் முதலுயிருக்கு விருத்தி விருப்பாக வரும்.

ப்ராவாஹணேயி: அல்லது ப்வாராஹணேயி:; ப்ராவாஹணேயகம் அல்லது ப்ராவாயணேயகம்

**7.3.30** நஞ: ஸுசீஸ்'வர க்ஷேத்ரக்³ஞ குஸ'ல நிபுணானாம்

எதிர்மறையொட்டான 'நஞ்'க்குப் பின்னால் வரும் ஸுசி 'புனிதமா' ஈஸ்வர 'எஜமானன், அரசன்', க்ஷேத்ரக்³ஞ 'ஆத்மா', குஸ'ல 'திறமை வாய்ந்த' நிபுண 'சாமார்த்தியமுள்ள' ஆகியவைகளின் பின்னால் 'ஞ்' 'ண்', 'க்ஐ 'இத்'தாகக் கொண்ட தத்திதவொட்டுத் தொடரும்போது, இச்சொற்களின் முதலுயிருக்குப் பதிலியாக விருத்தி வரும். முதலுறுப்பினரான 'நஞ்'இன் உயிருக்கு விருப்பாக விருத்தி பதிலியாகும்.

1) ஆஸெ'ளசம், அஸெ'ளசம்
2) ஆனைஸ்'வர்யம், அநைஸ்'வர்யம்
3) ஆக்ஷைத்ரக்³ஞ்யம், அக்ஷைத்ரக்³ஞ்யம்
4) ஆகௌஸ'லம், அகௌஸ'லம்
5) ஆநைபுணம், அநைபுணம்

**7.3.31** யத²ா தத² யத²ாபுரயோ: பர்யாயேண

'ஞ்', 'ண்', 'க்' ஆகியவைகளை 'இத்'தாகக் கொண்ட தத்திதவொட்டுக்களுக்கு முன், 'நஞ்' ஒடு கூடிய தயதாதத²ம் 'உண்மையாக', யத²ாபுரம் 'முன்பு இருந்தது போல்' என்ற தொகை நிற்கும்போது முதலுறுப்பினரின் முதலுயிர் அல்லது இரண்டாவது உறுப்பினரின் முதலுயிர் ஆகியவைகளுக்குப் பதிலியாக விருத்த மாறி மாறி வரும்.

அதாவது 'நஞ்' விருத்தியாகும்போது, இச்சொற்களின் முதலுயிர் விருத்தியாகாது, இச்சொற்களினுயிர் விருத்தியடையும்போது 'நஞ்' விருத்தியாகாது.

ஆயத²ா தத்²யம் அல்லது அயாத²ா தத்²யம்

ஆயத²ா புர்யம் அல்லது அயாத²ாபுர்யம்

**7.3.32** ஹனஸ்தோ அசிண்ணலோ:

'சின்', 'ணல்' ஒட்டுக்களைத் தவிர்த்த மற்ற 'ஞ்' 'ண்' ஆகியவைகளை 'இத்'. தாகக் கொண்ட வொட்டுக்களுக்கு முன்னால் நிற்கும் ஹன் 'கொல்', அடி , 'காயப்படுத்து' என்ற தாதுவின் இறுதி 'ன்' உக்கு 'த' பதிலியாகும். 'தத்தித', 'கித்' ஆகியவைகள் இச்சூத்திரத்திலிருந்து அடுத்து வரும் சூத்திரங்களில் தொடராகு 'ஞித், ணித்' தொடரும்.

க$^{4}$ாத: (க$^{4}$ஞ்), க$^{4}$ாதயதி (ணிச்): க$^{4}$ாதக (ண்வுல்) ஆனால் அக$^{4}$ானி (சின், ஜக$^{4}$ான (ணல்)
இச்சூத்திரம் தாது தொடர்பானது ஆகையால் தாதுக்களோடு வரும் ஒட்டுக்களைத்தான் இங்கு குறிக்கிறது. ஆகவே வ்ருத்ரஹன் → வார்தக்$^{4}$ன:

**7.3.33** ஆதோ யுக்சின்க்ருதோ:
'சின்' அல்லது 'ஞ்' 'ன்'ஐ 'இத்'தாகக் கொண்ட 'க்ருத்' ஒட்டுக்களுக்கு முன்னால் நிற்கும் ஆத் (ஆ) வீற்று வினையடியின் ஈற்றுக்குப்பின் 'யுக்' இணைக்கப்படும்.
1. த$^{3}$ா + சின் = அ + த$^{3}$ா + யுக் + இ = அத$^{3}$ாயி
2. த$^{3}$ா + ண்வுல் = த3ாயக 'கொடையாளி'
த$^{3}$ா + க$^{4}$ஞ் = த$^{3}$ாய 'கொடை, தானம்'

**7.3.34** நோ த$^{3}$ாத்தோப தே$^{3}$ஸ$^{1}$ஸ்ய மாந்தஸ்யானாசமே:
'சின்' அல்லது 'ஞ்', 'ண்' ஆகியவைகளை 'இத்' தாகக் கொண்ட 'க்ருத்' ஒட்டுக்களுக்கு முன்னால் நிற்கும் 'ஆ + சம்' என்ற வினையைத் தவிர்த்து மற்ற 'ம்' இல் முடியும், உதாத்த சுரம் கொண்டதாகவும் தாதுபாடத்தில் கூறப்பட்ட வினையடியின் ஈற்றயலுக்கு விருத்தி பதிலியாக வராது.
1. ஸம் + சின் = அஸ$^{1}$மி 'அமைதியடைந்துவிட்டான்'
2. தம் + சின் = அதமி 'களைப்படைந்துவிட்டான்'
ஸ$^{1}$மக (ண்வுல்) : ஸ$^{1}$ம (க$^{4}$ஞ்) ஆனால் யாமக:,
த$^{3}$மக: (யம், த$^{3}$ம் உதாத்த சுரம் கொண்டவையல்ல)

வா: அநாசமிகமிதி வக்தவ்யம் 'ஆசம்' போல், 'கம்', 'வம்' ஆகிய வைகளுக்கும் தடை கூற வேண்டும். வாம:, காம:, ஆசாம:

**7.3.35** ஜனிவத்$^{4}$யோஸ்$^{1}$ ச
'சின்' அல்லது 'ஞ்' 'ண்' ஆகியவைகளை 'இத்'தாகக் கொண்ட 'க்ருத்' ஒட்டுக்களுக்கு முன்னால் நிற்கும். ஜன், வத்$^{4}$ ஆகியவைகளின் ஈற்றயலுக்குப் பதிலியாகவும் விருத்தி வராது.
1. அஜனி (சின், ஜனக: (ண்வுல்), ப்ரஜன (க$^{4}$ஞ்)
2. அவதி$^{4}$ (சின்) : வத$^{4}$க 'கொலைகாரன்' (ண்வுல்) வத$^{4}$ (க$^{4}$ஞ்) 'கொலை, சாவு'
இது 'ஹன்'உக்குப் பதிலியாக வரும் 'வத$^{4}$' அல்ல. இது 'வத$^{4}$' என்ற வேறு ஒரு வினையைச் சுட்டும், 'ஹன்' இலிருந்து 'க$^{4}$ாதக' என்ற வடிவம் கிடைக்கும்.

**7.3.36** அர்தி ஹ்ரீ வ்லீ நூயி க்ஷ்மயீ ஆதாம் புக் ணௌ ரு1 'போ' ஹ்ரீ 'வெட்கப்படு, நாணமடை' வ்லீ 'நசுக்கு', ரீ 'பாய், ஓடு' க்னூய் 'ஈரமாகு', க்ஷ்மய் 'நடுங்கு, ஆடு', 'ஆ' (ஆத்) வீற்றுத் தாதுக்களுக்குப்பின் 'புக்' (ஆகமம்) 'ணிச்' ஒட்டுத்

தொடரும் போது இணைக்கப்படும்.

1. ரு + ணிச் = ரு + புக் + ணிச் + ஸப் + திப் = அர் + பே – அ – தி (4) அர்பயதி (86;6.1.78) :

2. ஹ்ரேபயதி (3) வ்லேபயதி (4) ரேபயதி (5) க்னோபயதி (6) க்ஷ்மாபயதி (7) த³ாபயதி, த⁴ாபயதி

**7.3.37** ஸா¹ச்ச²ா ஸா ஹ்வா வ்யா வே பாம் யுக்

ஸா¹ (= ஸோ 4.37) 'கூர்மையாக்கு', ச²ா (=சே²ா 4.38) வெட்டு, ஸா (ஸோ 4.39) 'முடித்தல்', ஹ்வா (=ஹ்வே 1.1057) அறை கூவு, சவ ால் விடு : வ்யா (=வ்யே 1.1056) 'சுற்றிக்கட்டு': வே 'நெய்தல்' (1.1055), பா (1.972) 'குடி' பை 'உலர்த்து' (1.968) ஆகியவைகளுக்குப்பின் 'யுக்' (ஆகமம்) 'ணிச்' தொடரும்போது வரும்

1. ஸா¹ + யுக் + ணிச் + ஸ¹ப் + திப் = ஸா¹யயதி
2. ச²ாயயதி
3. ஸாயயதி
4. ஹ்வாபயதி
5. வ்யாயதி
6. வாயயதி
7. பாயயதி

வா: லுக³ாக³மஸ்து தஸ்ய வக்தவ்ய

இங்கு பா 'காப்பாற்று' (2.47) என்ற தாதுவை சுட்டவில்லை. ஏனெ ன்றால் 'ஸ¹ப்' விகரணம் இங்கு கெடும். இப்பொருளைச் சுட்டும் ' பா' தாதுவுடன் 'லுக்' ஆகமம் 'ணிச் 'ணிச்' உக்கு முன்னால் வரும் பாலயதி.

வா: தூ⁴ஞ் ப்ரீஞோர் நுக்³ வக்தவ்ய:

'ணிச்' உக்கு முன் நிற்கும் 'தூ⁴ஞ்' 'ப்ரீஞ்' என்ற தாதுக்களோடு 'நுக்' ஆகமம் ஆகும். தூ⁴ணயதி, ப்ரீணயதி.

**7.3.38** வோ விதூ⁴னனே ஜுக்

'ணிச்' ஒட்டுக்கு முன் நிற்கும் வா 'உலர்ந்து', உலர்' (1.969) என்ற தாதுவோடு 'ஆடு', 'ஆட்டு', 'அசை' (விதூ⁴னன) என்ற பொருளைச் சுட்டும்போது 'ஜுக்' ஆகமம் ஆகும்.

வா + ஜுக் + ணிச் + ஸ¹ப் + திப் = வாஜயதி 'விசிறுகிறான்' : ஆனால் ஆவாபயதி, கேஸான் 'தலைசீவுகிறான்'

**7.3.39** லீ லோர் நுக்³ லுகௌ அன்யதரஸ்யாம் ஸ்நேஹ விபாதனே:

ணிச் ஒட்டுக்குமுன் நிற்கும் லீ ஒட்டிக்கொள் (4.31: 9.31)லா 'அடைபெறு' (2.49) என்ற தாதுக்களோடு முறையே 'நுக்', 'லுக்' (ஆகமம்) விருப்பாக 'கொழுப்புப் பொருளை உருக்குதல்' என்ற பொருளில் இணைக்கப்படும்.

1. க்$^{4}$ருதம் விலீனயதி/விலாயயதி
2. விலாலயதி, விலாபயதி

ஆனால் லோஹம் விலாபயதி 'இரும்பை உருக்குகிறான்'. ஜடாபி: ஆலாபயதி.

**7.3.40** பி$^{4}$யோ ஹேதுப$^{4}$யே ஷுக்

'ணிச்' உக்கு முன் நிற்கும் பீ$^{4}$ 'பயப்படு' (3.3) என்ற தாதுவின் பின் இயக்குவினையின் கர்த்தாவினாலேற்படும் பயம் என்ற பொருளில் 'ஷுக்' ஆகமம் வரும்.

பீஷயதே 'பயப்படச் செய்' (1.3.68) குஞ்சிகயா ப$^{4}$ாயயதி 'மூங்கில் கம்பைக் கொண்டு மிரட்டுகிறான்' ப$^{4}$ாபயதே என்ற மற்றொரு வடிவமும் 'மிரட்டுதல்' என்ற பொருளில் கிடைக்கப் பெறும் (6.1.56)

**7.3.41** ஸ்ப$^{4}$ாயோ வ:

ஸ்ப$^{2}$ாய் 'பெருகுதல், உப்புதல்' என்ற தாது 'ணிச்' உடன் வரும்போது அவ்வினையினீறுக்குப் பதிலியாக 'வ்' வரும். ஸ்ப$^{2}$ாவயதி.

**7.3.42** ஸ$^{1}$தே$^{3}$ராக$^{3}$தௌ த:

'ணிச்' உக்கு முன்னால் நிற்கும் ஸத்$^{3}$ 'விழு', கீழே விழு' என்ற வினையினீறுக்குப் பதிலியாக 'ஒட்டுதல்' என்ற பொருளைச் சுட்டாமல் வரும்போது, 'த்' வரும்.

ஸ$^{1}$ாதயதி ப$^{2}$லானி 'பழங்களைக் கீழே விழச் செய்கிறான்' ஆனால் க$^{3}$ா:
ஸ$^{1}$ாத$^{3}$யதி கே$^{3}$ாபாலாக: 'மாட்டிடையன் மாடுகளை ஒட்டுகிறான்'

**7.3.43** ருஹ: ப: அன்யதரஸ்யாம்

'ணிச்' ஒட்டுக்க முன் நிற்கும் ருஹ் 'வளர்', பயிரிடு என்ற தாதுவினீறுக்கு 'ப்' விருப்பாக பதிலியாகும்.

ரோஹயதி அல்லது ரோபயதி வ்ரீஹீன் 'நெல் பயிரிடுகிறான்'

**7.3.44** ப்ரத்யயஸ்த$^{2}$ாத் காத் பூர்வஸ்$^{1}$ யாத இத$^{3}$ாப்யஸுப:

வேற்றுமையுருபுகளுக்குப்பின் வராத (அஸுப:) ஆப் (சாப், டாப், ட$^{3}$ாப்) என்ற பெண்பாலோட்டுக்கு முன் நிற்கும் ஒரொட்டின் 'க்' (ப்ரத்யய்ஸ்த$^{2}$ாத் காத்) என்ற எழுத்துக்கு முன்னால் அமையும் அத் (அ) துக்கு, 'இத்' வரும்.

ஜடிலிகா, காரிகா: முண்டி$^{3}$கா (முறையே ஜடில, கார, முண்ட என்பவைகளிலிருந்து ஆக்கப்படவை) ஆனால், ஸுஸகா, 'எளிதாகச் செய்யக் கூடிய', ப$^{3}$ஹு பரிவ்ராஜகா நக்$^{3}$ரீ 'ஸுப்'புக்கப்பின் 'ஆப்' வருகிறது.

வா: மாமகநரகயோருபஸங்க்$^{2}$யானம் கர்தவ்யமப்ரத்யய ஸ்த$^{2}$ா$^{2}$ வாத்.
மாமக, நரக என்ற சொற்களில் 'க்' ஒரோட்டின் பகுதிய ல்லாததால், இவைகளையும் இங்கு சேர்த்துக் கூறவேண்டும். மாமிகா நரிகா.

வா: ப்ரத்யபநிஷேதே[4] த்யக்த்யபோஸ்ச உபசஞ்க்[2]யானம் 7.3.46 தடை விதித்தாலும் த்யக் (4.2.98), த்யப் (4.2.1) என்பவைகளில் முடியும் சொற்களுக்கும் இந்த விதி பயன்படுத்தப்படும் த[3]ாக்ஷிணாத்யிகா, இஹத்யிகா.

**7.3.45** ந யாஸயோ:

'ய' 'க' ஆகமத்துடன் நிற்கும் 'யா, ஸ' ஆகியவைகளுக்குப்பின், 'ஆப்' வரும்போது, அவைகளின் 'அ' வுக்குப் பதிலியாக 'இ' வராது. யாக, ஸகா.

வா: யாஸகயோரித்வ ப்ரதித்ஷேதே[4] த்யகன உபஸங்க்[2]யானம் ய(ய த்), ஸ(தத்) ஆகியவைகளுடன் 'த்யகன' உம் சேர்த்துக் கூற வேண்டும். உபத்யகா, அதி[4]த்யகா

வா: பாவனகாதீ[3]னாம் ச[2]ந்த[3]ஸ்யுபஸங்க்[2]யானம்

'பாவக' முதலியவைகளின் பெண்பாற் சொற்களின், 'அ'வுக்கு 'இ' வேதமொழியில் பதிலியாகாது.

ஹிரண்யவர்ணா: ஸுசய: பாவகா:, யாஸு அலோமகா:, ஆனால் பாவிகா மற்ற இடங்களில்

வா: ஆஸி'ஷி சோபஸங்க்[2]யானம்

ஆசீர்வாதத்தில் பயன்படுத்தப்படும் 'வுன்' ஒட்டிலும் அவ்வாறே (ஜீவதாத்) ஜீவகா (நந்த[3]தாத்) நந்த[3]கா, (ப[4]வதாத்) ப[4]வகா (பார்க்க சூ.3.1.150)

வா: உத்தர பத[3]லோபே சோபஸங்க்[2]யானம்

ஒரு தொகையினிரண்டாவது உறுப்பினர் கெடும்போதும் அவ்வாறே தே[3]வத[3]த்திகா – தே[3]வகா; யக்[3]ஞத[3]த்திகா யக்[3]ஞகா (பார்க்க 5.3.83 வார்த்திகம்)

வா: க்ஷிபகாதீ[3]னாம் சோபஸங்க்[2]யானம்

'க்ஷிபகா முதலியவைகளும் இத்தோடு சேர்த்துக் கூறப்பட வேண்டும்.' க்ஷிபகா, த்[4]ருவகா

வா: தாரகா ஜ்யோதிஷ்யுபஸங்க்[2]யானம்

'நட்சத்திரம்' என்ற பொருளைச் சுட்டும் 'தாரகா' முதலியவைகளும் அவ்வாறே. ஆனால் தாரிகா 'வேலைக்காரி' (< தாரயதி)

வா: வர்ணகா தாந்தவ உபஸங்க்[2]யானம்

'தளர்ந்த மேலங்கி, முகமுடி' (தாந்தவ) என்ற பொருளைச் சுட்டும் 'வர்ணகா' என்ற சொல்லும் இங்கு சேர்க்கப்பட வேண்டும், ஆனால் வர்ணிகா 'வியாக்யானம் செய்பவர்'. காட்டா வர்ணிகா ப[4]ாகு[3]ர் லோகாயதே,

லோகயதத்தின் உரை ப⁴ா கு³ரீ (எனப்படும்)

வா: வர்தகா ஸ'குனௌ ப்ராசாமுபஸங்க்²யானம்
கீழ்த்திசை இலக்கண நூலார்களின் கருத்துப்படி ஒரு பறவையென்ற பொருளைச் சுட்டும்போது வர்தகா ஆகும். ஆனால் வடக்குத் திசை இலக்கண நூலார்களின் கருத்துப்படி 'வர்திகா' என்று ஆகும். வர்திகா ப⁴ாகு³ரி லோகாயதஸ்ய
இங்கு 'உரை' எனப்பொருள்படும்.

வா: அஷ்டகா பித்ருதை³வத்யே
பித்ருதேவதைகளின் தொடர்புள்ள ஒரு சடங்கைக் குறிக்கும்போது 'அஷ்டகா' ஆகும். ஆனால் அஷ்டிகா க²ாரீ

வா: வாஸூதகா புத்ரகா வ்ருந்த³ாரகாணாமுபஸங்க்²யானம் ஸூதகா, புத்ரகா, வ்ருந்த³ாரக ஆகியவைகள் விருப்பாக அமைக்கப்பட்டவை, இதன் மற்ற வடிவங்கள் ஸூதிகா, புத்ரிகா, வ்ருந்த³ாரிகா

**7.3.46** உத்³சாமாத: ஸ்த²ானே யகபூர்வாயா:
வடக்கத்திய இலக்கண நூலார்களின் கருத்துப்படி, பெண்பாலொட்டான 'ஆப்' (ஆ) குறிலாக்கப்பட்ட 'அ' (பார்க்க 7.4.13) வுக்கு, முன்னால் 'ய்' அல்லது 'க' நிற்கும்போது அந்த 'அ'வு க்கு 'இ' பதிலியாக வராது. 'உதீசாம்'

என்ற சொல், இதை விருப்பு விதியாக்குகிறது. இப்⁴யிகா, இப்⁴யகா 'பணக்கார மாது', 'பெண்யாணை' சடகா, சடகிகா 'பெண் குருவி' மூஷககா, மூஷிகிகா: ஆனால் அஸ்'விகா 'பெண் குதிரை'

வா: யகபூர்வாயா: த⁴ாத்வந்தப்ரதிஷேத⁴: 'ய்', 'க்' ஆகியவைகள் தாதுவினீறாக நிற்கும்போது இவ்விதிக்குத்தடையாகும்.ஸுநயிகா, ஸுஸ'யிகா, ஸுபாகிகா, ஸுஸே'ாகிகா.

**7.3.47** ப⁴ஸ்த்ரைஷாஜாக்³ ஞாத்³வாஸ்வா நஞ் பூர்வாணாமபி
ப⁴ஸ்த்ரா 'தோல் பை' . ஏஷா 'அவள்' அஜா 'ஆடு' க்³ஞா 'அறிவாளி', த்³வா 'இரண்டு' ஸ்வா 'தன்' ஆகியவைகள் 'நஞ்' ஒட்டுக்குப்பின் நிற்கும்போதும், அவைகளின் ஈறான 'ஆ'வுக்கு, பதிலியாக வரும் 'அ'வுக்கு, 'இ' பதிலியாக (அச்சொற்களுக்கு ப்பின் ஒரொட்டின் 'க்' வந்து, அவைகளோடு பெண்பாலொட்டான 'ஆப்' இணைக்கப்பட்டால்) வராது. என்பது வடக்கத்திய இலக்கண நூலார்களின் கருத்து.
மேற்சூத்திரத்தைப்போன்று இங்கும் 'உதீ³சாம்' என்ற சொல், விருப்பு விதியாகுமென்று சுட்டும்.

1. ப4ஸ்த்ரா + க + அப் + டாப் = ப4ஸ்த்ரகா அல்லது ப4ஸ்த்ரிக 'சிறிய தோல் பை' (2) ஏஷகா அல்லது ஏஷிகா (3) அஜகா அல்லது அஜிகா (4) க்3ஞகா அல்லது க்3ஞிகா (5) த்3வகா அல்லது த்3விகா ( 6) த்3வகா அல்லது த்3விகா அப4ஸ்த்ரகா/அப4ஸ்த்ரிகா, அனஜகா, அல்லது அனஜிகா:
அக்3ஞகா/அக்3ஞிகா, அஸ்1வகா/அஸ்விகா
இத்தகையை மாற்றுவடிவங்கள் ஏஷா, த்3வி இரண்டுக்கும் காணப்படமாட்டாது. ஏனென்றால் 'அகச்' இணைந்த பிறகு 'நஞ்' இணைத்துத் தொகையாக்கட்டாலும் அல்லது இதற்கு மாறாக 'நஞ்' இணைந்து தொகையாக்குப்பட்டு. அத்தொகையோடு 'அகச்' இணைத்தாலும், அவைகளினீறுக்குப் பதிலியாக 'அ' வருவதற்கு, இத்தொகையுடன் வேற்றுமையுருபுகளையிணைக்க டியது இன்றியமையாதது (7.2.102), 'அ'வைப் பதிலியாகக் கொண்டு வந்தால்தான் பெண்பாலொட்டான 'டாப்' வர இயலும். ஆகவே இங்கு வேற்றுமையுருபு ஒரு முக்கியமான பகுதியாக அமைகிறது. 'ஸுப்'புக்குப்பின்தான் 'டாப்' வரமுடியும் ஆகையால் அஸுப: (7.3.44) என்ற தடையினால், 'இ' பதிலியாவதற்கு வாய்ப்பே இல்லை. ஆகையால், அனேஷகா, அத்3வகா என்ற ஒரேயொரு வடிவங்கள்தான் (அதாவது மாற்று வடிவங்களில்லாமல்) எதிர்மறை இடைச்சொல்லோடு கட்டாயமாகப்பெற முடியும்.

**7.3.48** அப4ாஷிதபும்ஸ்காச் ச
மேலே கூறப்பட்ட சூழலில், ஒரு பெண்பாற் சொல்லுக்கு நேரிணையா ஆண்பாற்சொல் காணப்படாவிட்டாலும் (அப4ாஷிதபும்ஸ்காத்) மேலே வறிய 'இ' பதிலியாதல் வராது என்பது வடக்கத்திய இலக்கண நூலாரின் கருத்து.

க2ட்வா + க + டாப் = க2ட்வாகா அல்லது க2ட்விகா 'சிறிய கட்டில்', அக2ட்வகா, அல்லது அக2ட்விகா

**7.3.49** ஆத3ாசார்யாணாம்
மற்ற இலக்கண நூலார்களின் கருத்துப்படி (ஆசார்யாணாம்) பெண்பாற்சொல்லுக்கு நேரிணையான ஆண்பாற் சொல் இல்லாத பெண்பாற் சொற்களின், 'ஆத்'துக்குப் பதிலியாக வரும் 'அ'வுக்கு மேலே கூறப்பட்ட சூழலில் 'ஆத்' பதிலியாக வரும் க2ட்வாகா; அக2ட்வாகா

**7.3.50** ட2ய் இக:
அடிச்சொல்லுக்குப்பின்னால் இணைக்கப்படும் 'ட2'வுக்கு 'இக்' பதிலியாக வரும்.
கீழ்க்கண்டவொட்டுக்களில் 'ட்2' காணப்படும்.
ஞிட் (4.2.116) : டக் (4.4.1), டச் (4.2.80) டஞ் (5.1.18): டன் (4.7.13): டப் (4.3.26): ஷ்டச் (4.4.31): ஷ்டன் (4.3.70): ஷ்டல் (4.4.9)

அக்ஷ + டக் ஆக்ஷிக (6.4.148 : 2.118) 'பகடையால் சூதாடுபவன்': லாவணிக:

**7.3.51** இஸுஸுக்தாந்தாத் க;

இஸ், உஸ், அல்லது 'உக்' பிரத்தியாஹாரத்தின் ஒரெழுத்து அல்லது 'த்' ஆகியவைகளையீறாகக் கொண்ட அடிச் சொல்லுக்குப்பின் இணைக்கப்படும் ட ஒட்டின் 'ட'வுக்கு 'க' பதிலியாக வரும்.

1. ஸர்பிஸ் – ஸார்பிஷ்க: (2) த$^{4}$னுஸ் – த$^{4}$ானஷ்க: (3) உக்–தைஸா பநைஷாத$^{3}$கர்ஷுக:; ஸ்ாப$^{3}$ரஜம்பு$^{3}$க:, (4) மாத்ருகம் பைத்ருகம் (4) தாந்த ஔத$^{3}$ஸ்வித்க:. ஸாகுத்க:

வா: தே$^{3}$ாஷ உபஸங்க்$^{2}$யானம்.

'தோஸ்' உக்குப்பின்னால் வரும் ஒட்டின் 'ட'வுக்கு 'க' பதிலியாகும் தௌஷ்க:

**7.3.52** சஜோ: கு கி$^{4}$ண்ண்யதோ:

'க்$^{4}$' இத்தாகக் கொண்ட ஒட்டு அல்லது 'ண்யத்' ஆகியவைகளுக்கு முன்னால் நிற்கும் அடிச்சொல்லின் 'ச்' அல்லது 'ஜ்' என்ற எழுத்துக்கு 'கு' 'பின்னண்ணவொலி' பதிலியாகும்.

கி$^{4}$தி – பாக: (< பச்), த்யாக$^{3}$: (< த்யஜ்), ண்யதி – பாக்யம்: வாக்யம் (<வச்)

**7.3.53** ன்யங்க்வாதீ$^{3}$னாம் ச

ந்யங்கு 'மான்' முதலிய சொற்களின் 'ச்' அல்லது 'ஜ்'வுக்குப் பதிலியாக 'கு' (பின்னண்ணவொலி) வரும்.

ந்யங்கு, மஸ்கு$^{3}$.. .

**7.3.54** ஹோ ஹந்தேர் ருணிந்நேஷு

'ஞ்' அல்லது 'ண்' ஐ 'இத்'தாகக் கொண்ட ஒட்டு அல்லது 'ன்' (ஹன்'இன் ஈற்றயல் உயிர் கெடும்போது 6.4.98) ஆகியவைகளுக்கு முன் நிற்கும் 'ஹன்' தாதுவின் 'ஹ்'வுக்கு 'கு' (பின்னண்ணவொலி) பதிலியாகும்.

1. ஞ் – ஹன் + க$^{4}$ஞ் = க$^{4}$ாத: (7.3.32) 'கொலை'
2. ண் – ஹன் + ண்வுல் = க$^{4}$ாதக: (7.3.32) 'கொலையாளி'
3. ன் – ஹன் + ஸ்ப் – (2.4.72) + ஜி$^{2}$ = ஹ θ ன் – அந்தி (6.4.98) க்$^{4}$னந்தி

**7.3.55** அப்$^{4}$யாஸாச்ச

'ஹன்' தாதுவின் 'ஹ்'க்குப் பதிலியாக 'கு' (பின்னண்ணவொலி) அதன் இரட்டித்தலுக்குப்பின்னும் (அப்$^{4}$யாஸாத்) வரும்.

ஜிக$^{4}$ாம்ஸதி, ஜங்க$^{4}$ன்யதே, அஹம்ஜக$^{4}$ன

**7.3.56** ஹேரசஙி

'சங்' ஒட்டைத்தவிர்த்து மற்ற 'ஹி' தாதுவின் இரட்டித்த அசைக்குப் பதிலியாக 'கு' வரும்.

ப்ரஜிகீ⁴ஷதி, ப்ரஜேகீ⁴யதே, ப்ரஜிக⁴ாய ஆனால் ப்ராஜீஹய்த் ³தூ³தம் ('சங்'உடன்)

**7.3.57** ஸன் விடோர் ஜே:

ஜி 'வெல்' யுக்குப்பின் 'ஸன்' அல்லது 'லிட்' ஒட்டு இணைக்கும் போது அத்தாதுவின் இரட்டித்த அசைக்கு 'கு' பதிலியாக வரும் ஜிகீ³ஷதி, ஜிக³ாய ஆனால் ஜேஜீயதே

**7.3.58** விப⁴ாஷா சே:

'சி' திரட்டு, கூட்டு க்குப்பின் ஸன் அல்லது லிட் இணைக்கும்போது அத்தாவதுவின் இரட்டித்த அசைக்குப் பதிலியாக 'கு' விருப்பாக வரும். சீகீஷதி, சிஷதி; சிசாய, சிகாய ஆனால் சேச்யதே

**7.3.59** ந க்வாதே³:

பின்னண்ணவொலியில் தொடங்கும் (கு–ஆதே:) தாதுவின் பின்னால் 'க்⁴' 'இத்' தாகக் கொண்டவொட்டு அல்லது 'ண்யத்' இணைக்கும்போது, அத்தாதுவினிறுதி 'ச்' அல்லது 'ஜ்' உக்குப்பதிலியாக 'கு' வராது.
கூஜ் + க⁴ஞ் = கூஜ:, க³ர்ஜ:, க²ர்ஜ:

**7.3.60** அஜி வ்ரஜ்யோஸ்¹ ச

'க⁴' வை 'இத்'தாகக் கொண்ட வொட்டு அல்லது 'ண்யத்' ஆகியவைகளுக்கு முன்னால் நிற்கும் அஜ் 'சுற்று' வ்ரஜ் 'போ, செல்' ஆகியவைகளின்றான 'ஜ்'க்குப் பதிலியாக 'கு' வராது.
ஸமாஜ:, பரிவ்ராஜ:

**7.3.61** பு⁴ஜன்யுப்³ஜௌ பாண்யுபதாபயோ:

பு⁴ஜ, ந்யுப்³ஜ என்ற சொற்கள் கை (பாணீ) வலி, நோய் (உபதாப) என்ற பொருட்களில் நிபாதனங்களாகும். பு⁴ஜ் + க⁴ஞ் (3.3.121) = பு⁴ஜ: 'குணம்' பின்னண்ணவொலி ஆகியவைகள் பதிலியாக வராதது நிபாதனம்: ந்யுப்³ஜ (நி–உப்³ஜ் + க⁴ஞ்) பின்னண்ணவொலியாக மாறாதது நிபாதனம். வேறு பொருட்களில் பே⁴ாக³ 'இன்பம்'; ஸமுத்³க⁴

**7.3.62** ப்ரயாஜானுயாஜௌ யக்³ஞாங்கே³

ஒரு யாகத்தின் ஒரு பகுதி (யக்³ஞாங்கே) என்ற பொருளில் ப்ரயாஜ 'யாகத்தின் முதல் பகுதி' அனுயாஜ 'யாகத்தின் இரண்டாவது பகுதி' என்ற சொற்கள் நிபாதனங்கள்.

இவைகள், 'க⁴ஞ்' ஒட்டிணைக்கப்பட்டு பின்னண்ணவொலி யாக மாறாமல் ஆக்கப்பட்டவை. மற்ற பொருட்களில் ப்ரயாக³, அனுயாக³வேறு உபசர்க்கங்களுடனும் இவ்வாறே. காட்டாக உபயாஜ, உபாம்ஸுயாஜ, ஸம்யாஜ, ருதுயாஜ ஆகியவைகள் கீழ்க்கண்ட வாக்கியங்களில் காணப்படுகின்றன.

ஏகாத[3]ஸோ'பயாஜ:, உபாம்ஸூயாஜமந்தர யஜதி, அஷ்டௌ பத்னீஸம்யாஜா ப[4]வந்தி, ருதுயாஜ்ஜஸ் சரந்தி.

**7.3.63** வஞ்சேர் க[3]தௌ

'செல், போ' என்ற பொருளைச் சுட்டும்போது வஞ்ச் என்ற வினையின் 'ச்' உக்குப் பதிலியாகக் பின்னண்ணவொலி வராது. வஞ்ச் + ண்யுட் = வஞ்சயம், வஞ்சந்தி வணிஜ:

ஆனால் வங்கம் காஷ்டம் 'வளைந்த மரம்'

**7.3.64** ஒக உச: கே

'உச்' உடன் 'க' ஒட்டிணைத்து ஒக 'இருப்பிடம், வீடு' என்ற சொல் விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்டது. 'ச்' பின்னண்ணவொலியாதல் (அதாவது 'க்') 'குணம்' ஆகியவைகள் நிபாதனங்கள்.

ந்யோக: 'பறவை, வீடு'

தி[3] வௌகஸ:, ஐலௌகஸ: ஆகியவைகளும் நிபாதனங்கள்.

**7.3.65** ண்ய ஆவஸ்'யகே

'கண்டிப்பாகச் செய்யவேண்டும்' (ஆவஸ்1யகே) என்ற பொருளில், 'ண்யத்' ஒட்டுக்கு முன் நிற்கம் அண்ணவொலிக்குப் பின்னண்ணவொலி பதிலியாகாது.

அவஸ்'ய பாச்யம், அவஸ்யவாச்யம் ஆனால் பாக்யம், வாக்யம் (ஆவஸ்யகம் அல்ல)

**7.3.66** யஜ யாச ருச ப்ரவச ருசஸ்ச

யஜ், யாச், ருச், ப்ரவச் ஆகியவைகளுக்குப்பின் 'ண்யத்' ஒட்டிணைக்கும்போது, அச்சொற்களின் அண்ணவொலிக்கு பின்னண்ணலொலி பதிலியாக வராது.

யாஜ்யம், யாச்யம், ரோச்யம், ப்ரவச்யம், அர்ச்யம்

வா: 'ண்யதி' ப்ரதிஷேதே[4] த்யஜேரு பஸங்க்2யானம் 'ண்யத்'துக்குமுன் நிற்கும் 'த்யஜ்' என்ற தாதுவினீறான 'ஜ்' உம் பின்னண்ணவொலியாக மாற்றமடையாது.

த்யாஜ்யம்.

**7.3.67** வசோ அஸ'ப்[3]த[3] ஸம்க்[3]ஞாயாம்

'மொழியியலின் கலைச் சொல்' என்ற பொருளைச் சுட்டாத (அஸ'ப்[3]த[3] ஸம்க்[3]ஞாயாம்) 'வச்' இன்றான 'ச்'க்கு பின்னண்ணவொலி பதினியாக வராது. வாச்யம் 'கூற வேண்டியது/தகுந்தது' ஆனால் வாக்யம் 'வர்க்கியம்'.

**7.3.68** ப்ரயோஜ்யநியோஜ்யௌ ஸ'க்யார்தே[2]

ப்ரயோஜ்ய 'பயன்படுத்தத் தகுந்தது'. நியோஜ்ய ''வேலையில மர்த்தத்

தருதியுள்ள'' என்ற சொற்கள் 'திறமை' (ஸக்யார்தே$^2$) என்ற பொருளைச் சுட்டும்போது நிபாதனங்களாகும். அதாவது 'ண்யத்' ஒட்டுக்குமுன் பின்னண்ணவொலியாக மாறவில்லை. ஆனால் ப்ரயோக$^3$, 'பயன்படுத்தவேண்டும்' நியோக$^3$ (வேலையில்) அமர்த்த வேண்டும்''

**7.3.69** பே$^4$ாய்ம் ப$^4$க்ஷ்யே

உணவு (ப$^4$க்ஷ்யே) என்ற பொருளில் பே$^4$ாஜ்யம் என்ற சொல் நிபாதனமாகும். அண்ணவொலி, 'ண்யத்'துக்கு முன் பின்னண்ணவொலியாக மாறாதது நிபாதனம். ஆனால் பே$^4$ாக்ய 'அனுபவிக்கவேண்டியது'

**7.3.70** கே$^4$ார்லோபோ லேடி வா

'கு$^4$' (தா$^3$, த$^4$ா) என்ற ஸம்க்$^3$ஞாவினால் குறிப்பிடப்படும் வினைகளினீறு, விருப்பாக 'லேட்' ஒட்டுக்குமுன் கெடும். த$^3$த$^4$த்$^3$ரத்னானி த$^3$ாஸுஷே (ருக் 4.15.3) 'கொடையாளிக்கு அவன் ரத்னங்கள் கொடுக்கட்டும்'. ஸோமா த$^3$த$^3$த் க$^3$ந்த$^4$ர் வாய இதன் மாற்றுவடிவம் யத$^3$க்$^3$னிரக்னயே த$^3$த$^3$ாத்

**7.3.71** ஒத: ஸ்யனி

'ஸ்யன்' (நிகழ்கால விகரணம்) ஒட்டுக்கு முன் நிற்கும் 'ஒ'வீற்று வினையின் ஈறு கெடும்.

ஸே – நிஸ்யதி 'கூர்மையாக்குகிறான்'

சோ – அவச்ச்$^2$யதி 'வெட்டுகிறான்'

தே$^3$ா – அவத்$^3$யதி 'பிரிக்கிறான்'

ஸோ – அவஸ்யதி 'நிறுத்துகிறான்'

**7.3.72** க்ஸஸ்யாசி

ஒருயிரெழுத்தில் தொடங்கும் (அசி) ஒட்டுக்கு முன் 'க்ஸ' (Aorist)வின் 'அ' கெடும்.

து$^3$ஹ் + லுங் = அட் (6.4.71) + து3ஹ் + ச்லி + இட் (3.1.43) = அது$^3$ஹ் + க்ஸ + இட் (3.1.45) அதுஹ – ஸ்θ + இ = அது$^3$க்$^4$ஸி (8.2.32) = அது$^4$க்$^3$ஸி (8.2.37) அது$^4$க்ஷி (8.3.59:4.55) 'நான் பால் கறந்துவிட்டேன்' ஆனால் அது$^4$க்ஷத்

**7.3.73** லுக்$^3$ வா து$^3$ஹ தி$^3$ஹ கு$^3$ஹாமாத்மனேபதே$^3$ தந்த்யே

து$^3$ஹ் 'கற'. தி3ஹ் 'பசு' ன் லிஹ் 'நக்கு'. கு$^3$ஹ் 'ஒளித்துவை, மறை', ஆகியவைகளுக்குப்பின் நிற்கும் பல்லொலியில் தொடங்கும் ஆத்மனேபதவொட்டுக்களுக்குப்பின் தொடரும் 'க்ஸ' விருப்பாகக் கெடும்.

1. து$^3$ஹ் + லுங் = அட் + து$^3$ஹ் + க்ஸ + த = அது$^3$க்$^4$ + ஷ + த = அது$^4$க்ஷத
2. அதி$^3$த்$^3$த$^4$, அதி$^4$க்ஷத
3. அலீட$^3$, அலிக்ஷத
4. ந்யகூ$^3$ட$^4$, ந்யத$^4$க்ஷத

**7.3.74** ஸ$^{1}$மாமஷ்டானாம் த்$^{3}$ர்க$^{4}$: ஸ்$^{1}$யனி
ஸ$^{1}$ம் 'அமைதியுறு' இல் தொடங்கும் எட்டு வினைகளின் (அஷ்டானம் உயிர்களுக்குப் பதிலியாக நெடில் அவ்வினைகளுக்குப்பின் 'ண்யன்' இணைக்கும்போது வரும்.

1. ஸம் – ஸ$^{1}$ாம்யதி, (2) தம் – தாம்யதி (3) த$^{3}$ம் – த$^{3}$ாம்யதி (4) ப்$^{4}$ரம் – ப்$^{4}$ராம்யதி (5) க்ஷம் – க்ஷாம்யதி (6) க்வம் – க்லாம்யதி (7) ஸ்$^{1}$ரம் –ஸ்$^{1}$ராம்யதி (8) மத்$^{3}$ – மாத்$^{3}$யதி ஆனால் அஸ்யதி, ப்$^{4}$ரமதி

**7.3.75** ஷ்டி$^{2}$வுக்லகம்யாசமாம் ஸி$^{1}$தி
ஸி$^{1}$ 'ஐ 'இத்'தாகக் கொண்ட ஒரு ஒட்டுக்குமுன் நிற்கும் ஷ்டிவ் 'துப்பு க்லம் 'களைப்பனம்', ஆ சம் 'ஹிஞ்சு' ஆகியவைகளின் உயில் நெடிலாகும்.
1. ஷ்டிவ் + ஸ்$^{1}$யன் + திப் = ஷ்டீவ்யதி
2. க்லாமதி (3) ஆசாமதி ஆனால் சமதி, விசாமதி

**7.3.76** க்ரம; பரஸ்மைபதே$^{3}$ஷு
பரஸ்மைபதத்தில் 'ஸ்$^{1}$'ஐ 'இத்'தாகக் கொண்ட ஒரொட்டுக்கு முன் நிற்கும் க்ரம் 'மிதி' தட' என்ற வினையின் உயிர் நெடிலாகும்.
க்ராமதி 'மிதிக்கிறான், நடக்கிறான்' ஆனால் ஆக்ரமதே ஆதி$^{3}$த்ய: (ஆத்மனேபதம்)

**7.3.77** இஷுக$^{3}$மியமாம் ச$^{2}$:
'ன்'ஐ 'இத்'தாகக் கொண்ட ஒட்டுக்களுக்கு முன் நிற்கும் இஷ் 'விரும்பு', க$^{3}$ம் 'போ' யம் 'தாங்கு' ஆகியவைகளினிறுதி எழுத்துக்கு 'ச$^{2}$' பதிலியாக வரும்.
இஷ் + ஸ$^{1}$திப் = இச்$^{1}$ச$^{2}$தி (6.1.73) க$^{3}$ம் + ஸ$^{1}$ப் + திப் = க$^{3}$ச்$^{1}$ச$^{2}$தி, யம் – யச்ச$^{2}$தி 'இஷ்' உ'ஐ 'இத்'தாகக் கொண்ட துதாதி (59) வகுப்பைச் சேர்ந்த தாதுவைச்சுட்டும் தி$^{3}$வாதி (19) அல்லது க்ரயாதி (53) வகுப்பைச் சேர்ந்த தையல்ல. அங்கு முறையே இஷ்யதே, இஷ்யதி, இஷ்ணாதி என்றாகும்.

**7.3.78** பா க்$^{4}$ராத்$^{4}$ மா ஸ்த$^{2}$ா ம்னாத$^{3}$ாண் த்$^{3}$ருஸ்யர்த்தி ஸர்த்தி ஸ$^{1}$த$^{3}$
ஸத$^{3}$ாம் பிப$^{3}$ ஜிக்$^{4}$ர த$^{4}$ம திஷ்ட$^{2}$ மன யச்ச$^{2}$ பஸ்$^{1}$யர்ச்ச$^{2}$ தெ$^{4}$ள ஸீ$^{1}$ய ஸீத$^{3}$ா;
'ஸ்'ஐ 'இத்'தாகக் கொண்ட வொட்டுக்களுக்கு முன் (1) பா 'குடி' (2) க்$^{4}$ரா 'வாசனை பார்' (3) த்$^{4}$மா 'ஊது' (4) ஸ்த$^{2}$ா 'நில்' (5) ம்னா 'நினை' (6) த$^{3}$ாண் 'கொடு' (7) த்$^{3}$ருஸ்$^{1}$ 'பார்' (8) ரு$^{1}$'போ' (9) ஸ்ரு$^{1}$ 'ஓடு, பாய்' (10) ஸ$^{1}$த்$^{3}$ 'விழு' (11)ஸத$^{3}$ 'உட்கார்' ஆகியவைகளுக்கு முறையே (1) பிப்$^{3}$ (2) ஜிக்$^{4}$ர் (3) த$^{4}$ம் (4) திஷ்ட் (5) மன் (6) யச்ச$^{2}$ (7) பஸ்$^{1}$ய் (8) ரு$^{1}$ச்ச்$^{2}$ (9) தெ$^{4}$ள (10) ஸீ$^{1}$ய் (11) ஸீத் என்பவைகள் பதிலியாக வரும்.
(1) பிப$^{3}$தி (2) ஜிக்$^{4}$ரதி (3) த$^{4}$மதி (4) திஷ்ட$^{1}$தி (5) மனதி (6) யச்ச$^{2}$தி (7)பஸ்$^{1}$யதி (8)ரு$^{1}$ச்ச$^{2}$தி (9)த$^{4}$ாவதி (10)ஸீ$^{1}$யதே (11)ஸீத$^{3}$தி

**7.3.79** க்$^{3}$ஞா ஜனோர் ஜா

'ஸ்$^{1}$'ஐ 'இத்'தாகக் கொண்ட வொட்டுக்களுக்குமுன் நிற்கும் க்$^{3}$ஞா 'அறிந்துகொள்' ஜன் 'பிற' என்ற வினைகளுக்கு 'ஜா' பதிலியாகும்.

க்$^{3}$ஞா – ஜானாதி : ஜன் – ஜாயதே

**7.3.80** ப்வாதீ$^{3}$நாம் ஹ்ரஸ்வ

'ஸ்'ஐ 'இத்'தாக வொட்டுக்களுக்கு முன் நிற்கும் பூ 'புனிதமாக்கு' முதலியவைகளின் உயிர் குறிலாகும். இத்தாதுக்கள் தாதுபாடத்தில் 9.12-32 வரை கொடுக்கப்பட்டிருக்கின்றன. பூஞ் – புனாதி, லூஞ் – லுனாதி (ஸன்' விகரணத்துடன்)

**7.3.81** மீனாதேர் நிக$^{3}$மே

வேதமொழியில் (நிக$^{3}$மே) மீஞ் 'காயப்படுத்து, அழி' ஆகியவைகளுக்குப் பின் 'ஸ்$^{1}$' ஐ 'இத்'தாகக் கொண்ட ஒட்டு இணைக்கும்போது. அத்தாதுவின் உயிர் குறிலாகும்.

ப்ரமினாதி வ்ரதானி

ஆனால் ப்ரமீனாதி (பேச்சு மொழியில்)

**7.3.82** மிதே$^{3}$ர் கு$^{3}$ண:

'ஸ்$^{1}$'ஐ 'இத்'தாகக் கொண்ட ஒட்டுக்களுக்கு முன் நிற்கும் மித்$^{3}$ "உணர்ச்சியார்வமிக்க, எண்ணெய்ப்பிசுக்குடைய" என்ற வினையின் உயிருக்கு (இ) 'குணம்' பதிலியாகும்.

மேத்$^{3}$யதி

**7.3.83** ஜுஸி ச

'ஜுஸ்' (லங்) ஒட்டுக்கு முன் நிற்கும் 'இக்' பிரத்தியாஹாரத்தில் (இ,ஈ,உ,ஊ,ரு$^{1}$,ரு$^{1}$,ல்) ஒருயிரெழுத்தையீறாகக் கொண்ட வினைகளின் அவ்வீற்றுக்கும் 'குணம்' பதிலியாக வரும்.

அபி$^{3}$ப$^{4}$யு: (<பீ$^{4}$) அபி$^{3}$ப$^{4}$ரு: (<ப்$^{4}$ரு), அஜுஹவு: (<ஹு), அஜாக$^{3}$ரு: (<ஜாக்$^{3}$ரு)

**7.3.84** ஸார்வார்த்$^{3}$த$^{4}$ த$^{4}$ாதுக யோ:

'இக்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரெழுத்தை யீறாகக் கொண்ட வினைகளுக்குப்பின் ஸார்வதாதுக ஆர்த்$^{3}$த$^{4}$த$^{3}$ாதுக வொட்டுக்களிணைக்கும்போது, அவ்வீறுகளுக்குப் பதிலியாக 'குணம்' வரும்.

ஸார்வதாதுக:– ஜி + ஸப் + திப் = ஜே–அ–தி = ஜயதி (6.1.78) 'அவன் வெல்கிறான்' : ந் + ஸ1ப் + திப் = நயதி 'அவன் வழிகாட்டுகிறான்' ப$^{4}$வதி (<பூ$^{4}$)

ஆர்த்$^{3}$த$^{4}$தாதுக: – கர்தும் (க்ரு)

**7.3.85** ஜாக்3ரோ அவிசிண்ணல்ஙித்ஸு

வி, சிண், ணல், 'ங்'ஐ 'இத்'தாகக் கொண்ட ஒட்டுக்கள் ஆகியவைகளைத் தவிர்த்து மற்ற ஸார்வதாதுக ஆர்த்3த4த4ாதுக வொட்டுக்களுக்கு முன்னால் நிற்கும் ஜாக்3ரு 'விழி' என்ற வினையின் இறுதியுயிருக்குப் பதிலியாக 'குணம்' வரும்.

ஜாக3ரயதி 'எழுப்புகிறான்' (இயக்குவினை) (ஜாக்3ரு ணிச்) ஜாக3ரக (ண்வுல்): ஸாது4ஜாகரீ, ஜாக3ரம் ஜாக3ரம் (ணவுல்), ஜாக3ர: (க4ஞ்), ஜாக3ரித: (க்த); ஜாக3ரிதவான் (க்தவது) ஜாக்3 ரு + வி = ஜாக்3ருவி: சின் – அஜாக3ாரி; ஙித் – ஜாக்3ருத: ணல் – ஜஜாகார

**7.3.86** புக3ந்த லகூ3பத4ஸ்ய ச

'புக்' இறுதியில் நிற்கும் வினையடிகள், 'லகு4' 'இக்'ஐ ஈற்றயலாக நிற்கும் வினைகள் ஆகியவைகளுக்குப்பின் ஸார்வத4ாதுக, ஆர்த்3த4த4ாதுக வொட்டுக்களிணைக்கும்போதும், அவ்விணைகளினீற்றயலுக்குப் பதிலியாக 'குணம்' வரும்.

புகந்த – ஹ்ரேபயதி (<ஹ்ரீ): க்னோபயந்தி (க்னு) லகூ3பத4 பே4த3னம் (பி4த்3), சே2த3னம் (<சி2த்)

**7.3.87** நாப்4யஸ்தஸ்யாசி பிதி ஸார்வத4ாதுகே

'ப்'ஐ 'இத்'தாகக் கொண்ட (பிதி) ஒருயிரெழுத்தில் தொடங்கும் (அசி), ஸார்வத4ாதுக வொட்டுக்களுக்கு முன் நிற்கும் இரட்டிக்கப்பட்ட வினையடியின் 'இக்' பிரத்யிாஹாரத்தைச் சேர்ந்த ஈற்றயலாக நிற்கும் 'லகு4' உயிருக்கு 'குணம்' பதிலியாக வராது.

நேநக்தி ('அசி' அல்ல)

வா: ப3ஹுலம் ச2ந்த3ஸிதி வக்தவ்யம்

வேதமொழியில் பலவகையில் இவ்வாறாகும்.

ஜுஜோஷத் ('ஜுஸ்' தாதுவின்)

**7.3.88** பூ4 ஸுவோஸ் திஙி

(ஸார்வதாதுக வொட்டுக்கள்) 'திங்' (மூவிடப்பெயரொட்டுகள்) உ க்குமுன் நிற்கும் பூ4 'ஆகு', ஸு 'பெறு (குழந்தை), ஆகியவைகளின் 'இ க்'உயிருக்கு 'குணம்' பதிலியாகாது.

பூ4 + லுங் = பூ4 + ச்லி (3.1.43) = பூ4 + ஸிச் (3.1.44) = பூ4 + θ + த் (2.4.77) = அட் + பூ4த் (6.4.71) = அபூ4த் அபூ4:, அபூ4வம் ஸு + லோட் + ஸூ (+ ஸப்1 θ) + இ (2.4.72) = ஸு + அட் + ஐ (3.4.92.93) = ஸு + ஐ 6.1.88) = ஸுவை (6.4.77), ஸுவாவஹை, ஸுவாமஹை

**7.3.89** உதோ வ்ருத்3தி4ர்லுகி ஹலி

'ப்'ஐ 'இத்'தாகக் கொண்ட ஒரு மெய்யெழுத்தில் தொடங்கும் ஸார்வதாதுக

ஒட்டுக்கு முன் நிற்கும் விகரணம் கெட்டு (லுகி) நிற்கும் 'உ' வீற்றுத் தாதுவின் இறுதியுயிருக்கு 'விருத்தி' பதிலியாகம். யு + θ + திப் = யௌதி 'கலக்கிறான்', நௌதி (<நு): ஸ்தௌதி (<ஸ்து) ஆனால் ஸுநோதி (லுக் அல்ல) ஏதி (இ + θ + திப்)

**7.3.90** ஊர்ணோதேர் விப⁴ாஷா

'ப்'ஐ 'இத்'தாகக் கொண்ட ஒரு மெய்யெழுத்தில் தொடங்கும் ஸார்வதாதுகவொட்டுக்கு முன் நிற்கும் ஊர்ணு 'மூடு' என்ற தாதுவி ன் இறுதி 'உ'க்கு 'விருத்தி' விருப்பாக பதிலியாகும்.

ப்ர + ஊர்ஸ + θ + திப் = ப்ரோர்ணோதி, அல்லது ப்ரோர்ணௌதி

**7.3.91** கு³யோ அப்ருக்தே

'ப்'ஐ 'இத்'தாகக் கொண்ட ஒரேயொரு மெய்யெழுத்தில் தொடங்கும் ஸார்வதாதுக வொட்டுக்குமுன் நிற்கும் 'ஊர்ணு' என்ற வினையினீறான 'உ'க்கு குணம் பதிலியாக வரும்.

ப்ரோர்ணோத்

**7.3.92** த்ருணஹ இம்

ப்ஐ இத்தாகக் கொண்ட மெய்யெழுத்தில் தொடங்கும் ஸார்வதாதுக வொட்டுக்கு முன் நிற்கும் 'த்ருஹ்' 'நசுக்கு' என்ற வினையின் இறுதியிருக்குப்பின் 'இம்' இணைக்கப்படும். த்ருணேடி⁴ (8.3.13) அத்ருணேட்

**7.3.93** ப்³ரு'வ ஈட்

'ப்'ஐ 'இத்'தாகக் கொண்ட மெய்யெழுத்தில் தொடங்கும் ஸார்வதாதுகவொட்டுக்கு முன் நிற்கும் ப்³ரூ 'கூறு, பேசு' என்ற வினையின் பின்னால் 'ஈட்' (ஆகமம்) வரும்.

ப்³ரவீதி, ப்³ரவீஷி, ப்³ரவீமி, அப்³ரவீத் ஆனால் ப்³ரவாணி (உயிரெழுத்தில் தொடங்கும் ஒட்டுடன்) ப்³ருத: (பித்' ஒட்டல்ல)

**7.3.94** யஙோ வா

'ப்' ஐ 'இத்'தாகக் கொண்ட மெய்யெழுத்தில் தொடங்கும் ஸார்வதாதுக வொட்டுக்கு முன் நிற்கும் ('யங்' infersive foequefation) ஒட்டோடுவரும் வினையோடு 'ஈட' விருப்பாக ஆகமம் ஆகும்.

ஸ'ாகுனிகோ லாலபீதி, து³ந்து³பி: வாவதீ³தி லாவப்யதே பர்வர்தி, வர்வர்தி

**7.3.95** துரஸ்து ஸ'ம்யம் ; ஸார்வத⁴ாதுகே

து 'பலம்பெறு', ரு 'அழு', ஸ்து 'புகழ்' ஸ'ம் 'அமைதியுறு', அம் 'போ' ஆகிய வினைகளுடன், மேற்யெழுத்தில் தொடங்கும் ஸர்வதாதுகவொட்டுக்கள் இணைக்கும்போது, அவ்வொட்டுக்களுக்கு முன் 'ஈட்' (ஆகமம்) விருப்பாக

இணைக்கப்படும். ஸார்வதாதுக என்ற ரெசல் 87இலிருந்து அநுவிருத்திளாகிக் கொண்டிருந்த போதிலும் மறுபடியும் இங்கு இதைப் பயன்படுத்தியி ருப்பது, 'பித்' இங்கு அனுவிருத்தியாவதைத் தடை செய்வதற்காக

1. உத்தௌதி (ஹ் + து + θ திப்) அல்லது உத்தவீதி
2. உபரௌதி, உபரவீதி
3. உபஸ்தௌதி, உபஸ்தவீதி (4) ஸ'ாம்யத்[4]வம்.

ஸ'மீத்[4]வம் (5) அப்[4]யமதி, அப்[4]யமீதி

**7.3.96** அஸ்தி ஸிசோ: அப்ருக்கே

அஸ் 'இரு', 'ணிச்' ஒட்டு ஆகியவைகளுக்குப்பின் ஒரேயொரு மெய்யெழுத்தைக் கொண்ட (அப்ருக்தே) ஸார்வதாதுக ஒட்டுக்கு முன் 'ஈட்' (ஆகமம்) ஆகும்.

1. அஸ் + லங் = அட் + அஸ் + θ + த் (3.4.110 : 8.4.72) = ஆஸீத் (8.3.15).
2. க்ரு + லுங் = க்ரு + ஸிச் + த் (3.4.100) = அட் + கார் ஷ்–ஈத் (2.1; 6 .4.71 ; 8.3.59) = அகார்ஷீத் ஆனால் அஸ்தி, அகார்ஷம் (அப்ருக்தம் அல்ல)

**7.3.97** ப[3]ஹுலம் ச[2]ந்த[2]ஸி

வேத மொழியில், அஸ், ஸிச் ஒட்டோடு வரும் வினைகளுக்குப் பின் ஒரேயொரு மெய்யெழுத்தைக் கொண்ட ஸார்வ தாதுக ஒட்டுக்கு முன் 'ஈட்' பலவகையில் இணைக்கப்படும். ஆப: ஏவேத[3]ம் ஸலிலம் ஸர்வமா: இங்கு, 'ஆஸீத்' என்ற சொல்லுக்குப் பதிலியாக 'ஆ:' பய ன்படுத்தப்பட்டிருக்கிறது. அஹரேவாஸீத் ந ராத்ரி: இங்கு 'ஆஸீத்' பயன்படுத்தப்பட்டிருக்கிறது ஸிச் – கோபி[4]: அக்ஷா:, ப்ரத்யஞ்சம் அத்ஸா:, அக்ஷா:, அத்ஸா என்பவைகள் 'ஈட்' இணைக்கப்படாத 'ஸிச்' (Aorist) அக்ஷிஜா : (<க்ரு)

**7.3.98** ருத[3]ஸ்[1] ச பஞ்சப்4ய:

ருத்[3] 'அழு'வில் தொடங்கும் ஐந்து வினைகளுக்குப்பின் ஒரேயொரு மெய்யெழுத்தைக் கொண்ட ஸார்வதாதுக வொட்டு இணைக்கும் போது, அவ்வொட்டுக்கு முன் 'ஈட்' இணைக்கப்படும்.

1) அரோத்[3]த், அரோதீ; (2) அஸ்வபீத், அஸ்வபீ: (3) அஸ்'வஸீத், அ ஸ்'வஸீ: (4) ப்ராணீத், ப்ராணீ: (5) அஜக்ஷித், அஜக்ஷீ:

**7.3.99** அட் க[3]ார்க்[3]ய க[3]ாலவயோ:

மேலே குறிப்பிட்ட சூழலில் 'ருத்[3]' முதலிய ஐந்து வினைகளோடு 'அட்' ஆகமம் வரும் என்பது கார்க்யர், காலவர் ஆகியவாகளின் கருத்து.

1) அரோத[3]த், அரோத[3]: (2) அஸ்'வபத்: அஸ்'வப: (3) அஸ்'வஸத், அஸ்வஸ: (4) ப்ராணத், ப்ராண: (5) அஜக்ஷத், அஜக்ஷ:

**7.3.100** அத³: ஸர்வேஷாம்

அத்³ 'உண்' என்ற வினைக்குப்பின் ஒரேயொரு மெய்யெழுத்தைக் கொண்ட ஸார்வதாதுக ஒட்டு இணைக்கப்படும்போது 'அட்' ஆகமம் வருமென்பது எல்லா இலக்கண நூலார்களின் கருத்து.

(ஸர்வேஷாம்) ஆத³த், ஆத:

**7.3.101** அதோ த்³ர்கே⁴ா யஞி

'யங்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த (அரையுயிர்கள், மூக்கொலி, ப⁴) ஒரெழுத்தில் தொடங்கும் ஸார்வதா⁴துக வொட்டுக்கு முன் நிற்கும் 'அ' வீற்று வினைகளினீறு நெடிலாகும் (தீ³ர்கே⁴ா) அதாவது 'ஆ'வாகும். பச் + ஸப் + மி, = பசாமி, பசாவ: பசாம: ஏத⁴ா வஹே, ஏத⁴ா மஹே. ஆனால் சினுவ:, சினும: ('அத்' அல்ல)

**7.3.102** ஸுபி ச

'யன்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்தை முதலில் கொண்ட வேற்றுமையுருபுகளுக்கு முன் (ஸுபி) நிற்கும் பெயரடிச் சொல்லினீறான 'அ'வும் ஆவாகும்.

வ்ருக்ஷ + ஙே = வ்ருக்ஷ + ய = வ்ருக்ஷாய வ்ருக்ஷாப்⁴யாம், ஆனால் அக்³னிப்⁴யாம் (இயீற்றுச் சொல்) வ்ருக்ஷஸ்ய

**7.3.103** ப³ஹுவசனே ஜ²ல்யேத்

'ஜ²ல்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்தில் தொடங்கும் வேற்றுமையுருபுகளுக்கு முன் நிற்கும் 'அ' வீற்று பெயரடிச் சொல்லீனீறு, பன்மையில் ஏ யாகும்.

வ்ருக்ஷேப்⁴ய: (வ்ருக்ஷ + ப்⁴யஸ்) ஆனால் வ்ருக்ஷாப்⁴யாம் (பன்மையல்ல)

**7.3.104** ஓஸி ச

'ஓஸ்' (ஆறு, ஏழாம் வேற்றுமையிருமை) உக்கு முன் நிற்கும் 'அ'வீற்று பெயரடிச் சொல்லின்றுக்கும் 'ஏ' பதிலியாகும்.

வ்ருக்ஷ + ஓஸ் = வ்ருக்ஷே + ஓஸ் = வ்ருக்ஷயோ:

**7.3.105** ஆஙி சாப:

'ஆப்' (சாப், டாப், ட3ாப்) என்ற பெண்பாலொட்டில் முடியும் பெயர்ச் சொற்களுக்குப்பின் 'ஆங்' (3ஆம் வேற்றுமை பொருமை) ஓஸ் ஆகியவைகள் இணைக்கும்போது அப்பெயர்ச்சொற்களின்றான ஆ வுக்கு ஏ பதிலியாக வரும்.

மாலா + ஆங்/ஓஸ் = மாலே/ஓஸ் = மாலய் + ஆ = மாலயா, மாலயோ:

பாணினிக்குக் காலத்தால் முற்பட்ட இலக்கண நூலார்கள், பாணினியின் 'டா'வை 'ஆங்' என்ற கலைச் சொல்லால் குறிப்பிடுவார்கள்.

**7.3.106** ஸம்பு3த்3தெ4ள ச

'ஆப்' ஈற்றுப் பெயர்ச் சொல்லுக்குப் பின் விளிவேற்றுமையொருமையுருபை (ஸம்பு3த்3தெ4ள) யிணைக்கும்போதும் அதனீறுக்கு 'ஏ' பதிலியாகும்.
மாலா + ஸு (விளி) = மாலே + θ (6.1.69)

**7.3.107** அம்பார்த2 நத்3யோர் ஹ்ரஹ்ஸ:

அம்ப3ா, 'தாய்' என்ற பொருளைச் சுட்டும் சொற்கள், 'நதீ' என்ற ஸம்க்3ஞாவினால் சுட்டப்படும் சொற்கள் ஆகியவைகளோடு விளி வேற்றுமையொருமை யுருபையிணைக்கும்போது அச்சொற்களினீறு குறிலாகும்.
அம்ப3ா + ஸு = அம்ப3 + θ ; நதீ + ஸு = நதி + θ ; வது4

வா: ட3லகவதீனாம் ப்ரதிஷேதோ4 வக்தவ்ய:
'தாய்' என்ற பொருளைச் சுட்டும் சொற்கள் 'ட', 'ல', 'க'வோட (ஆனால் கூட்டு மெய்யாகாமல்) வந்து அன்புடன் அழைத்தல் என்ற பொருளில் வரும்போது இவ்விதி செயற்படாது. அம்ப3ாடே3, அம்ப3ாலே, அம்பி3கே

வா: ச2ந்தஸி வேதி வக்தவ்யம்
வேதமொழியில் இது விருப்பாகும்.
அம்ப3ாடே3 / அம்ப3ாட3, / அம்ப3ாலே / அம்பால; அம்பி3கே / அம்பி3க

வா: தலோ ஹ்ரஸ்வோ வாஙி ஸம்பு3த்3 த4யோரிதி வக்தவ்யம்
'தல்' ஒட்டிணைத்து ஆக்கப்பட்ட பெண்பாற் சொல்லுக்குப்பின் ஙி, ஸம்பு3த3தி4 7, 8ஆம் வேற்றுமையொருமையுருபுகள் இணைக்கும் போது அச்சொற்களினீறு விருப்பாக குறிலாகும். இது வேதமொழியில் மாத்திரம் காணப்படும். தே3வதே ப4க்தி: தேவதாயாம் பக்தி: தேவத, தேவதே

வா: மாத்ருணாம் மாத்ரச் புத்ரார்த2மர்ஹதே 'அத்தகைய தாய்க்குத் தகுந்த மகன்' (புத்ரார்த2மர்ஹதே) என்ற பொருளில் 'மாத்ரு' (என்ற சொல்லையிறுதியுறுப்பினராகக் கொண்ட பஹுவ்ரீஹித் தொகையில்) வுக்கு 'மாத்ரச்' என்ற சொல் பதிலியாக 'வம்புத்தி'யில் வரும். கூ3ர்க்3மாத;

**7.3.108** ஹ்ரஸ்வஸ்ய குண:

விளிவேற்றுமையொருமையில் (ஸம்பு3த்3தெ4ள) பெயர்ச்சொல்லின் ஈறாகவமையும் குறிலுக்கு (இக்) குணம் பதிலியாகும் அக்னே, வாயோ

**7.3.109** ஜஸி ச

'இக்' ஈற்றுச் சொற்களோடு 'ஜஸ்' (வேற்றுமையுருபு) இணைக்கும்போதும், அவ்வீற்றுக்குக் 'குணம்' பதிலியாகும். ஹரி + ஜஸ் = ஹரே + அஸ் = ஹரய:, வாயவ:, பிதர; (6.1.78; 8.2.66; 3.15)

வா: ஜஸாதி³ஷு ச²ந்த³ஸி வா வசனம் ப்ராக்ணௌ சங்யுபத⁴ாயா ஹ்ரஸ்வ இத்யேதஸ்மாத் இந்தப்பாதத்தினிறுதி வரையில் காணப்படும் விதிகள் யாவும், வேதமொழியில் விருப்பாகப் பயன்படுத்தப்படும். அம்பே³, அம்ப³; த³ர்வீ, த³ர்வி, ஸ¹த்க்ரத்வ:, ஸ¹தக்ரதவ;, பஸ்வே, பஸவே

**7.3.110** ருதோ ஙி ஸர்வநாமஸ்த²ானயோ;

'ரு' வீற்றுச் சொற்களோடு ஙி (7ஆம் வேற்றுமையொருமை), ஸர்வநாமஸ்தானமெனப்படும் வேற்றுமையுருபுகள் ஆகியவைகளை இணைக்கும்போது அவ்வீறு 'குணம்' ஆகும்.

மாதரி (மாத்ரு + ஙி); பிதரி ; மாதரௌ (மாத்ரு + ஔ) மாதரம் (மாத்ரு + அம்) : மாதர : (மாத்ரு + ஜஸ்)

**7.3.111** கே⁴; ஙிதி

'கி⁴' என்ற ஸம்க்ஞாவினால் சுட்டப்படும் பெயரடிகளுக்குப்பின் 'ங்'ஐ இத் தாகக் கொண்ட வேற்றுமையுருபுகள் 4, 5, 6ஆம் வேற்றுமையொருமை) இணைக்கும்போது அவைகளினீற்றுக் 'குணம்' பதிலியாகும்.

அக்னயே, அக்னே:, வாயவே, வாயோ:

**7.3.112** ஆண் நத்³யா;

'நதீ' என்ற ஸம்க்³ஞாவினால் சுட்டப்படும் சொற்களுக்குப்பின் மேலே கூறிய வேற்றுமையுருபுகள் (ஙித்) இணைக்கும்போது அவைகளுக்குப்பின் 'ஆட்' ஆகமம் ஆகும்.

நதீ + வே = நதீ + ஆட் = ஏ = நத்யை, நத்³யா:,

நத்³யாம: வத்⁴வௌ, வத்⁴வா:, வத்⁴வாம்.

**7.3.113** யாட³ாப;

'ஆப்' (சாப், டாப், ட3ாப்) இணைத்து ஆக்கப்பட்ட பெண்பாற்சொற்களோடு 'ங்'ஐ 'இத்' தாகக் கொண்ட வேற்றுமையுருபுகள் இணைக்கும்போது அவ்வேற்றுமையுருபுகளுக்கு முன் 'யாட்' (ஆகமம்) வரும்.

மாலா + ஙே = மாலா + யாட் + ஏ = மாலாயை,

மாலாயா:. மாலாயாம்

**7.3.114** ஸர்வநாமன: ஸ்யாட்³ட்⁴ரஸ்வஸ்¹ ச

'ஆப்' இல் முடியும் மாற்றுப் பெயர்களோடு (பெண்பால்) (ஸர்வநாம்ன:) 'ங்'ஐ 'இத்'தாகக் கொண்ட வேற்றுமையுருபுகளை இணைக்கும்போது அவ்வுருபுகளுக்கு முன்னால் 'ஸ்யாட்' ஆகமம் ஆகும். அம்மாற்றுப் பெயர்களினீறு குறிலாகவும் ஆகும். ஸர்வஸ்யை, ஸர்வஸ்யா:, ஸர்வஸ்யாம் (ஸர்வா), விஸ்¹வஸ்யை, விஸ்¹வஸ்யா;, விஸ்¹வஸ்யாம்

**7.3.115** விப⁴ாஷா த்³வித்யா த்ருதீயாப்⁴யாம்

த்³விதீயா, த்ருதீயா என்ற சொற்களுக்குப்பின் மேலே கூறிய வேற்றுமையுருபுகளையிணைக்கும்போது ட'ஆட்' விருப்பாக இணைக்கப்படும். ஆயினும் அச்சொற்களினீறு குறிலாகும். த்³விதீயஸ்யை, த்³விதீயாயை; த்ருதீயஸ்யை, த்ருதீயாயை

**7.3.116** ஙேராம் நத்³யாம் நீப்⁴ய;

'நதி' எனப்படும் சொற்கள் 'ஆப்' இணைத்தாக்கப்பட்ட பெண்பாற்சொற்கள் 'நீ' 'தலைவன்' ஆகியவைகளோடு 'ஙி' (7ஆம்வேற்றுமையொருமை) இணைக்கும்போது அவ்வுருப்புக்கு 'ஆம்' பதிலியாக வரும்.

வதூ⁴ + ஙி = வதூ⁴ + ஆம் = வதூ⁴ + ஆட் + ஆம் = வத்⁴ வாம், நந்³யாம்;

ஸேனானீ + ஙி = ஸேனானீ + ஆம் = ஸேனான்யாம்

**7.3.117** இது³த்³ப்⁴யாம்

இத் (இ), உத் (உ) வீற்று 'நதீ'ச் எனப்படும் சொற்களோடு 'ஙி' இணைக்கும்போது அவ்வேற்றுமையுருபுக்கு 'ஆம்' பதிலியாக வரும்.

க்ருத்யாம் (க்ருதி + ஙி = க்ருதி = ஆம்)

தே⁴ன்வாம் (தே⁴னு + ஙி = தே⁴னு + ஆம்)

**7.3.118** ஔத்

'இத்' அல்லது 'உத்' ஈற்றுச் சொற்களுக்குப்பின்னால் இணைக்கப்படும் 'ஙி'க்கு 'ஔ' (ஔத்) பதிலியாகும்.

ஸகி² + ஙி = ஸகி² + ஔ = ஸக்²யெள இவைகள் 'நதீ' அல்லது 'கி⁴' என்ற ஸம்க்³ஞாவினால் சுட்டப்பட்டவையல்ல.

**7.3.119** அச் ச கே⁴:

'இ' அல்லது 'உ' வீற்று 'கி4' எனப்படும் சொற்களுக்குப் பின் 'ஙி' இணைக்கும்போது. இவ்வுருப்புக்கு 'ஔ' பதிலியாகும். அப்பெயர்ச்சொற்களினீற்றுக்குப் பதிலியாக 'அ' வரும்.

அக்³னெள (அக்³னி + ஙி = அக்³னி + ஔ = அக்³ன ஔ) வாயெள

**7.3.120** ஆஙோ நா அஸ்த்ரியாம்

பெண்பாலைச் சுட்டாத 'கி⁴' எனப்படும் சொற்களின் பின்னால் இணைக்கப்படும். 'ஆ' (3 ஆம் வேற்றுமையொருமை) வுக்கு 'நா' பதிலியாகும்.

அக்³னனா (அக்³னி + ஆங் = அக்³னி + நா)

வாயுனா; வாரிணா, மது⁴னா

ஆனால் மத்யா (பெண்பாற்சொல்)

**7.4.1** ணௌ சங்யுபத⁴ாயா: ஹ்ரஸ்வ:

இயக்குவினையடிச் சொல்லினீற்றயலாக நிற்கும் (உபத⁴ாயா:, ணௌ)

உயிருக்குப்பின் 'சங்' ஒட்டு வரும்போது அவ்வுயிர் குறிலாகும்.
சங் (Aorist Marker)
க்ரு + ணிச் + சங் + த் (3.1.48) = காரி + சங் + த் (2.115)= கார் + θ + சங் + த் (6.4.51) = கார் + சங் + த் = ககரத் (6.1.11)= சகரத் (4.62) = சீகரத் (4.93–4) + அட் ச் – கரத் (6.4.71) = அசீகரத்: அஜீஹரத்.

வா: உபத[4]ாஹ்ரஸ்வே ணேணிச்யுபஸம்க்[2]யானம் 'சங்' ஒடு வரும் இயக்குவினையின் இயக்குவினை (இரு இயக்கு வினைகள்) யிலும் ஈற்றயல் உயிர் குறிலாகும்.
அவீவத[3]த் (<வத்[3]) வீணாம் பரிவாத[3]கேன

**7.4.2** நாக்[3]லோபி ஸாஸ்வ்ரு[1]திதாம்
'ணிச்' ஒட்டு (இயக்குவினையொட்டு) இணைக்கப்படும்போது இறுதியுயிர் கெடும் நாம த[4]ாது (elenouinative) ஸ[1]ாஸ் 'கற்பி, கட்டளையிடு', 'ரு' வை 'இத்'தாகக் கொண்டதாக தாது பாடத்தில் முதல் முதலில் கொடுக்கப்பட்ட தாதுக்கள் ஆகியவைகளுக்குப்பின் 'சங்' ஒட்டோடு கூடிய 'ணிச்' ஒட்டு வரும்போது, அவ்வினையடிகளின் ஈற்றயல் குறிலாகாது ராஜானம் அதிக்ராந்தவான் அதி + ராஜ் ~~θθ~~ + ணிச் + சங் + த் (6.4.144) = அத்யராஜத் அவன் அரசனை தோற்கடித்து விட்டான்' ; ஸ[1]ாஸ் + ணிச் + சங் + த் = அஸ[1]ஸ[1]ாஸத்; ப[3]ாத்[4]ரு – ணிச் + சங் + த் = அப[3]ாப[4]த[4]த்'அவன் கொடுமைப்படித்தினான்'

**7.4.3** ப்[4]ரா ஜப[4]ாஸ ப[4]ாஷ தே[3]ப ஜீவமீல பீட[3]ாமன்யதரஸ்யாம் ப்[4]ராஜ் 'ஒளி வீசு', ப[4]ாஸ் 'ஒளிவீசு', ப[4]ாஷ் 'பேசு', தீப் 'ஒளிவீசு'. ஜீவ் 'உயிரோடிரு', மீல் 'கண்ணைமூடு'. பீட்[3] 'துன்புறுத்து' ஆகியவைகளுக்குப் பின் 'சங்' ஒட்டு 'ணிச்' ஒடு சேர்ந்து வரும்போது, அவ்வினைகளினீற்றயல் உயிர் விருப்பாக (அன்யதரஸ்யாம்) குறிலாகும்.
1) ப்ராஜ் – அபி[3]ப்[4]ரஜத், அப[3]ப்[4]ராஜத் (2) ப[4]ாஸ் அப[3]ப[4]ாஸத், அபீ[3]ப[4]ாஸத் (3) ப[4]ாஷ்–அப[3]–ப[4]ாஷத், அபீ[3]ப[4]ஷத் (4) தீ[3]ப் அதி[3]தீ[3]பத், அதீ[3]தி[3]பத் (4)ஜீப் – அஜிஜிவத், அஜீவத், (5) மீல்ஜிஅமிமீலத் அமீமிலத் (6) பீட்[3] – அபிபீட[3]த், அபீபிடத் ஈற்றயலுயிர் குறிலாகும்போது, இரட்டித்த அசையில் குறில் நெடிலாகும் (7.4.94)

வா: காண்யாதீ[3]னாம் வேதி வக்தவ்யம்
'காணி' முதலியவைகளையும் இவைகளுடன் சேர்த்துக் கூறவேண்டும்.
காணி – அசகாணத், அசீகணத்:
வாணி – அவவாணத், அவீவணத்
ராணி – அராணத், அரீரணத்
ஹேடி[1] – அஜீஹிடத், அஜிஹெடத்
லோபி – அலுலோபத், அலூலுபத்

**7.4.4** லோப: பிப³தேரீச்சாப்⁴யானஸ்ய

பா 'குடி' என்ற வினைக்குப்பின் 'ணிச்' ஒடு 'சன்' வரும்போது அவ்வினையினிறுதியுயிர் கெடும். இரட்டிக்கப்பட்ட அசையிறுயிருக்கு 'ஈ' பதிலியாகும். பா + ணிச் + சங் + த் = பாய் – இ சங் + த் (7.3.37) = பயி + சங் + த் = பிப்ய் θ – அ – த் = அபீப்யத்

**7.4.5** திஷ்ட²தேரித்

ஸ்த²ா 'இரு, நில்'வுக்கப்பின் 'ணிச்' உம் 'சங்' உம் வரும் போது, அவ்வினையினீற்றயலுக்கு 'இத்' பதிலியாக வரும்.

ஸ்த²ா + ணிச் + சங் + த் = அத² – ப் – இ + சங் + த் = அத²ா + θ + சங் + த் (6.4.51) = அதிஷ்டி²பத்

**7.4.6** ஜிக்⁴ரதேர் வா

க்³ரா 'வாசனை, பார்' என்ற தாதுவோடு 'ணிச்' ஒடு 'சங்' ஒட்டு இணைக்கும்போது அவ்வினையின் ஈற்றயலுயிருக்கு 'ஈ' விருப்பாகப் பதிலியாக வரும்.

அஜிக்⁴ரிபத் அல்லது அஜிக்⁴ரபத்

**7.4.7** உர்ருத்

இரட்டிக்கப்பட்ட (சங்) இயக்குவினையின் ஈற்றயலாக நிற்கும் 'ரு' (குறிலும், நெடிலும்) உக்கு குறில் 'ரு' விருப்பாகப் பதிலியாக வரும்.

இது இர் (7.1.101). அர் (7.3.86). ஆர் (7.2.114) வருவதைத் தடை செய்கிறது.

அசிகீர்தத் (அ) அசீக்ருதத்;

அவவர்தத் (அ) அவீவ்ருதத்;

அமமார்ஜத் (அ) அமீம்ருஜத்

**7.4.8** நித்யம் ச²ந்த³ஸி

வேதமொழியில் 'ணிச்' உடன் வரும் 'சங்' ஒட்டுக்கு முன் நிற்கம் வினையினீற்றயலான 'ரு' உக்கு (குறிலும். நெடிலும்) குறில் கட்டாயமாகப் பதிலியாக வரும்.

அவீவ்ருத⁴த் புரோட³ாஸே'ன

**7.4.9** த³யதேர் தி³கி³ விடி

தே³ (ங்) 'காப்பாற்று (1.1011) என்ற தானுவுக்குப்பின் 'லிட்' ஒட்டு இணைக்கம்போது, அவ்வினைக்கு 'தி³கி³' பதிலியாக வரும்.

அவதி³க்³யே, அவதி³ க்யாதே, அவதி³க்³யிரே த³ய த³ானே (1.510 ) என்ற தாதுவை இங்கு குறிக்கவில்லை. இந்த தாது 'ஆம்' ஆகமத்துடன் வருமென்று சூ.3.1.37 விதிக்கிறது. 'தி³கி³' பதிலியாக வருவதால் இங்கு இரட்டித்தல் நிகழாது.

**7.4.10** ருதஸ்[1] ச ஸம்யோக[3]ாதே[3]ர் குண:
கூட்டுமெய்யை முதலில் கொண்டதாகவும் (ஸம் யோக[3]ா தே[3]ர்), 'ருத்' (ரு) ஐ யிறுதியில் கொண்டதாகவுமுள்ள தாதுவுக்குப் பின் 'லிட்' ஒட்டிணைக்கும்போது, அவ்வினையினிறுதியுயிருக்கு 'குணம்' பதிலியாகும்.
**ஸ்த்ரு – ஸஸ்வரது:, ஸஸ்வரு:**
த்[4]வ்ரு – த[3]த்[4]வரது:, த[3]த்[4]வரு:,
ஸ ம்ரு – ஸஸ்மரது:, ஸஸ்மரு:

வா: ஸம்யோக[3]ாதே[3]ர் கு[3]ணவித[4]ானே
ஸம்யோக உபதா[4]க்[3]ரஹணம் க்ருஞர்த[2]ம் கர்தவ்யம் கூட்டுமெய்கள் ஈற்றயலில் நின்றாலும் (முதலில் வராவிட்டாலும்) 'க்ருஞ்' உக்கா க 'குணம்' பதிலியாகும் என்று கூறவேண்டும்.
ஸஞ்சஸ்கரது:, ஸஞ்சஸ்கரு: ; க்ரு + லிட் = சக்ரு + அதுஸ், ஸம்சக்ரு அது: ஸம்ச–ஸ்–க்ரு (6.1.136, 137) ஸம்சஸ்க்ரு + அது ஸஞ்சஸ்கரது.

**7.4.11** ருச்ச[2]த்ய்ருதாம்
ருச்ச[2] 'போ' (6.15), ரு (1.183) 'போ' 'ரு' (நெடில்) வீற்று வினைகள் ஆகியவைகளோடு 'லிட்' இணைக்கம் போது இவ்வினைகளினுயிருக்கு 'குணம்' பதிலியாக வரும்.
ருச்ச[2] – ஆனர்ச்ச[2], ஆனர்ச்ச[2]து: ஆனர்ச்சு[2]:
ரு – ஆரது:, ஆரு:
ருகாராந்த; நிசகரது:,
நிசகரு;,
நிஜக[3]ரது:,
நிஜக[3]ரு:

**7.4.12** ஸ்ரு[1] த்[3]ரு ப்ராம் ஹ்ரஸ்வோ வா
ஸ்[1]ரு[1] 'காயப்படுத்து' (9.18), த்[3]ரு 'உடை', (9.23) ப்ரு 'காப்பாற்று, நிரப்பு' (9.19) ஆகியவைகளோடு 'லிட்' ஒட்டிணைக்கும் போது, அவ்வினைகளினிறுதியுயிர்களுக்குப் பதிலியாக குறில் விருப்பாக வரும்.
மேலே கூறப்பட்ட விதியின் விருப்பு விதி இது.

விஸ[1]ஸ்ரது:,
விஸ[1]ஸ்ரு: (குறில்)
விஸஸரது:,
விஸஸரு: (குணம்)
வித[3]த்[3]ரது:,
வித[3]த்[3]ரு: ;

**7.4.13** கே அண:

'க' ஒட்டுக்கு முன் நிற்கும் 'அண்' பிரத்தியாஹாரத்தின் ஒரெழுத்தை யீறாகக் கொண்ட வினைகளின் (அ.இ.உ) நெடிலுக்கு குறில் பதிலிபாக வரும்.

க்$^3$ரு + க (3.1.135) + டாப் = க்ஞ்ஓ + அ + டாப் (6.4.84) க$^3$ஞா; க்$^3$ஞா + க + டாப் (5.3.90) / க்$^3$ஞா + கண் + டாப் (5.3.79) = க்$^3$ஞக/க்$^3$ஞகா (6.3.47); குமாரீ + க + டாப் = குமாரிகா; கிஸோரஸ$^1$ ரிகா (<கிஸோரஸ$^1$ரி); ஆனால் கோகா; நௌகா

**7.4.14** ந கபி

'கபி' என்ற வொட்டுக்கு முன் நிற்கும் 'அண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரின் நெடிலுக்குப் பதிலியாகக் குறில் வராது.

ப$^3$ஹு குமாரீக:

(பஹு குமாரீ + கப்)

பஹு வதூ$^4$க:

ப$^3$ஹுலக்ஷ்மீக:

**7.4.15** ஆபோ அன்யதரஸ்யாம்

'ஆப்' (சாப், டாப், ட$^3$ாப்) ஈற்றுச் சொற்களுக்குப்பின் 'கபி' என்றவொட்டு வரும்போது, அச்சொற்களினீறு விருப்பாகக் குறிலாகாது.

ப$^3$ஹுக$^2$ட்வாக:

ப$^3$ஹு க$^2$ட்வக:

ப$^3$ஹு மாலாக:

ப$^3$ஹுமாலக:

**7.4.16** ரு$^1$த்$^3$ரு$^1$ ஸோ அஙி கு$^3$ண:

'அங்' (Aorist) என்றவொட்டுக்குமுன் நிற்கும் வினையினீறான 'ரு', த்$^3$ரு$^1$ஸ் 'உணர், பார்' என்ற வினையின் 'ரு' ஆகியவைகளுக்கு 'குணம்' பதிலிபாக வரும்.

க்ரு + லுங் = க்ரு + ச்லி (3.1.43) = க்ரு$^1$ + அங் (3.1.59) = அத் + க்ரு + அத் = அகரத்; த்$^3$ருஸ்$^1$ – அத$^3$ர்ஸ$^1$த்

**7.4.17** அஸ்யதேஸ் து$^2$க்

அஸ் 'எறி, வீசு' என்ற தாதுவுக்குப் பின் 'அங்' வரும்போது அதற்கு ப்பின் 'து$^2$க்' ஆகமம் ஆகும்.

ஆஸ்யத்

ஆஸ்யதாம்

ஆஸ்யன்

**7.4.18** ஸ்'வயதேர:

ஸ்பி 'உப்பு' 'பருமனாகு' என்ற தாதுவோடு 'அங்' இணைக்கும்போது அத்தாதுவுக்குப்பின் 'அ' ஆகமம் ஆகும்.

அஸ்'வத், அஸ்1வதாம், அஸ்வது:

**7.4.19** பத: பும்

'அங்' உக்கு முன் நிற்கும் பத் கீழே விழு' என்ற தாதுவுக்கப் பின் 'பும்' ஆகமம் ஆகும்.

அபப்தத், அபப்தாம், அபப்தன்

**7.4.20** வச: உம்

வச் 'பேசு' தாதுவுக்குப்பின் 'அங்' வரும்போது தாதுவோடு 'உம்' ஆகமம் ஆகும்.

வச் + லுங் = வச் + அங் + த் = அவ – உ – சத் = அவோசத், அவோசத் அவோசன்

**7.4.21** ஸ்'ங: ஸார்வதா[4]துகே கு[3]ண:

ஸீ'ங் 'படுத்துக்கொள்' என்ற தாதுவுக்குப்பின் ஸார்வதாதுக வொ ட்டுக்கள் இணைக்கும்போது அத்தாதுவினிறுதி உயிருக்கு 'குணம்' ப திலியாகும்.

ஸே'தே, ஸ'யாதே, ஸே'ரதே

**7.4.22** அ யங்யி க்ஙிதி

'ய்'ஐ முதலில் கொண்டவொட்டுக்களோ, 'க்' அல்லது 'ங்' என்றவொழுத்தை 'இத்'தாகக் கொண்டவொட்டுக்களோ இணைக்கும்போது 'ஸீங்' என்ற தாதுவின் இறுதியுயிருக்குப் பதிலியாக 'அயங்' வரும். ஸ'ய்யதே ('யக்' ஒட்டுடன்) (பாவே); ஸய்யதே ('யங்' உடன்); ப்ரஸய்ய (க்த்வா' உடன்);

**7.4.23** உபஸர்க[3]ாத்[3] ஹ்ரஸ்வ ஊஹதே:

ஊஹ் 'ஊஹி' என்ற தாது ஒருபசர்க்கத்துடன் கூட நின்று அதற்குப் பின் 'ய்' ஐ முதலில் கொண்ட ஒட்டுக்களோ அல்லது 'க்' அல்லது 'ங்' ஐ 'இத்'தாகக் கொண்டவொட்டுக்களோ, இணைக்கும்போது அவ்வினையின் உயிருக்கு குறில் பதிலியாகும்.

ஸம் – ஊஹ் + யக் + தே = ஸமுஹ்யதே; முஹ்ய க[3]த: ஆனால் ஊஹ்யதே

**7.4.24** ஏதேர் லிஙி

'ய்' இல் தொடங்கும் 'லிங்' ஒட்டு அல்லது 'க்' அல்லது 'ங்' ஐ 'இத்'தாகக் கொண்ட 'லிங்' ஒட்டு ஆகியவைகளுக்குமுன் உபசர்க்கத்தோடுகூட ஈ 'போ' என்ற தாது நிற்கும்போது அத்தாதுவின் உயிர் குறிலாகும்.

25க்குப் புறவடை

உதி[3]யாத், ஸமியாத், அன்வியாத்

**7.4.25** அக்ருத் ஸார்வத$^{4}$ாதுகயோர்தீ$^{3}$ர்க$^{4}$:

ஒருயிரெழுத்தை யீறாகக் கொண்ட தாதுக்களுக்குப்பின்இ 'க்ருத்' அல்லது ஸார்வதாதுகமல்லமத 'யீ' என்ற எழுத்தை முதலில் கொண் ட 'க்' அல்லது 'ங்' ஐ 'இத்'தாகக் கொண்ட வொட்டுக்கள் இணைக்கப்படும்போது, அவ்வினைகளினிறுதியுயிர் நெடிலாகும்.

ப்$^{3}$ருஸாயதே (க்யங்), ஸுக$^{2}$ாயதே: ; சீயதே, ஸ்தூயதே ('யக்' செயப்பாட்டு வினை) ; சேசீயதே, தோஷ்யதே (யங்) சீயாத், ஸ் தூயாத் (ஆஸீ$^{1}$ர்லிங்)

**7.4.26** ச்வெள ச

ஒருயிரெழுத்தையீறாகக் கொண்ட தாதுவுக்குப்பின் ச்வி (5.4.50) ஒட்டிணைக்கும்போது, அத்தாதுக்களினிறுதியுயிர் நெடிலாகும். ஸு$^{1}$சீகரோதி, ஸு$^{1}$ச் பவதி, ஸுசீஸ்யாத்; படுகரோதி, படுப$^{4}$வதி, படூஸ்யாத்

**7.4.27** ரீங்ருத:

'க்ருத்' அல்லது ஸார்வதாதுகமல்லாத 'ய்' என்ற எழுத்தில் தொடங்கும் ஒட்டுக்கள், 'ச்வி' என்ற வொட்டுக்கள் ஆகியவைகளுக்கு முன் நிற்கும் வினையீன்றான 'ருத்' (ரு) உக்கு ரீங் பதிலியாகும். மாத்ரீயதி, மாத்ரீயதே (க்யச்), சேக்ரீயதே (யங்), மாத்ரீபூ$^{4}$த: (ச்வி)

**7.4.28** ரிங் ஸ$^{1}$யக் லிங்க் ஷு

ஸ$^{1}$, யக், லிங் ஒட்டுக்களுக்குமுன் நிற்கும், ஒரு தாதுவினீறான ரு$^{1}$த்(1)வுக்கு பதிலியாக வரும்.

'ய்'யில் தொடங்கும் ஸார்வதாதுகமல்லாத 'லிங்' ஒட்டுக்கள் என்று சுட்டும், அந்தவொட்டு 'யாஸ்' (ஆஸீ$^{1}$ர்லிங்) ஆகும்.

ஸ – ஆத்$^{3}$ரியதே, ஆத்$^{4}$ரியதே; யக் – க்ரியதே ஹ்ரியதே; லிங் க்ரியாத், ஹ்ரியாத்

**7.4.29** கு$^{3}$ணோ அர்தி ஸம் யோகாத்யோ:

'யக்' ஒட்டு, 'ய்'இல் தொடங்கும் ஸார்வதாதுகமல்லாத 'லிங்' ஒட்டுக்கள் ஆகியவைகளுக்கு முன் நிற்கும் ரு$^{1}$ 'போ' தாது அல்லது கூட்டு மெய்களில் தொடங்கும் வினைகள் ஆகியவைகளினிறுதி யெழுத்துக்கு குணவெழுத்து பதிலிபாக வரும்.

அர்யதே, அர்யாத்; ஸ்மர்யதே, ஸ்மர்யாத்

**7.4.30** யஙி ச

'ரு' என்ற தாது, கூட்டு மெய்களில் தொடங்கும் வினைகள், ஆகியவைகளுக்குப்பின்னால் 'யங்' ஒட்டு இணைக்கும்போதும், அவ்வினைகளினிறுதி 'ருத்' (ரு)வுக்குப் பதிலியாக அதன் குணவெழுத்து பதிலிபாக வரும்.

அரார்யதே, ஸாஸ்மர்யதே, தாத்$^{4}$வர்யதே; ஸாஸ்வர்யதே

வா: ஹந்தேர் ஹிம்ஸானாம் யஙி க்⁴வீப⁴ாவோ வக்தவ்ய:
ஹன் 'கொல்' என்ற தாதுவோடு 'யங்' ஒட்டு வரும்போது அதற்கு 'க்⁴வீ' பதிலியாகும்.
ஜேக்⁴னீயதே

**7.4.31** ஈ க்⁴ராத்⁴மோ:
க்⁴ரா 'முகர்ந்துபார்', த்⁴மா 'ஊது' என்ற வினைகளுக்குப்பின் 'யங்' ஒட்டு இணைக்கும்போது அவைகளினிறுதியுயிருக்கு 'ஈ' பதிலியாகும்.
ஜேக்⁴ரீயதே, தே³த்⁴மீயதே

**7.4.32** அஸ்ய ச்வெள
'ச்வி' ஒட்டுக்கு முன் நிற்கும் தாதுவினீறான 'அ'வுக்கு 'ஈ' பதிலியாகும்.
ஸு¹க்லீ ப⁴வதி (ஸு¹க்ல), ஸு¹க்லீஸ்யாத்;
க²ட்வீ கரோதி, க²ட்வீஸ்யாத்

**7.4.33** க்யசி ச
'க்யச்' ஒட்டுக்கு முன் நிற்கும் பெயரடிச் சொல்லினீறான 'அ' அல்லது 'ஆ'வுக்கும் 'ஈ' பதிலியாகும்.
புத்ரீயதி (புத்ர), க⁴டீயதி (க⁴ட), க²ட்வீயதி (க²ட்வா), மாலீயதி (மாலா)

**7.4.34** அஸ¹னாயோத³ன்ய த⁴னாயா பு³பு⁴க்ஷா பிபாஸாக³ர்தே⁴ஷு அஸ¹வாய, உத³ன்ய, த⁴னாய என்ற நாமதாதுக்கள் முறையே 'பசியான' 'தாகமான', த⁴னாய 'பேராசைப்படு' என்ற பொருட்களில் 'க்யச்' ஒட்டு இணைத்து விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்ட சொற்கள் அஸ¹னாய – என்ற சொல் 'அஸ¹ன'வுடன் 'க்யச்' இணைக்கும்போது அதவிறுதியுயிர் நெடிலாவது விதிக்குப் புறம்பானது. உத³க என்ற சொல்லோடு 'க்யச்' இணைக்கும்போது, 'உதன்' என்ற ஆதேசம் விதிப்படியானதல்ல. 'த⁴ன' என்ற சொல்லோடு 'க்யச்' இணைக்கும்போது அதனீறு நெடிலாவது நிபாதனம். அஸ¹னீய: 'பசியில்லாவிட்டாலும் உண்ணவிரும்புபவன்', உத³கீய: 'தாகமில்லாவிட்டாலும் தண்ணீரை விரும்புபவன்', த⁴னீய: 'பேராசையில்லாமல் செல்வத்தை விரும்புபவன்' இச்சொற்கள் விதிப்படியாக்கப்பட்ட சொற்கள் 7.4.33க்குப் புறனடை.

**7.4.35** நச்ச²ந்த³ஸ்யபுத்ரஸ்ய
வேதமொழியில், 'புத்ர' என்ற சொல்லைத் தவிர்த்து மற்ற 'அ' வீற்றுச் சொற்களோடு 'க்யச்' ஒட்டிணைக்கும்போது அவைகளினிறுதியுயிர் நெடிலாகாது. 'ஈ'யும் பதிலியாக வராது.
தே³வான் ஜிக³ாதி ஸும்னயு:
ஆனால் புத்ரீயந்த ஸுத³ானவ:

வா: அபுத்ராதீ$^3$னாமிதி வக்தவ்யம்
'புத்ர' என்ற சொற்களும் அதைப் போன்ற வேறு சில சொற்களும் என்று சூத்திரம் அமைய வேண்டும்.
ஜனீயந்தோ அன்வக்$^3$ரவ;

**7.4.36** து$^3$ரஸ்யுர்த்$^3$ரவிணஸ்யுர் வ்ருஷண்யதி ரிஷண்யதி
வேதமொழியில் து$^3$ரஸ்யு: 'கெடுதி செய்ய விரும்புபவன்', த்$^3$ர விணஸ்யு: 'செல்வத்தை விரும்பும் அல்லது கொடுக்க விரும்புபவன்', விருஷண்யதி 'எருதை விரும்பும்'. ரிஷண்யதி 'விழுதல், சிரைந்து பே ாதல்' ஆகியவைகள் 'க்யச்' ஒட்டிணைத்து விதிக்குப் புறம்பாக ஆக் கப்பட்ட சொற்கள். 'து$^3$ஷ்ட' என்ற சொல்லோடு 'க்யச்' ஒட்டிணைக்கும்போது அதற்கு து$^3$ரஸ் பதிலியாவது விதிப்படியல்ல. அவியோனாத$^3$ரஸ்யு: = து$^3$ஷ்டீயதி 'கெடுதிசெய்ய விரும்புகிறான'; த்$^3$ரவிண' என்ற சொல்லுக்கு 'த்$^3$ரவிணஸ்' பதிலியாகிறது. த்$^3$ரவிணஸ்யுர் விபன்யனா = த்$^3$ரவிணீயதி; வ்ருஷண்யதி என்ற சொல்லில் 'வ்ருஷ' என்ற சொல்லுக்கு 'வ்ருஷண்' பதிலியாக வருவது. நிபாதனம்; ரிஷ்ட என்ற சொல்லுக்கு விதிக்குப் புறம்பாக 'ரிஷண்' பதிலியாக வருகிறது. ரிஷ்டீயதி என்று இருக்க வேண்டும்.

**7.4.37** அஸ்$^1$வாக$^4$ஸ்யாத்
அஸ்$^1$வ 'குதிரை', 'கெடுதி' என்ற சொற்களோடு 'க்யச்' ஒட்டு இணைக்கும்போது அவைகளினிறுதியுயிருக்கு 'ஆத்' (ஆ) வேதமொழியில் பதிலியாக வரும்.
அஸ்$^1$வாயந்தோ மக$^4$வன்; மா த்வா வ்ருகா அக$^4$ாயவோ வித$^3$ன்

**7.4.38** தே$^3$வஸும்னயோர் யஜுஷி காடகே
யஜுர் வேதத்தின் ஒரு கிளையாக காடக சம்ஹிரையில், தே$^3$வ 'கடவுள்' ஸும்ன 'கிருபை, கருணை' என்ற சொற்களோடு 'க்யச்'
ஒட்டிணைக்கும்போது அச்சொற்களினிறுதியுயிருக்கு 'ஆ' பதிலியாக வரும்.
தே$^3$வாயந்தோ யஜமானாய;
ஸும்னாயந்தா ஹவாமஹே

**7.4.39** கவ்யத்$^4$வர ப்ருதனஸ்யசிம் லோப:
இருக்குவேதத்தில், கவி 'கவிருன்' அத்$^4$வர 'யாகம்', ப்ருதனா படை, எதிரிகள்' என்பவைகளோடு 'க்யச்' ஒட்டு வரும்போது அவைகளினிறுதியுயிர்கள் கெடும்.
கவ்யந்த ஸுமனஸ:, அத்வர்யந்த:, ப்ருதன்யந்தஸ் திஷ்ட$^2$ந்தி

**7.4.40** த்$^3$யதிஸ்யதிமாஸ்யத$^2$ாமித்தி கிதி
'க்'ஐ 'இத்'தாகக் கொண்ட 'த்'தில் தொடங்கும் ஒட்டுக்களுக்கு முன் நிற்கும் தே$^3$ா 'வெட்டு' (4.40); ஸோ 'முடி, முடிவு கட்டு (4.39), மா 'அள' (4.34), ஸ்தா

'நில்', இரு' (1.975) ஆகியபவைகளினிறுதியெழுத்துக்கு 'இத்' (இ) பதிலியாக வரும்.

1. தோ³ + க்த = தி³த:, (2) அவ + ஸோ + க்த = அவஸித: (3) மா + க்த = கி;, (4) ஸ்தா + க்த = ஸ்தி²த

**7.4.41** ஸ¹ச் சே²ரன்யதரஸ்யாம்

'க்'ஐ 'இத்'தாகக் கொண்ட 'த்'தில் தொடங்கும் ஒட்டுக்கு முன் நிற்கும் ஸோ¹ (=ஸா) "கூர்மையாக்கு, சாணைபிடி" சே²ா (ச²ா) 'வெட்டு' என்ற தாதுக்களினிறுதியெழுத்துக்கு 'இத்' விருப்பாகப் பதிலியாக வரும்.
நிஸி¹தம், நிஸா¹தம்; நிஸி¹தவான், நிஸா¹தவான், அவச்சி²தம், அவச்சாதம்; அவச்²சிதவான், அவச்சாதவான்

வா: ஸ்¹யதேரித்வம் வ்ரதே நித்யமிதி வச்தவ்யம் 'ஸா¹' வினிறுக்குப் பதிலியாக 'இ', அச்சொல் 'விரதம்' என்ற பொருளைச் சுட்டும்போது கட்டாயமாக வரும்.
ஸம்ஸி¹த: (= ஸம்ஸி¹தவ்ரத) ப்³ராஹ்மண:

**7.4.42** த³த⁴ாதேர்ஹி:

'க்'ஐ 'இத்'தாகக் கொண்ட 'த்'தில் தொடங்கும் ஒட்டுக்கு முன் நிற்கும் த⁴ா 'தாங்கு, ஆதரி' என்ற தாதுவுக்கு 'ஹி' பதிலியாக வரும்.
த⁴ா + க்த = ஹித:, ஹிதவான், ஹித்வா (க்த்வா)

**7.4.43** ஜஹாதேஸ்¹ ச க்த்வி

'க்த்வா' ஒட்டுக்கு முன் நிற்கும் ஹா 'கைவிடு, விட்டுவிடு' என்ற தாதுவுக்குப் பதிலியாகவும் 'ஹி' வரும்
ஹா + க்த்வா = ஹித்வா.

**7.4.44** விப⁴ாஷா ச²ந்த³ஸி

'க்த்வா'வுக்கு முன் நிற்கும் 'ஹா'வுக்கு 'ஹி' விருப்பாக வேதமொழியில் பதிலியாக வரும்.
ஹித்வா ஸ¹ரீரம் யாதவ்யம், ஹாத்வா

**7.4.45** ஸுதி⁴த வஸுதி⁴த நேதி⁴த தி⁴ஷ்வதி⁴ஷீயஸ் ச

வேதமொழியில் ஸுதி⁴த 'நல்ல இடத்தில் அமைந்த', வஸுதி⁴த செல்வத்தையுடைய', நேமதி⁴த 'பாதி ஆதரிக்கப்பட்ட', தி⁴ஷ்வ 'தாங்கு' (வியங்கோள்), தி⁴ஷீய 'நான் வைக்கட்டும' ஆகியவைகள் நிபாதனங்கள். ஸு, வஸு, நேம ஆகியவைகளுக்குப் பின் வரும் 'த⁴ா' என்ற தாதுவோடு 'க்த' ஒட்டு இணைக்கும்போது 'இ' அல்லது 'இட்' ஆகமம் அவ்வொட்டோடு வருதல் விதிக்குப் புறம்பானது. க³ர்ப⁴ம் மாதா ஸுதி⁴தம் வஸுதி⁴தமக்³னௌ ஜுஹோதி; நேமதி⁴தா ப³ாத⁴ந்தே (ஸுஹிதம், வஸுஹிதம் நேமஹிதம்):

த⁴ஷ்வ (முன்னிலையொருமை ஏவல் வினை) இங்கு 'தா⁴' தாது இரட்டிக்கப்படவில்லை. 'இ' அல்லது 'இட்' வருதல் ஆகியவை நிபாதனங்கள். தி⁴ஷ்வஸோமம், (த⁴த்ஸ்வ); தி⁴ஷீய – 'த⁴ா'வின் தன்மையொருமை ஆத்மநேபதம் ஆஸீர் லிங்) இங்கும் 'இ' அல்லது 'இட்' வருதல் நிபாதனம் (த⁴ாஸீய)

**7.4.46** தே³ா த³த் கே⁴ா:

'க்'ஐ 'இத்'தாகக் கொண்ட 'த்'தில் தொடங்கும் ஒட்டுக்கு முன் நிற்கும் 'கு⁴' எனப்படும் வகுப்பைச் சேர்ந்த 'த³ா' 'கொடு' (3.9) என்ற தாதுவுக்கு த³த்³ பதிலியாக வரும். த³த்த:, த³த்தவாடன, த³த்தி:, ஆனால் த³ா 'வெட்டு' (2.50) த³ாதம் ப³ர்ஹி: (கு⁴ அல்ல), தை³ப் 'புனிதமாக்கு, சுத்தம்செய்' (1.971). அவத³ாதம் முக²ம். 'முகம் கழுவப்பட்டது': தெ⁴வத, (த⁴ா)

**7.4.47** அச உபஸர்க³ாத்த:

'க்'ஐ 'இத்'தாகக் கொண்ட 'த்' என்ற எழுத்தில் தொடங்கும் ஒட்டுக்குமுன் நிற்கும் ஒருயிரெழுத்தையீறாகக் கொண்ட உபசர்க்கத்துடன் சேர்ந்து 'கு⁴' என்ற ஸம்க்³ஞா வினால் குறிப்பிடப்படும் 'த³ா' என்ற தாதுவினிறுதியெழுத்துக்கு 'த்' பதிலியாக வரும்.

ப்ரத்தம், அவத்தம், நீத்தம், பரீத்தம்

ஆனால் நிர்த³த்தம்

வா: த்³யதேரித்வாத³ சஸ்த இத்யேதத்³ப⁴வதி விப்ரதிஷேதே⁴ன ஒருயிரெழுத்தை யீறாகக் கொண்ட உபசர்க்கத்தோடு நிற்கும் த³ா (தே³ா) வினீறுக்கு 'த்' பதிலியாக வரும் 7.4.40இன் படி 'இ' இங்கு பதிலியாக வரவேண்டும். இவ்வார்த்திகம் அதைத்தடுத்து, 'த்' வருமாறு விதிக்கிறது. அவத்தம், ப்ரத்தம்

**7.4.48** அபோ பி⁴;

'ப்⁴'இல் தொடங்கும் வேற்றுமையுருபுகளுக்கு முன் நிற்கும் 'அப்' 'தண்ணீர்' என்ற சொல்லினிறுதியெழுத்துக்குப் பதிலியாக 'த்' வரும்.

அப் + பி⁴; = அத்³பி⁴:, அத்³ப்⁴ய:

ஆனால் அப்ஸு (அப் + ஸு)

**7.4.49** ஸ: ஸ்யார்த⁴ த⁴ாதுகே

'ஸ்' இல் தொடங்கும் ஆர்த⁴த⁴ாதகவொட்டுக்கு முன் நிற்கும் 'ஸ்' ஐ யீறாகக் கொண்ட வடிச்சொல்லினிறுதியெழுத்துக்கு 'த்' பதிலியாக வரும்.

வஸ் + ஸ்ய + திப் = வத்ஸ்யதி 'வசிப்பான்' அவத்ஸ்யத்: ஜிக⁴த்ஸதி 'உண்ணவிரும்புகிறான்' ஆனால் ஆஸே (ஸார்வதாதுக)

**7.4.50** தாஸஸ்த்யோர் லோப;

தாஸ் (2ஆம் எதிர்காலம்), அஸ் 'இரு' என்பவைகளினிறுதியெழுத்தான 'ஸ்', அவைகளைத் தொடர்ந்து, 'ஸ்', அவைகளைத்தொடர்ந்து, 'ஸ்' இல் தொடங்கும் ஒட்டுக்குள் வரும் போது கெடும்.

1) க்ரு + லுட் = க்ரு + தாஸ் + ஸிப் = கர் – தா θ + ஸி = கர்தாஸி, கர்தாஸே (2) அஸி (அஸ் + θ + ஸி = அ θ – θ + ஸி), வ்யதிஸே

**7.4.51** ரிச

'ர்'இல் தொடங்கும் ஒட்டுக்களுக்கு முன் நிற்கும்போதும் தாஸ், அஸ் ஆகியவைகளினிறுதியெழுத்து கெடும். 1. கர்தாரௌ (க்கு + தாஸ்) (2) வ்யதிரே

**7.4.52** ஹ ஏதி

'ஏ'யை முதலில் கொண்ட ஒட்டுக்களுக்கு முன் நிற்கும் 'தாஸ்', 'அஸ்' ஆகியவைகளினிறுதி 'ஸ்' உக்குப் பதிலியாக 'ஹ்' வரும்.

க்ரு + தாஸ் + ஏ = கர்தாஹே + வ்யதி + அஸ் + ஏ = வ்யதி + θஸ் + ஏ (5.4.111) = வ்யதிஹே

**7.4.53** யீவர்ணயோர் த்$^3$தீ$^4$வேல்யோ;

'ய்' அல்லது 'இ'யில் தொடங்கும் ஒட்டுக்கு முன் நிற்கும் த்$^3$தீ$^4$ (ங்) 'ஒளிவிடு' (2.67), வேவீ (ங்) 'போ' (2.58) என்ற வினைகளினிறுதியெழுத்து கெடும்.

1. ஆ + தீ$^3$த்$^4$ + க்த்வா = ஆ – தீ$^3$தீ$^4$ + ல்யப் = ஆதீ$^3$த்$^4$ θ – ய = ஆதீ$^3$த்$^4$ய; ஆவேவ்ய

2. ஆ – தீ$^3$த்$^4$ + இட் + த்ருச் = ஆ – தீ$^3$த்$^4$θ – இ – த்ரு ஆதீ$^3$தி$^4$த்ரு; ஆவேலித்ரு லிட் ஆதீ$^3$தீ$^4$த, ஆவேவீத

**7.4.54** ஸனி மீமாகு$^4$ரப$^4$ லப$^4$ ஸ'கபத$^3$ாமச இஸ்

மீ (ஞ்) 'அழி', (9.4.), மீ (ஞ்) (5.4.) 'எறி, வீசு' மா 'அள' (2.53; 4.34); மே (ங்) 'பண்டமாற்று செய் (1.1010) 'கு$^4$' என்ற ஸம்க்$^3$ஞாவினால் குறிப்பிடப்படும். தாதுக்கள், ரப்$^4$ 'பிடி' (1.1023); லப்$^4$ 'அடை, எடுத்துக்கொள், பிடி (1.1024), ஸ'க் 'திறமையுள்ள' (5.15), பத் 'விழு,' பற' (1.898), பத்$^3$ 'போ' (4.60) என்ற தாதுக்களுக்குப்பின் 'ஸ்' இல் தொடங்கும் 'ஸன்' ஒட்டு வரும்போது அவ்வினைகளின் உயிருக்கு (அச:) 'இஸ்' பதிலியாக வரும்.

1. மீ, மி–மித்ஸதி, ப்ரமித்ஸதி (2) மா, மே, மித்ஸதே, அழிபமித்ஸ தே (3) கு$^4$ – தி$^3$த்ஸதி, தி$^4$த்ஸதி (4) ரப்$^4$ – ஆரப்ஸதே (5) லப்$^4$ ஆலி ப்ஸதே (6) ஸக் – ஸிக்ஷதி (7) பத் – பித்ஸதி (8) பத்$^3$ ப்ரபித்ஸதே

வா: ஸனி ராதே$^4$ா ஹிம்ஸாயாமச இஸ் வக்தவ்ய:

'துன்புறுத்து' என்ற பொருளைச் சுட்டும்போது 'ராத்$^4$' என்ற தாது வுக்குப்பின் 'ஸன்' ஒட்டு இணைக்குங்கால், தாவின் உயிருக்குப் பதிலி யாக 'இண்' வரும்.

ப்ரதிரித்ஸதி ஆனால் ஆரிராத்ஸதி

**7.4.55** ஆப் க்[3]ஞப்ப்ருத[4]ாமீத் 'ஸ்'ஐ முதலில் கொண்ட 'ஸன்' ஒட்டுக்கு முன் நிற்கும் ஆப் 'அடை, பெறு' (5.14) க்[3]ஞப் 'அறிவி' (6.81), ருத்[4] 'வளர்ச்சியடை (4.135, 5.2 4) என்ற தாதுக்களின் உயிருக்கு 'ஈத்' பதிலியாகும்.

ஆப் – ப்ஸதி, க்[3]ஞப் – க்[3]ப்ஸதி, ருத்[4] – ஈர்த்ஸதி

**7.4.56** த[3]ம்ப[4] இச்ச

'ஸ்' ஐ முதலாகக் கொண்ட 'ஸன்' ஒட்டுக்கு முன் நிற்கும் த[3]ம்ப்[4] (5.23) 'காயப்படுத்து' என்ற தாதுவின் உயிருக்குப் பதிலியாக 'இத்' வரும். 'ஈத்'உம் வரும் (ச) தீ[4]ப்ஸதி, தி[4]ப்ஸதி

**7.4.57** முசோ அகர்மகஸ்ய கு[3]ணோ வா

'ஸ்'இல் தொடங்கும் 'ஸன்' ஒட்டுக்கு முன் நிற்கும் முச் 'விடுவி' (6.136) என்ற தாது செயப்படுபொருள் குன்றிய வினையாக வரும்போது (அகர்மகஸ்ய) அதன் உயிருக்கு விருப்பாக 'குண' எழுத்துப் பதிலியாக வரும். மோக்ஷதே/முமுக்ஷதே வத்ஸ: ஸ்வயமேவ 'கன்று தன்னைத்தானே விடுவித்துக் கொள்கிறது' ஆனால் முமுக்ஷதி வத்ஸம் தே[3]வத[3]த்த: 'தேவதத்தன் 'கன்றை விடுவிக்கிறான்' (செயப்படுபொருள் குன்றாவினை)

**7.4.58** அத்ர லோப: அப்[4]யாஸஸ்ய

மேலே கூறப்பட்ட இடங்களில், அதாவது 7.4.54 இலிருந்து 57 வரை (அத்ர) இரட்டிக்கப்பட்ட அசை (அப்[4]யாஸஸ்ய) கெடும் (லோப:) 54 (அ) மித்ஸதி, ப்ரமித்ஸதி (ஆ) அபமித்ஸதி (இ) தி[3]த்ஸதி/தி[4]த்ஸதி (ஈ) ஆரிப்ஸதி (உ) ஆலிப்ஸதி (எ) ஸி1க்ஷதி (ஏ) பித்ஸதி (ஐ) பித்ஸதே 55. (அ) ஈப்ஸதி (ஆ) க்[3]ஞீப்ஸதி (இ) ஈர்த்ஸதி 56. தி[4]ப்ஸதி தீ4ப்ஸதி 57. மோக்ஷதி, முமுக்ஷதி 'அப்[4]யாஸஸ்ய' என்ற சொல் இந்தப்பாதத்தின் இறுதிவரை அனுவித்தியாகும்.

**7.4.59** ஹ்ரஸ்வ:

இரட்டிக்கப்பட்ட அசையின் (54–58) உயிரெழுத்துக்கு குறில் பதிலியாக வரும்.

நீ + லிட் = நீ – நி + ணல் (6.1.8) = நி – நீ + ணல் = நிநாய (2.115, 6.1.78); டெ[4]ளக் + லிட் = டெ[4]ளக் + ஏஸ்[1]டு[3] – டெ[4]ளக் + ஏ (60: 1.1.48) = டு[3]டெ[4]ள + கே

வா: அப்[4]யாஸஸ்யானசி

'அச்' என்ற ஒட்டைத் தவிர்த்து ஏனையவொட்டுக்களுக்கு முன் நிற்கும் இரட்டிக்கப்பட்ட அசையின் உயிரெழுத்து குறிலாகும்.

சர், சல், பத் வத்[3] என்ற தாதுக்களுக்குப்பின் 'அச்' வரும்போது அவைகள் இரட்டிக்கும். அவைகளோடு 'அக்' (ஆகமம்) இணைக்கப்படும் (பார்க்க 6.1.12

வார்த்திகம்) இந்த ஆகமம் அதாவது 'அக்', இவ்விதியைப் பயன்படுத்தி குறிலாக்கப்பட்மாட்டாது. இரட்டிக்கப்பட்ட அசையின், முதலசையிலுள்ள மெய்யெழுத்தைத் தவிர மற்ற மெய்யெழுத்துக்கள் கெடாது. என்பதையும், இந்தக் குறிலாக்கம் நடைபெறாது என்பதையும் இது மறைமுகமாகச் சுட்டுகிறது.

சராசர:, சலாசல:, பதாபத;, பத[3]ாபத[3]

**7.4.60** ஹலாதி[3] ஸே'ஷ:

இரட்டிக்கப்பட்ட அசையின், முதல் மெய்யெழுத்து 'ஹலாதி[3]' நிற்கும், மீதியெல்லாம் கெடும் (லோப:)

க்[3]லை + லிட் = க்[3]லா – க்[3]லா + லிட் = க[3] – க்[3]லா + ஔ = கக்லா + ஔ = ஜ – க்[3]லா + ஔ = ஜக்[3]லௌ. பட் + ணல் = பத் பத் + ணல் = பθ – பாத் + அ = பபாத: அட் + ணல் = அட் – அட் + ணல் = அ θ – அட்[1] + ணல் = ஆட[1]

**7.4.61** ஸ'ர் பூர்வா: க[2]ய:

'க[2]யீ' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்து (குரலிலாவொலிகள்), ஸ1ர் பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்துக்குப்பின் (குழிவுரசொலி) இரட்டித்த அசையில் அமையும்போது, குரலிலாவொலிகள் நிற்கும் குழிவுரசொலி (Sibulants) கெடும்.

ஸ்த[2]ா + ஸன் = ஸ்த[2]ா – ஸ்த[2]ா + ஸன் = த[2] – ஸ்தா + ஸன் = தி[2]ஷ்டாஸ = திஷ்டா – ஸ + தி = திஷ்டாஸதி, பிஸ்பந் தி[3]ஷதே (<ஸ்பந்த்[3]) ஆனால் ஸஸ்நௌ (<ஸ்நா)

வா: க[2]ர்பூர்

வா: க[2]ய இதி வக்தவ்யம்

'க[2]ர்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்துக்குப்பின் க[2]ய் பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்து வரும்போது 'க[2]ய்' பிர்ததியாஹாரத்தைச் செர்ந்த எழுத்து நிற்கும். 'க[2]ர்' பிரத்தியாஹாரத்தைச் செர்ந்த எழுத்து கெடும். உசிச்சி[2]ஷதி இங்கு 'துக்' ஆகமம் வருவதால் 'உச்' உச்ச்[2] ஆகும். உச்ச[2] இன் 'ச்' கெடும் 'ச்[2]' நிற்கும்.

**7.4.62** குஹோஸ் சு:

இரட்டித்த வசையின் பின்னண்ணவொலி (கு), 'ஹ்' ஆகியவைகளுக்கு பதிலியாக அதற்கொத்த அண்ணவொலி வரும்.

க்ரு + லிட் = சகார, சக[2]ான (க[2]ன)

ஜக[3]ாம் (க[3]ம்), ஜக[4]ான (ஹன்), ஜஹார (ஹ்ரு), ஜாஹன (ஹா)

**7.4.63** ந கவதேர் யஙி

யங் (intensive) ஒட்டுக்கு முன் நிற்கும் கு (ங்) 'ஒலியெழுப்பு' சத்தம் போடு'

(1.999) என்ற தாதுவின் இரட்டித்த அசையின் க்'உக்கு அண்ணவொலி பதிலியாக வராது.
கோகூயதே உஷ்ட்ர:, க$^{2}$ர:கு (2.23). குங் (6.108) 'சத்தம்போடு' என்ற தாதுக்களில் இவ்விதி பயன்படுத்தக்கூடாது. இவைகள் சோகூ யதே என்றுதான் ஆகும்.

**7.4.64** க்ருஷே: ச$^{2}$ந்த$^{3}$ஸி
க்ருஷ் 'உழு', 'இழு' என்ற தாது, 'யங்' ஒட்டுக்கு முன் நிற்கும்போது டஅதன் இரட்டிக்கப்பட்ட அசையின் 'க்'உக்கு அண்ணவொலி (வேத மொழியில்) பதிலியாக வராது.
கரீக்ருஷ்யதே யக்$^{3}$ஞகுணப:
சர்க்ருஷ்யதே க்ருஷீவல: மற்ற இடங்களில்,

**7.4.65** த$^{3}$ாத$^{4}$ர்தி, த$^{3}$ர்த$^{4}$ர்தி த$^{3}$ர்த$^{4}$ர்ஷி பே$^{3}$ாபூ$^{4}$து
தேதிக்தே அவர்ஷ்யாபனீ ப$^{2}$ணத் ஸம்ஸநிஷ்யத$^{3}$த் கரிக்ரத் கனிக்ரத$^{3}$த்$^{3}$ ப$^{4}$ரிப்$^{4}$ரத்$^{3}$த$^{3}$வித்$^{4}$வதோ த$^{3}$வித்$^{3}$யுதத் தரித்ரத: ஸரீ ஸ்ருபதம் வரீவ்ருஜன்மர்ம் ருஜியாகநீக$^{3}$ந் தீதி வேதமொழியில் காணப்படும் 18 சொற்கள் விதிப்படியாக்கப்படாதவை.

1. த$^{3}$ாத$^{4}$ர்தி – 'ணிச்' ஒட்டோடிணைந்த 'த்$^{4}$ரு' இயக்குவினை, அல்லது த்$^{4}$ருங்' தாதுவோடு 'ஸ்லு' இணைக்கப்பட்டு, 'யங்', 'ணிச்' ஆகியவைகள் கெட்டு. இரட்டிக்கப்பட்ட அசை நெடிலாகி ஆக்கப்பட்டது.

2. த$^{3}$ர்த$^{4}$தி – இங்கு ஸ்னு, 'ருக்' ஆகமம் இரண்டும் நிபாதனம் (3) த$^{3}$ர்த$^{4}$ர்ஷியிலும் அவ்வாறே

4. பே$^{3}$ாபூது – 'பூ$^{4}$' தாதுவோடு இணைக்கப்படும் 'யங்' கெட்டு, அதனோடு லோட் வரும்போது 'குணம்' வராதது நிபாதன்ங்கள் ( = பே$^{3}$ாபே$^{4}$ாது, பே$^{3}$ாப$^{4}$வீது)

5. தேதிக்தே – 'திஜ்' தாதுவோடு இணைக்கப்படும் 'யங்' கெட்டு, அதனோடு ஆத்மனேபதவொட்டு இணைத்திருப்பது நிபாதனம் (= தேதிக்தி)

6. அவர்ஷி – 'ரு' என்ற தாதவின் முன்னிலை நிகழ்கால ஒருமையின் இரட்டித்த அசையின் 'ர்' கெடவில்லை 7.4.60 இன்படி கெடவேண்டும். இந்த 'ர்'க்கு 'ல்' விதிக்குப் புறம்பாக 'ல்' பதிலியாக வருகிறது. அலர்தி த$^{3}$க்ஷ என்ற படர்க்கையிலும் இது காணப்படுகிது.

7. ஆபனீப$^{4}$ணத் – 'ஆ'வுடன் சேர்ந்து வரும் 'ப$^{2}$ன்' தாதுவோடு வரும் 'யங்' கெட்டு அதோடு 'ஸத்ரு' இணைக்கப்பட்டு இரட்டிக்கப்பட்ட அசையோடு 'நீ'

இணைக்கப்பட்டு ஆக்கப்பட்டது.

8. ஸம்ஸநிஷ்யத் – 'ஸம்' ஒடு வரும். 'ஸயந்த்[3]' என்ற தாதுவோடு இணைஒக்கப்படும் 'யங்' கெட்டு, அதோடு 'ஸத்ரு' இணைக்கப்பட்டு, 'நிக்' வந்து, தாதுவின் 'ஸ்' க்கு 'ஷ்' பதிலியாக வருகிறது.
இது நிபாதனம்.

9. கரிக்ரத்[3] – 'க்ரு' தாதுவோடு இணைக்கப்பட்ட 'யங்' கெட்டு. அதோடு 'ஸத்ரு' இணைக்கப்படும்போது, அண்ணவொலி வராதது , இரட்டித்த அசையின் 'க'வுக்கு 'ரிக்' வருவது ஆகியவைகள் நிபாத ணங்கள்.

10. கனிக்ரத்[3] – 'க்ரந்த்' தாதுவின் 'லுங்' இணைக்கப்படும் போது, 'ச்லி' க்கு 'அங்' பதிலியாவது. இரட்டித்தல் அதில் அண்ணவொலி வராமை (7.4.62) 'நி' ஆகமம் ஆவத ஆகியவை நிபாதனங்கள்.

11. ப[4]ரிப்[4]ரத் – 'ப்[4]ரு' தாதுவோடு இணைக்கப்படும் 'யங்' மறை ந்து (லுக்) 'ஸத்ரு' இணைக்கப்பட்டு 'இ' வரவேண்டிய இடத்தில் அ து வராமை, (7.4.76) 'ஜஸ்[1]' வராமை இரட்டிக்கப்பட்ட அசையோடு 'ரிக்' ஆகமம் ஆதல், ஆகியவை நிபாதனங்கள்.

12. த[3]வித்[4]வத – த்[4]வ்ருவின் 'யங்' கெட்டு, 'ஸ'த்ரு' இணைக்கப்பட்ட, முதல் வேற்றுமைப் பன்மை இரட்டிக்கப்பட்ட அசையோடு 'வி' இணைத்தல் (ஆகமம்) 'ரு' கெடுதல் விதிப்படியல்ல.

13. த[3]வித்[3]யுதத் – 'த்[3]யு' வோடு இணைக்கப்படும் 'யங்' கெட்டு (லுக்). ஸ1த்ரு இணைக்கப்பட்டு ஆக்கப்பட்டிருக்கிறது. இதில் இரட்டிக்கப்பட்ட அசையின் உயிராக்கம் நடைபெறாதது, 'அ' ஆதல் 'ரிக்' ஆகமமாதல் ஆகியவை விதிக்குப்புறம்பானவை.

14. தரித்ர – 'த்ரு' தாதுவோடு ஸ்'லு, ஸ'த்ரு ஆகியவைகளிணைக்கப்பட்ட ஆறாம் வேற்றுமையொருமை சொல்லின், 'ரிக்' ஆகமம் ஆதல் நிபாதனம்.

15. ஸரீஸ்ருபதம் – 'ஸ்ரு' தாதுவோடு 'ஸ்லு' 'ஸத்ரு' இணைக்கப்பட் ட இரண்டாம் வேற்றுமை ஒருமைச் சொல் இதில், இரட்டிக்கப்பட் ட அசையோட 'ரிக்' ஆகமம் ஆதல் நிபாதனம்.

16. வரீவ்ரஜத் – 'வ்ரஜ்' தாதுவோடு 'ஸ்லு' ஸ'த்ரு' இணைக்க்ப்பட்டு ஆக்கியசொல்லில் 'ரீக்' ஆகமம் ஆவது நிபாதனம்.

17. மர்ம்ருஜ்ய – 'ம்ருஜ்' தாதுவோடு லிட், ணல் இணைக்கப்பட்டு,

இரட்டிக்கப்பட்ட அசையில் 'ருக்' ஆகமம் ஆதல் நிபாதனம்.

18. ஆக³ன்க³ந்தி – 'ஆங்' ஒடு வரும் 'க³ம்' தாதுவின் 'ஸ்லு' வோட வரும் 'லட்' இல் தாதுவின்இரட்டிக்கப்பட்ட அசையில் அண்ணவொ லி வராமை, 'நீக்' ஆகமம் ஆதல் நிபாதனங்கள்.

**7.4.66** உரத்

இரட்டிக்கப்பட்ட அசையின் 'ரு' அல்லது 'ரூ' வுக்குப் பதிலியாக 'அ த்' வரும்.
சக்ரே (க்ரு), வவ்ரே (வ்ருத்)

**7.4.67** த்³யுதி ஸ்வாப்யோ: ஸம்ப்ரஸாரணம்

ரணம் த்³யுத் 'ஒளிவிடு', ஸ்வப் 'ஹங்கு' (இயக்குவினை) என்ற தாது க்களின் இரட்டிக்கப்பட்ட அசையின் அரையுயிர் முழு உயிராகும்.
(ஸம்ப்ரஸாரணம்)
விதி³ த்³யோதிஷதே (வித்யுத் + ஸன் + ஸ'ப் + தே) : ஸுஷ்வாபயிஷதி ஸ்வப் + ணிச் + இட் + ஸன் + ஸ'ப் + திப்

**7.4.68** வ்யதோ² லிடி

வ்யத்² 'நடுங்கு' என்ற தாதுவுக்குப்பின் 'லிட்' ஒட்டு வரும் போது, அதன் இரட்டிக்கப்பட்ட அசையின் அரையுயிர் முழுஉயிராகும்.
வ்யத்² + லிட் = விவ்யதே², விவ்யத²ாதே, விவ்யதி²ரே.

**7.4.69** தீ³ர்க²: இண: கிதி

'க்'ஐ 'இத்'தாகக் கொண்ட 'லிட்' ஒட்டுக்கு முன் வரும் இண் 'போ' தாதுவின் இரட்டிக்கப்பட்ட அசையின் உயிர் நெடிலாகும்.
இ + அதுஸ் = ய் + அதுஸ் = இ + ய் + அதுஸ் = ஈயது:, ஈயு: ஆனால் இ + ணல் = இயாய.

**7.4.70** அத ஆதே³:

'லிட்' ஒட்டுக்கு முன் நிற்கும், இரட்டிக்கப்பட்ட அசையின் முதலில் நிறகம் (ஆதே³:), 'அத்' (அ) உக்கு அதாவது குறிலுக்கு 'ஆத்' (ஆ) நெ டில் பதிலியாக வரும்.
அட் + லிட் = அ0 + அட் + அதுஸ் = ஆ – அட் + அதுஸ் = ஆட'து: ஆடு:
ஆனால் பபாச

**7.4.71** தஸ்மாத் நுட் த்³விஹல:

'லிட்' ஒட்டுக்கு முன் நிற்கும் இரு மெய்யெழுத்துக்களைக் கொண்ட இரட்டிக்கப்பட்ட அசையின் முதலில் அமையும் குறில், நெடிலான பிறகு, அதற்குப்பின் (தஸ்மாத்) 'நுட்' (ஆகமம்) இணைக்கப்படும்.
அங்க்³ + லிட் = அங்க் + 0ணல் = அதுஸ் + ஆ அங்க்³ + ணல்/ அதுஸ் =

ஆனங்க[3], ஆனங்க[3]து:

**7.4.72** அஸ்'னோதேஸ்' ச

'லிட்' ஒட்டுக்கு முன் நிற்கும் 'அஸ்' 'அடை, சேர்' (5.18) என்ற தாதுவின் இரட்டிக்கப்பட்ட அசையின் முதலுயிருக்கு (குறில்)ப் பதிலியாக நெடில் வந்தபிறகு அவ்வினையடிக்க முன் 'நுட்' ஆகமம் ஆகும்.
அஸ்' + லிட் = அஸ் + அதுஸ் = அனஸ'து:, அனஸு: ;
வ்யானஸே', வ்யானஸ'ாதே, வ்யானஸி1ரே
ஆனால் அஸ்' 'உன்ன் (9.51) லிட் ஆஸ', ஆஸ'து: ஆஸு'

**7.4.73** ப[4]வதேர:

'லிட்'டுக்கு முன் நிற்கும் பூ[4] 'இரு' தாதுவின் இரட்டிக்கப்பட்ட அசையின் உயிரெழுத்துக்கு 'அ' பதிலியாக வரும்.
பூ[4] + லிட் = பூ[4] – வ் + லிட் = பூ[4]வ் + ணல் = ப ப[3]பூ[4] – அ – பூ[3]பூ[4]வ, ப[3]பூ[4]வது:, ப[3]பூ[4]வு:

**7.4.74** ஸஸூவேதி நிக[3]மே

வேதமொழியில் (நிகம), ஸூ 'பிள்ளைபெறு' என்ற தாதுவுக்குப் பின் 'லிட்' ஒட்டிணைத்து ஸஸூவ என்ற விதிக்குப்புறம்பாக ஆக்கப்பட்ட சொல் காணப்படுகிறது. 'ங்'ஐ 'இத்'தாகக் கொண்ட ஒட்டோடிணைக்கப்பட்ட அடிச் சொல் பொதுவாக ஆத்மனேபதவொட்டுக்களோட பேச்சுமொழியில் வரும் இச்சொல் தாதுவோடு பரஸ்மைபத ஒட்டிணைக்க்ப்பட்ட, 'வுக்' ஆகமம் ஆகி, இரட்டிக்கப்பட்ட அசையின் உயிரெழுத்துக் 'அ' பதிலியாக வருதல் ஆகியவை நிபாதனங்கள் ஸஸூவ ஸ்த[2]விரம் விபஸ்சிதாம் ஸுஷுவே (பேச்சு மொழியில்)

**7.4.75** விஜாம் த்ரயாணாம் கு[3]ய: ஸ்லௌ.

நிஜ் 'அலம்பு, குளி' (3.11) என்ற தாதுவிலிருந்து மூன்று தாதுக்களுக்குப்பின் 'ஸ்ஜ' என்ற விகரணம் இணைக்கும் போது அவைகளின் இரட்டிக்கப்பட்ட அசையின் உயிரெழுத்துக்கு 'குணம்' எனப்படும் எழுத்து பதிலியாக வரும்.
ணிஜிர் – நேநேக்தி, விஜிர் – 'பிரி'
வேவேக்தி; விஷ்லரு – 'பரவு' வேவேஷ்டி

**7.4.76** ப்[4]ரு ஞாமிதீ

'ஸ்லு'வுக்கு முன் நிற்கும் ப்4ருஞ் 'தாங்கு' (3.5) முதலிய மூன்று தாதுக்களின் இரட்டிக்கப்பட்ட அசையின் உயிரெழுத்துக்கு 'இத்' (இ) பதிலியாகும்.
ப்[4]ருஞ் – பி[3]ப[4]ர்தி, மாங் 'அள, ஒலியெழுப்பு' மிமீதே; ஒஹாங் 'போ, கிளம்பு' – ஜிஹீதே

**7.4.77** அர்தி பிபர் த்யோஸ்' ச

ரு 'போ'. ப்ரு 'நிரப்பு, தாங்கி நில்' என்ற தாதுக்களின் இரட்டிக்கப்பட்ட

அசையின் உயிரெழுத்துக்குப்பதிலியாகவும் 'இத்' வரும்.
இயர்தி தூ$^{3}$மம், பிபர்தி ஸோ/மம்

**7.4.78** ப$^{3}$ஹுலம் ச$^{2}$ந்த$^{3}$ஸி

வேதமொழியில் ஒரு வினையின் இரட்டிக்கப்பட்ட அசையின் உயிருக்கு 'இத்' (இ) வெவ்வேறு வகையில் பதிலியாக வரும். பூர்ணாம விவஷ்டி$^{2}$ (வஸ்): ஜனிமா விவக்தி (வச்); வத்ஸம் ந மானா ஸிஷ்க்தி (ஸிச்). த$^{3}$த$^{3}$தீத்வேவம் ப்$^{3}$ரூயாத் (த$^{3}$ா) ஜனமிந்த்$^{3}$ரம் மாதா யத்$^{3}$வீரம் த$^{3}$த$^{4}$னந்த$^{4}$னிஷ்டா. ததாதீ, ஜஜனத், த$^{3}$த$^{4}$னத் ஆகியவைகளில் 'இ' பதிலியாக வரவில்லை.

**7.4.79** ஸன்யத:

'ஸன்' ஒட்டுக்கு முன் நிற்கம் தாதுவின் இரட்டிக்கப்பட்ட அசையின் உயிரான 'அத்' (அ) வுக்கு, 'இத்' (இ) பதிலியாக வரும். பிபடி$^{2}$ஷதி (<ப$^{2}$ட்); யியக்ஷதி (யா) திஷ்ட$^{2}$ாஸதி (ஸ்த$^{2}$ா), பிபாஸதி (பா).

**7.4.80** ஓ: புயன் ஜ்ய பரே

'ஸன்' ஒட்டுக்கு முன் நிற்கும், இரட்டிக்கப்பட்ட அசையின் இறுதி உ, ஊ. இதழொலி (4), அரையுயிர் (யண்), அல்லது 'ஜ்'க்கு முன்னால் நின்று, இந்த மெய்யெழுத்துக்களுக்குப்பின்னால் 'அ' (குறிலும் நெடிலும்) வரும்போது இறுதி 'உ' (குறில், நெடில்)வுக்கு 'இ' பதிலியாக வரும்.

1. பு – பிபவிஷதே, பிபாவயிஷதி, விபாவயிஷதி (பூ$^{4}$)
2. யு – யியவிஷதி, யியாவயிஷதி; ரிராவயிஷதி (<ரு), லிலாவயிஷதி (லூ)
3. ஜ் – ஜ்ஜாவயிஷதி

**7.4.81** ஸ்ரவதி, ஸ்ருணோதி த்$^{3}$ரவதி – ப்ரவதி ப்லவதி ச்யவதீனாம் வா.

ஸ்ரு$^{1}$ 'ஓடு, பாய்' (1.4.87), ஸ்'ரு 'கேள்' (1.989), த்$^{3}$ரு$^{1}$ 'ஓடு' (1.992), ப்ரு, (1.1006), ப்லு (1:100) 'பாய்' ஓடு (தண்ணீர்), ச்யு 'ஆட்டு' (1.1004) ஆகியவைகளுக்குப்பின் 'ஸன்' ஒட்டு இணைக்கும்போது அவைகளின் இரட்டிக்கப்பட்ட அசையின் உயிரெழுத்துக்கு 'அ' அதற்குப்பின்னால் வரும் போது 'இத்' (இ) விருப்பாக பதிலியாக வரும்.

1. ஸிஸ்'ராவயிஷதி, ஸுஸ்ராவயிஷதி;
2. தி$^{3}$த்$^{3}$ராவயிஷதி, து$^{3}$த்$^{3}$ரவயிஷதி;
3. பிப்ராவயிஷதி, புப்ராவயிஷதி;
4. பிப்லாவயிஷதி, புப்லாவயிஷதி;
5. சிச்யாவயிஷதி, சுச்யாவயிஷதி

**7.4.82** கு$^{3}$ணோ யங் லுகி

'யங்', 'யங் லுக்' ஆகியவைகளுக்கு முன் நிற்கும் இரட்டிக்கப்பட்ட அசையின் உயிரெழுத்துக்கு 'குண' வெழுத்துப் பதிலியாக வரும்.

1. சி + யங் + ஸப் + தே = சேசீயதே; லூ – லோலூயதே;

2. யங்லுக் – ஜோஹவீதி (ஹு + யங்லுக் + லு'ப் + திப் = ஜு – ஹு + θ + θ – திப் + ஜோ – ஹோ + இட் + திப் = ஜோஹவ் – ஈதி)

**7.4.83** தீ$^3$ர்கே$^4$ா அகித:

'யங்', 'யங்லுக்' ஆகியவைகளுக்கு முன், 'க்' ஐ 'இத்'தாகக் கொண்ட ஆகமம் இணைக்கப்படாத இரட்டிக்கப்பட்ட அசையின் உயிரெழுத்துக்கு அதந் நெடில் பதிலியாக வரும்.

பாபச்யதே (<பச்), பாபசீதி, யாயஜ்யதே,

யாயஜீதி (<யஜ்) இரட்டிக்கப்பட்ட அசை 'நீக்', 'நுக்' ஆகமங்கள் பெறும். அவைகள் தொடர்ந்து வரும் சூத்திரங்களில் காணப்படுகின்றன.

**7.4.84** நீக்$^3$ வஞ்சு ஸ்ரம்ஸுப்$^4$ரம்ஸுகஸ பத பத$^3$ ஸ்கந்த$^3$ாம் வஞ்ச் 'வளைந்து செல்' (10.136) ஸ்ரம்ஸ் 'விழு' (1.790), த்$^4$வம்ஸ் 'துண்டு துண்டாகு' (1.791). ப்$^4$ரம்ஸ் 'கீழே விழு' (1.792), கஸ் 'போ' (1.913), பத் 'விழு', பற' (1.898), பத்$^3$, 'போ, நட' (4.60), ஸ்கந்த் 'குதி, தாண்டு' (1.1028) ஆகிய தாக்களுக்குப்பின் 'யங்' 'யங்லுக்' வரும்போது, அவைகளின் இரட்டிக்கப்பட்ட அசைக்குப்பின் 'நிக்' ஆகமம் இணைக்கப்படும்.

1. வநீவச்யதே, வநீவஞ்சீதி;
2. ஸநீஸ்ரஸ்யதே. ஸநிஸ்ரம்ஸீதி;
3. த$^3$நீத்$^4$வஸ்யதே, த$^3$நீத்$^4$வம் ஸீதி
4. ப$^3$நீ ப்$^4$ரஸ்பதே. ப$^3$நீப்$^4$ரம்ஸிதி
5. சநீ கஸ்யதே. சநீகஸீதி
6. பநீபத்யதே, பநீபத்தி
7. பநீ$^4$பத்$^3$யதே, பநீபதீ$^3$தி
8. சநீஸ்கத்$^3$யதே. சநீஸ்கந்தி$^3$தி

**7.4.85** நுக்$^3$த: அநுநாஸி அந்தஸ்ய

'யங்', 'யங்லுக்' ஆகியவைகளுக்கு முன் நிற்கும் மூக்கொலியை (அநுநாஸிக) இறுதியில் கொண்ட (அந்தஸ்ய) தாதுவின் இரட்டிக்கப்பட்ட அசையினீறாக அமையும் 'அ'வுக்குப்பின் 'நுக்' ஆகமம் இணைக்கப்படும்.

தன் + யங் + ஸப் + தே = த – நுக் + தன் + ய + தே = ததன்யதே, தந்தினீதி;' ஜங்க$^3$ம்யதே, ஜங்க$^3$மீதி (க$^3$ம்), யம்யம்பதே, யம்யமீதி (யம்); ரம்ரம்பதே, ரம்ரமீதி (ரம்)

வா: பத$^3$ாந்தவச்சேதி வக்தவ்யம்

ஒரு சொல்லினிறுதியில் வருகின்றாற்போல் (பத$^3$ாந்த, வத்) அனுஸ்வாரம் கருதப்படும். ஆகவே, இங்கு 4.59 செயற்படும். ஆகையால் அநுஸ்லாரத்தில் மாற்றமேதும் நிகழாது. தந்தந்யதே.

**7.4.86** ஜபஜப$^4$த$^3$ஹ த$^3$ஸ$^1$ ப$^4$ஞ்ச பஸ$^1$ாம் ச

'யங்', 'யங்லுக்' ஆகியவைகளுக்குமுன் நிற்கும் ஜப் 'ஜபி' (1.424), ஜப்$^4$ 'கொட்டாவி விடு' (1.415), த$^3$ஹ் 'எரியவிடு' (1.1040), த$^3$ஸ்$^1$ 'கடி' (1.1038), ப$^4$ஞ்ஜ் 'நொறுங்கு, நொறுக்கு' (7.16), பஸ்$^1$ 'கட்டு' (1.936) ஆகியவைகளின் இரட்டித்த அசையினீறான 'அ'வுக்குப் பின்னும், 'நுக்' (ஆகமம்) இணைக்கப்படும்.

1. ஜஞ் ஜப்யதே. ஜஞ்ஜபீதி (2) ஜஞ்ஜப்$^4$யதே, ஜஞ்ஜபீ$^4$தி (3) த$^3$ந்த$^3$ஹ்யதே, த$^3$ந்த$^3$ஹீதி (4) த$^3$ந்த$^3$ஸ்$^1$ யதே, த$^3$ந்த$^3$ஸீதி 'த$^3$ஸ்' என்று சூத்திரத்தில் குறிப்பிட்டிருப்பது, 'யங், யங்லுக் ஆகிய, இரண்டு சூழலிலும் மூல தாதுவான 'தம்ஸ்' இன் மூக்கொலி கெடும் என்பதைச் சுட்டுகிறது. (5) ப$^3$ம்ப$^4$ ஜ்யதே, ப$^3$ம்ப$^4$ஞ்ஜீதி (6) பம்பஸ்'யதே, பம்பஸீ'தி

**7.4.87** சரப$^2$லோஸ்$^1$ ச

'யங்' 'யங் லுக்' ஆகியவைகளுக்கு முன்னால் நிற்கும் சர் 'இயங்கு, போ, மேய் (ஆடுமாடு புல் மேய்தல்) (1.591), 'பலனடை' (1.503) என்ற தாதுக்களின் இரட்டிக்கப்பட்ட அசையினீறான 'அ'வுக்குப்பின் 'நுக்' ஆகமம் வரும்.

1. சஞ்சூர்யதே, சஞ்சூரிதி (2) பம்பு$^2$ல்யதே, பம்பு$^2$லீதி

**7.4.88** உத்பரஸ்யாத:

'யங்' 'யங்லுக்' ஆகியவைகளுக்கு முன் நிற்கும் சர், ப$^2$ல் என்ற தாதுக்களின் இரட்டிக்கப்பட்ட அசையினிறான 'அ'வுக்கு உத் (உ) பதிலியாக வரும்.

1) சஞ்சூர்யதே, சஞ்சூரியதி; (2) பம்பு$^2$ல்யதே, பம்பு$^2$லீதி

**7.4.89** தி ச

'த்' ஐ முதலாகக் கொண்ட ஒட்டுக்கு முன் நிற்கும் சர், பு$^2$ல் என்ற தாதுக்களின் 'அத்' (அ) உக்குப் பதிலியாகவும் 'உத்' வரும்.

சர்+ க்தின் + சுர்தி;; (2) ப்ரபு$^2$ல்தி: 'மலர்கின்ற, விரிகின்ற'

**7.4.90** ரீக்$^3$ரு$^1$ து$^3$பத$^4$ஸ்யச

'யங்', யங்லுக்' ஆகியவைகளுக்கு முன் நிற்கும் 'ருத்' (ரு)வை ஈற்றயலாகக் கொண்ட இரட்டிக்கப்பட்ட அசையினிறுதியில் 'ரீக்' ஆகமம் ஆகும்.

வரீவ்ருத்யதே, வரீவ்ருத்$^4$யதே; வரீவ்ருதீதி, வரீவ்ருதீ$^4$தி, நரீந்ருத்யதே, நரீந்ருதீதி

வா: ரீக்$^3$ருத்வத இதி வக்தவ்யம்

'ரு'வைக் கொண்ட ஒரு தாதுவுக்குப்பின் 'யங்', 'யங்லுக்' வரும் போது என்றமைய வேண்டும். அதனால் 'ரு' முதன் முதலில் தாதுபாடத்தில் கூறப்பட்டதோ அல்லது உயிராக்கத்தினால் (ஸம்ப்ரஸாரணம்) கிடைக்கப்பட்டதாகவோ ஆனாலும் இவ்விதி செயற்படக்கூடியதாக, இச்சூத்திரம் அமையும். காட்டாக வரீவ்ருஸ்ச்யதே, பரீப்ருச்ச்$^2$யதே, வரீவ்ருஸ்'சீதி, பரீப்ருச்சீதி இங்கு 'ரு' உயிராக்கத்தினால் கிடைக்கப்பட்டது.

**7.4.91** ருக்³ரிகௌ ச லுகி

'யங் லுக்' உக்குமுன் நிற்கும் 'ரு1'வை ஈற்றயலாகக் கொண்ட இரட்டிக்கப்பட்ட அசையினிறுதியில் 'ருக்', 'ரிக்' 'ரீக்' (ச) ஆகியவைகள் ஆகமம் வரும்.

1) நர்நர்தி, நரிந்ர்தி, நரீந்ர்தி (2) வர்வர்தி, வரிவர்தி, வரீவர்தி

வா: மர்ம்ருஜ்யதே மர்ம்ருஜ்யமானாஸ இத்யுபஸங்க்²யானம்

மர்ம்ருஜ்யதே, மர்ம்ருஜ்யமானாஸ ஆகியவைகளையும் இதோடு சேர்த்துக் கூறவேண்டும். இவைகளில் 'யங்' கெடாதபோதிலும் (லுக்) 'ருக்' ஆகமம் காணப்படுகிறது.

**7.4.92** ருதஸ்¹ ச

'யங்லுக்' உக்கு முன் நிற்கும் 'ருத்' (ரு)த்தையிறுதியில் கொண்ட இரட்டிக்கப்பட்ட அசையின் பின் ருக், ரிக், ரீக் ஆகியவைகள் ஆகமம் ஆகும்.

1. சர்கர்தி, சரிகர்ரி, சரீகர்தி (2) ஜர்ஹர்தி, ஜரிஹர்தி, ஜரீஹர்தி

**7.4.93** ஸன் வல்லகு⁴ணி சங்பரே அநக்³லோபே

'ணிச்' 'சங்' ஒடு வரும் 'லகு' உயிரைக் கொண்ட வினையின் இறுதியுயிர் கெடாமல் நிற்கும்போது (அநச் லோபே), அவ்வினையின் இரட்டிக்கப்பட்ட அசை 'ஸன்' ஒட்டுக்கு முன் நிற்கும் அசையைப் போன்று கருதப்படும். அசீகரத் (79), அபீபவத் (80), அஸிஸ்ரவத், அஸுக்ரவ்த (81), ஆனால் அததக்ஷத் அஜஜாகரத்

**7.4.94** தீ³ர்கே⁴ா லகோ:

'ணிச்' 'சங்' ஒடு வரும் இரட்டிக்கப்பட்ட அசையின் 'லகு' உயிரைக் கொண்டதாக அமைந்து அவ்வினையிறுதியுயிர் 'ணிச்' தொடர்ந்து வரும்போது கெடாமல் நின்றால் அந்த 'லகு' உயிர் நெடிலாகும். காட்டுக்கள்/ மேற்சூத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ளன.

**7.4.95** அந் ஸ்ம்ரு த்ரூ¹ த்வரப்ரத²ம்ரத³ ஸ்த்ரூ¹ ஸ்பஸாம்

ஸ்ம்ரு 'நினை', (1.845), த்³ரு 'கிழி' (9.23), த்வர் 'விரை, அவசரப்படுத்து' (1.812), ப்ரத்² 'விரிவாக்கு' (1.802), ம்ரத்3 'நசுக்கு, பொடியாக்கு' (1.804). ஸ்த்ரு 'தூவு, சிதறு' (9.1.4), ஸ்பஸ் 'பார் உணர்' (1.936) ஆகியவைகளுக்குப்பின் 'ணிச்' 'சங்' ஒட்டுக்கள் இணைக்கும்போது அவைகளின் இரட்டிக்கப்பட்ட அசையின் உயிருக்கு 'அத்' (அ) பதிலியாக வரும்.

இது 93. 94க்குப் புறனடை.

1. அவஸ்மரத் (2) அத³த³ரத் (3) அதத்வரத் (4) அபப்ரத²த் (5) அமம்ரத³த் (6) அதஸ்தரத் (7) அபஸ்¹பஸ¹த்

**7.4.96** விப⁴ாஷா வேஷ்டி சேஷ்டயோ:

வேஷ்ட் 'சுற்று' (1.274) சேஷ்ட் 'நகர்ந்து செல்' (1.275) என்ற

தாதுக்களுக்குப்பின் 'ணிச்' 'சங்' வரும்போது, அவைகளின் இரட்டிக்கப்பட்ட அசையின் உயிருக்கு 'அத்' விருப்பாகப் பதிலியாக வரும்.

1. அவவேஷ்டத், அவிவேஷ்டத்
2. அசசேஷ்டத், அசிசேஷ்டத்

**7.4.97** ஈ ச கணா:

க³ண 'எண்ணு' (10.309) என்ற தாதுவுக்குப்பின் 'ணிச்' 'சங்' வரும் போது, அதன் இரட்டிக்கப்பட்ட அசையின் உயிருக்கு 'ஈ'யும் பதிலி யாக வரும். அதாவது 'அ'வும் 'ஈ'யும் வரும்.
அஜீக³ணத், அஜக³ணத்

**8.1.1** ஸர்வஸ்ய த்³வே

இச்சூத்திரத்திலிருந்து தொடங்கி 8.1.15 வரை "சொல் முழுவதும் இரண்டு ஆகும்" என்ற தொடர் சேர்க்கப்பட வேண்டும்.
இது ஒரு அதிகார சூத்திரம், இதைத் தொடர்ந்து வரும் 14 சூத்திரங்களில் இது அனுவிருத்தியாகும். ஒரு சொல், இரண்டு தடவை பயன்படுத்தப்படுமென்பது இதன் பொருள்.

**8.1.2** தஸ்ய பரம் ஆம்ரேடி³தம்

இரண்டு முறை பயன்படுத்தப்பட்ட சொல்லின் இரண்டாவதாக நிற்கும் சொல் 'ஆம்ரேடி³தம்' என்ற ஸம்க்³ஞாவினால் குறிப்பிடப்படும்.
சௌர சௌர 'ஓ திருடன், ஓ திருடன்'
பு⁴ங்க்தே பு⁴ங்க்தே 'உண்கிறான், உண்கிறான்' இரண்டாவதாக அமையும் சொல் ஆம்ரேடிதம் எனப்படும். 'ஆம்ரேடித' என்ற சொல் 6.1.99,100; 8.1.57, 8.2.95, 103; 3.12; 49 முதலியவைகளில் காணப்படுகிறது.

**8.1.3** அனுதாத்தம் ச

'ஆம்ரேடிதம்' எனப்படும் சொல் அனுதாத்த சுரம் பெறும். பசதி பசதி 'சமைக்கிறான் சமைக்கிறான்' 'சமைத்துக்கொண்டேயிருக்கிறான்'

**8.1.4** நித்யவீப்ஸயோ:

'எப்போதும்' (நித்ய), ஒவ்வொரு (வீப்ஸா) என்ற பொருளை இரட்டிக்கப்பட்ட சொல் சுட்டும்.

1) நித்ய – பசதி பசதி 'அவன் தொடர்ந்து சமைத்துக்கொண்டேயிருக்கிறான்' ஒருவன் இடைவிடாமல் செய்யும் செயலை 'நித்ய' குறிக்கிறது.
ஜல்பதி ஜல்பதி 'அவள் நிறுத்தாமல் பேசிக் கொண்டேயிருக்கிறான்' பு⁴க்த்வா பு⁴க்த்வா வ்ரஜதி அல்லது போ⁴ஜம் பே⁴ாஜம்வ்ரஜ "ஒவ்வொருவரும் உண்டுவிட்டுப் போகிறார்கள்";
லூனீஹி லூனீஹி இத்யேவம் லுனாதி
வினைச்சொல், க்ருத் ஒட்டினாலாக்கப்பட்ட அவ்யயம், ஆகியவைகள் 'நித்ய'

என்ற பொருளைச் சுட்டும் க்த்வா, ஒட்டு ணமுல் ஒட்டு ஆகியவைகளிணைக்கப்பட்டு ஆக்கப்பட்ட சொற்கள் வியங்கோள் வினை ஆகியவைகள் திரும்பத் திரும்பப் பயன்படுத்தும்போதுதான் 'இடைவிடாத' என்ற பொருளைச் சுட்டும். 'லுங்' ஒட்டிணைத்து ஆக்கப்பட்ட சொல், இவ்வாறு இருமுறை பயன்படுத்தாவிட்டாலும் இப்பொருளை (அதாவது 'நித்ய')ச் சுட்டும்.

புன: புன: பசதி = பாபச்யதே 'திரும்பத் திரும்பச் சமைக்கிறான்' ஆயினும், இதனால் குறிக்கப்பட்ட செயல் தொடர்ந்து செய்யப்படுவதை குறிக்கும்போது இதையும் இருமுறை பயன்படுத்தவேண்டும். காட்டாக பாபச்யதே பாபச்யதே

2) வீப்ஸா–பகிர்வு

பெயர்ச்சொற்கள் இப்பொருளில் பயன்படுத்தப்படும். ஊடுருவிப்பரவுதல் என்ற பொருளை 'வீப்ஸா' என்ற சொல் சுட்டும்.

க்³ராம: க்³ராம: ரமணீய: 'ஒவ்வொரு கிராமமும் அழகானது'; புருஷ: புருஷ: நித⁴னம் உனபதி 'ஒவ்வொரு மனிதனும் மரணம் எய்துகிறான்'

**8.1.5** பரேர் வர்ஜனே

'தவிர்ப்பு, விலக்கல்' (வர்ஜனே) என்ற பொருளில் (வர்ஜனே) என்ற பொருளில் 'பரி' இட்டித்துப்பயன்படுத்தப்படும். 'பரி பரி த்ரி க³ர்த்தேப்⁴யோ வ்ருஷ்ட: தே³வ: 'த்ரிகர்த்த நாட்டைத் தவிர்த்து மற்ற இடங்களில் மழை பெய்தது' அதாவது த்ரிகர்த்த நாட்டைச் சுற்றி மழை பெய்தது' ஆனால் ஒத³னம் பரிஷிஞ்சதி

வா: பரேர் வர்ஜனே அஸமாஸே வேதி வக்தவ்யம்

பரி 'விலக்கல்' ஒரு தொகையில் பயன்படுத்தப்படாவிட்டால் விருப்பாக இரட்டிக்கும் பரி ரித்ரிக³ர் தேப்⁴ய; அல்லது பரி த்ரிக³ர் தேப்⁴ய: ஆனால் ஒரு தொகையில் 'பரி' இரட்டிக்கப்படமாட்டாது. பரித்ரிக³ர்தே வ்ருஷ்டோ தே³வ: இங்கு 'பரி' மட்டும் தனியாக இப்பொருளைச் சுட்டாது. இத்தொகை முழுவதும் இப்பொருளைக் கொடுக்கும்.

**8.1.6** ப்ரஸமுபோத³: பாத பூரணே

ஒரு செய்யுளின் வரிகளை முழுமையாக்க (பாத பூரணே) ப்ர, ஸம் உப, உத்³ ஆகியவைகள் இரட்டித்துப் பயன்படுத்தப்படும். ப்ர ப்ராயமக்³னிர் ப⁴ரதஸ்ய ஸ்'ருண்வே (ருக் 7.8.4) ஸம் ஸமித்³யுவஸே வ்ருஷன் (ருக் 10.191.1);

உபோப மே பராம்ருஷ (ருக் 1.126.7);

கிம் நோது³து³ ஹர்ஷஸே த³ாதவ உ (ருக் 4.21.9)

இந்த விதி வேதமொழியில்தான் செயற்படும். ஏனென்றால் மற்ற இடங்களில் 'ப்ர' முதலியவைகள் வினையிலிருந்து பிரித்துத் தனியாகப் பயன்படுத்த முடியாது.

**8.1.7** உபர்யத்⁴யத⁴ஸ: ஸாமீப்யே

'இடைவெளியில்லாத அண்மை' என்ற பொருளில் உபரி, அதி⁴ 'மேலே அத⁴ஸ' 'கீழே' என்ற சொற்கள் இரட்டித்துப் பயன்படுத்தப்படும்.

உபரி உபரி க்³ராமம் 'கிராமத்துக்கு வெகு அருகில்';

அதி⁴ அதி⁴ க்³ராமம் 'கிராமத்தில் பக்கத்தில்' அத⁴ அத⁴;

நகரம் 'நகரத்துக்குப் பக்கத்தில்'

அண்மைப்பொருள் இடம், காலம் இரண்டையுமே சுட்டும்.

உபரி உபரி து³: க²ம்

**8.1.8** வாக்யா தே³ராமந்த்ரித ஸ்யாஸூயா ஸம்மதி கோப குத்ஸ ன ப⁴ர்த்ஸனேஷு

ஒரு வாக்கியத்தில் முதலில் நிற்கும் விளிவேற்றுமைச் சொல் பொறாமை (அஸூயா), மரியாதை (ஸம்மதி), கோபம் (கோப), ஏளனம், இகழ்ச்சி (குத்ஸன), பயமுறுத்தல் (ப⁴த்ஸன) ஆகிய பொருட்களைச் சுட்டும்போது இரட்டித்துப் பயன்படுத்தப்படும்.

1) அஸூயா – ஸுந்த³ர ஸுந்த³ர: வ்ருத²ாதே ஸௌந்தர்ய 'ஓ அழகானவனே! உன் அழகு வீணானது'

2) ஸம்மதி – தே³வ தே³வ வந்த்³யோ அஸி 'கடவுளே நீ வணங்கத்தக்கவள்'

3)கோபது³ர்வினீத து³ர்வினீத இத³ானீம் க்³ஞாஸ்யஸி 'ஓ கெட்ட நடத்தையுள்ளவனே! நீ விரைவில் பாடம் கற்றுக் கொள்வாய்'

4) குத்ஸன – த⁴னுஷ்க த⁴னுஷ்க வ்ருத⁴ா தே த³னு: 'ஓ வில்லாளியே உனது வில் பயனற்றது'

5) ப⁴ர்த்ஸன – சோர சோர க⁴ாதயிஷ்யாமி 'ஓ திருடனே உன்னை தண்டனையடைச் செய்கிறேன்'

**8.1.9** ஏகம் ப³ஹுவ்ரீ ஹிவத்

ஏகம் 'ஒன்று' என்ற சொல் இரட்டையாகப்பயன்படுத்தப்படும். அவ்வாறு இரட்டிக்கப்பட்டது பஹுவரீஹித் தொகையைப்போல் கருதப்படும். பஹுவரீஹித் தொகையாகக் கருதப்படும்போது வேற்றுமையுருபு கெடும். பெண்பாலைச் சுட்டும்போதும் இது ஆண்பாலாகக் கருதப்படும் (6.3.24) அவ்வாறே இதன் சுரமும் ஆகும் (6.2.1 ஏகம் + ஏகம் = ஏகΘ + ஏகம் – ஏகைகமக்ஷரம் படதி 'அவள் ஒவ்வொரு எழுத்தாகப் படிக்கிறான்; ஏகயா ஏகயா ஏகைகயா ஆஹுத்யா ஜுஹோதி பஹுவரீஹி போன்ற இவ்வெண்ணுப்பெயர் செயற்பட்டபோதிலும் மாற்றுப் பெயரின் தன்மையை இது இழக்காது. ஏனககஸ்மை, ஏகைகஸ்யை

**8.1.10** ஆப$^{3}$ாதே ச.

மனவேதனையைச் சுட்டும்போதும் (ஆப$^{3}$ாதே$^{4}$) ஒரு சொல் இரட்டித்துப் பயன்படுத்தப்படும். அதை பஹுவ்ரீஹி போல் கருதப்படும்.

க$^{3}$தக$^{3}$த: 'பாவம் அவன் போய்விட்டான்' நஷ்டநஷ்ட:, க$^{3}$தக$^{3}$தா (பெண்பாற் சொல்) (க$^{3}$தா + க$^{3}$தா = க$^{3}$தக$^{3}$தா)

**8.1.11** கர்மத$^{4}$ாரய வதுத்தரேஷு

இங்கிருந்து சூத்திரம் 15 வரை இரட்டிக்கப்பட்ட சொல் கர்ம தாரயத் தொகை போன்று கருதப்படும்.

இங்கு முதலுறுப்பினரின் வேற்றுமையுருபு கெடும். 6.2.223இல் விதிக்கப்பட்டபடி இந்த இரட்டைக் கிளவி இறுதியசையில் உதாத்தம் பெறும்.

**8.1.12** ப்ரகாரே குண வசனஸ்ய

ஒரு குறிப்பிட்ட அளவில்தான் ஒரு குணம் ஒருவனிடம் அமைந்திருக்கிறது என்ற பொருளைச் சுட்டும்போது (ப்ரகாரே) பெயரடை (குணவசன) இரட்டித்துப் பயன்படுத்தப்படும். அது கர்மதாரயமாகக் கருதப்படும்.

படுபடு: 'சுமாரான மூளையுடையவன்' பண்டி$^{3}$ பண்டி$^{3}$த முழுமையான குணம் பொருந்தியவன் என்ற பொருளைச் சுட்டாமல் ஓரளவுக்குத்தான் அக்குணம் ஒருவனிடம் அமைந்திருக்கிறது என்று 'ப்ரகார' என்ற சொல் சுட்டும்.

ஆனால் படுர் தே$^{3}$வதத்த: 'கூர்மையான மூளையுடைய தேவதத்தன்'

வா: அனுபூர்வ்யே த்$^{3}$வே ப$^{4}$வத இதி வக்தவ்யம்

ஒரு குணத்தையுடைய மனிதர்களையோ அல்லது பொருட்களையோ வரிசைக்கிரமப்படி குறிப்பிட, பெயரடைகளை இரட்டித்துப்பயன்படுத்த வேண்டும்.

மூலேமூலே ஸ்தூ$^{2}$லா:, அக்$^{3}$ரே அக்$^{3}$ரே அக்ரே ஸூக்ஷ்மா:, ஜ்யேஷ்ட$^{2}$ம் ஜ்யேஷ்ட$^{2}$ம் ரவேஸ$^{1}$ய: 'வேர்கள் பெரிதாகவும் நுனிகள் மெலிதாகவும் உள்ளன:' 'வயதுக்கிரமப்படி உள்ளே விடு'

வா: ஸ்வாரீதே$^{2}$ அவத$^{4}$ார்யமாணே அனேகஸ்மின் த்$^{3}$வே ப$^{4}$வத இதி வக்தவ்யம்

ஒரு எல்லையைக் குறிக்கும்போது ஒன்றுக்குமேற்பட்டது என்று பெ ாருளை சுட்டும் சொல்லை, பொருள் மாற்றமில்லாமல் இரட்டித்துப்பயன்படுத்த வேண்டும்.

அஸ்மாத் கார்ஷாபணாதி$^{3}$ஹ ப$^{4}$வத்$^{3}$ப்$^{4}$யாம் மாஷம் மாஷம் தே$^{3}$ஹி 'இந்தக் கார்ஷாபணத்திலிருந்து இரண்டு மாஷம் (மட்டும் கொடு. இங்கு மாஷம் என்ற சொல் 'வீப்ஸா' (ஒவ்வொரு) என்ற பொருளைச் சுட்டாது. அதன் பொருள் மாற்றமடையவில்லை. இங்கு இரண்டு மாஷங்களுக்கு ஈடானது கார்ஷா பணம் என்ற பொருளல்ல. கார்ஷாபணம் பல மாஷங்கள் கொண்டது அவற்றுள் இரண்டேயிரண்டு கார்ஷாபணம் கொடுக்கப்படவேண்டுமென்று

தானம் கொடுப்பதற்கு ஒரு வரையறையைக் குறிக்கிறது. ஆகவே இது பகிர்வு (வீப்ஸா) என்பதிலிருந்து வேறுபட்டது. அவ்வாறு ஒரு எல்லையைக் குறிக்காவிட்டால் அஸ்மாத் கார்ஷாபாணாதி3ஹ ப4வதி3ப்4யாம் மாஷமேகம் தே3ஹி

வா: சாபலே த்3வே ப4வத இதி வக்தவ்யம்

கிலி அல்லது மனக்குழப்பம் (சாபலே) என்ற பொருளைச் சுட்ட ஒரு சொல் இரட்டித்துப்பயன்படுத்தப்படும்.

அஹி: அஹி: பு3த்4யஸ்வ பு3த்4யஸ்வ "பாம்பு, பாம்பு, எச்சரிக்கையாக இரு, எச்சரிக்கையாக இரு".

இப்பொருளில் இரண்டு முறை இச்சொற்களைப் பயன்படுத்த வேண்டும் என்பது கட்டாயமல்ல. பேசுபவரின் பொருளை மற்றவர் புரிந்து கொள்ளும் வரையில் எத்தனை முறை வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். அஹி: அஹி: அஹி: பு3த்4யஸ்வ, பு3த்4யஸ்வ, பு3த்4யஸ்வ

வா: க்ரியாஸமபி4ஹாரே த்3வே ப4வத இதி வக்தவ்யம்

செயலின் அழுத்தத்தையோ அல்லது அடிக்கடி நிகழ்தல் என்ற பொருளையோ சுட்டும்போது ஒரு சொல் இரட்டித்துப் பயன்படுத்தப்படும். ஸ ப4வான் லுனீஹி லுனீஹி இத்யேவாயம் லுனாதி

வா: ஆபீ4க்ஷ்ண்யே த்3வே ப4வத இதி வக்தவ்யம்

திரும்பத்திரும்பச் செய்தல் (ஆபீ4க்ஷ்ண்யே) என்ற பொருளைச் சுட்ட சொற்கள் இரட்டிக்கப்படும்.

பு4க்த்வா பு4க்த்வா வ்ரஜதி, போ4ஜம் போ4ஜம் வ்ரஜதி

வா: டா3சி த்3வே ப4வத: இதி வக்தவ்யம்

'டா3ச்' ஒட்டு தொடர்ந்து வரும்போது சொற்கள் இரட்டிக்கப்படும் படாபடா கரோதி, படாபடாயதே (பார்க்க 5.4.57)

வா: பூர்வ ப்ரத2மயோரர்த2ாதிஸ'ய விவக்ஷாயாம் த்3வே ப4வத இதி வக்தவ்யம்

பூர்வ, ப்ரத2ம என்ற சொற்களை இணைமை, மீமை என்ற பொருளைச் சுட்ட இரட்டித்து பயன்படுத்தப்படும். பூர்வபூர்வம் புஷ்ப்யந்தி, ப்ரத2மம் ப்ரத2மம் பச்யந்தே

இணைமை, மீமையைச் சுட்டும் ஒட்டுக்களையும் பயன்படுத்தலாம். பூர்வதரம் புஷ்ப்யந்தி, ப்ரத2மதாம் பச்யந்தே

வா: ட3தர ட3தமயோ: ஸமஸப்ரத4ாரணயோ:

ஸ்த்ரிநிக3தே3 ப4ாவே த்3யே ப4வத இதி வக்தவ்யம் ட3தர, ட3தம (முறையே இணைமை, மீமையொட்டுக்கள்) என்ற வொட்டுக்களாலாக்கப்பட்ட

சொற்கள், பெண்பாலைக் குறிப்பதாகவும், இரண்டு அல்லது அதற்கு மேற்ப்பட்டவைகளுள் ஒன்றின் மேம்பாடு அல்லது உயர்வைத் தீர்மானிக்க இரட்டித்துப் பயன்படுத்த வேண்டும்.

உப$^4$ாவிமாவாட்$^3$யௌ, கதரா கதரா அனயோராட்$^3$யதா. இவர்களிருவருமே செல்வந்தர்கள். இவர்களுள் யார் அதிகமான செல்வம் உடையவர்கள் என்று தீர்மானிப்போம். ஸர்வே இமே ஆட்3யா: கதமாகதமா ஏஷாமாட்$^3$யதா 'இவர்களெல்லோருமே செல்வந்தர்கள், இவர்களுள் யார் எல்லோரையும்விட அதிகச் செல்வம் படைத்தவர்கள் என்று தீர்மானிப்போம்.

தர, தம ஒட்டுக்களைத் தவிர மற்ற சொற்களும் இவ்வாறு பயன்படுத்தப்படுவதைக் காணலாம். உப$^4$ாவிமௌ ஆட்$^3$யௌ, கீத்$^3$ருஸீ கீத்$^3$ருஸீ அனயோராட்$^3$யதா, உப$^4$ாவிமௌ ஆட்$^3$யௌ கதர: கதர: அனயோர் விப$^4$வ: (இங்கு பெண்பாலைச் சுட்டும் சொல் பயன்படுத்தப்படவில்லை)

வா: கர்மவ்யதிஹாரே ஸர்வ நாம்ஸோ த்$^3$வே ப$^4$வத இதி வக்தவ்யம் ஸமாஸவச்ச ப$^3$ஹுலம். யத$^3$ா நஸமாவைத் ப்ரத$^2$மைக்வசனம் தத$^3$ா பூர்வ பதஸ்ய செயல் பரிமாற்றத்தைச் சுட்ட மாற்றுப் பெயர்கள் இரட்டிக்கப்படும். இது பல வகையில் தொகைபோன்று கருதப்படும். அவ்வாறு தொகையாகக் கருதப்படாவிட்டால் அதன் முதலுறுப்பினர் முதல் வேற்றுமையொருமையிலமையும் (பார்க்க 1.3.14; 3.3.43; 5.4.127)

அன்யமன்யமிமே ப்$^3$ராஹ்மணா: போஜயந்தி 'இந்தப்பிராமணர்கள் ஒருவருக்கொருவர் உணவளித்துக் கொள்கிறார்கள்'. அன்யோ அன்யமிமே ப்$^3$ராஹ்மணா பே$^4$ாஜயந்தி அன்யோன்யஸ்ய ப்$^3$ராஹ்மணா பே$^4$ாஜயந்தி, இரரேதரம் பே$^4$ாஜயந்தி, இதரேத ரஸ்வ பே$^4$ாஜயந்தி

வா: - ஸ்த்ரீ நபும்ஸகயோருத்தரபத$^3$ஸ்ய சாம்ப$^4$ாவோ வக்தவ்ய:
மேற்குறிப்பிட்ட சூழலில், பெண்பாற்சொல், நபும்ஸகச் சொற்களிலிரண்டாவது சொல்லோடு 'ஆம்' விருப்பாக இணைக்கப்படும். அன்யோ அன்யாயிமே ப்$^3$ராஹ்மண்யௌ பே$^4$ாஜயத; அன்யோ அன்யம் பே$^4$ாஜயதே: இதரேதராம் பே$^4$ாஜயத:, இதரேதரம் பே$^4$ாஜயத:, அன்யோ அன்யாமிமே ப்$^3$ராஹ்மணகுலே பே$^4$ாஜயதே: இதரேதராம்மே ப்$^3$ராஹ்மணகுலே பே$^4$ாஜயதே:, இதரேதரமிமே ப்$^3$ராஹ்மணகுலே பே$^4$ாஜயத:

**8.1.13** அக்ருசிச$^2$ரே ப்ரியஸுக$^2$யோர் அன்யதரஸ்யாம்
'எளிதாக, கஷ்டமில்லாமல்' என்ற பொருளைச் சுட்டும்போது 'ப்ரிய', 'ஸுக$^2$' என்ற சொற்கள் விருப்பாக இரட்டையாகப் பயன்படுத்தப்படும்.
ப்ரிய ப்ரியேண த$^3$த$^3$ாதி, ஸுக$^2$ஸுகே$^2$ன ததாதி அல்லது ப்ரியேண த$^3$த$^3$ாதி, ஸுகே$^2$ன த$^3$த$^3$ாதி 'எளிதில் கொடுக்கிறான்' ஆனால் ப்ரிய: புத்ர: 'அன்பு மகன்' ஸுக$^2$ ரத$^2$:

**8.1.14** யத$^{2}$ாஸ்வே யத$^{2}$ாயத$^{2}$ம்

யத$^{2}$ாயத$^{2}$ம் என்ற சொல் 'முறையே தகுந்த' என்ற பொருட்களில் விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்ட சொல்லாகும்.

க்$^{3}$ஞாதா: ஸர்வே பத$^{3}$ார்த$^{2}$ா யத$^{2}$ாயத$^{2}$ம் (யதாஸ்வபப4ாவம்) எல்லாப் பொருட்களும் அதனதன் தன்மைப்படியறிந்து கொள்ளப்படுகின்ற 'யத$^{2}$ா' என்ற சொல்லின் இரட்டித்தல், நபும்ஸக, ஆகியவைகள் விதிக்குப்புறம்பானவை.

**8.1.15** த்$^{3}$வந்த்$^{3}$வம் ரஹஸ்ய மர்யாத$^{3}$ா வசன வ்யத் க்ரமண யக்$^{3}$ஞ பாத்ர ப்ரயோக$^{3}$ாபி$^{4}$ன்யக்தேஷு

'த்$^{3}$வந்த்$^{3}$வம்' என்ற சொல் கீழ்க்கண்ட பொருட்களைச் சுட்ட விதிக்குப்புறம்பாக ஆக்கப்பட்ட சொல்லாகும். இரகசியம் (ரஹ்ஸ்ய), எல்லை, வரையறை (மர்யாத$^{3}$ாவசன), பிரிதல் (வ்யத்க்ரமண), யாகத்துக்குரிய பாத்திரத்தைப் பயன்படுத்துதல் (யக்$^{3}$ஞா பாத்ர ப்ரயோக$^{3}$) தெளிவாக்கல், தோன்றல் (அபி$^{4}$வ்யக்த)

'த்$^{3}$வி' என்ற சொல் இரட்டிக்கப்பட்டு, முதற்சொல்லின் 'இ'க்குப் பதிலியாக 'அம்' வந்து, இரண்டாவது 'இ'க்கு 'அ' பதிலியாகி விதிக்குப்புறம்பாக ஆக்கப்பட்ட சொல் (த்$^{3}$வி த்$^{3}$வம் – த்$^{3}$வ) த்$^{3}$வந்த்$^{3}$வம் என்ற சொல்லின் பொருள் இரகசியம். மேலே கொடுக்கப்பட்ட மற்ற பொருட்கள் ஒரு வாக்கியத்தில் அமையும் சூழலைப் பொருத்தவை.

1) த்$^{3}$வந்த்$^{3}$வம் மந்த்ரயந்தே 'அவர்கள் இரண்டிரண்டு பேராகக் கூடி இரகசியமாக ஆலோசனை நடத்துகிறார்கள்'.
2) ஆசதுரம் ஹோமே பஸ$^{1}$வோ த்$^{3}$வந்த்$^{3}$வம் மிது$^{3}$னாயந்தே "நாலாவது தலைமுறை வரை விலங்குகள் இணையும்"
3) த்$^{3}$வந்த்$^{3}$வம் வ்யுத்க்ராந்தா "அவர்கள் இரண்டு கட்சிகளாகப் பிரிந்தனர்"
4) த்$^{3}$வந்த்$^{3}$வம் ந்யஞ்சியக்$^{3}$ஞ பாத்ராணி ப்ரயுனக்தி "யாகத்துக்கான பாத்திரங்களை அவன் இரண்டிரண்டாக கீழ்நோக்கி உபயோகித்தான்"
5) த்$^{3}$வந்த்$^{3}$வம் ஸங்கர்ஷண வாஸுதேவ ஸங்கர்ஷணல் வாஸுதேவன் என்று இரட்டையர்கள் (தோன்றல்) "த்வந்த்வம்" என்ற சொல் மற்ற பொருட்களிலும் காணப்படும் த்$^{3}$வந்த்$^{3}$வம் யுத்$^{3}$த$^{4}$ம் வர்த்ததே, த்$^{3}$வந்த்$^{3}$வானி ஸஹதே தீ$^{4}$ர:, சார்தே$^{2}$ த்$^{3}$வந்த்$^{3}$வ:

**8.1.16** பத$^{3}$ஸிய

இங்கிருந்து 8.3.54 வரை "ஒரு சொல்லின் (பத$^{3}$ஸ்ய) என்ற சொல் தொடர்ந்து பயன்படுத்தப்படும்.

இது ஒரு அதிகார சூத்திரம். 'பத$^{3}$ஸ்ய' என்ற சொல் 8.3.54 வரை அனுவிருத்தியாகும். தொடர்ந்து வரும் சூத்திரங்களில் விதிக்கப்படுவது முழுமையான சொற்களில் செயற்படும்.

காட்டாக சூ. 8.2.23 கூட்டுமெய்யில் முடிவதில் இறுதிமெய்கெடும் என்று

விதிக்கிறது. இத்துடன் 'பதஸ்ய' என்ற சொல்லை இணைத்து, இதன் பொருளை முழுமையாக்க வேண்டும். அதாவது கூட்டு மெய்யின் முடியும் ஒரு சொல்லின் (பத3ஸ்ய) இறுதிமெய் கெடும். பசன் (<பசந்த்), யஜன் (<யஜந்த்). ஆனால் பசந்தெள, யஜந்தெள, இங்கு 'த்' (இறுதியுயிர்) கெடாது. ஏனென்றால், 'பசந்த்' ஒரு பதமாகாது. பதஸ்ய என்ற ஆறாம் வேற்றுமைச் சொல் ஸ்த2ான ஷஷ்டி அதாவது 'ஒரு முழுமையான சொல்லின்' என்ற பொருளைச் சுட்டுவதாகவோ அல்லது அவயயஷஷ்டி அதாவது 'ஒரு முழுமையான சொல்லின் ஒரு பகுதியின்' என்ற பொருளைச் சுட்டுவதாகக் கருதப்படும்.

**8.1.17** பத3ாத்

'ஒரு முழுமையான சொல்லிற்குப்பின்' இதிலிருந்து தொடங்கி 8.1.68 வரை 'பத3ாத்' என்ற சொல் அனுவிருத்தியாகும். இது மேற்சூத்திரத்திற்குபட்ட ஒரு அதிகார சூத்திரமாகும்.

**8.1.18** அனுத3ாத்தம் ஸர்வமபாத3ாதெ3ள

இச்சூத்திரத்திலிருந்து 8.1.74வரை இச்சூத்திரம் அனுவிருத்தியாகும். ஒரு செய்யுளின் முதலில் நிற்காத (அபாத3ாதெ3ள) எல்லாம் (ஸர்வம்) அனுதாத்தசுரம் உடையதாகும்.

இதுவும் ஒரு அதிகார சூத்திரம். இங்கு காணப்படும் 'பாத' என்ற சொல் (அபாத3ாதெ3ள என்பதில்) 16–17இல் பயன்படுத்தியிருப்பது போல் ஒரு ஸம்க்3ஞா அல்ல.

**8.1.19** ஆமந்த்ரிதஸ்ய

ஒரு சொல்லுக்குப்பின் நிற்கும் விளி வேற்றுமைச் சொல் (ஆமந்த்ரி தஸ்ய) லின் எல்ல வசைகளும் அனுதாத்தமாகும். ஆனால் அனு ஒரு செய்யுளின் முதலில் நிற்கும்போது அல்ல.

பசஸி தே3வதத்த ''தேவதத்தனே, சமைக்கிறாயா. ஆனால் தே3வதத்த, பசஸி அக்னே யம் யக்3ஞியம் அத்4வரம் விஸ்'வத: பரி பூர ஸி (ருக் 1.1.3) ஆனால் உப த்3வாக்3னே தி3வேதி3 (ருக் 1.1.7) விளி வேற்றுமைச் சொல் முதலசையில் உதாத்தம் பெறும். (6.1.198). இந்தச் சூத்திரம் அதை அனுதாத்தம் ஆக்குகிறது.

வா: ஸமானவாக்யே நிக4ாத யுஷ்மத3ஸ்மத3ாதே3ஸா வக்தவ்யா:

நிக4ாத (எல்லா வசைகளும் அனுதாத்தம் ஆதல், இந்தச் சூத்திரம் 8.1.28 முதலியவை) தொடர்பான விதிகள், யுஷ்மத், அஸ்மத் ஆகிய வைகளின் பதிலிகள் தொடர்பான விதிகள் எல்லாம் பின்னால் வரும் சொல் நிகாதமாவதற்கோ அல்லது பதிலியாவதற்கோ, காரணமாக அமையும் முன்னால் நிற்கும் சொல், ஆகியவிரண்டுமே ஒரே வாக்கியத்தின் பகுதிகளாக அதாவது ஒரே வாக்கியத்தைச் சேர்ந்ததாக ஆகும்போதுதான்

செயற்படும். ஆகவே அயம் த3ண்டோ, ஹரானேன 'இது கம்பு, இதனால் இழு' என்ற சொற்றொடர்களில், 'ஹர' என்ற சொல்லுக்குமுன் ஒரு பெயர்ச் சொல் நின்ற போதிலும் 8.1.28இன் தனது சுரத்தை இழக்காது. ஏனென்றால் இவைகள் இரண்டும் தனித்தனி வாக்கியங்களின் பகுதிகள். ஓத$^3$னம் பச தவ ப$^4$விஷ்யதி, ஓத$^3$னம் பச மம ப$^4$விஷ்யதி 'உணவு சமை, அது உனதாகும். உணவு சமை, அது எனதாகும்' அதாவது உன்னால் சமைக்கப்பட்ட சோறு உனக்கும் எனக்கும் போதும். இங்கு 8.1.22இல் விதிக்கப்பட்ட தே, பதிலிகள் வராது.

ப$^4$தீஹ விஷ்ணுமித்ரோ, தே$^3$வத$^3$த்த ஆக$^3$ச்ச இந்த எடுத்துக் காட்டிலும், 'தேவதத்த' என்ற விளிச்சொல்லுக்கு முன் விஷ்ணுமித்ர என்ற சொல் நின்றபோதிலும் மேலே கூறப்பட்ட காரணத்தினால், 'தேவதத்த' என்ற சொல் தனது சுரத்தை இழக்காது.

இஹ தே$^3$வத்த! மாதா தே கத$^2$யதி நத்$^3$யாஸ் திஷ்டதி கூலம் (8.1.28) கூலம் ஸாலீனாம் தே ஓத$^3$னம் த$^3$ாஸ்யாமி. இந்த எடுத்துக்காட்டுகளில் விளி வேற்றுமை (தே$^3$வத்த) வினைச் சொற்கள், யுஷ்மத், அஸ்மத் ஆகியவைகள் முன்னால் நிற்கும் சொற்களுடன் தொடரியல் அமைப்பில் தொடர்புள்ளது அல்ல. ஆயினும் நிகாத, முதலியவைகள் இங்கு செயற்படுகின்றன. (ஸமர்த$^2$:பதவிதி (2.1.1) என்ற பொதுவிதி இருந்த போதிலும்) முழுமையாக்கப்பட்ட சொற்கள் தொடர்பான விதிகள், அச்சொற்கள் ஒரு வாக்கிய அமைப்பில் காணப்படும் போதுதான் செயற்படும். மேலே கொடுக்கப்பட்ட எடுத்துக்காட்டில் இஹ ஸ்தி2தா மாதா தே தே$^3$வதத்த என்பதுதான் 'இஹ தே$^3$வதத்த' அல்ல. இஹ, என்ற சொல் ஸ்தி$^2$தா என்ற சொல்லுடன் தொடரியல் தொடர்பு கொண்டது.

'தே$^3$வதத்த' என்ற சொல்லுடனல்ல. இதேபோல், 'நத்$^3$யா' 'கூலம்' என்ற சொல்லுடன் தொடர்புள்ளது 'திஷ்டதி' யோடல 'ஸாலீனாம்' 'தே'யுடன் அல்ல 'ஓத$^3$னம்' என்ற சொல்லுடன் இவைகளில் நிக$^3$ாத, 'தே' பதிலியாதல் ஆகியவைகள் காணப்படுகின்றன. முன்னால் நிற்கும் சொல்லுக்கும் பின்னால் வரும் சொல்லுக்கும் 'ஸமர்த$^2$' தொடர்பில்லாவிட்டாலும், இவைகள் ஒரே வாக்கியத்தில் நிற்பதால், இத்தகைய மாற்றங்கள் ஏற்படுகின்றன.

**8.1.20** யுஷ்மத$^3$ஸ்மதே$^3$ா: ஷஷ்டீ$^2$ சதுர்தீ$^2$ த்$^3$விதீயாஸ்த$^2$யோர் வாந்தாவெள 6,4,2ஆம் வேற்றுமையிலமையும் யுஷ்மத்$^3$ 'நீ', அஸ்மத்$^3$ 'நாங்கள்' என்ற சொற்களுக்கு முறையே 'வாம்' 'நௌ' ஆகியவைகள் பதிலியாகும். (அவைகள் அனுதாத்த சுரம் பெறும்)

இந்தப் பதிலிகள் தன்மை, முன்னிலை இடப்பெயர்களின் இருமையென்று அனுமானிக்க முடியாது. ஏனென்றால் தொடர்ந்து வரும் இரு சூத்திரங்களில் பன்மை, ஒருமை ஆகியவைகளுக்குச் சிறப்புப் பதிலி கூறப்பட்டிருக்கின்றன. க்$^3$ராம: வாம் (யுவாப்$^4$யாம்) தீ$^3$யதே 'உங்களிருவருக்கும் ஒரு கிராமம் கொடுக்கப்பட்டிருக்கின்றன', ஜனபத$^3$: நௌ (ஆவாப்4யாம்) தீயதே 'எங்களுக்கு (இருவருக்கும்) ஜனபதம் கொடுக்கப்பட்டிருக்கின்றன'

**8.1.21** ப3ஹுவசனே வஸ் நஸௌ

6.4.2 ஆம் வேற்றுமையிலமையும் யுஷ் மத்3, அஸ்மத்3 ஆகியவைகள் பன்மைபாக அமையும்போது அம்மாற்றுப் பெயர்களுக்குப் பதிலியாக முறையே 'வஸ்' 'நஸ்' வரும் (ஒரு சொல்லுக்கு பின் வரும் அனுதாத்தமாகும். க்3ராமோ வ: ஸ்வம் 'உங்களுடைய சொந்த கிராமம்', ஜனபதே3ாவோ தீ3யதே, ஜனபதோ ந: ஸ்வம்; ஜனபதே3ா நோ தீ3யதே; க்3ராமோ பஸ்1யதி, ஜனபதே3ா ந: பஸ்1யதி

**8.1.22** தே மயாவேக வசனஸ்ய

யுஷ்மத், அஸ்மத் ஆகியவைகளின் 6, 4ஆம் வேற்றுமை ஒருமைக்குப் பதிலியாக (அவைகளுக்கு முன் ஒரு சொல் நிற்கும்போது, அவைகள் அனுதாத்தமாகும்) முறையே 'தே', மே'வரும். க்3ராமஸ் தேஸ்வம், க்3ராமோ மே ஸ்வம், க்3ராமஸ்தே தீ3யதே, க்3ராமோ மே தீ3யதே

**8.1.23** த்வாமௌ த்3விதீயாயா:

மேற்கூறிய சூழலில் 'இரண்டாம் வேற்றுமையிலமையும் 'யுஷ்மத்' 'அஸ்மத்' ஆகியவைகளுக்கு முறையே 'த்வா', 'மா' பதிலியாகும் (ஒருமையில்) க்3ராமஸ்த்வா பஸ்1யதி, க்3ராமோ மா பஸ்1யதி

**8.1.24** ந சவாஹாஹைவயுக்தே

ச 'உம்' வா 'அல்லது' ஹ 'ஒ', அஹ 'வியப்புக்குறி' ஏவ 'மட்டும்' என்பவைகளுக்கு முன் நிற்கும் 'யுஷ்மத்', 'அஸ்மத்' ஆகியவைகளுக்கு 2இல் விதிக்கப்பட்ட பதிலிகள் வராது.

1) ஹரிஸ் த்வாம் மாம் ச ரக்ஷது 'ஹரி உன்னையும் என்னையும் காப்பாற்றட்டும்'

2) க்3ராமஸ்தவ வா ஏவம் மம வா ஸ்வம். 'கிராமம் உன்னுடையது அல்லது என்னுடையது.' இதே போன்று மற்ற சொற்களுடனும் வரும்.

நேர்த்தொடர்புள்ளபோது என்பதை 'யுக்த' என்ற சொல் சுட்டும். ஆகையால் க்3ராமஸ் ச தே ஸ்வம், நக3ரம் சமே ஸ்வம்.

**8.1.25** பஸ்1யார்தை2 ஸ்1சானாலோசனே

'பார்த்தல் (கண்ணால்)' என்ற பொருளைத் தவிர்த்து (அனாலோசனே) தெரிந்து கொள், காண்' என்ற பொருளைச் சுட்டும் (பஸ்யார்த2) வினைகளுடன் நிற்கும் யுஷ்மத், அஸ்மத் என்ற மாற்றுப் பெயர்களுக்கும் 20.23 வரை விதிக்கப்பட்டவை பதிலியாக வராது.

சேதஸா த்வாம் ஸமீக்ஷ்யதே "உன்னை மனதால் தெரிந்து கொள்கிறான்" ப4க்தஸ் தவ ரூபம் மனஸா த்4யாயதி "பக்தர்கள் உனது உருவத்தை மனதினால் தியானிக்கிறார்கள்" ஆனால் க்3ராமோ மா பஸ்யதி 'பஸ்யார்த2' என்பது அறிதல், தெரிந்து கொள்தல் (த3ர்ஸ1ன 'அறிவு') என்ற பொருளைச் சுட்டும். ஆலோசனை என்ற சொல் 'கண்ணால் காண்பது' என்ற பொருளைச்

சுட்டும் முந்தியது உருவகமாக பயன்படுத்தப்படும்.

**8.1.26** ஸபூர்வாயா: ப்ரத2மாயா: விப4ாஷா
மற்றொரு சொல்லுக்குப்பின் (ஸபூர்வாயா:) நிற்கும் முதல் வேற்றுமைச் சொல்லுக்குப் (ப்ரத2மாயா:) பின்வரும் யுஷ்மத், அஸ்மத் ஆகியவைகளுக்கு 20.23 வரை விதிக்கப்பட்ட பதிலிகள் விருப்பாக வராது.
க்3ராமே கம்ப3லஸ்தே ஸ்வம்; அல்லது
க்3ராமே கம்ப3லஸ் ஸ்வம்;
க3ராமே கம்ப3லோ மே ஸ்வம் அல்லது
க்3ராமே கம்ப3லோ மம ஸ்வம்
ஆனால் கம்ப3லஸ் தே ஸ்வம், கம்ப3ல: மே ஸ்வம்

வா: யுஷ்மத3ஸ்மதோர் விப4ாஷா அனன்வாதே3ஸ1 இதி வக்தவ்யம்
'யுஷ்மத்', 'அஸ்மத்' ஆகியவைகளுக்கு விதிக்கப்பட்டிருக்கும் இந்த விருப்பு விதி, அவைகள் அன்வாதே3ஸ1 மாகப் பயன்படுத்தப்படாமலிருக்கும்போது மட்டுந்தான். 'அன்வாதேஸ' மாகும் போது பதிலியாதல் கட்டாயமாகும். விருப்பாகாது இந்த வார்த்திகம். இச்சூத்திரத்துக்கு ஒரு வரையறை ஏற்படுத்துகிறது.
அதை ஒரு வ்யவஸ்தி2த விபாஷா ஆக்குகிறது. அதே2ா க்3ராமே கம்ப3லஸ்தே ஸ்வம், அதே2ா க்3ராமே கம்ப3லோ மே ஸ்வம்

வா: ஸர்வ ஏவ வாந்நாவாத3யோ அனன்வாதே3ஸே விப4ாஷா இதி வக்தவ்யம்
'வாம்', 'நௌ' முதலியவைகளெல்லாமே அன்வாதேஸமாகப் பயன்படுத்தாவிட்டால், முதல் வேற்றுமைச் சொல், மற்றொரு சொல்லுக்குப்பின்னால் நின்றாலுமே நிற்காவிட்டாலுமே விருப்பாகும் என்பது மற்றொரு சாராரின் கருத்து.
கம்ப3லஸ்தே ஸ்வம், கம்ப3லஸ்தவஸ்வம

**8.1.27** திங: கே3ாத்ராதீ3னி குத்ஸனாபீ4க்ஷ்ண்யயோ:
வினைச் சொல்லுக்குப்பின் (திங) நிற்கும் 'கே3ாத்ர' முதலியவைகள் 'இகழ்தல் (குத்ஸன) அல்லது திரும்பச் திரும்பச் செய்தல்' (ஆபீ4க்ஷ்ண்ய்யோ:) என்ற பொருளைச் சுட்டும்போது அனுதாத்தம் பெறும். குத்ஸன – பசதி கே3ாத்ரம் "தனது கோத்திரத்தைக் கூறி அதாவது குடும்பத்தின் பெயரால், பிழைப்பு நடத்துகிறான்". ஆபீ4க்ஷ்ண்ய – பசதி பசதி கோத்ரம் தனது கோத்திரத்தை அடிக்கடி கூறுகிறான். அதாவது திருமணம் போன்ற சடங்குகளில் கோத்திரத்தில் பெயரை மூன்று முறை திரும்பத் திரும்பக் கூறவேண்டும்.

**8.1.28** திங்ஙதிங:
வினைச் சொல்லைத் தவிர்த்து மற்ற சொற்கள் ஒரு வினைச்சொல்லுக்கு

முன் நிற்கும்போது அவ்வினைச் சொல் அனுதாத்தமாகும் தே[3]வதத்த: பசதி ''தேவதத்தன் சமைக்கிறான்'' ஆனால் ப4வதி பசதி 'சமையல் நடந்து கொண்டிருக்கிறது'

**8.1.29** ந லுட்

வினைச் சொல்லைத் தவிர்த்து மற்ற சொற்கள் 'லுட்' (எதிர்காலவினை)டுக்கு முன் நிற்கும்போது 'லுட்' அனுதாத்தமாகாது. ஸ்'வ: கர்தா 'நாளைக்குச் செய்வான்'

**8.1.30** நிபாதைர் யத[3]யதி[3]ஹந்த குவின்னேச்சேச் சண் கச்சித்[3] ய த்[3] யத்ரயுக்தம்

யத் 'அது', யதி 'ஆல்', ஹந்த 'ஓ', குவித் 'ஒரு வேளை, ஒருக்கால்', நேத்[3], சேத்[3], சண் 'ஆல்' கச்சித்[3], யத்ர 'எங்கு' ஆகிய இடைச் சொற்களுடன் வரும் வினைச் சொற்கள் அனுதாத்தமாகாது.

1) யத்கரோதி (2) யதி[3] கரோதி 'அவன் செய்தால்' 3) ஹந்த கரோதி (4) குவித் கரோதி (5) நேத் கரோதி 6) ஸ சேத்[3]பு[4]ங்க்தே (7)அயம் ச (=சேத்) மரிஷ்யதி 8)கச்சித் அதீ[4]தே (9)யத்ர பு[4]ங்க்தே ஆனால் யத்கூஜதி ஸ'கடம் 'வண்டி போகும்போது (யத்) சத்தம் எழும்புகிறது (இடைச் சொல்லல்ல)

**8.1.31** நஹ ப்ரத்யாரம்பே[4]

'தடுத்தல்' (ப்ரத்யாரம்பே[4]) என்ற பொருளைச் சுட்டும்போது, 'நஹ' என்ற இடைச் சொல்லோடு வரும் வினைச் சொல் அனுதாத்தம் ஆகாது.

நஹ பே[4]ாக்ஷ்யஸே 'நீ கட்டாயம் உண்பாய்' உண்ணும்படி திரும்பத் திரும்பக் கேட்டுக் கொண்டபோதும் உண்ண மறுப்பவனின் மறுப்புக்குத் தடை. ஆனால் தடையைக் குறிக்காவிட்டால் ''நஹ வைதஸ்மின்ஸ்'ச லோகே த[3]க்ஷிணாமிச்சந்தி'' நிச்சயமாக ஜனங்கள் அந்நாட்டில் தக்ஷிணையை விரும்பமாட்டார்கள்.

**8.1.32** ஸத்யம் ப்ரஸனே

ஸத்யம் 'உண்மையாக' என்ற சொல்லுடன் வரும் வினைச் சொல் 'கேள்வி' என்ற பொருளைச் சுட்டும்போது அனுதாத்தம் ஆகாது.

ஸத்யம் பே[4]ாக்ஷ்யஸே ''உண்மையாக நீ உண்பாயா? ஆனால் ஸத்யம் வக்ஷ்யாமி சாந்ருதம் 'நான் உண்மைதான் பேசுகிறேன். பொய்யல்ல.

**8.1.33** அங்க[3]ாப்ரதி லோமே

அங்க[3] 'உண்மையாகவே' என்ற இடைச்சொல்லோடு வரும் வினை ச்சொல் 'நட்பு முறையோடு வற்புறுத்தல்' என்ற பொருளைச் சுட்டும்போது அனுதாத்தமாகாது.

அங்க[3] பச 'மெய்யாகவே சமை' ஆனால் அங்க[3] கூஜ இதா[3]னீம் க்3ஞாஸ்யஸி 'நீ அழுதுகொண்டேயிரு', இப்போது புரிந்து கொள்வாய்'

**8.1.34** ஹி ச

ஹி 'ஏனென்றால்' என்ற இடைச் சொல்லோடு வரும் வினைச்சொல்லும் 'நட்புரிமையோடு வற்புறுத்தல்' என்ற பொருளைச் சுட்டும்போது அனுதாத்தமாகாது.

ஸஹி பட$^2$ 'ஏனென்றால் நீ நிச்சயமாகப்படி' ஆனால் ஸஹி கூஜ வ்ருஷல இத$^3$ானீம் க்$^3$ஞாஸ்யஸி

**8.1.35** ச$^2$ந்த$^3$ஸி அநேகமபி ஸாகாங்க்ஷம்

வேதமொழியில், ஒன்றுக்கும் மேற்பட்ட வினைச்சொற்களின் 'ஹி'யு டன் வரும்போது அவைகள் அனுதாத்தமாகாது. அவைகள் முதல் வினைச் சொல்லைச் சார்ந்து நிற்கும் அந்ருதம் ஹி மத்த: வத$^3$தி பாப்மா ஏனம் விபுனாதி குடிகாரன் பொய் கூறினால், பாவம் அவனைத் தூய்மையற்றவனாக்கும்.

**8.1.36** யாவத் யத$^2$ாப்$^4$யாம்

யாவத் 'அவ்வாறே' யதா 'அத்தகைய' என்ற இடைச்சொற்களுடன் வரும் வினைச் சொற்கள் அனுதாத்தமாகாது. யாவத்$^3$ பு$^4$ங்க்தே 'எவ்வளவு நேரம் அவன் உண்கிறானோ', யதா பு$^4$ங்க்தே 'அவன் எப்படி உண்கிறானோ'

இடைச்சொற்கள் வினைச் சொற்களுக்கு முன் நிற்காவிட்டாலும் இவ்விதி செயற்படும். காட்டாக தே$^3$வத$^3$த்த: பசதி யதா/யாவத் 'தேவதத்தன் எப்படிச் சமைக்கிறானோ அல்லது எவ்வளவு நேரம் தேவதத்தன் சமைக்கிறானோ'

**8.1.37** பூஜாயாம் நாநந்தரம்

யாயத், யத$^2$ா என்ற இடைச் சொற்கள் வினைகளுக்குமுன் இடையீடின்றி நிற்கும்போது (அனந்தரம்) 'புகழ்தல்' என்ற பொருளைச் சுட்டும்போது அனுதாத்தமாகும்.

இச்சூத்திரத்தில் காணப்படும் எதிர்மறையொட்டான 'ந', சூ. 29இலிருந்து தொடரும் 'ந'வை நிராகரித்து சூ. 18இல் விதித்ததைத் திரும்பவும் கொண்டு வருகிறது.

யாவத் பசதி ஸோ$^1$ப$^4$னம் 'எவ்வளவு காலம் வரையில் அவன் நன்றாகச் சமைக்கிறானோ' யத$^2$ா பசதி ஸோ$^1$ப$^4$னம். ஆனால் யாவத்/யத$^2$ா பு$^4$ங்க்தே (புகழ்ச்சியல்ல); யாவத்$^3$ தே$^3$வத$^3$த்த: பசதி ஸோ$^1$ப$^4$னம் 'யாவத்' என்ற இடைச்சொல்லுக்கும் 'பசதி' என்ற வினைக்கும் இடையே 'தே$^3$வத$^3$த்த' வருகிறது.

**8.1.38** உபஸர்க$^3$வ்யபேதம் ச

'யாவத்', 'யத$^2$ா' என்ற இடைச் சொற்களுடன் வரும் வினைச்சொல், 'புகழ்தல்' என்ற பொருளில் ஆனால், வினைச்சொல்லுக்கும் இடைச்சொல்லுக்குமிடையே உபஸர்க்கம் நிற்கும்போது அனுதாத்தமாகும்.

யாவத் ப்ரபசதி தே$^3$வத$^3$த்த: ஸோ$^1$ப$^4$னம் ஆனால் யாவத்$^3$தே$^3$வத$^3$த்ர: ப்ரபசதி

**8.1.39** ச பஸ்1ய பஸ்1யதாஹைற: பூஜாயாம்

து 'ஆனால்', பஸ்1ய/பஸ்1யத 'பார்', அஹ 'நிச்சயமாக' ஆகியவைகளுடன் வரும் வினைச் சொல் 'புகழ்தல்' என்ற பொருளைச் சுட்டும்போது அனுதாத்தமாகாது.

1) மாணவகஸ்து பு4ங்க்தே 1ஸோப4னம் ஆனால் பையன் நன்றாக உண்கிறான் (2) பஸ்1ய/பஸ்1யத மாணவக: பு4ங்கே ஸோ1ப4னம் (3) அஹ மாணவக: பு4ங்க்தே ஸோ1ப4னம்.

**8.1.40** அஹோ ச

'அஹா', வுடன் வரும் வினைச் சொல் 'புகழ்தல்' என்ற பொருளில் அனுதாத்தமாகாது.

அஹோ தே3வத3த்த: 1பசதி ஸோ1ப4னம்

**8.1.41** ஸே1ஷே விப4ாஷா

'புகழ்தல்' என்ற பொருளைத் தவிர்த்து மற்ற பொருட்களில் 'அஹோ'வுடன் வரும் வினைச்சொல் விருப்பாக அனுதாத்தம் ஆகாது.

கட1ம் அஹோ கரிஷ்யஸி/கரிஷ்யஸி (பொறாமையுடன் கூறியது)

**8.1.42** புரா ச பரீப்ஸாயாம்

'விரைவு' என்ற பொருளில் புரா 'முன்பு' வுடன் வரும் வினைச் சொல் விருப்பாக அனுதாத்தம் ஆகாது.

அதீ4ஷ்வ மாணவக புரா வித்3யோததே/வித்யோததே 'ஓ மாணவனே, மின்னல் மின்னுவதற்கு முன் படி' ஆனால் நடே3ன புரா அநீ4யதே முன்பு, நடனால் படிக்கப்பட்டது ('பரீப்ஸா' அல்ல) மின்னலில் படிப்பதற்குத் தடையுள்ளதால், முதல் எடுத்துக்காட்டில் 'விரைவு' என்ற பொருள் சுட்டுமாறு அமைகிறது.

**8.1.43** நனு இதி அனுக்3ஞைஷணாயாம்

நனு 'நிச்சயமாக' என்ற இடைச்சொல் ஒரு வினைச் சொல்லுடன் 'அனுமதி கோருதல்' என்ற பொருளைச் சுட்டும்போது அனுதாத்தமாகாது.

நனு க3ச்ச2ாமி பே4ா: நான் போகலாமா?/போகட்டுமா? ஆனால் அகார்ஷீ: கடம் தே3வத3த்த? நனு கரோமி பே4ா: தேவத்த! பாய்முடைந்துவிட்டாயா? நான் நிச்சயமாகச் செய்வேன்' இது வினா–விடையாக அமைவதால் அனுதாத்தம் ஆகிறது.

**8.1.44** கிம் க்ரியா ப்ரஸ்1னே அனுபஸர்க1மப்ரதிஷித்3த4ம்

உபசர்க்கமோ அல்லது எதிர் மறையிடைச் சொல்லோ முன்னால் நிற்காத ஒரு வினைச்சொல்லுடன் 'கிம்' என்ற வினாவைச் சுட்டுமி டைச் சொல்,

அவ்வினைச் சொல் தொடர்பாக ஒரு வினாவையெழுப்புமாறு அமையும்போது அவ்வினைச் சொல் அனுதாத்தமாகாது.

கிம் தே3வத3த்த: பசதி ஆஹோஸ்விக் பு4ங்க்தே 'தேவதத்தன் சமைபல் செய்கிறானா அல்லது உண்கிறானா?' இரண்டாவது வினையும் அனுதாத்தமாகாது என்பது ஒரு சாராரின் கருத்து (அதாவது புங்க்தே) கிம் தே3வத3த்த: ப்ரபசதி அஹோஸ்வித் ப்ர கரோதி "தே3வதத்தன் உண்ணத் தொடங்கியிருக்கிறானா அல்ல து சமைக்கத் தொடங்கியிருக்கிறானா?"

கிம் தே3வத3த்த: ந பட3தி ஆஹோஸ்வித் ந கரோதி ஆனால் கிம் தே3வதத்த: ஒத3னம் பசதி ஆஹோஸ்விச் ச2ாகம் கிமதீ4தே தே3வதத்த: "தேவதத்தன் படிக்கிறானா? இங்கு வினா அல்ல. இகழ்ச்சியாகக் கூறப்பட்டது.

கிம் தே3வத3த்த: ப்ரபசதி ஆஹோஸ்வித் ப்ரகரோதி (வினைக்கு முன் உபசர்க்கம் நிற்கிறது): கிம் தே3வதத்த ந பசதி ஆஹோஸ்வித் நகரோதி (எதிர் மறை இடைச் சொல் வினைக்கு முன் நிற்கிறது)

**8.1.45** லோபே விப4ாஷா

வினாவைச் சுட்டும் 'கிம்' மறைந்தால் (லோபே) அதாவது பயன்படுத்தாவிட்டால் (மேலே கூறப்பட்ட சூழலில்) வினைச் சொல் விருப்பாக அனுதாத்தமாகும்.

இதுவும் மேலே கூறப்பட்ட சூழலிலேயே அமையும். ஆனால் 'கிம்' அந்த வாக்கியத்தில் பயன்படுத்தப்படமாட்டாது. தே3வத3த்த: பசதி ஆஹோஸ்வித் பட2தி அல்லது தே3வத3த்த: பசதி ஆஹோஸ்வித் பட2தி

**8.1.46** ஏ ஹி மன்யே ப்ரஹாஸே ல்ருட்

ஏஹி மன்யே 'வா, நான் நினைக்கிறேன்' என்ற தொடரோடு நிற்கும் 'ல்ருட்' (எதிர்காலம்) வினைச்சொல் 'ஏளனம்' என்பதைச் சுட்டும்போது (ப்ரஹாஸே) அனுதாத்தமாகாது.

ஏஹி மன்யே ஒத3னம் பே4ாக்ஷ்யஸே 'வா, நீ சோறு உண்பாய் என்று நம்புகிறோன்" (நீ உண்ணமாட்டாய் ஏனென்றால் விருந்தாளிகள் ஏற்கெனவே உண்டுவிட்டார்கள்" என்பதை மறைமுகமாகச் சுட்டுகிறது)

ஏஹி மன்யே ஏதே2ன யாஸ்யஸி ந ஹி யாஸ்யஸி யாத: தேன தவ பிதா "வா, நீ தேரில் போவாயென்று நம்புகிறேன்".

(நீ போகமாட்டாய், ஏனென்றால், ஏற்கெனவே உனது தகப்பனார் அதையெடுத்துக் கொண்டு போய் விட்டார்" ஆனால் ஏஹி மன் யஸே ஒத3னம் போக்ஷ்யே இதி, ஸுஷ்டு மன்யஸே, ஸாது4 மன்யஸே.

8.1.51 ன்படி 'ஏஹி' என்ற வியங்கோள் வினை (இயக்கப்பொருள்)யை த் தொடர்ந்து நிற்கும் எதிர்கால வினை தனது சுரத்தை இழக்கா மலிருந்திருக்கும். இச்சூத்திரம் ஒரு வரையறையை ஏற்படுத்துகிறது (நியமம்). அதாவது 'ப்ரஹாஸ' என்ற பொருளைச் சுட்டும்போது அவ்வாறாகும். ஆகையால் ஏஹிமன்யஸே ஒத3னம் பே4ாக்ஷ்யே இங் கு தனது சுரத்தை இழக்கும்.

**8.1.47** ஜாத்வபூர்வம்

மற்றொரு சொல்லைத் தொடர்ந்து நிற்காத ஜாது 'கட்டாயமாக' என்ற சொல்லோடு வரும் வினைச் சொல் அனுதாத்தமாகாது. ஜாது பே$^4$ாக்ஷ்யஸே 'நீ கண்டிப்பாக உண்பாய்; ஜாது கரிஷ்யாமி 'நான் கண்டிப்பாகச் செய்வேன்' ஆனால் கட'ம் ஜாது கரிஷ்யஸி 'நீ கண்டிப்பாக பாய் செய்வாய்'

**8.1.48** கிம் வ்ருத்தம் ச சிது$^3$த்தரம்

மற்றொரு சொல்லுக்குப்பின்னமையாத, வேற்றுமையுருபுகளுடன் வரும் 'கிம்' (கிம் வ்ருத்தம்) உக்குப்பின் 'சித்' நின்று அதோடு வரும் வினைச் சொல் அனுதாத்தமாகாது.

கஸ்$^1$ சித்$^3$ பே$^4$ாஜயதி/பு$^4$ங்க்தே 'யாரோ ஒருவர் உணவளிக்கிறான்/ உண்கிறான். கேனசித் கரோதி 'யாரோ ஒருவர் மூலம் செய்கிறான்'. கஸ்மைசித்$^3$ த$^3$த$^3$ாதி 'யாருக்கோ கொடுக்கிறான்' ஆனால் தே$^3$வத$^3$த்த: கிம் சித் பட$^2$தி 'தேவதத்தன் எதையோ படிக்கிறான்' கோ பு$^4$ங்க்தே 'யார் உண்கிறான்'

**8.1.49** ஆஹோ உதாஹோ சானந்தரம்

மற்றொரு சொல் முன்னால் நிற்காத ஆஹோ, உதாஹோ "அது அப்படியா?" என்ற இடைச் சொற்களோடு ஒரு வினைச் சொல் இடையில் ஒரு சொல்லும் நிற்காமல் (அநந்தரம்) வரும் போது அவ்வினைச்சொல் உதாத்தமாகாது. அஹோ/உதாஹோ பு$^4$ங்க்தே 'அவன் உண்டுகொண்டிருக்கிறான்" ஆனால் தே$^3$வத$^3$த்த: அஹோ/உதாஹோ, பு$^4$ங்க்தே 'தேவதத்தன் உண்கிறானா?

**8.1.50** ஸே'ஷே விப$^4$ாஷா

மேலே கூறிய அஹோ, உதாஹோ ஒரு வினைச் சொல்லுடன் (இடையே வேறு சொல் நின்றபோதிலும்) வரும்போது அவ்வினைச் சொல் விருப்பாக அனுதாத்தமாகாது.

அஹோ/உதாஹோ தே$^3$வத$^3$த்த: பசதி/பசதி: "தேவதத்தன் சமைக்கிறானா?"

**8.1.51** க$^3$தயர்த$^2$ லோட'ா ல்ருண ந சேத்காரகம் ஸர்வான்யத்

'ல்ருட்' வினை, இயக்கத்தைச் சுட்டும் தாதுக்களின் வியங்கோள் வினையோடு வரும்போது (க$^3$த்யர்த$^2$லோட'ா) இவ்விரண்டு வினைகளாலும் சுட்டப்படும் காரக உறவு (காரக) முழுமையாக (ஸர்வ) வேறுபடாமல் அமையும்போது (அன்யத்) 'ல்ருட்' வினை அனுதாத்தமாகாது.

இங்கு குறிப்பிடப்படும் காரகம் வினைமுதல் செயப்படுபொருள் ஆகியவைகளில் உறவைச் சுட்டும்.

ஆக$^3$ச்ச$^2$ தே$^3$வத$^3$த்த க்$^3$ராமம் த்$^3$ரக்ஷ்யஸி ஏனம் "தேவதத்தனே, கிராமத்துக்கு வா. நீ அதைப் பார்ப்பாய்' இங்கு இரண்டு வினைகளில் (ஆக$^3$ச்ச, த்$^3$ரக்ஷ்யஸி) கர்த்தாவும் ஒன்றே, அதாவது 'தே$^2$வதத்த:' அவ்வாறே இவைகளில் செயப்படுபொருளும் ஒன்றே. அதாவது 'க்$^3$ராமம்'

ஆனால் பச தே$^{3}$வதத்த ஒத$^{3}$னம் பே$^{4}$ாக்ஷ்யஸே ஏனம். அரிசியைச் சமை, தேவதத்தனே. நீ அவனுக்கு உணவளிப்பாய். (இயக்கவினையல்ல) ஆக$^{3}$ச்சே: தே$^{3}$வத$^{3}$த்த க்$^{3}$ராமம் த்$^{3}$ரக்ஷ்யஸி ஏனம் (லிங் வினை): ஆக$^{3}$ச்ச தே$^{3}$வத$^{3}$த்த க்$^{3}$ராமம் பிதா தே ஒத$^{3}$னம் பே$^{4}$ாக்ஷ்யதே

**8.1.52** லோட் ச

மேலே கூறப்பட்ட சூழலில், மற்றொரு லோட் (வியங்கோள்) வினையுடன் வரும் 'லோட்' (உம்) அனுதாத்தம் ஆகாது. ஆக$^{3}$ச்ச$^{2}$ தே$^{3}$வத$^{3}$த்த க்$^{3}$ராமம் பஸ்'ய "வா, தேவதத்தனே கிராமத்தைப் பார்" ஆனால் ஆக$^{3}$ச்சே: தே$^{3}$வத$^{3}$த்த க்$^{3}$ராம் பஸ்ய ஏனம் ('லிங்' வினையுடன்) பச தே$^{3}$வத$^{3}$த்த ஒத$^{3}$னம், பு$^{4}$ங்க்ஷ்வ ஏனம்.

**8.1.53** விப$^{3}$ாஷிதம் ஸோபஸர்க$^{3}$ மனுத்தமம்

மேற்கூறப்பட்ட சூழலில், தன்மையிடப்பெயரல்லாத, (அனுததமம் உபசர்க்கத்துடன் கூடிய (ஸோபஸர்கம்) 'லோட்' (வியங்கோள் மற்றொரு 'லோட்'டுடன் வரும்போது விருப்பாக (விப$^{4}$ாஷித அனுதாத்தமாகும்.)

ஆக$^{3}$ச்ச$^{2}$ தே$^{3}$வத$^{3}$த்த க்$^{3}$ராமம் ப்ரவிஸ$^{1}$/ப்ரவிஸ$^{1}$ 'வா தேவதத்த கிராமத்துக்குள் செல்' 'வினை' உதாத்தமானால் உபசர்க்கம் தனது சுரத்தையிழக்கும்'

**8.1.54** உறந்த ச

ஒருபசர்க்கத்துடன் கூடிய வியங்கோள் வினையும் 'உறந்த' என்ற இடைச்சொல்லுடன் வரும்போது விருப்பாக அனுதாத்தமாகும். உறந்த ப்ரவிஸ/ப்ரவிஸ ஆனால் உறந்த குரு (உபசர்க்கத்தோடு கூடியதல்ல); உறந்த ப்ரபு$^{4}$ஞ்ஜாவஸை (தன்மையிடப்பெயர்)

**8.1.55** ஆம: ஏகாந்தரம் ஆமந்த்ரிதம் அனந்திகே

'ஆம்' (வியப்புச் சொல்), விளிவேற்றுமைச் சொல் (ஆமந்த்ரிதம்) ஆகிய இரண்டுக்குமிடையே ஒரேயொரு சொல் நிற்கும்போது (ஏகாந்தரம்) ஆனால் அதைத் (அதாவது விளிகோள் வோனை) தொடர்ந்து வருமிடத்தைத் தவிர்த்து (அனந்திகே) விளிவேற்றுமைச் சொல் அனுதாத்தமாகாது.

ஆம் பசஸி தே$^{3}$வத$^{3}$த்த$^{3}$ (பார்க்க 6.1.198; 8.2.34) ஒ, சமைக்கிறாயா. தேவதத்தனே. ஆனால் ஆம் ப்ரபசஸி தே$^{3}$வத$^{3}$த்த ஒன்றுக்கும் மேற்பட்ட சொற்கள் இடையில் நிற்கின்றன.

**8.1.56** யத்$^{3}$தி$^{4}$து பரம் ச$^{2}$ந்த$^{3}$ஸி

வேத மொழியில், யத் 'எது (Relative) உறி 'ஏனென்றால்', து 'ஆனால்' ஆகிய இடைச் சொற்களோடு நிற்கும் வினைச் சொல் அனுதாத்தமாகாது.

1) க$^{3}$வாம் கே$^{3}$ாத்ரம் உத$^{3}$ஸ்ருஜ: யத$^{3}$ங்கி$^{3}$ர: (ருக் 2.23.18) 'ஒ, அங்கிரஸ்,

'எந்த மாட்டுத் தொழுவத்தில், விட்டிருக்கிறாயோ''
2) இந்த$^3$வ: வாம் உஸ$^1$ந்தி (உறி (ருக் 1.2.4)
3) ஆக்$^2$யாஸ்யாமி து 'ஆனால், நான் சொல்வேன்', பொதுவாக உபசர்க்கம் ஒலியழுத்தம் பெறும் (8.1.28) ஆனால் இங்கு அனு தனது சுரத்தை இழக்கும். ஏனென்றால் வினைச் சொல் உதாத்தம் பெறுகிறது. (8.1.71)

**8.1.57** சனசிதி$^3$வ கே$^3$ாத்ராதி$^3$தத்$^3$தி$^4$தாம்ரேடி$^3$ தேஷ்வக$^3$தே: 'க$^3$தி' சொற்கள் முன்னால் நிற்காத, (அக$^3$தே:), சன, சித்$^3$, இவ, கோத்ர முதலியவைகள். தத்$^3$தி$^4$தவொட்டு, அல்லது அதன் இரட்டிக்கப்பட்ட சொல், ஒரு வினைச் சொல்லைத் தொடர்ந்து நிற்கும்போது அவ்வினை அனுதாத்தமாகாது.
1) தே$^3$வத$^3$த்த: பசதி சன ''தேவதத்தன் சமைக்கக்கூட இல்லை'', (2) தே$^3$வத$^3$த்த: பசதி சித்$^3$ ''தேவதத்தனும் சமைக்கிறான்'', (3) தே$^3$வத$^3$த்த: பசதி இவ ''தேவதத்தன் சமைக்கிறான் போல'', (4) தே$^3$வத$^3$த்த: பசதி கே$^3$ாத்ரம் ''தேவதத்தன் மோசமாகச் சமைக்கிறான். அல்லது அடிக்கடி சமைக்கிறான்''. (5) தே$^3$வத$^3$த்த: பசதி–கல்பம் பசதி–ரூபம் ''தேவதத்தன் சமைத்து முடிக்கவில்லை/நன்றாகச் சமைக்கிறான்'' (6) தே$^3$வத$^3$த்த: பசதி பசதி ''தேவதத்தன் சோம்பல் இல்லாமல் சமைக்கிறான்'' ஆனால் தே$^3$வதத்த: ப்ரபசதி சன.
ஸக$^3$திரபி திங் (8.1.68) என்ற சூத்திரத்திலும், இந்தச் சூத்திரத்திலும் 'க$^3$தி' என்ற சொல் உபசர்க்கங்களை 'கதி' என்று குறிப்பிடப்படுவதைச் சுட்டும். இது ஒரு வரையறைக்குட்பட்டதைப் பற்றிப் பேசுகிறது. பொதுவாக 'கதி' என்று சூ. 1.4.61இல் விளக்கப்பட்டிருப்பதையல்ல. ஆகையால் ஸுக்லீகரோதி சன, யத் காஷ்ட$^2$ம் ஸுக்லீகரோதி, யத் காஷ்ட$^2$ம் க்ருஷ்ணீகரோதி ஆகியவைகளில், வினை தனது சுரத்தை நீடித்து வைத்துக் கொள்ளும்.

**8.1.58** சாதி$^3$ஷு
'கதி' எனப்படும் சொற்கள் முன்னால் நிற்காத, 'ச' முதலியவைகள் (8.1.24) தொடர்ந்து வரும் வினைச் சொல் அனுதாத்தம் ஆகாது.
1) தே$^3$வத$^3$த்த: பசதி க$^2$ாத$^3$தி ச
தேவதத்தன் சமைக்கவும் சாப்பிடவும் செய்கிறான்
2) தே$^3$வத$^3$த்த: பசதி வா க$^2$ாத$^3$தி வா ''தேவதத்தன் சமைக்கிறான் அல்லது சாப்பிடுகிறான்''
3) பசதி அஹ க$^2$ாத$^3$தி அஹ
''கண்டிப்பாகச் சமைக்கிறான்; சாப்பிடுகிறான்''
4) பசதி ஏவ க$^2$ாத$^3$த்யேவ
''சமைப்பதும் சாப்பிடுவதும் செய்கிறான்'' ஆனால் தே$^3$வதத்த: ப்ரபசதி/ச/வா/அஹ/ஏவ ப்ரக$^2$ாத$^3$தி/ச/வா/அஹ/ஏவ

**8.1.59** சவா யோகே$^3$ ப்ரத$^2$மா

'ச', 'வா' என்ற இடைச் சொற்களுடன் வரும் முதல் வினைச் சொல் (ப்ரத²மா) அனுதாத்தமாகாது.
க³ர்த³பா⁴ன் ஸ¹ச கலபதி வீணாம் ச வாத³யதி
"கழுதைகளையும் ஓட்டுகிறான் வீணையையும் வாசிக்கிறான்'' இதைப் போன்று 'வா'வும் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

**8.1.61** ஹேதி க்ஷியாயாம்

மரபு வழக்கை மீறி நடத்தல் (க்ஷிபாயாம்) என்ற பொருளில் 'ஹ' என்ற இடைச் சொல்லுடன் வரும் வினைச் சொல் அனுதாத்தமாகாது.
ஸ்வயம் ஹ ரதே²ன யாதி³ உபாத்⁴யாயாம்
பத³ாதி க³மயதி (8.2.140) ''தான் ரதத்தில் போய்க் கொண்டு, ஆசிரியரை நடக்க வைக்கிறான்'', ஸ்வயம் ஹோத³னம் பு⁴ங்க்தே³ உபாத்³யாயம் ஸக்தூன் பாயயதி

**8.1.61** அஹேதி விநியோகே³ ச

(மேற்கூறிய பொருளையும்) பல செயல்களையும் (விநியோகே³) சுட்டும்போது 'அஹ' என்ற இடைச் சொல்லுடன் வரும் வினைச்சொல் அனுதாத்தமாகாது.
த்வம் அஹ க்³ராமம் க³ச்ச², த்வம் அஹ அரண்யம் க³ச்ச² ''நீ கிராமத்துக்குப் போ; காட்டுக்குப்போ'' க்ஷியாயாம்: ஸ்வயம் அஹ ரதே²ன யாதி³ உபாத்⁴யாய பத³ாதி க³மயதி

**8.1.62** சாஹலோபே ஏவேத்யவத⁴ாரணம்

ஒரு வரையறையைச் சுட்டும்போது (அவத4ாரணம்) 'ச', 'அஹ' ஆகியவைகள் கெட்டு அவைகளினிடத்தில் வரும் 'ஏவ' என்ற இடைச் சொல்லைப் பயன்படுத்தும்போது, வினைச் சொல் அனுதாத்தமாகாது.
'ச' அல்லது 'அஹ' என்ற சொற்கள் பயன்படுத்தாமல் அவைகளின் பொருட்களை ஒரு வாக்கியம் சுட்டும்போது அச் சொற்கள் (லோப) கருதப்படும். அத்தகைய சூழலில் 'ச' ஒரு 'கூட்டம்', திரள், குழு' என்ற பொருளைச் சுட்டும், 'அஹ' 'மட்டும்' என்ற பொருளைச் சுட்டும். கர்த்தா ஒருவனேயாகும்போது 'ச' கெடும். கர்த்தா பலராக அமையும்போது 'அஹ' கெடும்.
'ச' லோப:- தே³வத³த்த ஏவ க்³ராமம் க³ச்ச²து, தே³வத³த்த ஏவாரண்யம் க³ச்ச²து க்³ராமம் சாரண்யம் ச க³ச்சது. "தேவதத்தன் கிராமத்துக்கும் காட்டுக்கும் போகட்டும் அஹ லோப:- தே³வத³த்த ஏவ க்³ராமம் க³ச்ச²து, யக்ஞதே³வ ஏவ அரண்யம்.
க³ச்சது க்³ராம் கேவலம் அரண்யம் கேவலம் ''தே³வதத்தன் கிராமத்துக்கு மட்டும் போகட்டும், யக்ஞ தத்தன் காட்டுக்கு மட்டும் போகட்டும்''
ஆனால் தே³வத³த்த: க்வேவ பே⁴ாக்ஷ்யதே, தே³வத³த்த: க்வேவ வா அத்⁴யேஷ்யதே 'தே³வதத்தன்' ஒருபோதும் உண்பதில்லை படிப்பதும் இல்லை'

**8.1.63** சாதி3லோபே விப4ாஷா

'ச' முதலியவைகள் (6.1.24) கெடும்போது வினைச் சொல் விருப்பாக அனுதாத்தமாகாது.

ஸுக்லா: வ்ரீஹய: ப4வந்தி/ப4வந்தி ஸ்வேதாக3ா: ஆஜ்யாய து3ஹந்தி 'அரிசி வெளுப்பாக இருக்கும்; அவர்கள் வெண்ணெய்க்காக வெள்ளைப் பசுவைக் கறக்கிறார்கள்'' வ்ரீஹிபி4 யஜேத/யஜேத, யவைர் யஜேத ''அரிசி அல்லது பார்லியைக் கொண்டு யாகம் பண்ண வேண்டும்''

**8.1.64** வைவாவேதி சச்ச2ந்த3ஸி

வேதமொழியில், 'வை, வாவ' ஆகியவைகளுடன் நிற்கும் வினைச் சொல்லும் விருப்பாக அனுதாத்தமாகும்.

அஹர் வை தே3வானாமாஸீத்/ஆஸீத், ராத்ரிர் அஸுராணாம் "பகல் தேவர்களுக்கு, இரவு அஸுரர்களுக்கு''

அயம் வாவ ஹஸ்த ஆஸீத/ஆஸீத் ந இதர ஆஸீத் இது கையாக இருந்தது, மற்றது அல்ல'

**8.1.65** ஏகான்யாப்4யாம் ஸமர்த2ாப்4யாம்

வேதமொழியில் ஏக 'ஒன்று' அன்ய 'மற்றது' என்ற சொற்கள் ஒரே பொருளைச் சுட்டுமாறு வரும்போது அவைகளுடன் வரும் வினைச்சொல் விருப்பாக அனுதாத்தமாகாது. ப்ரஜாம் ஏகா ஜின்வதி/ஜின்வதி, ஊர்ஜம் ஏகா 'ஒன்று சந்ததியை விரைவு படுத்துகிறது, மற்றது பலமடைகிறது'; தயோரன்ய: பிப்பலம் ஸ்வாது3 அத்தி/அத்தி, அநஸ'னம் அன்யோ அபி4சாகாஸீதி (ருக் 1.164.20) அவைகளில் ஒன்று இனிப்பான பிப்பல பழத்தைத் தின்றது, மற்றது தின்னாமல் கூர்ந்து பார்க்கிறது'

**8.1.66** யத்3 வ்ருத்தான் நித்யம்

'யத்' வேற்றுமையுருபுகளுடன் வரும்போது (யத்3வ்ருத்தான்) அதோடு வரும் வினைச் சொல் கட்டாயமாக அனுதாத்தமாகாது யோ:/யேன பு4ங்க்தே யம்பே4ாஜயதி, யஸ்மை த3த3ாதி, யார் உண்கிறானோ/யாருடன் அல்லது எதை உண்கிறானோ/யாருக்கு உணவளிக்கிறானோ/யாருக்கு ஒருவன் கொடுக்கிறானோ யத்காமஸ்தே ஜுஹுமஸ் (ருக் 10.121.10) எந்த விருப்பத்தோடு உனக்கு யாகம் பண்ணுகிறோமோ.

வா: யத2ா காம்யே வேதி வக்தவ்யம்

'விருப்பம்போல்' என்ற பொருளில் விருப்பாகும். யத்ர க்வசன யஜதே தத்3தே3வயஜன ஏவ யஜதே

**8.1.67** பூஜனாத் பூஜிதம் அனுதாத்தம் காஷ்ட2ாதி3ப்4ய:

'காஷ்ட' முதலிய சொற்கள் இரண்டாவது உறுப்பினராகவும், 'புகழப்பட்டது' முதலுறுப்பினராகவும் (பூஜிதம்) அமையும், 'புகழ்' என்ற பொருளைச் சுட்டும்

தொகையில் முதலுறுப்பினர் அனுதாத்தமாகும்.
காஷ்டாத்$^4$யாயக: 'சிறந்த படிப்பாளி'

வா: மலோபஸ்' ச
'காஷ்டாதி' வகுப்பைச் சேர்ந்த சொற்கள் 'ம்' இல் முடியும் இந்த 'ம்' கெடும்.

**8.1.68** ஸக$^3$திரபி திங்
'க$^3$தி' எனப்படும் சொற்களுடன் வரும் வினை 'சிறந்தது' என்ற பொருளைச் சுட்டும்போது (மேலே கூறிய பொருளில் 'காஷ்ட' முதலியவைகளுடன் நிற்கும்போது) அனுதாத்தமாகும் யத் காஷ்டம் பசதி/ப்ர பசதி 'எவ்வளவு சமைக்கிறானோ அதைச் சிறப்பாகச் சமைக்கிறான்'; யத்$^3$தா$^3$ருணம் பசதி/ ப்ரபசதி 'சோம்பலில்லாமல் சமைக்கிறான் என்று ...

**8.1.69** குத்ஸனே ச ஸுப்யகே$^3$ாத்ராதெ$^3$ள
'க$^3$தி' எனப்படும் சொற்களுடன் வரும் வினைச் சொல் 'கோத்ர' வகுப்பைச் சேர்ந்த சொற்களைத் தவிர்த்து மற்ற வேற்றுமைச் சொற்களுக்கு முன் நின்று 'நிந்தித்தல்' என்ற பொருளைச் சுட்டும் போது அனுதாத்தமாகும். பசதி பதி/ ப்ர பசதி பூதி 'குறைகூறத்த க்க முறையில் சமைக்கிறான்' ஆனால் பசதி/ ப்ரபசதி ஸோ$^1$ாப$^4$னம், கே$^3$ாத்ரம்

வா: க்ரியாகுத்ஸனே இதி வக்தவ்யம்
'செயல் செய்யும் முறை குறை கூறத்தக்கது' என்ற பொருளில் இவ்வாறாகும்.

**8.1.70** க$^3$திர் க$^3$தெள
மற்றொரு 'கதி' சொல்லுக்கு முன் நிற்கும் 'கதி' அனுதாத்தம் ஆகும்.
அப்$^4$யுத்$^3$த$^4$ரதி (28) 'தூக்குகிறான்'
ஸமுத$^3$ானயதி 'சேர்க்கிறான்'

**8.1.71** திஙி சோத$^3$ாத்தவதி
உதாத்த சுரத்தைக் கொண்ட வினைச் சொல்லுடன் நிற்கும் 'கதி'ச் சொல், அனுதாத்தமாகும். யத் ப்ரபசதி (8.1.66) அவன் சமைக்கத் தொடங்கியிருக்கிறான் என்று......

**8.1.72** ஆமந்த்ரிதம் பூர்வமவித்$^3$யமானவத்
முன்னால் நிற்கும் விளிச் சொல் (ஆமந்த்ரிதம் பூர்வம்) இல்லாதது போன்று (அவித்$^3$யமானவத்) கருதப்படும்.
1) தே$^3$வத$^3$த்த யக்ஞ த$^3$த்த, இங்கு முதல் விளிச்சொல் இரண்டாவது விளிச் சொல் தனது சுரத்தையிழக்கச் செய்யவில்லை. அது உதாத்தமாகவே நிற்கிறது. (6.1.198) (8.1.19க் கு எதிராக)
2) தே$^3$வத$^3$த்த பசஸி (8.1.28இன்படி வினைச்சொல் தனது சுரத்தையிங்கு

இழக்கவில்லை)

3)தே³வத³த்த தவ ('தே' அல்ல) க்³ராம: ஸ்வம்; தே³வத³த்த மம ('மே' அல்ல) க்³ராம: ஸ்வம் (8.1.20–23 தடுக்கப்பட்டிருக்கிறது)

4) யாவத் தே³வத³த்த பசஸி (8.1.37) இடையில் விளிச் சொல் நிற்கும்போதும் செயல்படுகிறது)

5) தே³வத³த்த ஜாது பசஸி (8.1.47க்குப் புறனடை)

6) ஆஹோ தே³வதத்த பசஸி, உதாஹோ தே³வத³த்த பசஸி (8.1.49க்குப் புறனடை) 8.1.50இல் கூறப்பட்ட விருப்பு செயற்படாது.

**8.1.73** நாமந்த்ரிதே ஸமானாதி⁴கரணே ஸாமான்ய வசனம்

பொதுவான ஒரு பொருளைச் சுட்டும் முதலில் நிற்கும் விளிச் சொல் இரண்டாவதாக நிற்கும் விளிச்சொல் தொடர்பாக இல்லாததாகக் கருதப்படமாட்டாது – இரண்டாவது விளிச் சொல் முதல் விளிச் சொல்லின் நேரியைபு கொண்டதாக அமையுமானால் அக்³னே க்ருஹபதே முதல் விளிச்சொல் உள்ளதாகக் கருதப்படுவதால், இரண்டாவது விளிச்சொல் அனுதாத்தமாகிறது. ஆனால் தே³வதத்த பண்டித யக்ஞத³த்த. இங் கு 'பண்டித' என்ற சொல் 'தேவதத்த' என்ற சொல்லுடன் நேரியைபு கொண்டதல்ல.

**8.1.74** விப⁴ாஷிதம் விஸேஷ வசனே ப³ஹுு வசனம்

ஒரு சிறப்புக்குணத்தைச் சுட்டும்போது (விஸேஷ வசனே) முதலில் நிற்கும் விளிச் சொல் பன்மையிலமைந்து, இரண்டாவது விளிச் சொல் அதனுடன் நேரியைபு கொண்டதாக அமையும்போது முதல் விளிச்சொல் விருப்பாக இல்லாததாகக் கருதப்படும். சூ. 73 முதல் விளிச்சொல்லை உள்ளதாகக் கருதுவதைக் கட்டாயமாக விதிக்கிறது. இச்சூத்திரம் அதை விருப்பாக ஆக்குகிறது.

தே³வா: ஸரண்யா: அல்லது தே³வா: ஸரண்யா: 'அடைக்கலமளிக்கும் தேவர்களே!: ப்³ராஹ்மணா: வையாகரணா:/வையாகரணா: 'இலக்கண ஆசிரியர்களான பிராம்மணர்களே!''

**8.2.1** பூர்வத்ராஸித்³த⁴ம்

இச்சூத்திரத்திலிருந்து தொடங்கி, இந்த அத்தியாயத்தினிறுதி வரையில் கூறப்பட்டிருக்கும் விதிகள் அவைகளுக்கு முன்னால் விதிக்கப்பட்டிருக்கும் விதிகளைப் பொறுத்த வரையில் செயலற்றவையாகக் கருதப்படும்.

இது ஒரு அதிகார சூத்திரம், இது இந்த அத்தியாயத்தின் முடிவுவரை தொடரும். இதிலிருந்து விளக்கப்பட்ட விதிகள், அவைகளுக்கு முன்னால் காணப்படும் விதிகளைப் பொறுத்தவரையில் செயலற்றதாகும். இதைப்போன்று இதற்கு முன்னால், காணப்படும் 7 அத்தியாயங்களிலும். 8ஆம் அத்தியாயத்தின் முதல் பாதத்திலும் காணப்படும் விதிகளைப் பொறுத்தவரையில், கடைசி மூன்று பாதங்களின் விதிகள்

செயலற்றவையாகக் கருதப்படும். 'அஸித்த' என்ற சொல் பயனற்றது என்று பொருட்படும். அதாவது பயனுள்ள விதியைப் போன்று செயற்படாது (அஸித்தவத்$^3$ப$^4$வதி, ஸித்$^3$த$^4$கார்யே நப$^4$வதி). ஆதேஸ விதி (பதிலி) செயற்படுவதைத் தடுத்து நிறுத்தி பொது விதி (உத்ஸர்க) செயற்படும். என்று நிறுவ, இந்த அஸித்த விதி (செயலற்றது) அமைக்கப்பட்டுள்ளது. காட்டாக அஸ்மை உத்$^3$த$^4$ர = அஸ்மாய் உத்$^3$த$^4$ர (6.1.78) = அஸ்மா θ உத்$^3$த$^4$ர (8.3.19) = அஸ்மா உத்$^3$த$^4$ர. 6.1.87இல் கூறப்பட்டிருக்கும் புணர்ச்சி விதி ('குண' எழுத்து பதிலியாதல் அதாவது ஆ உ ஓ) இங்கு செயற்படாது. ஏனென்றால், 8.3.19இன்படி ஏற்படும் 'ய்' கெடுதல் நடைபெற்றதாகவே கருதப்படமாட்டாது. ஆகையால் 6.1.87இல் கூறிய புணர்ச்சி விதியை இங்கு செயற்படுத்த இயலாது. இதைப்போல் வா அத்ர த்$^3$வா ஆனய, அஸா ஆதி$^3$த்ய: என்ற தொடர்களிலும் 6.1.87; 6.1.101 செயர்படாகு.

**8.2.2** நலோப: ஸுப் ஸ்வர ஸம்க்$^3$ஞாதுக்$^3$ விதி$^4$ஷு க்ருதி

1) ஸுப் (வேற்றுமையுருபுகள்) (2) சுரம் (3) ஸம்க்3ஞா (கலைச் சொற்கள்) (4) 'க்ருத்' ஒட்டுக்கு முன்னால் இணைக்கப்படும் 'துக்' ஆகியவைகள் தொடர்பாகக் காணப்படும் விதிகளைச் செயற்படுத்தும்போது 'ந்' கெடுதல் (8.2.7) நடைபெற்றதாகக் கருதப்படமாட்டாது.

1. ஸுப் விதி – ராஜன் + பி$^4$ஸ் + ராஜ θ = பி$^4$ஸ் (1.4.17; 8.2.7) ராஜபி$^4$ஸ். சூ. 7.1.9, 'அ' வீற்றுச் சொல்லுக்குப்பின் வரும் பி$^4$ஸ் உக்கு 'ஐஸ்' பதிலியாகும் என்று விதிக்கிறது. மேற்கூறிய எடுத்துக்காட்டில் காணப்படும் 'ந்' கெடுதல், அதாவது 8.2.7, இல் விதிக்கப்பட்டது, 7.1.9ஐப் பொறுத்தவரையில் நடைபெற்றதாகக் கருதப்படமாட்டாது. இதைப்போல் ராஜன் + ப்$^4$யாம் = ராஜθ + ப்$^4$யாம் = ராஜப்$^4$யாம் 7.3.102 செயற்படாது. ராஜன் + ஸு = ராஜθ + ஸு = ராஜஸு 7.3.103 செயற்படாது.

2. ஸ்வரவிதி– ராஜன் + மதுப் + ஙீப் = ராஜθ – வதீ இங்கு 'ந்' கெடுதல் 'அஸித்தம்' ஆவதால் 6.1.220 செயற்படாது. ஆகவே ராஜவதீ என்று முதலசையில் உதாத்தம் பெறும். ராஜவதீ அல்ல.

3. ஸம்க்$^3$ஞாவிதி–பஞ்ச ப்$^4$ராஹ்மண்ய: பஞ்சன் + ஜஸ் = பஞ்சன் + θ (7.1.22) = பஞ்ச θ (7). பஞ்ச θ என்ற சொல்லோடு 'டாப்' (பெண்பாலொட்டு) (4.1.4) இணைக்க இயலாது ஏனென்றால் 'பஞ்சθ' என்பது 'ஷஷ்' (1.1.24; 4.1.10) எனப்படும் சில எண்ணுப் பெயர்களைச் சுட்டும் 'ஸம்க்$^3$ஞா'வாகும்.

4. துக்$^3$விதி – வ்ருத்ரம் ஹதவான் – வ்ருத்ர + θ + ஹன் + க்விப் (3.2.87) + ப்$^4$யாம் = வ்ருத்ர – ஹன் + ப்$^4$யாம் = வ்ருத்ரஹ + ப்$^4$யாம் (7). இங்கு 'ந்' மறைதல் நடைபெறாத ஒன்றாகக் கருதப்படுவதால் 6.1.71இல் விதிக்கப்பட்ட 'துக்' ஆகமம் வராது.

சூ. 8.2.7இல் விதிக்கப்பட்ட 'ந்' கெடுதல் சூ. 8.2.1இன்படி, 'அஸித்த ம்' ஆகும். நான்கு சூழல்களை இச்சூத்திரத்தில் குறிப்பிட்டிருக்கிறப டியால், இது ஒரு நியமவிதி என்று புலப்படும்.

அதாவது இந்த நான்கு இடங்களில் மட்டுந்தான் 'ந்' கெடுதல் செயலற்றது

ஆகும். வேறு இடங்களிலல்ல. ஆகையால் ராஜீயதே என்ற சொல்லில் அவ்வாறல்ல. ராஜன் + க்யச் + ஸப் + திப் (3.1.8) = ராஜθ – ய– அ– தி (1.4.15; 8.2.7) = ராஜீ–ய–அதி (7.4.33) ராஜீயதி (6.1.97) அவ்வாறே ராஜன் + க்யன் + ஸப் + தே (3.1.11) = ராஜ θ + ய – அ – தே (1.4.15; 8.2.7) = ராஜாயதே (7.4.85); ராஜன் + ஙஸ், அஸ்'வ + ஸு = ராஜன் + θ + அஸ்'வ + ஸு (2.4.71) = ராஜθ + அஸ்'வ + ஸு (7) ராஜாஸ்'வ: (6.1.101) என்ற சொற்களிலும், முறையே 7.4.85, 6.1.101 ஆகிய சூத்திரங்கள் செயற்படுவதில் தடையில்லை.

**8.2.3** ந மு நே

'நா' (டா' என்ற 3ஆம் வேற்றுமையொருமையுருபுக்குப் பதிலி) வைப் பொறுத்த வரையில், 'அத³ஸ்' 'அது' இன் 'த³ஸ்' உக்குப் பதிலியாக 'மு' வருவது செயலற்றதாகக் கருதப்படமாட்டாது. அத³ஸ் + டா = அத³அ + ஆ (7.2.102) = அத + ஆ (6.1.97) = அமு + ஆ (80) = அமுனா.

வா: ஏகாதே³ஸ'ஸ்வரோ அந்தரங்க³: ஸித்³த⁴ வக்தவ்ய: 'அந்தர ங்கம்' ஆன ஏகாதேஸ சுரம், செயற்பட்டதாகக் கருதப்படும்.

இவ்வார்த்திகம், ஏ, ஐ, ஓ என்பவைகளின் பதிலியாக வரும். (1) 'அய்', (2) 'ஆய்' (3) 'ஆவ்' இன் சுரம் (4) ஏகாதேஸ பதிலிகளின் சுரம் (5) 'ஸத்ரு' ஒட்டிணைத்தாகபட்ட சொற்களின் சுரம் (6) ஒரு சொல்லின் ஒரேயொரு அசையைத் தவிர மற்ற எல்லாவசைகளும் அனுதாத்தம் பெறும் என்று விதிக்கும் சூ. 6.1.158 (7) ஒரு சொல்லின் எல்லாவசைகளும் அனுதாத்தம் பெறும் என்று விதிக்கும் சூத்திரம் 8.1.27 ஆகியவைகளை ஒழுங்குபடுத்துவதற்காக இவ்வார்த்திகம் அமைக்கப்பட்டிருக்கிறது.

1. அய் – வ்ருக்ஷ + ஙி (அனுதாத்த 3.1.3) = வ்ருக்ஷே (ஏ, 8.2.5)இன்படி உதாத்தமாகும்) வ்ருக்ஷே + இத³ம் = வ்ருக்ஷய் + இத³ம் = வ்ருக்ஷ இத³ம். ஏகாதே³ஸ மான 'ஏ' உதாத்தம் பெறுவதை நடைபெற்றதாகக் கருத வேண்டும். அதனால் 'ஏ'யின் பதிலியாக வரும் 'அய்'யும் உதாத்த சுரம் பெற இயலும்; (2) ஆய்–குமார்யா இத³ம். இங்கேயும் 'ஆ' உதாத்தசுரம் கொண்டதாகும். குமாரீ + ஙே = குமாரி + ஆ + ஏ (7.3.112) குமார்ய + ஆ + ய = குமார்ய + ஆ + ஏ (6.1.174) = குமார்ய + ஐ (6.2.90) = குமார்யை (8.2.5), 'ஐ' ஊதாத்தமாவதால் அதன் பதிலியான 'ஆய்'யும் உதாத்தம் ஆகும் (3) ஆய் – வ்ருக்ஷாவித³ம் (வ்ருக்ஷ + ஔ (அனுதாத்தம்) = வ்ருக்ஷௌ (8.2.5), வ்ருக்ஷௌ + இதம்) (4) ஏகாதே³ஸ' சுரம் – க³ாங்கே³ அநூபே க³ாங்க³ + இ = க³ாங்கே³; க³ங்க³ + அண் = க³ாங்க³ ஏகாதே³ஸமான 'ஏ' உதாத்த சுரம் கொண்டது (8.2.5). 'அனூப' என்ற தொகை 'ப்ராதி' ஸமாஸம். (ஆபோ அனுக3தம்) 6.2.2. அவ்யயம் தனது உதாத்த சுரத்தை நீடித்து நிற்க வைக்கும் என்று விதிக்கிறது. ஆயினும் 6.2.189, இத்தொகையிறுதியசையில் உதாத்தம் பெறும் என்று விதிக்கிறது. க³ாங்கே என்ற சொல்லினிறுதியசையின் உதாத்தம் ஸித்தம் ஆகும். அதாவது அது நிற்கும். அதனால் ஏ + அ என்பதில், ஏகாதேஸ மான 'ஏ' உதாத்தம் கொண்டதாகும் (பூர்வ ரூப ஏகாதேஸம்

6.1.109) அல்லது 8.2.6இன்படி ஸ்வரிதமாகும். (5) ஸ'த்ருஸ்'வர – துத³தீ (துத்³ + ஸ + ஸத்ரு) 'ஸ' உதாத்தம் 'ஸத்ரு' அனுதாத்தம். சூ. 6.1.133 பயன்படுத்துவதற்காக ஏகாதேஸ உதாத்தம் செயற்பாடுடையது என்று கருதவேண்டும். இச்சூத்திரம் பெண்பாலொட்டு, சில வேற்றுமையுருபுகள் ஆகியவைகளைப் பற்றிப் பேசுகிறது.

துத³த் + ஈ = துத³தீ, துத³த் + எ = துத³தே

'ஸ'த்ரு'' ஒட்டின் சுரம் தொடர்பாக ஏகாதேஸ சுரம் செயற்பாடுடையதாகக் கருதப்பட வேண்டுமென்ற கூற்றை ஸ'துரனுமோ.... (6.1.173) என்ற விதி குறிப்பாகத் தெரிவிக்கிறது. (க்³ஞாபகம்). ஏனென்றால் அனுதாத்த சுரம் பெற்ற 'நும்'ஐ யிறுதியில் கொண்டதான 'ஸ'த்ரு'' ஒட்டு ஏகாதேஸ சுரம் பெறாமல் வராது. (6) ஏகானனு தாத்த சுரம் – துத³ந்தி துத்³ + ஸ + அந்தி (6.1.186). இங்கு ஏகாதேஸ 'அ' உதாத்தமாகும் (8.2.5). மீதியுள்ள எல்லாவசைகளும் அனுதாத்த சுரம் பெறும் என்று விதிக்கும் சூ. 6.1.158ஐப் பயன்படுத்துவதற்காக ஏகாதேஸ 'அ' உதாத்த சுரம் கொண்டது என்பதை செயல் வலிமையுற்றதாகக் (ஸித்த) கருதப்படவேண்டும். துத³ந்தி (7) ஸர்வானுனுதாத்த சுரம் - ப்⁴ராஹ்மணாஸ் துத³ந்தி. சூ. 8.1.28 வினைச் சொல்லல்லாத ஒரு சொல்லுக்குப்பின் வரும் வினைச் சொல். எல்லாவசைகளிலும் அனுதாத்தசுரம் பெறும் என்று விதிக்கிறது. 'துதந்தி' என்ற வினையின் ஏகாதேஸ சுரம், செயற்பாடுள்ளது என்று கருதப்படும்.

வா: ஸம்யோகாந்தஸ்ய லோபோ ரோ ருத்வே ஸித்³தே⁴ா வக்தவ்ய:

ஒரு சொல்லினிறுதியில் நிற்கும் கூட்டு மெய்களினிறுதி மெய் கெடும் என்று விதிக்கும் சூ. 8.2.23, 'ரு', 'உ'வாக மாறுவதற்காக ஸித்தமானதாகக் கருதப்படும்.

ஹரிவா மேதி³னம் த்வா என்ற வாக்கியத்தின் ஹரிவ என்ற சொல் 'ஹரி' என்ற சொல்லுடன் 'மதுப்' ஒட்டிணைக்கப்பட்டு ஆக்கப்பட்டது. ஹரி + மத் = ஹரி + வத் (8.2.15) + ஸு = (விளிவேற்றுமையொருமை) ஹரிவந்த் + ஸு = ஹரிவந் + ஸு = ஹரிவர் (8.3.1) + ஸு = ஹரிவஉ (6.1.114) + ஸு = கூட்டு மெய்யினிறுதிமெய் கெடுதல் நிகழ்ந்ததாகக் கருதப்பட்டால், 'ஹரிவர்'இனிறுதி 'ர்'க்கு 'உ' பதிலியாக வரும். அவ்வாறு கருதாவிட்டால் (அதாவது ஸித்தமாக) 'ஹஸ்' பிரத்தியாஹாரத்து எழுத்து 'ர்'க்குப்பின் தொடர்ந்து வருவதாகக் கருதப்படமாட்டாது. மறைந்த மெய்யெழுத்து அதற்குப் பின் வருவதாகக் கருதப்படும்.

வா: ஸிச் லோப ஏகாதே³ஸே' ஸித்³தே⁴ா வக்தவ்ய

'ஏகாதேஸம்' செயற்படும்போது 'ஸிச்' கெடுதல் 'ஸித்தம்' அதாவது நடந்ததாகக் கருதப்படும். அலாவித் அபாவீத். அலாவ் + இ + ஸீத் = அலாவ் + இ + 0 + ஈத் = அலாவீத் இங்கு 8.2.28இன்படி 'ஸிச்' கெடும்.

வா: நிஷ்டாதே³ஸ: ஷத்வ ஸ்வர ப்ரத்யய விதீ⁴ட்³விதி⁴ஷு ஸித்³தே⁴ா

வக்தவ்ய:

'நிஷ்டா' ஒட்டுக்கள் பதிலியாக வருவது நிகழ்ந்தாக கீழ்க்கண்ட விதிகள் செயற்படுவதற்காகக் கருதப்படவேண்டும். (1) 'ஸ்' உக்கு 'ஷ்' பதிலியாதல் (2) சுரம் (3) ஒட்டுக்கள் பற்றிய விதிகள் (4) 'இட்' ஆகமமாதல் (1) வ்ருக்ண: = வ்ரஸ்ச் + த = வ்ருஸ்'ச் + க (6.1.16) = வ்ரஸ'ச் + ந (8.2.45) = வ்ருச் + ந (8.2.29) = வ்ருக் + ந (8.2.30) = வ்ருக்ண: (8.4.1) இதில் 'நிஷ்டாதேஸ' நிகழ்ந்ததாகக் கருதப்படுவதால் இத்தாதுவினிறுதியெழுத்து 'ஷ' வாக மாறவில்லை. இது 'ஸித்தம்' என்று கருதப்படாவிட்டால் 8.2.36இன்படி அவ்வாறு மாறியிருக்கும். ஏனென்றால் 'ந' ஒரு 'த'வாக அதாவது 'ஜ²ல்' எழுத்தாகக் கருதப்பட்டிருக்கும் மீதியுள்ள சுரம், ஒட்டு, 'இட்' ஆகமம் ஆகியவைகளுக்குக் காட்டாக 'க்ஷீப³' என்ற சொல் கொடுக்கப்பட்டிருக்கிறது. க்ஷீப்³ + இட் + த = க்ஷீப³ + இ + த = க்ஷீப்³ + 0 + 0அ = க்ஷீப³. இங்கு 'இத்' கெடுதல் நிபாதனம் 'இத்' கெடுதல், ஸித்தம் எனக் கருதப்படும். ஆகவே க்ஷீப³ என்ற சொல் ஈரசைச் சொல்லாக சுரத்தைக் குறிப்பதற்காகக் கருதப்படும் (6.1.205) 'இத்' கெடுதல் 'அஸித்தம்' என்று எடுத்துக் கொண்டால் இது மூன்றசைச் சொல்லாகக் கருதப்படும். சுரம் பற்றிய மேற்கூறிய விதி இங்கு செயற்படாது.

க்ஷீப³ + ஷ்டன் = க்ஷீபி³க (4.4.7) இது ஈரசைச் சொல்லாகக் கருதப்படுவதால்தான் 'ஷ்டன்' ஒட்டிணைக்க முடியும் ஆகையால் சூ. 4.4.7யைப் பொறுத்தவரையில் 'இத்' கெடுதல் 'ஸித்த'மெனக் கருதப்படும்.

வா: ப்லுத விகார ஸ்துக்³விதெ⁴ள சே² ஸித்³தே⁴ா வக்தவ்ய:

'ச²' என்ற எழுத்துக்கு முன் வரும் 'இட்' ஆகமத்துக்காக ஒரு உயிரின் 'ப்லுத' மாற்றம் நிகழ்ந்ததாகக் கருதப்படும்.

அக்³னே – அக்³னா³இ, படோ – படா³ (8.2.107) இங்கு 'இ', 'உ' 'ப்லுத' மாற்றமடைந்தவை அக்னா³ இச்ச²த்தரம், படா³ உச்–ச²த்ரம் இவ்வாறு அதை ஸித்தமாகக் கருதப்படாவிட்டால் (8.2.107), 'துக்' ஆகமம் கட்டாயமாக வராது. (6.1.73) ஆனால் 61.76இன்படி விருப்பாக வரும்.

வா: ஸ்'சுத்வம் து⁴டி ஸித்³த⁴ம் வக்தவ்யம்

'து⁴ட்'டுக்கு முன் (8.3.29) 'ஸ்'', அண்ணவொலிகள் மாற்றம் நடந்ததாகக் கருதப்படவேண்டும். ஸ்'சுதிர் சுரணே (1.41) என்ற தாது 'ஸ'வை முதலில் கொண்டதாகக் கருதப்படுகிறது. அது 'ச' தொடர்வதால் 'ஸ்' ஆக மாற்றப்படுகிறது. (8.4.40) இது அஸித்தம ாகக் கருதப்படாததால் அட்ஸ்ச்யோததி, ரட்ஸ்ச்யோததி என்ப வைகளில் 'து⁴ட்' ஆகமம் ஆகும் (8.2.29)

வா: அப⁴யாஸ ஜஸ்'த்வ சர்த்வே ஏத்வதுகோ ஸித்³தே வக்தவ்ய:

'ஏ' மாற்றம். 'துக்' ஆகமம் ஆகியவைகள் செயற்படுவதற்காக (6.4.120) இரட்டித்தலில் 'ஜஸ்'', 'சர்' பதிலிகளாவது ஸித்தமாகக் கருதப்படுவேண்டும்.

ப$^3$ப$^4$ணது:, ப$^3$ப$^4$ணு: இங்கு 'ஜஸ்$^1$' பதிலியாவதால், 'ப$^4$' 'ப$^3$' ஆகிறது. இது ஸித்தமெனக் கருதப்படுவதால் பே$^4$ணது:, பே$^4$ணு: என்ற தவறான வடிவமாக்கப்படுவதைத் தவிர்க்க முடியும். சிச்சி$^2$த்ஸதி, (சி$^2$த்$^3$), உசிச்சிஷதி (உச்ச$^2$) 'சா்' பதிலியாவது நிகழ்ந்ததாகக் கருதப்படுவதால்தான் இந்த வடிவம் கிடைக்கும்

வா: த்$^3$விவசனே பரஸ வர்ணத்வம் ஸித்$^3$த$^4$ம் வக்தவ்யம்
இரட்டித்தலுக்காக, தொடர்ந்து வரும் எழுத்தின் ஒரு படித்தான எழுத்து பதிலியாவது ஸித்தமெனக் கருதப்பட வேண்டும்.
ஸய்ய்ந்தா, ஸவ்வ்த்ஸர:, ஸல்ல்லோகம், யல்லலோகம் இவைகளில் 'ஸம்' இன் 'ம்' அனுஸ்வராமாக மாறும் (8.3.23) அதன் பிறகு அனுஸ்வாரம், அதைத் தொடர்ந்து நிற்கும் எழுத்துக்கு ஒருபடித்தான எழுத்தாக மாறும். (8.4.38). இந்த 'பரஸவர்ணம்' 'அஸித்தமாக'க் கருதப்பட்டால் 8.4.47 விதித்தபடி இரட்டித்தல் நடைபெறாது.

வா: பத$^3$ாதி$^4$காரஸ் சேல்லத்வ க$^4$த்வட$^4$த்வ நத்வ ருத்வ ஷத்வ ணதவானுநாஸிக ச$^2$த்வானி ஸித்தானி வக்தவ்யானி
கீழ்க்கண்ட மாற்றங்களைக் குறிப்பிடும் விதிகளில் 'பத' என்ற சொல் 'அதிகார'மாகுமானால், இவைகளால் விதிக்கப்படும் மாற்றங்கள் இரட்டித்தல் ஆவதற்காக ஸித்தமெனக் கருதப்படும்.
1) ஸத்வ – 'ல'வாதல் (8.2.21) (2) ட$^4$த்வ – 'ட' வாதல் (8.2.31), (3) க$^4$த்வ – 'க$^4$'வாதல் (8.2.33), (4) நத்வ 'ந'வாதல் (8.2.56), (5) ருத்வ – 'ரு' வாதல் (8.2.75), (6) ஷத்வ – 'ஷ'வாதல் (8.3.85) (7) ணத்வ – 'ண'வாதல் (8.4.11), (8) அநுநாஸிகமாற்றம் (8.4.45), (9) ச$^2$த்வ – 'ச$^2$'வாதல் (8.4.63)

1. க$^3$லோ க$^3$ல:, க$^3$ரோ க$^3$ர: (2) த்$^3$ரோ – க்$^3$த$^4$ா த்$^3$ரோக்$^3$த$^4$ா (3) த்$^3$ரோட$^4$ா த்$^3$ரோட$^4$ா (4) நுன்ன; நுன்ன. (5) அபி$^4$னோ அபி$^4$ன : (6) மாதுஷ்ஷ்வஸா, மாது: ஸ்வஸா (7) மாஷவாபாணி, மாஷவாபாணி (8) வாங்நயனம், வாக்$^3$நயனம், (9) வா$^4$க்$^2$சனம், வாக்ஸ$^1$யனம்

இங்கு கூறப்பட்ட 'லத்வ' முதலிய மாற்றங்கள் விருப்பானவைகளானதால் இம்மாற்றங்களை அஸித்தமாகக் கருதினால், க்$^3$ரோக$^3$ல:, க$^3$லோக$^3$ர: என்ற தவறான வடிவங்களும் பெற வாய்ப்பு உண்டாகும்.

**8.2.4** உதாத்தஸ்வரிதயோர் யண: ஸ்வரிதோ அனுதாத்தஸ்ய
உதாத்த அல்லது ஸ்வரித சுரம் பெற்ற உயிரெழுத்துக்களுக்குப் பதிலியாகிய 'யண்' பிரத்தியாஹாரத்து எழுத்துக்களைத் தொடர்ந்து நிற்கும் அனுதாத்த சுரம் பெற்ற உயிருக்கு 'ஸ்வரித' சுரம் பதிலியாக வரும்.
உதாத்த 'யண்'–குமாரீ + ஔ = குமார்யெள. இதில் 'ய்'உக்குப்பின் நிற்கும் 'ஔ' ஸ்வரிதமாகிறது. ஸ்வரித 'யண்' – க$^3$லபூ + இ = க$^2$லப்னி 'வ்' என்ற

அரையுயிர், உதாத்த 'ஊ'க்குப் பதிலியாகிறது. இதற்குப்பின் வரும் அனுதாத்த 'இ' ஸ்வரிதம் பெறும். க$^2$லப்வி + ஆ ஸா = க$^2$லப்வ்ய் + ஆஸா இங்கு காணப்படும் 'ய்' ஸ்வரிதம் பெறும். இதற்குப்பின் நிற்கும் அனுதாத்த 'ஆ' ஸ்வரித சுரம் பெறும். க$^2$லப்வ்யாஸா.

**8.2.5** ஏகாதே$^3$ஸ உத$^3$ாத்தேனோத்த:

உதாத்த சுரம் கொண்ட உயிரெழுத்துடன், அனுதாத்த சுரம் கொண்ட உயிரெழுத்து இணைக்கும்போது அவைகளிரண்டுக்கும் ஒரேயொரு பதிலியாக (ஏகாதே$^3$ஸம்) உதாத்த சுரம் பெற்ற உயிர் வரும். அக்$^3$னீ + ஔ = அக்$^3$னீ (6.1.102) வ்ருக்ஷ + ஐ: = வ்ருக்ஷை:

**8.2.6** ஸ்வரிதோ வா அனுத$^3$ாத்தே பத$^3$ாதெ$^3$ள

நிற்குஞ் சொல்லினீறு உதாத்தசுரம் கொண்டவுயிராகவும் வருஞ் சொல்லின் முதலில் அனுதாத்தசுரம் கொண்ட உயிராகவும் அமையும்போது அவைகளிரண்டுக்கும் பதிலியாக (ஒரேயொரு) 'ஸ்வரித' சுரம் கொண்ட உயிர் விருப்பாக வரும்.

ஸு + உத்தீ$^2$த: இங்கு 'ஸு'வின் உதாத்த 'உ', 'உத்தித' வின் அனுதாத்த 'உ'வுடன் இணைக்கப்பட்டிருக்கிறது. ஆக்கப்பட்ட சொல்லான ஸூத்தி$^2$த: விருப்பாக 'ஸ்வரிதம்' பெறும். அதாவது ஸூத்தி$^2$த: அல்லது ஸூத்தி$^2$த. இதன் முதலுயிர் உதாத்தமாகவோ, ஸ்வரிதமாகவோ ஆகும்.

**8.2.7** நலோப: ப்ராதிபதி$^3$காந்தஸ்ய

ஒரு பெயரடிச் சொல், (ஒருபதமாகவும் செயற்படும்போது) லினீறாக (ப்ராதிபதி$^3$கஸ்ய) நிற்கும் 'ந்' கெடும்.

1.4.17இன்படி ஒரு பிராதிபதிகம் பதமாகவுமாகும்.

ராஜன் + ஸு = ராஜன் + θ (6.1.68) = ராஜா θ (1.4.17) ராஜா, இதைப் போன்று ராஜன் + ப்$^4$யாம் = ராஜப்$^4$யாம், ராஜபி$^4$, ராஜதா, ராஜதர:, ராஜதம:

வா: அஹ்னோ நலோப ப்ரதிஷேதே$^4$ா வக்தவ்ய:

அஹன் 'பகல்' என்ற சொல்லினிறுதி 'ந்' கெடுவதற்குத் தடைகூற வேண்டும். அஹ: (அஹன் + ஸு = அஹன் + θ (7.1.23) = அஹர் (8.2.69) = அஹ: 8.2.68-69இல் விதிக்கப்பட்டிருக்கும் 'அஹன்' இன் 'ந்' உக்கு 'ர்' பதிலிபாவது, இச்சூத்திரத்தைப் பொறுத்தவரையில் 'அஸித்தமாகும். ஆகவே, இவ்வார்த்திகம் தேவையாகிறது.

**8.2.8** ந ஙி ஸம்பு$^3$த்$^3$த$^4$யோ:

'ந்' ஈற்றுப் பெயரடிச் சொல், (பதமாகவும் பயன்படுத்தப்படும் போது), 'ஙி' என்ற வேற்றுமையுருபு (7 ஆம் வேற்றுமையொருமை),

ஸம்பு$^3$த்$^3$தி$^4$ (8 ஆம் வேற்றுமையொருமை 'ஸு') ஆகியவைகளுக்கு முன்னால் நிற்கும்போது அந்த 'ந்' கெடும்.

வ்யோமன் + ஙி = வ்யோமன் + லுக் (7.1.39) = பரமே வ்யோமன் (ருக் 1.62.7); ராஜன் + ஸு = ராஜன் + 0 (6.1.68) = ராஜன், 'ஓ அரசனே'

**8.2.9** மாது3பத4யாஸ்1 ச மதோர்வோ அயவாதி3ப்4ய:

'ம்' அல்லது 'அத்' (அ)தை ஈற்றயலாகவோ அல்லது இறுதியெழுத்தாகவோ கொண்ட பெயரடிச் சொற்களில் பின்னால் 'மதுப்' ஒட்டிணைக்கும்போது அவ்வொட்டின் முதலெழுத்தான 'ம்' உக்கு 'வ்' பதிலியாக வரும். ஆனால் 'யவ' முதலிய சொற்களோடு 'மதுப்' இணைக்கும்போது அவ்வாறாகாது.

1) கிம் + மதுப் = கிம்வத் (2) காம + மதுப் = காமவத் (3) வ்ருக்ஷ + மதுப் = வ்ருக்ஷவத் (4) பயஸ் + மதுப் = பயஸ்வத் ஆனால் யவ மத், ஊர்மிமத்

**8.2.10** ஜ2ய:

'ஜ2ய்' பிரத்தியாஹாரத்தின் ஒரெழுத்தில் முடியுஞ் சொற்களுக்குப் பின் 'மதுப்' ஒட்டிணைக்கும்போது அவ்வொட்டின் முதலெழுத்துக்கு ப் பதிலியாக 'வ்' வரும்.

மருத் + மதுப் = மருத்வத்

அக்3விசித்3வான் க்3ராம:, வித்3யுத்3வான் ப3லாஹக:

**8.2.11** ஸம்க்3ஞாயாம்

ஒரு பெயரடிச் சொல்லுக்குப்பின் 'மதுப்' ஒட்டிணைக்கப்பட்டுத் தருவிக்கப்பட்ட சொல் ஒரு பெயராகும்போது 'மதுப்'பின் 'ம்'உக்கு 'வ்' பதிலியாக வரும்.

அஹி + மதுப் + ஙீப் = அஹீவதீ, கபீவதி, ருஷீவதீ, 'நதியின் பெயர்கள்'

**8.2.12** ஆஸந் தீ3வத்ஷ்டீ2வத் சக்ரீவத்கக்ஷீவத்3ருமண்வச் சர்மண் வதி.

ஆஸந்தீ3வத் 'ஒரு கிராமத்தின் பெயர்' அஷ் டீ2வத் சக்ரீவத் 'சக்கரத்தைக் கொண்ட', கக்ஷீவத் 'ஒரு முனிவரின் பெயர்', ருமண்வத் 'ஒரு மலையின் பெயர்', சர்மண்வத் 'ஒரு நதியின் பெயர்' ஆகியவைகள் விதிக்குப் புறம்பாக 'மதுப்' ஒட்டின் 'ம்' உக்கு 'வ்' இணைக்கப்பட்டு ஆக்கிய சொற்கள். முந்திய சூத்திரத்தினால் 'ம்' உக்கு 'வ்' பதிலியாக வரமுடியும். இங்கு பெயரடிச் சொற்கள் விதிப்படியல்ல.

1. ஆஸந்தீவத் (=ஆஸனவத்) (2) அஷ்டீவத் (=அஸ்தீ2வத்), (3)சக்ரீவத் (=சக்ரவத்) (4) கக்ஷீவத் (=கக்ஷ்யாவத்) (5)ருமண்வத் (=லவணவத்) (6) சர்மண்வத் (=சர்மவத்)

**8.2.13** உத3ன்வானுத3த4ள ச

'கடல்' (உத3தி4) என்ற பொருளைச் சுட்டும் 'உத3ன்வான்' உம் ஒரு நிபாதனம். 'உத3க' (தண்ணீர்) என்ற சொல்லுக்குப்பின் 'மதுப்' இணைக்கப்பட்டு 'உத3ன்வான்' என்ற சொல் விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்டது.

'உத$^3$க'த்துக்குப் பதிலியாகக் காணப்படும் 'உத$^3$ன்' இன் 'ன்' கெடாதது நிபாதனம்.

**8.2.14** ராஜன்வான் ஸௌராஜ்யே

'நல் ல அரசாங்கம்' (ஸௌராஜ்யே) என்ற பொருளைச் சுட்டும்போது 'ராஜன்வான்' என்ற சொல் நிபாதனம். இங்கு 'ராஜன்' இனினிறுதி 'ன்' கெடாதது விதிக்குப் புறம்பானது. (பார்க்க 8.2.7) ராஜன் வதீ ப்ருதி3வீ.

**8.2.15** ச$^2$ந்த$^3$ஸிர:

'இ' அல்லது 'ஈ' அல்லது 'ர்' ஈற்றுச் சொற்களுக்குப்பின் 'மதுப்' ஒட்டிணைக்கும்போது, வேதமொழியில் அதன் 'ம்' உக்கு 'வ்' பதிலியாக வரும். 1. இ–த்ரிவதீ யாஜ்யானுவாக்யா ப$^4$வதி, அதி$^4$பதிவதீ ஜுஹோதி (2)ர்– கீ$^3$ர்வத், ஆஸீர்வத்

**8.2.16** அநோ அட்

வேதமொழியில் 'அன்'இல் முடியும் பெயரடிச் சொல்லுக்குப் பின் 'மதுப்' ஒட்டிணைக்கும்போது, அவ்வொட்டுக்கு முன்னால் 'நுட்' ஆகமம் இணைக்கப்படும்.

அக்ஷ ண்வத் (=அக்ஷி + மதுப் = அக்ஷிவத் அக்ஷ்–அன் வத் (7.1.75) அக்ஷ θ + வத் (6.1.176) = அக்ஷ – நுட் + வத் = அக்ஷண்வத்)

அக்ஷவந்த: கர்ணவந்த: ஸக$^3$ாய:, அஸ்த$^3$ண்வந்தம் யத$^3$நஸ்தா பி$^3$ப$^4$ர்தி ஸீர்ஷன் வதீ, மூர்த$^4$ன்வதீ.

**8.2.17** நாத்$^3$ க$^4$ஸ்ய

'ந்' ஈற்றுச் சொற்களுக்குப்பின் 'க$^4$' என்ற ஸம்க்$^3$ஞாவினால் குறிப்பிடப்படும் ஒட்டுக்களை (தரப், தமப்) இணைக்கும்போது அவ்வொட்டுக்களுக்கு முன் 'நுட்' ஆகமம் வரும் (வேதமொழியில்) ஸுபதி$^2$ன் + தரப் = ஸுபதி θ தர : ஸுபதி$^2$ – நுட் + தர: = ஸுபதி$^2$ந்தர: ஸுபதி$^2$ந்தம:, த$^3$ஸ்யு ஹந்தர:, த$^3$ஸ்யுஹந்தம:

வா: பூ$^4$ரித$^3$ாவனஸ்துட்$^3$ வக்தவ்ய:

'பூ$^4$ரித$^3$ாவன்' என்ற சொல்லோடு இவ்வொட்டுக்களிணைக்கும் போது 'துட்' ஆகமம் ஆகும்.

பூ$^4$ரித$^3$ாவத்த:, பூ$^4$ரித$^3$ாவத்தம:

வா: ஈத்$^3$ ரதி$^2$ன:

'ரதி$^2$ன' என்ற சொல்லின்பின் இவ்வொட்டுக்களிணைக்கும்போது, இதன் 'இ' ஈயாகும்.

ரதீ$^2$தர:, ரதீ$^2$தம:

**8.2.18** க்ருபோ ரோ ல:

'க்ரு ப்' என்ற வினையின் 'ர்'உக்கு 'ல்' பதிலியாக வரும். க்ருப் + க்த = க்லுப்த; க்ருப் + லுட் – க்லுப் + தஸ் + ட3ா (2.4.85) = கல்ப்தா

இங்கு காணப்படும் 'ர்' உயிரெழுத்தான 'ரு', மெய்யெழுத்தான 'ர' என்ற இரண்டையுமே சுட்டும் 'ல'வும் அவ்வாறே. ஆகவே க்ருப் = க்ல்ருப்.

'க் ருபா' என்ற சொல் 'க்ரப்'இலிருந்து 'ர' உயிராக்கம் பெற்று ஆக்கப்பட்டது. (3.3.104) இவ்வாறு உயிராக்கம் பெற்ற 'ரு'வுக்கு 'ல' பதிலியாகாது. க்ருபாண, க்ருபாண, க்ருபீட, கர்பூர என்ற சொற்களும் 'க்ரப்'இலிருந்து ஆக்கப்பட்டவைகள்தான். ஆகையால் இவைகளின் 'ரு' 'ல' ஆகாது.

வா: ப3ால மூல லக்4வஸுராலமங்கு3லீனாம் வா ரோ லமாபத்3யத இதி வக்தவ்யம்

'பால' முதலியவைகளின் 'ர'வுக்கு 'ல' விருப்பாகப் பதிலியாக வரும்.

ப3ால:, ப3ார:, மூலம், மூரம், லகு4, ரகு; அஸுர, அஸுல; அலம், அரம்; அங்கு3லி:, அங்கு3ரி:

வா: கபிலகாதீ3னாம் ஸம்க்3ஞாச்ச2ந்த3ஸோர் வா ரௌ லமபத்3யத இதி வக்தவ்யம்

வேத மொழியிலும், பெயரைச் சுட்டும்போதும், 'கபிலக' முதலிய சொற்களின் இந்த மாற்றம் விருப்பாக ஏற்படும்.

கபில க, கபிரக, லோமானி, ரோமாணி, பாம்ஸுரம், பாம்ஸுலம், கர்ம, கல்ம; ஸுக்ர:, ஸுக்ல:

**8.2.19** உபஸர்க3ஸ்யாயதௌ

'அய்' போ (1.503) என்ற தாதுவுக்குமுன் நிற்கும் உபசர்க்கத்தின் 'ர்'உக்கு 'ல்' பதிலியாக வரும். பலாயதே (பர + அய் – அ + தே)

ப்லா யதே (ப்ர + அய் + அ + தே)

'தப்புகிறான், ஓடுகிறான்'

**8.2.20** க்3ரோ யஙி

க்3ரூ 'விழுங்கு' என்ற தாதுவுக்குப்பின் 'யங்' ஒட்டிணைக்கும் போது, அதன் 'ரூ'வுக்கு 'ல்' பதிலியாக வரும்.

நி + க்3ரூ + ஸ1ப் + திப் = நி + க3ர் + யங் + அ + தே (7.1.100) = நிஜேகி3ல்யதே (6.1.97; 7.4.60; 62; 82)

**8.2.21** அசி விப4ாஷா

'க்3ரூ' தாதுவுக்குப்பின் உயிரெழுத்தை முதலில் கொண்ட வொட்டுக்கள் வரும்போது அதன் 'ரூ' வுக்கு 'லு' விருப்பாகப் பதிலியாக வரும்.

நி + க்3ரு + ஸ1ப் + திப் = நிகி3ரதி, நிகி3லதி; நிக3ரண, நிக3லன (ல்யுட்), நிக3ரக, நிக3லக (ண்வுல்)

இது ஒரு வ்யவஸ்தி³த விப⁴ாஷா மாற்று வடிவங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி பொருள் உண்டு. ஆகவே க³ர 'நஞ்சு', க³ல 'கழுத்து' முந்தையது எப்போதுமே 'ர'யுடன் வரும், பிந்தையது எப்போதுமே 'ல'வுடன் வரும்.

**8.2.22** பரேஸ்' ச க⁴ாங்கயோ:
க⁴ (<ஹன்), அங்க 'வளைவு' ஆகியவைகளுக்கு முன் நிற்கும் 'பரி'யின் 'ர்' உக்கு 'ல்' விருப்பாகப் பதிலியாக வரும்.
பரிக⁴: அல்லது பலிக⁴:
பர்யங்க: அல்லது பல்யங்க: 'படுக்கை, கட்டில்'

வா: யோகே³ சேதி வக்தவ்யம்
'யோக³' என்ற சொல்லுடன் 'பரி' வரும்போதும் அவ்வாறேயாகும் .
பரியோக³: அல்லது பலியோக³:

**8.2.23** ஸம்யோக³ாந்தஸ்ய லோப:
கூட்டு மெய்யில் முடியுஞ் சொற்களின் இறுதி மெய் கெடும். கே³ா + மதுப் + ஸு = கே³ா + மந்த் + ஸு (7.1.70) = கோமந்த் + ஸு (6.4.14) = கே³ாமந்த் + θ (6.1.88) = கே³ாமான், யவமான்

**8.2.24** ராத்ஸஸ்ய
'ர்' உக்குப்பின் 'ஸ்' நிற்கும் கூட்டு மெய்யையீறாகக் கொண்ட சொல்லின் 'ஸ்' கெடும்.
பித்ரு + ஙஸி = பிதுர் + ஸ் (6.1.111; 1.1.51) = பிதுர் + θ ஆனால் ஊர் ஜ் + ஸு + ஊர்ஜ் + θ (6.1.68) = ஊர்க் 8.2.23க்குப் புறனடை.

**8.2.25** தி⁴ச த்'⁴' இல் தொடங்கும் ஒட்டுக்குமுன் நிற்கும்போதும் 'ஸ்' கெடும். லூ + லுங் = லு + ச்லி (3.1.43) = லூ + ஸிச் + த்⁴வம் (3.1.44) = அட் + லூ + இட் + ஸிச் + த்⁴வம் (7.2.35) – அ லோ – இ – ஸ் த்⁴வம் (7.3.84) = அலவி – θ – த்⁴வம் (6.1.78) = அலவி – த்⁴வம், அலவிட்⁴வம் (8.4.41)

**8.2.26** ஜ²ல: ஜ²லி
'ஜ²ல்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரு மெய்யெழுத்துக்குப்பின் நிற்கும் 'ஸ்', அதைத் தொடர்ந்து 'ஜ²ல்' பிரத்தியாஹாரத்து ஒரு மெய்யெழுத்தில் தொடங்கும் ஒட்டு வரும்போது, கெடும்.
பி⁴த்³ + லுங் = அ–பி⁴த்³ + ஸிச் + த = அபி⁴த்³ – ) – த = அபி⁴த்த (8.4.45) = ஆனால் மண் + லுங் = அ–மன் + ஸிச் + த = அமம்ஸ + த (8.3.24) (ம் அனுஸ்வாரம்)

**8.2.27** ஹ்ரஸ்வாத³ங்க³ாத்
குறிலீற்று அடிச்சொல்லுக்குப் பின் நிற்கும் 'ஸ்' யைத் தொடர்ந்து ' ஜ²ல்'

பிரத்தியாஹாரத்து ஒரு மெய்யில் தொடங்கும் ஒட்டு வரும் போது 'ஸ்' கெடும். க்ரு ந் + லுங் = அ–க்ரு + ஸிச் + த = அக்ரு + θ + த = அக்ருத. ஆனால் அக்ருஷத

**8.2.28** இட ஈடி
'இட்' ஆகமத்துக்குப்பின்னும் 'ஈட்' ஆகமத்துக்கு முன்னும் நிற்கும் 'ஸ்' கெடும்.
தி³வ் + லுங் அ–தி³வ் + இட் + ஸிச் + ஈட் + த் (7.3.96) = அ–தே³ல் – θ - ஈ – த் = அதே³வீத் (7.3.84; 6.1.101) அஸேவீத், அமோஷீத்

**8.2.29** ஸ்கோ: ஸம்யோக³ாத்³யோரந்தே ச
கூட்டுமெய்யின் முதலெழுத்தாக அமையும் 'ஸ்' அல்லது 'க்' ஒரு சொல்லினிறுதியில் நிற்கும் போதோ அல்லது 'ஜ²ல்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரு மெய்யெழுத்தில் தொடங்கும் ஒட்டுக்கு முன் நிற்கும்போதோ அவ்வெழுத்துக்கள் கெடும்.
1) லஸ்ஜ் + க்த = லஸ்ஜ் + ந (8.2.45) = ல θ ஜ் + ந = லக்3ந (8.2.30);
2) தக்ஷ் + க்த = தθஷ் + த = தஷ்ட
3) ஸாது⁴ – லஸ்ஜ் + ஸு – θ = ஸாது⁴ – லஜ் = ஸாது⁴லக் (8.2.30)

வா: ஜ²லி ஸஙீதி வக்தவ்யம்
'ஸங்' பிரத்தியாஹாரத்த்துக்குள்ளடங்கிய 'ஜ²ல்' பித்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்தில் தொடங்கும் ஒட்டு எண் மைய வேண்டும்.
ஸன் (3.1.5) ஒட்டின் 'ஸ'வும் 'மஹிங்' (3.4.78) ஒட்டின் 'ங்'உம் சேர்த்து 'ஸங்' பிரத்தியாஹாரம் ஆக்கப்படும். ஆகவே, எல்லா 'க்ருத்' ஒட்டுக்களும், தாதுக்களுக்குப்பின்னிணைக்கப்படும் ஒட்டுக்களும் இதில் அடங்கும். 'தத்தித' ஒட்டுக்களும் பெண்பாலொட்டுக்களும் இதைச் சேர்ந்தவையல்ல. இதற்கு முன் இப்பகுதியில் கூறப்பட்ட எல்லாவொட்டுக்களுக்கும் இவ்வார்த்திகம் பொருந்தும்.

**8.2.30** சோ: கு:
ஒரு சொல்லினிறுதியிலோ அல்லது 'ஜ²ல்' பிரத்தியாஹாரத்து எழுத்தில் தொடங்கும் ஒட்டுக்கு முன்னோ நிற்கும் அண்ணவொலிக்கு (சு), பின்னண்ணவொலி (கு') பதிலியாகும்.
வாச் + ஸு = வாச் + θ (6.1.68) = வாக்; பு⁴ஜ் + க்த = பு⁴க்த; ப⁴ஜ் + க்தின் = ப⁴க்தி

**8.2.31** ஹோ: ட⁴:
ஒரு சொல்லினிறுதியிலோ, ஜ²ல் பிரத்தியாஹாரத்து எழுத்தில் தொடங்கும் ஒட்டுக்கு முன்னோ நிற்கும் 'ஹ'வுக்கு 'ட⁴' பதிலியாக வரும்.
ஸஹ் + துமுன் = ஸோடு⁴ம்,
லிஹ் + லட் = லேடி⁴; ப்ரஷ்டவாட் (< ப்ரஷ்டவஹ்), தி³த்யவாட்

**8.2.32** த$^3$ாதேர் த$^3$ாதே$^4$ார் க$^4$:

'த$^3$'வில் தொடங்கும் (த$^3$ாதேர்) ஒரு தாது (த$^3$ாதேர்) வினிறுதி 'ஹ்', ஒரு சொல்லினீறாகவோ அல்லது அத்தாதுவுக்குப் பின் 'ஜ$^2$ல்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்தில் தொடங்கும் ஒட்டு வரும்போதோ, அந்த 'ஹ்'உக்கு 'க4' பதிலியாக வரும்.

காஷ்ட + θ த$^3$ஹ் + க்விப் + ஸு = காஷ்ட + த$^3$ஹ் + ஸு = காஷ்ட–த$^3$க்$^4$ + θ = காஷ்ட – த$^4$க்$^4$ = காஷ்டத$^4$க் (8.4.53) மரத்தை எரிக்கும்; து$^3$ஹ் + க்த = து$^3$க்$^4$, + த = து$^3$க்$^4$–த$^4$ (40) து$^3$க்$^3$த$^4$ 'பால்'

**8.2.33** வா த்$^3$ருஹ முஹ ஷ்ணுஹ ஷ்ணிஹாம்

த்ருஹ் 'காயப்படுத்து' (4.88), முஹ் 'குழம்பு' (4.89) ஹ்ணுஹ் 'வாந்தியெடு' ஷ்ணிஹ் 'விரும்பு, காதலி' (4.91) ஆகியவைகளினீறான 'ஹ்' ஒரு சொல்லினிறுதியிலோ அல்லது 'ஜ$^2$ல்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்தில் தொடங்கும் ஒட்டுக்களுக்கு முன் நிற்கும்போதோ அந்த 'ஹ்' உக்கு 'க்$^4$' விருப்பாகப் பதிலியாக வரும்.

1. த்$^3$ருஹ் = த்$^3$ரோக்$^3$த$^4$ா, த்$^3$ரோட$^4$ா (2) முஹ் – முக்$^3$த$^4$, மூட$^4$ (3) ஸ்னுக்$^3$த$^4$, ஸ்னூட$^4$ (4) ஸ்னிஹ் – ஸ்னேக்$^3$த$^4$, ஸ்னேட$^4$.

**8.2.34** நஹோ: த$^4$:

'நஹ்' 'கட்டு' (4.59) என்ற தாதுவின் 'ஹ்' ஒரு சொல்லின் இறுதியிலோ அல்லது 'ஜ$^2$ல்' பிரத்தியாஹரத்து ஒரெழுத்தில் தொடங்கும் ஒட்டுக்கு முன் நிற்கும்போதோ, அந்த 'ஹ்'க்கு 'த$^4$' பதிலியாக வரும்.

உப + நஹ் + க்விப் + ஸு = உபா–நஹ் + θ (6.3.116; 6.1.88) = உபாநத்$^4$ = உபா – நட் (8.4.56) = உபாநட்; நஹ் + க்த = நத்$^4$ – த = நத்$^4$த (8.4.40) = நத்$^3$த$^4$ (8.4.53)

**8.2.35** ஆஹஸ்த$^2$

'ஆஹ்' என்ற தாதுவினிறுதி 'ஹ்' அதற்குப்பின் 'ஜ$^2$ல்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்தில் தொடங்கும் ஒட்டுத் தொடரும்போது, 'த$^2$' ஆகும். ஆஹ் + த$^2$ல் = ஆத்த$^4$ (8.4.53)

வா: ஹ்ரு க்$^3$ரஹோர் ப$^4$ஸ்ச$^2$ந்த$^3$ஸி ஹஸ்யேதி வக்தவ்யம்

வேதமொழியில், ஹ்ரு, க்$^3$ரஹ் என்ற தாதுக்களின் 'ஹ்' உக்குப் பதிலியாக 'ப$^4$' வரும்.

க$^3$ர்த$^3$பே$^4$ன ஸம்ப$^4$ரதி, க்$^4$ரபீ$^4$தா, ஜப்$^4$ரிரே; உத்$^3$க$^3$ராப$^4$ம்ச நிக்$^3$ராப$^4$ம் ச ப்$^4$ரஹ்ம தே$^3$வா அவீவ்ருத$^4$ன்

**8.2.36** வ்ரஸ்$^1$ ச ச ப்$^4$ரஸ்ஜ ஸ்ருஜ, ம்ருஜ யஜ ராஜப்$^4$ராஜஸ் ச$^2$ஸாம் ஷ:

வ்ரஸ்ச் 'வெட்டு' (6.12), ப்$^4$ரஸ்ஜ் 'வறு, பொரி' (6.4), ஸ்ரு$^1$ஜ் 'படை' (6.121),

ம்ருஜ் 'துடை', (2.57), யஜ் 'யாகம் செய்' (1.1051), ராஜ் 'ஒளிவிடு', ஆள்', (1.874), ப்$^{4}$ராஜ் 'ஒளிவிடு', ஆகியவைகளினிறுதியெழுத்தும் 'ச்$^{2}$', 'ஸ்' என்றவெழுத்துக்களிறுதியில் அமையும்போதும் (ஒரு சொல்லினிறுதியில்) அல்லது 'ஜ$^{2}$ல்' எழுத்தில் தொடங்கும் ஒட்டுக்கள் அவைகளுக்குப்பின் வரும்போதும் அவைகளுக்கு 'ஷ்' பதிலியாக வரும்.

1. வ்ரஸ்ச் = வ்ரஷ்டா, வ்ரஷ்டும்,
2. ப்$^{4}$ரஸ்ஜ் = ப்$^{4}$ரஷ்டா, ப்$^{4}$ரஷ்டும்,
3. ஸ்ருஜ் = ஸ்ரஷ்டா, ஸ்ரஷ்டும்,
4. ம்ருஜ் = மார்ஷ்டா, மார்ஷ்டும்
5. யஜ் = யஷ்டா, யஷ்டும்
6. ராஜ் = ஸம்ராட், விராட்
7. ச்$^{2}$ (ஈறு) – ப்ரச்ச$^{2}$ = ப்ரஷ்டா, ப்ரஷ்டும்,
8. லிஸ் – லேஷ்டா, லேஷ்டும்

**8.2.37** ஏகாசோ ப$^{3}$ஸோ்ா ப$^{4}$ஷ் ஜ$^{2}$ஷந்தஸ்ய ஸ்த்$^{4}$வோ:

ப$^{3}$ஸ் பிரத்தியாஹாரத்து ஓரெழுத்தில் தொடங்கும் (ப$^{3}$, க$^{3}$, ட$^{3}$, த$^{3}$), ஓரசையைக் கொண்ட தாது (ஏகாசோ) ஜ$^{2}$ஷ் பிரத்தியாஹ ாரத்து ஓரெழுத்தை (ஜ$^{2}$, ப$^{4}$, க$^{4}$, ட$^{4}$, த$^{4}$)யிறுதியில் கொண்டதா கவமையும் போது அவ்விறுதி–யெழுத்துக்களுக்கு முன் 'ஸ்' அல்லது 'த்$^{4}$வ' வரும்போது, அல்லது அத்தாதுக்கள் ஒரு சொல்லினுறுதியில் நிற்கும்போது,

அவ்விறுதியெழுத்துக்களுக்குப் பதிலியாக (முறையே ப$^{4}$, க$^{4}$, ட$^{4}$, த$^{4}$) 'ப$^{4}$ஷ்' பிரத்தியாஹாரத்து எழுத்துக்கள் பதிலியாக வரும்.

1. பு$^{3}$த்$^{4}$ + ஸ்ய + தே = பே$^{3}$ாத்$^{4}$ஸ்யதே (7.3.86) = பே$^{4}$ாத்$^{4}$ஸ்யதே = பே$^{4}$ாத்ஸ்யதே (8.4.53), அபு$^{4}$த்$^{4}$னம், அர்த$^{2}$பு$^{4}$த்

2. கு$^{3}$ஹ் – நிகே$^{4}$ாக்ஷ்யதே, ந்யகூ$^{4}$ட்$^{4}$வம், பர்ணகு$^{4}$ட்

3. து$^{3}$ஹ் – தே$^{4}$ாக்ஷ்யதே, அது$^{4}$க்$^{3}$த்$^{4}$வம், கோ$^{3}$ாது$^{4}$க்;

4. க்$^{3}$ருத்$^{4}$ + யங்–லுக் + லங் = அ + க்$^{3}$ருத்$^{4}$ + யங் + லுக் + θ + ஸிப் = அஜர்க்$^{3}$ருத்$^{4}$ + θ + ஸ் (7.4.91) = அஜர் க$^{3}$ர்த்$^{4}$ + θ (6.1.68, 7.3.86) = அஜர்க$^{4}$ர்த்$^{4}$ = அஜர்க$^{4}$ர்த்3 (8.4.53) = அஜர்க$^{4}$ர் – ர் (8.2.75) = அஜர்க$^{4}$ா θ ர் (8.3.14; 6.3.111) = அஜர்க$^{4}$ா: (8.3.15)

**8.2.38** த$^{3}$த$^{4}$ஸ்ததே$^{2}$ாஸ்' ச

த$^{3}$த்$^{4}$ (=த4ா 3.10) 'தாங்கு' என்ற வினைக்குப்பின், 'த்' த$^{2}$'வில் தொடங்கும் ஒட்டோ அல்லது 'ஜ$^{2}$ல்' பிரத்தியாஹாரத்து ஒரெழு த்தில் தொடங்கும் ஒட்டோ அல்லது 'ஸ்' அல்லது 'த$^{4}$' ஓ வரும்பே ாது அவ்வினையின் 'த்$^{3}$'உக்கு 'த்$^{4}$' பதிலியாக வரும். த$^{3}$த்$^{4}$ + தஸ் = த$^{4}$த்த: த$^{3}$த்$^{4}$ + ஸே = த$^{4}$த்ஸே (8.4.53), த$^{3}$த்$^{4}$

+ த்$^{4}$வம்: த$^{4}$த்$^{3}$த்$^{4}$வம்

**8.2.39** ஜ$^{2}$லாம் ஜஸோ$^{1}$ந்தே

'ஜ$^{2}$ல்' பிரத்தியாஹாரத்து ஒரெழுத்து ஒரு சொல்லினிறுதியில் நிற்கும்போது அவைகளுக்கு 'ஜஸ்$^{1}$' பிரத்தியாஹாரத்து எழுத்துக்கள் பதிலியாக வரும்.
வாச் + ஸு = வாச் + θ (6.1.68) = வாக் + அத்ர = வாக$^{3}$த்ர.

**8.2.40** ஜ$^{2}$ஷஸ் ததோர் தோ$^{4}$ அத$^{4}$

'ஜ$^{2}$ஷ்' பிரத்தியாஹாரத்து எழுத்துக்களுக்கு (ஜ்$^{2}$, ப்$^{4}$, க்$^{4}$, ட்$^{4}$, த்$^{4}$)ப்பின் நிற்கும் 'த்' அல்லது 'த்$^{2}$'உக்குப் பதிலியாக 'த்$^{4}$' வரும். அந்தத் 'த்$^{4}$', 'அத்$^{4}$' என்ற வினையாகுமேயானால் அம்மாற்றமடையாது.
லப்$^{4}$ + க்த/தும் = லப்$^{3}$த$^{4}$ா, லப்$^{4}$து$^{4}$ம், து$^{3}$ஹ் + க்த/தும் = தோ$^{3}$க்$^{3}$த$^{4}$ா, தோ$^{3}$க்$^{3}$து$^{4}$ம், ஸிஹ் + க்த/தும் = லேட$^{4}$ா, லேடு$^{4}$ம்; பு$^{3}$த்$^{4}$ + க்த/தும்–போ$^{3}$த்$^{3}$த$^{4}$ா, போ$^{3}$த்$^{3}$து$^{4}$ம்,

**8.2.41** ஷடோ$^{4}$: க: ஸி

'ஸ்'க்கு முன் நிற்கும் 'ஷ்', 'ட்$^{4}$'க்குப் பதிலியாக 'க' வரும்.
பிஷ் + ல்ருட் = பேக்ஷ்யதி (7.3.86; 8.3.59); லிஹ் + ஸ்யதி = லேட்$^{4}$ + ஸ்யதி (8.2.31) = லேக்ஷ்யதி 8.3.59)

**8.2.42** ரத$^{3}$ாப்$^{4}$யாம் நிஷ்டா தோ ந: பூர்வஸ்ய ச த$^{3}$:

'நிஷ்டா' ஒட்டுக்கள் (க்த, க்தவஸு) 'ர்', த்$^{3}$' என்ற எழுத்துக்களையிறுதியில் கொண்ட வினைக்குப் பின் வரும்போது அவ்வொட்டுக்களின் 'த்'உக்கு 'த$^{3}$' பதிலியாக வரும் அதற்கு முன் நிற்கும் 'த$^{3}$' உம் அதே மாற்றமடையும்.

1. ர் – ஆ + ஸ்த்ரு + க்த = ஆஸ்தீர்ணம் (7.1.100; 8.2.76; 8.4.1) விஸ்தீர்ணம்.
2. த் – பி$^{4}$த்$^{3}$ + க்த = பி$^{4}$ன்ன:, சி$^{2}$ன்ன:

**8.2.43** ஸம்யோக$^{3}$ாதே$^{3}$ராதோ த$^{4}$ாதோர் யண்வத:

'யண்' பிரத்தியாஹாரத்து எழுத்துக் கொண்ட (அரையுயிர்கள் (யண்வத:) கூட்டு மெய்யை முதலில் கொண்ட (ஸம் யோக$^{3}$ாதே;)
'ஆத்' (ஆ) ஈற்று வினைகளுக்குப்பின் நிஷ்டாவொட்டுக்க–ளிணைக்கும்போது, அவ்வொட்டுக்களின் 'த்'உக்கு 'ந்' பதிலியாக வரும்.
ஸ்த்யை + க்த = ஸ்த்யான (6.1.45) ஸ்த்யானவத்; ப்ர + த்$^{3}$ரா + க்த = ப்ரத்$^{3}$ராண; ம்லை + க்த = ம்லான.

**8.2.44** ஸ்வாதி$^{3}$ப்$^{4}$ய:

'லூ'வில் தொடங்கி அதைத் தொடர்ந்து வரும் வினைகளோடு நிஷ்டாவொட்டுக்களிணைக்கும்போது அவ்வொட்டுக்களின் 'த்' உக்குப் பதிலியாக 'ந்' வரும்.

இவ்வகுப்பைச் சேர்ந்தவொட்டுக்கள் தாது பாடத்தில் 9.13–32 வரை கொடுக்கப்பட்டிருக்கின்றன.
லூ + க்த = லூன: தூ[4]ன: ; ஜீன:

வா: ருகாரல்வாதிப்[4]ய: க்தின் நிஷ்டாவத்[3] ப[4]வதீதி வக்தவ்யம்
'ரூ', 'ல்ரு' வீற்றுத் தாதுக்கள் 'லூ' முதலிய தாதுக்கள் ஆகியவைகளுக்குப்பின் 'க்திங்' ஒட்டிணைக்கும்போது, நிஷ்டா வொட்டுக்களிணைக்கும்போது ஏற்படும் மாற்றம் இங்கும் ஏற்படும். அதாவது இவ்வொட்டின் 'த்' உம் 'ந்' ஆகும். கீர்ண: (க்ரூ 9.26), கீ[3]ர்ண: (க்3ரூ 9.28), ஸீ1ர்ண: (ஸ்ரூ 9.18; லூனி:, (லூ), பனி: (பூஞ்)

வா: பூ ஞோ விநாஸ[1] இதி வக்தவ்யம்
'பூஞ்' (1.1015) என்ற தாதுவோடு நிஷ்டாவொட்டிணைக்கும்போது அதன் பொருள் 'அழித்தல்' (விநாஸ) என்று ஆகுமேயானால் 'த்' உக்கு 'ந்' பதிலியாகும்.
பூனா யவா: ஆனால் பூதம் த[4]ான்யம் (பூஞ் – தூய்மைப்படுத்து 9.12)

வா: ஸிநோதேர் க்[3]ராஸ கர்ம்ம கர்த்ருகஸ்யேதி வக்தவ்யம்
'ஸ்வாதி[3]' வகுப்பைச் சேர்ந்த 'ஸி' 'கட்டு' என்ற தாதுவுக்குப்பின் நிஷ்டாவொட்டிணைத்து, அவ்வினை தற்சுட்டு வினையாகவும் அதன் பொருள் விழுங்குவதற்குத் தகுந்த ஒரு கவனம் அல்லது உருண்டை என்று ஆகுமேயானால், 'நிஷ்டா' வொட்டுக்களில் 'த்' உக்கு 'ந்' பதிலியாக வரும்.
ஸிதோ க்[3]ராஸ: ஸ்வயமேவ 'தயிர்' முதலியவைகளுடன் கலந்தவுடன் உணவு விழுங்குவதற்குத் தகுந்த உருண்டையாக தானாகவே ஆவதைக் குறிக்கும்.
ஆனால் ஸிதோ பாஸேன ஸூரீகர் 'பெண் பன்றி கயிற்றால் கட்டப்பட்டது'

**8.2.45** ஓதி[3]தஸ்[1] சேதி
'ஓ'வை 'இத்'தாகக் கொண்ட தாதுக்களுக்குப்பின் 'நிஷ்டா' வொட்டுக்களிணைக்கும்போதும் அவைகளின் 'த்'உக்கு 'ந்' பதிலியாக வரும்.
ஓலஸ்ஜீ 'வெட்கப்படு' (6.1.) = லஸ்ஜ + க்த = லஜ் + த (8.2.29) = லக்[3]ன;
ஓப்யாயி 'பெரிதாரு, பருமனாகு, ஊது' (1.517) = ப்யாய் + லஸ்ஜ் = பீன (6.1.28)
'ஸ்வாதி' வகுப்பைச் சேர்ந்த தாதுக்கள் 'ஓ'வை 'இத்'தாகக் கொண்டவை (4.24–40) ஷூங் – ஸூன:, தூ[3]ங்– தூ[3]ன:, தீ[3]ன:, டீ[3]ங்–டீன:; தீ[4]ங் –தீ[4]ன:, மீங்–மீன:, ரீங்–ரீண:; லீங் – லீண: ல்ரீங் ல்ரீண:

**8.2.46** க்ஷியோ தீ[3]ர்க[4]ாத்
'நிஷ்டா'வொட்டுக்களுக்கு முன் நிற்கும் க்ஷி 'அழி', 'குன்று' (1.225) என்ற தாது, நெடிலையீறாகக் கொண்டமையும்போது 'நிஷ்டா'வொட்டுக்களின் 'த்'உக்கு 'ந்' பதிலியாக வரும். க்ஷீண 'அழிந்த' (6.4.60) ஆனால் அக்ஷிதம் 'அழியாதது'

**8.2.47** ஸ்1யோ அஸ்பர்ஸே1

ஸ்யா 'உறை', கெட்டியாகு' (=ஸ்யஸி 1.1012) என்ற தாதுவுக்குப்பின் 'நிஷ்டா' வொட்டுக்களிணைக்கும்போது, அவ்வினை 'தொடுதல்' என்ற பொருளைச் சுட்டாவிட்டால் (அஸ்பர்ஸே1) அவ்வொட்டுக்களின் 'த்' உக்கு 'ந்' பதிலியாக வரும். ஸீ1னம் க்4ருதம் 'உறைந்துவிட்ட நெய்' ஆனால் ஸீ1தோ வாயு: குளிர்ந்த காற்று' ('அஸ்பர்ஸ' என்ற பொருளிலல்ல)

**8.2.48** அஞ்சோ அநாபாத3ானே

அஞ்சு 'வளை, குனி' (1.203) என்ற தாதுவோடு 'நிஷ்டா' ஒட்டிணைக்கப்பட்டு அபாதான காரகத்தின் பொருளைச் சுட்டாமல் நிற்கும்போது, அவ்வொட்டுக்களின் 'த்'உக்கு 'ந்' பதிலியாக வரும்.

ஸமக்னே ஸ1குனே: பாதெ3ள சகுனியின் கால்கள் வளைந்தவை. (கோணலானவை) ஆனால் உத3க்தமுத3கம் கூபாத் கிணற்றிலிருந்து தண்ணீர் இறைக்கப்பட்டது.

**8.2.49** தி3வோ அவிஜிகீ3ஷாயாம்

தி3வ் 'விளையாடு' (4.1) என்ற தாதுவோடு 'நிஷ்டா' வொட்டுக்களிணைக்கப்பட்டு 'அவ்வினை 'வெல்ல விரும்பும்' என்ற பொருளைச் சுட்டாவிட்டால் (அவிஜிகீ3ஷாயாம்) அவ்வொட்டுக்களின் 'த்'உக்கு, 'ந்' பதிலியாக வரும். த்3யூன 'விளையாடிய', ஆனால் த்3யூத 'சூதாடிய' (வெற்றி பெற வேண்டும் என்ற விருப்பத்தை உணர்த்தும்போது)

**8.2.50** நிர்வாணோ அவாதே

'காற்று' என்ற பொருளைச் சுட்டாமல் (அவாதே) வரும் 'நிர்வாண' என்ற சொல் விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்டது. நிர் + வா + க்த = நிர்வாண (8.42) 'அழிக்கப்பட்ட' ஆனால் நிர்வாத 'காற்றில்லாத'

**8.2.51** ஸு1ஷ: க:

ஸு1ஷ், 'உலர்' (4.74) என்ற தாதுவுக்குப்பின் 'நிஷ்டா' வொட்டுக்களிணைக்கும்போது 'த்'உக்கு 'க்'பதிலியாக வரும். ஸுஷ் + க்த = ஸுஷ்க 'உலர்ந்த'

**8.2.52** பசோ வ:

பச் 'சமையல் செய்' (1.1045) என்ற தாதுவுக்குப்பின் 'நிஷ்டா' வொட்டு இணைக்கும்போது அவைகளின் 'த்'உக்கு 'வ' பதிலியாக வரும்.

பச் + க்த = பக்வ

**8.2.53** க்ஷாயோ ம:

க்ஷை 'உர், வறட்டு' (1.961) என்ற தாதுவுக்குப்பின் நிஷ்டா

வொட்டுக்களிணைக்கும்போது, அவ்வொட்டுக்களின் 'த' உக்கு 'ம பதிலியாக வரும்.

வக்ஷி + க்த = க்ஷா + த (6.1.45) = க்ஷாம 'பஞ்சம், வறட்சி'

**8.2.54** ப்ரஸ்த்யோ அன்யதரஸ்யாம்

'ப்ர' என்ற உபசர்க்கத்துடன் நிற்கும் 'ஸ்த்யை' 'உறை, கெட்டியாகு' (1.959) என்ற தாதுவுக்குப்பின் 'நிஷ்டா' வொட்டுக்களிணைக்கும்போது அவைகளின் 'த' உக்கு விருப்பாக 'ம' பதிலியாக வரும்.

ப்ர + ஸ்த்யை + க்த = ப்ர + ஸ்தீ + க்த (6.1.23; 4.2) = ப்ரஸ்தீம அல்லது ப்ரஸ்தீத:

**8.2.55** அநுபஸர்க³ாத் பு²ல்லக்ஷீப³ க்ருஸோல்லாக⁴ா:

பு²ல்ல 'மலர்ந்த', க்ஷீப³ 'குடிபோதையிலிக்கிற', க்ரு'ஸ' 'மெலிந்த' ஆகியவைகளுடன் நிஷ்டாவொட்டுக்கள் இணைக்கப்பட்டு விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்ட சொற்கள்.

பு²ல்ல 'மலர்ந்த' க்ஷீப³ 'குடிபோதையிலிருக்கிற', க்ரு'ஸ' 'மெலிந்த, உல்லாக⁴ 'திறமை வாய்ந்த' என்ற 'க்த'வொட்டிணைக்கப்பட்ட சொற்கள் உபசர்க்கங்களோடிணைக்கப் படாமல், விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்டவைகள்.

ஞிப²லா என்ற தாதுவிலிருந்து 'க்த' ஒட்டு இணைத்துத் தருவிக்கப்பட்டது 'பு2ல்ல' என்ற சொல். இங்கு 'அ' 'உ' ஆவதும் (7.4.88) 'இட்' ஆகமம் (7.2.16) வராததும் நிபாதனம். மற்ற மூன்று சொற்களிலும் 'க்த' வின் 'த' கெடுதல் 'இட்' ஆகமம் வராதது ஆகியவைகள் நிபாதனங்கள் ஆனால், உபசர்க்கத்துடன், ப்ரபு²ல்த:, ப்ரக்ஷீபி³த:, ப்ரக்ருஸித, ப்ரோல்லாகி⁴த 'உத்' உபசர்க்கத்தைத் தவிர்த்து மற்றவைகளுடன் 'லாக்⁴' வருவதற்குத் தடையாகும்.

வா: உத்பு²ல்ல ஸம்பு²ல்லயோரிதி வக்தவ்யம்

உத்பு²ல்ல, ஸம்பு²ல்ல என்ற சொற்களையும் இங்கு சேர்த்துக் குறிப்பிட வேண்டும். இங்கு தாது, 'உத்' என்ற உபசர்கத்துடன் வரும்போதும் 'க்த' வின் 'த' 'ல'வாக மாறுகிறது.

**8.2.56** நுத³ விதே³ாந்த³ த்ராக்⁴ராஹ்ரீப்⁴யோ அன்யதரஸ்யாம்

நுத்³ 'தூண்டு' (6.2; 132), வித்³ 'எண்ணிப்பார் (7.13), உந்த் 'ஈரமாக்கு' (7.20), த்ரா (=த்ரை 1.1014) 'காப்பாற்று' க்⁴ரா 'முகர்ந்து பார்' (1.973), ஹ்ரீ 'நாணமடை' (3.3), ஆகியவைகளோடு 'நிஷ்டா' வொட்டிணைக்கப்படும்போது அதன் 'த'உக்குப் பதிலியாக 'ந்' விருப்பாக வரும்.

நுத்³ – நுன்ன:, நுத்த: வித்³ – வின்ன:, வித்த; உந்த் – ஸமுன்ன:, ஸமுத்த:, த்ரா – த்ராண:, க்⁴ரா – க்³ராண:, க்⁴ராத: ஹ்ரீ ஹ்ரீண, ஹ்ரீத:

'ஹ்ரீ' என்ற தாதுவோடு நிஷ்டாவொட்டிணைக்கும்போது 'ந்' மாற்றமடைதல் எங்கேயுமே விதிக்கப்படவில்லை. ஆகையால் இங்கு இது அப்ராப்த விபாஷா.

மற்றவைகளில் 8.2.42; 43 'ந' மாற்றம் கட்டாயமாக விதிக்கப்பட்டிருக்கிறது. இச்சூத்திரம் அதை விருப்பு விதியாக மாற்றுகிறது.

**8.2.57** ந த்$^4$யா க்$^2$யா ப்ரூ மூர்ச்$^1$சி$^2$ மத$^3$ாம்.

த்$^4$யா = (த்$^4$யை) 'ஆழ்ந்து நினை' (1.957), க்$^2$யா 'சாற்று' (2.5); ப்ரூ 'நிரப்பு' (3.4; 9.19), மூர்ச்$^2$ 'உறை' 'கெட்டியாகு', (1.227), மத்$^3$ 'மகிழ்ச்சியுறு' (4.99) ஆகியபவைகளோடு நிஷ்டா வொட்டுக்களிணைக்கும்போது 'த'உக்கு 'ந' பதிலியாக வராது.

8.2.42,43க்குப் புறனடை.

1. த்$^4$யாத, த்$^4$யாதவான், (2) க்$^2$யாத, (3) பூர்த (4) மூர்ச்$^2$ + க்த = மூர் θ + த (6.4.21) = மூர்த (8.2.76) (5) மத்த

**8.2.58** வித்தோ பே$^4$ாக$^3$ ப்ரத்யயோ:

உடைமை (பே$^4$ாக$^4$), புகழ், சீர்த்தி (ப்ரத்யய) என்ற பொருளில் 'வித்த' என்ற விதிக்குப் புறம்பான சொல் காணப்படுகிறது.

வித்$^3$ 'அடை' (6.138) + த்த = வித்த. இங்கு 'த'வுக்கு 'ந' பதிலியாக வராதது நிபாதனம். இது 8.2.42க்குப் புறனடை. வேறு பொருளைச் சுட்டும்போது 'வின்ன' என்று வரும்.

**8.2.59** பி$^4$த்தம் ஸ$^1$கலம்

'முறிந்த துண்டு' என்ற பொருளில் (ஸ$^1$கலம்) 'பி$^4$த்த' என்ற நிபாதனமாக சொல் காணப்படும்.

'பி4ன்னம்' வேறு பொருளில் காணப்படும்.

**8.2.60** ரு$^1$ணமாத$^4$மர்ண்யே

'கடன்' (ஆத$^4$மர்ண்ய) என்ற பொருளைச் சுட்டும் 'ருண்' என்ற சொல் நிபாதனம் 'ரு$^1$த' என்ற சொல் மற்ற பொருளில் பயன்படுத்தப்படும். ருதம் வக்ஷ்யாமி நாந்ருதம் 'உண்மை சொல் கிறேன், பொய்யல்ல'.

**8.2.61** நஸத்த நிஷத்தானுத்த ப்தூர்தஸூர்த கூ$^3$ர்தானி ச$^2$ந்த$^3$ஸி.

நஸத்த 'உட்காராத', நிஷத்த 'உட்கார்ந்த', அநுத்த 'வெல்லமுடியாத', ப்ரதூர்த 'விரைவான', ஸூர்த, 'மிதிபட்ட', கூ$^3$ர்த 'அங்கீகாரம் பெற்ற' என்ற சொற்கள். வேதமொழியில் நி ஷ்டாவொட்டிணைத்து ஆக்கப்பட்ட நிபாதனமான சொற்கள்.

1-2 நஸத்த, நிஷத்த என்பவைகள் 'நஞ்', 'நி'யோடு 'ஸத்$^3$' தாது நின்று அதனோடு 'க்த'வொட்டிணைக்கும்போது, 'த' 'ந' ஆகாதது நிபாதனம். நஸன்ன, நிஷன்ன மற்ற இடங்களில்.

3. நஞ் – நுத்$^{3}$ + க்த = அநுத்த – அநுத்த
4. பேச்சு மொழியில் (4) ப்ரதூர்த = (ப்ர + தூர்/த்வர் + க்த), ப் ரதூர்ண, பேச்சு மொழியில், (5) ஸூர்த – 'ஸ்ரு' தாதுவிலிருந்து, ஆக்கப்பட்டது. இங்கு 'உ' வருதல் நிபாதனம். பேச்சு மொழியில் 'ஸ்ருத' என்று வரும் (6) கூ$^{3}$ர்த – 'கு$^{3}$ர்' என்ற தா்துவிலிருந்து, 'ந' வராமல் 'த'வோடு விதிக்குப்புறம்பாக ஆக்கப்பட்ட சொல் பேச்சு மொழியில் இது 'கூ$^{3}$ர்ண' என்று வரும்.

**8.2.62** க்வின் ப்ரத்யயஸ்ய கு:
'க்வின்' ஒட்டில் முடியுஞ் சொல்லின் இறுதியெழுத்துக்குப் பதிலியாக பின்னண்ணவொலி வரும்.
க்$^{4}$ருத + ஸ$^{1}$ப்ருஸ்$^{1}$ + க்வின் = ஸு = க்$^{4}$ருதஸ்ப்ருக்$^{2}$ + θ (6.1.68) = க்$^{4}$ருதஸ்ப்ருக் (8.2.30; 4.58); ருது + யஜ் + க்வின் + ஸு = ருது + இஜ் + ஸு (6.1.15) = ருத்வ் – இஜ + θ (6.1.68) = ருத்விக்; தாத்ருக் (தத்$^{3}$ + த$^{3}$ருஸ்$^{1}$ + க்வின் + ஸு)

**8.2.63** நஸே$^{1}$ர்வா
ஒரு சொல்லினிறுதியில் நிற்கும் 'நஸ்' என்ற சொல்லின் 'ஸ்' உக்கு விருப்பாக பின்னண்ணவொலி பதிலியாக வரும்.
ஜீவ + நஸ் + க்வின் + ஸு = ஜீவ + நஸ்$^{1}$ + θ ஸு (6.1.67) = ஜீவநக், அல்லது ஜீவநஷ் (8.2.36) = ஜீவநக், அல்லது ஜீவ நட் (8.2.39; 4.56).

**8.2.64** மோ நோ த$^{4}$ா தோ:
வினைச் சொல்லினிறுதியெழுத்தாக நிற்கும் 'ம'வுக்கு 'ந' பதிலியாக வரும்.
ப்ர + ஸ$^{1}$ம் + க்விப் = ப்ரஸம் (6.4.15) + ஸு = ப்ரஸாம் + θ (6.1.68) ப்ரஸ$^{1}$ாந், ப்ரதாந், ப்ரத$^{3}$ாந்

**8.2.65** ம்வோஸ்$^{1}$ ச
'ம்' அல்லது 'வ்' இல் தொடங்கும் ஒட்டுக்களுக்கு முன் நிற்கும் சொல்லினிறுதியெழுத்தாக அமையும் 'ம்' உக்கு 'ந்' பதிலியாக வரும்.
க$^{3}$ம் + லங் = அட் + க$^{3}$ம் + ஸ$^{1}$ப் – லுசி (2.4.73) + வ/ம = அக$^{3}$ம் + θ + வ/ம. அக$^{3}$ன்வ, அக$^{3}$ன்ம; க$^{3}$ம் + க்வஸு = ஜக$^{2}$ம் + வஸ் (6.1.8) = ஜக$^{3}$ன்வஸ்.

**8.2.66** ஸஸஜு ரு:
ஒரு சொல்லினீறாக நிற்கும் 'ஸ்' 'ஸஜுஷ்' என்ற சொல்லினிறுதியெழுத்து ஆகியவைகளுக்கு 'ரு' பதிலியாக வரும்.

1. அக்$^{3}$னி + ஸு = அக்$^{3}$னிஸ் = அக்$^{3}$னிரு + அத்ர = அக்னிரத்ர
2. ஸஜுஷ் தே$^{3}$வே பி$^{4}$: =ஸஜுரு + தே$^{3}$வேபி$^{4}$: = ஸஜுர் தே$^{3}$வேபி$^{4}$: (ருக் 7.34.15)

**8.2.67** அவயா: ஸ்$^{1}$வேதவா: புரோட$^{3}$ாஸ்$^{1}$ச
அவயா: 'யாகத்தில் பங்கு பெறுபவன்', ஸ்$^{1}$வேதவா: 'வெள்ளைக் குதிரையில்

கொண்டு வந்த', புரோட³ா: 'யாகத்தில் அளிக்கும் அலி' ஆகியவைகள் நிபானங்கள்

இவைகள் இறுதியெழுத்துக்கு 'ரு' பதிலியாக வந்து ஆக்கப்பட்டவை அவ + யஜ், ஸ்'வேத + வஹ், புரஸ் + த³ாஸ்' ஆகியவைகளிலிருந்து 'ண்வின்' ஒட்டிணைக்கப்பட்டு ஆக்கப்பட்டவை. (3.2.71, 1. அவ + யஜ் + ண்வின் = அவயாஜ் + ஸு = அவ–யாஜ் + θ (6.1.88) அவயாஜ் + ட³ஸ் (3.7.71) 'ண்வின்' உக்குப் பதிலியாக 'ட³ாஸ்' ஒட்டு இணைப்பது, இத்தகைய விதிக்குப் புறம்பாக ஆக்கப்பட்ட சொற்கள் விளிவேற்றுமையிலும் இந்த இலக்கியங்களில் ஏற்றுக் கொள்ளத் தகுந்தவையென்பதை நிறுவுவதற்காகத்தான்.

2. ஸ்'வேத + வஹ் + ண்வின் + ஸு = ஸ்வேத + வஹ் + θ ஸ்வேதவரு = ஸ்வேதவாஹ் (8.3.15)

3. புரஸ் + த³ாஸ் + ண்வின் + ஸு (3.2.71) = புரோ – ட³ாஸ் + ஸு = புரோ – ட³ாரு + θ (6.1.68) = புரோட³ா: (8.3.15)

இங்கு கூறப்படாத வேறு சொற்களும் இவ்வாறாக வருமென்று சுட்டுகிறது. 'ச' என்ற சொல் உக்யஸ'ா:

**8.2.68** அஹன்

அஹன் 'பகல்' என்ற சொல்லினிறான 'ன்'உக்கு 'ரு' பதிலியாக வரும்.

அஹன் + ப்⁴யாம் = அஹரு + ப்⁴யாம் = அஹ + உ + ப்⁴யாம் (6.1.113) அஹோ ப்⁴யாம், அஹோபி⁴:

வா: அஹோ ருவிதெ⁴ள ரூபராத்ரி ரத²ந்தரேஷூ பஸங்க்² யானம் கர்தவ்யம். ரூப. ராத்ரி, ரத²ந்த்ர என்ற சொற்களுக்கு முன் நிற்கும் 'அஹன்' இனிறான 'ன்' உக்கு 'ரு' பதிலியாக வரும்.

அஹோ ரூபம், அஹோராத்ரி, அஹோரத²ந்தரம் ஸாம 'அஹன்' உக்குப்பின் 'ர'வில் தொடங்கும் சொற்கள் வந்தால், 'ன்'உக்கு 'ரு ' பொதுவாகவே

**8.2.69** ரோ அஸுபி

'அஹன்' இன் இறுதியெழுத்துக்குப் பதிலியாக 'ரு' அச்சொல்லுக்குப்பின் 'ஸுப்' ஒட்டுக்கள் வராமலிருந்தால் (அஸுபி) வரும்.

அஹன் + த³த³ாதி = அஹர் த³தாதி

அஹன் + பு⁴ங்க்தே = அஹர் பு⁴ங்க்தே ஆனால் அஹோபி⁴:

**8.2.70** அம்னருத⁴ ரவரித்யுப⁴யதா ச²ந்தஸி

அம்னஸ் 'ரகசியமாக', ஊத⁴ஸ் 'மடி' அவஸ் ஆகிய சொற்களினிறுதி யெழுத்துக்கு 'ரு' அல்லது 'ர்' பதிலியாக வேதமொழியில் வரும்.

அம்னஸ் + ஏவ = அம்ன + ரு ஏவ = அம்னய் ஏவ (8.3.17) = அம்ன θ ஏ வ (8.3.19) அல்லது அம்னர் ஏவ ஊத⁴ ஏவ, ஊத⁴ர் ஏவ; அவ ஏவ, அவர் ஏவ.

வா: ச²ந்த³ஸி ப⁴ாஷாயாம் ச விப⁴ாஷா ப்ரசேதஸோ

ராஜன்யுபஸங்க்²யானம் கர்தவ்யம்.

வேதமொழியிலும், பேச்சு மொழியிலும் 'ப்ரசேதஸ்' என்ற சொல்லுக்குப்பின் 'ராஜன்' என்ற சொல் வரும்போது 'ப்ரசேதஸ்'இன் 'ஸ்' உக்குப் பதிலியாக 'ரு' அல்லது 'ர' இரண்டுமே வரும். ப்ரசேதா ராஜன் அல்லது ப்ரசேதோ ராஜன் (8.3.14; 6.3.111)

வா: அஹராதீ³னாம் பத்யாதி³ஷு உபஸங்க்²யானம்

'அஹர்' முதலிய சொற்களுக்குப்பின் 'பதி' முதலிய சொற்கள் வரும்போதும் அவ்வாறேயாகும்.

அஹர் பதி:, அஹ: பதி:, அஹ: பதி:

**8.2.71** பு⁴வஸ்¹ ச மஹாவ்யாஹ்ருதே:

வேதமொழியில் 'பு⁴வஸ்' என்ற சொல்லினிறுதி 'ஸ்'க்குப் பதிலியாக 'ரு' அல்லது 'ர்' அச்சொல்லை மஹாவ்யா ஹ்ருதியாகப் பயன்படுத்தும் வரும்.

பு⁴வரித்யந்தரிக்ஷம் அல்லது பு⁴/வ இத்யந்தரிக்ஷம்

மஹா வ்யாஹ்ருதி என்பது காயத்திரி மந்திரத்துக்கு முன் உச்சரிக்கப்படும் மூன்று சொற்களை (மந்திரங்களை)க் குறிக்கும். இவைகள் பூ:, பு⁴வ:, ஸ்வ: என்ற மூன்று மந்திரங்கள்.

மஹாவ்யாஹ்ருதியாக வராவிட்டால் பு⁴வோ விஸ்வஸ்ய பு⁴வனேஷு யக்³ஞிய:

**8.2.72** வஸு ஸ்ரம்ஸு த்⁴வம்ஸ்வனடு³ஹாம் த³:

'வஸ்' இல் முடியும் சொல்லீனிறான 'ஸ்', ஸ்ரம்ஸ் 'விழு', (1.790), த்⁴வம்ஸ் 'அழி' (1.791), அனடு³ஹ 'எருது' ஆகியவைகளினிறுதியெழுத்துக்கள் ஆகியவைகளுக்குப் பதிலியாக 'த³' வரும்.

1. வித்³வஸ் + ப்⁴யாம் = வித்³வத்³ப்⁴யாம், வித்³வத்³பி⁴:, வித்³வத்ப்⁴ய:, (2) உக²ாஸ்ரம்ஸ் + ப்⁴யாம் = உக²ாஸ்ரத்³ப்⁴யாம், உக²ாஸ்ரத்³பி⁴: (3) பர்ணத்⁴ வம்ஸ் + ப்⁴யாம் = பர்ண த்³வத்³ ப்⁴யாம் (4) அனடு³ஹ + ப்⁴யாம் = அனடு³த்³ப்⁴யாம்

**8.2.73** திப்யனஸ்தே:

அஸ் 'இரு' என்ற வினையைத் தவிர்த்து மற்ற 'ஸ்' இல் முடியுஞ் சொற்களுக்குப்பின் 'திப்' ஒட்டு வரும்போது, நிற்குஞ் சொல்லின் 'ஸ்' உக்கு 'த' பதிலியாக வரும்.

சகாஸ் + லங் = அ–சகாஸ் + θ + திப் = அசகாஸ் + θ (6.1.68) அசகாத்³ = அசகாத். ஆனால் அஸ் + லங் = அத் + அஸ் + θ + த் = ஆஸ் + த் = ஆஸ் + θ = ஆரு = ஆ: (8.3.15) ஆப ஏவ இத3ம் ஸலிலம் ஸர்வம் ஆ: இது வேத மொழியில் மாத்திரம்தான் காணப்படும்.

**8.2.74** ஸிபி த⁴ாதோர் ருர்வா

'ஸிப்' ஒட்டுக்கு முன் நிற்கும் தாதுவினிறுதி 'ஸ்'உக்கு விருப்பாக 'ரு'

பதிலியாக வரும்.

அசகாஸ்த்வம், அசகாத்த்வம்

**8.2.75** த³ஸ்¹ ச

'ஸிப்' ஒட்டுக்கு முன் நிற்கும் தாதுவின் இறுதியெழுத்தாகவமையும் 'த'வுக்கும் 'ரு'பதிலியாக வரும்.

பி⁴த்³ + லங் = அபி⁴தஸ்த்வம் அல்லது அபி⁴தத்வ்ம்

**8.2.76** ர்வோருபத⁴ாயா தீ³ர்க⁴:

'இக்' பிரத்தியாஹாரத்து ஒரெழுத்தை ஈற்றயலாகக் கொண்ட, 'ர்' அல்லது 'வ்'ஐ இறுதியில் கொண்ட தாதுக்களினீற்றயல் நெடில ாகும்.

க்³ரு + க்விப் = கு³ர் + θ (7.1.67; 100) + ஸு = கீ³ர் + θ (6.1.68) = கீ³ர் = கீ³: (8.3.16) பூர் + ஸு = பூ:

**8.2.77** ஹலி ச

'இக்' பிரத்தியாஹரத்து ஒரெழுத்தை ஈற்றயலாகக் கொண்ட 'ர்' அல்லது 'வ்'ஐயிறுதியில் கொண்ட ஒரு தாதுவுக்குப்பின் ஒரு மெய்யெழுத்தில் தொடங்கும் (ஹலி) ஒட்டு வரும்போதும், ஈற்றயல் உயிர் நெடிலாகும்.

ஆ + ஸ்த்ரு = க்த = ஆஸ்தீர்ண

தி³வ் + ஸ்¹யன் + திப் = தீ³வ்யதி

**8.2.78** உபத⁴ாயாம் ச

மெய்யெழுத்தில் தொடங்கும் ஒட்டுக்களுக்கு முன் நிற்கும், தாதுக்கள், 'ர்' அல்லது 'வ்'ஐ ஈற்றயலாகக் கொண்டு வரும்போதும் அதன் 'இக்' உயிர் நெடிலாகும்.

மூர்ச்² + க்த = மூர்சி²த:, உர்வீ – ஊர்விதா ஆனால் சிரி ணோதி இ தில் 'ர்' ஈற்றயலாக நின்ற போதிலும், இதைத் தொடர்ந்து ஒருயி ரெழுத்து வருகிறது.

**8.2.79** ந ப்⁴குர் சு²ராம்

'ர்' அல்லது 'வ்' இல் முடியும் 'ப4' எனப்படும் பெயரடிச் சொற்கள், குர், சு²ர் ஆகியவைகளின் உயிர் நெடிலாகாது. து⁴ர் + யத் = து⁴ர்ய:, க்ரு + லிங் = குர்யாத், சு²ர்யாத்

**8.2.80** அத³ஸோ அஸேர் த³ாது³ தே³ா ம:

'ஸ்'இல் முடியாதபோது, அத³ஸ்' என்ற மாற்றுப் பெயரின் 'த'வுக்குப்பின் வரும் எழுத்துக்க்கு 'உ' பதிலியாகும். 'த'வுக்கு 'ம' பதிலியாகும்.

அத³ஸ் + அம் = அதஅ + அம் (7.2.102) = அத + அம் (6.1.97) அமு + அம் = அமும் (6.1.107); அமூ, அமூன், அமுனா, அமுப்⁴யாம்

வா: அத³ஸோ அநோ அஸ்ர இதி வக்தவ்யம்.

'ஒ' அல்லது 'ஸ்' அல்லது 'ர்' ஆகியவைகளில்லாத 'அத3ஸ்' என்று இவ்விதியமையவேண்டும்.
அதே3ா அதா அத3: குலம். இங்கு 'விஸர்ஜனீயம்' நிகழாதது என்று கருதப்படுவதால் இச்சொல் 'ர்' வீற்றுச் சொல்லாகக் கருதப்படும்.

**8.2.81** ஏத ஈத்3 ப3ஹு வசனே

'அத3ஸ்' என்ற மாற்றுப் பெயரின் 'த3'வுக்குப்பின் நிற்கும் 'ஏத்' (=ஏ)உக்குப் பதிலியாக 'ஈ'யும் 'த்'உக்குப் பதிலியாக 'ம்'உம் அச்சொல் பன்மையைச் சுட்டும்போது (ப3ஹுவசனே) வரும்.
அத3ஸ் + ஜஸ் = அத3அ + ஸு1 (7.1.17) = அத3அ + ஈ (6.1.97) = அதே3 = அமீ; அத3ஸ் + பி4ஸ் = அத3அ + பி4ஸ் (7.2.102) = அத3 + பி4ஸ் = அதே3 பி4ஸ் (7.3.103) = அமீபி4:, அமீப்4ய:, அமீஷாம், அமீஷு

**8.2.82** வாக்யஸ்ய டே: ப்லுத உத3ாத்த:

ஒரு வாக்கியத்தினிறுதியுயிர் (டி) ப்லுதமும், உதாத்த சுரம் கொண்டதாகவுமாகும்.
இது ஒரு அதிகார சூத்திரம். இங்கிருந்து, இப்பாதத்தின் இறுதிவரையில் இது அனுவிருத்தியாகும்.

**8.2.83** ப்ரத்யபி4வாதே3 அஸூ1த்3ரே

சூத்திரனுடையதைத் தவிர்த்து (அஸூத்3ரே) மற்றவர்களின் மரியாதையோடு கூறிய வணக்கத்துக்குப் பதில் வணக்கம் கூறும் போது, வாக்கியத்தினிறுதியுயிர் ப்லுதமாகவும் உதாத்தசுரம் கெ ாண்டதாகவும் அமையும்.
அபி4வாத3ன' என்பது சிறியவர்கள் அல்லது தாழ்ந்தவர்கள், பெரியவர்கள் அல்லது மரியாதைக்குரியவர்களை வணங்கி அவர்களுடைய ஆசீர்வாதத்தைப் பெறுவதைச் சுட்டும். இது 3 விதச் செயற்களைக் கொண்டது (1) இருக்கையிலிருந்து எழுந்திருப்பது (2) பெரியவர்களின் காலைத் தொடுவது (3) வணக்கத்தைத் தெரிவிக்கும் வாக்கியத்தை உச்சரிப்பது. 'ப்ரத்யபி4வாத3' என்பது, மேற்படி வணக்கத்துக்குப் பதிலளிக்கும் வகையில் சிறியவர்களை வாழ்த்துதல். அவ்வாறு வாழ்த்தும்போது, அவ்வாக்கியத்தினிறுதியுயிர் ப்லுதமாகவும் உத3ாத்த சுரம் கொண்டதாகவும் அமையும். ஒரு சூத்திரனை வாழ்த்தும்போது அவ்வாறாகாது.
அபி4வாத3யே தே3வத3த்தோ அஹம். தேவதத்தன் என்பவன் தனது ஆசிரியரை வணங்கும்போது இவ்வாறு கூறுவான். ஆசிரியர் இதற்குப் பதிலாக அவனைக் கீழ்க்கண்டபடி வாழ்த்துவார்.
பே4ா ஆயுஷ்மான் ஏதி4 தே3வத3த்த3 (3 ப்லுதம்) ஓ தேவதத்தனே வா, நீடுழி வாழ்க. ஆனால் அபி4வாத3யே துஷஜ அஹம்: பே4ா ஆயுஷ்மான் ஏதி4 துஷஜக. இங்கு வாழ்த்தப்பட்டவன் சூத்திரன்.

வா: ஸ்த்ரியாமபி ப்ரதிஷேதே⁴ா வக்தவ்ய:
வணங்குபவர் ஒரு பெண்ணாக ஆகும்போதும் ப்லுதம், உதாத்தம் இறுதிப்புயிரோடு வராது. அபி⁴வாத³யே க³ார்கி³ அஹம்: பே⁴ா ஆயுஷ்மதீ ப⁴வ க³ார்கீ. கர்வத்தோடு வணங்குபவனுக்குப் பதில் வணக்கங்கூறும்போதும் அவ்வாறேயாகுமென்பது சிலர் கருத்து. வணங்குபவன் பெரியவர்களை ஏளனம் செய்யும் நோக்கத்தோடு அவ்வாறு வணக்கம் தெரிவிப்பதால், பெரியவர்கள் அந்நோக்கத்தைப் புரிந்து கொண்டு வாழ்த்தமாட்டார்கள். அவர்களின் பதில் ஒரு சாபமாகவேயாகும்.
அபி⁴வாத³யே ஸ்த²ாலி அஹம் பே⁴ா: 'நான் ஸ்தாலி என்ற பெயருடையவன் வணங்குகிறேன்', அஸூயகஸ் த்வம் ஸ்த²ால்ம நத்வம் ப்ரத்யபி⁴வாத³னமார்ஹதி பி⁴த்³யஸ்வ வ்ருஷல ஸ்த²ாலின் ஒபாபியே. நீ வாழ்த்துவதற்குத் தகுந்தவன் அல்ல–. நீ பானைபோன்று (ஸ்த²ாலி) உடைவாயாக.'

வா: பே⁴ா ராஜன்யவிஸ'ாம் வேதி வக்தவ்யம்
'பே⁴ா' என்ற சொல்லைத் தொடர்ந்து பெயர் அல்லது, ராஜன்ய, அல்லது வைசியன் ஆகியவைகளைச் சுட்டும்போது, 'ப்லுதம்' விருப்பாகும்.
பே⁴ா அபி⁴வாத³யே தே³வத³த்தோ–அஹம். பதில் (1) ஆயுஷ்மான் ஏதி⁴ தே³வதத்த பே⁴ா:³ (2) ஆயுஷ்மான் ஏதி⁴ தே³வத்த போ.
க்ஷத்திரியன் (விளி கொள்வோன்)
அபி⁴வாத³யே இந்த்³ரவர்மாஹம் பே⁴ா:
பதில்: ஆயுஷ்மான் ஏதி⁴ இந்த்³ரவர்மன் 3 அல்லது ஆயுஷ்மான் ஏதி⁴ இந்த்³ரவர்மன்.
வைசியன் விளிகொள்வோன்
அபி⁴வாத³யே இந்த்³ர பாலிதோஹம் பே⁴ா:,
பதில்:– ஆயுஷ்மான் ஏதி⁴ இந்த்³ரபாலித³ அல்லது ஆயுஷ்மான் ஏதி⁴ இந்த்³ர பாலித

**8.2.84** தூ³ராத் ஹூதே ச
தொலைவிலிருந்து ஒருவனை விளிக்கும்போதும் இறுதியுயிரோடு கூடிய அசை உதாத்த சுரம் கொண்டதாகவும், ப்லுதமாகவும் ஆகும்.
ஆக³ச்ச பே⁴ா மாணவக தே3வத3த்த3
வா, மாணவனே தேவத்த

**8.2.85** ஹை ஹே ப்ரயோகே³ ஹைஹயோ:
'ஹை' அல்லது 'ஹே' என்ற இடைச் சொல்லைப் பயன்படுத்தி, ஒருவனைத் தொலைவிலிருந்து விளிக்கும்போதும், 'ஹை' அல்லது 'ஹே' ப்லுதமாகவும் உதாத்த சுரம் கொண்டதாகவும் ஆகும்.
ஸை3/ஹே3 தே3வத3த்த அல்லது தே3வத3த்த ஹை3/ஹே3 'ஹை' 'ஹே' என்ற சொற்கள் ஒரு வாக்கியத்தினிறுதியில் நிற்காவிட்டாலும் அவ்வாறாகும்

என்பதைச் சுட்ட இச்சொற்களைத் திரும்பவும் இச்சூத்திரத்தில் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

**8.2.86** கு$^{3}$ரோரந்ருதோ அனந்தயஸ்யாப்யே கைகஸ்ய ப்ராசாம்

'ரு வைத்தவிர்த்த (அந்ருத) மற்ற 'கு$^{3}$ரு' எனப்படும் உயிரெழுத்துக்கள் ஒரு சொல்லினிறுதியில் நின்றாலும் நிற்காவிட்டாலும் அவைகள் ப்லுதமும் உதாத்த சுரமும், ஒரு நேரத்தில் ஒன்றேயொன்று மட்டும் (ஏகைகஸ்ய) பெறும் என்பது கிழக்கத்திய இலக்கண ஆசிரியர்களின் கருத்து

தே3வ3த்த, அல்லது தே3வத$_{3}$த்த அல்லது தே3வத3த்த3 ஏகைகஸ்ய' என்பது தே3வத3த்த3 என்று எல்லாவிடங்களிலும் வராது என்ப தைச் சுட்டுகிறது. ஆனால் க்ருஷ்ணமி3த்ர, க்ருஷ்ணமித்ர3

**8.2.87** ஒமப்$^{4}$யாத$^{3}$ானே

வேதநூல் அல்லது மந்திரத்தின் முதலில் (அப்$^{4}$யாத$^{3}$ான) 'ஓம்' என்ற சொல்லினுயிரெழுத்து, ப்லுதமாகவும் உதாத்த சுரம் கொண்டதாகவும் ஆகும். ஓ3ம் அக்$^{3}$னிமீலே புரோஹிதம் (ருக் 1.1.1)

ஆனால் ஓமித்யேதத$^{3}$ க்ஷரமுத்$^{3}$கீ$^{3}$தமுபஸீத (சாந்தோக்ய உபநிஷத் 1.1.1). இங்கு 'ஓம்' ஒரு நூலின் அல்லது மந்திரத்தின் தொடக்கத்தையோ சுட்டவில்லை.

**8.2.88** யே யக்$^{3}$ஞ கர்மணி

'யே' என்ற மாற்றுப் பெயர், ஒரு யாகத்தின் செயலில் பயன்படுத்தப்படும்போது, அதன் உயிரெழுத்து ப்லுதமாகவும் உதாத்த சுரங்கொண்டதாகவுமாகும். யே3 யஜாமஹே (மை, ஸ ம் 1.4.11), ஆனால் யே யஜாமஹ இதி பஞ்சாக்ஷரம் (தை, ஸம் 1.6.1 1.1) ஒரு நூலைப் படிக்கும்போது இதைப் படிப்பது யாகம் செய்யு ம் போது அல்ல.

**8.2.89** ப்ரணவஷ்டே$^{1}$:

யாகம் செய்யும்போது உச்சரிக்கும் மந்திரத்தின், இறுதியுயிரில் தொடங்கும் அசை (டி)க்குப் பதிலியாக ப்ரணவம் அதாவது 'ஓம்' ப்லுதமாகவும் உதாத்த சுரங்கொண்டதாகவும் வரும். அபாம் ரேதாம்ஸி ஜின்வதி (ருக் 8.44.16) என்ற இருக்கு வேத மந்திரம் அபாம் ரேதாம்ஸி ஜின் வதோ3ம் என்று ஆகும். தே3வாஞ் ஜிக3ாதி ஸு ம்னயு: (ருக்3 27.1) என்ற மந்திரம் தே3வாஞ் ஜிக3ாதி ஸும்னயோ$^{3}$ம் என்று ஆகும்.

**8.2.90** யாஜ்யாந்த:

யாகத்தில் உச்சரிக்கப்படும் மந்திரத்தின் இறுதியுயிருக்கு (யாஜ்யாந்த)ப்பதிலியாக ப்லுதமாகவும், உதாத்த சுரம் கொண்டதாகவுமான உயிர் வரும்.

ஸ்தோமைர் விதே4மாக்3னயே:ஸ்தோமைர் விதே4மாக்னயா3 (இருக் 8.43.11) ஜிஹ்வாமக்3னே சக்ருஷே ஹவ்யவாஹம் (ருக். 10.8.6)= ஜிஹ்வாமக்3னே சக்ருஷே ஹவ்யவாஹ3ம்

**8.2.91** ப்3ரூஹிப்ரேஷ்ய ஸ்1ரௌஷட்வௌஷட3ாவஹானாமாதே3:

ப்3ருஹி 'கூறு', ப்ரேஷ்ய 'அனுப்பு', ஸ்ரௌஷ்ட், 'நாங்கள் கூறுவதை அவன் கேட்கட்டும்', வௌஷ்ட் 'அவன் எங்களுக்கு வழி காட்டட்டும்', ஆவஹ 'வழிகாட்டு' என்ற யாகத்தில் உச்சரிக்கப்படும் மந்திரங்களின் முதலசைக்குப் பதிலியாக, ப்லுதமாகவும் உதாத்தசுரம் கொண்டதாகவுமான உயிரெழுத்து பதிலியாகும்.

1. அக்3னயே அனுப்3ரூ3ஹி (2)அக்3னயே கே3ாமயான் ப்ரே3ஷ்ய (3) அஸ்து ஸ்ரௌ3ஷ்ட (4) ஸோமஸ்யாக்3னே வ்ரீஹி3வௌ3ஷட் (5) அக்3விமா3வஹ

**8.2.92** அக்3னீத்ப்ரேஷணே பரஸ்ய ச

'அக்3னீத்ர' என்ற புரோஹிதருக்குக் கட்டளையிடும்போது முதலசை அதைத் தொடர்ந்து வரும் அசை (பரஸ்ய) ஆகியவைகளினுயிர் ப்லுதமாகவும் உதாத்த சுரம் கொண்டதாகவும் ஆகும். ஆ3 ஸ்1ராவய, ஓ3 ஸ்1ரா3வய

**8.2.93** விப4ாஷா ப்ருஷ்டப்ரதிவசனே ஹே

ஒரு கேள்விக்குப் பதிலாக அமையும் வாக்கியத்தின் (சொல்லின்) இறுதியில் நிற்கும் 'ஹி' என்ற இடைச் சொல்லின் உயிரெழுத்து 'ப்லுத'மாகவும் உதாத்த சுரம் கொண்டதாகவும் விருப்பாக ஆகும்.

அகார்ஷீ: கடம் தே3வத3த்த

தேவதத்தனே, நீ பாய் முடைந்தாயா? அகார்ஷம் ஹி3, அல்லது ஹி 'செய்தேன்'

**8.2.94** நிக்3ருஹ்யானுயோகே ச

ஏற்கெனவே மறுத்துவாதிட்டதை, மறுபடியும் வலியுறுத்திக் கூறும் வாக்கியத்தின் இறுதியசை விருப்பாக ப்லுதமாகவும், உதாத்தசுரம் கொண்டதாகவும் ஆகும்.

'நிக்3ருஹ்ய' என்ற சொல்லுக்கு மற்றவர்களின் கருத்து தவறென்று மறுத்து வாதிடுவது என்று பொருள். 'அனுயோக' என்ற சொல் மறுத்துக் கூறியதை மறுபடியும் கண்டிக்கும் முறையில் வாதத்தில் வென்றவன், கூறுவது என்ற பொருட்படும்.

அநித்ய: ஸ1ப்3த3 இத்யாத்த த2 அல்லது அநித்ய: ஸப்1 3த3 இத்யாத்த2

ஆகவே, 'சொல் நிலைபேறுடையதல்ல என்பதுதான் உனது துணிபு ரையா'

**8.2.95** ஆம்ரேடி3தம் ப4ர்த்ஸனே

'அச்சுறுத்தல்' (ப4ர்த்ஸனே) என்ற பொருளைச் சுட்டும் போது, வி ளிவேற்றுமைச்சொல் (ஆம்ரேடிதம்) லினிறுதியசையின் உயிரெழுத்து

ப்லுதமும், உதாத்த சுரங்கொண்டதாகவும் ஆகும்.
சௌர சௌர3 க⁴ாதயிஷ்யாமி த்வா
'ஓ திருடனே உன்னைக் கொலையுண்ணச் செய்கிறேன்'
(விளிவேற்றுமைச் சொல் இரட்டித்துப் பயன்படுத்துவதற்குப் பார்க்க 8.1.8)

வா: ப⁴ர்த்ஸனே பர்யாயேண இதி வக்தவ்யம்
இரட்டிக்கப்பட்ட சொற்களில் ஏதாவதொன்று ப்லுதமும் உதாத்த சுரம் கொண்டதாகவும் ஆகும்.
சௌ3ர சௌர அல்லது சௌர சௌர3

**8.2.96** அங்க³யுக்தம் திஙாகாங்க்ஷம்
'அச்சுறுத்தல்' என்ற பொருளில் 'திங்' ஒட்டில் முடியும் வினைச்சொல் 'அங்க' என்ற இடைச் சொல்லுடன் அமைந்து, அதன் பொருளை முழுமையாக உணர்த்த மற்றொரு சொல்லைச் சார்ந்து நிற்கும்போது அவ்வினைச் சொல்லினிறுதியசையின் உயிருக்கு 'ப்லுத'மும் உதாத்தசுரமும் கொண்ட உயிர் பதிலியாக வரும்.
அங்க³ கூஜ3/வ்யா ஹ்ர3 இத³ானீம் க்³ஞாஸ்யஸி
ஜாலம 'ஓ ஈனனே! இப்போது புரிந்து கொள்வாய்'

**8.2.97** விசார்யமாணானாம்
'சார்பு எதிர்வு இருபுறமும் எண்ணிப்பார்த்தல்' என்பதைச் சுட்டும் வாக்கியத்தின் இறுதியசை ப்லுதமும், உதாத்தசுரம் கொண்டதாகவும் ஆகும்.
ஹோத3வ்யம் தீ³க்ஷிதஸ்ய க்³ருஹ3 இ; ந ஹோதவ்யம் 'தீட்சை பெற்றவனின் வீட்டில் பலியுணவு அளிக்கலாமா கூடாதா? (க்³ருஹே=க்³ருஹே3 இ. பார்க்க 8.2.107)

**8.2.98** பூர்வம் து ப⁴ாஷாயாம்
மேலே கூறப்பட்ட சூழலில், முதலில் நிற்பதன் இறுதியசையில் உயிரெழுத்துப் ப்லுதமும் உதாத்த சுரங்கொண்டதாகவும் ஆகும். அஹிர் து3 ரஜ்ஜுர்நு 'இது பாம்பா அல்லது கயிறா?'

**8.2.99** ப்ரதிஸ்'ரவணே ச
உறுதிமொழி அல்லது உடன்படிக்கை (ப்ரதிஸ்ரவணே)யைச் சுட்டும் வாக்கியத்தினறுதியசையும் அவ்வாறேயாகும்..
க³ாம் மே தே³ஹி பே⁴ா:, அஹம் தே த³த³ாமி3. 'நீ கொடுப்பதாக வாக்களித்த பசுவை எனக்குக் கொடு' நான் உனக்கு அதைக் கொடுக்கிறேன்',
தே³வத³த்த பே⁴ா:; கிம் ஆத்த² 'ஓ தேவதத்தனே நீ என்ன சொல்கிறாய். கவனித்துக்கேட்டல் என்ற பொருளிலும் இவ்வாறாகும்.

**8.2.100** அனுதாத்தம் ப்ரஸ்நாந்தாபி[4] பூஜிதயோ:

வினா (ப்ரஸ்நாந்த) புகழ்தல் (அபி[4]பூஜித) ஆகியவைகளைச் சுட்டும் வாக்கியங்களினிறுதியசைக்குப் பதிலியாக அனுதாத்த சுரம் பெற்ற ப்லுத உயிர் வரும்.

அக[3]ம3: பூர்வா[3]ன் க்[3]ராமா3ன்

அக்[3]னி பூ[4]தா[3]இ, படா[3] 'நீ கீழ்த்திசை கிராமங்களுக்குச் சென்றாயா. ஓ அக்னி பூதனே, ஓ புத்திசாலியே? பார்க்க 8.2.105, 107)

அபிபூஜிதே–ஸோப[4]ன: க[2]லு மாணவக[3]

**8.2.101** சிதி[3]தி சோபமார்தே ப்ரயுஜ்யமானே

உவமைப் பொருளைச் சுட்டுமாறு 'சித்' என்ற இடைச்சொல் வேறொரு சொல்லோடு கூட வரும்போது அதனிறுதியசை அனுதாத்த ஸுரஞ்கொண்டதாகவும் ப்லுதமாகவும் ஆகும்.

அக்[3]னிசித்[3]ப[4]ாயா3த் 'அவன் அகினியைப் போல் பிரகாசிக்கட்டும்' ஆனால் கத[2]ம்சித் ஆஹு: அவர்கள் அபூர்வமாகப் பேசுகிறார்கள்.

**8.2.102** உபரிஸ்வித[3]ாஸீதி[3]தி ச

'உபரிஸ்வித[3]ாஸீத்' என்ற தொடரின் இறுதியுயிர் அனுதாத்த சுரங்கொண்டதாகவும் ப்லுதமாகவும் ஆகும்.

அத[4]: ஸ்வித்[3] ஆஸீ[3]த் உபரிஸ்வித்[3] ஆஸீ[3]த் (ருக் 10.129.5) 'ஒரு வேளை அது கீழே இருந்திருக்கலாம். ஒரு வேளை அது மேலே இருந்திருக்கலாம்.'

**8.2.103** ஸ்வரிதமாம்ரேடி[3]தே அஸூயாஸம்மதி கோப குத்ஸனேஷு

பொறாமை (அஸூயா), புகழ்ச்சி (ஸம்மதி), சினம் (கோப), குற்றச்சாட்டு (குத்ஸன) என்ற பொருட்களைச் சுட்டும்போது இரட்டிக்கப்பட்ட விளிச் சொற்கள் ஒரு வாக்கியத்தின் முதலில் நிற்கும்போது இரு விளிச் சொற்களில் முதலில் அமையும் விளிச் சொல்லினிறுதியசையின் உயிர் ஸ்வரித சுரங்கொண்டதாகவும் ப்லுதமாகவும் ஆகும்.

1. அஸூயா–அபி[4]ரூபக[3] அபி[4]ரூபக, ரிக்தம் தே அபி[4]ரூப்பம் 'ஓ அழகானவனே அழகானவனே உனது அழகு வீண்'

2. ஸம் மதி– மாணவக[3] மாணவக ஸோ[1]ாப[4]ன: க[2]லு அஸி 'ஓ பையனே பையனே நீ மேன்மை வாய்ந்தவன்'

3. கோப–அவிநீதக[3] அவிநீதக இத[3]ானீம் க்[3]ஞாஸ்யஸி ஜால்ம 'மரியாதை கெட்டவனே, நீ விரைவில் புரிந்துகொள்வாய்.'

4. குத்ஸன – ஸ[1]ாக்தீக[3] ஸ[1]ாக்தீக ரிக்தா தே ஸ[1]க்தி: 'ஸக்தியென்ற ஆயுதத்தைக் கொண்டவனே, உனது ஸக்தி (அதாவது ஆயுதம்) பயனற்றது.

வா: அஸூயாதி[3]ஷு வாவசனம் கர்தவ்யம்

இச்சூத்திரத்தில் 'விருப்பாக' (வா) என்ற சொல்லும் வர வேண்டும். ஆகையால், ப்லுதமும், ஸ்வரிதமும் மாறி மாறி வராது. மாணவக மாணவக

**8.2.104** க்ஷியாஸீ: ப்ரைஷேஷு திஙாகாங்க்ஷம்

மரபை மீறுதல் (க்ஷியா), வாழ்த்துதல் (ஆஸீ:) அல்லது கட்டளை (ப்ரைஷ) என்ற பொருட்களில் ஒரு வினைச் சொல் மற்றொரு வினைச் சொல்லைச் சார்ந்து, அதன் பொருளை, உணர்த்துவதற்கு நிற்கும்போது முன்னால் கூறப்பட்ட வினைச் சொல்லினிறுதியசையின் உயிர் ப்லுதமாகவும் ஸ்வரிதசுரம் கொண்டதாகவும் ஆகும்.

1. ஸ்வயம் ரதே$^{2}$ன யாதி$^{3}$ உபாத்$^{4}$யாயம் பத$^{3}$ாதிம் க$^{3}$மயதி 'நீ தேரில் செல்கிறாய் (ஆனால்) உனது ஆசிரியரை நடந்துபோகச் செய்கிறாய்'

2. ஸுதாம்ஸ்$^{1}$ ச லப்ஸீஷ்ட$^{3}$ த$^{4}$னம் ச தாத பிள்ளைகளும் செல்வத்தையும் அடைவாயாக.

3. கடம் குரு3 க்$^{3}$ராமம்ச க$^{3}$ச்ச$^{2}$–பாயும் செய். கிராமத்துக்கும் செல்

**8.2.105** அநந்த்யஸ்யாபி ப்ரஸ்னாக்$^{2}$யானயோ:

ஒரு வாக்கியத்தினிறுதிச் சொல், இறுதியில் நிற்காத சொல் ஆகிய இரண்டு சொற்களினிறுதியசையின் உயிரெழுத்துக் (அநந்த்யஸ்யாபி)க்களின் உயிருக்குப் பதிலியாக, ஒரு வினாவைச் சுட்டும்போதே (ப்ரஸ்ன) அல்லது கதை கூறுதல் (ஆக்$^{2}$யான) என்ற பொருட்களைச் சுட்டும்போது 'ப்லுத'மும், ஸ்வரித சுரம் கொண் ட உயிர் வரும்.

1. அக$^{3}$ம3: பூர்வா3ன் க்$^{3}$ராமா3ன் அக்$^{3}$னிபூ$^{4}$த்$_{3}$இ

2. அக$^{3}$ம3: பூர்வா3ன் க்$^{3}$ராமா3ன் பே$^{4}$ா:3

**8.2.106** ப்லுதாவை ச இது$^{3}$தௌ

'ஐச்' என்ற பிரத்தியாஹாரத்து எழுத்துக்களின் (ஐ, ஔ) 'இத்' (=இ), 'உத்' (=உ)துக்குப் பதிலியாக 'ப்லுத' உயிர் வரும்.

அஇ$^{3}$திகாயன, அஉ$^{3}$பகாய ன

**8.2.107** ஏசோ அப்ரக்$^{3}$ருஹ்யஸ்யாதூ$^{3}$ராத$^{3}$ஹூதே பூர்வஸ்யார்த$^{4}$ ஸ்யாதுத் தரஸ்யேது$^{3}$தௌ

'தொலைவிலிருந்து விளித்தல்'ஐத் தவிர்த்து (8.2.84) மற்ற பிரக்$^{3}$ரு ஹ்யமல்லாத (அப்ரக்$^{3}$ருஹ்ய) 'ஏச்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த சந்தியெழுத்துக்கள் பற்றிய (ஏ,ஓ,ஐ,ஔ) சூ. 83, இலிருந்து விதிக்கப்பட்ட விதிக்கள் செற்படுகையில் அதன் முறையே முதலரைப் பகுதிக்குப் பதிலியாக (பூர்வஸ்யார்த$^{4}$ஸ்ய), ப்லுதமான 'ஆத்' (=ஆ) தும், இரண்டாம் அரைப் பகுதிக்குப் பதிலியாக (உத்தாஸ்ய) இத்(இ), உத்(உ) உம்வரும். ஏச்=ஏ, ஓ, ஐ, ஔ இவற்றுள் ஏ = அ + இ, ஓ = அ + உ. இவைகள் ஒரு சொல்லினிறுதியில் நிற்கும்போது ப்லுதமாகும்போது, இவைகளின் முதல் பகுதியான 'அ' ப்லுதமாகும். அதன் பிறகு 'இ' அல்லது 'உ' இணைக்கப்படும். இந்த 'இ' அல்லது 'உ' உண்மையாக இரண்டாம் பகுதிக்குப் பதிலியாக வருபவை. அவைகள் 'இ' அல்லது 'உ' ஆகவோ, 'ஏ' அல்லது 'ஓ' ஆகவோ ஆகலாம்.

இந்த விதியின்படி 'ஏ'/'ஐ'க்கு ஆ$^3$இ பதிலியாகவும், 'ஓ'/'ஔ'க்கு அ$^3$உ பதிலியாகவும் வருமென்று கூறுகிறது. இவைகள் உதாத்தம் அல்லது அனுதாத்த சுரம் கொண்டதாக அமையும்.

ஏ/ஐக்கு ஆ$^3$இஉம் ஓ/ஔக்கு 'ஆ$^3$உ'உம் ஸ்வரித சுரத்துடன் வரும். இந்த விதி பொதுவானது அல்ல. சூ.8.2.100; 97; 83; 90 ஆகியவைகளில்தான் செயற்படும் இச்சூத்திரத்தையடுத்துவரும் வார்த்திகம் இவ்விதியை ஒரு வரையறைக்குட்படுத்துகிறது.

**8.2.108** தயோர் ய் வா வசி ஸம்ஹிதாயாம்

உயிரெழுத்துக்கு முன் (அசி) θ நிற்கும் இத்(இ), உத் (உ) ஆகியவைகளுக்கு (தயோர்), தொடர்ந்து உச்சரிக்கும்போது முறையே 'ய்', 'வ்' பதிலியாக வரும்.

அக்$^3$னே + ஆஸ'ா = அக்$^3$னா3இ ஆஸ'ா = அக்$^3$னா$^3$ய் ஆஸ'ா;

அக்னா$^3$ விந்த்$^3$ரம், படா3 வுத$^3$கம்

இச்சூத்திரத்தின் ஸ்ம்ஹிதாயாம் இந்த அத்தியாத்தின் இறுதிவரையில் அதிகார சூத்திரமாக அனுவிருத்தியாகும்.

**8.3.1** மதுவஸோ ரு ஸம்பு$^3$த்$^3$தெ$^4$ள சந்த$^3$ஸி

வேதமொழியில், 'மது' 'வஸ்' (க்வஸு) என்ற வொட்டுக்களில் முடியுஞ் சொற்களுக்குப்பின் விளிவேற்றுமையொருமையொட்டு (ஸம்பு$^3$த்$^3$தெ$^4$ள) இணைக்கும்போது, அச்சொற்களினிறுதியெழுத்துக்களுக்குப்பதிலாக 'ரு' வரும்.

1. இந்த்$^3$ர மருத்வ: இஹ பாஹி ஸோமம் (ருக் 3.51.7). இங்கு மருத்வ: என்பது 'மருத்வத்' என்ற சொல்லின் விளிவேற்றுமையொருமை. மருத் + வந்த் + θ (6.1.68) = மருத் + வந்θ (8.2.23) = மருத்வ–ரு = மருத்வ: (8.3.15)

2.மீட்$^4$வஸ் தோகாய தநயாய இந்த்$^3$ர ஸாஹ்வ:

(ருக் 2.33.14)

மிஹ் + க்வஸு = மிட்$^4$ + வஸ் (8.2.31) = மீட்$^4$ – வஸ் (6.1.12) + ஸு (விளி = மீட்$^4$–வன்ஸ் + ஸ் (7.1.70) + ஸு = மீட்$^4$–வனஸ் + θ (6.1.68) மீட்$^4$–வன் (8.2.23) = மீட்$^4$–வரு = மீட்$^4$–வ: (8.3.15) + தோகாய = மீட்$^4$ வஸ் தோகாய (8.3.34) ஆனால் ம்$^3$ரஹ்மான் ஸ்தோஷ்யாம: ('மது', 'வ ஸ்' ஒட்டோடுவருஞ்சொல்லல்ல) ய ஏவம் வித்$^3$வானக்$^3$னி மாத$^4$த்தே (ஸம்பு$^3$த்$^3$தி$^4$ அல்ல). மற்ற இடங்களில் ஹே கே$^3$ாமன், ஹே பபிவன் என்று வரும்.

வா: வன உபஸங்க்$^3$யானம் கர்தவ்யம்

'வன்' என்ற ஒட்டையும் இதோடு சேர்த்துக்கூறவேண்டும். யஸ்த்வாயந்தம் வஸுனா ப்ராதரித்வ:

இங்கு 'க்வனிப்', 'வனிப்' என்ற இரண்டு ஒட்டுக்களையும் சுட்டுகிறது. ப்ராத: + இ (இண்) + க்வனிப் (பார்க்க 3.2.73). ப்ராத: + இ + துக் + க்வனிப் (6.1.71) = ப்ராதரித்வன். இச்சொல்லின் விளி வேற்றுமையொருமை ப்ராத ரித்வ:

வா: விப$^4$ாஷா ப$^4$வத்$^3$ ப$^4$க$^3$வத$^3$க$^4$வதாமோச் சாவஸ்ய

வேதமொழியிலும் மற்ற மொழிகளிலும் ப$^4$வத், ப$^4$க$^3$வத், அக$^4$வத் என்ற சொற்களினிறுதிபெழுத்தான 'த்'உக்கு விருப்பாக 'ரு' பதிலியாக வரும். இச்சொற்களின் 'அவ்' 'ஓ'வாக மாறும்.

ப$^4$வத்–ஹே பே$^4$ா:, ஹே பவன்; ப$^3$க$^3$வத்–ஹே ப$^4$கே$^3$ா:, ஹே ப$^4$க$^3$வன், அக$^4$வத் – ஹே அகே$^4$ா:, ஹே அக$^4$வன்.

பே$^4$ர்:, ப$^4$கோ:, அகே$^4$ா: என்றசொற்கள் இந்நூலாசிரியரே ஒரு வேளை விதிக்குப்புறம்பாக ஆக்கப்பட்டவையாகவுமிருக்கலாம் (பார்க்க 8.3.17) விளிவேற்றுமையொருமையில் மட்டுமல்லாமல் வேறு இடங்களிலும் இச்சொற்கள் காணப்படுகின்றன. காட்டாக பே$^4$ா தே$^3$வத$^3$த்தயக்$^3$ஞ த$^3$த்தௌ (விளிவேற்றுமையிருமை) பே$^4$ா தே$^3$வத$^3$த்த யக்$^3$ஞத$^3$த்த விஷ்ணுமித்ரா: (விளிவேற்றுமைப் பன்மை); பே$^4$ா ப்$^3$ராஹ்மணி (பெண்பாற் சொல்)

**8.3.2** அத்ராநுநாஸிக: பூர்வஸ்ய து வா

இச்சூத்திரத்திலிருந்து 8.3.12வரையில் – ஆனால் எந்தவொரு எழுத்து க்கு 'ரு' பதிலியாக வரும் என்று விதிக்கப்பட்டதோ அந்த வெழுத்துக்கு முன் நிற்கும் எழுத்துக்கு (உயிரெழுதது) மூக்கொலியாக உச்சரிக்கப்படும் உயிரெழுத்து (Nasalized Vowel) விருப்பாகப் பதிலியாகும். இது ஒரு அதிகார சூத்திரம்.

ஸம் + க்ருஞ் = ஸம் + ஸுட் + க்ரு (6.1.137) = ஸரு + ஸ் + க்ரு (8.3.5) = ஸ:–ஸ்–க்ரு (8.3.15)=ஸஸ்க்ரு (8.3.34) (ஸ:, ஸஸ், என்பவைகளின் 'ஸ'வின் 'அ' மூக்கொலியோடு உச்சரிக்கப்படும்)

**8.3.3** ஆதோடி நித்யம்

'ரு'வுக்கு முன் நிற்கும் 'ஆ' (ஆத்)வுக்குப்பின் 'அட்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்து வரும்போது (உயிரெழுத்து, அல்லது ஹ, ய், வ அல்லது ர) அந்த ஆவுக்கு மூக்கொலியோடு உச்சரிக்கப்படும் உயிரெழுத்து கட்டாயமாகப் பதிலியாக வரும்.

மஹான் அஸி = மஹாரு (8.3.9) + அஸி = மஹாய் அஸி (8.3.17) = மஹா அஸி (8.3.19) ('ஆ' மூக்கொலியுடன் உச்சரிக்கப்படும்) (ருக். 3.46.2) மஹா இந்த்$^3$ரோ ய ஓஜஸா (ருக் 8.6.1) தே$^3$வா அச்சாதீ$^3$வ்யுத்தைத்திரீயர்கள் இதை அனுஸ்வாமாகக் கருதுவார்கள்.

**8.3.4** அநுநாஸிகாத் பரோ அனுஸ்வார:

மூக்கொலியோடு கூடிய உயிரெழுத்தை விருப்பாக 'ரு'வுக்கு முன் நிற்கும் எழுத்துக்கு பதிலியாக்காவிட்டால், அங்கு அனுஸ்வாரம் ஆகமமாக வரும்.

ஸம் + க்ருஞ் = ஸம்–ஸுட் + க்ரு = ஸரு–ஸ்–க்ரு=ஸம்–:–ஸ் க்ரு (8.3.15) (இங்கு 'ம்' அனுஸ்வாரம்) ஸம்ஸ்–ஸ்க்ரு (8.3.36)=ஸம் ஸஸ் க்ரு (ம் அனுஸ்வாரம்) 8.3.2 மூக்கொலியோடு கூடிய உயிரெழுத்து விருப்பாகப் பதிலியாக

வருவதை விதிக்கிறது. எந்தெந்த இடங்களில் அவ்வெழுத்து பதிலியாக வரவில்லையோ அந்தந்த இடங்களில் அனுஸ்வாரம் வருமென்று கூறுகிறது இச்சூத்திரம். இச்சூத்திரத்தில் அன்ய என்ற சொல்லையுமிணைத்து விளக்க வேண்டும் அதாவது அநுநாஸிகாத் அன்ய: யோ வர்ண: மூக்கொலியல்லாத ஒருயிரெழுத்து அதாவது 'ரு'வுக்கு முன்னால் நிற்கும் மூக்கொலி பதிலியாக வருவதாக விதிக்கப்படாத ஒரெழுத்து. பும்ஸகாமா (8.3.6); ப$^{4}$வாம்ஸ் சரதி (8.3.7) இவைகளில் 'ம்' அனுஸ்வாரம்.

**8.3.5** ஸம: ஸுடி

'ஸுட்' ஆகமத்துக்கு முன்னால் நிற்கும் உபசர்க்கமான 'ஸம்' இன் 'ம்'உக்கு 'ரு' பதிலியாக வரும். ஸம்ஸ்கர்த்தா ('ம்' அனுஸ்வாரம்) ஸம்ஸ்கர்த்தா ('அம்' மூக்கொலியுடன் உச்சரிக்கப்படும் உயிரெழுத்து 'அ')

வா: ஸம் பும்ஸ்காஸாம் ஸோ வக்தவ்ய:

ஸம், பும், கான் ஆகியவைகளினிறுதியெழுத்துக்கு 'ஸ' கட்டாயமாகப் பதிலியாகும்.

ஸம்ஸ்கர்த்தா, பும்ஸ்ஸ்காமா, காம்ஸ்ஸ்கான் (இவைகளில் (ம்' அனுஸ்வாரம்) இவ்வார்த்திகத்தின்படி 'ஸம்' இன் 'ம்' க்கு 'ரு' ஒருபோதும் பதிலியாக வராது.

**8.3.6** பும: க$^{2}$ய்யம்பரே

பும் 'ஆண்' என்ற சொல்லுக்குப் பின் 'க$^{2}$ய்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்து வந்து, அதைத் தொடர்ந்து 'அம்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்து வரும்போது, 'பும்' இன் இறுதி 'ம்'உக்கு 'ரு' பதிலியாக வரும்.

பும்ஸ் + θ – காம + டாப் (4.1.4) = பும் θ + காமா = புரு காமா (8.3.4) = பும்ஸ் + காமா (8.3.34) = பும்ஸ் – காமா (8.3.2) ('ம்' அனுஸ்வாரம்)

**8.3.7** நஸ்$^{1}$ ச$^{2}$வ்ய ப்ரஸாான்

'ப்ரஸான்' என்ற சொல்லைத் தவிர்த்த மற்ற 'ந்' ஈற்றுச் சொற்களுக்குப்பின் க 'ச$^{2}$ன்' (ச$^{2}$, ட$^{2}$, த$^{2}$, ச, ட, த) எழுத்துக்கள் நின்று அவைகளுக்குப்பின் 'அம்' (உயிரெழுத்து, அரையுயிர், மூக்கொலி) வந்தால், அந்தவிறுதி 'ந்' உக்கு 'ரு' பதிலியாக வரும்.

ப$^{4}$வான் சினோதி = ப$^{4}$வாரு சினோதி பு$^{4}$லாம் ரு சினோதி (8.3.2;4) = ப$^{4}$வாம்ஸ் சிநோதி (8.3.34), ('ம்' அனுஸ்வாரம்) = ப$^{4}$வாம்ஸ்$^{1}$ சினோதி (8.4.41) அல்லது ப$^{4}$வாம் ஸ்சினோதி (ஆம், மூக்கொலியாக உச்சரிக்கப்படும் உயிர்); ப$^{4}$வாம்ஸ் ச$^{2}$ாத$^{3}$யதி அல்லது ப$^{4}$வாம்ஸ் ச$^{2}$ாதயதி (முந்தையது 'ம்' அனுஸ்வாரம், இரண்டாவதில் 'ஆம்' மூக்கொலியாக உச்சரிக்கப்படும் உயிரெழுத்து); ப$^{4}$வாம்ஷ்டீகதே, ப$^{4}$வாம் ஷ் டீ கதே; ப$^{4}$வாம்ஸ்தாதி, ப$^{4}$வாம்ஸ்தாரதி; ஆனால் ப்ரஸான் ச$^{2}$ாத$^{3}$யதி; ப்ரஸான் சினோதி; ப$^{4}$வான் கரோதி.

**8.3.8** உப$^{4}$யதா ரு சுஷு

இருக்கு வேதத்தில் 'அம்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்து க்களுக்கு முன்னால் நிற்கும் 'சவ்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்துக்களுக்கு முன் நிற்கும் சொற்களினீற்றுக்குப் பதிலியாக இரண்டுமே வரும் (உப$^{4}$யதா) அதாவது 'ந்' அல்லது 'ரு' வரும். தஸ்மின், தஸ்மிம்ஸ், தஸ்மிம்ஸ் த்வா த$^{3}$த$^{4}$ாதி (இ ரண்டாவதில் 'ம்' அனுஸ்வாரம். 3வதில் 'இம்' மூக்கொலியாக உச் சரிக்கப்படும் 'இ') சூ. 7இல் கூறப்பட்டது இருக்கு வேதத்தில் விருப்பு விதியாக்கப்பட்டிருக்கிறது. மற்ற இடங்களில் இது விருப்பாகாது. தாம்ஸ் த்வா க$^{2}$ாத$^{3}$ ஸுக$^{2}$ாதி3தான், இங்கு மூக்கொலியாக 'ஆம்' உச்சரிக்கப்படும்.

**8.3.9** தீ$^{3}$ர்க$^{4}$ாத$^{3}$டி ஸமானபாதே$^{3}$

ஒரு சொல்லினீறாக நிற்கும் 'ந்'உக்கு முன் ஒரு நெடிலும் அதற்குப்பின் 'அட்' பிரத்தியா ஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்தும் வந்து இந்த 'ந்'உம் 'அட்' எழுத்தும் ருக்வேதத்தின் ஒரே பாதத்திலமையும்போது, அந்த 'ந்'க்கு விருப்பாக 'ரு' பதிலியாக வரும்.

பரிதீ$^{4}$ந் ரதி (ருக் 9.107.19), தேவாந் அச்ச$^{2}$ாதீ$^{3}$வ்யத், மஹாந் இந்த்$^{3}$ரோயோ ஓஜஸா (ருக் 8.6.1) பரிதீ$^{4}$ந் மஹாந்த இவைகளினிறுதியுயிர் மூக்கொலியாக உச்சரிக்கப்படும். இதற்கு முந்திய சூத்திரத்தின் 'உப$^{4}$யதா' இங்கு அனுவிருத்தியாகும். ஆகவே இது ஒரு விருப்பு விதியாகும்.

ஆதி$^{3}$த்யான் ஹவாமஹே, ஆதி$^{3}$த்யான் யாசிஷாமஹே

**8.3.10** ந்ரூன் பே

'ந்ருன்' என்ற சொல்லுக்குப்பின் 'ப்' வரும்போது, அதனிறுதியெழுத்தான 'ன்' உக்கு விருப்பாக 'ரு' பதிலியாக வரும்.

ந்ரூந் பாஹி, அல்லது ப்ரீணாஹி அல்லது ந்ரூரு = ந்ரும்:= ந்ரூம்: பாஹி, ப்ரீணாஹி. ஒன்று மூக்கொலியாக உச்சரிக்கப்படும் 'ரு', மற்றது அனுஸ்வாரம்.

**8.3.11** ஸ்வதவான் பாயௌ

பாயு 'காா்ப்பவன்' என்ற சொல்லுக்கு முன் நிற்கும் ஸ்வதவான் என்ற சொல்லினீறான 'ன்'உக்கு 'ரு' பதிலியாக வரும்.

ஸ்தவாL பாயுரக்$^{3}$னே (இருக்கு 4.2.6) (ஸ்வதவரு = ஸ்வதவா:) 'ஆ' மூக்கொலியாக உச்சரிக்கப்படும்.

**8.3.12** கானாம்ரேடி$^{3}$தே

'கான்' (மாற்றுப் பெயர்) அதன் இரட்டித்தலுக்கு முன் நிற்கும் போது (ஆம்ரேடித்) அதனீற்றுக்கு 'ரு' பதிலியாக வரும்.

கான் + கான் = காரு + கான் = காம்: + கான் 98.3.4; 15) = காம்ஸ்–கான் , காம்ஸ்கான் ('ஆ' மூக்கொலியாக உச்சரிக்கப்படும் மற்றது அனுஸ்வாரம்.

**8.3.13** டே$^4$ர டே$^4$ லோப:

'ட$^4$'வுக்கு முன் நிற்கும் 'ட$^4$' கெடும். இச்சூத்திரம் பத$^3$ாதிகாரத்துக்குள்ளடங்கியதானபோதிலும், இங்கு கூறப்பட்டிருக்கும் லோபம் (கெடுதல்), அந்த 'ட$^4$' ஒரு சொல்லினீறாக அமையாதபோது தான் நிகழும்.

லிஹ் + க்த = லிட்$^4$ + த (8.2.31) = லிட்$^4$ – த$^4$ (8.2.40) = லிட்$^4$ +ட$^4$ (8.4.41) = லிθ – ட$^4$ = லீட$^4$

**8.3.14** ரோ ரி

'ர்'உக்குமுன் நிற்கும் 'ர்' கெடும்.

1. நிர் + ரக்த = நிθ + ரக் (6.3.111) = நிரக்த 'நிறமற்ற'; து$^3$ரக்த (=து$^3$ர் + ரக்த);
2. ரு + ர் = அக்$^3$னி + ஸு + ரத$^2$ + ஸு = அக்$^3$னிரு + ரத$^2$ரு = அக்னீ ரத$^2$: (8.3.15)
3. ஒரே சொல்லுக்குள் ஸ்பர்த்$^4$ + யங் – லுக் = பாஸ்பர்த்$^4$ + யங் – லுக் (7.4.83) + லங் = அட் + பா–ஸ்பார்த்$^4$ + θ + ஸிப் = அபா–ஸ்பர் த்$^4$ + θ (6.1.68) = அ–பா–ஸ்பர்த் (8.3.39) = அ பா – ஸ்பர்ரு (8.3.75) அபா–ஸ்பாθ: (8.3.75) அபாஸ்பா: 8.3.150

**8.3.15** க$^2$ரவஸானயோர் விஸர்ஜனீய:

'க$^2$ர்' பிரத்தியாஹாரத்தின் எழுத்துக்களுக்கு முன் போ அல்லது இடைநிறுத்தத்திலோ (அவஸான) நிற்கும் 'ர்'உக்கு விஸர்ஜனீய (=:) பதிலியாக வரும். வருக்ஷ + ஸு + சி$^2$த் + யக் + தே = வ்ருக்ஷ + ரு + சி$^2$த் + ய + தே (8.2.66) = வ்ருக்ஷ: சி$^2$த்$^3$யதே = வ்ருக்ஷஸ்சி$^2$த்$^3$யதே (8.3.34) வ்ருக்ஷஸ்$^1$ சி$^2$த்$^3$யதே (8.4.40) 'மரம் வெட்டப்பட்டது'

அவஸான–ராம + ஸு =ராம + ரு = ரா:; கி$^3$ர் + θ = கீ: (8.2.76) ஆனால் அக்னிர் நயதி.

**8.3.16** ரோ: ஸுபி

'ஸுப்' (7ஆம் வேற்றுமைப்பன்மையுருபு)புக்கு முன் நிற்கும் பதிலியாக வரும் 'ரு'வுக்குப் பதிலியாக விஸர்ஜனீயம் வரும். பயஸ் + ஸுப் = பயரு + ஸு = பய:ஸு; ஸர்பி:ஷ?: ஆனால், கி$^3$ர்ஷு; தூ$^4$ர்ஷு

**8.3.17** பே$^4$ா ப$^4$கே$^3$ா அகே$^4$ா அபூர்வ ஸ்யயோ அஸி

'அஸ்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்துக்களுக்கு முன் நிற்கும் (அஸி) பே$^4$ா:, ப$^4$க$^3$:, அக$^4$: ஆகிய சொற்கள் அல்லது 'அ' (குறிலும் நெடிலும்) ஆகியவைகளோடு (பதிலியாக) வரும் 'ரு'வுக்குப் பதிலியாக 'ய்' வரும். பே$^4$ாஸ் அத்ர = பே$^4$ாரு அத்ர (8.2.66) = பே$^4$ாய் அத்ர = பே$^4$ா θ அத்ர (8.3.19); ப$^4$கே$^4$ா அத்ர, அகே$^4$ா அத்ர; க + ஸு = ஆஸ்தே = கரு + ஆஸ்தே = கய் ஆஸ்தே = க ஆஸ்தே 'ய'ார் உட்கார்ந்திருக்கிறார்கள்' ப்$^3$ராஹ்மணா த$^3$த$^3$தி 'பிராம்மணர்கள்

கொடுக்கிறார்கள்' ஆனால் அக்3னிரத்ர

**8.3.18** வ்யோர் லகு4 ப்ரயத்னதர: ஸாகடாயனஸ்ய

'ப4கோய்' முதலியவைகளின் 'ய்' அ அல்லது ஆவுக்குப்பின் வரும் 'வ்' ஆகியவைகளுக்குப்பின் 'அஸ்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்துக்கள் வரும்போது, அந்த 'வ்', 'ய்'க்குப் பதிலியாக அவைகளின் உடம்படுமெய் (Glide) வரும் என்பது ஸாகடாயனரின் கருத்து.

லகு4 ப்ரயத்னதர: நெகிழ் ஒலிப்பு (Lax arficulation), உடம்படுமெய் வருதல். பே4ாய் அத்ர,; ப4கோய் அத்ர,

அகே4ாய் அத்ர; காய் ஆஸ்தே; அஸாவ் ஆதி3த்ய:

**8.3.19** லோப: ஸாகல்யஸ்ய

'அஸ்' பிரத்தியாஹாரத்தின் எழுத்துக்களுக்கு முன் நிற்கும் மேலே கூறிய சொற்களில் (அதாவது பே4ாய முதலியவைகள்) 'ய்' 'வ்' கெடும் என்பது ஸாகல்யரின் கருத்து.

பே4ா,/ப4கே3ா/அகே4ா அத்ர;

க ஆஸ்தே, அஸா ஆதி3த்ய:, அஸ்மா உத்3த4ர.

**8.3.20** ஓத: கா3ர்க்3யஸ்ய

'அஸ்' பிரத்தியாஹாரத்தின் எழுத்துக்களுக்கு முன் 'ஓத்' (ஓ)ஐத் தொடர்ந்து வரும் 'ய்' (8.3.17) நிற்கும்போது அந்த 'ய்'கெடும் என்பது கார்க்யரின் கருத்து.

பே4ா அத்ர, ப4கே3ா அத்ர

**8.3.21** உஞி ச பதே3

'அ' அல்லது 'ஆ'வுக்குப்பின் வரும் 'ய்' அல்லது 'ன்' (ஒரு சொல்லினீறாக சூ. 17இன்படி பதிலியாக வரும்)உக்குப் பின் 'உஞ்' (உ)க்குப்பின் நின்று அது (அதாவது உஞ்) ஒரு பதமாக அமையும்போது அந்த 'ய்', 'ன்' கெடும்.

தத்3 + ஸு அ + ஸு (7.2.102) = த + ஸு (6.1.97) ஸ + ஸ் (7.2.106) + உ. ஏகாக்3னி: = ஸரு உ = ஸஹ் உ=ஸ0 உ=ஸ உ ஏகாக்3னி:, ஸ உ ஏ கவிம் ஸ1தி.

இடைச் சொல்லான 'உ' (உஞ்) ஒரு பதம் இதைத்தான் இங்கு குறிக்கும்.

'வேஞ்' இலிருந்து உயிராக்கம் பெற்ற 'உஞ்'ஐ இங்கு குறிக்கவில்லை.

**8.3.22** ஹலி ஸர்வேஷாம்

சூ. 17இல் குறிப்பிட்டபடி பதிலியாக வரும் 'ய்', மெய்யெழுத்துக்கள க்கு முன் நிற்கும்போது, கெடும் என்பது எல்லா இலக்கணாசிரியர்களுடைய கருத்தாகும்.

பே4ா ஹஸதி, ப4கே4ா ஹஸதி அகே3ா ஹஸதி, பே4ாயாதி

**8.3.23** மோ அனுஸ்வார:

மெய்யெழுத்துக்களுக்கு முன் நிற்கும் சொல்லினீறான 'ம்'க்கு அனுஸ்வாரம்

பதிலியாக வரும்.

வன + அம் + க[3]ச்ச[2]ந்தி = வனம் (ம் = அனுஸ்வாரம்)

க[3]ச்சந்தி; குண்ட[3]ம் யாதி (அம் அனஸ்வாரம்) ஆனால் த்வமத்ர (த் வம் + அத்ர) உயிரெழுத்துக்குமுன் 'ம்' வருகிறது. ஆகையால் இது அனுஸ்வாரமாகாது.

க[3]ம்பதே (இங்கு சொல்லினீறாக 'ம்' வரவில்லை)

**8.3.24** நஸ்[1]சாபத[3]ாந்தஸ்ய ஜ[2]லி

'ஜ[2]ல்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்தவெழுத்துக்களுக்கு முன் நிற்கும் ஒரு சொல்லினீறு அல்லாத (அபத3ாந்தஸ்ய) 'ந்', 'ம்' என்ற எழுத்துக்களுக்கு அனுஸ்வாரம் பதிலியாக வரும்.

1. ந் பயஸ் + ஸி[1] (7.1.20) = பய +நும் + ஸ[1] + இ (7.1.72) = பயாம்ஸி (6.4.8) (ம்–அனுஸ்வாரம்)

2. ம் – ஆ + க்ரம் + ஸ்ய + தே = ஆக்ரம் ஸ்யதே.

இங்கும் 'ம்' ஒரு அனுஸ்வாரம்) அதி[4]ஜிக[4]ாம்ஸயதே ஆனால் ராஜன் பு[4]ங்கக்ஷ்வ: ரம்யதே (ன்,ம் அனுஸ்வாரமல்ல)

**8.3.25** மோ ராஜி ஸம: க்வௌ.

ராஜ் 'ஆள்' என்ற வினையோடு வரும் 'ஸம்' லிண் 'ம'வுக்கு 'ம' (என்ற எழுத்து) அவ்வினைக்குப்பின் 'க்விப்' ஒட்டிணைக்கும் போது வரும்.

ஸம் + ராஜ் க்விப் (4.3.61) + ஸு = ஸம் ராஜ் – θ (6.1.68) = ஸம்ராஷ் (8.2.36) = ஸம்ராட் (8.2.39; 4.56) இது 8.3.23க்குப் புறனடை. இங்கு அனுஸ்வாரமாவதைத் தடுப்பதற்காக 'ம்'உக்கு 'ம்' பதிலியாக வருமென்று கூறப்பட்டிருக்கிறது.

**8.3.26** 'ம'வுக்குமுன் நிற்கும் 'ஹ'வுக்கு முன்னால் நிற்கும் 'ம' வுக்கு 'ம' விருப்பாகப் பதிலியாக வரும்.

கிம் ஹ்மாலாயதி ('ம்' அனுஸ்வாரம்)

கிம் ஹ்மாலயதி (ம் அனுஸ்வராமல்ல)

வா: யவலபரே யவலா வா

ய, வ, ல, என்ற எழுத்துக்களுக்கு முன் நிற்கும் 'ஹ', வுக்கு முன் நிற்கும் 'ம'வுக்கு முறையே ய, வ, ல விருப்பாகப் பதிலியாக வரும்.

கிம் ஹ்ய: ('ம்' அனுஸ்வாரம்)

கிய்ம் ஹ்ய: ('ம்' Nasalization)

கிம் ஹ்வலயதி 'ம்' அனுஸ்வாரம்)

கின்ம் ஹ்வலயதி ('ம்' Nasalization)

கிம் ஹ்லாவய தி ('ம்' அனுஸ்வாரம்)

கில்ம் ஹ்லாவயதி ('ம்' Nasalization)

**8.3.27** நபரே ந:

நிற்கும் சொல்லினீறுதியான 'ம்'உக்குப்பின் வருஞ் சொல்லின் முத லெழுத்து 'ஹ'வாகவும் அதைத் தொடர்ந்து 'ந்'உம் வரும்போது நிற்குஞ் சொல்லினீறுக்குப் பதிலியாக 'ந்' விருப்பாக வரும்.

கிம் ஹ்றுதே, கிந் ஹஹ்தே

கத$^{2}$ம் ஹ்றுதே, கத$^{2}$ந் ஹ்றுதே (ம் அனுஸ்வாரம்)

**8.3.28** ங்ணோ: குக்டுக் ஸ'ரி

'ங்' அல்லது 'ண்' ஈற்றுச் சொற்களுக்குப்பின் 'ஸர்' (ஸ'ரி) பிரத்தி யாஹாரத்தின் எழுத்துக்கள் வரும்போது, அச்சொற்களினிறுதியில் முறையே 'குக்', 'டுக்' ஆகியவைகள் விருப்பாக ஆகமம் ஆகும்.

1. ப்ராங்ச் + ஸு = ப்ராங்ச் + θ (6.1.68) = ப்ராங் (8.2.23) = ப்ரா ங் + ஸே'தே = ப்ராங் + குக் ஸே'தே = ப்ராங்க் ஸே'தே

2. ப்ராங் ஸே'தே – ண– வண்ட் ஸே'தே, வண் ஸே'தே

**8.3.29** ட$^{3}$: ஸி து$^{4}$ட்

நிற்குஞ் சொல்லினிறுதியெழுத்து 'ட$^{3}$' ஆகவும், வருங்சொல்லின் முதலெழுத்து 'ஸ்' ஆகவும் அமையும்போது, வருஞ்சொல்லுக்குமுன் விருப்பாக 'து$^{4}$ட்' ஆகமம் ஆகும். மதுர$^{4}$லிட் + ட்ஸீத்$^{3}$தி(அ) ஸீத்$^{3}$தி

**8.3.30** நஸ்' ச

நிற்குஞ் சொல்லினிறுதியெழுத்து 'ந்' ஆகவும், வருஞ் சொல்லின் முதலெழுத்து 'ஸ்' ஆகவும் வரும்போது, வருஞ் சொல்லுக்குமுன் 'து$^{4}$ட்' விருப்பாக ஆகமம் ஆகும். மஹான் ஸர்ப:, மஹாந்த் ஸர்ப:

**8.3.31** ஸி' துக்

நிற்குஞ் சொல்லினீறு 'ந்' ஆகவும் வருஞ்சொல்லின் முதலெழுத்து 'ஸ்'' ஆகவும் ஆனால், வருஞ் சொல்லுக்கு முன் விருப்பாக 'துக்' ஆகமம் ஆகும்.

ப$^{4}$வான் ஸே'தே, ப$^{4}$வான் + துக்

ஸே'தே = ப$^{4}$வாஞ்ச் ஸே'தே (8.4.40) = ப$^{4}$வாஞ்ச் சே$^{2}$தே (8.4.63)

**8.3.32** ஙமோ ஹ்ரஸ்வாத$^{3}$சி ஙமுண் நித்யம்

'குறில்' (உயிருக்கு) உக்குப்பின் நிற்கும் 'ஙம்' பிரத்தியாஹாரத்தின் எழுத்துக்களையீறாக் கொண்ட சொல் நிற்குஞ் சொல்லாகவும், வருஞ் சொல்லின் முதலெழுத்து ஒருயிரெழுத்தாகவும் அமையும்போது 'ஙம்' பிரத்தியாஹாரத்தின் எழுத்துக்கள் (முறையே) கட்டாயமாக ஆகமம் ஆகும்.

ங் – ப்ரத்யங் + ஆஸ்தே = ப்ரத்யங்ஙாஸ்தே

ண் – வண் + ஆஸ்தே = வண்ணாஸ்தே

ந் – குர்வன் + ஆஸ்தே = குர்வந்நாஸ்தே
ஆனால் த்வமாஸ்ஸே, ப$^{4}$வானாஸ்தே ப்ரத்யங் கரோதி

**8.3.33** மய உஞோ வோ வா
'மய்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்தவெழுத்துக்களின் பின்னால் நிற்கும் 'உஞ்' ('உ' என்ற இடைச் சொல்லுக்குப் பின் ஒருயிரெழுத்து வரும்போது, அந்த 'உ'வுக்கு 'வ்' விருப்பாகப் பதிலியாக வரும்.
ஸ$^{1}$மு அஸ்து வேதீ: அல்லது ஸம் வஸ்து வேதீ: 'வேள்விக்குண்டம் நன்மை பயப்பதாக அமையட்டும்'
தது$^{3}$ அஸ்ய பரேத: அல்லது தத்வஸ்யபரேத:; கிமு ஆவபனம் அல்லது கிம்வாபனம்

**8.3.34** விஸர்ஜனீயஸ்ய ஸ:
'க$^{2}$ர்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்துக்களுக்கு முன் நிற்கும் 'விஸர் ஜனீய'த்துக்கு 'ஸ்' பதிலியாக வரும்.
வ்ருக்ஷ: சி$^{2}$த்$^{3}$யதே (8.3.15) = வ்ருக்ஷஸ் சி$^{2}$த்$^{3}$யதே = வ்ருக்ஷஸ்$^{1}$சி$^{2}$த்$^{3}$யதே (8.4.40); விப்ர: (8.2.66; 3.15) திஷ்டதி = விப்ரஸ் திஷ்டதி; வ்ருக்ஷ: டீகதே = வ்ருக்ஷஸ்டீகதே = வ்ருக்ஷஷ்டீகதே

**8.3.35** ஸ$^{1}$ர்பரே விஸர்ஜனீய:
'ஸ$^{1}$' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்துக்களுக்கு முன் நிற்கும் 'க$^{2}$ர்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்துக்கள் விஸர்கத்துக்குப்பின் வரும்போது, அந்த விஸர்கத்துக்குப் பதிலியாக விஸர்கம் வரும். அதாவது விஸர்க்கத்துக்குப்பின் நிற்கும் 'க$^{2}$ர்' எழுத்துக்களுக்குப்பின் 'ஸ$^{1}$ர்' எழுத்துக்கள் நிற்கும்போது அ ந்த விஸர்கம் மாற்றமடையாது.
ஸ$^{1}$ஸ: க்ஷுரம், புருஷ: க்ஷீரம் பிப$^{3}$தி; ஸோ$^{1}$ாப$^{4}$ன: த்ஸரு; க$^{4}$னாக$^{4}$ன: க்ஷோப$^{4}$ணஸ்$^{1}$சர்ஷணீனாம்
வ்ருக்ஷஸ்$^{1}$ ஸே$^{1}$தே, வ்ருக்ஷ: ஸே$^{1}$தே ஸ$^{1}$ரஸ் ஸரதி, ஸ$^{1}$ர: ஸரதி வ்ரு க்ஷ: ஷண்டே, வ்ருக்ஷஷ் ஷண்டே

வா: க$^{2}$ர் பதே ஸ$^{1}$ரி வா லோபோ வக்தவ்ய:
'ஸ$^{1}$ர்' பிரத்தியாஹாரத்து எழுத்துக்களுக்கு முன் நிற்கும் விஸர்க; 'ஸர்' எழுத்துக்களுக்குப்பின் 'க$^{2}$ர்' எழுத்துக்கள் வரும்போது விஸர் கத்துக்குப் பதிலியாக விஸர்கம் விருப்பாக வரும்.
வ்ருக்ஷா; ஸ்த$^{2}$ாதார: அல்லது வ்ருக்ஷா ஸ்த$^{2}$ாதார:

**8.3.37** குப்வோ ஃக் ஃபௌ ச
பின்னண்ணவொலி (கு) இதழொலி 'பு' ஆகியவைகளுக்கு முன் நிற்கும் விஸர்கத்துக்குப் பதிலியாக முறையே விருப்பாக ஃக் (ஜிஹ்வாமூலீயம்) ஃப் (உபத்$^{4}$மானீயம்) வரும்.

வ்ருக்ஷ: கரோதி, வ்ருக்ஷ:. கரோதி
வ்ருக்ஷ: பசதி, வ்ருக்ஷ ஃப²லதி

**8.3.38** ஸோ பத³ாதெ³ள

ஒரு சொல்லின் முதலெபத்தாகாத பின்னண்ணவொலி, இதழொலி களுக்கு முன்னால் நிற்கும் விஸர்கத்துக்குப் பதிலியாக 'ஸ்' வரும்.

'அபத³ாதெ³ள' பின்னண்ணவொலி, இதழொலிகள் ஒரு சொல்லின் முதலெழுத்தாக அமையாவிட்டால் அதாவது, இவ்வெழுத்துக்கள் ஒரொட்டின் முதலெத்தாகும்போது இவ்வொட்டுக்கள் 'பாஸ' கல்ப, க, காம்ய போன்றவைகளாகும்.

பயஸ்பாஸம் (= பய: + பாஸம்) (5.3.47); பயஸ் கல்பம், பஸ¹ஜ் கல்பம் (5.3.67); பயஸ்கம், யஸ¹ஸ்கம் (5.3.70); பயஸ் காமயதி யஸ¹ஸ்காம்யதி (3.1.9)

வா: ஸோபத³தாவிதி அந வ்யயஸ்யேதி வக்தவ்யம்

விஸர்கம், அவ்யயத்தின் ஒரு பகுதியாகும்போது, இவ்விதிக்குத் த டை விதிக்க வேண்டும்.

ப்ராத: கல்பம், புன: கல்பம்

வா: ரோ: காம்யே நியமார்த²ம்

'காம்ய' என்ற சொல்லுக்கு முன் நிற்கும், 'ரு'வின் பதிலியாக அமையும் விஸர்கம், 'ஸ்' ஆகமாறும் மற்ற விஸர்கங்கள் அவ்வாறாகாது.

பயஸ்காம்யதி, யஸ¹ஸ் காம்யதி அனால் கீ³: காம்யதி, தூ⁴: காம்யதி

வா: உபத்⁴மானீயஸ்ய கவர்கே³

பரத ஸகார ஆதே³ஸோ ப⁴வதீதி வக்தவ்யம்.

பின்னண்ணவொலிக்கு முன் நிற்கும் உபத்⁴மானீயத்துக்கு 'ஸ்' பதிலியாகும்.

அப்⁴யுத்³க:, ஸமுத்³க:

**8.3.39** இண: ஷ:

'இண்' (இ,உ) பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்துக்கு முன் நிற்கும் விஸர்கத்துக்குப்பின், பின்னண்ணவொலி அல்லது இதழொலியை முதலெழுத்தாகக் கொண்டவொட்டு வரும்போது அவ்விஸர்கத்துக்கு 'ஷ' பதிலியாக வரும்.

ஸர்பி: பாஸம் ஸர்பிஷ்பாஸம்,
யஜுஷ் பாஸம்; ஸர்பிஷ்கல்பம்,
யஜுஷ் கல்பம்; ஸர்பிஷ்கம், யஜுஷ்கம்,
ஸர்பிஷ் காம்யதி, யஜுஷ்காம்ய தி
ஆனால் அக்³னி: கரோதி, அக்³னி: பசதி; ஸர்பிஸ்தே

**8.3.40** நமஸ்புரஸோர் க³த்யோ:

பின்னண்ணவொலி, இதழொலி ஆகியவைகளுக்கு முன்னால் நிற்கும் 'நமஸ்' 'புரஸ்' என்ற சொற்களின் 'விஸர்கத்துக்கு அச்சொற்கள் 'கதி' எனப்படும் சொற்களாக அமையும்போது, 'ஸ்' பதிலியாக வரும்.
நமஸ்கர்த்தா. நமஸ்கர்தும், நமஸ்கர்தவ்யம்,
புரஸ்கர்த்தா, புரஸ்கர்தும், புரஸ்கர்த்வய்ம்,
ஆனால் புர: கரோதி, இங்கு புர: ஒரு பெயர்ச் சொல்.

**8.3.41** இது³து³பத⁴ண்ய சாப்ரத்யயஸ்ய
இத் (இ), உத்(உ) ஆகியவெழுத்துக்களை யீற்றயலாகக் கொண்ட ஒட்டல்லாததற்கு முன்னால் நிற்கும் விஸர்கம், பின்னண்ணவொலி, இதழொலிகள் ஆகியவைகளுக்கு முன்னால் நிற்கும்போது, அதற்கு 'ஷ்' பதிலியாக வரும்.
நிஸ் – நிஷ்க்ருதம், நிஷ்பீதம்; துஸ் – து³ஷ்க்ருதம், து³ஷ்பீதம், ப³ஹிர் - ப³ஹிஷ்க்ருதம், ப், ஆவிஸ் – ஆவிஷ்க்ருதம், சதுர் – சதுஷ்கபாலம்; ப்ராதுஸ் – ப்ராது³ஷ்பீதம்

வா: பும்முஹுஸோ: ப்ரதிஷேதே⁴ா வக்தவ்ய:
'பும்' 'முஹுஸ்' ஆகியவைகளில் இவ்விதி செயற்படாது. பும்ஸகாமா, பும்ஸ்காமா, முஹுஸ்காமா

**8.3.42** திரஸோ அன்யதரண்யாம்
'திரஸ்' (கதி' எனப்படும் சொல்) என்ற சொல்லின் விஸர்கம், பின்னண்ணவொலி, இதழொலி ஆகியவைகளுக்குப்பின் நிற்கும்போது விருப்பாக 'ஸ்' ஆகும். திரஸ்கர்தா, திரஸ்கர்தும், திரஸ்கர்தவ்யம் அல்லது திர: கர்தா, திர; கர்தும், திர; கர்தவ்யம். ஆனால் திர: க்ருத்வா காண்டம் க³த: இங்கு 'திர;' 'கதிச்' சொல் அல்ல.

**8.3.43** த்³விஸ்த் ரிஸ் சதுரிதி க்ருத்வோர்தே
த்³விஸ், த்ரிஸ், சதுர் என்ற எண்ணுப்பெயர்களின் விஸர்கத்துக்குப்பின்னால் பின்னண்ணவொலி, இதழொலிகள் வரும்போது, அச்சொற்கள் 'இவ்வளவு முறை, தடவை' என்ற பொருளைச் சுட்டும்போது, அவைகளின் விஸர்க்கத்துக்கு 'ஷ்' பதிலியாக வரும்.
த்³வி: கரோதி, த்³விஷ் கரோதி: த்ரி: கரோதி, த்ரிஷ்கரோதி: சது: கரோதி, சதுஷ் கரோதி; த்³வி பசதி, த்³விஷ்பசதி; த்ரி: பசதி, த்ரிஷ் பசதி; சது; பசதி, சதுஷ் பசதி.

**8.3.44** இஸுஸோ: ஸாமர்த்²யே
'இஸ்', 'உஸ்' வில் முடியுஞ் சொற்களின் விஸர்கம், பின்னண்ணவொலி, இதழொலிக்கு முன் நிற்கும்போது, இவ்விரண்டு சொற்களும் ஒன்றற்கொன்று தொடர்புடையதாக அமைந்தால், அந்த விஸர்கத்துக்கு 'ஷ்'

விருப்பாகப் பதிலியாக வரும்.
ஸர்பி: கரோதி, ஸர்பிஷ் கரோதி யஜு: கரோதி, யஜுஷ் கரோதி ஆனால் ஸர்ப: திஷ்டது, பிப$^{3}$த்வம் உத$^{3}$கம்

**8.3.45** நித்யம் ஸமாஸே அநுத்தரபத$^{3}$ஸ்த$^{2}$ஸ்ய
பின்னண்ணவொலி, இதழொலி ஆகியவைகளுக்கு முன் நிற்கும் 'இஸ்' அல்லது 'உஸ்'இல் முடியுஞ் சொற்களின் விஸர்கம், அச்சொற்களுக்கு முன்னால், வேறு சொற்கள் ஏதுமில்லாமமையும் (அநுத்தாபதஸ்ய) தொகையில் வரும்போது அதாவது இறுதியுறுப்பினராக நிற்காவிட்டால் அந்த விஸர்க்கத்துக்குக் கட்டாயமாக 'ஷ்' பதிலியாக வரும்.
ஸர்விஷ் குண்டி$^{3}$கா, த$^{4}$னுஷ் கபாலம்
ஸர்பிஷ்பானம், த$^{4}$னுஷ்ப$^{2}$லம்

**8.3.46** அத: க்ரு கமி கம்ஸ கும்ப$^{4}$பாத்ரகுஸ$^{1}$ா கர்ணீஷ்வனவ்யயஸ்ய க்ரு 'செய்', 'கம்' விரும்பு' கம்ஸ 'குடிக்கும் கிண்ணம்' கும்ப$^{4}$ 'பானை, ஜாடி', பாத்ர 'ஏனம்', 'பாத்திரம்'. குஸ$^{1}$ா 'சிறு மரத்துண்டு' கர்ணீ 'ஒரு வகை அம்பு, சுக்கான்' ஆகியவைகளுக்கு முன் நிற்கும் அவ்ய்யமல்லாத, 'அத்' (அ)த்தை ஈற்றயலாகக் கொண்ட அதுவேயிறுதியுறுப்பினராக அமையாத ஒரு தொகையில் நிற்கும் விஸர்கத்துக்கு 'ஸ்' கட்டாயமாகப் பதிலியாக வரும்.
க்ரு– அயஸ்கார:; கமி–அய ஸ் காம:, கம்ஸ – அயஸ்கம்ஸ:, கும்ப$^{4}$ அயஸ்கும்ப$^{4}$:
பாத்ர – அயஸ் பாத்ரம்; குஸ$^{1}$ா – அயஸ்குஸ$^{1}$ா;
கர்ணீ – அயஸ்கர்ணீ

**8.3.47** அத$^{4}$: ஸி$^{1}$ரஸீ பதே$^{3}$
ஒரு தொகையினிறுதியுறுப்பினராக நிற்காத அத$^{4}$ஸ், ஸி$^{1}$ரஸ் என்ற சொற்களக்குப்பின் 'பத$^{3}$' என்ற சொல் இறுதியுறுப்பினராக வரும் தொகையில், 'அத$^{4}$ஸ்', 'ஸிரஸ்' இன் விஸர்கத்துக்கு 'ஸ்' பதிலியாக வரும்.
அத$^{4}$ஸ்பதம், ஸிரஸ்பத$^{3}$ம், ஆனால் அத$^{4}$: பத$^{3}$ம் (இது தொகையல்ல)

**8.3.48** கஸ்காதி$^{3}$ஷு ச
பின்னண்ணவொலி அல்லது இதழொலிகளுக்கு முன் நிற்கும் 'கஸ்க' முதலிய சொற்கள் விஸர்கத்துக்கு 'ஸ்' அல்லது 'ஷ்' பதிலியாக வரும்.
இது 8.3.37க்குப் புறனடை.
கஸ்க:, கௌதஸ்குத:; ப்$^{4}$ராதுஷ்புத்ர: ஸுனஸ்கர்ண:, த$^{4}$னுஷ்கபா லம்

**8.3.49** ச$^{2}$ந்த$^{3}$ஸி வா அப்ராம்ரேடி$^{3}$தயோ:
வேதமொழியில், பின்னண்ணவொலி இதழொலிக்கு முன் நிற்கும் விஸர்கத்துக்கு விருப்பாக 'ஸ்' பதிலியாக வரும். ஆனால் 'ப்ர'வுக்கு முன்னோ அல்லது இரட்டைக்கிளவிக்கு முன்னோ நிற்கும்போது இவ்வாறு ஆகாது.

அய: பாத்ரம் அல்லது அயஸ்பாத்ரம்
ஆனால் அக்னி; ப்ரவித்3வான்;
பருஷ: பருஷ: பரி

**8.3.50** க: கரத் கரதி க்ருதி4 க்ருதேஷ்வனதி3தே:
வேதமொழியில், க: கரத், கரதி, க்ருதி4, க்ருத ஆகிய சொற்களுக்குப்பின் நிற்கும் விஸர்கத்துக்கு 'ஸ்' பதிலியாக வரும். ஆனால் 'அதி3தி' என்ற சொல்லின் விஸர்கம் அந்த
கைய மாற்றமடையாது.
விஸ்வத்ஸ்க:, விஸ்வதஸ்கரத், பபஸ்கரோதி, உருணஸ்க்ருதி4, ஸத3ஸ்க்ருதம்
ஆனால் யத2ா நோ அதி3தி: கரத்

**8.3.51** பஞ்சம்யா: பராவத்4யர்தே
5ஆம் வேற்றுமையுருபின் விஸர்கம் 'பரி' என்ற சொல்லுக்குமுன், 'மேலே' என்ற பொருளைச் சுட்டும்போது 'ஸ்' ஆகும் (வேத மொழியில்) தி3வஸ்பரி ப்ரத2மம் ஜக்3ஞே (ருக் 10.45.1) 'ஆகா சத்துக்கும் மே லே முதலில் பிறந்தான்', அக்3னி: ஹிமவதஸ் பரி (அ.4.9.9) 'பணி ம லைக்கு மேல் (உள்ள) தீ' ஆனால் அஹிரிவ பே4ாகை3: பர்யேதி ப3ாஹும் (ருக் 6.75.14) 'பாம்பைப்போல், கையைப்படத்தினால் சுற்றுகிறான்/து' (பே4ாகை3 3ஆம் வேற்றுமைப் பன்மை); தி3வ: ப்ருதி2வ்யா: பர்யோஜ உத3ப்4ருதம் (ருக் 6.47.27). ''பூமி, ஆகாயம் இரண்டையும் சுற்றி சக்தியெழுப்பப்பட்டது'' (அதி4 என்ற பொருளில் அல்ல)

**8.3.52** பாதௌ ச ப3ஹுலம்
(வேதமொழியில் 5ஆம் வேற்றுமைச் சொல்லுக்குப்பின் 'பாது' 'அவன் காப்பாற்றட்டும்' என்ற வினைச்சொல் வரும்போது, 5ஆம் வேற்றுமையுருபின் விஸர்கம் பல வகையில் 'ஸ்' ஆக மாறும்.
தி3வஸ்பாது (ருக். 10.158.1) ''அவன் சுவர்க்கத்திலிருந்து காப்பாற்றட்டும்''
பரிஷத3: பாது 'அவையிலிருந்து அவன் காப்பாற்றட்டும்'

**8.3.53** ஷஷ்ட்யா: பதி புத்ர ப்ருஷ்ட பார பத3 பயஸ்போஷே ஷு
வேத மொழியில், பதி 'தலைவன் யஜமானன், கணவன்' புத்ர 'மகன்' ப்ருஷ்ட 'முதுகு', பார 'அப்பால்' பத3 'இடம்' பயஸ் 'பால்' போஷ 'செழிப்பு' என்ற சொற்களுக்கு முன் நிற்கும் ஆறாம் வேற்றுமையுருபின் விஸர்கம் 'ஸ்' ஆக மாறும் வாசஸ்பதிம் விஸ்'வகர்மாணம் ஊதயே (ருக் 10.81.7) 'பேச்சின் மன்னனுக்கு, விஸ்வகர்மாவுக்கு, காப்புக்காக', தி3வஸ்புத்ராய ஸூர்யாய (ருக். 10.37.1) 'சுவர்க்கத்தின் புதல்வனான சூரியனுக்கு'; தி3வஸ் ப்ருஷ்டே த4ாவமானம் ஸுபர்ணம் (அ. 13.2.37) 'சுவர்க்கத்தின் முதுகில் (பின்னால்) பறக்கும் ஸுபர்ணன்'; அக3ன்ம, தமஸஸ் பாரம் (பின்னால்) 12.73). இருளுக்கும் அப்பால் சென்றுவிட்டோம்'; இளஸ்பதே3 ஸமித்4யஸே 'வேள்விக்குண்டத்தில் உன்னை (தீயை)

மூட்டப்பட்டது'; ஸூர்யம் சக்ஷு தி³வஸ்யப: 'சுவர்க்கத்தின் பாலும், கண்ணுமான சூரியனுக்கு, ராயஸ்போஷம் யஜமானே ஷு த⁴ாரய (ருக் 10.122.8) 'வேள்வியின் யஜமானர்களுக்கு மிகுந்த செல்வத்தை யளி' ஆனால் மனு: புத்ரேப்⁴ய: த³ாயம் வ்யப⁴ஜத். தனது வழிவழிச் சொத்தை தன் பிள்ளைகளுக்குப் பகிர்ந்தளித்தான். (பனு: முதல் வேற்றுமை)

**8.3.54** இட³ாயா வா

வேத மொழியில், 'பதி' முதலிய சொற்களுக்கு (8.3.53) முன் நிற்கும் 'இட³ாயா:' என்ற சொல்லின் விஸர்கத்துக்கு 'ஸ்' விருப்பாகப் பதிலியாக வரும்.

இட³ாயாஸ்பதி:, இட³ாயா: பதி:

இடாயாஸ் பதி:, இட³ாயா: பதி:

**8.3.55** அபத³ாந்தஸ்ய மூர்த⁴ன்ய:

சொல்லினீறாகாத ஒரெழுத்துக்கு (அபத³ாந்தன்ய), வனை நாவொலி (மூர்த⁴ன்ய:) 'ஷ்' வரும்.

இது ஒரு அதிகார சூத்திரம். இச் சூத்திரத்திலிருந்து தொடங்கி, இப்பாதத்தினிறுதி வரை இது அனுவிருத்தியாகும்.

'ஷ்' அனுவிருத்தியாவது, இங்கு ஏற்கெனவே மறைமுகமாகச் சுட்டப்பட்டிருந்த போதிலும், இங்கு மூர்த³ன்ய என்ற சொல் 'ட⁴' பதிலியாவதற்காக காணப்படுகிறது (பார்க்க 8.3.78) அக்ருட்⁴வம், அக்ருட்⁴வே

**8.3.56** ஸஹே: ஸாட³: ஸ

ஸஹ் 'தாங்கு' என்ற தாது, 'ஸாட்⁴' என்ற வடிவத்தையடையும்போது, அதன் 'ஸ்' வுக்கு 'ஷ்' பதிலியாக வரும். ஜலாஷாட் (ஜல + θ - ஸஹ் + ண்வி (3.2.63) = ஜலாஸாஹ் (6.3.137; 7.2.116) + ஸு = ஜலாஸாஹ் + θ (6.1.68) = ஜலாஸாட்⁴ (8.2.31) = ஜலாஸாட்³ (8.2.29); துராஷாட்³ ஆனால் ஜலாஸாஹௌ, ஜலாஸாஹம்,

**8.3.57** இண் கோ:

'இண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்துக்கள் அல்லது பின்னண்ணவொலிகள் முன்னால் நிற்கும்போது இச்சூத்திரத்திலிருந்து இந்தப் பாதத்தின் இறுதிவரையில், இச்சூத்திரம் அனுவிருத்தியாகும். இதுவும் ஒரு அதிகார சூத்திரம் சூ. 55, உடன் இச்சூத்திரம் அனுவிருத்தியாகும்.

**8.3.58** நும் விஸர்ஜனீயஸ'ர் வ்யவாயேஅபி

'ஸ்'க்கும் 'இண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்தவெழுத்துக்கள் அ ல்லது பின்னண்ணவொலிகள் ஆகியவைகளுக்கிடையில் 'நும்' ஆகமம், விஸர்ஜனீயம், 'ஸர்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த வெழுத்துக்க ள் ஆகியவைகள் நிற்கும்போதும் 'ஸ்'க்கு 'ஷ்' பதிலியாக வரும்.

1. ஸர்பிஸ் + ஸி = ஸர்பிஸ் + நும் + இ (7.1.72) = ஸர்பீம்ஷி (ம் அனுஸ்வாரம்)

2. ஸர்பிஸ் + ஸுப = ஸர்பிரு + ஸு = ஸர்பி: + ஸு = ஸர்பி: ஷு (8.3.36)

3. ஸர்பிஸ் + ஸு = ஸர்பிஷ்ஷு
'நும்' முதலியவைகள் ஒன்றேயொன்று தனியாக இடையில் நிற்கும்போதுதான் 'ஷ்' ஆகும். அவைகள் சேர்ந்து இடையில் நின்றால் அவ்வாறாகாது. காட்டாக நிஸ் + லட் = நி + நும் ஸ் + ϑ + ஸே (7.1.58, 3.4.80) நிம்ஸ்ஸே. இங்கு 'நும்' 'ஸா' எழுத்து இரண்டுமே இடையில் நிற்கின்றன.

**8.3.59** ஆதே³ஸ'ப்ரத்யயோ:
சூ. 5.7.58 ஆகியவைகளில் கூறப்பட்ட சூழல்களில், தாது பாடத்தில் 'ஷ்'வோடு குறிப்பிடப்படும் தாதுக்களுக்குப் பதிலியாக வரும் 'ஸ்' அல்லது ஒரொட்டின் பகுதியான 'ஸ'உக்கு 'ஷ்' பதிலியாக வரும்.

1. ஆதேஸ – ஷிவு (4.2) 'தை(யல்)' ஸிவ் + லிட் ஸிஷேவ, ஷ்வப்–ஸ்வப் + லிட் = ஸுஷ்வாப ப்ரத்யய – அக்³னி + ஸுப் = அக்³னிஷு

2. பின்னண்ணவொலியிடையில் நிற்கும்போது லிஹ் + லுங் = அட்–லிஹ் + க்ஸ–த் = அலிக்ஷத்

**8.3.60** ஸா'ஸி வஸி க⁴ஸீனாம் ச
ஸா'ஸ் 'கற்பி, ஆள்' வஸ் 'வசி' க⁴ஸ் 'உண்' ஆகியவைகளுக்கு முன் 'இ ண்' உயிரோ அல்லது பின்னண்ணவொலிகளோ நிற்கும்போது, இவ்வினைகளினீறான 'ஸ்'உக்குப் பதிலியாக 'ஷ்' வரும்.

1. ஸா'ஸ் + லுங் = அஸிஷத்
2. வஸ் + க்த = உஷித
3. க⁴ஸ் + லிட் = ஜக்ஷது:

**8.3.61** ஸ்தௌதிண்யோரேவ ஷண்யப⁴யாஸாத்
'ஸ்து' அல்லது தாது பாடத்தில் 'ஷ்' ஒடு குறிப்பிடப்பட்ட தாதுக்களின் இயக்கு வினைகள் (ணி) ஆகியவைகளோடு 'ஸன்' ஒட்டு இணைக்கப்படும்போது இரட்டிக்கப்பட்ட அசைகளின் 'இ' அல்லது 'உ'க்குப்பின்னால் நிற்கும் 'ஸ்'உக்குப் பதிலியாக 'ஷ்' வரும்.
1. ஸ்து = துஷ்டுஷதி (ஷ்டுன் + ஸன் + ஸப் + திப் = து–ஸ்தூ–ஷ–அ தி
2. ணிச் – ஸின் + ணிச் + ஸன் + ஸப் + திப் = ஸேவ் + இ + இட் + ஸன் + ஸப் + திப் = ஸி – ஸே – இ + இ + ஷ – அ – தி = ஸி – ஸேவ் இ + இ–ஷ–தி=ஸிஸேவ் – அய் + இ–ஷ–தி ஸிஷேவயிஷதி ஆனால் ஸிஸிஷதி.

**8.3.62** ஸ: ஸ்விதி³ ஸ்வதி³ ஸஹீனாம் ச
ஸ்வித்³ 'வியர்த்தல்', ஸ்வத்³ 'சுவை பார்', ஸஹ 'தாங்கு' ஆகியவைகளின் இபக்கு வினைகளோடு 'ஷன்' (ஸன்) ஒட்டு இணைக்கும்போது ஏற்படும் இரட்டிக்கப்பட்ட அசைகளின் 'இ' அல்லது 'உ'க்கு முன் நிற்கும் 'ஸ்'உக்கு 'ஷ்' பதிலியாக வரும்.
1. ஸ்வித்³ + ணிச் + இட் + ஸன் + ஸப் + திப் = ஸ்வேத் + இ + இட் + ஸன் + ஸப் + திப் = ஸி – ஸ்வேத்³–இ–இ–ஷ–அ–தி=ஸிஸ்வேத³யிஷதி
2. ஸிஸ்வாத³யிஷதி
3. ஸிஸாஹயிஷதி

**8.3.63** ப்ராக் ஸிதாக் அட் வ்யவாயே அபி
இச்சூத்திரத்திலிருந்து, 'ஸித' என்ற தாதுவுக்கு முன் வரை (8.3.70) (ப்ராக் ஸித), 'அட்' ஆகமம் இடையில் நின்றாலும் 'ஸ்'உக்கு 'ஷ்'பதிலியாக வரும்.
அபி⁴ஷுணோதி, அப்⁴யஷுணோத் (பார்க்க 8.3.65)

**8.3.64** ஸ்த²ாதி³ஷு அப்⁴யாஸேன அப்⁴யாஸஸ்ய
'ஸ்த²ா' முதலியவைகளில் ('ஸித்' வரையில் 8.3.65–70) 'ஸ்'உக்குப் பதிலியாக, இரட்டிக்கப்பட்டவசை இடையில் நின்றாலும், இரட்டிக்கப்பட்டதின் 'ஸ்'உக்கு பதிலியாகவும் 'ஷ்' வரும்.
1. பரி + ஸ்த²ா + லிட் = பரி – த–ஸ்தா + ஔ = பரிதஷ்டௌ

2. அபி⁴ + ஸேனா + ணிச் + ஸன் + ஸப் + திப் = அபி⁴–ஸி–ஸேன் θ–இ + இட் + ஸன் + ஸப் + திப் = அபி⁴ஷிஷே ணயிஷதி

3. பரி + ஷிச் + ஸன் + ஸப் + திப் = பரிஷி ஷிக்ஷதி (பார்க்க 61)
ஆனால் அபி⁴ ஸு ஸுஷரி, 'ஷு' என்ற தாதுவிலிருந்து தருவிக்கப்பட்ட சொல் இத்தாது 'ஸ்தா' வகுப்பைச் சேர்ந்ததல்ல.

**8.3.65** உபஸர்காத் ஸுனோதி ஸுவதி ஸ்யதி ஸ்தௌதி ஸ்தோப⁴தி ஸ்த²ாஸேன யஸேத⁴ஸிச ஸன் ஜஸ்வன் ஜாம்
ஸு 'சாறு பிழி' (4.1) ஸூ 'தூண்டு' (6.115), ஸோ 'எல்லைப்படுத்து, முடித்துவிடு' (4.39), ஸ்து 'துதி' (2.34), ஸ்துப்⁴ 'பாடு' (1.421), ஸ்த²ா 'இரு' (1.975), ஸேனய 'முற்றுகையிடு' ஸித்⁴ 'நகர், கட்டளையிடு' (1.48), ஸிவ் 'தெளி' (6.140), ஸஞ்ச் 'ஒட்டு' (1.1036), ஸ்வஞ்ச் 'தழுவு, பிடி' (1.1025) ஆகிய தாதுக்கள் 'இண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஓயிரெழுத்தில் முடியும் உபசர்க்கத்தோடு சேர்ந்து வரும் போது, இடையில் 'அட்' ஆகமம் நின்றாலும் (அதாவது உபசர்க்கத் தினிறுதி 'இ', அல்லது 'உ'வுக்கும் வினையின் முதலெழுத்தான 'ஸ்'உக் கும் இடையில்) 'ஸ்'உக்கு 'ஷ்' பதிலியாக வரும்.

1. ஸுனோதி–அபி + ஸு + லட் = அபி⁴ஷுணோதிபரிஷுணோதி,

அப்$^4$யஷுணோத், பர்யஹுணோத்

2. ஸுவதி–அபி$^4$ஷுவதி, பரிஷுவதி அப்$^4$யஷுவத், பர்யஷுவத்

3. ஸ்யதி– அபி$^4$ஷ்யதி, பரிஷ்யதி அப்$^4$ஹஷ்ஹத், பர்யஷ்யத்

4. ஸ்தௌதி – அபி$^4$ஷ்டௌதி, பரிஷ்டௌதி அப்$^4$யஷ் டௌத், பர்யஷ் டௌத்

5. ஸ்தோப$^4$தி–அபி$^4$ஷ்டோப$^4$தே; பரிஷ்டோப$^4$தே; அப்$^4$யஷ்டோப$^4$த பர்யஷ்டோப$^4$த

6. ஸ்த$^2$ா – அபி$^4$ஷ்ட$^2$ாஸ்யதி, பரிஷ்ட$^2$ாஸ்யதி, அப்$^4$யஷ்ட$^2$ாத், பர்யஷ்ட$^2$ாத் அபி$^4$தஷ்டெ$^2$ள, பரிதஷ்டௌ

7. ஸேனய–அபி$^4$ஷேணயதி, பரிஷேணயதி அப்$^4$யஷேணயத், பர்யஷேணயத், அபிஷிஷேணயிஷதி, பரிஷிஷேணயிஷதி

8. ஸேத$^4$ – அபி$^4$ஷேத$^4$தி, பரிஷேத$^4$தி, அப்$^4$யஷேத$^4$த், பர்யஷேத$^4$த்

9. ஸிச்–அபி$^4$ஷிஞ்சதி, பரிஷிஞ்சதி, அப்$^4$யஷிஞ்சத், பர்யஷிஞ்சத் அபி$^4$ஷிஷிக்ஷதி, பரிஷிஷிக்ஷதி

10. ஸஞ்ஜ்–அபி$^4$ஷஜதி, பரிஷஜதி; அப்$^4$யஷஜத் பர்யஷஜத்; அபி$^4$ஷிஷங்க்ஷதி

11. ஸ்வஞ்ஜ்–அபி$^4$ஷ்வஜதே, பரிஷ்வஜதே

அப்$^4$யஷஜ்வத, பர்யஷஜ்வத, அபி$^4$ஷிஷ்வங்க்ஷதே, பரிஷிஷ்வங்க்ஷதே

**8.3.66** ஸதி$^3$ரப்ரதே:

'ப்ரதி' என்ற உபசர்க்கத்தைத் தவிர மற்ற 'இண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரெழுத்தையீறாகக் கொண்ட உபசர்க்கத்தோடு நிற்கும் ஸத்$^3$ 'உட்கார்' என்ற தாதுவின் 'ஸ்' (அவைகளுக்கிடையில் 'அட்' ஆகமம் நின்றாலும்)'ஷ்' ஆக மாறும்.

நிஷீத$^3$தி, விஷீத$^3$தி; ந்யஷீதத், வியஷீத$^3$த், நிஷஸாத$^3$, விஷஸாத ஆனால் ப்ரதிஸீத$^3$தி

**8.3.67** ஸதன்பே$^4$:

'இண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரெழுத்தில் முடியும் உபசர்க்கத்தோடு வரும் ஸ்தன்பு$^4$ 'முட்டுக்கொடு, ஏற்றுத்தாங்கு' (9.7) என்ற வினையின் 'ஸ்'உக்குப் பதிலியாக (இவைகளிரண்டுக்குமிடையே 'அட்' ஆகமம் நின்றாலும்) 'ஷ்' வரும்.

அபி$^4$ஷ்ட$^2$ப்$^4$னாதி, பரிஷ்டப்$^4$னாதி அப்$^4$யஷ்டப்$^4$ணாத், பர்யஷ்டப்$^4$வாத்; அபி$^4$தஷ்டம்ப$^4$, பரிதஷ்டம்ப$^4$ இங்கு 'அப்ரதி' அனுவிருத்தியாகாது ப்ரதிஷ்டப்$^4$னாதி, ப்ரயஷ்டப்$^4$னாத், ப்ரதிதஷ்டம்ப$^4$

**8.3.68** அவாச்சாலம்ப$^3$னாவிதூர$^3$ர்யயோ:

'அவ' என்ற உபசர்க்கத்தோடு சேர்ந்து வரும் 'ஸ்தன்யு$^4$' தாதுவின் 'ஸ்'உக்குப் பதிலியாகவும், இச்சொல்' ஆதரவு, பக்கவலிமை' (ஆலம்பன) 'அண்மை' (அவிதூ$^3$ர்ய) என்ற பொருட்களைச் சுட்டும்போது 'ஷ்' வரும்.

1. அவஷ்டப்$^4$ய ஆஸ்தே, அவஷ்டப்$^4$ய திஷ்டதி;

2. அவஷ்டப்³த⁴ா ஸேனா; அவஷ்டப்³த⁴ா ஸ'ரத்.
ஆனால் அவஸ்தப்³தே⁴ா வ்ருஷல:ஸீ'தேன '1வ்ருஷலன் குளிரால் தாக்கப்பட்டான்'

**8.3.69** வேஸ்'ச ஸ்வனோ பே⁴ாஜனே
ஸ்வன் 'ஒலியெழுப்பு' (1.879) என்ற தாது 'வி' என்ற உபசர்க்கத்தோடு சேர்ந்து நின்று 'சப்புக் கொட்டிக் கொண்டு உண்ணுதல்' என்ற பொருளை அவ்வினை சுட்டும்போது, 'ஸ்'க்கு 'ஷ்' பதிலியாக வரும். 'அவ' என்ற உபசர்க்கத்தோடு இவ்வாறு வரும்போதும் அவ்வாறேயாகும்.
விஷ்வணதி, வ்யஷ்வணத், விஷஷ்வாண, அவஷ்வணதி, அவாஷ்வணத், அவஷஷ்வாண. ஆனால் விஸ்வனதி ம்ருத³ங்க: 'மிருதங்கம் ஒலியெழுப்புகிறது'

**8.3.70** பரிநிவிப்⁴ய: ஸேவஸிதஸய ஸிவுஸஹ ஸுட்ஸ்து ஸ்வன்ஜாம்
ஸேவ் 'ஊழியம் செய்' (1.530), ஸித 'கட்டப்பட்ட', ஸய 'கட்டுப்படு த்தும்' ஸிவ் 'தை' (துணி). (4.2), ஸஹ 'தாங்கு', 'பொறு' (1.905) மு தலில் இணைக்கப்படும் ஆகமம் 'ஸுட்', ஸ்து 'துதி', ஸ்வன்ஜ் 'தழுவு' ஆகியவைகள், பரி, நி, வி என்ற உபசர்க்கங்களோடு இணைந்து வரும்போது இத்தாதுக்களின் முதல் 'ஸ்' (இடையில் 'அட்' ஆகமம் நின்றபோதிலும்) 'ஷ்' ஆக மாறும்.

1. பரிஷேவதே, நிஷேவதே, விஷேவதே.
பர்யஷேவத, ந்யஷேவத வ்யஷேவத பரிஷிஷேவிஷதே, நிஷிஷேவிஷிதே, விஷிஷேவிஷதே
2. பரிஷித:, விஷித:, நிஷித:,
3. பரிஷய: நிஷய:, விஷய:
4. பரிஷீவ்யதி, நிஷீவ்யதி, விஷீவ்யதி; பர்யஷீவ்யத், ந்யஷீவ்யத், வ்ய ஷீவ்யத் அல்லது பர்யஸீவ்யத், நயஸீவ்யத், வ்யஸீவித்
5. பரிஷஹதே நிஷஹதே, விஷஹதே; பர்யஷஹத, ந்யஷஹத, வ்ய ஷஹத
6. பரிஷ்கரோதி, பர்யஷ் கரோத்
7. பரிஷ்டௌதி, நிஷ்டௌதி, விஷ்டௌதி, பர்யஷ்டௌத், ந்யஷ்டௌத், வ்யஷ்டௌத் அல்லது பர்யஸ்தௌத், ந்யஸ்தௌத், வயஸ்தௌத்
8. பரிஷ்வஜதே, நிஷ்வஜதே, விஷ்வபஜதே; பர்யஷ்வஜத, (அ) பர்யஸ்வஜத

**8.3.71** ஸிவாதீ³னாம் வாட்³வ்யவாயே அபி
மேற்சூத்திரத்தில் கொடுக்கப்பட்ட வினைகளில் 'ஸிவ' முதலியவைக ளின் 'ஸ்' உக்கு 'அட்' ஆகமம் இடையே நின்றாலும் 'ஷ்' ஆக மாறும். காட்டுக்கள் மேற்சூத்திரத்தினடியில் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**8.3.72** அனு வி பர்யபி⁴நிப்⁴ய: ஸ்யந்த³தே அப்ராணிஷு
ஸ்யந்த் 'ஓடு, பாய்' (1.798) என்ற தாது அனு, வி, பரி, அபி⁴, நி, ஆகிய

உபசர்க்கங்களோடிணைத்து நின்று அத்தாது வின் கர்த்தா உயிரினங்களைச் சுட்டாவிட்டால் (அப்ராணிஷு) அவ்வினையின் 'ஸ்'உக்கு 'ஷ்' விருப்பாகப் பதிலியாக வரும். அனுஷ்யந்த'தே (அதற்குப்) பின் ஓடுகிறது. விஷ்யந்த[3]தே 'நிரம்பி வழிகிறது' பாஷ்யந்த'தே 'எல்லாவிடங்களையும் சுற்றி ஓடுகிறது'. அபி[4]ஷ்யந்த[3]தே (அதை நோக்கி) ஓடுகிறது' நிஷ்யந்த[3]தே 'சொட்டுகிறது' அல்லது அனுஸ்யந்த[3]தே, விஸ்யந்த[3]தே, பரிஸ்யந்த[3]தே, அபி[4]ஸ்யந்த[3]தே. ஆனால் அனுஸ்யந்த[3]தே மத்ஸ்ப உத[3]கே, 'மீன் தண்ணீரில் ஓடுகிறது'
இத்தாதுவின் கர்த்தா, உயிரினம் உயிரில் இனம்
ஆகியவைகளினாலாக்கப்பட்ட தொகையாக அமையும்போது 'ஷ்' பதிலியாவது விருப்பாகும்.
அனுஸ்யந்தே[3]தே அல்லது அனுஷ்யந்தே[3]தே மத்ஸ்யோத[3]கே, 'மீன், தண்ணீர் இரண்டும் ஓடுகின்றன'

**8.3.73** வே: ஸ்கந்தே[3]ரணிஷ்டாயாம்

ஸ்கந்த்[3] 'தாவு' என்ற தாது 'வி' என்ற உபசர்க்கத்துடன் சேர்ந்து வரும்போது அத்தாதுவின் 'ஸ்'உக்கு விருப்பாக 'ஷ்'விருப்பாக 'ஷ்' பதிலியாக வரும். ஆனால் அத்தாது நிஷ்டாவொட்டுக்களுக்குமுன் நிற்கும்போது (அநிஷ்டாயாம் = க்த க்தவது) அவ்வாறாகாது.
விஷ்கந்தும், விஸ்கந்தும், விஷ்கந்தவ்யம், விவ்கந்தவ்யம் ஆனால் விஸ்கந்த: (வி–ஸ்கந்த்[3] + க்த)

**8.3.74** பரேஸ்[1] ச

'ஸ்கந்த[3]' என்ற வினை 'பரி' என்ற உபசர்க்கத்தோடு சேர்ந்து வரும்போதும், இதன் 'ஸ்' உக்கு 'ஷ்' விருப்பாகப் பதிலியாக வரும்.
பரிஷ்கந்தும், பரிஸ்கந்தும்; பரிஷ்கந்தவ்பம், பரிஸ்கந்தவ்பம் பரிஷ்கண்ண:, பரிஸ்கன்ன: முந்திய சூத்திரத்தில் காணப்படும் 'அநிஷ்டாயாம்' இங்கு தொடராது.

**8.3.75** பரிஸ்கந்த[3]: ப்ராச்யப[4]ரதேஷு

கிழக்குப் பரத நாட்டில், பரிஸ்கந்த[3]: 'வண்டியின் பக்கமாக ஓடும் என்ற பொருளில் 'ஷ்' இல்லாமல் ஓடும் சேவகன்' (விதிக்குப் புறம்பான சொல்) காணப்படுகிறது.

**8.3.76** ஸ்பு[2]ரதி ஸ்பு[2]லத்யோர் நிர்நிவிப்[4]ய:

நிஸ், நி, வி என்ற உபசர்க்கங்களோடு வரும் ஸ்பு[2]ர், ஸ்பு[2]ல் 'துடித்தல், பளிச்சிடு' என்ற தாது வரும்போது அத்தாதுவின் 'ஸ்'உக்கு விருப்பாக 'ஷ்' வரும்.
நிஷ்ஷ்பு[2]ரதி, நிஸ்ஸ்பு[2]ரதி; நிஷ்பு[2]ரதி, நிஸ்பு[2]ரதி; விஷ்பு[2]ரதி, விஸ்பு[2] ரதி; நிஷ்ஷ்பு[2]லதி, நிஸ்ஸ்பு[2]லதி, நிஷ்பு[2]லதி, நிஸ்பு[2]லதி; விஷ்பு[2]லதி, விஸ்பு[2]லதி.

**8.3.77** வே: ஸ்கப்4னாதேர் நித்யம்

'வி' என்ற உபசர்க்கத்தோடு வரும் ஸ்கப்4 (ஸ்கன்பு2 9,8 முட்டுக்கொடு, தாங்கு) என்ற தாதுவின் 'ஸ்' கட்டாயமாக 'ஷ்' ஆகும்.
விஷ்கப்4நாதி, விஷ்கம்பி4தும், விஷ்கம்பி4தா, விஷ்கம்ப4:

**8.3.78** இன: ஷீத்4வம் லுங் லிட'ாம் தே4ா அங்காத்

'இண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த உயிரெழுத்தையீறாகக் கொண்ட தாதுக்களுக்குப்பின்னிணைக்கப்படும் ஷீத்4வம் (லிங் இன் பதிலி), 'லுங்'இன் 'த்4வம்' 'லிட்'டின் 'த்4' ஆகியவைகளுக்குப் பதிலியாக (அதற்கொப்பான) வளைநாவொலி வரும். ச்யோஷீட்4வம் (<ச்யு); லுங்–அச்–யோட்4வம்; லிட் சக்ருட்4வே

**8.3.79** விப4ாஷேட:

'இண்' பிரத்தியாஹாரத்தின் ஒருயிரெழுத்தையீறாகக் கொண்ட தாதுக்களுக்குப்பின் வரும் ஷீத்4வம், 'லுங்' 'லிட்' ஆகியவைகளின் 'த்'க்கு விருப்பாக வளைநாவொலி, இவைகளோடு 'இட்' ஆகமம் வரும்போதும், பதிலியாகும்.
பூ–பவிஷீட்4வம், பவிஷீத்4வம்
லுங்–அபவிட்4வம், அபவித்4வம்
லிட்–புபுவிட்4வே, புபிவித்4வே

**8.3.80** ஸமாஸே அங்கு3லே: ஸங்க3:

அங்கு3லி 'விரல்' என்ற சொல்லுக்குப்பின் ஸங்க3 'ஒட்டுதல்' என்ற சொல்லைச் சேர்த்து ஒரு தொகையாக்கும்போது, 'ஸங்க3' என்ற சொல்லின் முதலில் நிற்கும் 'ஸ்'வுக்கு 'ஷ்' பதிலியாக வரும்.
அங்கு3லிஷங்க4: 'விரலோடு ஒட்டிக் கொள்தல்', அங்கு3லி ஸங்க3ா: யவாகூ3: 'விரல்களோடு ஒட்டிக்கொள்ளும் அரிசி உணவு'
ஆனால் அங்கு3லே: ஸங்க3ம் பஸ்'ய

**8.3.81** பீ4ரோ: ஸ்த2ானம்

பீ4ரு 'பயங்கொள்ளி, கோழை' என்ற சொல்லுக்குப்பின் தொகையாக்கும்போது 'ஸ்தான' வின் 'ஸ்'உக்கு 'ஷ்' பதிலியாகும்.
பீ4ருஷ்ட2ானம்

**8.3.82** அக்3னே: ஸ்துஸ்தோம ஸோமா:

ஸ்து 'புகழ்கிறவன்', ஸ்தோம 'புகழ்ச்சி' ஸோம 'ஒரு கடவுளின் பெயர், ஒரு பானத்தின் பெயர்' என்ற சொற்கள் 'அக்3னி' என்ற சொல்லுக்குப்பின் ஒரு தொகையில் வரும்போது. இச்சொற்களின் முதலெழுத்தான 'ஸ்'உக்கு 'ஷ்' பதிலியாக வரும்.
அக்3னிஷ்டுத 'அக்னியைப் புகழ்தல், அக்னிஷ்டோம என்ற யாகத்தின் முதல்

நாள்', அக்னிஷ்டோம: 'ஒரு யாகத்தின் பெயர்', அக்னீஷோம: 'அக்னியும் ஸோமனும்' (கடவுளர்களின் பெயர்கள்'

'ஸோம'வுக்கு முன்நிற்கும் 'அக்[3]னி'யினிறுதியெழுத்தான 'இ' நெடிலாகும். இந்த ஈ'க்குப்பின் வரும் 'ஸ்'தான் 'ஷ்' ஆகும். மற்றவிடங்களில் அவ்வாறாகாது. ஆகையால் அக்[3]னிஸோமௌ, மாணவகௌ:, அக்[3]னிஸோமௌ திஷ்டத:

**8.3.83** ஜ்யோதி ராயுஷ: ஸ்தோம:

'ஜ்யோதி 'வெளிச்சம்', ஆயுஸ் 'ஆயுள்' என்ற சொற்களுக்குப் பின் ஸ்தோமஎன்ற சொல்லிணைத்துத் தொகையாக்கும்போது, 'ஸ்தோம'வின் 'ஸ்'க்கு 'ஷ்' பதிலியாக வரும். ஜ்யோதிஷ்டோம:, ஆயுஷ்டோம: 'யாகங்களின் பெயர்கள்'

**8.3.84** மாத்ரு பித்ருப்[4]யாம் ஸ்வஸா

'மாத்ரு', 'பித்ரு' என்ற சொற்களுக்குப்பின் 'ஸ்வஸ்ரு' என்ற சொல் சேர்ந்து ஆக்கப்படும் தொகையில், 'ஸ்வஸ்ரு'வின் 'ஸ்'உக்கு 'ஷ்' பதிலியாக வரும்.
மாத்ருஷ்வஸா–'தாயின் சகோதரி'
பித்ருஷ்வஸா–'தந்தையின் சகோதரி'

**8.3.85** மாது: பிதுர்ப்[4]யாமன்யதரஸ்யாம்

மாது: 'தாயின்', பிது: 'தந்தையின்' என்ற சொல்லுக்குப் பின் 'ஸ்வஸ்ரு' என்ற சொல்வரும்போது அதன் முதலெழுத்தான 'ஸ்'உக்கு 'ஷ்' விருப்பாகப் பதிலியாக வரும்.
மாது: ஷ்வஸா, மாது: ஸ்வஸா
பிது: ஷ்வஸா, பிது: ஸ்வஸா.

**8.3.86** அபி[4]நிஸ: ஸ்தன: ஸ'ப்[3]த[3]ஸம்க்[3]ஞாயாம்

ஸ்தன 'ஒலியெழுப்பு' என்ற தாது அபி[4] + நிஸ் என்ற உபசர்க்கங்களோடு நின்று அது இலக்கணத்தின் ஒரு கலைச் சொல் என்று பொருள்படுமானால் ('ஸப்[3]த[3]ஸம்க்[3]ஞாயாம்) 'ஸ்தன'வின் 'ஸ்'க்கு விருப்பாக 'ஷ்' பதிலியாக வரும். அபி[4]நிஷ்டான: அல்லது அபி[4]நிஸ்தான: விஸர்ஜனீய: 'மறைந்து விடும் ஒரெழுத்து, விஸர்கம்; ஆனால் அபி[4]நிஸ்தனதி ம்ருத[3]ங்க: 'உரக்கவொலியெழுப்பும் மிருதங்கம்'

**8.3.87** உபஸர்க[3]ப்ராது[3]ர்ப்[4]யாமஸ்திர் யச் பர:

'அஸ்' தாதுவுக்குப்பின் 'ய்' அல்லது அச் (உயிரெழுத்து) நின்று, அத்தாதுவுக்கு முன் 'இண்' பிரத்தியாஹாரவெழுத்தில் முடியும் ஒரு உபசர்கமோ அல்லது 'ப்ராது[3]ர்' என்ற சொல்லோ நின்றால், அதன் 'ஸ்' க்குப் பதிலியாக 'ஷ்' வரும். அபி[4]ஷந்தி நிஷந்தி, விஷந்தி (அபி/நி/வி/ + அஸ் + அந்தி) ப்ராது[3]: ஷந்தி; அபி[4]ஷ்யாத், நிஷ்யாத், விஷ்யாத், ப்ராது: ஷ்யாத்

ஆனால் த³தி⁴ ஸ்யாத் (இங்கு 'ஸ்'க்கு முன் நிற்பது உபசர்க்கமல்ல)

**8.3.88** ஸுவிநிர் து³ர்ப்⁴ய: ஸுபி ஸூதி ஸமா:

ஸு, வி, நிர், து³ர் என்ற உபசர்க்கங்களுக்குப்பின் ஸுப் (ஸ்வப் 2.59) 'படுத்துக்கொள்' ஸூதி 'பிள்ளைப்பேறு' ஸம 'ஈடு' என்ற சொற்கள் வரும்போது அவைகளின் 'ஸ்' உக்கு 'ஷ்' பதிலியாக வரும்.

ஸுஷு ப்த:, விஷுப்த:, நி:ஷுப்த:, து:ஷுப்த: ஸுஷூதி: விஷூதி:, நி:ஷூதி:, து³:ஷூதி:, ஸுஷமம், விஷமம், நி:ஷமம், து³:ஷமம்

**8.3.89** நிநதீ³ப்⁴யாம் ஸ்நாதே: கௌஸலே

உபசர்க்கம் நி அல்லது நதீ 'ஆறு' என்ற சொற்களுக்குப்பின் வரும் ஸ்நா 'குளி' என்ற தாதுவுக்குப்பின் நின்று வல்லுநர் (கௌஸலே) என்ற பொருளை அது சுட்டும்போது 'ஸ்'க்கு 'ஷ்' பதிலியாக வரும். நிஷ்ணாத: 'வல்லுநர்' நதீஷ்ண: (நதீ³ + θ + ஸ்னா + க (3.2.4) = நதீ + ஸ்நθ + அ (6.4.64) 'வல்லுநர்'

**8.3.91** ஸூத்ரம் ப்ரதிஷ்ணாதம்

ஒரு 'சூத்திரம்' என்ற பொருளைச் சுட்டும் 'ப்ரதிஷ்ணாத' என்ற சொல் 'ப்ரதி' என்ற உபசர்க்கத்தோடு 'ஸ்நா' என்ற தாது நின்று, 'ஸ்' உக்கு 'ஷ்' பதிலியாக வரும், ஒரு நிபாதனம் 'ப்ரதிஸ்நாத' என்ற சொல் 'தூய்மைப்படுத்திய' என்ற பொருளைச் சுட்டும் அப்போது 'ஸ்' 'ஷ்' ஆகாது.

**8.3.91** கபிஷ்ட²லோ கே³ாத்ரே

'வழிமரபு' (கே³ாத்ர) என்ற பொருளைச் சுட்டும் கபிஷ்ட²ல என்ற சொல் ஒரு நிபாதனம்.

ஆனால் கபிஸ்த²ல 'குரங்குகள் நிறைந்த இடம்'

**8.3.92** ப்ரஷ்டே²ா அக்³ரக³ாமினி

'தலைவன்' முன்னால் செல்பவன்' (அக்³ர காமினி) என்ற பொருளைச் சுட்டும் 'ப்ரஷ்ட²' என்ற சொல் நிபாதனமாகும். ஆனால் ப்ரஸ்தே² ஹிமவத: 'இமயமலையினுச்சி'; ப்ர ஸ்த²; 'ஓரளவு'

**8.3.93** வ்ருக்ஷாஸனயோ: விஷ்டர:

ஒரு மரம் (வ்ருக்ஷ) இருக்கை (ஆஸன) என்ற பொருளைச் சுட்டும். விஷ்டா என்ற சொல் நிபாதனம். வி + ஸ்த்ரு = விஷ்டா: ('ஷ்' நிபானம்) ஆனால் விஸ்தர 'விரிவு'

**8.3.94** ச²ந்தே³ாநாம்னி ச

ஒரு சீரின் பெயரைக் குறிக்கும்போதும் 'விஷ்டார' என்று விதிக்குப்புறம்பான வகையில் ஆக்கப்பட்ட சொல் காணப்படும்.

ஆனால் படஸ்ய விஸ்தார: 'துணியின் அகலம்'

**8.3.95** க$^{3}$வியுதி$^{4}$ப்$^{4}$யாம் ஸ்தி$^{2}$ர:

க$^{3}$வி, யுதி$^{4}$ என்ற சொற்களுக்குப்பின் நிற்கும் ஸ்தி$^{2}$ர 'உறுதியான' என்ற சொல்லின் 'ஸ்'உக்கு 'ஷ்' பதிலியாக வரும்.

க$^{3}$விஷ்டிர:, யுதி$^{4}$ஷ்டி$^{2}$ர: 'பெயர்கள்'

'ஸ்தி$^{2}$ர' என்ற சொல்லுக்கு முன் நிற்கும் க$^{3}$வி, யுதி$^{4}$ என்ற 7ஆம் வே ற்றுமைச் சொற்களின் 7ஆம் வேற்றுமையுருபு சூ. 6.3.9படி கெட்டிருக்க வேண்டும். அது கெடவில்லை. இது நிபாதனம்.

**8.3.96** விகு ஸ$^{1}$மி பரிப்$^{4}$ய: ஸ்த$^{2}$லம்

வி, கு, ஸ$^{1}$மி, பரி என்பவைகளுக்குப் பின் வரும் 'ஸ்த$^{2}$ல' என்ற சொல்லின் 'ஸ்'உக்கு 'ஷ்' பதிலியாக வரும்.

விஷ்ட$^{2}$லம் 'நெடுந்தொலைவிலுள்ள இடம்', குஷ்ட$^{2}$லம் 'கெட்ட இடம்', ஸ$^{1}$மிஷ்ட$^{2}$லம் 'ஸமி என்ற மரங்கள் நிறைந்த இடம்', பரிஷ்ட$^{2}$லம் 'சுற்றியுள்ள இடம்'

**8.3.97** அம்ப$^{3}$ாம்ப$^{3}$கே$^{3}$ா பூ$^{4}$மி ஸவ்யாபத்$^{3}$வி த்ரி கு ஸே$^{1}$கு ஸ$^{1}$ங்கு அங்கு$^{3}$மஞ்ஜி புஞ்ஜி பரமே ப$^{3}$ர்ஹிர் தி$^{3}$வ்ய க்$^{3}$னிப்$^{4}$ய: ஸ்த$^{2}$:

அம்ப$^{3}$, ஆம்ப$^{3}$, கே$^{3}$ா 'மாடு', பூ$^{4}$மி, ஸவ்ய 'இடது', அப 'அப்பால்', த்$^{3}$வி 'இரண்டு', த்ரி 'மூன்று', குஸே 'குஸ எனப்படும் புல்லின்மேல்', கு 'கெட்ட', ஸ$^{1}$ங்கு 'முளை ஆப்புக்கட்டை' அங்கு$^{3}$ 'விரல்' மஞ்ஜி 'பூக்கொத்து' புஞ்ஜி 'திரள்' பரமே 'உச்சியில்', ப$^{3}$ர்ஹிஸ் 'புல்வகை' தி$^{3}$வி 'ஆகாசத்தில்', அக்$^{3}$னி என்ற சொற்களுக்குப்பின் வரும் ஸ்த$^{2}$வின் 'ஸ்' உக்கு 'ஷ்' பதிலியாக வரும்.

1-2 அம்ப$^{3}$ஷ்ட$^{2}$, ஆம்ப$^{3}$ஷ்ட$^{2}$ 'ஒரு நாடு' அதில் வசிக்கும் மக்கள் ஆகியவைகளின் பெயர்'

3- கே$^{3}$ாஷ்ட$^{2}$ 'மாட்டுத் தொழுவம் அல்லது பட்டி'

4- பூ$^{4}$மிஷ்ட$^{2}$ 'பூமியிலிருக்கும்'

5- ஸவ்யேஷ்ட$^{2}$: 'இடது பக்கத்தில்நிற்கும்'

6- அபஷ்ட$^{2}$ 'அங்குசத்தின் முனை'

7- த்$^{3}$விஷ்ட$^{2}$ 'இரண்டடிங்களில் வசிக்கும்'

8- த்ரிஷ்ட$^{2}$ 'மூன்றிடங்களில் வசிக்கும்'

9- குஸே$^{1}$ஷ்ட$^{2}$ 'குசம்' என்ற புல்லில் நிற்கும்

10- குஷ்ட$^{2}$ 'ஒரு செடியின் பெயர்'

11- ஸங்குஷ்ட$^{2}$ 'ஆப்புக்கட்டையில் வைக்கப்பட்ட'

12- அங்கு$^{3}$ஷ்ட 'கட்டைவிரல்'

13- மஞ்ஜிஷ்ட 'மஞ்சள் மலர்களையுடைய பூண்டுவகைச் செடி'

14- புஞ்ஜிஷ்ட$^{2}$ 'திரட்டிய, குவித்த'

15- பரமேஷ்ட$^{2}$ 'உயர்வான'

16- ப$^{3}$ர்ஹிஷ்ட$^{2}$ 'யாகத்திற்கான புல்லின்மேல் வைக்கப்பட்ட'

17- தி$^{3}$விஷ்ட$^{2}$: 'சுவர்க்கத்தில் வசிக்கும்'

18- அக்[3]னிஷ்ட[2] 'தீயில் வைக்கப்பட்ட'

வா: ஸ்த[2]ால்தி[2]ன் ஸ்த[2]ருணாமிதி வக்தவ்யம்
ஸ்த[2]ா, ஸ்தி[2]ன், ஸ்த்[2]ரு ஆகியவைகளுடனும் இத்தகைய மாற்றம் ஏற்படும்.
ஸவ்யேஷ்டா:, பரமேஷ்டா, ஸவ்யேஷ்டா, ஸாரதி[2]:

**8.3.98** ஸுஷாமாதி[3]ஷு ச
ஸுஷாமன் 'அழகிய பாட்டு' என்ற சொல்லின் தொடங்கும் வகுப்பைச் சேர்ந்த சொற்களிலும் 'ஸ்'வுக்கு 'ஷ்' பதிலியாக வரும்.
ஸு ஸாமன் ஸுஷாமன் 'ஒருவனின் பெயர்' து[3]:ஷாமன் 'மோசமான பாட்டு'

**8.3.99** ஏதி ஸம்க்[3]ஞாயாமக[3]ாத
'ஏத்'(ஏ) என்றவெழுத்துக்கு முன் நிற்கும் 'ஸ்', 'இண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரோ அல்லது 'க்[3]'ஐத் தவிர்த்த மற்ற பி ன்னண்ணவொலிகளோ அந்த 'ஸ' உக்கு முன்னால் நிற்கும்போது அச்சொல் ஒரு பெயரைச் சுட்டும்போது 'ஸ்' 'ஷ்' ஆக மாறும்.
ஹரிஷேண, ஜானுஷேண 'பெயர்கள்' ஆனால் ஹரிஸக்த[2]ம, (ஏ தொடரவில்லை)
ப்ருது[2]ஸேன: ராஜா 'பெரிய படையைக் கொண்ட அரசன்'
விஷ்வக்ஸேன ('க்[3]' உக்குப்பின் 'ஸ் வருகிறது)

**8.3.100** நக்ஷத்ராத்[3] வா
'ஸ்'உக்கு முன் நிற்கும் சொல் ஒரு நட்சத்திரத்தின் பெயராகும் போதும் மேலே கூறிய சூழலில் 'ஸ்'க்குப் பதிலியாக 'ஷ்' விருப்பா க வரும்.
ரோஹிணிஷேண:, ரோஹிணிஸேன: ப[4]ரணிஷேண:, ப[4]ரணிஸேன: ஆனால் ஸ்தபி[4]ஷக் ஸேன: (க்[3]' முன்னால் நிற்கிறது)

**8.3.101** ஹ்ரஸ்வாத்தாதெ[3]ள தத்[3]தி[4]தே
'இண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த குறில் (உயிருக்கு)ப்பின்னா லும், 'த்' இல் தொடங்கும் தத்திதவொட்டுக்கு முன்பும் நிற்கும் 'ஸ்' உக்கு 'ஷ்' பதிலியாக வரும்.
'த்' இல் தொடங்கும் தத்திதவொட்டுக்கள் வருமாறு: தரப், தமப் , தய த்வ, தஸ, த்யப் தரப்–ஸர்பிஷ்டரம் (ஸர்பிஸ் + தரப்); தமப்ஸர்பிஷ்டமம்
தய்–சதுஷ்டயே ப்[3]ராஹ்மணானாம் நிகேதா:,
த்வ–ஸர்பிஷ்ட்வம்; தல்–ஸாபிஷ்டா; தஸ்–ஸர்பிஷ்ட: த்யப்–ஸர்பிஷ்ட் யோ வர்த்[3]த[4]தே ஆனால் கீ[3]ஸ் தரா, தூர்[4]ஸ்தரா

வா: திஙந்தஸ்ய ப்ரதிஷேதே[4]ா வக்தவ்ய
வினைச்சொல்லுக்குப்பின் அத்தகைய தத்திதவொட்டுக்களின் நிற்கு ம்போது அவ்வாறாகாது

பி⁴ந்த் த்³யுஸ் தராம்

**8.3.102** நிஸஸ்த பதாவனா ஸேவனே

தப் 'சூடாக்கு' (1.1034) என்ற தாது 'நிஸ்' என்ற உபசர்க்கத்துடன் சேர்ந்து நின்று, 'திரும்பத் திரும்பச் செய்தல்' என்ற பொருளை அவ்வினை காட்டாகமையும்போது 'நிஸ்' இன் 'ஸ்'உக்கு 'ஷ்' பதிலியாக வரும்.
நிஷ்தபதி ஸுவர்ணம் 'தங்கத்தை ஒரே ஒரு முறை சூடாக்குகிறான்'
ஆனால் நிஸ்தபதி ஸுவர்ணம், 'தங்கத்தை அடிக்கடி சூடாக்குகிறான்'

**8.3.103** யுஷ்மத்தத்ததக்ஷு: ஷ்வந்த: பாத³ம்

'இண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரெழுத்தைத் தொடர்ந்து நிற்கும் 'ஸ்' அதற்குப்பின் 'த்'ஐ முதலில் கொண்ட 'யுஷ்மத்' என்ற மாற்றுப் பெயரின் பதிலி தத், ததக்ஷு: ஆகியவைகள் வரும்போது 'அந்தஸ்' ஒரு செய்யுளின் பாதத்துக்குள்ளடங்கி நிற்கும்போது 'ஸ்'உக்கு 'ஷ்' பதிலியாக வரும்.

1. யுஷ்மதாதே³ஸ – த்வம், த்வாம், தே,
தவ–அக்³னிஷ்ட்வம் நாமாஸித்;
த்வாம்–அக்னிஷ்ட்வா வர்த⁴யாமஸி,
தே–அக்னி³ஷ்டே விஸ்வமானய
தவ–அப்ஸ்வக்³னே ஸதி⁴ஷ்டவ

2. தத்–அக்³னிஷ்டத்³விஸ்'வமாப்ருணாதி

3. ததக்ஷு:–த்³யாவாப்ருதி²வீ நிஷ்டதக்ஷு:
ஒரு பாதத்துக்குள் அமையாவிட்டால் யந்ம ஆத்மனோ மிந்த³ாபூ⁴ த³க³னி தத் புனராஹ ஜாதவேத³ா விசர்ஷணி:

**8.3.104** யஜுஷ்யேகாஷாம்

மேற்கூறிய மாற்றம், யஜுர்வேதத்திலும் ஏற்படுமென்பது ஒரு சா ராரின் கருத்து.
அர்சிபிஷ்ட்வம், அர்சிபிஸ்த்வம்
அக்னி³ஷ்டே அக்³ரம், அல்லது அக்³னிஸ்தே அக்³ரம்; அக்னிஷ்டத் அக்³னிஸ்தத், அக்³னிஷ்டதக்ஷு; அக்³னிஸ் ததக்ஷு:

**8.3.105** ஸ்துதஸ்தோமயோஸ்'ச²ந்த³ஸி

வேதமொழியில், ஸ்துத, 'புகழப்பட்ட' ஸ்தோம 'புகழ்ச்சி' என்ற சொற்களின் 'ஸ்' மேலே கூறப்பட்ட சூழலில் 'ஷ்' ஆகமாறுமென்பது ஒரு சாராரின் கருத்து.
த்ரிபி⁴ஷ்டு தஸ்ய, த்ரிபி⁴ஸதுதஸ்ய;

கே3ாஷ்டோமம் ஷோட3ஸினம்;
கே3ாஸ்தோமம் ஷோட3ஸினம்;

**8.3.106** பூர்வ பத3ாத்
வேதமொழியில், 'இண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரெழுத்தில் முடியுஞ் சொற்களுக்குப்பின் வரும் 'ஸ்' உக்கு 'ஷ்' பதிலியாகுமென்பது ஒரு சிலரின் கருத்து. த்3விஷந்தி4:, த்3விஸந்தி4:; த்ரிஷந்தி4:, த்ரிஸந்தி4:; மது4ஷ்டானம், மது4ஸ்த2ானம்:, த்3விஷாஹஸ்ரம், த்3விஸாஹஸ்ரம்:
இங்கு 'பூர்வபத' என்பது தொகையின் முதலுறுப்பின்ரை மட்டும் குறிக்கவில்லை. முன்னால் நிற்கும் சொல் என்றும் சுட்டும். ஆகையால் த்3வி: ஷம்ருத்3த4த்வாய: த்3வி: ஸம்ருத்3த்3த4த்வாய

**8.3.107** ஸுஞ:
வேத மொழியில், 'ஸுஞ்' என்ற இடைச்சொல்லுக்கு (நிபாதம்) முன் 'இண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரெழுத்தில் முடியுஞ் சொல் நிற்கும்போது, அதன் 'ஸ்' உக்கு 'ஷ்' பதிலியாக வரும்.
அபீ4 ஷு ண: ஸகீ2னாம் (ருக் 4.31.3)
ஊர்த்4வ ஊ ஷு ண: (ருக். 1.36.13)

**8.3.108** ஸனோ தேரன:
'இண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரெழுத்தில் முடியுஞ் சொற்களுக்குப்பின் 'ன்' கெட்டு வரும். 'ஸன்' தாதுவின் 'ஸ்' உக்கு 'ஷ்' பதிலியாக (வேதமொழியில்) வரும்.
கே3ா + ஸன் + விட் (3.2.67) = கே3ாஸஅ + 0 (6.441) = கே3ாஷா. ஆனால் கே3ாஸனி வாசமுதீ3ரயன்.

**8.3.109** ஸஹே: ப்ருதனர் தாப்4யாம் ச
ப்ருதனா 'எதிரிடும் படை', ருதா 'உண்மை' ஆகியவைகளோடு 'ஸஹ்' என்ற தாது வரும்போது அதன் 'ஸ்' உக்கு 'ஷ்' வேதமொழியில் பதிலியாக வரும். ப்ருதனாஷாஹம், ருதாஷாஹம், 'ச' இது ருதீஷாஹம் என்றும் வருமென்பதைச் சுட்டும்.

**8.3.110** ந ரபர ஸ்ருபி ஸ்ருஜி ஸ்ப்ருஸி1 ஸ்ப்ரு ஹி ஸவனாதீ3னாம்
'இண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த உயிரெழுத்தில் தொடங்கும் 'ஸ்'ஐத் தொடர்ந்து 'ர' அல்லது ஸ்ருப் 'ஊர்தல்' ஸ்ருஜ் 'படை' ஸ்ப்ருஸ்1 'தொடு', ஸ்ப்ருஹ் 'விரும்பு' 'ஸவன' முதலிய சொற்கள் ஆகியவைகள் நிற்கும்போது 'ஸ்'உக்கு 'ஷ்' பதிலியாக வராது.

1. ரபர–விஸ்ரம்ஸிகாயா: காண்டம் ஜுஹோதி, விஸ்ரப்3த4: கத2யதி
2. ஸ்ருபி – புரா க்ரூரஸ்ய விஸ்ருப:
3. ஸ்ருஜி – வாசோ விஸர்ஜனாத்

4. ஸ்ப்ருஸ் – தி[3]விஸ்ப்ருஸம்

5. ஸ்ப்ருஹ் – நிஸ்ப்ருஹம் கத[2]யதி ஸவனாதீனாம் – ஸவனே ஸவனே ஸூதே ஸூதே

**8.3.111** ஸாத் பத[3]ாத்[3]யோ:

'இண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரெழுத்தை யீறாகக் கொண்ட சொல்லோ அல்லது பின்னண்ணவொலியையீறாகக் கொண்ட பின்னால் நிற்கும் 'ஸாத்' இன் 'ஸ்' அல்லது ஒரு சொல்லின் முதலெழுத்தாக நிற்கும் 'ஸ்' ஆகியவைகள் 'ஷ்' ஆகமாறாது.

அக்[3]னிஸாத், மது[4]ஸாத்; பத[3]ாதித[3]தி[4] ஸிஞ்சதி இது 8.3.59உக்குப் புறனடை.

**8.3.112** ஸிசோ யஙி

'இண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரெழுத்தில் முடியுஞ் சொற்களுக்குப்பின் வரும் 'ணிச்' 'தெளி' தாதுவின் 'ஸ்' அதைத் தொடர்ந்து 'யங்' ஒட்டு வரும்போது 'ஷ்' ஆகாது ஸேஸிச்யதே, அபி[4]ஸேஸிச்யதே ஆனால் அபிஷிஷிக்ஷதி ('ஸன்' ஒட்டுடன்)

**8.3.113** ஸேத[4]தேர் க[3]தௌ

ஸித்[4] 'நகர்தல், ஆள்' (1.48) என்ற தாதுவின் 'ஸ்' மேற்கூறிய சூழலில், 'இயக்கம்' என்ற பொருளைச் சுட்டும் போது (க[3]தௌ) 'ஷ்' ஆக மாறாது.

அபி[4]ஸேத[4]யதி க[3]ா: 'மாடுகளை ஒட்டுகிறான்'

இது 5.3.65க்குப் புறனடை. ஆனால் 'ஸிஷ்யமகார்யாத் ப்ரதிஷேத[4]யதி 'கெட்ட செயல் செய்வதிலிருந்து மாணவனைத் தடுக்கிறான்'

**8.3.114** ப்ரதிஸ்தப்[3]த[4] நிஸ்தப்[3]தெ[4]ள ச

ப்ரதிஸ்தப்[3]த[4], நிஸ்தப்[3]த[4] என்ற சொற்களுக்கும் விதிக்குப் புறம்பாக, 'ஷ்' மாற்றமேற்படாமல் ஆக்கப்பட்ட சொற்கள். 8.3.67இன்படி 'ஸ்'உக்கு பதிலியாக 'ஷ்' வந்திருக்க வேண்டும், அவ்வாறாகாதது நிபாதனம்.

**8.3.115** ஸோட[4]:

ஸஹ் 'தாங்கு' (1.905) என்ற தாதுவின் ஸோட[4] என்ற வடிவத்தின் 'ஸ்' ('இண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரெழுத்தோ அல்லது பின்னண்ணவொலியையோ இறுதியில் கொண்ட சொற்களுக்கு ப்பின் வரும்போது) அதற்குப் பதிலியாக 'ஷ்' வராது.

பரிஸோட[4]:, பரிஸோடு[4]ம், பரிஸோட[4]வ்யம் ஆனால் பரிஷஹதே இது 8.3.70க்குப் புறனடை.

**8.3.116** ஸ்தன்பு[4] ஸிவுஸஹாம் சஙி

'இண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரெழுத்தோ அல்லது பின்னண்ணவொலியோ இறுதியில் வரும் சொற்களுக்குப் பின் நிற்கும்

ஸ்தன்பு$^4$, ஸிவ், ஸஹ் என்ற தாதுக்களின் 'ஸ்', அத்தாதுக்களுக்குப்பின் 'சங்' ஒட்டு வரும்போது 'ஷ்' ஆகாது.

ஸதன்பு$^4$. பர்யதஸ்தம்ப$^4$த், அப்$^4$யதஸ்தம்ப$^4$த்; 8.3.67க்கு இது புறனடை. ஸிவு – பர்யஸீஷிவத், ந்யஸீஷிவத்; ஸஹ் – பர்யஸீஷஹத், வ்யஸீஷஹத்.

வா: ஸ்தன்பு$^4$ ஸிவு ஸஹாம் சஙி உபஸர்க$^3$ாதிதி வக்தவ்யம்

உபசர்க்கத்தினாலேற்படும் 'ஷ' மாற்றத்துக்குத்தான் இச்சூத்திரம் தடைவிதிக்கிறது. இரட்டித்தலுக்கு அல்ல. காட்டுக்கள் மேலே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**8.3.117** ஸுனோதே: ஸ்யஸனோ:

'ஸு' தாதுவின் பின், ஸ்ய (எதிர் காலவொட்டு, நிபந்தனையொட்டு) ஸன் (விழைவு) வரும்போது 'ஷ்' ஆகாது.

பரிஸோஷ்யதி, அப்$^4$யஸௌஷத், பர்யஸோஷ்யத்

(ஸ்ய), அபி$^4$ஸுஸூ: (ஸன்)

இது 8.3.65க்குப் புறனடை.

**8.3.118** ஸதி$^3$ ஸ்வன்ஜ்யோ: பரஸ்ய லிடி

ஸஸத்$^3$, ஸ்வஞ்ஜ், என்ற தாதுக்களுக்குப்பின் 'லிட்' ஒட்டு வரும்போது இவைகளின் முதலெழுத்தான 'ஸ்'உக்குப் பதிலியாக 'ஷ்' (மேலே கூறப்பட்ட சூழலில்) வராது. அபிஷஸாத$^3$, பரிஷஸாத$^3$, நிஷஸாத$^3$, விஷஸாத$^3$; பரிஷஸ்வஜே, அபிஷஸ்வஜே:

இத்தாதுக்கள் 'லிட்' இணைக்கப்படும்போது இரட்டிக்கும். ஆகவே இரண்டு 'ஸ்' ஆகும். இவைகள் ஒருபசர்க்கத்துக்குப் பின் நிற்கும்போது இவைகளில் முதல் 'ஸ்'உக்கு 'ஷ்' பதிலியாகும். இரண்டாவது 'ஸ்' மாற்றமடையாது.

**8.3.119** நிவ்யபி$^4$ப்$^4$யோ அட்$^3$வ்யவாயே வா ச$^2$ந்த$^3$ஸி

வேதமொழியில், நி, வி, அபி$^4$ ஆகியவைகளுக்குப் பின் நிற்கும் ஸ்', 'அட்' ஆகமம் இடையில் நின்றாலும் விருப்பாக 'ஷ்' ஆக மாறும்.

ந்யஷீத$^3$த் ந்யஸீத$^3$த்; வ்யஷீத$^3$த், வ்யஸீத$^3$த்; அப்$^4$யஷீத$^3$த், அப்$^4$யஸீத$^3$த்

இங்கு 'ஸத்$^3$' ஸ்வஞ்ஜ் மேற்சூத்திரத்தில் கூறியவை அனுவிருத்தியாகாது. இது பொதுவாக தாதுக்களைப் பற்றிப் பேசுகிறது. ஆகையால் ந்யஸ்தௌத், ந்யஷ்டௌத்; அப்$^4$யஷ்டௌத், அப்$^4$யஸ்தௌத் என்று 'ஸ்து' தாதுக்களிலிருந்துமாக்கப்படும்.

**8.4.1** ரஷாப்$^4$யாம் நோ ண: ஸமானபதே$^3$

ஒரே சொல்லிலமையும் ர், ஷ்க்குப்பின் நிற்கும் 'ந்'உக்குப் பதிலியாக 'ண்' வரும்.

ஆஸ்தீர்ணம் (ஆ + ஸ்த்ரு)

புஷ்ணாதி (புஷ் + ந + தி)

முஷ்ணாதி (முஷ் + ந + தி)

ஆனால் அக்$^3$னிர் நயதி

வா: 'ரு$^1$' வர்ணாச்சேதி வக்தவ்யம்
'ரு$^1$'வுக்குப்பின் நிற்கும் 'ந்'வும் 'ண்' ஆகும்.
திஸ்ரூணாம் (திஸ்ரு + ண் + ஆம்)
மாத்ரூணாம் (மாத்ரு + ண் + ஆம்)

**8.4.2** அட்கு ப்வாங் நும் வ்யவாயே அபி
ஒருயிரோ அல்லது குரலொலியோ அல்லது இதழொலியோ அல்லது 'ஆ' என்ற உபசர்க்கமோ அல்லது 'நும்' என்ற ஆகமமோ, 'ர்', 'ஷ்' க்கும் 'ந்' உக்கும் இடையே நின்று அவைகளைப் பிரித்தாலும் (வ்யவாயே அபி) 'ந்'க்கு'ண்' பதிலியாகும்.

1. கரணம், ஹரணம்
2. கு–அர்கேண, மூர்கே$^2$ண (3ஆம் வேற்றுமையுருபான 'ந்', 'ண்' ஆகிறது)
3. பு–த$^3$ர்பேண, க$^3$ர்பே$^4$ண சர்மணா
4. ஆங்–பர்யாணத்$^3$ த$^4$ம் நிராணத்$^3$த$^4$ம்
5. நும்–ப்$^3$ரும்ஹணம், ப்$^3$ரும்ஹணீயம்

**8.4.3** பூர்வ பதா$^3$த் ஸம்க்$^3$ஞாயாமக$^3$:
ஒரு பெயரைச் சுட்டும் தொகையில், க$^3$' என்றவெழுத்து இறுதியில் நிற்காத முதலுறுப்பினரில் காணப்படும் 'ந்'க்குப் பதிலியாக 'ண் வரும்.
த்$^3$ருணஸ:, ப$^3$ார்ஹீணஸ:, ஸூர்பணக$^2$ா

**8.4.4** வனம் புரக$^3$ா மிஸ்'ரகாஸித்$^4$ரகாஸ'ாரிகா கோடராக்$^3$ரேப்$^4$ய:
புரக$^3$ா, மிஸ்ரகா, ஸித்$^4$ரகா, ஸ'ாரிகா, கோடரா மரங்களின் பெயர்கள்' அக்$^3$ரே 'எதிரில்' என்ற சொற்களோடு வனம் 'காடு' என்ற சொல இறுதியுறுப்பினராக அமைந்து அத்தொகை ஒரு பெயரைச் சுட்டும்போது 'வனம்' என்ற சொல்லின் 'ன'வுக்கு 'ண' பதிலியாகும்.
புரக$^3$ாவணம், மிஸ்ரகாவணம், ஸாரிகாவணம், கோடராவணம்,
அக்$^3$ரே வணம் 'காடுகளின் பெயர்கள்' ஆனால் குபே'ரவனம் ஸ'தத$^4$ாரவனம், அஸிபத்ரவனம்

**8.4.5** ப்ரநிரந்த: ஸ'ரே க்ஷுப்லக்ஷாம்ர கார்ஷ்ய க$^2$தி$^3$ர பீயூக்ஷாப்$^4$யோ அஸம்க்$^3$ஞாயாமபி
ப்ர, நிர், அந்தர், ஸ'ர. இக்ஷு, ப்லக்ஷ ஆம்ர கார்ஷ்ய, க$^2$தி$^3$ர, பீயூக்ஷ ஆகியவைகளுக்குப்பின் இறுதியுறுப்பினராக 'வனம்' என்ற சொல் அமைந்து ஆக்கப்பட்ட தொகை ஒரு பெயரைச் சுட்டினாலும், சுட்டாவிட்டாலும் 'வனம்' என்ற சொல்லின் 'ன'வுக்கு 'ண' பதிலியாக வரும்.
ப்ரவணம் 'சிறந்த காடு', நிர்வணம் 'காடில்லாத இடம்', அந்தர்வணம்– 'காட்டுக்குள்' ஸ'ரவணம் 'மூங்கில் காடு' இக்ஷுவனம் 'கரும்பு நிறைந்த காடு', ப்லக்ஷவணம், ஆம்ரவணம், கார்ஷ்யவணம், க$^2$திரவணம், பீயூக்ஷவணம்.

**8.4.6** விப$^{4}$ாஷௌதி$^{4}$ வனஸ்பதிப்$^{4}$ய:

ஆண்டு முழுவதுமுள்ள மூலிகைகளின் பெயர்கள் (ஓஷதி$^{4}$) அல்லது, காட்டு மரங்களின் பெயர்கள் (வனஸ்பதி) ஆகியவைகள் முதலுறுப்பினர ாகவும், 'வனம்' என்ற சொல் இரண்டாவது உறுப்பினராகவும் அமைந்த தொகையில் (முதலுறுப்பினர் 'ர்', 'ஷ்'

என்ற எழுத்துக்களைக் கொண்டதாகவும், அட், கு, பு, ஆங், நும் ஆகியவைகள் 'ன்'வுக்கும் 'ர்', 'ஷ் உக்கும் இடையில் நின்றாலும் 1–2) 'வனம்' என்ற சொல்லின் 'ன' வுக்கு 'ண' விருப்பாகப் பதிலியாக வரும்.

தூ$^{3}$ர்வா வணம், தூ$^{3}$ர்வா வனம்

மூர்வா வணம், மூர்வா வனம்

வனஸ்பதி ஸிரீஷ வணம், ஸிரீஷ வனம், ப$^{3}$த$^{3}$ரீ வணம், ப$^{3}$த$^{3}$ரீவனம்

வா: த்$^{3}$வ்யக்ஷர த்ர்யக்ஷரேப்$^{4}$ய இதி வக்தவ்யம்

இவ்விதி இரண்டு அல்லது மூன்று அசைகளைக் கொண்டதாக முதலுறுப்பினரமையும்போது மட்டுந்தான் செயற்படும். ஆகையால் தே$^{3}$வத$^{3}$ாரு வனம், ப$^{4}$த்$^{3}$ரத$^{3}$ாருவனம்.

வா: இரிகாதி$^{3}$ப்$^{4}$ய: ப்ரதிஷேதே$^{4}$ா வக்தவ்ய:

'இரிகாதி$^{3}$ப்$^{4}$ய: ப்ரதிஷேதே$^{4}$ா வக்தவ்ய:

'இரிகா' முதலிய சொற்கள் முதலுறுப்பின்ராகவும் 'வனம்' இரண்டாவது உறுப்பினராகவும் தொகையில் இவ்விதியை பயன்படுத்தக் கூடாது.

இரிகாவனம், மிரிகாவனம்.

**8.4.7** அஹ்னோ, அத$^{3}$ந்தாத்

அஹ்ன 'பகல்' என்ற சொல், 'அத்' (அ)ஐயிறுதியில் கொண்ட சொல்லின் பின் நிற்கும் தொகையில் (முதலுறுப்பினர் சூ. 1,2இல் கூறியபடியமையும்போது 'அஹ்ன'வின் 'ன'வுக்கு 'ண' பதிலியாக வரும்.

பூர்வாஹ்ண: 'முற்பகல்', அபராஹ்ண: 'பிற்பகல்' ஆனால் நிரஹ்ண:

**8.4.8** வாஹனமாஹிதாத்

எடுத்துச் செல்லப்படும் பொருளைச் சுட்டும் சொல் (ஆஹிதாத்) முதலுறுப்பினராக அமைந்து வாஹன 'வண்டி' என்ற சொல் இரண்டாவது உறுப்பினராக நிற்கும் தொகையில் (முதலுறுப்பினர் 1,2 சூத்திரங்களில் கூறப்பட்டவெழுத்துக்களைக் கொண்டதாக அமைபும்போது) இரண்டாவது உறுப்பினரின் 'ன'வுக்கு 'ண' பதிலியாக வரும்.

இக்ஷுவாஹணம் 'கரும்பு வண்டி'

ஸ$^{1}$ரவாஹணம், த$^{3}$ர்ப$^{4}$வாஹணம்

ஆனால் த$^{3}$ாக்ஷி வாஹனம் 'தாக்ஷியின் வண்டி'

**8.4.9** பானம் தே$^{3}$ஸே$^{1}$

1-2 சூத்திரங்களில் கூறப்பட்டபடி அமையும் சொல் முதலுறுப்பினராகவு இறுதியுறுப்பினராக பான, 'குடி' என்ற சொல்லும் நின்று அத்தொகை 'ஒரு நாடு' என்ற பொருளைச் சுட்டும்போது, இறுதியுறுப்பினரின் 'ன'வுக்கு 'ண பதிலியாக வரும்.

க்ஷீரபாணா: உஸீ'னரா: 'பால் அருந்த விரும்பும் மக்களைக் கொண்ட உஸினர நாடு', ஸுராபாணா: ப்ராச்யா: கள்ளை விரும்பும் மக்களைக் கொண்ட கீழ்நாடு

**8.4.10** வா ப$^{4}$ாவகரணயோ:

முதலுறுப்பினர் 'ர்' அல்லது 'ஷ்' எழுத்துக்களைக் கொண்டதாகவும், இரண்டாவது உறுப்பினர் 'பான' என்ற சொல்லாகவுமைந்து, (இரண்டாவது உறுப்பினரின் 'ன'வுக்கும் முதலுறுப்பினரின் 'ர்' அல்லது 'ஷ்'வுக்குமிடையே 'அட்' கு, பு, ஆங் அல்லது 'நும்' வந்தபோதிலும் (சூ. 1,2), அத்தொகை 'ஒரு நிலைமை' அல்லது 'கருவி' என்ற பொருளைச் சுட்டும்போது, இரண்டாவது உறுப்பினரின் 'ன'வுக்கு 'ண' பதிலியாக விருப்பாக வரும்.

1. பாவ–க்ஷீர பாணம், க்ஷீரபானம் 'பால் அருந்துதல்'
2. கரண–க்ஷீரபாண:, க்ஷீரபான:, 'பாலருந்தும் கோப்பை'

வா: வா ப்ரகரணே கி$^{3}$ரி நத்$^{3}$யாதீ$^{3}$னாமுபஸங்க்$^{2}$யானம்

'கி$^{3}$ரி நதி$^{3}$' ஆகியவைகளையும் இத்துடன் சேர்த்துக்கூற வேண்டும். கி$^{3}$ரி ந$^{3}$தீ, அல்லது கி$^{3}$ரிணதீ; சக்ரநதீ, சக்ரணதீ$^{3}$, சக்ரநிதம்ப$^{3}$ா, சக்ரணிதம்ப$^{3}$ா.

**8.4.11** ப்ராதி பதி$^{3}$காந்த நும் விப$^{4}$க்திஷு ச

ஒரு பெயரடிச் சொல்லினீறாக (ப்ராதிபதிகாந்த) நிற்கும் 'ன' அல்லது ஆகமம் 'நும்' அல்லது ஒரு வேற்றுமையுருபின் 'ன' ஆகியவைகளிரண்டாவது உறுப்பினராக நின்று முதலுறுப்பினர் முதலிரண்டு சூத்திரங்களில் கூறியபடி அமையும் போதும், 'ன'வுக்கு விருப்பாக 'ண' பதிலியாக வரும்.

1. மாஷவாபிணௌ, மாஷவாபிநௌ
2. நும்– மாஷ வாபாணி, மாஷவாபானி
3. விப$^{4}$க்தி–மாஷவாபேண, மாஷவாபேன.

வா: யுவாதீ$^{3}$னாம் ப்ரதிஷேதே$^{4}$ா வக்தவ்ப:

'யுவா' முதலிய சொற்களின் 'ண' இம்மாற்றமடையாது. க்ஷத்ரிய யூனா, ஆர்ய யூனா, ப்ரபக்வானி, தீ$^{3}$ர்க$^{4}$ாஹ்னீ ஸ'ரத்

**8.4.12** ஏகாஜுத்தரபதே$^{3}$

ஓரசையுள்ள சொல் இரண்டாவது உறுப்பினராக அமைந்து, அதனிறுதியில் 'ன' நின்றாலோ அல்லது அது 'நும்' ஆகமம் ஆகவோ அல்லது ஒரு வேற்றுமையுருபாக அந்த 'ன' அமைந்தாலோ அதற்க முன்னால் நிற்கும் முதலுறுப்பினர் முதலிரண்டு சூத்திரங்களின் கூறியபடி அமையும்போது

இரண்டாம் உறுப்பினரின் 'ன்' உக்கு 'ண' பதிலியாக வரும்.

1. வ்ருத்ரஹணை:, வ்ருத்ரஹணெள
2. க்ஷீரபாணி (3) க்ஷீரபேண, ஸுரா பேண

**8.4.13** கும்தி ச

மேற்கூறிய சூழலில் இறுதியுறுப்பினர் பின்னண்ணவொலி கொண்டதாக அமையும்போது, 'ந்'வுக்கு 'ண' பதிலியாக வரும்.

வஸ்த்ர யுகிணெள (வஸ்த்ர + யுக + இனி + ஔ); ஸ்வர்க[3]க[3]ாமி ணெள, நும்வஸ்த்ரயுகாணி; விப[4]க்தி–வஸ்த்ரயுகே[3]ண

**8.4.14** உபஸர்க்[3]ாத[3], ஸமாஸே அபிணோபதே[3]ஸஸ்ய

தாதுபாடத்தில் முதல் முதலாகக் குறிப்பிடப்படும்போது 'ண'வை முதலாகக் கொண்ட ஒரு தாது, முதலிரண்டு சூத்திரங்களில் கூறப்பட்ட எழுத்துக்களைக் கொண்ட ஒரு உபசர்க்கத்தோடு நிற்கும்போது, அது ஒரு தொகையாகாவிட்டாலும், (அஸமாஸே அபி) அத்தாதுவின் 'ந்' வுக்கு 'ண' பதிலியாக வரும். ணம் (1.1030)–ப்ரணமதி, பரிணமதி, ணீங் (1.950)–ப்ரணாயக, பரிணாயக ('ண்வுல்' ஒட்டுடன்): ஆனால் ப்ரநாயக: 'தலைவனில்லாத நாடு' இங்கு 'நீ' தாதுவைப் பொறுத்தவரையில் 'ப்ர' உபசர்க்கமல்ல நிபாதம். ஆனால் இச்சொல்லை இதன் புதைநிலை வடிவில் நோக்கும்போது, அதாவது ப்ரக[3]தா நாயகா அஸ்மாத்[3]தே[3]ஸாத் என்ற தொடரில், 'ப்ர' 'கம்' என்ற தாது சம்பந்தமாக ஒருபசர்க்கமாகும்.

நர்த்[3] (1.57), இது ப்ரநர்த[3]க:, ப்ரநர்த[3]தி என்று ஆகும்.

**8.4.15** ஹினு மீனா

ஹினு (=ஹி 5.11) 'நகர், மிகுதியாக்கு' மீ (9.4) 'காயப்படுத்து' என் ற தாதுக்கள் 'ர், ஷ்' என்றவெழுத்துக்களைக் கொண்ட உபசர்க்கத்துடன் நிற்கும் போது, அவ்வினைகளின் 'ந்'உக்கு 'ன்' பதிலியாக வரும்.

ப்ரஹிணோதி 'தூண்டிவிடுகிறான்'

ப்ரமீணாதி 'அழிக்கிறான்'

**8.4.16** ஆனி லோட்

ஏவல் வினை தன்மையொருமை (லோட்) ஒட்டான 'ஆனி'யின் 'ன' மேலே கூறிய எழுத்துக்களுக்குப்பின் வரும்போது 'ண' ஆகும். ப்ரவபாணி, பரியாணி ஆனால் ப்ரவபானி மாம்ஸானி, இங்கு 'ஆனி', 'லோட்' ஒட்டல்ல, வேற்றுமையுருபு

**8.4.17** நேர் க[3]த[3] நத[3] பத பத[3] கு[4]மா, ஸ்யத

ஹந்தி யாதி வாதி த்[3]ராதி ப்ஸாதி வபதி வஹதி ஸாம்யதி சினோதி தே[3]க்[3]தி[4]ஷு ச

க[3]த்[3] 'கூறு பேசு', நத்[3] 'சத்தம் போடு', பத் 'விழு, பற', பத்[3] 'போ' கு[4] என்ற

ஸம்க்3ஞாவினால் குறிப்பிடப்படும் தாதுக்கள், மாங் 'அள', மேங் 'பண்டமாற்று செய்' ஸோ 'அழி', ஹன் 'கொல்', யா 'போ' வா 'வீசு', ஊது', த்3ரா 'ஓடு' ப்ஸா 'உண்', வப் 'விதை தூவு' வஹ 'தூக்கு, தாங்கு' ஸம் 'அமைதியாகு', சி 'குவி' தி3ஹ 'எண்ணெய் தடவு/பூசு' ஆகியவைகள் 'நி'யுடன் சேர்ந்து அமைந்து, அவைகளுக்கு முன் 'ர், ஷ' எழுத்துக்களைக் கொண்ட ஒரு உபசர்க்கம் நிற்குமானால் அதன் 'ந்'உக்கு 'ண்' பதிலியாக வரும்.

1) ப்ரணிக3த3தி, பரிணிக3த3தி (2) ப்ரணி நத3தி, பரிணி நத3தி (3) ப்ரணி பததி, பரிணி பததி (4) ப்ரணிபத்3யதே, பரி ணிபத்3யதே (5) ப்ரணி த3தாதி பரிணித3த3ாதி; ப்ரணி த3த3ாதி, பரிணித3த4ாதி (6) மாங்–ப்ரணி மிமீதே, பரிணி மிமீதே; மேங்– ப்ரணி மயதே, பரிணி மயதே (7) ப்ரணிஷ்யதி, பரிணிஷ்யதி 8) ப்ரணிஹந்தி, பரிணிஹந்தி (9) ப்ரணியாதி, பரிணியாதி 10) ப்ரணிவாதி, பரிணிவாதி (11) ப்ரணித்3ராதி, பரிணித்3ராதி (12) ப்ரணிப்ஸாதி, பரிணிப்ஸாதி (13) ப்ரணிவபதி, பரிணிவபதி (14) ப்ரணிவஹதி, பரிணிவஹதி (15) ப்ரணி ஸ1ாம்யதி, பரிணிஸ1ாம்யதி (16) ப்ரணிசினோதி, பரிணிசினோதி (17) ப்ரணிதே3க்3தி4 பரிணி தே3க்3தி4 'அட்' இடையில் நிற்கும்போதும், ப்ரண்யக3த3த், பரிண்யக3த3த்

**8.4.18** ஸே1ஷே விப4ாஷா அககா2த3ாவஷந்த உபதே3ஸே1

தாதுபாடத்தில் 'க' அல்லது 'க2' என்ற எழுத்துக்கள் முதலாக நிற்காததும், 'ஷ' என்ற எழுத்தையிறுதியாகக் கொள்ளாததுமான மற்ற தாதுக்கள் (ஸே1ஷே), முன் சூத்திரங்களில் கூறப்பட்டவாறமைந்த உபசர்க்கங்களோடு நிற்கும்போது அத்தாதுக்களின் 'ந்' விருப்பாக 'ண' ஆகும்.

இச்சூத்திரத்திலும் 'நே:', 'உபஸர்க்காத்' ஆகியவைகள் அனுவிருத்தியாகும், முன் சூத்திரத்தில் கூறப்பட்ட தாதுக்களைத் தவிர்த்த மற்ற தாதுக்கள் என்று 'ஸே1ஷே' என்ற சொல் பொருட்படும்.

ஆகவே, ப்ரணி பசதி, பரிணி பசதி ப்ரணி பி4னத்தி, பரிணி பி4னத்தி ஆனால் ப்ரநி கரோதி, ப்ரநிக2ா3த3தி, இத்தாதுக்கள் க, க2வில் தொடங்குகின்றன. (க்ரு, க2ாத்3) ப்ர நிபினஷ்டி 'ஷ்'ஐ ஈறா க் கொண்ட தாது 'பிஷ்'

**8.4.19** அநிதே:

'அந்' 'மூச்சுவிடு' என்ற தாது மேலே கூறியபடியமைந்த உபசர்க்க த்தோடு வரும்போது அத்தாதுவின் 'ந்' உக்கு 'ண' பதிலியாக வரு ம்.

ப்ர + அநிதி = ப்ராணிதி 'அவன் மூச்சு விடுகிறான்', பராணிதி

**8.4.20** அந்த:

மேற்சூத்திரத்தில் கூறப்பட்டவகையிலமையும் 'அந்' ஒரு பதத்தினிறு தியில் 'அந்த:' நிற்கும்போது அதன் 'ந்'க்கு 'ண்' பதிலியாக வரும்.

ஹே ப்ராண், (விளிவேற்றுமை) 8.4.37க்கு இவ்விதி புறனடையாகும். இச்சொல் விளிவேற்றுமையாக நிற்கும்போது இவ்விதி பயன்படுத்தப்படும்.

**8.4.21** உபெ$^{4}$ள ஸாப்$^{4}$யாஸஸ்ய

மேற்சூத்திரங்களில் கூறியவகையில் அமைந்த உபசர்க்கங்களுடன் நிற்கும் 'அந்' என்ற தாது இரட்டிக்கப்படும்போது, அவ்விரண்டின் 'ந்'க்கும் 'ண' பதிலியாக வரும்.

ப்ராணிணிஷதி (ஸன்), ப்ராணிணத் (ணிச், சங்)

**8.4.22** ஹந்தே ரத் பூர்வஸ்ய

'அ' என்றவெழுத்துக்குப்பின் வரும் 'ஹன்' என்ற தாது, மேலே கூறிய மாற்றத்தையேற்படுத்தும் வகையில் அமைந்த உபசர்க்கத்துக்குப்பின்னால் நிற்கும்போது, இத்தாதுவின் 'ந்' உக்கு 'ண' பதிலியாக வரும்.

ப்ரஹண்யதே, பரிஹண்யதே, ஆனால் ப்ரக்$^{4}$னந்தி

**8.4.23** வமோர் வா

மேலே கூறப்பட்ட சூழலில் வரும் 'ஹன்' தாதுவுக்குப்பின், 'வ்' அல்லது 'ம்' இல் தொடங்கும் இடப்பெயர் ஒட்டுக்களிணைக்கப்படும்போது, அதன் 'ந்' உக்கு 'ண்' விருப்பாகப் பதிலியாக வரும்.

ப்ரஹண்வ:, பரிஹண்வ:,

ப்ரஹண்ம:, பரிஹண்ம:

**8.4.24** அந்தரதே$^{3}$ஸே$^{1}$

'அந்தர்' என்ற உபசர்க்கத்துடன், 'அ'வைத் தொடர்ந்து நிற்கும் 'ஹன்' தாதுவின் 'ந்' உக்கு 'ண', பதிலியாக அச்சொல் ஒரு நாட்டின் பெயரைச் சுட்டாவிட்டால் வரும். அந்தர் ஹண்யதே 'நீக்கப்பட்டது'

அந்தர் ஹணனம் 'நீக்கம்'

ஆனால் அந்தர் ஹனன: 'ஒரு நாட்டின் பெயர்'

**8.4.25** அயனம் ச

'அந்தர்' உக்குப்பின் வரும் 'அயனம்' என்ற சொல்லின் 'ந்' உம், அச்சொல் ஒரு நாட்டின் பெயரைச் சுட்டாமல் வரும்போது 'ண்' ஆகும்.

அந்தரயணம் 'மறைதல்', ஆனால் அந்தரயன: 'ஒரு நாட்டின் பெயர்'

**8.4.26** ச$^{2}$ந்த$^{3}$ஸ்ய்ரு$^{1}$த$^{3}$வக்$^{3}$ரஹாத்

வேதமொழியில் 'ரு' வீற்றுச் சொல்லுக்குப்பின் நிற்கும் இரண்டாவது உறுப்பினரின் 'ந்' பதபாடத்தில் அவைகள் அவக்ரஹத்தினால் பிரிக்கப்பட்டிருந்தபோதிலும் 'ண்' பதிலியாக வரும்.

ந்ருமணா:, பித்ருயாணம்

இச்சொற்கள் பதபாடத்தில் ந்ரு'மணா:, பித்ரு' யாணம் என்று பிரிக்கப்பட்டு கொடுக்கப்பட்டிருக்கும். ஆயினும், ஸம்ஹிதையில், இவைகள் ஒன்றையொன்று தொடர்ந்து காணப்படும்.

**8.4.27** நஸ்¹ ச த⁴ாதுஸ்தே²ாருஷுப்⁴ய:
வேதமொழியில், 'ர்' அல்லது 'ஷ்'ஐக் கொண்ட தாதுவுக்குப்பின்னாலோ அல்லது ஊரு 'விரிவு, அகலம்' அல்லது 'ஷு' (=ஸு)வுக்குப் பின்னோ நிற்கும் மாற்றுப்பெயர் 'ந:வின் 'ந' (அஸ்மத் என்பதில் பதிலி) உக்கு 'ண' பதிலியாக வரும். அக்³னே ரக்ஷா ண: (ருக். 7.15.13) "ஓ அக்னி, எங்களைக் காப்பாற்று"; ஸி¹க்ஷா ணோ அஸ்மின் (ருக். 4.31.3) ஊரு ணஸ் க்குதி 4 (ருக் 8.75.11) "எங்களுக்கு வரை வாய்ப்பு அளி"; ஊர்த்⁴வம் ஊ ஷு ண ஊதயே (ருக். 1.36.13);

**8.4.28** உபஸர்க³ாத்³ ப³ஹுலம்
'ர்' அல்லது 'ஷ்' என்ற எழுத்துக்களைக் கொண்ட உபசர்க்கங்களுக்குப்பின் நிற்கும் 'ந:'வின் 'ந' வுக்கு 'ண' பதிலியாக வரும்.
இது பாணினியின் சூத்திரமல்ல. பாணினியின் சூத்திரம், உபஸர்க³ாத்³ அநோத் பர: என்று அமைகிறது, அதாவது, 'ர்' அல்லது 'ஷ்' என்ற எழுத்துக்களைக் கொண்ட உபசர்க்கங்களுக்குப்பின் வரும் 'நஸ்' ஐத் தொடர்ந்து ஒத் (ஓ) வராமலிருந்தால், அதன் 'ந'வுக்கு 'ண' பதிலியாக வரும். இச்சூத்திரத்திலிருந்து ஏற்படும் சில மறுப்புகளையும் குழப்பங்களையும் தவிர்க்க வேண்டி பதஞ்சலி, மேலே குறிப்பிட்டபடி இச்சூத்திரத்தைத் திருத்தியமைத்துள்ளார். 'அநோத் பர:' என்பதற்குப் பதிலியாக 'ப³ஹுலம்' வருகிறது. ஒத் பர: என்றமையும்போது, இதை இருவகையாகப் பொருள் கொள்ளலாம். அதாவது (1) ஒகாராத் பர: 'ஓ'வுக்குப் பின்னால் நிற்கும் அல்லது (2) பரோ அஸ்மாத் அதை 'ஓ' தொடரு ம்போது இரண்டுமே மறுப்புக்குரியது. முதலில் கூறியபடியானால் ' ப்ரனோ முஞ்சதம்' என்பதில் 'ந'வுக்கு 'ண' பதிலியாக வரவேண் டும், இரண்டாவதன்படி ப்ரணோவனிர் தே³வதா என்பதில் 'ண' வரக்கூடாது. அது 'ந' வாகத்தானிருக்க வேண்டும். ஆனால் வேத மொழியில் ப்ரண: ப்ரந:, ப்ரணோ, ப்ரநோ ஆகியவைகள் கா ணப்படுகின்றன. ஆகையால் இம்மாற்றம் தேவையாகிறது.
'நஸ்' என்ற சொல் 'அஸ்மத்' நாஸிகா 'மூக்கு' (5.4.119) ஆகியவைகளின் பதிலியாகும். இதற்கு முந்திய சூத்திரத்தில் 'அஸ்மத்'இன் பதிலியாக மட்டும் 'நஸ்' வரும். இச்சூத்திரத்தில் மா ற்றுப் பெயரின் பதிலி, மூக்கு, இவ்விரண்டையுமே 'நஸ்' குறிக்கிறது.
ப்ரண ஆயூம்ஷி தாரிஷத் (ருக். 1.25.12); ஆனால் ப்ர நோ முஞ்சதம் வருணஸ்ய பாஸாத் (ருக் 6.74.4) 'ப³ஹுலம்' என்று பதஞ்சலி திருத்தியமைத்த 6.74.4) 'ப³ஹுலம்' என்று பதஞ்சலி திருத்தியமைத்தபடியால், ப்ர நோ முஞ்சதம், ப்ர ணோ வனிர் தே³வக்ருதா (அ: 5.7.3) என்ற இரண்டுமே சரியானவையாகக் கருத முடியும்.
ப்ரணஸ: "நீண்ட மூக்குடைய"

**8.4.29** க்ருத்ய ச:
'ர்' அல்லது 'ஷ்' என்ற எழுத்துக்களைக் கொண்ட உபசர்க்கங்களு டன் வரும்

க்ருத் ஒட்டின் 'ந' ஒருயிரெழுத்துக்குப் பின்னால் நிற்கும் போது 'ண' ஆகும். அன (யு), மான (ஸானச். 7.2.82), அநீய (3.1.96), அநி (3.3.111), இநி (ணிநி 3.2.78), 'நிஷ்டா'வின் பதிலிகள் (8.2.42) ஆகிய 'க்ருத்' ஒட்டுக் களில் இத்தகைய மாற்றம் ஏற்படும்.

அன– ப்ரயாணம், பரியாணம்;
மான – ப்ரமாணம், பரிமாணம்
அநீய – ப்ரயாணீயம், பரியாணீயம்
அநி: – அப்ரயாணி:, அபரியாணி:
இநி – ப்ரயாயிணீ, பரியாயிணீ:
நிஷ்டாதே[3]ஸ[1] – ப்ரஹீண:, பரிஹீண:, ப்ரஹீணவான், பரிஹீணவ ான்

வா: க்ருத் ஸ்த[2]ஸ்ய ணத்வே நிர்விண்ணஸ்ய உபஸங்க்[2]யானம் கர்தவ்யம்
'நிர்விண்ண' என்ற சொல்லையும் இத்துடன் சேர்த்துக்கூற வேண்டும்.
நிர்விண்ணோ அஸ்மி க[2]லஸங்கே[3]ன
நிர்விண்ணோ அஹம் அத்ர வாஸேன

**8.4.30** ணேர் விப[4]ாஷா
'ர்' அல்லது 'ஷ்' என்றவெழுத்துக்களைக் கொண்ட உபசர்க்கங்களுடன் வரும் இயக்குவினைக்குப் (ண்யந்த) பின் இணைக்கப்படும் 'க்ருத்' ஒட்டின் 'ந'உக்கு 'ண' விருப்பாக பதிலியாக வரும்.

ப்ரயாபணம், ப்ரயாபனம், பரியாபணம், பரியாபனம்;
ப்ரயாப்பமாணம், ப்ரயாப்யமானம்; பரியாப்யமாணம், பரியாப்யமானம்; ப்ரயாபணீயம், ப்ரயாபனீயம்; பரியாபணீயம், பரியாபனீயம்; அப்ரயாபணி:, அப்ரயாபனி:; ப்ரயாபிணீ, ப்ரயாபினீ.

**8.4.31** ஹலஸ் சேஜு பத[4]ாத்
'ர்' அல்லது 'ஷ்' என்ற எழுத்துக்களைக் கொண்ட உபசர்க்கங்களுடன் ஒரு மெய்யெழுத்தை முதலிலும், 'அ'வைத் தவிர்த்த மற்ற உயிரெழுத்துக்களை ஈற்றயலாகவும் கொண்ட தாதுவுக்குப் பின் இணைக்கப்படும் 'க்ருத்' ஒட்டின் 'ந்'உக்குப் பதிலியாக 'ண' விருப்பாக வரும்.
ப்ர கோபனம், ப்ரகோபணம் (ப்ர + குப் + ல்யுட்);
பரிகோபனம், பரிகோபணம் ஆனால் ப்ரேஹணம் ப்ரோஹணம்
(ப்ர + இஹ் + ல்யுட்); ப்ரவபணம், பரிவபணம்.
8.4.29இல் விதிக்கப்பட்ட கட்டாய விதியை இது விருப்புவிதியாக்குகிறது.

**8.4.32** இஜாதே[3]: ஸநும:
மேற்சூத்திரங்களில் கூறியவாறு அமையும் உபசர்க்கங்களுக்குப்பின் 'இச்'

ப்ரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒருயிரெழுத்தை முதலாகவும், 'நும்' ஆகமத்தைக் கொண்டதாகவும், ஒரு மெய்யெழுத்தையீறாகவும் கொண்ட தாதுக்களுக்குப் பின்னாலிணைக்கப்படும் 'க்ருத்' ஒட்டின் 'ந்'உக்கு 'ண்' பதிலியாக வரும்.

இச்சூத்திரத்தில் மேற்சூத்திரத்தில் காணப்படும் 'ஹல' அனுவிருத்தியாகும். ஆனால், இது 'ஹலந்த' அதாவது 'மெய்யீற்று' என்ற பொருளில் வரும். (பார்க்க 1.1.72). 'இஜாதி' என்று சூத்திரத்தில் குறிப்பிட்டிருப்பதால், 'இச்' உயிரில் தொடங்கும் தாது மெய்யெழுத்தில் தொடங்குவது என்பது இயலாது. ஆகையால், 'ஹல' என்ற சொல்லை 'ஹலந்த' என்று பொருள் கொள்வதுதான் பொருத்தமானது.

ப்ர/பரி + இக்$^{2}$ + நும் + ல்யுட்

ப்ரேங்க$^{2}$ணம், பரேங்க$^{2}$ணம்;

ப்ரேங்க$^{3}$ணம், பரேங்க$^{3}$ணம்;

ப்ரோம்ப$^{4}$ணம், பரோம்ப$^{4}$ணம்

**8.4.33** வா நிம்ஸநிக்ஷ நிந்த$^{3}$ாம்

மேற்சூத்திரங்களில் கூறியவாறு அமைந்த உபசர்க்கத்துடன் வரும் நிம்ஸ (2.15), நிக்ஷ (1.689), நிந்த் (1.66) என்ற தாதுக்களின் மூக்கொலிகளுக்கு 'ண' விருப்பாகப் பதிலியாக வரும்.

ப்ரணிம்ஸனம், ப்ரநிம்ஸனம்;

ப்ரணிக்ஷணம், ப்ரநிக்ஷணம்;

ப்ரணிந்த$^{3}$னம், ப்ரநிந்த$^{3}$னம்

இத்தாதுக்கள் தாதுபாடத்தில் 'ண'வுடன் குறிப்பிடப்பட்டிருப்பதால் சூ. 14இன் மூலம், இத்தகையமாற்றம் ஏற்பட்டிருக்கும். இச்சூத்திரம், இதை விருப்பாக ஆக்குகிறது.

**8.4.34** ந ப$^{4}$ா பூ$^{4}$பூ கமி க$^{3}$மிப்யாயீ வேபாம்

ப$^{4}$ா 'ஒளிவிடு', பூ$^{4}$ 'இரு', பூ 'புனிதமாக்கு' கம் 'விரும்பு', க$^{3}$ம் 'போ', ப்யாய் 'பெருக்கு, மிகுதியாக்கு, ஊது', வேப் 'நடுங்கு' ஆகியவைகள் மேற்சூத்திரங்களில் கூறப்பட்டபடியமையும் உபசர்க்கங்களுடன் வரும்போதும், அவைகளோடிணைக்கப்படும் 'க்ருத்' ஒட்டுக்களின் 'ந' உக்கு 'ண' பதிலியாக வராது.

ப்ரப$^{4}$ானம், பரிப$^{4}$ானம்; ப்ரப$^{4}$வனம், பரிப$^{4}$வனம், ப்ரபவனம், பரிபவனம் (பூ 9.11) ஆனால் பூங் (1.1015) என்ற தாதுவோடு 'ண்' ஆகும். ப்ரபவணம் ஸோமஸ்ய; ப்ரகமனம், பரிகமனம்; ப்ரக$^{3}$மனம், பரிக$^{3}$மனம்; ப்ரப்யாயனம், பரிப்யாயனம்; ப்ரவேபனம், பரிவேபனம்.

வா: ண்யந்தானாம் ப$^{4}$ா தீ$^{3}$னாமுபஸங்க்$^{2}$யானம்

இவைகள் இயக்குவினையாக (ண்யந்த) வரும்போதும், 'ந' வுக்கு 'ண' பதிலியாக வராது.

ப்ரப$^4$ானம், பரிப$^4$ாபனம்

**8.4.35** ஷாத் பத$^3$ாந்தாத்

ஒரு சொல்லின் இறுதியாக அமையும் (பத$^3$ாந்தாத்) 'ஷ' உக்குப் பின் 'ந'வுக்கு 'ண' பதிலியாகாது.

ஸர்பிஷ்–பானம், யஜுஷ்பானம்,

நிஷ் பானம், து$^3$ஷ்பானம். ஆனால் புஷ்ணாதி, குஷ்ணாதி 'ஷ்' ஒரு சொல்லினீறாக வரவில்லை)

இங்கு பத$^3$ாந்த என்ற சொல் பதே$^3$ அந்த (ஏழாம் வேற்றுமை தத்புருஷத் தொகை) என்ற பொருளில் அமைகிறது. அதாவது ஒரு சொல்லில் இறுதியாக நிற்கும் 'ஷ' என்று பொருள். ஒரு சொல்லினிறுதியென்ற பொருளிலல்ல. ஆகையால் ஸுஸர்பிஷ் கேண, ஸுயஜுஷ்கேண ஆகியவைகளில் இந்த விதி பயன்படுத்தப்படமாட்டாது. 'ஸுஸர்பிஷ்க' என்ற சொல்லில் 'க' 5.4.154 விதியினாலிணைக்கப்பட்டுள்ளது. 'ஸுஸர்பிஸ்' இன் 'ஸ்', 8.3.39இன்படி 'ஷ்' ஆகிறது. 'க'வையிணைக்கும் முன்பு 'ஸ்' (ஷ்) ஒரு சொல்லின் ஈறாகும். ஆனால், இது தொடர்ந்து வரும் ஒரு சொல்லுக்குமுன் நிற்கும் பதம் (சொல்) அல்ல. பொதுவாக இவ்விதி, ஒரு தொகையைப் பற்றியது என்று கருதலாம்.

**8.4.36** நஸே$^1$: ஷாந்தஸ்ய

நஸ்$^1$ 'அழி' என்ற தாது 'ஷ்'இல் முடியுமானால், அதன் 'ந'வுக்கு 'ண' பதிலியாகாது. 'நஸ்'இன் ஈறான 'ஸ்', 'ஷ்' ஆக மாறும்போது, அதன் 'ந' 'ண'வாக மாறாது. ப்ரணஷ்ட:, பரிநஷ்ட: ஆனால் ப்ரணஸ்யதி, பரிணஸ்யதி ('ஷ்' இல் முடியுஞ் சொல்லல்ல)

ப்ரநங்க்ஷயதி' போன்ற சொற்களிலும் இவ்விதி செயற்படுமென்பதைச் சுட்டுவதற்காகத்தான் 'ஷாந்த' என்று இச்சூத்திரம் அமைகிறது. இச்சொல்லும் 'ஷ்' இல் முடிகிறது. ஆயினும் வேறு சில விதிகளைப் பயன்படுத்தி இச்சொல்லைத் தருவிக்கப்பட்டிருப்பதால் 'ஷ்' இச்சொல்லில் காணப்படவில்லை. ப்ர + நஸ். இன் 'ஸ்' 8.2.36 பயன்படுத்தும்போது 'ஷ்' ஆகும். பிறகு இந்த 'ஷ்', 'க்' ஆகும். (8.2.41) அதன் பிறகு 'நும்' ஆகமம் வரும் (7.1.60)

**8.4.37** பத$^3$ாந்தஸ்ய

ஒரு சொல்லினீறாக நிற்கும் 'ந்'உக்கு 'ண' பதிலியாகாது. வ்ருக்ஷான், ப்லக்ஷான், அரீன், கி$^3$ரீன்

**8.4.38** பத$^3$வ்யவாயே அபி

'ந'ஐக் கொண்ட சொல்லுக்கும், 'ர்' அல்லது 'ஷ்' என்ற எழுத்துக் களைக் கொண்ட சொல்லுக்குமிடையே ஒரு சொல் நின்ற போதிலும் (பதவ்யவாயே) 'ந'உக்கு 'ண' பதிலியாக வராது.

மாஷகும்ப$^4$வாபேன, சதுரங்க$^3$யோகே$^3$ன

ப்ராவனத்[3]த[4]ம், பர்யவனத்[3]த[4]ம்

வா: பத[3]வ்யவாயே அதத்[3]தி[4]த இதி வக்தவ்யம்
தத்திதத்தைத் தவிர்த்த மற்ற சொற்களிடையில் நிற்கும்போது என்று அமையவேண்டும்.
ஆர்த்[3]ர கே[3]ாமயேண, ஸுஷ்ககே[3]ாமயேண. இங்கு 'மய' ஒரு தத்திதவொட்டு (கே[3]ா + மய 4.3.143) 'கே[3]ா' ஒரு பதம் ஆகவே, முதற் சொல்லான ஆர்த்[3]ரஈ ஸுஷ்க என்பவைகளுக்கும் 'மய'வுக்கு மிடையில் 'கே[2]ா' என்ற பதம் நிற்கிறது. ஆனாலும் 'ந', 'ண' வாகிறது.

**8.4.39** க்ஷுப்[4]னாதி[3]ஷு ச
'க்ஷுப்[4]னாதி' முதலியவைகளிலும், இம்மாற்றத்தையேற்படுத்தக் கூடிய சூழலிலும், இம்மாற்றம் ஏற்படாது. க்ஷுப்[4]னாதி, க்ஷப்[4]னீத:, க்ஷுப்[4]னந்தி நூனமன: (8.4.3; 26 விதிகளினால் இம்மாற்றம் ஏற்பட்டிருக்க வேண்டும், ஆனால் 'ந'வுக்கு 'ண' பதிலியாகவில்லை)
நந்தி[3]ன், நந்த[3]ன, நக[3]ர ஆகியவைகள் இரண்டாவது உறுப்பினராக நிற்கும்போதும் இம்மாற்றம் ஏற்படாது.
ஹரி நந்தீ[3], ஹரிநந்த[3]ன:, கி[3]ரிநக[3]ர:

**8.4.40** ஸ் தோ: ஸ்'சுனா ஸ்'சு:
'ஸ்' பல்லொலிகள் (து), ஸ்', அண்ணவொலிகள் (சு) ஆகியவைகளுடன் வரும்போது, அவைகள், 'ஸ்' அண்ணவொலிகளாகும்.
வ்ருக்ஷஸ் + ஸே'தே = வ்ருக்ஷஸ்' ஸே'தே
வ்ருக்ஷஸ் + சினோதி = வ்ருக்ஷஸ்' சினோதி
அக்[3]னிசித் + ஸே'தே = அக்[3]னிசிச்சே[2]தே,
அக்[3]னிசித் + சினோதி = அக்[3]னிசிச்சினோதிஈ
அக்[3]னிசித் + ஜயதி = அக்[3]னிசிஜ் ஜயதி
யாச் + நா = யாச்ஞா

**8.4.41** ஃஷ்டுனா ஷ்டு:
'ஸ்' பல்லொலிகள், 'ஷ்' வளைநாவொலிகளோடு தொடர்புள்ளதாக நிற்கும்போது, அவைகளுக்கு 'ஷ்' வளைநாவொலிகள் பதிலியாக வரும்.
வ்ருக்ஷஸ் + ஷண்டே[3] = வ்ருக்ஷஷ் ஷண்டே[3]
வ்ருக்ஷஸ் + டீகதே = ஷவ்ருக்ஷஷ்டீகதே;
பிஷ் + க்த = பிஷ்டா; அக்னிசிட்டீகதே;

**8.4.42** ந பத[3]ாந்தாட்டோரனாம்
'நாம்' (ஆறாம் வேற்றுமைப் பன்மையுருபு)ஐத் தவிர்த்து ஒரு சொல்லிறுதியில்

நிற்கும் வளைநாவொலி (டு)க்குப்பின் வரும் 'ஸ்', பல்லொலிகள், வளைநாவொலியாக ஆகாது.
ஸ்'வலிட்ஸாஹே; மது⁴லிட் தரதி
ஆனால் ஈட்³ + தே = ஈட்³ + டே³ = ஈட்டே,
ஸர்பிஷ் + தமம் = ஸர்பிட்டமம்; ஷட் + நாம் = ஷண்ணாம்.

வா: அநாம் நவதி நக³ரீணாமீதி வக்தவ்யம்
'நாம்'உக்குத் தடை கூறும்போது நவதி, நக³ரீ ஆகியவைகளையும் இதோடு சேர்த்துக் குறிப்பிட வேண்டும்.
ஷண்ணாம் – ஆறின்/உடைய; ஷண்ணவதி '96ங
ஷண்ணக³ரீ 'ஆறு நாடுகள்'

**8.4.43** தோ: ஷி
'ஷ' தொடர்ந்து வரும்போது பல்லொலிக்கு (தோ:)ப்பதிலியாக வளைநாவொலி வராது.
அக்³னிசித் ஷண்டே

**8.4.44** ஸ'¹த்
'ஸ'¹வுக்குப்பின்னால் வரும் பல்லொலிக்குப் பதிலியாக அண்ணவொலி வராது.
ப்ரச்² + ந = ப்ரஸ்'ன (6.4.19) 'கேள்வி'

**8.4.45** யரோ அநு நாஸிகே அநுநாஸிகோ வா
'யர்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்து (ஹ'வைத் தவிர்த்த மற்ற மெய்யெழுத்துக்கள்) ஒரு சொல்லினிறுதியாகவமைந்து, அதற்குப்பின் ஒரு மூக்கொலி வரும்போது, அதற்கு மூக்கொலி விருப்பாகப் பதிலியாக வரும்.
வாக்³நயதி, வாங் நயதி; அக்³னிசித் அல்லது அக்³னிசிந் நயதி; த்ரிஷ்டுப்³ அல்லது த்ரிஷ்டும் நயதி ஆனால் வேத்³மி, அப்⁴நாதி

வா: யரோ அநுநாஸிகே ப்ரத்யயே ப⁴ாஷாயாம் நித்யவசனம் கர்தவ்யம்
மேலே குறிப்பிட்டது ஒரு ஒட்டானால் பேச்சுமொழியில் மூக்கொலி கட்டாயமாகப் பதிலியாக வரும்.
வாக்³ + மயம் = வாங்மயம், த்வங் மயம்

**8.4.46** அசோ ரஹாப்⁴யாம் த்³வே
'ஹ'வைத் தவிர்த்த மற்ற எல்லா மெய்யெழுத்துக்களும் (யர்), ஒருயிரெழுத்துக்குப்பின் (அச;) நிற்கும் 'ர', 'ஹ' ஆகியவைகளுக்குப்பின் வரும்போது, விருப்பாக இரட்டிக்கும்.
அர்க:, அர்க்க:, ப்³ரஹ்ம்மா, ப்³ரஹ்மா; அபஹ்ன்னுதே, அபஹ்னுதே ஆனால் ஹ்னுதே, ஹ்ம்லயதி

**8.4.47** அநசி ச

ஒருயிரெழுத்துக்குப்பின் நிற்கும் 'ஹ'வைத் தவிர்த்த மற்ற எல்லா மெய்யெழுத்துக்களும் (யர்) அவைகளுக்குப்பின் உயிரெழுத்துத் தொடரமல் அமையும்போதும் விருப்பாக இரட்டிக்கும்.

த$^3$தி$^4$ + அத்ர = த$^3$த்$^4$யத்ர, த$^3$த$^3$த்$^4$யத்ர

மது$^4$ + அத்ர = மத்$^4$வத்ர, மத்$^3$த்$^4$வத்ர

வா: யணோ மயோ த்$^3$வே ப$^4$வத இதி வக்தவ்யம்

'மய்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்துக்கள் 'யண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்தவெழுத்துக்களுக்குப்பின் வரும் போது இரட்டிக்கும். உல்க்கா, வால்ம்மீகா. இது ஒரு சாராரின் கருத்து.

இவ்வார்த்திகத்தில் காணப்படும் 'யண:' என்ற சொல் ஐந்தாம் வேற்றுமைச் சொல்லாகவும் 'மய:' ஆறாம் வேற்றுமைச் சொல்லாகவும் கருதுப்படுகின்றன. வேறு சிலர், 'யண:' என்பதை ஆறாம் வேற்றுமைச் சொல்லாகவும் 'மய:' என்பதை ஐந்தாம் வேற்றுமைச் சொல்லாகவும் கருதுகின்றனர். அவ்வாறானால் 'மய்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்துக்களுக்குப்பின் வரும் 'யண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்தவெழுத்துக்கள் இரட்டிக்கும் என்று பொருட்படும்.

த$^3$த்$^3$த்$^4$யத்ர, மத்$^3$த்$^4$வத்ர

வா: ஸ'ர: க$^2$யோ த்$^3$வே ப$^4$வத இதி வக்தவ்யம்

இதையும் மேற்கூறியவாறு இரண்டு விதமாக விளக்கப்பட்டிருக்கிறது. (1) 'ஸ'ர்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த வெழுத்துக்களுக்குப்பின் வரும் 'க$^2$ய்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்தவெழுத்துக்கள் இரட்டிக்கும் ஸ்த்த$^2$ாலீ (2) 'க$^2$ய்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்தவெழுத்துக்களுக்குப்பின் வரும் 'ஸ'ர்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்தவெழுத்துக்கள் இரட்டிக்கும்.

வத்ஸ்ஸர:, அப்ஸ்ஸ'ரா: இக்ஷ்ஷு:

வா: அவஸானே ச யரோ த்$^3$வே ப$^4$வத இதி வக்தவ்யம்

'யர்' பிரத்தியாஹாரத்தின் எழுத்துக்கள், இடை நிறுத்தம் ஏற்படும்போது (அவஸானே) இரட்டிக்கும். ஷட்ட், தத்த்

**8.4.48** நார்தி$^3$ண்யாக்ரோஸே'புத்ரஸ்ய

அதீ$^3$னி 'தின்பவன்' என்ற சொல்லுக்குமுன் நிற்கும் புத்ர 'மகன்' என்ற சொல்லின் எழுத்துக்கள், 'திட்டுதல் அல்லது 'குறை கூறுதல்' என்ற பொருளைச் சுட்டும்போது, இரட்டிக்காது.

மேற்சூத்திரத்தில் விதிக்கப்பட்ட இரட்டிப்பு நிகழ்வதை இச்சூத்திரம் தடை செய்கிறது.

புத்ராதி$^3$னி த்வமஸி பாபே ''ஓ கெட்டவளே, நீ உனது மகனையே தின்பவள்''

ஆனால் புத்த்ராதீனி அல்லது புத்ராதீனி "தனது குட்டிகளைத் தின்னும் பூனையினத்தைச் சேர்ந்த விலங்கு" இது உண்மையாக நடக்கும் நிகழ்ச்சியைச் சுட்டுகிறது.

வா: தத்பரே சேதி வக்தவ்யம்
'புத்ர' என்ற சொல்லுக்குப்பின் 'புத்ராதீனீ' வரும்போதும் அவ்வாறே
புத்ரபுத்ராதீனீ த்வமஸி பாபே

வா: வா ஹதஜக்[4]த பர இதி வக்தவ்யம்
'புத்ர' என்ற சொல்லுக்குப்பின் 'ஹத', ஜக்[4]த ஆகியவைகள் வரும். இரட்டிப்பு விருப்பாகும்.
புத்த்ரஹதீ, புத்ரஹதீ; புத்த்ரஜக்[4]தீ, புத்ரஜக்[4]தீ

வா: சயோ த்[3]விதீயா: ஸரிபௌஷ்கர ஸாதே[3]:
பௌஷ்கரஸாதி என்ற இலக்கணாசிரியரின் கருத்துப்படி 'சய்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்தவெழுத்துக்களைத் தொடர்ந்து 'ஸ1ர்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்துக்கள் வரும் போது 'சய்' பிரத்தியாஹாரத்தின் எழுத்துக்களின் வகுப்பின் (வர்க) இரண்டாவது எழுத்துக்கள் பதிலியாகும்.
'த'வுக்கு 'த[2]' பதிலியாதல் – வத்[2]ஸ:
'க'வுக்கு 'க[2]' பதிலியாதல் – க்[2]ஷீரம்
'ப'வுக்கு 'ப[2]' பதிலியாதல் – அப்[2]ஸரா:

**8.4.49** ஸ1ரோ அசி
'ஸ1ர்' எழுத்துக்களுக்குப்பின் ஒருயிரெழுத்து வரும்போது, அவைகள் இரட்டிக்காது.
இது சூ. 46க்குத் தடையாக அமையும். கர்ஷதி, வர்ஷதி, ஆகர்ஷ: ஆனால் த[3]ர்ஸ்ஸ்1யதே

**8.4.50** த்ரி ப்ரப்[4]ருதிஷு ஸாகடாயனஸ்ய
கூட்டுமெய்கள் மூன்று அல்லது மூன்றுக்கும் மேற்பட்டதாக (த்ரிப்ரப்[4]ருதிஷு) அமையும்போது அவைகள் இரட்டிக்காது என்பது ஸாகடாயனரின் கருத்து.
இந்த்ர:, சந்த்[3]ர:, ராஷ்ட்ரம்

**8.4.51** ஸர்வத்ர ஸ1ாகல்யஸ்ய
எல்லாவிடங்களிலுமே அத்தகைய இரட்டிப்பு நிகழாது என்பது ஸாகல்யரின் கருத்து.
அர்க:, ப்[3]ரஹ்மா, அபஹ்னுதே

**8.4.52** தீ$^3$ர்க$^4$ாத$^3$ாசார்யாணாம்

நெடிலுக்குப்பின் வரும் கூட்டுமெய்கள் இரட்டிக்காது என்பது எல்லாவிலக்கணவாசிரியர்களின் கருத்து.

த$^3$ாத்ரம், ஸூத்ரம்

**8.4.53** ஜ$^2$லாம் ஜஸ்$^1$ ஜ$^2$ஸி

'ஜ$^2$ஸ்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்துக்கள் தொடரும் போது, 'ஜ$^2$ஸ்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்தவெழுத்துக்களுக்கு 'ஜஸ்$^1$' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்தவெழுத்துக்கள் பதிலியாக வரும்.

லப்$^4$ + துமுன் = லப்$^4$ + தும் = லப்$^4$ + து$^4$ம் (8.2.40) = லப்$^3$து$^4$ம்; து$^3$ஹ் + தும் = தே$^3$ாக்$^3$து$^4$ம் ஆனால் த$^3$த்த:

**8.4.54** அப்$^4$யாஸே சர் ச

இரட்டிக்கப்பட்ட அசையின் 'ஜ$^2$ல்' பிரத்தியாஹாரத்தின் எழுத்துக்களுக்கு 'சர்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்துக்களும் பதிலியாகும். அதாவது 'ஜஸ்', 'சர்' எழுத்துக்கள் பதிலியாக வரும்.

க$^2$ன் + ஸன் = க$^2$ன் + க$^2$ன் + ஸ (6.1.9) = கன்– க$^2$ன்–இட் + ஸ (7.2.35) = சிக$^2$னிஷ (7.4.62, 79; 8.4.59); சிக$^3$னிடிதி, சித்சி$^2$த்ஸதி (சி$^2$த்$^3$); திஷ்ட$^2$ாஸதி (ஸ்த$^2$ா); பு$^3$பூ$^4$ஷதி (பூ$^4$)

**8.4.55** க$^2$ரி ச

'க$^2$ர்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்துக்கள் தொடரும்போது 'ஜ$^2$ல்' எழுத்துக்களுக்குப் பதிலியாக 'சர்' எழுத்துக்களும் வரும்.

பி$^4$த்$^3$ + துமுன் = பே$^4$த்தும், யுயுத்ஸதே (யுத்$^4$) லப்ஸ்ய (லப்$^4$)

**8.4.56** வாவஸானே

'ஜ$^2$ல்' எழுத்துக்கள் இடை நிறுத்தத்தில் அமையும்போது (அவஸானே) அவைகளுக்கு 'சர்' எழுத்துக்கள் விருப்பாக பதிலியாக வரும்.

வாக், லாக்$^3$; ஸ்'வலிட், ஸ்'வலிட்$^3$

**8.4.57** அணோ அப்ரக்$^3$ருஹ்ஸ்யாநு நாஸிக:

ப்ரக்$^3$ருஹ்ய (Prrlated) மல்லாத 'அண்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த உயிர் (அ, இ, உ) இடைநிறுத்தத்திலமையும்போது விருப்பாக அவ்வுயிர்கள் மூக்கொலியோடு கூடியதாக (அநுநாஸிக) ஆகும்.

த$^3$தி$^4$ + அம் = த$^3$தி$^4$ அல்லது த$^3$தி$^4$ (இறுதியுயிர் மூக்கொலியாக உச்சரிக்கப்படும்) மது$^4$, மது$^4$ (இறுதி 'உ' மூக்கொலியாக உச்சரிக்கப்படும். ஆனால் கர்த்ரு: அக்$^3$னீ, வாயூ (ப்ருக்ருஹ்ய, உயிர் 1.1.11)

**8.4.58** அநுஸ்வாரஸ்ய யயி பரஸவர்ண:

அநுஸ்வாரத்துக்குப்பின் 'யய்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்தவெழுத்துக்கள்

தொடரும்போது 'யய்' எழுத்துக்குப் பதிலியாக அதற்கு ஒப்பான மூக்கொலி வரும்.
ஸக் + துமுன் = ஸ—நும் + க் + இனும் (7.1.58) = ஸம்கிதும் (7.3.24) = ஸ'ன்கிநும்; உச் + தும் = உஞ்சினும் குட்3 + தும் = குண்டிதும்; தந்த் + தும் = நந்தி3தும்; கம் + தும் = கம்பிதும்.

**8.4.59** வா பத3ாந்தஸ்ய

ஒரு சொல்லினீறுதியில் நிற்கும் அனுஸ்வாரத்துக்குப்பின் 'யய்' எழுத் துக்கள் வரும்போது அவ்வனுஸ்வாரத்துக்கு ஒப்பான மூக்கொலி விருப்பாகப் பதிலியாக வரும். தம் கத2ம் சித் பக்ஷம் ட3யமானம் நப4ஸ்த2ம்
புருஷோ அவதீ4த்/தங்க2த2ஞ்சித் பக்ஷண்ட3யமானந்த
நப2ஸ்த2ம் புருஷோ அவதீ4த்.

**8.4.60** தோர்லி

பல்லொலிக்கு (து)ப்பின் 'ல' வரும்போது, 'ல'வுக்கு ஒப்பான ஒலி அதற்குப் பதிலியாகும்.
உத்3 + லஸதி = உல்லஸதி; அக்னிசித் + லுனாதி = அக்3னிகில்லு ணாதி; ப4வான் + லுனாதி = ப4வால்லுனாதி

**8.4.61** உத3: ஸ்த2ாஸ்தம் பே4ா: பூர்வஸ்ய

'உத்3' என்ற உபசர்க்கத்துடனிணைத்து நிற்கும் ஸ்த2ா 'இரு', ஸ்தம்ப்4 'தாங்கு, நிறுத்து' என்ற தாதுக்களின் 'ஸ்'உக்கு, அதற்கு முன் நிற்கும் எழுத்தின் வகுப்பைச் சேர்ந்த ஒரெழுத்து பதிலியாக வரும். அதாவது 'ஸ'வுக்கு பல்லொலி பதிலியாக வரும்.

1. உத்3 + ஸ்தா = உத் + ஸ்தா
உத் + ஸ்த2ா + துமுன் = உத்த2ாதும்
2. உத்3 + ஸ்தம்ப்4 + உத்த2ம் + துமுன் ப4தும் ஆனால் உத்ஸ்நாதும்

வா: உத் பூர்வஸ்ய ஸ்கந்தே3ஸ் ச2ந்த3ஸ்யுபஸம்க்2யானம் வேதமொழியில், 'உத்' தோடு 'ஸ்கந்த்3' வரும்போது சூத்திரத்தில் விதிக்க ப்பட்ட பல்லொலி பதிலியாகும்.
அக்3னே தூ3ரமுத்கந்த3:

வா: ரோகே3 சேதி வக்தவ்யம்
அது ஒரு 'நோய்'ஐச் சுட்டும்போதும் அவ்வாறாகும் உத்கந்த3க:

**8.4.62** ஜ2யோ ஹோ அன்யதரஸ்யாம்

'ஜ2ய்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்தவெழுத்துக்களுக்குப்பின் 'ஹ' என்ற எழுத்து வரும்போது 'ஹ'வுக்கு ஒப்பான 'ஜ2ய்' எழுத்து விருப்பாகப் பதிலியாக வரும்.

வாக்$^{3}$ ஹஸதி,/வாக்$^{3}$ க$^{4}$ஸதி;
ஸ்வலிட்$^{3}$ஹலதி/ஸ்வலிட்$^{3}$ ட$^{4}$ஸதி
அக்$^{3}$னிசித் ஹஸதி, அக்$^{3}$னிசித்$^{3}$த$^{4}$ஸதி
த்ரிஷ்டுப்$^{3}$ ஹஸதி, த்ரிஷ்டுப்$^{3}$ ப$^{4}$ஸதி
ஆனால் ப$^{4}$வான் ஹஸதி

**8.4.63** ஸ$^{1}$ஸ்சோடி
'ஜ$^{2}$ய்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்துக்களுக்குப் பின் 'ஸ்' நின்று, அந்த 'ஸ்'உக்குப்பின் உயிரெழுத்தோ அல்லது அரையுயிரோ வந்தால், அந்த 'ஸ்'உக்கு விருப்பாக 'ச்$^{2}$' பதிலியாக வரும்.
வாக் ஸே$^{1}$தே/வாக் சே$^{3}$தே
அக்$^{3}$னிசித்ஸே$^{1}$தே/அக்$^{3}$னிசிச் சே$^{2}$தே

வா: ச$^{2}$த்வமயீதி வக்தவ்யம்
'அம்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்துத் தொடரும் போது என்றிருக்க வேண்டும்.
தத் ஸ்லோ கேன = தச்ச்$^{2}$லோ்கேன
தத்ஸ்மஸ்ருணா = தச்ச்$^{2}$மஸ்ருணா

**8.4.64** ஹலோ யமாம் யமி லோப:
ஒரு மெய்யெழுத்துக்குப்பின் நிற்கும் 'யம்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்துக்களுக்குப் (அரையுயிர்களும் மூக்கொலிகளும்) பின் , 'யம்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்துக்கள் வந்தால், (யமி) முன்னால் நிற்கும் 'யம்' எழுத்துக்கள் விருப்பாகக் கெடும்.
ஸ$^{1}$ய்யா, ஸய்ய்யா; ஆதி$^{3}$த்ய, ஆதி$^{3}$த்ய்ய
ஆனால் அன்னம்; அக்$^{3}$னி:

**8.4.65** ஜ$^{2}$ரோ ஜ$^{2}$ரி ஸவர்ணே
ஒரு மெய்யெழுத்துக்குப்பின் 'ஜ$^{2}$ர்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த எழுத்து நின்று, அதைத் தொடர்ந்து அதற்கொப்பான 'ஜ$^{2}$ர்' பிரத்தியாஹாரத்தைச் சேர்ந்த ஒரெழுத்து வந்தால், நிற்குஞ் சொல்லின் 'ஜ$^{2}$ர்' எழுத்து விருப்பாகக் கெடும்.
ப்ர + த$^{3}$ + க்த = ப்ரத்த்த (7.4.47)
ப்ர – த்θ/–த = ப்ரத்த

**8.4.66** உத$^{3}$ாத்தாதனுத$^{3}$ாத்தஸ்ய ஸ்வரித:
உதாத்தசுரம் கொண்ட உயிருக்குப்பின் அனுதாத்த சுரம் கொண்ட உயிர் நிற்கும்போது, அனுதாத்த சுரத்துக்குப் பதிலாக 'ஸ்வரிதம்' வரும்.
அக்$^{3}$னிம் ஈலே புரோஹிதம்

'அக்$^3$னி'யின் 'இ' உதாத்தம் கொண்டது. 'ஈலே'யின் 'ஈ' அனுதாத்தம் கொண்டது (8.1.28). இந்த 'ஈ' ஸ்வரிதம் பெறும்.

**8.4.67** நோத$^3$ாத்த ஸ்வரிதோத$^3$யமக$^3$ார்க்$^3$ய காஸ்'யப க$^3$ாலவானாம்

உதாத்தைத் தொடர்ந்து நிற்கும் அனுதாத்தவுயிர், அதற்குப்பின் உதாத்தம் அல்லது ஸ்வரிதம் வரும்போது, அந்த அனுதாத்தம், ஸ்வரிதமாக ஆகாது என்பது, கார்க்யர், காலவர், காஸ்யபர் என்பவர்களைத் தவிர்த்த மற்ற இலக்கணவாசிரியர்களின் கருத்து.

க$^3$ார்க்யஸ் தத்ர – 'தத்ர' என்ற சொல்லின் முதலில் நிற்கும் உயிர் உதாத்தமாகும். இதற்கு முன்னால் நிற்கும் க$^3$ார்க்$^3$ய என்ற சொல்லின் 'ய' ஸ்வரிதமாகாது. க$^3$ார்க்$^3$ய: க்வ – 'க்வ' ஸ்வரித சுரம் கொண்டது. இதற்கு முன் நிற்கும் 'ய'வின் அனுதாத்தம் ஸ்வரிதமாகாது. கார்க்யர், காலவர், காஸ்யபர் இம்மூன்று இலக்கணவாசிரியர்களின் கருத்துப்படி இவைகள் ஸ்வரிதமாகும்.

**8.4.68** அஅ இதி

(இதுவரையில்) இவ்விதிகளில் திறப்பு உயிராக (open) விவ்ருதக் கருதப்பட்ட 'அ' (குறில்), இப்போது மூடு உயிராக (close ஸம்வ்ருத) ஆக்கப்படுகிறது.

இச்சூத்திரத்தில் இரண்டு 'அ'க்கள் காணப்படுகின்றன. இவற்றுள் முதல் 'அ' திறப்பு உயிர். இரண்டாவது மூடு உயிர். (குறில் 'அ' உண்மையில் ஒரு மூடு உயிராகும். அஷ்டாத்தியாயின் விதிகளில் இந்த 'அ'வைப் பயன்படுத்தும்போது, நெடில் 'ஆ'வுக்கு ஒப்பாக, செயறபட வேண்டும். இதையும் திறப்பு உயிராகக் கருதப்பட்டது. (பார்க்க 1.1.2) இந்த இலக்கணத்தினிறுதிச் சூத்திரத்தையமைக்கையில் இதனாசிரியர், இந்த 'அ'வை அதன் பழைய நிலைக்குத் திரும்பவும் கொண்டு சென்றுள்ளார்.

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
## சென்னை – 600 113.

# அண்மை வெளியீடுகள்

| | ரூ. பை |
|---|---|
| கபிலர் | 70.00 |
| கன்னடத்தில் காரைக்காலம்மையார் வரலாறு | 20.00 |
| நாட்டிய நன்னூல் | 25.00 |
| சங்க இலக்கியத்தில் கலையும் கலைக்கோட்பாடும் | 62.00 |
| கதிர்வேற்பிள்ளை–தமிழ் சொல்லகராதி, மூன்று பாகங்கள் | 600.00 |
| எண்பத்து மூன்றில் தமிழ், பகுதி 3 | 30.00 |
| காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோவில் ஓர் ஆய்வு | 60.00 |
| திருக்குற்றாலநாத சுவாமி கோவில் வரலாறும் பண்பாடும் | 60.00 |
| உத்தர ராம சரிதம் | 30.00 |
| திராவிட மொழியின் மூவிடப் பெயர் விலை | 40.00 |
| பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள் தொகுதி 1 | 50.00 |
| பம்மல் சம்பந்த முதலியாரின் உரைநடை நூல்கள் தொகுதி 2 | 40.00 |
| சதாசிவப் பண்டாரத்தார் ஆய்வுக் கட்டுரைகள் | 40.00 |
| சங்கத் தமிழர் வாழ்வியல் | 75.00 |
| வேதகிரியார் சூடாமணி நிகண்டு | 65.00 |
| தமிழக மேடைநாடகப் பெண்கலைஞர்கள் குறிப்பேடு | 25.00 |
| A Grammar of Contemporary Literary Tamil | 80.00 |
| Cilappatikaram | 100.00 |
| காதம்பரி மூலமும் வசனமும் | 125.00 |
| Tani Pacura Togai | 30.00 |
| Dedication | 25.00 |
| Temple Chimes | 20.00 |
| Nala Venba | 45.00 |
| Tamil Heroic Poems | 40.00 |
| Six Long Poems from Sangam Tamil | 30.00 |
| Kurinci-p-pattu-Muttollayiram | 40.00 |
| Kuruntokai | 110.00 |
| Landscape and Poetry | 50.00 |
| Tamil Culture and Civilization | 60.00 |
| Tolkappiyam and Astadhyayi | 110.00 |
| தமிழக மகளிர் தொடக்க காலமுதல் ஆறாம் நூற்றாண்டு வரை | 50.00 |
| தொல்காப்பியம் – பொருள் – செய்யுளியல் பகுதி 1 | 50.00 |
| தடிவீரசுவாமிகரை வன்னியராயன்கதை | 55.00 |
| சடத்தலம் | 40.00 |
| காத்தவராய நாடகம் | 30.00 |
| மதங்க சூளாமணி | 40.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 32.00 |
| தமிழில் நவீன நாடகம் | 70.00 |
| இலக்கியத்தில் சோதிடம் | 65.00 |
| சங்கத் தமிழரின் வழிபாடும் சடங்குகளும் | 80.00 |